லெனின்

தொழிலாளர் கண்காணிப்பும் தொழிற்துறையின் தேசவுடைமையாக்கமும்

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின்

CONNEMARA PUBLIC LI
- 5 MAR 1985
MADRAS

தொழிலாளர் கண்காணிப்பும் தொழிற்துறையின் தேசவுடைமையாக்கமும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs. 3-50
MADRAS

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1982

Л $\frac{10102-730}{014(01)-82}$ 809—81

0101020000

பொருளடக்கம்

சமூக-ஜனநாயகக் கட்சி வேலைத்திட்டத்தின் நகலும் விளக்கவுரையும் என்பதிலிருந்து . . . 11
வேலைத்திட்டத்தின் நகல் 11
வேலைத்திட்டம் பற்றிய விளக்கவுரை 13

நாட்டுப்புற ஏழை மக்களுக்கு. சமூக-ஜனநாயகவாதிகள் விரும்புவது என்ன என்பது பற்றி விவசாயிகளுக்கு ஒரு விளக்கவுரை எனும் பிரசுரத்திலிருந்து 15

கம்யூன் தரும் படிப்பினைகள் என்பதிலிருந்து . . 20

டெய்லர் முறை—இயந்திரத்திற்கு மனிதன் அடிமைப்படுதல் 22

கார்ல் மார்க்ஸ். மார்க்சியத்தைப்பற்றியவிளக்கவுரையுடன் சுருக்கமானதொரு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு என்ற கட்டுரையிலிருந்து 26

சோஷலிசம் 26

பி. கியெவ்ஸ்கிக்கு (யூ. பியத்தக்கோவுக்கு) ஒரு பதில் என்பதிலிருந்து 28

அர்தூர் ஷ்மிட்டுக்கு 34

தொலைவிலிருந்து எழுதிய கடிதங்கள்

ஐந்தாவது கடிதம். புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் அரசுக் கட்டமைப்பிற்

1*

கான பணிகள் என்பதிலிருந்து. 38

சுவிட்சர்லாந்து தொழிலாளருக்கு எழுதிய விடைபெறுதல் கடிதம் என்பதிலிருந்து . . 41

நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள். பாட்டாளி வர்க்கக் கட்சிக்கான நகல் கொள்கை அறிக்கை என்பதிலிருந்து

வங்கிகள் மற்றும் முதலாளித்துவ சிண்டிக்கேட்டுகளை தேசவுடைமையாக்கல். 44

ரு.ச.ஜ.தொ.க. (போல்ஷிவிக்)இன் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மாநாடு. ஏப்ரல் 24-29 (மே 7-12) 1917

1. ''நடப்புநிலை பற்றிய உரை. ஏப்ரல் 24 (மே 7)'' என்பதிலிருந்து 46

2. ''நடப்புநிலை மீதான தீர்மானம்'' என்பதிலிருந்து 50

தவிர்க்கவொண்ணாத பெரும் விபத்தும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளும்

(முதல் கட்டுரை) 53

(இரண்டாவது கட்டுரை) 58

பொருளாதாரச் சீர்குலைவினை சமாளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மீதான தீர்மானம் . 64

தொழிற்சாலைக் கமிட்டிகளின் முதலாவது பெத்ரோகிராத் மாநாட்டில் ஆற்றிய உரை. 1917 மே 31 (ஜூன் 13). சுருக்கமான பத்திரிகை அறிக்கை. 68

பொருளாதாரச் சீர்குலைவும் அதை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டமும் . 71

தங்களது லாபங்களை முதலாளிகள் எவ்வாறு மறைத்து விடுகின்றனர். கண்காணிப்பு பிரச்சினை பற்றி 76

நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி என்பதிலிருந்து 79

பஞ்சம் நெருங்குகிறது 79
கண்காணிப்பு நடவடிக்கைகள் எல்லோரும் அறிந்தவை, எளிதில் எடுக்கத்தக்கவை 82
வங்கிகளின் தேசவுடைமையாக்கம் 85
சிண்டிக்கேட்டுகளின் தேசவுடைமையாக்கம் . . 93
வாணிக ரகசியங்களை ஒழித்தல். 98
கட்டாய இணைப்பு 105
நுகர்வு முறையை ஒழுங்கியக்கம் செய்தல் . . . 109
ஜனநாயக அமைப்புகளின் வேலையை அரசாங்கம் சீர்குலைக்கிறது 114
நிதித்துறை வீழ்ச்சியும் அதை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளும் 121
நாம் சோஷலிசத்தை நோக்கி முன்னேற அஞ்சுவோமானால் நாம் முன்செல்ல முடியுமா? . . . 126
பொருளாதாரக் குழப்பத்துக்கு எதிரான போராட்டமும் போரும் 131

புரட்சியின் பணிகள் என்பதிலிருந்து
பஞ்சம் மற்றும் பொருளாதார அழிவுக்கு எதிரான போராட்டம் 134

போல்ஷிவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா? என்ற கட்டுரையிலிருந்து 136

தொழிலாளர் கண்காணிப்பு பற்றிய நகல் ஒழுங்குமுறை விதிகள் 147

தேச மக்களுக்கு 149

வாடகைக்கு விடப்படும் குடியிருப்பு வீடுகளின் பறிமுதல் பற்றிய ஒரு சட்டத்திற்கான ஆய்வுரைகள் 153

அ.க. ஷ்லியாப்னிக்கவ் மற்றும் ஃபெ.எ. திஸெர்ஷீன்ஸ்கிக்கு 155

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் தொழிலாளர் பிரிவின் கூட்டத்தில் பெத்ரோகிராத் தொழிலாளரின் பொருளாதார நிலை மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் குறித்து ஆற்றிய உரை. டிசம்பர் 4 (17) 1917. பத்திரிகைச் செய்தி . 156

வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை. 1917 டிசம்பர் 14(27). குறிப்பேடுகள் 160

வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை . . . 164

நேசப்போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? 169

நுகர்வாளர் கம்யூன்கள் பற்றிய அரசாணையின் நகல்

1. பூர்வாங்க ஆய்வுரைகள் 184
2. அரசாணையின் நகல் 186

உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம் என்பதிலிருந்து . . 190

அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் ரு.ச.ஜ.

தொ. க. (போல்ஷிவிக்குகள்) பிரிவின் அறிக்கை. 1918 ஜனவரி 5 (18). . . . 192

தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் மூன்றாவது அகில ருஷ்ய காங்கிரஸ். 1918 ஜனவரி 10-18 (23-31)

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நடவடிக்கைகள் பற்றிய உரை. ஜனவரி 11 (24) என்பதிலிருந்து 194

கடல் மற்றும் உள்நாட்டு வர்த்தகக் கப்பல் போக்குவரத்துத் துறையின் தேசவுடைமையாக்கம் பற்றிய அரசாணையின் நகல்

1. அரசாணையின் நகல் 201
2. நகலுக்குப் பின் இணைப்பு 202

மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டத்தில்

ஆற்றிய உரைகள். 1918 மார்ச் 4 என்பதிலிருந்து
1. 203
2. 205

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் என்ற கட்டுரையின் தொடக்க வாசகத்திலிருந்து
அத்தியாயம் 5 208
அத்தியாயம் 6 209
அத்தியாயம் 7 211

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் எனும் கட்டுரையிலிருந்து
முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய கட்டம் 217
நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான போராட்டத்தின் முக்கியத்துவம் 231

பொருளாதாரக் கொள்கை மற்றும் சிறப்பாக வங்கிக் கொள்கை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் 237

வங்கிக் கொள்கையின் மீதான ஆய்வுரைகள் 240

அகில ருஷ்யத் தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்சில், உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் தலைமைப் பொருளாதார கவுன்சிலின் பிரதிநிதிகளது கூட்டு அமர்வில் ஆற்றிய சொற்பொழிவு. 1918 ஏப்ரல் 11. செய்தித்தாள் அறிக்கையிலிருந்து 244

தேசவுடைமையாக்கப்படப் போகும் நிறுவனங்களது பிரதிநிதிகளின் மாநாட்டிற்கு எழுதப்பட்ட கடிதம் 245

தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பற்றிய விதிகளின்'' நகல் மீதான கருத்துரை. 247

மாஸ்கோ தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகளின் நான்காவது மாநாடு. 1918, ஜூன் 27—ஜூலை 2. நடப்பு நிலைமை அறிக்கை பற்றி நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதில். ஜூன் 28 என்பதிலிருந்து 248

சோவியத் அரசின் ஜனநாயகத் தன்மையும் சோஷலிசப் பண்பும் குறித்து 251

தொழிலாளர், விவசாயிகள், படையாளிகள் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளது சோவியத்துகளின் 5வது அகில ருஷ்யக் காங்கிரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கை குறித்த விவாதத்துக்குப் பதில். ஜூலை 5, 1918 என்பதிலிருந்து 253

குபேர்னிய சோவியத்துகளின் தலைவர்களின் காங்கிரசில் உரை. ஜூலை 30, 1918 என்பதிலிருந்து. செய்தித்தாள் அறிக்கை 257

அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம் என்பதிலிருந்து 259

தொழிலாளர்கள், விவசாயிகள், கஸாக்குகள் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளது சோவியத்துகளின் ஆறுவது சிறப்பு அகில ருஷ்யக் காங்கிரசில் புரட்சியின் ஆண்டு விழாவைப் பற்றி நிகழ்த்திய உரை. நவம்பர் 6, 1918 என்பதிலிருந்து 266

மாஸ்கோ மத்திய தொழிலாளர்கள் கூட்டுறவின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் ஆற்றிய உரை. நவம்பர் 26, 1918 என்பதிலிருந்து . 272

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்

''பொருளாதாரப் பகுத்தாய்வு'' எனும் வேடத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அடிமைப்படல் என்பதிலிருந்து 275

வட பிராந்திய கம்யூன்களின் சோவியத்துக்கு தந்திச் செய்தி 279

ரு.க.க.(போ.)இன் நகல் வேலைத்திட்டம் என்பதிலிருந்து. . . . .
வேலைத்திட்டத்தின் பொருளாதாரப் பிரிவிலிருந்து சில அம்சங்கள் 281

ரு.க.க.(போ.)இன் எட்டாவது காங்கிரஸ். 1919 மார்ச் 18-23 287
2. மத்தியக் கமிட்டியின் அறிக்கை. மார்ச் 18 என்பதிலிருந்து 287
5. வேலைத்திட்டத்தின் பொதுவான அரசியல் பிரிவினது மூன்றுவது ஷரத்தின் நகல் (எட்டாவது கட்சிக் காங்கிரசின் வேலைத்திட்டக் கமிஷனுக்காக). 290

கிராமபோன் தட்டுக்களில் பதியப்பெற்ற பேச்சுக்கள் என்பதிலிருந்து
பேலா குன்னேடு கம்பியில்லாத் தொலைபேசி மூலம் நடத்திய பேச்சுக்கள் பற்றிய அறிவிப்பு . . . 292

பவேரிய சோவியத் குடியரசிற்கு வாழ்த்துச் செய்தி 295

முதியோர் கல்வி பற்றிய முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய, சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய கோஷங்களைக் கொண்டு மக்கள் ஏமாற்றப்படுதல் என்ற உரை. மே 19, 1919 என்பதிலிருந்து . . . 297

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவரது வினுக் களுக்கு விடைகள் என்பதிலிருந்து. . . . 301

கட்சி சார்பற்ற உழைக்கும் பெண்களின் நான்காவது மாஸ்கோ நகர மாநாட்டில் ஆற்றிய உரை. செப்டம்பர் 23, 1919 என்பதிலிருந்து
சோவியத் குடியரசில் பெண்களின் தொழிலாளி இயக்கத்தின் கடமைகள் குறித்து 305

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில்

பொருளாதாரமும் அரசியலும் எனும் கட்டுரையிலிருந்து
2. 307

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர் மற்றும் செஞ்சேனைப் பிரதி நிதிகளது மாஸ்கோ சோவியத்து, தொழிற் சங்கங்களின் அகில ருஷ்ய மத்திய கவுன்சில், தொழிற்சாலைக் கமிட்டிகள் ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் அக்டோபர் புரட்சியின் இரண்டாம் ஆண்டு விழாவையொட்டி ஆற்றிய உரை. நவம்பர் 7, 1919 என்பதிலிருந்து 310

ரு.க.க.(போ.)இன் ஒன்பதாவது காங்கிரசில் ஆற்றிய, கூட்டுறவுகள் பற்றிய உரை. ஏப்ரல் 3, 1920 என்பதிலிருந்து 313

சர்வதேச உழைக்கும் பெண்கள் தினம் . . 315

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலப் பிரச்சினை பற்றிய ஆய்வுரைகள் குறித்து எனும் கட்டுரையிலிருந்து. 319

குறிப்புகள் 322

பெயர்க் குறிப்பகராதி 359

சமூக-ஜனநாயகக் கட்சி வேலைத்திட்டத்தின் நகலும் விளக்கவுரையும்[1]

என்பதிலிருந்து

வேலைத்திட்டத்தின் நகல்

அ. 1. நாளொருமேனி பெருகிக் கொண்டே இருக்கும் துரித கதியில் ருஷ்யாவில் பெரும் ஆலைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவை சிறிய கைவினைஞர்களையும் விவசாயிகளையும் அழித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களைச் சொத்தில்லாத் தொழிலாளர்களாக மாற்றி வருகின்றன. சதா அதிகரித்துக் கொண்டே இருக்கும் எண்ணிக்கையில் மக்களை நகரங்கள், ஆலை மற்றும் தொழில் துறை கிராமங்கள், ஊர்களுக்கு விரட்டி வருகின்றன.

2. விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஆலை முதலாளிகள், வியாபாரிகள், நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோரிடையே செல்வமும் ஆடம்பரமும் ஏராளமானதொரு வளர்ச்சி பெற்றிருப்பதையும் தொழிலாளர்களது வறுமை, அவர்கள் ஒடுக்கப்படுவது ஆகியவை இன்னும் அதிக அளவு விரைவாக வளர்ச்சி பெற்றிருப்பதையும் முதலாளித்துவத்தின் இந்த வளர்ச்சி குறிக்கிறது. உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மேம்பாடும் பெரிய ஆலைகளில் புகுத்தப்பட்டுள்ள இயந்திரங்களும், சமூக உழைப்பின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்யும் அதே நேரத்தில், தொழிலாளர்கள் மீது முதலாளிகளது ஆதிக்கத்தை வலுப்படுத்தவும் உதவுகின்றன. வேலையின்மையை அதிகரிக்கச் செய்ய உதவுகின்றன. மற்றும் அத்துடன் கூட, தொழிலாளர்களது பாதுகாப்பற்ற நிலையை இன்னும் வலுவாக அதிகப்படுத்தவும் வகை செய்கின்றன.

3. ஆனால் உழைப்பின் மீது மூலதனத்தின் அடக்குமுறையை மிக உச்ச அளவுக்கு நடத்தி வரும் அதே நேரத்தில்,

பெரிய ஆலைகள் மூலதனத்தை எதிர்த்துப் போராடக் கூடிய தொழிலாளர்களின் ஒரு தனிப்பட்ட வர்க்கத்தையும் உருவாக்குகின்றன. ஏனெனில் அவர்களது வாழ்க்கை நிலைமைகளே அவர்களது சொந்த சிறு உற்பத்தி பந்தங்கள் அனைத்தையும் அழிக்கின்றன. அவர்களது பொதுவான உழைப்பின் வாயிலாகத் தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்துவது மூலமும் ஆலையிலிருந்து ஆலைக்கு அவர்களை மாற்றுவதன் மூலமும் உழைக்கும் மக்கள் திரளினரைச் சேர்த்து இணைத்திடவும் வகை செய்கின்றன. முதலாளிகளுக்கு எதிராக வேலைநிறுத்தங்கள் மூலமாகத் தொழிலாளர்கள் போராட்டம் ஒன்றைத் துவக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கிடையே ஒற்றுமைக்கான தீவிரமானதொரு அவா தோன்றி வருகிறது. தொழிலாளர்களது ஒன்றுக்கொன்று தொடர்பற்ற எழுச்சிகளிலிருந்து ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டமானது வளர்ச்சி பெற்று வருகிறது.

4. முதலாளி வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தின் இப்போராட்டம், மற்றவர்களது உழைப்பினால் வாழ்ந்திடும் அனைத்து வர்க்கங்களுக்கும் எதிரானதொரு போராட்டமே, மற்றும் சுரண்டல் அனைத்துக்கும் எதிரானதொரு போராட்டமேயாகும். தொழிலாளி வர்க்கத்திடம் அரசியல் ஆட்சி அதிகாரம் மாறிச் செல்லும் போதுதான், நிலம் அனைத்தும், உழைப்புக் கருவிகள், ஆலைகள், இயந்திரங்கள், சுரங்கங்கள் ஆகிய அனைத்தும், சோஷலிஸ்டு உற்பத்தியை ஒழுங்கமைப்பதற்காக சமுதாயம் முழுவதனிடமும் மாற்றப்படும் போதுதான் அது முடிவுக்கு வரமுடியும். இத்தகைய சோஷலிச உற்பத்தியில் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தும், உற்பத்தியில் ஏற்படும் சகல மேம்பாடுகளும் உழைக்கும் மக்களுக்கே நன்மை பயப்பதாக இருத்தல் வேண்டும்.

5. அதன் தன்மையிலும் நோக்கங்களிலும் ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கம் அனைத்து நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசிய (சமூக-ஜனநாயக) இயக்கத்தின் ஒரு பகுதியே....

.... இருப்பினும், உழைக்கும் மக்கள் திரள் அனைத்தின் மீதும் முதலாளி வர்க்கம் கொண்டுள்ள ஆதிக்கம் எதன் மீது சார்ந்துள்ளது? அனைத்து ஆலைகளும் தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் இயந்திரங்களும் உழைப்புக் கருவிகளும் முதலாளிகளது கைகளில் அவர்களது தனியார் சொத்தாக இருக்கின்றன, ஏராளமான நிலங்கள் அவர்களது உடைமையாக இருக்கின்றன (ஐரோப்பிய ருஷ்யாவின் நிலங்கள் அனைத்திலும் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான பகுதி நிலவுடைமையாளர் வசம் உள்ளது—இவர்கள் எண்ணிக்கையில் ஐந்து லட்சம் கூட இல்லை) எனும் மெய்நடப்பின் மீதுதான் இவர்களின் ஆதிக்கம் சார்ந்துள்ளது. உழைப்புக் கருவிகள் அல்லது அரைச் செய்பொருட்கள் ஏதும் தொழிலாளர்களிடம் கிடையாது. ஆகவே அவர்கள் தங்களது உழைப்புச் சக்தியை முதலாளிகளுக்கு விற்க வேண்டி இருக்கிறது. இம் முதலாளிகள், தொழிலாளிகள் உயிரோடிருப்பதற்கு அத்தியாவசியமானது எதுவோ, அதை அவர்களுக்கு ஊதியமாக அளித்துவிட்டு, உழைப்பினுல் ஆக்கப்பட்ட உபரிப் பொருள் அனைத்தையும் கபளீகரம் செய்து கொள்ளுகிருர்கள். இவ்வாருக, அவர்கள் தாங்கள் பயன்படுத்தும் உழைப்பு நேரத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே ஊதியம் அளித்துவிட்டு, எஞ்சியதைத் தமதாக்கிக் கொள்கின்றனர். தொழிலாளர் திரளினர் ஒருங்கிணைந்து செயல்படும் உழைப்பின் விளைவாக, அல்லது உற்பத்தியிலான மேம்பாடுகள் மூலமாக ஏற்படும் செல்வ அதிகரிப்பு அனைத்தும் முதலாளித்துவ வர்க்கத்துக்குப் போய்ச் சேருகிறது. அதே சமயத்தில், தலைமுறை தலைமுறையாகப் பாடுபடும் தொழிலாளர்கள் சொத்துப் பத்தில்லாத பாட்டாளிகளாகவே இருக்கின்றனர். ஆகவே உழைப்பை மூலதனம் சுரண்டுவதை ஒழிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, உழைப்புக் கருவிகள் மீதான தனியார் உடைமையை ஒழிப்பதே அந்த வழி. ஆலைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மற்றும் எல்லாப் பெரிய பண்ணைகள் ஆகிய அனைத்தையும் சமுதாயம் முழுவதிடமும் ஒப்படைத்துவிட்டு பொதுவான சோஷலிச உற்பத்தியைத் தொழிலாளர்கள் தாங்களே நெறியாண்மை செய்ய விட்டுவிடுவதுதான் அது.

பொதுவான உழைப்பினுல் ஆக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் உழைப்பாளர்களது நலனுக்காகவே பயன்படுவது அப்போது சாத்தியமாகும். தாங்கள் வாழ்வதற்கு இன்றியமையாத தேவைகளுக்கு மேல் உற்பத்தி செய்யும் உபரி பொருள் தொழிலாளர்களது தேவைகளைத் திருப்தி செய்வதற்கும் பயன்படும். அவர்களது திறன்கள் அனைத்தும் முழு வளர்ச்சி பெறுவதற்கும், விஞ்ஞானம் மற்றும் கலை ஆகியவற்றின் சாதனைகள் அனைத்தையும் அனுபவிப்பதற்கான சம உரிமைகள் கிடைக்க வகை செய்வதற்கும் இது பயன்படும். அதனுல் தான், தொழிலாளி வர்க்கத்துக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான போராட்டம் இந்த வழியில்தான் முடிவு பெற முடியும் என்று வேலைத்திட்டம் கூறுகிறது. அதை அடைவதற்கு, அரசியல் ஆட்சி, அதாவது அரசை ஆளுமை புரியும் ஆட்சி அதிகாரம், முதலாளிகள் மற்றும் நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோரது செல்வாக்கின் கீழ் உள்ள அரசாங்கத்தின் கைகளில் இருந்து அல்லது முதலாளிகளது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நேரிடையாக உருவாக்கப்பட்டதொரு அரசாங்கத்திடமிருந்து தொழிலாளி வர்க்கத்தின் கைகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் இறுதி லட்சியம் இதுதான். அது பூரண விடுதலை பெறுவதற்குரிய நிபந்தனை இதுதான்.

சிறைச்சாலையில் எழுதப் பெற்றது.
வேலைத்திட்டத்தின் நகல்—1895
டிசம்பர் 9 (21)க்குப் பிறகு;
வேலைத்திட்டம் பற்றிய விளக்கவுரை—
1896 ஜூன்—ஜூலை

நூல் திரட்டு,
தொகுதி 2,
பக்கங்கள் 95-96
மற்றும் 107-108

நாட்டுப்புற ஏழை மக்களுக்கு

சமூக-ஜனநாயகவாதிகள் விரும்புவது என்ன என்பது பற்றி விவசாயிகளுக்கு ஒரு விளக்கவுரை[2]

எனும் பிரசுரத்திலிருந்து

...இப்போது எங்கும் பணம் மிக முக்கியமான சக்தியாக மாறிவிட்டது. மனித உழைப்பால் உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருள்களும் பணத்திற்காகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. பணத்தைக் கொண்டு எதை வேண்டுமானலும் வாங்கலாம். பணத்தைக் கொண்டு ஒரு மனிதனைக் கூட விலைக்கு வாங்கலாம்; அதாவது பணம் படைத்த ஒருவன் பணம் இல்லாத ஒருவனைத் தனக்கு வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தலாம். முன்பெல்லாம் நிலமே மிக முக்கியமான சக்தியாக இருந்தது—அது பண்ணையடிமை முறையின் போது இருந்த நிலை; எவனுக்கு நிலம் உடைமையாய் இருந்ததோ அவன் அதிகாரமும் செல்வாக்கும் உடையவனுக இருந்தான். ஆனால் இன்றைக்கு பணம், மூலதனம் மிக முக்கியமான சக்தியாக மாறிவிட்டது. பணத்தினுல் எவ்வளவு நிலம் வேண்டுமோ அவ்வளவும் வாங்கலாம். நிலம் இருந்தாலும், பணம் இல்லாவிட்டால் அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியாது; கலப்பை அல்லது பிற கருவிகள் வாங்கவோ, கால்நடைகள் வாங்கவோ, ஆடைகளையும் வேறு பலவகை நகரச் செய் பொருள்களையும் வாங்கவோ பணம் இல்லாமல் முடியாது. வரிகள் செலுத்துவதைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. பணத்திற்காக அநேகமாய் எல்லா நிலப்பிரபுக்களுமே தங்கள் பண்ணைகளை வங்கிகளில் அடகு வைத்துவிட்டார்கள். பணம் பெறுவதற்காக அரசாங்கம் உலகம் முழுவதிலும் உள்ள பணக்காரர்களிடமும் வங்கி அதிபர்களிடமும் கடன் வாங்குகிறது. அந்தக் கடன்களுக்கு வட்டியாகப்

பல கோடி ரூபிள்களை ஒவ்வொரு வருடமும் கட்டுகிறது.

பணத்திற்காகவே எல்லோரும் இன்று ஒருவருடன் ஒருவர் கடுமையாகப் போராடி வருகின்றனர். ஒவ்வொருவரும் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்க முயல்கின்றனர்; ஒவ்வொருவரும் மற்றவரைப் போட்டியில் வெல்லவு: அதிகமாகப் பொருள்களை விற்கவும் முனைகின்றனர்; போட்டியாக விலை குறைக்கின்றனர்; மற்றவரிடம் இலாபம் தருகிற சந்தையையும், இலாபம் கொடுக்கிற பேரத்தையும் சொல்லாமல் மறைக்கின்றனர். பணத்துக்கான இந்தப் பொதுவான முட்டிமோதலில் சிறு கைவினைஞர் அல்லது சிறு விவசாயி போன்ற சின்ன ஆட்கள் எல்லோரையும் விடத் தொல்லையுறுகிறார்கள். பெரிய பணம் படைத்த வியாபாரியாலோ அல்லது பணம் படைத்த விவசாயியாலோ போட்டியில் எப்பொழுதும் தோற்கடிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எப்போதுமே சேமிப்பு இருப்பதில்லை; ஏதோ கைக்கும் வாய்க்கும் கிட்டியதை வைத்து அவர்கள் வாழ்கிறார்கள்; ஒவ்வொரு இடர்ப்பாடு அல்லது விபத்து ஏற்படும்போது தங்களது கடைசி உடைமைவரை அடகு வைக்கவும், உழவுக் கால்நடைகளை அடி விலைக்கு விற்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. குலாக் மற்றும் கடுவட்டியாளர் ஆகியோரின் இறுக்கமான பிடிக்குள் இந்த ஏழைகள் ஒரு முறை சிக்கிக் கொண்டால், அவ்வலையில் இருந்து தப்பிவருவது அபூர்வமே. பெரும்பாலான சமயங்களில் இந்த ஏழைகள் நாசமடைகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பத்து, நூறு ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகளும், கைவினைஞர்களும் குடிசைகளைப் பூட்டிக் கொண்டு, தங்கள் கிராமச் சமுதாயத்திடம் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பகுதியை இலவசமாக ஒப்படைத்து விட்டு, கூலி ஆட்களாகவும், பண்ணை ஆட்களாகவும், தேர்ச்சி பெறாத தொழிலாளிகளாகவும், பாட்டாளிகளாகவும் மாறுகின்றனர். ஆனால் பணத்திற்காக நடைபெறும் இந்தப் போராட்டத்தில், பணக்காரர்கள் மேலும் மேலும் அதிகம் பணம் படைத்தவர்களாகின்றனர். வங்கிகளில் பல லட்சங்கள், பல கோடிகளாக ரூபிள்களை அவர்கள் குவிக்கின்றனர் வங்கியிலுள்ள தங்கள் பணத்தைக் கொண்டு மட்டுமல்லாமல் வங்கிகளில் போடப்படும் பிறர் பணத்தையும் பயன்படுத்தி இலாபம் பெறுகின்றனர். வங்கியிலோ, அல்லது சேமிப்பு

நிலையத்திலோ ஒரு சில பத்து அல்லது நூறு ரூபிள்களைப் போடும் சின்ன ஆட்கள் ஒரு ரூபிளுக்கு மூன்று அல்லது நான்கு கோபெக்குகள் வீதம் வட்டியாகப் பெறுகிறார்கள். பணக்காரர்கள் இந்தச் சேமிப்பைப் பல கோடி ரூபிள்களாகப் பெருக்கி அதைக் கொண்டு தங்கள் கொள்ளை-கொடுப்பினையை விரிவாக்கி, ஒரு ரூபிளுக்குப் பத்திலிருந்து இருபது கோபெக்குகள் வீதம் லாபம் பெறுகின்றனர்.

ஆகவேதான், மக்கள் வறுமையைத் தீர்த்துக் கட்டுவதற்கான ஒரே வழி, நாடு முழுவதும் இப்போது இருக்கும் நிலைமைகளைத் தலை முதல் கால் வரை மாற்றி, சோஷலிச அமைப்பை நிலைநாட்டுவதே என்று சமூக-ஜனநாயகவாதிகள் கூறுகிறார்கள். வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானால் பெரும் நிலச் சுவான்தார்களிடமிருந்து நிலத்தையும், ஆலை முதலாளிகளிடமிருந்து ஆலைகளையும் தொழிற்சாலைகளையும், வங்கி அதிபர்களிடமிருந்து பண மூலதனத்தையும் பிடுங்கிக் கொண்டு அவர்களது தனிச் சொத்துரிமையை ஒழித்து அவற்றைத் தேச முழுவதிலுமுள்ள எல்லா உழைக்கும் மக்களுக்கும் மாற்றி வழங்க வேண்டும். இந்த வேலையைச் செய்து முடித்தால், மற்றவர்களின் உழைப்பில் வாழ்ந்துவரும் பணக்காரர்களால் தொழிலாளர்களின் உழைப்பு பயன்படுத்தப்பட மாட்டாது. ஆனால் தொழிலாளிகளும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் பயன்படுத்துவார்கள். அப்போது பொது உழைப்பின் பலனும் அனைத்து முன்னேற்றங்களாலும் இயந்திரங்களாலும் ஏற்படும் நன்மைகளும் எல்லா உழைப்பாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் கிடைக்கும். அப்போது செல்வம் இன்னும் அதிக வேகத்தில் பெருகும். காரணம், முதலாளிகளுக்கு வேலை செய்ததைவிட வேலையைத் தமக்குத் தாமே தொழிலாளர் மேலாக செய்வர்; வேலை நாளின் நேரம் குறையும்; தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும்; அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் அனைத்தும் பரிபூரணமாக மாறும்.

ஆனால் நாடு முழுவதிலும் இப்போது நிலவும் அமைப்பை மாற்றுவது என்பது எளிதான காரியம் அன்று. அதற்கு நிறைய முயற்சியும், நீண்ட விடாப்பிடியான போராட்டமும் தேவை. எல்லாப் பணக்காரர்களும், எல்லா உடைமையாளர்

களும், எல்லா முதலாளி வர்க்கமும்* தங்கள் சக்தியெல்லாம் திரட்டி, தங்கள் செல்வங்களைக் காக்க முயல்வர். அனைத்து பணக்கார வர்க்கத்தையும் பாதுகாக்க, அதிகாரிகளும் ராணுவத்தினரும் கிளர்ந்து எழுவர்; ஏனென்றால் அரசாங்கமே பணக்கார வர்க்கத்தின் கைக்குள் இருக்கிறது. பிறருடைய உழைப்பினால் வாழும் அனைவரையும் எதிர்த்துப் போராடத் தொழிலாளிகள் ஒன்றாய்த் திரள வேண்டும்; தொழிலாளிகள் தங்களுக்குள் ஒன்றுசேர்ந்து ஏழைகள் யாவரையும் ஒரே தொழிலாளி வர்க்கமாக, பாட்டாளி வர்க்கமாக ஐக்கியப்படுத்த உதவ வேண்டும். தொழிலாளி வர்க்கத்துக்குப் போராட்டம் எளிதாக இருக்காது; ஆனால் அது நிச்சயமாயும் தொழிலாளிகளின் வெற்றியில்தான் முடிவு பெறும், ஏனென்றால் முதலாளிகள், அதாவது பிறருடைய உழைப்பால் வாழ்வோர் மக்கள் தொகையில் மிகக் குறைவான சிறுபான்மையினர் ஆவர். அதே பொழுதில் தொழிலாளி வர்க்கத்தினரோ, மிகமிகப் பெரும்பான்மையினர் ஆவர். சொத்து உடையவர்களுக்கு எதிராகத் தொழிலாளர்கள் என்பதன் பொருள், ஆயிரக்கணக்கானவர்களுக்கு எதிராகக் கோடிக்கணக்கானவர்கள் என்பதாகும்.

இந்த மாபெரும் போராட்டத்திற்காக ருஷ்யாவிலுள்ள தொழிலாளிகள் ஏற்கெனவே ஒரே சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியாக இணையத் தொடங்கியுள்ளனர். போலீசாரிடமிருந்து மறைந்து நின்று ரகசியமாக ஒன்றுசேருவது என்பது கடினமானதாகும்; இருந்த போதிலும் அமைப்பு வளர்ந்து மென்மேலும் பலமடைந்து வருகிறது. ருஷ்ய மக்கள் அரசியல் சுதந்திரத்தை வென்று அடைந்து விடும்

* முதலாளி என்றால் சொத்துடையவன் என்று அர்த்தம். சொத்துடையவர்கள் அனைவரும் மொத்தமாக முதலாளித்துவ வர்க்கம் என்று அழைக்கப்படுவர். பெரிய சொத்துக்களுக்கு உடைமையாளர்—பெரிய முதலாளி. சிறிய சொத்துக்களுக்கு உடைமையாளர்—குட்டி முதலாளி. முதலாளிகள், பாட்டாளிகள் என்ற சொற்களுக்கு முறையே சொத்து உள்ளவர்கள், தொழிலாளர்கள் என்றும், பணக்காரர்கள், ஏழைகள் என்றும், மற்றவர்களின் உழைப்பில் வாழ்பவர்கள், கூலிக்காக மற்றவர்களுக்காக வேலை செய்பவர்கள் என்றும் அர்த்தம்.

பொழுது, தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்தும் பணியும், சோஷலிச லட்சியமும் அதிவிரைவாக—ஜெர்மன் தொழிலாளிகள் மத்தியில் அவை முன்னேறிவருவதைவிட விரைவாக—முன்னேற்றமடையும்.

1903 மார்ச் முதல் பகுதியில் எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 7,
பக்கங்கள் 142-144

கம்யூன் தரும் படிப்பினைகள்[3]

என்பதிலிருந்து

சோஷலிசப் பாட்டாளி வர்க்கமானது பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டு நின்ருலும், முதலாளி வர்க்கம் வெறு மனே பறைசாற்ற மட்டுமே முடிந்த ஜனநாயகப் பணிகளைப் பாட்டாளி வர்க்கம் ஏகமனதாய் நிறைவேற்றி முடித்ததற்கான ஒரு சிறந்த உதாரணமாகும் கம்யூன். சிக்கல் மிக்க சட்ட முறை ஏதும் இயற்ருமலே, எளிமையான நேரடியான முறையில், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த பாட்டாளி வர்க்கம் சமூக அமைப்பை எதார்த்தத்திலே ஜனநாயகப்படுத்தி, அதிகார வர்க்க ஆட்சியை ஒழித்து, எல்லா அதிகாரப் பதவிகளையும் மக்கள் அளவிலான தேர்தல் முறைக்குள்ளாக்கியது.

ஆனல் இச்சிறந்த வெற்றியின் பலன்களை இரண்டு தவறுகள் அழித்துவிட்டன. பாட்டாளி வர்க்கம் பாதி வழியில் நின்று விட்டது. ''உடைமை பறித்தோரை உடைமை நீக்கம்'' செய்யும் பணியைத் தொடங்காமல் பொதுப்படையான தேசியப் பணியினுல் இணைக்கப்பட்ட நாட்டில், மிக உயர்ந்த வகையான நீதியை நிலைநாட்டும் கனவுகளால் நெறிதிறம்ப இட்டுச் செல்லப்பட அது இடமளித்தது. உதாரணமாக, வங்கிகள் போன்ற நிறுவனங்கள் தேசியமயமாக்கப் பெற வில்லை. ''நியாயமான பரிமாற்றம்'' போன்ற புருதோனிய[4] தத்துவங்கள் சோஷலிஸ்டுகள் மத்தியில் இன்னும் ஆதிக்கம் செலுத்தின. இரண்டாவது தவறு, பாட்டாளி வர்க்கம் காட்டிய மிகையான கழிவிரக்கம் ஆகும். தனது விரோதிகளை அழித்திடுவதற்குப் பதிலாக, அது அவர்கள் மீது அறவழியில் தனது செல்வாக்கினை செலுத்திட முயன்றது. உள்நாட்டுப்

போரில் நேரடியான ராணுவ நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டு, பாரிசில் பெற்ற அதன் வெற்றிக்கு மகுடமாக அமைந்திருக்கக் கூடிய வெர்சேய்க்கு எதிராக எடுக்கும் உறுதிமிக்க நேரடி தாக்குதலைத் துவங்காமல் அது காலந்தாழ்த்திக் காத்துக் கொண்டிருந்தது. இது வெர்சேய் அரசாங்கம் அதன் கொடிய சக்திகளைத் திரட்டுவதற்கு அவகாசம் அளித்து, அது குருதி தோய்ந்த மே மாத வாரத்திற்குத் தயார் செய்து கொள்ள வழி வகுத்தது.

ஆனால், அதன் தவறுகள் எதுவாயிருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகத்தான பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த எடுத்துக்காட்டாகக் கம்யூன் விளங்குகிறது. கம்யூனுடைய வரலாற்று முக்கியத்துவத்தின் மீது மார்க்ஸ் மிக உயர்ந்த மதிப்பீடு ஒன்றை வைத்தார்—பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தினது ஆயுதங்களை வெர்சேய் கும்பல் பறித்துக் கொள்ள வஞ்சகமான முயற்சியை மேற்கொண்ட போது, ஒரு போராட்டமின்றித் தங்களை நிராயுதர்களாக்கத் தொழிலாளர்கள்அனுமதித்திருந்தால், இந்தப் பலவீனமானது பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு விளைத்திருக்கக் கூடிய சீரழிவு, தனது ஆயுதங்களைப் பாதுகாக்கத் தொழிலாளி வர்க்கம் நடத்திய போரில் ஏற்பட்ட நஷ்டங்களை விட மிக மிக அதிகமாக இருந்திருக்கும்.[5] கம்யூனது தியாகம் மிகக் கடுமையானவை என்றாலும், பாட்டாளி வர்க்கத்தின் பொதுவான போராட்டத்திற்கான அதன் முக்கியத்துவம் அவற்றை ஈடு செய்து விட்டது. ஐரோப்பா முழுதும் அது சோஷலிச இயக்கத்தைக் கிளர்த்தி விட்டது, உள்நாட்டுப் போரின் வலிமையை அது நிதர்சனப்படுத்திக் காட்டியது, தேசபக்தப் பிரமைகளை அது விரட்டி அகற்றியது, பொதுப்படையான தேசிய நோக்கங்களுக்கான முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தவொரு முயற்சியிடத்தும் சிறுபிள்ளைத்தனமாக வைத்திருந்த நம்பிக்கைகளை அது தகர்த்தெறிந்தது. சோஷலிசப் புரட்சியின் பணிகளை ஸ்தூலமாக நிர்ணயிக்கும்படி ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்துக்குக் கம்யூன் போதித்தது.

ஸக்ரனிச்னயா கஸேத்தா இதழ் 2,
1908 மார்ச் 23

நூல் திரட்டு,
தொகுதி 16,
பக்கங்கள் 452-453

டெய்லர் முறை—இயந்திரத்திற்கு மனிதன் அடிமைப்படுதல்

ஒரு நொடிப் பொழுது கூட முதலாளித்துவம் ஒரு இயங்காத நிலையில் இருக்க முடியாது. அது எப்பொழுதும் முன்னுக்குப் போய்க் கொண்டே இருக்க வேண்டும். இன்றைய நெருக்கடிக் காலகட்டத்தில் மிகவும் கூர்மையாக இருக்கும் போட்டி, உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக அதிகரித்த அளவிலான புதிய ஏற்பாடுகள் புனைவு செய்யப்படுவதை அவசியமாக்குகிறது. ஆனால் மூலதனத்தின் ஆதிக்கம் இந்த ஏற்பாடுகளனைத்தையும், தொழிலாளர்களை மேலும் சுரண்டுவதற்கான கருவிகளாக மாற்றுகிறது.

டெய்லர் முறை என்பது இந்த ஏற்பாடுகளில் ஒன்றாகும்.

இந்த முறையின் ஆதரவாளர் சமீபத்தில் அமெரிக்காவில் கீழ்வரும் தொழில் நுட்பப் பாணியைப் பயன்படுத்தினர்.

தொழிலாளி ஒருவரது கரத்தில் மின் விளக்கு ஒன்று பொருத்தி வைக்கப்பட்டு தொழிலாளியின் உடல் இயக்கங்கள் புகைப்படமாக எடுக்கப்பட்டன. மற்றும் விளக்கின் இயக்கங்களும் ஆராயப்பட்டன. சில இயக்கங்கள் ''தேவையற்றனவாகக்'' காணப்பட்டன. மற்றும் தொழிலாளி இவ்வியக்கங்களைத் தவிர்க்கும்படி செய்யப்பட்டார். அதாவது, ஓய்விற்காக ஒரு விநாடிக் காலம் கூட வீணாக்காமல் தொழிலாளி இன்னும் அதிக முனைப்புடன் உழைக்கும்படி ஏவப்பட்டார்.

புதிய ஆலைக் கட்டிடங்களின் அமைப்புத்திட்டம், ஆலைக்குப் பொருள்கள் வழங்குவதில் ஒரு நொடிப்பொழுதும்

வீணுகாதபடி திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு பணிமனையிலிருந்து மற்ருென்றுக்கு இவை அனுப்பப்படுவதிலும், முழுமை செய்யப்பட்ட பொருட்களை ஏற்றி அனுப்புவதிலும் நொடிப் பொழுதும் வீணுகாதபடி கட்டிடம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. சிறந்த பணி முறைகளின் பணியினை ஆராய்வதற்கும் அவற்றின் முனைப்பை அதிகரிப்பதற்கும், அதாவது தொழிலாளிகளை ''விரைவுபடுத்துவதற்கும்'' சினிமா முறையாகப் பயன்படுத்தப் பெறுகிறது.

உதாரணமாக, மெக்கானிக் ஒருவரது வேலை நாள் முழுவதும் திரைப்படம் எடுக்கப்பட்டது. அவனது உடல் இயக்கங்களை ஆராய்ந்த பிறகு, மெக்கானிக் கீழே குனிவதால் வீணுகும் நேரத்தை சரி செய்வதற்காக உயர்ந்த பெஞ்சு ஒன்றை அவனுக்களித்தார்கள். உதவி செய்ய ஒரு பையனையும் அளித்தார்கள். இயந்திரத்தின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் தகுதியான குறிப்பிட்ட முறையில் எடுத்துத் தருவது தான் இந்தப் பையனின் வேலை. ஒரு சில நாட்களுக்குள்ளாக, அந்த மெக்கானிக் சம்பந்தப்பட்ட இயந்திர வகையை இணைக்கும் வேலையை முன்பு எடுத்துக் கொண்டதில் நான்கில் ஒரு பங்கு நேரத்தில் செய்ய முடிந்தது!

தொழிலாளர் உற்பத்தித் திறனில் எவ்வளவு பேரளவான சாதனை இது!... ஆனல் தொழிலாளியின் சம்பளம் நான்கு மடங்கு உயர்ந்து விடவில்லை, முன்னைப் போல் ஒன்றரை மடங்கு மட்டும்தான் அளிக்கப்பட்டது. அதுவுங் கூட மிகக் குறுகிய காலத்திற்கு மட்டும்தான் அளிக்கப்பட்டது. புதிய முறைக்குத் தொழிலாளர் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்ட உடனே, அவர்களது சம்பளம் முந்தைய மட்டத்திற்குக் குறைக்கப்படுகிறது. முதலாளி ஏராளமான இலாபம் சம்பாதித்து விடுகிருர். ஆனல், தொழிலாளிகள் முன்னைவிட நான்கு மடங்கு கடுமையாகப் பாடுபடுகின்றனர். மற்றும் தங்களது நரம்புகளும் தசைகளும் முன்னைவிட நான்கு மடங்கு விரைவாகக் களைத்துத் தேயும்படி உழைக்கின்றனர்.

புதிதாக வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளி ஆலைச் சினிமாவுக்கு அழைத்துச் செல்லப்படுகிருர். அங்கே அவரது பணியின் நிறைவேற்ற ''மாதிரியைக்'' காட்டுகிருர்கள். அங்கே பார்த்த பணி நிறைவேற்றத்துக்குத் ''தன்னைச் சரிப்

படுத்திக் கொள்ளத்'' தொழிலாளி ஏவப்படுகிறார். ஒரு வாரத்திற்குப் பிறகு மீண்டும் இத்தொழிலாளிக்கு ஆலைச் சினிமாவில் அவரது பணியைப் பற்றிய படங்கள் காட்டப் படுகின்றன. பிறகு இது ''மாதிரி''யோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது.

இவ்வாறான பரந்த திருத்தங்கள் தொழிலாளருக்கு பாதகமாகப் புகுத்தப்படுகின்றன, ஏனெனில் அவை இன்னும் அதிகமான ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் இட்டுச் செல்கின்றன. மேலும் இந்தச் சீரானதும் திறமானதுமான உழைப்புப் பங்கீடு ஒவ்வொரு ஆலை அளவில் நின்றுவிடுகிறது.

இயற்கையாக எழும் வினா இதுதான்: சமுதாயம் முழுவதிலுமாக உழைப்புப் பங்கீடு பற்றி என்ன செய்யப்படுகிறது? இப்போது முதலாளித்துவ உற்பத்தி முறை முழுவதன் ஒழுங்கு குலைந்த, குழப்பமான தன்மையினால் எவ்வளவு பெரும் அளவு உழைப்பு வீணாக்கப்படுகிறது! நூற்றுக்கணக்கான வாங்குவோர் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோரது கைகளின் வழியாக ஆலைகளுக்குக் கச்சாப் பொருட்கள் கடந்து செல்வதால், சந்தையின் தேவைகள் தெரியாமலிருக்கும் நிலையில் எவ்வளவு காலம் விரயமாக்கப்படுகிறது! நேரம் மாத்திரமல்லாமல், உற்பத்திப் பொருள்களே வீணாக்கப்பட்டு, பழுதடைந்து விடுகின்றன. தங்களது வாடிக்கையாளர்களது தேவைகளை அறியக்கூடாத ஏராளமான சிறு இடைத்தரகர்கள் மூலமாக முழுமை செய்யப்பட்ட பொருள்கள் நுகர்வாளர்களுக்குப் போய்ச் சேருவதில் ஏற்படும் கால மற்றும் உழைப்பு விரயம் பற்றி என்ன சொல்ல? இவர்கள் ஏராளமான தேவையற்ற நடவடிக்கைகளில் இறங்குவதோடு மட்டுமல்லாமல், தேவையற்ற ஏராளமான கொள்முதல்களையும் பயணங்களையும் இன்னும் இப்படிப்பட்ட செயல்களையும் செய்கிறார்கள்!

தொழிலாளர் சுரண்டப்படுவதை அதிகரிப்பது, லாபத்தைப் பெருக்கிக் கொள்வது எனும் நோக்கமுடன் மூலதனமானது ஆலைக்குள் உழைப்பினை ஒழுங்குபடுத்தவும் சீரமைக்கவும் செய்கிறது. இருந்த போதிலும் சமூக உற்பத்தி அனைத்திலும் குழப்பம் நீடித்திருக்கிறது, வளர்ச்சி பெறுகிறது, நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்கிறது. குவிக்கப்படும் செல்வங்களுக்கு வாங்குவோரில்லாத நிலை உருவாக்கப்படுகிறது.

இலட்சக் கணக்கான தொழிலாளர் வேலை கிடைக்காததால் பட்டினிக்குள்ளாகின்றனர்.

டெய்லர் முறையானது—இதன் ஆரம்ப கர்த்தாக்கள் அறியாதபடியும் விரும்பாதபடியும்—பாட்டாளி வர்க்கம் சமூக உற்பத்தி அனைத்தையும் தன்னுடைய கைகளில் எடுத்துக் கொள்ளவும், அனைத்து சமூக உழைப்பையும் சரியான முறையில் பங்கீடு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் தொழிலாளர் குழுக்களைத் தானே நியமித்துக் கொள்ளவும் ஆன நேரத்தைத் தயார் செய்து தருகிறது. பெருவீத உற்பத்தி, இயந்திரங்கள், ரயில்வேக்கள், தொலைபேசி ஆகிய அனைத்தும், ஒழுங்குறுதிக்குட்பட்ட தொழிலாளர்களுக்கு உழைக்கும் நேரத்தில் முக்கால் பங்கைக் குறைக்கவும், இன்றைக்கு அவர்கள் இருப்பதை விட நான்கு மடங்கு அதிகச் சவுகரியத்தோடு இருக்கவும் வகை செய்யும் ஆயிரக்கணக்கான வாய்ப்புகளைத் தருகின்றன.

மேலும் இந்தத் தொழிலாளர் குழுக்கள், தொழிலாளர் சங்கங்களது துணையுடன், சமூக உழைப்பானது மூலதன அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறும்போது, சமூக உழைப்பினைச் சீரான பங்கீடு செய்வதற்கான இந்தக் கோட்பாடுகளைப் பயன்படுத்த முடியும்.

பூத் பிராவ்து, இதழ் 35,
1914 மார்ச் 13

நூல் திரட்டு,
தொகுதி 24,
பக்கங்கள் 369-371

கார்ல் மார்க்ஸ்

மார்க்சியத்தைப் பற்றிய விளக்கவுரையுடன் சுருக்கமானதொரு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு என்ற கட்டுரையிலிருந்து

சோஷலிசம்

மேலே சொன்னதிலிருந்து வெளிப்படையாவது இது தான்: முற்றிலும் தனிமுழுமையாயும் இன்றைய சமுதாயத்தின் பொருளாதார இயக்க விதியிலிருந்தே மார்க்ஸ், முதலாளித்துவச் சமுதாயம் சோஷலிஸ்டு சமுதாயமாக மாற்றமடைவது தவிர்க்க முடியாததாகும் என்ற முடிவுக்கு வருகிறார். உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது பல்லாயிரக் கணக்கான வடிவங்களிலே முன்னைவிட அதிக வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது; மேலும் மார்க்ஸ் மறைந்தபின் கழிந்துள்ள இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் பெருவீத உற்பத்தியின் வளர்ச்சியிலும், முதலாளிகளின் கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகளின் வளர்ச்சியிலும், நிதி மூலதனத்தின் அளவுகளிலும் சக்தியிலும் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான அதிகரிப்பிலும் இது—அதாவது, உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது—வெகு தெளிவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது, தவிர்க்க முடியாதபடி சோஷலிசம் வந்து சேருவதற்கு இதுதான் முதன்மையான பொருளாயத அடிப்படையாகும். இந்த மாற்றத்திற்கு அறிவுத் துறையிலும் ஒழுக்கநெறித் துறையிலும் விசைச் சக்தியாக விளங்குவதும், நேரடியாக இருந்து இம்மாற்றத்தை நிறைவேற்றும் செயலாளியாக விளங்குவதும், பாட்டாளி வர்க்கமே. இந்த வர்க்கத்துக்கு முதலாளித்துவமே பயிற்சியளிக்கிறது. முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகிற போராட்டம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது; அந்த வடிவங்களின் உட்பொருள் வள

மும் மேலும் மேலும் அதிகரிக்கிறது; தவிர்க்க முடியாத முறையிலே இந்தப் போராட்டம் அரசியல் ஆட்சியதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதை (''பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை'') நோக்கமாகக் கொண்ட அரசியல் போராட்டமாகின்றது. உற்பத்தி சமுதாயமயமாக்கப்படுவதன் விளைவாக உற்பத்திச் சாதனங்கள் சமுதாயச் சொத்தாக மாற்றப்படுவது, ''உடைமை பறித்தோரை உடைமை நீக்கம் செய்வது'' நிகழ்ந்தே தீரும். உழைப்பின் உற்பத்தித் திறனில் மகத்தான அதிகரிப்பு, வேலை நேரத்தைக் குறைப்பது, துவக்கக் கால, சிதறிய நிலையிலேயுள்ள, சிற்றளவான உற்பத்தி அழிந்ததிலே மிஞ்சிக்கிடக்கிற மிச்ச சொச்சங்களை நீக்கிவிட்டு கூட்டு முறையிலமைந்த, மேம்படுத்தப்பட்ட உழைப்பை நிலைநாட்டுவது—இவையெல்லாம் இந்த மாற்றத்தினுல் நேரடியாக அடையும் விளைவுகளாகும். விவசாயத்துக்கும் தொழிலுக்குமிடையேயுள்ள ஒட்டுறவை முதலாளித்துவம் இறுதியாக வெட்டிவிடுகிறது. அதே சமயத்தில், முதலாளித்துவம் அதன் ஆக உயர்ந்த வளர்ச்சியால் இந்த ஒட்டுறவிற்குரிய புதிய அம்சங்களையும் தயாரிக்கிறது; உணர்வு பூர்வமான விஞ்ஞானத்தை நடைமுறையில் செயல்படுத்துவது, கூட்டு முறையில் உழைப்பை இணைப்பது, உலக மக்கள் தொகையை மறுவினியோகம் செய்வது (கிராமப்புறங்களில் ஒதுங்கிக்கிடக்கிற நிலைக்கும், தனிமைப்பட்டிருக்கிற நிலைக்கும், அநாகரிக நிலைக்கும், அதே சமயத்தில் பெரிய நகரங்களில் பெருந்திரளான மக்கள் தொகை இயற்கைக்கு விரோதமாய்க் குவிந்து கிடக்கிற நிலைக்கும் இது ஒருங்கே முற்றுப்புள்ளி வைக்கும்)—இவற்றின் அடிப்படையில் தொழிலுக்கும் விவசாயத்துக்குமிடையே இணைப்புக் குரிய புதிய அம்சங்களை அது தயாரிக்கிறது.

1914 ஜூலை-நவம்பரில்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 26,
பக்கங்கள் 73-74

பி. கியெவ்ஸ்கிக்கு (யூ. பியத்தக்கோவுக்கு) ஒரு பதில்

என்பதிலிருந்து

பொதுவாக முதலாளித்துவமும், குறிப்பாக ஏகாதிபத்தியமும் ஜனநாயகத்தை ஒரு வெறும் பிரமையாக மாற்றுகின்றன—ஆனால் அதே சமயத்தில் முதலாளித்துவம் பெருந்திரளான மக்களிடையே ஜனநாயக விருப்பங்களைப் பிறப்பிக்கிறது, ஜனநாயக நிறுவனங்களை அது படைக்கிறது, ஜனநாயகத்தை மறுதலிக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் ஜனநாயகத்தில் நாட்டம் கொண்டுள்ள பெருந்திரளான மக்களுக்கும் இடைப்பட்ட விரோதத்தை உக்கிரமடையச் செய்கிறது. முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் பொருளாதாரப் புரட்சி ஒன்றினால் மட்டுமே வீழ்த்தப்பட முடியும். ஆக ''இலட்சியம்'' எனப்படும் ஜனநாயக சீர்திருத்தங்களினால் கூட அவற்றை வீழ்த்திட முடியாது. ஆனால் ஜனநாயகத்திற்கான போராட்டம் எனும் பள்ளியில் பயிற்சி பெறாத பாட்டாளி வர்க்கம் பொருளாதாரப் புரட்சி ஒன்றினை நிறைவேற்ற இயலாது. வங்கிகளை சமூக உடைமையாக்காது, உற்பத்தி சாதனங்கள் தனியார் உடைமையாக இருப்பதை ரத்துச் செய்யாமல் முதலாளித்துவத்தைத் தோற்கடிக்க முடியாது. இருந்த போதிலும், இந்தப் புரட்சிகர நடவடிக்கைகளை நிறைவேற்றிட முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து கைப்பற்றிய உற்பத்தி சாதனங்களை ஜனநாயக முறையில் நிர்வாகம் செய்திட மக்கள் அனைவரையும் ஒழுங்கமைக்காமலும், உழைக்கும் மக்கள், பாட்டாளி வர்க்கம், அரைப் பாட்டாளி வர்க்கத்தினர் மற்றும் சிறு விவசாயிகள் ஆகியோர் கொண்ட அனைத்து மக்கள் திரளையும், அவர்களது அணிகளை

யும் அவர்களது சக்திகளையும் அரசு விவகாரங்களிலான அவர்களது பங்கேற்பையும் ஜனநாயக ரீதியில் ஒழுங்கமைத்து ஈடுபடுத்தாமலும் இந்த அமலாக்கம் இயலாது. ஏகாதிபத்தியப் போர் என்பது எப்படியும் ஜனநாயகத்தை நிலை மறுப்புச் செய்வதாகும் எனலாம் (அ. ஒவ்வொரு போரும் ''உரிமைகளை'' வன்முறையால் பதிலீடு செய்கிறது; ஆ. ஏகாதிபத்தியம் என்பதே ஜனநாயகத்தின் நிலைமறுப்பாகும்; இ. ஏகாதிபத்தியப் போர் குடியரசை முடியாட்சியுடன் முற்றிலும் சமமானதாகக் கருதுகிறது). ஆனால் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சோஷலிசப் புரட்சி எழுச்சியுறுவதும் வளர்ச்சி பெறுவதும், ஜனநாயக எதிர்ப்பு மற்றும் அதிருப்தி ஆத்திரம் ஆகியவற்றோடு பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டுள்ளது. சோஷலிசம் ஒவ்வொரு வகை அரசும் உலர்ந்து உதிர்ந்து போவதற்கு இட்டுச் செல்கிறது. அதன் பின்விளைவாக ஒவ்வொரு வகை ஜனநாயகமும் கூட உலர்ந்து உதிர்ந்து போவதற்கு இட்டுச் செல்கிறது. ஆயினும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமாக மட்டுமே சோஷலிசம் செயல்படுத்தப்பட முடியும். அது முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிரான, அதாவது மக்கள் தொகையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையை, ஜனநாயகத்தின் முழு வளர்ச்சியோடு, அதாவது மக்கள் தொகை அனைத்தும் அரசின் சகல விவகாரங்களிலும், முதலாளித்துவத்தை ஒழிக்கும் சிக்கலான பிரச்சினைகள் அனைத்திலும் உண்மையான சமத்துவத்தோடும், உண்மையிலேயே சர்வப்பொதுவான முறையிலும் பங்கேற்பதோடு இணைக்கிறது.

ஜனநாயகம் பற்றிய மார்க்சியப் போதனையை மறந்துவிட்டு, இந்த ''முரண்பாடுகளில்'' தான் பி. கீயெவ்ஸ்கி தம்மைக் குழப்பத்திற்குள்ளாக்கிக் கொண்டார். உருவக முறையில் இதைக் குறிப்பிடுவோமானால் போர் அவரது சிந்தனையை மிகவும் நெருக்கிவிட்டதால், ''ஏகாதிபத்தியத்தை உடைத்து வெளியேறுங்கள்'' என்ற கிளர்ச்சிக் கோஷத்தை எல்லாச் சிந்தனைக்கும் பதிலீடாக அவர் பயன்படுத்துகிறார். காலனிகளை விட்டு வெளியேறுங்கள்'' என்ற கூக்குரலை, சரியாகக் கூறிடில் நாகரீகம் படைத்த தேசங்கள் பொருளாதார மற்றும் அரசியல் முறையில் ''காலனிகளை விட்டு வெளியேறல்'' எனும் பொருளின் பகுப்பாய்வுக்குப் பதிலீடு செய்

வதற்குப் பயன்படுத்துவது போன்றதாகும் இந்த நடவடிக்கை.

முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தனது வர்க்கப் போராட்டத்தில் அதை வீழ்த்துவதற்காகவும் தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் பாட்டாளி வர்க்கம் அனைத்து ஜனநாயக நிறுவனங்களையும் அபிலாஷைகளையும் பயன்படுத்துவதுதான் ஜனநாயகப் பிரச்சினைக்குரிய மார்க்சியத் தீர்வு ஆகும். அத்தகைய பயன்படுத்துதல் எளிதான வேலையல்ல. எவ்வாறு, பி. கீயெவ்ஸ்கிக்கு, ''நிதி மூலதன யுகத்தில்'' தேசிய சுயநிர்ணய உரிமையைத் தாங்கி ஆதரிப்பது முதலாளித்துவக் கருத்துக்களுக்கு அளிக்கப்படும் மன்னிக்க முடியாத ஒரு சலுகை என்று படுகிறதோ அது போல ''பொருளாதாரவாதிகள்'', தல்ஸ்தோய்வாதிகள் முதலானோருக்கு, இது ''முதலாளித்துவ'' மற்றும் சந்தர்ப்பவாதக் கருத்துக்களுக்கு அளிக்கப்படும் மன்னிக்க முடியாத ஒரு சலுகையாகப் பெரும்பாலும் தோன்றுகிறது. குறிப்பிட்ட, முதலாளித்துவ சமுதாயத்தின் முதலாளித்துவ வர்க்கத்தால் உருவாக்கப்பட்டுப் புரட்டப்பட்டுள்ள ஜனநாயக நிறுவனங்களைப் பயன்படுத்துவதை உதறித்தள்ளுவதன் மூலம் ''சந்தர்ப்பவாதத்திற்கு எதிராகப் போராடுவது'' என்பது சந்தர்ப்பவாதத்திற்கு முழுமையாகச் சரணடைந்து விடுவதாகும் என்று நமக்கு மார்க்சியம் போதிக்கிறது!

சோஷலிசத்திற்கான உள்நாட்டுப் போர் என்ற கோஷமானது, ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து விடுபடுவதற்குரிய மிக துரிதமான வழியினைச் சுட்டுவதோடு யுத்தத்திற்கு எதிரான நமது போராட்டத்தைச் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான நமது போராட்டத்துடன் இணைக்கிறது. போர்க் காலத் தனித்தன்மைகளையும்—போரானது நீண்டு கொண்டே போய், போரின் ஒரு முழு ''சகாப்தமாக'' வளர்வதாக அச்சுறுத்துகிறது!—அமைதிவாதம், சட்டவாதம், மற்றும் தன் ''சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்துடன் தகவமைப்பு ஆகியவற்றுடன் கூடிய சந்தர்ப்பவாதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட நமது நடவடிக்கைகளின் பொதுத் தன்மை முழுவதையும் கணக்கிலெடுத்துக் கொள்ளும் ஒரே கோஷம் இது மட்டுமே. இது தவிர, முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிரான உள்நாட்டுப் போர் என்பது சொத்துப் படைத்த சிறு

பான்மைக்கு எதிராகப் பெருந்திரளான சொத்துப் பத்தில்லாத மக்கள் ஜனநாயக முறையில் ஒழுங்கமைத்து, ஜனநாயக முறையில் நடத்தும் போர் ஆகும். உள்நாட்டுப் போர் என்பது யுத்தமே ஆகும். அதனால்தான் அதுவும் தவிர்க்க இயலாத படி உரிமைகளை வன்முறையைக் கொண்டு பதிலீடு செய்தாக வேண்டும். இருந்த போதிலும், பெரும்பான்மையின் நலன்கள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றின் பெயராலான வன்முறை வேறுபட்டதொரு தன்மையுடையது: சுரண்டலாளர், முதலாளி வர்க்கம் ஆகியோரின் ''உரிமைகளை'' அது மிதித்து விடுகிறது. இராணுவம் மற்றும் ''பின்னணி''யின் ஜனநாயக ஒழுங்கமைப்பு இன்றி இது நடைமுறை சாத்தியமல்ல. உடனடியாகவும் முதன் முதலிலும் வங்கிகள், ஆலைகள், ரயில்வேக்கள், பெரும் பண்ணைகள் இத்தியாதிகளை உள்நாட்டுப் போர் பலவந்தமாகப் பறிமுதல் செய்கிறது. ஆனால் இவை அனைத்தையும் பறிமுதல் செய்வதற்காக அரசாங்கப் பதவியிலுள்ள எல்லோரையும் ராணுவத்தின் சகல அதிகாரிகளையும் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையை நாம் புகுத்த வேண்டும். முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் போரிட்டு வரும் சைனியத்தைப் பெருந்திரளான நாட்டு மக்களோடு முழுமையாக இணைத்திட வேண்டும். உணவு வழங்கு துறையின் நிர்வாகம், உணவு உற்பத்தி மற்றும் பங்கீடு இத்தியாதி துறைகளையும் முழுமையாக ஜனநாயகப்படுத்த வேண்டும். வங்கிகள், ஆலைகள் முதலானவற்றை வென்று கைப்பற்றி, முதலாளி வர்க்க எதிர்ப்பின் சகல சாத்தியக்கூறுகளையும் தகர்த்து விடுவதோடு, அதன் படைத் தொகுதிகளை அழித்திடுவதும் உள்நாட்டுப் போரின் நோக்கம் ஆகும். நமது போர்ப் படைப்பிரிவுகளிலும், நமது ''பின்னணியிலும்'' போரின் தறுவாயில் உடன் நிகழ்வாய் ஜனநாயகத்தைப் புகுத்தி விரிவுபடுத்தினால் ஒழிய இந்த நோக்கத்தை, அதன் அப்பட்டமான ராணுவ அல்லது பொருளாதார அல்லது அரசியல் அம்சங்களில் நாம் சாதிக்க முடியாது. இப்போது மக்கள் திரளினரிடம் நாம் சொல்லுகிறோம் (அவர்களும் இயல்பான அகவுணர்வால் நாம் சொல்வது சரி என்று உணர்ந்து கொள்கிறார்கள்): ''ஜனநாயகம் பற்றிய மகத்தான கோஷங்களினால் போரை மாறுவேடம் போட்டு மறைத்து ஏகாதிபத்திய முதலாளித்துவத்துக்கு ஆதரவாகப் போரிடும்படி உங்களை

அவர்கள் ஏமாற்றுகிறார்கள்.'' ''ஜனநாயகம் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றை உண்மையில் அடைவதற்காக, முதலாளி வர்க்கத்துக்கு எதிராக உண்மையான ஜனநாயகப் போர் ஒன்றினை நீங்கள் நடத்த வேண்டும் கட்டாயம் நடத்தியாக வேண்டும்''. இன்றைய போர், வன்முறை மற்றும் நிதித் துறையில் சார்பு நிலை என்பவற்றின் வாயிலாக, தேசங்களை கூட்டணிகளில் இணைக்கவும் ''ஒன்றுபடுத்தவும்'' செய்கிறது. முதலாளி வர்க்கத்துக்கு எதிரான நமது உள்நாட்டுப் போரில் இந்த தேசங்களை நா ம் இணைக்கவும், ஒன்றுபடுத்தவும் செய்வோம். ஆனால் ரூபிளின் சக்தியால் அல்ல, குண்டாந் தடியின் சக்தியால் அல்ல, வன்முறையினால் அல்ல, ஆனால் சுரண்டலாளருக்கு எதிராக உழைக்கும் மக்கள் அனைவரின் சுயவிருப்ப உடன்பாடு மற்றும் ஒருமைப்பாட்டின் மூலமாக இதைச் சாதிப்போம். எல்லாத் தேசங்களுக்கும் சம உரிமைகள் என்ற பிரகடனம் முதலாளி வர்க்கத்துக்கு ஒரு ஏமாற்று முறையாகும். நம்மைப் பொறுத்த மட்டில், அனைத்து தேசங்களையும் நம் பக்கம் கவர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கவும் அதை விரைவுபடுத்தவும் செய்யும் ஒரு மெய்ப்பாடாக இது விளங்கும். தேசங்களுக்கு இடையிலான உறவுகளை உண்மையில் ஜனநாயக முறையில் உறுதியாக நிலைநாட்டாமல்—எனவே பிரிந்து செல்வதற்குரிய உரிமை இல்லாமல்—எல்லாத் தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர் மற்றும் உழைக்கும் மக்கள் ஆகியோர் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக உள்நாட்டுப் போரில் ஈடுபடுவது என்பது சாத்தியமல்லாத ஒன்றாகும்.

முதலாளித்துவ ஜனநாயகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தை, முதலாளி வர்க்கம் மற்றும் சந்தர்ப்பவாதம் ஆகியவற்றுக்கு எதிராக சோஷலிசப் பாணியில், முரணற்ற ஜனநாயக முறையில் ஒழுங்கமைத்தலைத்தவிர இதற்கு வேறு பாதை ஏதுமில்லை. இன்னொரு மாற்று ''வழி'' இல்லை. எதார்த்த வாழ்க்கையைப் போலவே, மார்க்சியமும் வேறு மாற்று வழி எதையும் அறியாது. இந்தப் பாதையில் தேசங்கள் சுதந்திரமாகப் பிரிந்து செல்லும் உரிமையையும், அவை சுதந்திரமாக இணைந்து கொள்ளும் உரிமையையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவைகளைக் கண்டு

நாம் நம்பிக்கை இன்றி விலகக் கூடாது. நமது பொருளாதார நோக்கங்களது "புனிதத்" தன்மையை இவை "களங்கப்படுத்தி" விடும் என்று அஞ்சவும் கூடாது.

1916 ஆகஸ்ட்-செப்டம்பரில் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 30,
பக்கங்கள் 71-74

அர்தூர் ஷ்மிட்டுக்கு

அன்பார்ந்த தோழரே,

நட்பிணக்கமான உடன்பாடு ஒன்றினை நான் யோசனையாக முன்வைக்க நீங்கள் அனுமதிப்பீர்களா?

நேற்று உங்கள் கருத்துக்களில் மிகவும் முக்கியமான தொரு அம்சத்திற்கு நான் போதுமான அளவு கவனம் காட்டவில்லை என்பதை நான் ஒத்துக் கொண்டாக வேண்டும்.[6] அதாவது, ஏனைய விஷயங்கள் இடையே சுவிட்சர்லாந்து நாட்டின் தனிப்பட்ட இயல்பானது அதன் அதிக அளவிலான ஜனநாயகத் தனத்தில் (மக்கள் அனைவரின் கருத்து வாக்கெடுப்பு) உள்ளது, மற்றும் இந்தத் தனி இயல்பைப் பிரச்சார நோக்கங்களுக்காகவும் கூடப் பயன்படுத்தியாக வேண்டும் என்ற கருத்தும் ஆகும். இக்கருத்து மிக முக்கியமானது என்பதோடு என்னுடைய அபிப்பிராயப்படி முழுவதும் சரியானதும் கூட.

நாம் இக்கருத்தினை நமது வேறுபாடுகள் மறைந்து விடும் வகையில் (அவை ஒருவேளை மிகவும் முக்கியமல்லாதவை) பயன்படுத்தக் கூடாதா? உதாரணமாக:

இந்த வழியில் மட்டுமே—முழுவதும் நீக்கப்படுதல் அல்லது அதற்கு எதிராக—இந்த விஷயத்தை பொதுக் கருத்து வாக்கெடுப்புக்கு வைப்போமானால் அமைதிவாத (முதலாளித்துவ-அமைதிவாத, இத்தியாதி) மற்றும் சோஷலிச வாக்குகளின் கலவையைத்தான் பெற முடியும். அதாவது, சோஷலிச உணர்வு தெளிவு பெற்றிடாமல், அதை நாம் இருட்டடிப்பதாக இருக்கும். இந்தத் தனிப்பட்ட பிரச்சினையில்

(அதாவது, ராணுவ வெறி சம்பந்தமாய்) வர்க்கப் போராட்டம் என்ற கருத்து, கொள்கை ஆகியவற்றை பிரயோகிப்பது என்றில்லாமல், ராணுவ வெறி என்ற பிரச்சினையின் மீது வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்தைக் கைவிட்டு விடுவது என்றாகும்.

ஆனால் இந்த வழியில் இந்தப் பிரச்சினையைப் பொதுக் கருத்து வாக்கெடுப்புக்கு விடுவோமானால்—அதாவது, ராணுவ வெறியை முற்றிலும் ஒழிப்பதற்கான ஒரே வழி என்ற முறையில் தொழில் துறையிலும் விவசாயத்திலும் உள்ள பெரிய முதலாளித்துவ நிறுவனங்களை உடமை நீக்கம் செய்ய வேண்டும் என்பதை ஆதரிக்கிறீர்களா அல்லது உடமை நீக்கத்தை எதிர்க்கிறீர்களா?

இவ்வாறு அதை முன்வைப்போமானால், நாம் தத்துவார்த்த வழியில் அங்கீகரிக்கும் காரியத்தை நம்முடைய நடைமுறைக் கொள்கையிலும் நாம் கூறுவோம், அதாவது, முதலாளித்துவம் ஒழிக்கப்படுவதன் தொடர்பாகத்தான் ராணுவவெறி முற்றாக ஒழிக்கப்படுவது பற்றியும் சிந்திக்க முடியும் அது சித்தியாகவும் கூடும்.

எனவே, கிட்டத்தட்ட கீழ்வரும் வாசகம் அதில் இருந்தாக வேண்டும்: (1) பெரிய நிறுவனங்கள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்று நாம் கோருகிறோம்—ஒருவேளை, நேரடியான கூட்டாட்சியின் சொத்து மற்றும் வருமான வரி, மிக உயர்ந்த விகிதங்களில், புரட்சிகரமான உயர் விகிதங்களில் பெரிய சொத்துக்களின் மீது விதிக்கப்பட்டு அதன் மூலம், நடைமுறையில் முதலாளிகளது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

(2) சுவிட்சர்லாந்து நாட்டின் இத்தகையதொரு சோஷலிச மாற்றம் பொருளாதார ரீதியில் இன்றைக்கே நேரடியான சாத்தியக்கூறு உடையது என்று அறிவிக்க வேண்டும். மற்றும், தாங்க முடியாத அளவு அதிகரித்த வாழ்க்கைச் செலவு உயர்வின் காரணமாக இது அத்தியாவசியத் தேவையாக விளங்குகிறது. சுவிட்சர்லாந்து நாட்டில் இத்தகைய மாற்றத்தைச் செயல்படுத்த அதன்வசம் முதலாளித்துவ அரசாங்கம் அல்ல, மாறாகப் பாட்டாளி வர்க்க அரசாங்கமே தேவை என்று நாம் அறிவிக்கிறோம். இப்படிப்பட்ட அரசாங்கம் முதலாளி வர்க்கத்தின் மீது சார்ந்திராமல், கூலித் தொழிலாளி

கள் மற்றும் மிக ஏழைப் பிரிவினர் கொண்ட பரந்த மக்கள் திரளினர் மீது சார்ந்திருக்கும். உதாரணமாக ஜூரிச்சில் நடந்த பெரும் வேலைநிறுத்தங்கள் மற்றும் தெரு ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றில்—அவை அராவு தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவை[7]—நாம் பார்த்த புரட்சிகர மக்கள் போராட்டத்தின் துவக்கத்தைப் பார்க்கலாம். இந்தப் போராட்டம் அப்படிப்பட்ட நோக்கத்தைப் பின்பற்றியது ஆகும்—இது ஒன்றே அந்த வழியில் பரந்த மக்கள் திரளினரின் தாங்கொணாத வேதனைக்கு உண்மையான முற்றுப் புள்ளி வைப்பதாகும்.

(3) சுவிட்சர்லாந்து இவ்வாறு மாற்றமுறுவது தவிர்க்க இயலாத வகையில் முன்மாதிரியாக இருக்கும் என்று நாம் அறிவிக்கிறோம். எல்லா நாகரிகம் படைத்த நாடுகளிலும் உள்ள தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும் சுரண்டப்பட்ட மக்கள் திரளினரிடமிருந்தும் உறுதிமிக்க ஆர்வம் மிகுந்த ஆதரவைக் கொண்டுவரும் என்று அறிவிக்கிறோம். இப்படிப் பட்டதொரு மாற்றத்தோடு தொடர்பாக மட்டுமே, ராணுவ ஆதிக்கத்தை முழுமையாக நீக்குவது என்று நாம் முயற்சித்து வருகிறோமே அது வெறும் சொற்றொடராக இல்லாமல் அல்லது நமது மனதுக்கினிய விருப்பமாக மட்டும் இராமல் உண்மையிலேயே நடைமுறைச் சாத்தியமானதும், அரசியல் ரீதியில் தானாக விளங்கும் தன்மையுள்ள நடவடிக்கையாகவும் இருக்கும். இதைக் குறிப்பாயும் ஐரோப்பா முழுமையிலும் உள்ள பரந்த மக்கள் திரளினர் இயல்பான அகத் தூண்டுதலுடன் வேண்டி விரும்புகின்றனர்.

இதைத் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இந்த முறையில் பிரச்சினையை (நடைமுறைக் கிளர்ச்சி பாராளுமன்றப் பேச்சுகள் ஆகிய இரண்டிலும், மற்றும் சட்டம் இயற்றும் முன்முயற்சிக்கும் பொது கருத்து வாக்கெடுப்புக்கான யோசனைகள் வழியிலும்) முன்வைப்போமானால் முதலாளித்துவ மற்றும் ''சோஷலிச'' அமைதிவாதிகள் நமது ராணுவவெறி எதிர்ப்புக் கோஷங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு, முதலாளித்துவ, சுவிட்சர்லாந்து, அதன் ஏகாதிபத்தியச் சூழலில், சோஷலிசப் புரட்சி ஒன்றில்லாமல் ராணுவ ஆதிக்கத்தை முழுவதுமாக நீக்குவது சாத்தியம் (இதை நாம் அனைவரும் ஏகமனதாக

அபத்தம் என்று மறுதலிக்கிறோம்) என்று நாம் நினைப்பதாக அவர்கள் பிழையாக விளக்கம் கூறும் அபாயத்தை நாம் தவிர்க்கலாம் என்று நீங்கள் கருதவில்லையா?

கட்சியின் நல்வாழ்த்துக்களுடன், நி. லெனின்

Wl. Uljanow.
Spiegelgasse 14^II (bei Kammerer).
Zürich I

*1916 டிசம்பர் 1ல் எழுதப்பட்டது
வின்டர்தர் (சுவிட்சர்லாந்து)க்கு
அனுப்பப்பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 49,
பக்கங்கள் 334-336*

தொலைவிலிருந்து எழுதிய கடிதங்கள்[8]

ஐந்தாவது கடிதம்

புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் அரசுக் கட்டமைப்பிற்கான பணிகள்

என்பதிலிருந்து

முன் கடிதங்களில் ருஷ்யாவில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் உடனடியான பணிகள் கீழ்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன: (1) புரட்சியின் அடுத்த கட்டத்திற்கு அல்லது இரண்டாவது புரட்சிக்கு இட்டுச் செல்லும் நிச்சயமான பாதையைக் கண்டுபிடித்தல்; இப்புரட்சி (2) நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளினுடைய (குச்கோவ்கள், லுவோவ்கள், மில்யுக்கோவ்கள், கெரென்ஸ்கிகள் ஆகியோரது) அரசாங்கத்திலிருந்து தொழிலாளர்கள் ஏழ்மை மிக்க விவசாயிகள் ஆகியோரது அரசாங்கத்திற்கு அரசதிகாரம் மாற்றப்பட வேண்டும். (3) பின் சொன்ன அரசாங்கம் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகள் மாதிரியில் அமைக்கப்பட வேண்டும், அதாவது (4) அது பழைய, அனைத்து முதலாளித்துவ அரசுகளுக்கும் பொதுவான அரசு இயந்திரம், ராணுவம், போலீஸ், அதிகார வர்க்க அமைப்பு ஆகியவற்றை உடைத்தெறிந்து, முழுவதுமாக நீக்கி விட்டு அந்த இயந்திரத்திற்குப் பதிலாக (5) பரந்த மக்கள் திரளின் அமைப்பு என்று மட்டும் இல்லாமல் ஆயுதம் தரித்த மக்கள் அனைவரின் சர்வப்பொது அமைப்பை உண்டாக்க வேண்டும். (6) இப்படிப்பட்டதொரு அரசாங்கம் மட்டுமே, ''இப்படிப்பட்ட'' வர்க்கக் கட்டுக்கோப்புடையதும்(''பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயி மக்களின் புரட்சிகர-ஜனநாயக அதிகாரம்'') மற்றும் இப்படிப்பட்ட நிர்வாக அமைப்புகளுடையதுமான (''பாட்டாளி வர்க்க மிலீஷியா'') அரசாங்கம் மட்டுமே, அந்த நேரத்திற்குரிய மிகச் சிரமமானதும்,

பரம அவசர அவசியமானதுமான பிரதான பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றிடும் சக்திபடைத்ததாக இருக்கும்; அதாவது சமாதானத்தை வென்று பெறுவது—ஏகாதிபத்திய சமாதானம் அல்ல, ஏகாதிபத்திய வல்லரசுகள், தாம் அடித்த கொள்ளையை முதலாளிகளும் அவர்களது அரசாங்கங்களும் பங்கிட்டுக் கொள்வதற்குத் தம்மிடையே நடத்தும் பேரம் அல்ல; ஆனால் உண்மையிலேயே நிலைத்து நிற்கக் கூடியதும் ஜனநாயகமானதுமான சமாதானத்தை வென்று பெறுவது; பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின்றி இதை அடைய முடியாது. (7) ஆக முதல் படியிலிருந்தே, நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும் ("104வரின்" நிலத்துறை வேலைத்திட்டம் சாரத்தில் விவசாயிகளது வேலைத்திட்டமாக இன்னும் அப்படியேதான் இருக்கிறது என்று அனுமானித்தால் எல்லா நிலங்களையும் தேசவுடைமையாக்க வேண்டும்[9]) என்று போராடி வருகிற விவசாயிகளில் பெரும்பான்மையோரது ஆதரவு தொழிலாளர்களுக்கு இருந்தால் மட்டுமே ருஷ்யாவில் மிக அண்மை வருங்காலத்தில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியை எய்த முடியும். (8) இப்படிப்பட்டதொரு விவசாயிகளது புரட்சி சம்பந்தப்பட்ட மட்டிலும், அதன் அடிப்படையிலும் பாட்டாளி வர்க்கமானது, விவசாயி மக்களின் ஏழ்மை மிக்க பிரிவினரோடு அணி சேர்ந்துகொண்டு, அத்தியாவசியப் பொருள்களது உற்பத்தி மற்றும் வினியோகம் ஆகியவற்றைக் கண்காணிப்பு செய்வது, "சர்வப்பொது கட்டாய உழைப்பினைப்" புகுத்திடுவது இத்தியாதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் மேற்கொள்ள வேண்டும். போர் உருவாக்கிய சூழ்நிலைமைகளால் இந்த நடவடிக்கைகள் முற்ற முழுமையான தவிர்க்க இயலாத தன்மையால் தூண்டப்படுகின்றன. யுத்தப் பிற்காலத்திலும் இந்நிலைமைகள் பல்வேறு அம்சங்களில் இன்னும் கடுமையாகி விடும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் வளர்ச்சி அடைந்து, சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதைக் குறிப்பிடுவனவாக இருக்கும். சோஷலிசமானது ருஷ்யாவில் ஒரே அடியில் இடைக்கால நடவடிக்கைகள் இன்றி நேரடியாக நிலைநாட்டப்பட முடியாது. ஆனால் இது இப்படிப்பட்ட இடைமாற்ற நடவடிக்கைகளின் விளைவாக நிச்சயம் எய்தப்பட முடியும், என்பதோடு இது மிகவும்

அவசர அவசியமானதுமாகும். (9) இந்த சந்தர்ப்பத்தில், கிராமப்புற வட்டாரங்களில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளது தனிப்பட்ட சோவியத்துகளை (அதாவது, இதர விவசாயிகளின் பிரதிநிதிகளது சோவியத்துகளினின்று வேறுபட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களது சோவியத்துகள்) அமைக்கும் பணி மிகுந்த அவசர அவசியமாக முன்னுக்கு வருகிறது.

ருஷ்ய மற்றும் உலகப் புரட்சியிலான வர்க்க சக்திகளின் ஒரு மதிப்பீட்டின் அடிப்படையிலும், 1871 மற்றும் 1905 ஆகிய ஆண்டுகளின் அனுபவத்தின் அடிப்படையிலும் நாம் உருவரை செய்த வேலைத்திட்டத்தின் சுருக்கம் இதுதான்....

1917 மார்ச் 26 (ஏப்ரல் 8)ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு, *தொகுதி 31, பக்கங்கள் 55-56*

சுவிட்சர்லாந்து தொழிலாளருக்கு எழுதிய விடைபெறுதல் கடிதம்[10]

என்பதிலிருந்து

ஏகாதிபத்தியப் போரானது ஒரு எதார்த்தமான தவிர்க்க இயலாத விளைவாக்கி விட்ட புரட்சிகளின் தொடரைத் துவக்கி வைக்கும் மகத்தான பெருமை ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் ருஷ்யப் பாட்டாளி வர்க்கம்தான் உலகத் தொழிலாளிகளுக்குள் தனிச் சிறந்த புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் எனும் எண்ணம் எங்களுக்கு அறவே அன்னியமானதாகும். ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் பிற நாட்டுப் பாட்டாளி வர்க்கங்களை விட மிகக் குறைவான ஒழுங்கமைப்புப் பெற்றதென்றும், மிகக் குறைந்த தயார் நிலையில் உள்ளது என்றும், வர்க்க உணர்வில் குறைவானது என்றும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தை அகில உலகத்தின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக்கியது அதன் தனிப் பண்புகள் அல்ல. ஆனால் ஒரு குறிப்பிட்ட, ஒரு வேளை மிகக் குறுகியதொரு காலத்திற்கான வரலாற்றுச் சூழ்நிலைமைகளது தனிப்பட்ட நிகழ்ச்சிச் சேர்க்கையினால் தான் இது சாத்தியமாயிற்று.

ருஷ்யா ஒரு விவசாயிகளின் நாடு. ஐரோப்பிய நாடுகளிலேயே மிகவும் பின்தங்கிய நாடுகளில் ஒன்று அது. இங்கே சோஷலிசம் நேரடியாகவும் உடனடியாகவும் வெற்றி பெற முடியாது. ஆனால் இந்த நாட்டின் விவசாயி இயல்பும், பிரபுக்களின் கைகளில் ஏராளமான சேம நிலங்கள் இருப்பதும், 1905ஆம் ஆண்டு அனுபவத்தைக் கொண்டு கணித்திடும் போது, ருஷ்யாவில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்கு

பிரம்மாண்டமானதொரு வீச்சைத் தரக் கூடும். எனவே அது எங்களது புரட்சியை உலக சோஷலிசப் புரட்சிக்கு ஓர் அறிமுகமாக, அதை நோக்கிய ஒரு படியாக ஆக்கக் கூடும்.

இந்தக் கருத்துக்களுக்கான போராட்டத்தில் உருவாக்கப் பட்டு வளர்ச்சி அடைந்தது நமது கட்சி. 1905ஆம் ஆண்டு அனுபவத்தாலும் 1917 வசந்த கால அனுபவத்தாலும் ஏனைய கட்சிகள் அனைத்துடனும் எங்களது கட்சி நடத்திய சமரசமற்ற போராட்டத்திலும் இக்கருத்துக்கள் முழுமை யாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டன. இக்கருத்துக்களுக்காக நாங்கள் இன்னும் தொடர்ந்து போராடுவோம்.

ருஷ்யாவில் சோஷலிசம் நேரடியாகவும் உடனடியாக வும் வெற்றி பெற்றிட முடியாது. ஆனால் விவசாயி மக்கள் திரளினர் பிரபுக்களின் அளப்பரிய நிலச் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்யும் அளவுக்கு தவிர்க்க இயலாத மற்றும் முதிர்ச்சி பெற்ற விவசாயி எழுச்சியை நிறை வேற்ற முடியும். எப்போதும் இதுவே எங்களது கோஷமாக இருந்திருக்கிறது. இப்போதும் எங்களது கட்சியின் மத்திய கமிட்டியினாலும், எங்களது கட்சியின் செய்தி ஏடாகிய பிராவ் தாவினாலும் பீட்டர்ஸ்பர்க் நகரில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோஷத்திற்காகப் பாட்டாளி வர்க்கம் போராடும். அதே சமயத்தில் ஒருபுறம் விவசாயத்திலான கூலித் தொழி லாளர் மற்றும் அவர்களோடு சேர்ந்துள்ள ஏழ்மை மிக்க விவசாயிகளுக்கும் மறுபுறம் பணக்கார விவசாயிகளுக்கும் (1907-14ஆம்ஆண்டு ஸ்தலீப்பின் நிலத்துறைச் ''சீர்திருத் தத்தினால்''[11] இவர்களது நிலை இன்னும் வலுவடைந்துள் ளது) இடையே தவிர்க்க இயலாதபடி எழும் கொடூரமான வர்க்க மோதல்கள் குறித்துக் கண்ணை மூடிக்கொள்ளாமல் பாட்டாளி வர்க்கம் போராடும். முதலாவது (1906) மற்றும் இரண்டாவது (1907) டூமாவில் 104 விவசாயி பிரதிநிதிகள், எல்லா நிலங்களையும் தேசவுடைமையாக்க வேண்டுமென் றும், பூரண ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்ட வட்டாரக் கமிட்டிகள் அந்த நிலங்களைப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்றும் கோரி புரட்சிகரமானதொரு விவ சாய மசோதாவைக் கொண்டுவந்தனர் எனும் மெய்நடப்பு கவனியாது புறக்கணிக்கக் கூடியதல்ல.

இப்படிப்பட்டதொரு புரட்சி தன்னிலையிலேயே சோஷ

விசமாக ஆகாது. ஆனால் அது உலகத் தொழிலாளர் இயக்கத்திற்கு மகத்தானதொரு தூண்டுதலைத் தரும். அது ருஷ்ய நாட்டில் சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் நிலையைப் பெரிதளவு வலுவூட்டுவதாகவும், விவசாயத் தொழிலாளர் மற்றும் ஏழ்மை மிக்க விவசாயிகளின் மீதான அதன் செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்வதாயும் இருக்கும். இந்தச் செல்வாக்கு பலத்தின் மீது நகரப்புறப் பாட்டாளிகள், ''தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகள்'' போன்ற புரட்சிகர அமைப்புகளை கட்டிநிறுவுவதைச் சாத்தியமாக்கும்; இவை முதலாளித்துவ அரசுகள் கையாண்ட பழைய ஒடுக்குமுறை சாதனங்களை, சேனை, போலீஸ், அதிகார வர்க்கம் ஆகியவற்றை, பதிலீடு செய்யும், தாங்க முடியாத பெரும் பாரமான ஏகாதிபத்தியப் போர் மற்றும் அதன் பின்விளைவுகளின் நிர்ப்பந்தத்தின் கீழ் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் கண்காணிப்பு செய்ய பல புரட்சிகர நடவடிக்கைகளை செய்து முடிக்கவும் உதவும்.

1917 மே 1,
Jugend-Internationale
எனும் பத்திரிகை இதழ் 8ல்
ஜெர்மன் மொழியில்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 31,
பக்கங்கள் 91-92

நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்

பாட்டாளி வர்க்கக் கட்சிக்கான நகல் கொள்கை அறிக்கை[12] என்பதிலிருந்து

வங்கிகள் மற்றும் முதலாளித்துவ சிண்டிக்கேட்டுகளை தேசவுடைமையாக்கல்

15. சோஷலிஸ்டுப் புரட்சியின் அவசியத்தை மக்கள் தொகையின் மிகப் பெரிய பெரும்பான்மை தெளிவாக உணராத காலம் வரையில், ஒரு சிறு விவசாயிகளின் நாட்டில் சோஷலிசத்தைப் ''புகுத்தும்'' நோக்கத்தைப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி எந்தவொரு சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழும் முன்வைக்கக் கூடாது.

ஆனால், ''மார்க்சியத்திற்கு நெருங்கியதான'' கவர்ச்சித் தொடர்களின் பின்னே ஒளிந்து நிற்கும் முதலாளித்துவக் குயுக்திவாதிகள் மட்டுமே, இந்த மெய்விவரத்திலிருந்து, உடனடியான புரட்சிகர நடவடிக்கைகளை ஒத்திப்போடுவதற்கான ஒரு கொள்கையை நியாயப்படுத்த முடியும். இந்த நடவடிக்கைகளுக்கான உரிய காலம் ஏற்கெனவே கனிந்து விட்டது. இவை பல முதலாளித்துவ நாடுகளால் போரின் தறுவாயில் ஏற்கெனவே அடிக்கடி கையாளப்பட்டன. வர இருக்கும் முழுமையான பொருளாதாரக் குலைவு மற்றும் பஞ்சத்தை எதிர்த்துப் போராட இவை முற்றிலும் இன்றியமையாதவை.

நிலம், அனைத்து வங்கிகள் மற்றும் முதலாளித்துவ சிண்டிக்கேட்டுகளை தேசவுடைமையாக்குதல் அல்லது குறைந்த பட்சம் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் கண்காணிப்பை உடனடியாக அவற்றின் மீது நிலைநாட்டுதல் போன்ற நடவடிக்கைகள்—எந்த வழியிலும் சோஷலிசத்தைப் ''புகுத்துவது'' என்று அமையாத நடவடிக்கைகள்—முழுமையாக ஆதரிக்கப்பட வேண்டும். எப்பொழுது சாத்

தியமோ அப்பொழுது இவை புரட்சிகரமான வழியில் செய்து முடிக்கப்பட வேண்டும். சோஷலிசத்தை நோக்கிய படிகள் மட்டுமே ஆன, பொருளாதார ரீதியில் முற்றிலும் நடைமுறை சாத்தியமான இத்தகைய நடவடிக்கைகள் இல்லாவிட்டால், போரினுல் விளைவிக்கப்பட்ட காயங்களை ஆற்றுவது சாத்தியம் அல்ல, வரவிருக்கும் வீழ்ச்சியைத் தவிர்ப்பதும் சாத்தியம் அல்ல. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி, ''போரின் மூலம்'' குறிப்பாயும் மிகவும் வெட்கக் கேடான முறையிலும் தம்மைத்தாமே செல்வந்தர்களாக்கிக் கொள்ளும், முதலாளிகள் மற்றும் வங்கி அதிபர்களின் நம்ப முடியாத அளவு மிகையான லாபங்களைப் பறித்து எடுத்துக் கொள்ள என்றுமே தயங்காது.

1917 ஏப்ரல் 10 (23)ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 31,
பக்கங்கள் 168-169

ரு.ச.ஜ.தொ.க. (போல்ஷிவிக்)இன் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மாநாடு[13] ஏப்ரல் 24-29 (மே 7-12) 1917

1

நடப்புநிலை பற்றிய உரை
ஏப்ரல் 24 (மே 7)
என்பதிலிருந்து

அப்படியானுல், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் என்ன? சோஷலிஸ்டுகளின் வாதங்கள் அனைத்திலும் காணப்படும் பிரதானக் குறைபாடு, பிரதானத் தவறு என்னவெனில், இந்தப் பிரச்சினை, சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதன் பிரச்சினையாக, மிகவும் பொதுப்பட்ட வடிவில் முன்வைக்கப்பட்டிருப்பதேயாகும். எனினும் நாம் ஸ்தூலமான படிகளையும் நடவடிக்கைகளையும் பற்றியே பேச வேண்டும். அவற்றில் சில பக்குவமானவை, சில பக்குவமானவை அல்ல. நாம் ஒரு மாறிச் செல்லும் கட்டத்தில் இருக்கிறோம். முதலாளித்துவ அரசுகளைப் போலன்றி நாம் புதிய வடிவங்களை முன்னணிக்குக் கொண்டுவந்திருக்கிறோம் என்பது தெளிவு. தொழிலாளர் படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் என்ற அரசு வடிவம் எந்த நாட்டிலும் இப்போது நிலவவில்லை, என்றும் நிலவியது கிடையாது. இந்த வடிவம் சோஷலிசத்தை நோக்கிய முதல் படிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் சோஷலிஸ்டு சமூக அமைப்பின் துவக்கத்தில் தவிர்க்க முடியாதது. இது தீர்மானகரமான முக்கியத்துவமுள்ள உண்மை. ருஷ்யப் புரட்சி சோவியத்துகளை உருவாக்கியுள்ளது. உலகில் எந்த முதலாளித்துவ நாட்டிலும் இத்தகைய அரசு நிறுவனங்கள் இல்லை, இருக்கவும் முடியாது. இதைத் தவிர்த்த வேறு எந்த ஓர் அரசு அதிகார அமைப்புடனும் எந்த சோஷலிஸ்டுப் புரட்சியும் செயல்விளைவுள்ளதாக இருத்தல் முடியாது. சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ள வேண்டும். ஆனுல் ஒரு சாமான்ய முதலாளித்துவக் குடியரசை நிர்மாணிக்கும் நோக்கத்திற்

காக அல்ல; சோஷலிசத்திற்கு நேரடியாக மாறிச் செல்லும் நோக்கத்திற்காகவும் அல்ல. அவ்வாறு இருக்க முடியாது. அப்படியானுல் அதன் நோக்கம் என்ன? இந்த மாறிச்செல்லலை நோக்கிய ஸ்தூலமான முதல் அடிகளை எடுத்து வைக்கும் பொருட்டு சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தை மேற் கொள்ள வேண்டும். இந்த அடிகளை எடுத்து வைக்க முடியும், எடுத்து வைக்க வேண்டும். இந்த விஷயத்தில் அச்சமே ஆகமோசமான விரோதி. இந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும்படி மக்கள் திரளை ஊக்குவிக்க வேண்டும். இல்லாவிட்டால், சோவியத்துகளின் ஆட்சி அதிகாரத்துக்கு அர்த்தமே இருக்காது, அது மக்களுக்கு எதையும் அளிக்காது.

நமது மார்க்சியத் துணிபுகளுக்கு எதிர்ப்பாகச் செல்லாமல், என்ன ஸ்தூலமான நடவடிக்கைகளை எடுக்கும்படி மக்களுக்கு நாம் ஆலோசனை கூறலாம் என்ற கேள்விக்கு இப்போது நான் விடையளிக்க முயல்கிறேன்.

ஆட்சி அதிகாரம் தொழிலாளர் படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்று நாம் விரும்புவதேன்?

சோவியத்துகள் நிறைவேற்ற வேண்டிய முதல் நடவடிக்கை நிலம் தேசவுடைமையாக்கப்படுவதாகும். எல்லா மக்களினங்களும் தேசவுடைமையாக்கல் பற்றிப் பேசி வருகிருர்கள். சிலர் இது மிகவும் கற்பனுரீதியான ஒரு நடவடிக்கை என்று சொல்கிருர்கள். இருந்த போதிலும் எல்லோரும் இதை ஒப்புக் கொள்கிருர்கள். காரணம் ருஷ்யாவில் நிலவுடைமை மிகவும் சிக்கலானதாக உள்ளது. இதிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி நிலத்தைப் பிரிக்கும் எல்லைக்கோடுகளை அகற்றி அதை அரசின் உடைமையாக ஆக்குவதேயாகும். தனியார் நிலவுடைமை ஒழிக்கப்பட வேண்டும். இது நம்முன் உள்ள கடமை, ஏனெனில் பெரும்பான்மையான மக்கள் இதை ஆதரிக்கிருர்கள். இதைச் செய்து முடிக்க நமக்கு சோவியத்துகள் அவசியம். பழைய அரசாங்க அலுவலர்களின் உதவியுடன் இந்த நடவடிக்கையை நிறைவேற்ற முடியாது.

இரண்டாவது நடவடிக்கை. நாம் சோஷலிசம் ''புகுத்தப்படுவதை'' ஆதரிக்க முடியாது—இது அபத்தத்தின் சிகரமாகித் திரும். நாம் சோஷலிசத்தைப் பிரசாரம் செய்ய

வேண்டும். ருஷ்யாவின் மக்கள் தொகையில் மிகப் பெரும் பான்மையினர் விவசாயிகளும், சிறு குடியானவர்களும் ஆவர். இவர்களுக்கு சோஷலிசம் பற்றிய கருத்து எதுவும் கிடையாது. ஆனல் அவர்களது சாகுபடியை மேம்படுத்திக் கொள்ள இயலும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வங்கி நிறுவப்படுவதற்கு அவர்கள் என்ன ஆட்சேபம் கூற முடியும்? அதற்கு எதிராக அவர்கள் எதுவும் சொல்ல முடியாது. நமது பிரசாரத்தில் இந்த நடைமுறைப் பயனுள்ள நடவடிக்கைகளை விவசாயிகளின் முன் வைக்க வேண்டும், அவை அவசியமானவை என்பதை விவசாயிகள் உணரும்படி செய்ய வேண்டும்.

சர்க்கரை சிண்டிக்கேட் முற்றிலும் இன்னெரு விஷயம். இது தெளிவான உண்மை. இங்கு நமது யோசனை நேரடியாகவும் நடைமுறை சாத்தியமானதாயும் இருக்க வேண்டும்: ஏற்கெனவே முழுமையாக வளர்ச்சியடைந்துள்ள சிண்டிக்கேட்டுகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள உத்தேசித்திருக்குமானல், அது இத்தகைய நோக்கங்களுக்காக மட்டுமேயாகும். அவை ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை. ஒன்று சோவியத்துகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டும், அல்லது பாரிஸ் கம்யூன் விஷயத்தில் ஏற்பட்டது போன்று இகழார்ந்த அழிவுக்கு ஆளாக வேண்டும். இவை இரண்டில் ஒன்றே நடைபெறும். தேவைப்படுவது ஒரு முதலாளித்துவக் குடியரசாக இருக்குமானல் அதைக் காடேட்டுகளுக்கே விட்டுவிடலாம்.

என்னை மிகவும் கவர்ந்ததான ஓர் உரையினைக் குறிப்பிடுவதோடு நான் முடித்துக் கொள்கிறேன். நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி ஒருவர் நிகழ்த்திய அருமையான உரையை நான் கேட்டேன். ஏட்டுச் சொல் ஒன்றைக் கூடப் பயன்படுத்தாமல், அவர்கள் எப்படிப் புரட்சி நடத்தினர்கள் என்பதை அவர் சொன்னர். அவர்களுக்கு ஒரு ஜனதிபதி வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினை குறித்து அந்தச் சுரங்கத் தொழிலாளர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் சுரங்கத்தினைக் கைப்பற்றினர்கள். உற்பத்தியில் இடைமுறிவு ஏற்படாமல் இருக்கக் கேபிள்களை எப்படிக் குலையாமல் பத்திரமாக வைத்திருப்பது என்பதே அவர்களுக்கு முக்கியப் பிரச்சினை

யாக இருந்தது. பிறகு வந்தது ரொட்டிப் பிரச்சினை, அது போதாததாக இருந்தது. அதைப் பெறும் முறை விஷயத்திலும் சுரங்கத் தொழிலாளர்கள் உடன்பாடு கண்டனர். இது புரட்சியின் ஒரு மெய்யான வேலைத்திட்டம், புத்தகங்களிலிருந்து வருவிக்கப்பட்டதல்ல. இதைத்தான் நான் அந்தந்த ஊரில் ஆட்சி அதிகாரத்தை மெய்யாகவே வென்று பெறுவது என்று கூறுகிறேன்.

பெத்ரோகிராதில் போல வேறு எங்கும் முதலாளித்துவ வர்க்கம் இவ்வளவு நன்ருக நிலையுறுதி பெற்றிருக்கவில்லை. இங்கு முதலாளிகள் கைகளில் ஆட்சி அதிகாரம் உள்ளது. ஆனுல் நாடு முழுவதிலும் விவசாயிகள் சோஷலிச நோக்கங்கள் எதையும் முன்வைக்காமலே முற்றிலும் நடைமுறைப் பயன் உள்ள நடவடிக்கைகளை நிறைவேற்றி வருகிருர்கள். புரட்சிகர இயக்கத்தின் இந்த வேலைத்திட்டம் மட்டுமே புரட்சியின் மெய்யான பாதையைச் சுட்டிக் காட்டுகிறது என்று நான் கருதுகிறேன். இந்த நடவடிக்கைகள் மிகப் பெரிய முன்கவனத்தோடும் விழிப்புடனும் தொடங்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகிருேம். ஆனுல் இந்த நடவடிக்கைகள் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும். இந்தத் திசை வழியில் மட்டுமே நாம் முன்செல்ல வேண்டும். வேறு வழி எதுவும் கிடையாது. இதைச் செய்யாவிட்டால் சோவியத்துகள் தகர்க்கப்பட்டு இகழார்ந்த அழிவுக்கு ஆளாக்கப்படும். புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் மெய்யாகவே ஆட்சி அதிகாரத்தை வென்று பெறும் பட்சத்தில் அது முன்னேறிச் செல்வதற்காக மட்டுமே இருக்கும். முன்னேறிச் செல்வது என்பதன் அர்த்தம் நம்மைப் போரில் இருந்து விடுவிக்கத் திட்டவட்டமான நடவடிக்கை எடுப்பது என்பதாகும். சொற்களால் மட்டும் இதைச் செய்ய முடியாது. இந்த நடவடிக்கைகளின் முழுமையான வெற்றி உலகப் புரட்சி மூலம் மட்டுமே சாத்தியமாகும். புரட்சி போரை அழிக்குமாஞல், உலக முழுதின் தொழிலாளர்கள் புரட்சியை ஆதரிப்பார்களாஞல் இது சாத்தியமாகும். எனவே ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்வதுதான் ஒரே நடைமுறைப் பயனுள்ள நடவடிக்கை, தீர்வுக்கான ஒரே வழியாகும்.

நூல் திரட்டு,
தொகுதி 31,
பக்கங்கள் 356-358

2

நடப்புநிலை மீதான தீர்மானம் என்பதிலிருந்து

ஐரோப்பாவில் மிகப் பின்தங்கிய நாடொன்றில், பெருமளவு எண்ணிக்கையுள்ள சிறு தர விவசாயிகள் மத்தியில் செயல்படும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கம், உடனடியாக சோஷலிச மாற்றங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொள்ள முடியாது.

ஆனால், இதிலிருந்து தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை ஆதரித்திட வேண்டும் என்றோ, அல்லது குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் ஒத்துக்கொள்ளக் கூடிய எல்லைக்கோடுகளுக்குள் தனது நடவடிக்கைகளை அது வைத்துக் கொள்ள வேண்டும் என்றோ, அல்லது சோஷலிசத்திற்கான காலம் கனிந்து இருக்கிற இந்நாளில் பல்வேறு செயல்முறை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியில் தனது தலைமைப் பாத்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் விட்டுக் கொடுத்திட வேண்டும் என்றோ அனுமானிப்பது பிரம்மாண்டமானதொரு பிழையாகும் என்பதோடு இது எதார்த்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் முழுமையாகத் துறந்தோடுவது என்பதுமாகும்.

இந்த நடவடிக்கைகள் வருமாறு: முதலாவது, நிலத்தை தேசவுடைமையாக்குதல். இந்த நடவடிக்கையானது முதலாளித்துவ அமைப்பின் கட்டுக்கோப்பிலிருந்து நேரடி அப்பால் செல்வதாக இல்லை. இருப்பினும் அதே சமயத்தில், உற்பத்திச் சாதனங்களிலான தனியார் உடைமை மீது தாக்கும் பலமானதொரு அடியாக விளங்கும். காரணம் இது

நாட்டுப் புறத்திலுள்ள அரைப் பாட்டாளி வர்க்கத்தினரின் மீது சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கினை வலுப்படுத்துவதாக இருக்கும்.

அடுத்த நடவடிக்கைகள், அனைத்து வங்கிகள் மீதும் அரசுக் கண்காணிப்பை நிலைநாட்டுவதும், அவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரே மைய வங்கியாக ஆக்குவதும் ஆகும். மேலும் காப்பீட்டு நிறுவனங்களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது, மிகப் பெரிய முதலாளிகளின் சிண்டிக் கேட்டுகளை (உதாரணமாக, சர்க்கரை சிண்டிக்கேட், நிலக்கரி சிண்டிக்கேட், உலோக சிண்டிக்கேட் இத்தியாதி இத்தியாதி) கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவது மற்றும் வருமானங்கள், சொத்துக்கள் மீது இன்னும் அதிக நியாயமான வளர்வீத வரியினைக் காலப்போக்கில் கொண்டுவருவது. பொருளாதார ரீதியில் இந்த நடவடிக்கைகள் முழுவதும் காலப் பொருத்தம் ஆனவை. செய் முறையில் அவை உடனடியாகச் சந்தேகமின்றி நிறைவேற்றப்பட முடியும். அரசியல் ரீதியாக, இந்த சீர்திருத்தங்களால் பெரிதும் பலன் பெறக்கூடிய விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையோரது ஆதரவை இது பெறுவது சாத்தியமே.

இப்போது ருஷ்யா முழுமையிலும், செறிந்து பின்னலமைப்பாக வளர்ந்துள்ள தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் மற்றும் இதர பிரதிநிதிகளது சோவியத்துகள், மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளோடு கூட சர்வஜனக் கட்டாய உழைப்பினையும் கொண்டுவரலாம். ஏனெனில், சோவியத்துகளது தன்மை, ஒரு புறத்தில் மிகப் பெரும்பான்மையான மக்கள் தெளிவாகவும் திட்டமாகவும் புதிய சீர்திருத்தங்களுக்கான நடைமுறை தேவையை உணர்ந்து கொண்டால் மட்டுமே அவை கொண்டுவரப்படும் என்பதை உத்தரவாதம் செய்கிறது. மற்றொரு புறத்தில், இச்சீர்திருத் தங்கள் போலீசார்கள் மற்றும் அதிகாரிகளாலும் கொண்டு வரப்படாமல், அமைப்புறுதி கொண்ட, ஆயுதமணிந்த பாட்டாளி மக்கள் திரளினராலும் விவசாயிகளாலும் தங்களது சொந்த விவகாரங்களை மேலாண்மை செய்வதில் சுயவிருப்போடு கூடிய பங்கேற்றல் மூலம் நிறைவேற்றப்படும் என்பதை சோவியத்துகளின் தன்மை உத்தரவாதம் செய்கிறது.

E MAD 1975

பாட்டாளிகள் மற்றும் அரைப் பட்டாளிகள் ஆகியோரிடத்து ஆட்சி அதிகாரம் மாற்றப்படும் பட்சத்தில் இந்த நடவடிக்கைகள் அனைத்தின் மற்றும் இது போன்ற ஏனைய நடவடிக்கைகளின் தேசிய அளவிலான அமலாக்கம் கருதி அவை விவாதிக்கப்பட வேண்டுவது மட்டுமின்றி அதற்காகத் தயார் செய்திடவும் வேண்டும், செய்திடவும் முடியும். அது மட்டுமல்லாமல், சந்தர்ப்பம் ஏற்படும் போது மக்கள் அனைவரின் உள்ளூர் புரட்சிகர ஆட்சி அமைப்புகளால் அமல் செய்திடப்படவும் வேண்டும், செய்திடப்படவும் முடியும்.

மேற்காணும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதில் மிகுந்த கவனமும் எச்சரிக்கையும் கையாளப்பட வேண்டும். மக்கட் தொகையின் உறுதிமிக்கப் பெரும்பான்மை அதற்கு ஆதரவாகப் பெறப்பட்டாக வேண்டும். மற்றும் இந்தப் பெரும்பான்மையானது எந்த ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்கும் ஆன நாட்டின் நடைமுறை ஆயத்த நிலையைப் பற்றித் திடமான நம்பிக்கை கொண்டதாக இருந்திட வேண்டும். திரளான தொழிலாளர்களது வர்க்க உணர்வுடைய முன்னணிப் படை தனது கவனத்தையும் முயற்சிகளையும் குவிமையப் படுத்திடும் திசை வழி இதுதான். ஏனெனில் இன்றைய படுவீழ்ச்சி நிலையிலிருந்து மீளும்படி விவசாயிகளுக்கு உதவி செய்வது இந்தத் தொழிலாளர்களது உன்னதக் கடப்பாடு ஆகும்.

சொல்தாத்ஸ்கயா பிராவ்தா,
இதழ் 13ன் அனுபந்தம்,
1917 மே 16 (3)

நூல் திரட்டு,
தொகுதி 31,
பக்கங்கள் 451-452

தவிர்க்கவொண்ணுத பெரும் விபத்தும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளும்

(முதல் கட்டுரை)

நம்மை எதிர்நோக்கியுள்ள தவிர்க்க இயலாத பெரு வீழ்ச்சி, முன் எப்போதும் கண்டிராத பரிமாணங்களுடைய பெரும் விபத்து ஆகியவற்றைப் பற்றிய பிரச்சினை மிகவும் முக்கியமானதொன்று. இப்பிரச்சினையின் குறிபொருளை நாம் முழுவதாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ருல், அதைக் குறித்து மீண்டும் மீண்டும் விரித்துரைக்க வேண்டும். பிராவ்தாவின் கடந்த இதழில், தொழிலாளர்கள் படையாளர் பிரதிநிதிகளது சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின் வேலைத் திட்டமானது ''பயங்கர'' போல்ஷிவிசத்திலிருந்து எவ்வகையானும் வேறுபட்டதாக இனியும் இல்லை என்று நாம் கூறினேம்.[14]

இன்று மென்ஷிவிக் அமைச்சர் ஸ்கோபெலெவின் வேலைத் திட்டமானது போல்ஷிவிசத்தையும் தாண்டிச் செல்வதாக இருக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும். அமைச்சரக வெளியீடாகிய ரேச்சில்[15] கொடுக்கப்பட்டுள்ள அந்த வேலைத்திட்டம் இதுதான்:

''அமைச்சர் (ஸ்கோபெலெவ்) கூறியதாவது.... 'நாட்டின் பொருளாதாரம் அழிவின் விளிம்பின் மீது நிற்கிறது. கஜானுவில் பணம் இல்லாததால் பொருளாதார வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நாம் தலையிட்டாக வேண்டும். உழைக்கும் மக்கள் திரளினர் வாழ்க்கை நிலையை நாம் மேம்படுத்தியாக வேண்டும். மற்றும் அதை நிறைவேற்றுவதற்கு வியாபாரிகள் வங்கி அதிபர் ஆகியோரது பணப் பெட்டிகளிலிருந்து இலாபங்களை நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும்.'

(கூட்டத்திலிருந்து ஒரு குரல்: ''எவ்வாறு?'') 'சொத்தின் மேல் ஈவு இரக்கமின்றி வரி விதிப்பதன் மூலம்' என்று தொழிலாளர் நல அமைச்சர் ஸ்கோபெலெவ் பதிலிறுத்தார். 'நிதி இயலுக்குத் தெரிந்த வழிமுறை அது. சொத்துப் படைத்த வர்க்கத்தினர் மீதுள்ள வரிகளின் வீதம் அவர்களது இலாபங்களில் நூறு சதவிகிதம் வரை உயர்த்தப்பட வேண்டும்.' (கூட்டத்திலிருந்து ஒரு குரல்: 'அப்படியானால் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வது.') ஸ்கோபெலெவ் கூறினார்: 'துரதிருஷ்டவசமாகப் பல பெரும் நிறுவனங்கள் தங்களது பங்குதாரர்களுக்கு இலாபப் பங்கீடுகளை வினியோகித்து விட்டன. ஆகவே சொத்துப் படைத்த வர்க்கங்கள் மீது ஒரு வளர்வீத நபர் வரியினை விதித்தாக வேண்டும். நாம் இன்னும் கூட அதிகமாகப் போக முடியும். முதலாளித்துவப் பொருளாதார முறையினைப் பாதுகாத்துக் கொள்ள முதலாளிகள் விரும்பினால், தங்களது வாடிக்கையாளர்களை இழந்து விடாமல் இருக்க அவர்கள் வட்டி பெறாமல் பணிபுரியட்டும்.... முன்னாளில் இவர்களை வேலை செய்யும்படி ஊக்குவித்த தூண்டுகோல் இப்போது இல்லாதபடியால் ஓரளவுக்கு உற்சாகமற்ற மனநிலையில் இருக்கிற பங்குதாரர்கள், வங்கி அதிபர்கள் மற்றும் ஆலை முதலாளிகளுக்குக் கட்டாய உழைப்பு சேவையை நாம் புகுத்தியாக வேண்டும்.... பங்குதாரர்கள் அரசுக்குப் பணியும்படி நிர்ப்பந்திக்கப்பட வேண்டும். அவர்களும் கட்டாய உழைப்பு சேவைக்கு உட்பட்டேயாக வேண்டும்.''

தொழிலாளர்கள் இத்திட்டத்தினை மறுபடியும் மறுபடியும் படித்துப் பார்த்து அதை விவாதித்து, அதை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.

இதில் முக்கிய காரியம், இதை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிபந்தனைகள் மற்றும் இதை நிறைவு செய்வதற்கு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் ஆகும்.

இந்த வேலைத்திட்டம் தன்னிலையிலேயே சிறப்புடைய ஒன்றாகும். இது போல்ஷிவிக் திட்டத்தோடு ஒத்துப்போவதாக இருக்கிறது. ஆனால் ஒரு அம்சத்திலே இது நமது திட்டத்தையும் தாண்டிப் போவதாக இருக்கிறது. அதாவது ''வங்கி அதிபர்களது பணப் பெட்டிகளில் இருந்து நூறு சதவிகித' அளவு ''இலாபங்களை எடுத்துக் கொண்டாக வேண்டும்'' என்ற அதன் வாக்குறுதியில் அது நமது வேலைத்திட்டத்தையும் மிஞ்சி நிற்கிறது.

நமது கட்சியின் நிலை மிகவும் மிதமானதாக இருக்கிறது. அதன் தீர்மானம் இதைவிடக் குறைவாகத்தான் கோருகிறது. அதாவது வங்கிகள் மீது கண்காணிப்பைக் கொண்டுவருவது மட்டுமே அதன் நோக்கம். மற்றும், ''வருமானங்கள், சொத்துக்கள் மீது இப்போதுள்ளதை விட நியாயமான வளர்வீத வரியினைப் படிப்படியாக (சிறிது இதைக் கேளுங்கள், போல்ஷிவிக்குகள் படிப்படியாக மெள்ளக் கொண்டுவருவதை விரும்புகிறார்கள்!) புகுத்துவது'' நமது கட்சியின் நோக்கம்.[16]

ஸ்கோபெலெவை விட நமது கட்சி மிகவும் மிதமானதாக இருக்கிறது.

ஸ்கோபெலெவ் வாக்குறுதிகளைச் செயல்முறையில் நிறைவேற்றுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளாமல் அளவு மீறிய, இல்லை மிதமிஞ்சிய வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்.

அதுதான் விஷயத்தின் சாரம் ஆகும்.

ஸ்கோபெலெவின் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லாதது மட்டுமல்லாமல், அதை நிறைவேற்றுவதற்கு உரிய முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்வது கூட சாத்தியமில்லை. நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளது கட்சிகளிலிருந்து வந்த பத்து அமைச்சர்களுடன் கைகோர்த்து நின்றோ, அல்லது முதலாளிகளது (அவர்களுடன் கூட மென்ஷிவிக்குகள் மற்றும் நரோத்னிக்குகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்) அரசாங்கம் கட்டாயத்தால் வரம்பிடப்பட்டுள்ள அதிகார வர்க்க நபர்கள் நிறைந்த பொறியமைவுடன் சேர்ந்தோ இதைச் சாதிக்க முடியாது.

குடிமகனார் ஸ்கோபெலெவ் அவர்களே, வாக்குறுதிகளைக் குறைத்து, அதிக நடைமுறை சாத்தியமானவற்றை சொல்லுங்கள்! அலங்கார வார்த்தைகளைக் குறைத்து, கடமையாற்றுவது எவ்வாறு என்பது பற்றி அதிக அறிவைக் காட்டுங்கள்.

தவிர்க்க முடியாததும் பயங்கரமானதுமானதொரு பெருவிபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றவேண்டுமானால், கடமையாற்ற நாம் இறங்கிடலாம். ஒரு நாள் கூட கால தாமதம் பண்ணாமல் உடனடியாக இறங்கியாக வேண்டும். ஆனால் ''புதிய'' இடைக்கால அரசாங்கம் கடமையாற்ற இறங்க விரும்பவில்லை என்பதுதான் முழு விஷயம். அப்படியே அது விரும்பினாலுங்கூட அதனால் முடியாது. ஏனெனில் மூலதனத்

தின் நலன்களைப் பாதுகாக்கும் ஓராயிரம் சங்கிலிகளால் அது தளைப்பட்டுக் கிடக்கிறது.

கடமையாற்ற இறங்குங்கள் என்று நாட்டு மக்கள் அனைவரையும் ஒரே நாளில் அழைத்திட முடியும், அழைத்திடவும் வேண்டும். ஒரே நாளில் உடனடியாக ஓர் அரசாணையினைப் பிறப்பிக்கக் கூடும், பிறப்பிக்கவும் வேண்டும். அரசாணையின் மூலம் உடனடியாக:

1) தனி வங்கிகள் மற்றும் தேசிய வங்கி ஆகியவற்றிலும் பணியாற்றும் ஊழியர்களைக் கொண்ட கவுன்சில்களையும் மாநாடுகளையும் கூட்டிட வேண்டும்; ஒரே அரசு வங்கியாக அனைத்து வங்கிகளையும் வங்கி நிறுவனங்களையும் இணைத்திடவும், மற்றும் அனைத்து வங்கி நடவடிக்கைகள் மீதும் துல்லியமான கண்காணிப்பைச் செலுத்திடத் தேவையான உடனடி செயல் நடவடிக்கைகளை வகுப்பதற்காகவும், இப்படிப்பட்ட கண்காணிப்பின் விளைவுகளை உடனுக்குடன் வெளியிடவும் இவை வேண்டும்;

2) அனைத்து சிண்டிக்கேட்டுகள் மற்றும் டிரஸ்டுகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் கவுன்சில்களையும் மாநாடுகளையும் கூட்டி கண்காணிப்புக்கும் கணக்குப் பதிவுக்கும் உரிய நடவடிக்கைகளை வகுக்க வேண்டும்; இப்படிப்பட்ட கண்காணிப்பின் விளைவுகளை உடனுக்குடன் வெளியிட்டாக வேண்டும்;

3) இந்த அரசாணையானது தொழிலாளர், படையாளர் மற்றும் விவசாயிகளது பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கு மட்டுமல்லாமல் ஒவ்வொரு பெரிய ஆலையிலுள்ள தொழிலாளர்களது கவுன்சில்களுக்கும், ஒவ்வொரு பெரிய அரசியல் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் (உதாரணமாக, குறைந்தது இரண்டு பெத்ரோகிராத் வட்டாரங்களிலாவது மே 12ந் தேதியன்று தனித்தனியான வேட்பாளர்களது பட்டியலை முன்மொழிந்து இருக்குமானால் அக்கட்சிகள் பெரிய கட்சிகள் என்று கருதப்படலாம்) கண்காணிப்பு செய்யும் உரிமையினை வழங்கிட வேண்டும்; எல்லாக் கணக்குப் பதிவேடுகளும் ஆவணங்களும் கண்காணிப்புக்கு உட்பட்டாக வேண்டும்;

4) 10,000 (அல்லது 5,000) ரூபிள்களுக்குக் குறையாமல் பங்குப் பத்திரங்கள் வைத்திருப்பவர்களது பெயர்களை வெளியிட வேண்டுமென்று அனைத்துப் பங்குதாரர்கள், நிறுவனங்களது இயக்குநர்கள், போர்ட் உறுப்பினர்களை இவ்வாணை

யானது கேட்டுக் கொள்ள வேண்டும். இந்த நபர்கள் ''அக்கறை'' கொண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் பங்குப் பத்திரங்களின் பட்டியல்களோடு வெளியிட்டாக வேண்டும்; (வங்கிகளைக் கண்காணிப்புச் செய்யும் நபர்கள் அல்லது பணியாளர்களிடத்து) பொய்யான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பவர்களது சொத்து அனைத்தையும் பறிமுதல் செய்து தண்டனை விதிப்பதோடு ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் அவர்களுக்குச் சிறைத் தண்டனையும் வழங்கிட வேண்டும்;

5) சர்வஜனக் கட்டாய உழைப்பு சேவையை உள்ளூர் சுயாட்சி உறுப்புக்கள் மூலமாக உடனடி நிலைநாட்டவும் அதைக் கண்காணித்து அமலாக்க சர்வாம்ச மக்கள் மிலீஷியா எனும் காவல் சேவையை (கிராமப்புறத்தில் நேரடியாகவும், நகரங்களில் தொழிலாளர் காவல் சேவை மூலமாகவும்) நிறுவிடவும் மக்களுக்கு இவ்வாணை அறைகூவல் விட வேண்டும்.

சர்வஜன கட்டாய உழைப்பு சேவை இல்லாமல் அழிவிலிருந்து நாட்டைக் காத்திட முடியாது. மக்களது மிலீஷியா இல்லாமல் சர்வஜன கட்டாய உழைப்பு சேவையை செயல்படுத்த முடியாது. அமைச்சுப் பதவிப்பித்து நிலை ஒன்றை அடையாத, அல்லது அமைச்சரின் சொல்வன்மையில் மிகையான நம்பிக்கை வைப்பதனால் மூளை திரிந்து போகாத ஒவ்வொருவருக்கும் இது தெளிவாகத் தெரியவரும்.

பல கோடி மக்களை அழிவு மற்றும் பேராபத்திலிருந்து காப்பாற்ற உண்மையிலே விரும்பும் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கட்டாயம் ஆதரிக்க வேண்டும்.

அடுத்த கட்டுரையில் இன்னும் அதிகபட்ச நியாயமான வரி விதிப்பினைப் படிப்படியாகப் புகுத்துவது பற்றி நாம் ஆராய்வோம். அத்துடன் கூட இப்படிப்பட்ட பணிகளில் நல்ல தேர்ச்சியினைக் காட்டிய திறன்படைத்த அமைப்பாளர்களைத் (தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகள் மத்தியிலிருந்து) அமைச்சர் பதவிகளுக்கு மக்கள் மத்தியிலிருந்து படிப்படியாகத் தெரிந்தெடுத்து உயர்த்திட என்ன செய்திட வேண்டும் என்பதையும் ஆய்ந்திடலாம்.

(இரண்டாவது கட்டுரை)

அமைச்சர் என்ற பெருமையோடு ஸ்கோபெலெவ் முதலாளிகளது இலாபங்களில் நூறு சதவிகிதத்தை எடுத்துக் கொள்ளப் போவதாகப் பேசிய போது, வெறும் பசப்புரையின் மாதிரி ஒன்றை நமக்கு அவர் அளித்தார். மக்களை ஏமாற்றுவதற்காக முதலாளித்துவ நாடாளுமன்றக் குடியரசுகளில் இவ்வகையான சொல்லடுக்கு ஜாலம் வழக்கமாகப் பயன்படுத்தப்படுவதுண்டு.

ஆனால் இங்கு வெறும் சொல்லடுக்கு ஜாலத்தை விட மோசமான ஒன்றைக் காண்கிறோம்: ''முதலாளித்துவப் பொருளாதார முறையினைப் பாதுகாத்துக்கொள்ள முதலாளிகள் விரும்பினால், தங்களது வாடிக்கையாளர்களை இழந்துவிடாமலிருக்க அவர்கள் வட்டி பெறாமல் பணிபுரியட்டும்'' என்று ஸ்கோபெலெவ் கூறினார். இது முதலாளிகளுக்கு ஒரு ''பயங்கரமான'' அச்சுறுத்தல் போன்று தொனிக்கிறது; ஆனால் உண்மையில் சிறிது காலத்துக்கு இலாபத்தைத் தியாகம் செய்வதன்மூலம் மூலதனத்தின் சர்வ வல்லமையுள்ள ஆட்சியை ஆபத்தின்றிப் பாதுகாத்திட செய்யும் ஒரு முயற்சியே. (ஸ்கோபெலெவ் ஒருவேளை இதை உணரவில்லை, ஆனால் நிச்சயமாக முதலாளிகள் இதை நன்றாக உணர்ந்துதான் இருக்கிறார்கள்.)

தொழிலாளர்கள் ''மிக அதிகமாக'' எடுத்துக் கொள்கிறார்கள் என்று முதலாளிகள் கூறுகின்றனர். உண்மையில் உற்பத்தி அனைத்தையும் நிர்வாகம் செய்யும் அதிகாரமோ அல்லது வாய்ப்போ அளிக்காமல் அவர்களை நாம் பொறுப்புள்ளவர்களாக்குவோம். சிறிது காலத்துக்கு நாம் இலாபத்தை தியாகம் செய்திடுவோம். ஆனால் ''முதலாளித்துவப் பொருளாதார முறையினைப் பாதுகாத்து, நமது வாடிக்கையாளர்களை இழந்து விடாமல்'' தொழில் துறையில் இந்த இடைமாற்ற கட்டம் வீழ்ச்சியுறுவதை விரைவுபடுத்துவோம்; ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் அதைச் சீர்குலைத்திடுவோம், தொழிலாளர் மீது அந்தப் பழியைச் சுமத்துவோம்—என்கிறார்கள்.

இப்படிப்பட்டதுதான் முதலாளிகளது திட்டம் என்பது மெய்நடப்புகளால் நிரூபிக்கப்படுகிறது. தெற்கில் நிலக்கரிச்

சுரங்க முதலாளிகள் உள்ளபடியே உற்பத்தியை சீர்குலைத்து வருகிறார்கள். ''வேண்டுமென்றே அதைப் புறக்கணித்தும் சீர்குலைத்தும் வருகின்றனர்.'' (தொழிலாளர்களது பிரதிநிதிக் குழு ஒன்றினால் மே 16 அன்று நோவயா ஷீஸ்னில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினைப் பார்க்க[17]). நிலைமை தெளிவாக இருக்கிறது: தொழிலாளர்கள் மீது குற்றஞ் சுமத்தும் போது ரேச்சானது பச்சையாகப் புளுகுகிறது. நிலக்கரிச் சுரங்க முதலாளிகள் ''வேண்டுமென்றே உற்பத்தியைச் சீர்குலைக்கிறார்கள்.'' மற்றும் ஸ்கோபெலெவ் தமது பல்லவியைப் பாடுகிறார்: ''முதலாளித்துவப் பொருளாதார முறையினை முதலாளிகள் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால், அவர்கள் வட்டி பெறாமல் பணிபுரியட்டும்.'' நிலைமை மிகவும் தெளிவாக இருக்கிறது!

தொழிலாளர்களுக்கு உண்மையான கண்காணிப்பு அதிகாரத்தை மாற்றி வழங்குவது என்ற பிரதான காரியத்திலிருந்து மக்களது கவனத்தைத் திசை திருப்பி விடுவதற்காக ''மிதமிஞ்சிய வாக்குறுதிகளை'' அள்ளி வீசுவது முதலாளிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினருக்கு சாதகமானதாக இருக்கிறது.

மையத்திலுள்ள அதிகாரவர்க்கத்தினர் தரும் திட்ட ஜாலம், பிரகடனங்கள், வாக்குறுதிகள், பகட்டோசைத் தொடர்கள் ஆகிய அனைத்தையும் தொழிலாளர்கள் புறத்தே துடைத்து ஒதுக்கிட வேண்டும். இந்த அதிகாரவர்க்கத்தினர் ஆடம்பரமான திட்டங்கள், விதிகள், வழி முறைகள் மற்றும் தரங்களை வகுத்திடுவதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றனர். இந்தப் பொய்மைகள் அனைத்தும் ஒழிவதாக! எங்கணும் பயனற்றுப் போன அதிகாரவர்க்க மற்றும் முதலாளித்துவத் திட்டஜாலத்தின் அமளி ஒழிந்திடட்டும்! காரியங்களை ஒதுக்கி வைத்திடும் இந்தப் பழக்கம் ஒழிக! தொழிலாளர்கள், தொழிலாளர்களே அமுல்படுத்தப்படுவதற்குரிய உண்மையான கண்காணிப்பு அதிகாரம் உடனடியாக நிறுவப்பட வேண்டுமென்று கோரிக்கையிட வேண்டும்.

வெற்றிக்கு மிக முக்கியமான நிபந்தனை அதுதான். பெரு விபத்தைத் தவிர்ப்பதில் வெற்றி பெறுவதற்கும் அதுதான் நிபந்தனை. அது இல்லாது போனால், மற்றதெல்லாம் படு மோசமான பித்தலாட்டம்தான். அது நமக்கு இருக்கு

மாஞல், ''இலாபங்களில் நூறு சதவிகிதத்தை எடுத்துக் கொள்ள'' வேண்டும் என்று அவசரப்படத் தேவையிருக்காது. நாம் இன்னும் அதிக மிதமாக இருத்தல் வேண்டும், இருக்கவும் கூடும். மெள்ள மெள்ள இன்னும் நியாயமானதொரு வரி அமைப்பினை நாம் புகுத்திட வேண்டும். பங்குதாரர்களில் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் இடையே நாம் வேறுபாடு காட்டிட வேண்டும். சிறியவர்களிடத்திலிருந்து நாம் மிகச் சொற்பமாகவே எடுத்துக் கொள்வோம். இரண்டாவதாகச் சொல்லப்பட்டவர்களிடமிருந்து மட்டுமே மிக அதிகமாக (ஆனல் கட்டாயம் எல்லாவற்றையும் அல்ல) எடுத்துக் கொள்வோம். பெரிய பங்குதாரர்களது எண்ணிக்கை மிகவும் அற்பமானது. ஆனல் அவர்கள் வகிக்கும் பங்கு, அவர்கள் கொண்டுள்ள செல்வத்தினைப் போலவே, பிரம்மாண்டமானது. ருஷ்யாவின் மிகப் பெரும் செல்வர்களில் ஐந்தாயிரம் அல்லது மூவாயிரமே பேர்களைக் (ஒருவேளை ஓராயிரம் பேர்களைக்) கொண்டதொரு பட்டியலைத் தயாரிக்கவோ அல்லது (வங்கி, சிண்டிக்கேட்டு மற்றும் இதர பணியாளர்கள் ஆகியோர் வழியாக கீழிருந்து கண்காணிப்பு செய்வது மூலம்) அவர்களது நிதி மூலதனத்தின் எல்லா இழைகளையும் இணைப்புக்களையும், அவர்களது வங்கித் தொடர்புகளையும் ஒருவர் கணிக்கவோ முற்பட்டால், முதலாளித்துவ மேலாதிக்கத்தின் அனைத்துச் சிக்கல்களும் வெளியரங்கமாகும். இதர மனிதர்களது உழைப்பினைச் சுரண்டுவதன் மூலமாகக் குவிக்கப்பட்ட செல்வம் அனைத்தும், பண்டங்களது சமூக உற்பத்தி மற்றும் வினியோகம் மீது உள்ள ''கண்காணிப்பின்'' எல்லா ஆணி வேர்களும் வெளியரங்கமாகும்.

இந்தக் கண்காணிப்பு தொழிலாளர்கள் வசம் ஒப்புவிக்கப்பட வேண்டும். இந்தச் சுற்றி வளைக்கும் அமைப்பு, இதே வேர்கள் ஆகியவை மூலதனத்தின் நலன்களுக்காக மக்களிடத்திலிருந்து ஒளித்து வைக்கப்பட வேண்டியிருக்கிறது. ஒரு சிறிது காலத்துக்கு நம்முடைய லாபம் ''அனைத்தையும்'' இழந்தாலும் சரி, அல்லது வருமானத்தில் தொண்ணூற்று ஒன்பது சதவிகிதத்தை விட்டுக் கொடுத்தாலும் சரி, நமது ஆட்சியின் இந்த வேர்களை மக்களிடத்துக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்றுதான் முதலாளித்துவ வர்க்கமும், அதன்

தன் உணர்வு பெருத ஊழியக்காரனுகிய அரசாங்க அதிகாரியும் எண்ணமிடுகின்றனர்.

எந்தச் சந்தர்ப்பத்தின் கீழும் நம்முடைய உரிமையை நாம் விட்டுக் கொடுப்பதற்கில்லை; நிதி மூலதனத்தின் அரண் கோட்டை மக்களுக்குத் திறந்து காட்டப்படட்டும், அது தொழிலாளர்களது கண்காணிப்பின் கீழ் வைக்கப்படட்டும் எனும் நமது கோரிக்கையை நாம் விட்டுக் கொடுப்பதற்கில்லை—இவ்வாறுதான் வர்க்க உணர்வுடைய தொழிலாளர் எண்ணமிடுகிருர். மற்றும் கடந்து போகும் ஒவ்வொரு நாளும் இந்த வாதம் சரியானது என்பது பெருகிக் கொண்டே வரும் ஏழை மக்கள் திரளினரிடத்தும், மக்களில் பெரும்பான்மையோரிடத்தும், அழிவினைத் தவிர்ப்பதற்கு உண்மையாக வழி தேடும் ஏராளமான நேர்மையான மக்களிடத்தும் நிருபிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிதி மூலதனத்தின் அரண் கோட்டை பிடிக்கப்பட்டால்தான், அழிவைத் தவிர்ப்பதற்காகச் சொல்லப்பட்ட சொற்றெடர்களும் திட்டங்களும் வெறும் ஏமாற்று வித்தைகளாகக் கருதப்பட மாட்டாது. தனிப்பட்ட முதலாளிகள் சம்பந்தப்பட்ட மட்டில் அல்லது பெரும்பான்மையான முதலாளிகள் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் கூட பாட்டாளி வர்க்கத்துக்கு ''இவர்களிடமிருந்து கடைசிச் சட்டையையும் உரிந்து கொள்ள வேண்டும்'' என்ற எண்ணம் ஏதும் கிடையாது (இப்படித்தான் ஷுல்கின் தன்னையும் தனது நண்பர்களையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிருர்). பாட்டாளி வர்க்கத்துக்கு இவர்களிடமிருந்து ''சகலத்தையும்'' எடுத்துக் கொள்ளும் நோக்கம் கிடையாது. அதற்கு மாருக தொழிலாளர்களது கண்காணிப்பின் கீழ் பயனுள்ள மற்றும் கண்ணியமான பணிகளில் அவர்களை அமர்த்திட பாட்டாளி வர்க்கம் விரும்புகிறது.

பெரும்விபத்து நம்மை நெருங்கி வரும் இவ்வேளையில் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதும் தவிர்க்க முடியாததுமான பணி ஒழுங்கமைப்பு செய்தல் ஆகும். பாட்டாளி வர்க்க அமைப்பின் அற்புதப் படைப்புகள்—இதுதான் இப்போது நமது கோஷமாகும். மற்றும் பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வரும்போது இது இன்னும் இருமடங்கு நமது கோஷமாகவும் நமது கோரிக்கையாகவும் நிச்சயமாயும்

மாறும். பெரும் திரளான மக்களினது அமைப்பு இன்றி, சர்வ ஜனக் கட்டாய உழைப்பு சேவையைப் புகுத்துவது நிச்சய மாகச் சாத்தியமாகாது. இது மிகவும் அத்தியாவசியமானது. அல்லது வங்கிகள் மற்றும் சிண்டிக்கேட்டுகள் மீதும், பண் டங்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தின் மீதும் எவ் வகையான தீவிர கண்காணிப்பினையும் ஏற்படுத்துவது சாத் தியமாகாது.

ஆகவேதான் ஒரு தொழிலாளர் மிலீஷியாவைத் துவக்குவது அவசியமாகிறது. அதுவும் உடனடியாகத் துவக்க வேண்டுவது அவசியமாகிறது. அப்படியானுல்தான் நாம் படிப்படியாக ஆனுல் உறுதியாகவும் திறமையுடனும் மக்கள் அனைத்தினது மிலீஷியாவை உருவாக்க முன்செல்லக் கூடும். அதன் மூலம் போலீஸ் மற்றும் நிரந்தர ராணுவத்தினை நீக்கி சகல மக்களும் ஆயுதமணிந்தவர்களாகி பதிலீடாகச் செயல் பட முடியும். ஆகவேதான் சமுதாயத்தின் எல்லாப் பிரிவின ரிடத்திலும் உள்ள திறமை படைத்த அமைப்பாளர்களை, முதலாளிகள் உள்ளிட்ட எல்லா வர்க்கங்கள் மத்தியிலிருந் தும் ஊக்குவித்துப் பெறவேண்டுவது அவசியம். இவர்கள் இன்றைக்குள்ள நிலையில் தேவைப்படும் அனுபவத்தை அதி கமாகப் பெற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கி டையே திறமைபடைத்த அமைப்பாளர்கள் இருக்கின்றனர். மக்கள் மத்தியில் இத்தகைய தனி வகைத் திறமைகள் பெரு மளவு உள்ளன. விவசாயி மக்கள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் சக்திகள் பயன்படுத்தப்படாமையின் காரணமாக இத்தகைய சக்திகள் செயலற்றுக் கிடக்கின்றன. அன்றுடச் செயலிடையே இவர்கள் கீழ் மட்டத்திலிருந்து உயர்த்தப்பட்டாகவேண்டும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் முடிக்கப் பெருத வேலைகள் இல்லாதபடி திறம்பட விலக்குவது, வீட்டுக் கமிட்டிகள் வீட்டு வேலைக்காரர்கள் மற்றும் மாதிரிப் பண்ணைகளைத் திறம்பட அமைத்தல், தொழிலாளர்கள் ஏற்று நடத்தும் தொழிற்சாலைகளைச் சிறப்பாக நிர்வகித்தல், இத் தியாதி வழியிலும் இதை ஊக்குவிக்கலாம். அன்றுடச் செய லிடையே இவர்கள் கீழிருந்து உயர்த்தப்பட்டு இவர்களது திறன்கள் செயல் முறையில் சோதிக்கப்பட்ட பிறகு இவர் கள் அனைவரும் ''அமைச்சர்களாக'' உயர்த்தப்பட வேண் டும். அமைச்சர்கள் என்ற பழைய அர்த்தத்தின் படியல்ல,

அதாவது அவர்களுக்குப் பதவிகளை ஒதுக்கித் தருவது என்ற பொருளில் அல்ல. ஆனால் அவர்களைத் தேசியப் பயிற்சியாளர் களாகவும், நடமாடும் அமைப்பாளர்களாகவும், எங்கணும் கறாரான ஒழுங்கு முறையையும் மனித உழைப்பில் மாபெரும் சிக்கனத்தையும் கறாரான தோழமைக் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டும் அலுவலில் உதவியாளர்களாயும் நியமனம் செய்வது மூலமும் உயர்த்தப்பட வேண்டும்.

இதைத்தான் பாட்டாளி வர்க்கக் கட்சியானது, அழிவினைத் தவிர்ப்பதற்கான சாதனம் என்று மக்களுக்குப் போதித்தாக வேண்டும். அது அதிகாரத்தை வென்று பெற்று வரும் பகுதிகளில் இதைத்தான் அது நிறைவேற்றி முடிக்க முயல வேண்டும். அரசதிகாரத்தை அது ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் இதைத்தான் அது முழுமையாக நிறைவேற்றி முடிக்க வேண்டும்.

பிராவ்தா, இதழ்கள் 58—59,
1917 மே 29—30 (16—17)

நூல் திரட்டு,
தொகுதி 32,
பக்கங்கள் 105-111

பொருளாதாரச் சீர்குலைவினை சமாளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மீதான தீர்மானம்[18]

1. ருஷ்யப் பொருளாதார வாழ்க்கை பூரணமாகச் சீர் குலைவுக்குள்ளாகி விட்டதானது, பெரும் விபத்தின் தவிர்க்க முடியாத ஒரு நிலையை இப்போது எட்டி விட்டது. இந்தப் பெரும் விபத்து பயங்கரமான பரிமாணம் உடையதாக இருப்பதால் அத்தியாவசியமான தொழில்கள் பல ஸ்தம்பித்து விடும் நிலை ஏற்படும். போதுமான அளவுக்குப் பயிர்செய்யாதபடி விவசாயிகள் தடுக்கப்படுவர். மற்றும் பல லட்சம் பேர் அடங்கிய நகரங்களுக்கும் தொழில் துறையிலுள்ள மக்களுக்கும் தானியம் வழங்கல் தடை செய்யப்படும் அளவிற்கு ரயில்வே போக்குவரத்து தடைப்படுத்தப்படும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் சீர்குலைவு ஏற்கெனவே தொடங்கி பல்வேறு தொழில்துறைகளையும் பாதித்து விட்டது. தேசத்தின் சக்திகள் அனைத்தையும் மிகப்பெருமளவுக்குக் கடுமுயற்சியில் ஈடுபடுத்தி, உட்பகுதிகளிலும் அரசாங்க மையத்திலும், உடனடியாகப் பற்பல புரட்சிகர நடவடிக்கைகளைக் கையாளுவதன் மூலமாக மட்டுமே, இந்தப் படுவீழ்ச்சியை எதிர்த்துத் திறமையாகச் சமாளிக்க முடியும்.

2. அதிகார வர்க்க முறைகள் மூலமாகவோ, அதாவது, முதலாளிகளும் அதிகாரிகளும் விஞ்சிய செல்வாக்குடன் விளங்கும் அமைப்புகளை நிறுவுவதன் மூலமாகவோ, அல்லது முதலாளிகளது இலாபங்களைப் பாதுகாப்பது, தொழில்துறையில் அவர்களது மேலாண்மையையும் நிதி மூலதனத்தின் மீது அவர்களது மேலாதிக்கத்தையும் பாதுகாப்பது, அவர்களது வங்கி, வியாபார மற்றும் தொழில்துறை நடவடிக்கைகள்

சம்பந்தப்பட்ட அவர்களது வியாபார ரகசியங்களைப் பாது காப்பது ஆகியவற்றின் மூலமோ இந்த அழிவினைத் தவிர்க்க முடியாது. பல்வேறு தொழில்களில் வெளியாகியுள்ள நெருக் கடியின் ஓரளவான விளைவுகள் இதைத் தீர்க்கமாக நிரூபித்து விட்டன.

3. அழிவைத் தவிர்ப்பதற்குரிய ஒரே வழி பண்டங்களது உற்பத்தி மற்றும் வினியோகத்தின் மீது செயலுரமுடைய தொழிலாளர் கண்காணிப்பை நிறுவுவது மட்டுமே ஆகும். இப்படிப்பட்டதொரு கண்காணிப்பினை உறுதிப்படுத்துவதற் காக, நிர்ணயகரமான நிறுவனங்கள் அனைத்திலுமான வாக்கு களில் நான்கில் மூன்று பங்குக்குக் குறைவு இல்லாத பெரும் பான்மையைத் தொழிலாளர்கள் பெறவேண்டுவது முதலா வதாயும் அவசியம். மற்றும் தங்களது தொழில்களில் இருந்து விலகிக் கொள்ளாத உரிமையாளர்களையும் பொறியியல் அலுவலர்களையும் தவறுமல் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, தொழிற்சாலைக் கமிட்டிகள், தொழிலாளர் கள், படையாளர் மற்றும் விவசாயிகள் ஆகியோரது பிரதிநிதிகளின் மத்திய மற்றும் உள்ளூர் சோவியத்துகள், அத்துடன் கூட தொழிற்சங்கங்கள் ஆகியவை இந்தக் கண் காணிப்பில் பங்கு பெறும் உரிமை பெற வேண்டும். மேலும் எல்லா வியாபார மற்றும் வங்கி பேரேடுகளும் அவர்களது பரி சீலனைக்குரியனவாக இருத்தல் வேண்டும்; நிர்வாகமானது அத்தியாவசியமான விவரங்கள் அனைத்தையும் அவர்களுக்கு அளித்தாகவும் வேண்டும். மூன்றுவதாக, இது போன்ற தொரு உரிமை பிரதான ஜனநாயக மற்றும் சோஷலிசக் கட்சி களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டாக வேண்டும்.

4. பல்வேறு மோதல் சம்பவங்களில் முதலாளிகள் ஏற் கெனவே ஏற்றுக் கொண்டு விட்ட தொழிலாளர்களின் கண் காணிப்பு, நன்கு சிந்தித்துத் தெளிந்த நடவடிக்கைகள் பல வற்றின் மூலமாக உடனடியாகவும் காலதாமதம் இன்றியும் புகுத்தப்படல் வேண்டும். இவை தொழிலாளர்களால் பண் டங்களது உற்பத்தி மற்றும் வினியோகம் சம்பந்தமான முழுமையான விதிமுறையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

5. உண்மையான நிதி நிலைமைகளை அறிந்து கொள்ளும் நோக்கோடு அனைத்து நிதி மற்றும் வங்கி நடவடிக்கைகள்

மீதும் தொழிலாளர்களின் கண்காணிப்பு இது போன்று விஸ்தரிக்கப்பட்டாக வேண்டும். உடனடியாக அமைக்கப் படவிருக்கும் வங்கி, சிண்டிக்கேட் மற்றும் இதர பணியாளர் ஆகியோரது மாநாடுகள், கவுன்சில்கள் ஆகியவை இவ் வாறான கண்காணிப்பில் பங்கு பெற்றாக வேண்டும்.

6. அழிவினின்றும் நாட்டைக் காப்பதற்கு, தொழிலாளர் களுக்கும் விவசாயிகளுக்கும், நாட்டின் உட்பகுதிகளிலும் மையத்திலும் இயங்கும் ஆட்சி உறுப்புக்கள் முதலாளித் துவப் பொருளாதாரத்தின் வங்கி, நிதி, வியாபாரம் மற்றும் தொழில் அதிபர்களது இலாபங்கள், வருமானங்கள் மற்றும் சொத்து ஆகியவற்றின் பெரும்பகுதியை மக்களிடம் ஒப் படைக்கத் தயங்க மாட்டா என்பதைச் சொற்களால் அல் லாமல் செயலால் சுட்டி, முற்ற முழுமையான நேர்முகமான உத்தரவாதம் மூலம் முதன் முதலில் உத்வேகமூட்டப்பட வேண்டும். இந்த நடவடிக்கை நிறைவேற்றப் பெறாவிட் டால், உண்மையான புரட்சிகர நடவடிக்கைகளை அல்லது தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஏதேனும் உண்மை யான புரட்சிகர முயற்சியை கோருவது அல்லது எதிர்பார்ப் பது பயனற்ற செயலாகும்.

7. நிதி மற்றும் பண அமைப்பு முறை முழுதும் முறிந்து விட்டதன் காரணமாகவும், போர் நடந்து கொண்டிருக்கும் போது அதைப் புனரமைப்பு செய்வது சாத்தியமற்றது என் பதாலும், அனைத்து அரசு ஒழுங்கமைப்பின் நோக்கம், பரந்த, பிராந்திய அளவிலும் பின்னர் நாடு தழுவிய அளவி லும் விவசாயக் கருவிகள், துணிகள், காலணிகள் மற்றும் இதர பண்டங்களைத் தானியத்திற்கும் இதர பண்ணைப் பொருட்களுக்கும் மாற்றாகப் பரிவர்த்தனை செய்து கொள்ள ஏற்பாடு செய்வதே. நகர மற்றும் நாட்டுப்புறக் கூட்டுறவு சங்கங்களது சேவைகளைப் பரந்த அளவில் இதற்காக ஈடு படுத்த வேண்டும்.

8. இந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகு மட்டுமே பொதுவான கட்டாய உழைப்பு சேவை புகுத்தப் படுவது சாத்தியமாகும் என்பதோடு அவசியமாகவும் இருக் கும். இந்த நடவடிக்கையானது, அதன் பங்கில், தொழிலா ளர் மிலீஷியா ஒன்றினை நிறுவுவதை அவசியமாக்குகிறது. தொழிலாளர்கள் தங்களது வழக்கமான ஒரு நாளைக்கு எட்டு

மணி நேர வேலைக்கு மேல் ஊதியமில்லாமல் இதில் சேவை செய்திட வேண்டும். இதைப் பின்பற்றி நாடு தழுவிய மக்கள் மிலீஷியா ஒன்று துவக்கப்பட வேண்டும். அதில் தொழிலாளர்களும் இதர பணியாளர்களும் முதலாளிகளால் கூலி கொடுக்கப் பெறுவர். இவ்வாறான தொழிலாளர் மிலீஷியாவும் அதினின்று வளரும் மக்கள் மிலீஷியாவும் மட்டுமே சர்வஜனக் கட்டாய உழைப்பு சேவையைப் புகுத்த வேண்டுமேயொழிய, அதிகார வர்க்கத்தின் மூலமாகவும் முதலாளிகளது நன்மைக்காகவும் அது புகுத்தப்படக் கூடாது. நெருங்கி வரும் படு வீழ்ச்சியினின்று நாட்டைக் காப்பதற்கு மட்டுமே அது கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறானதொரு மிலீஷியா மட்டுமே உண்மையான புரட்சிகரமான கட்டுப்பாட்டைக் கொண்டுவர முடியும், கொண்டுவர வேண்டும். மற்றும் அது ஒன்று மட்டுமே அழிவைத் தவிர்ப்பதற்கு அவசியமான மிக்குயர் முயற்சியைச் செய்யுமாறு மக்கள் முழுமையையும் தூண்ட முடியும் தூண்ட வேண்டும். உழைப்புச் சக்தியின் செலவீட்டில் உயர்ந்த பட்ச சிக்கனத்தை உறுதிப்படுத்துவது சர்வஜன கட்டாய உழைப்பு சேவையால் மட்டுமே சாத்தியமாகும்.

9. நாட்டை அழிவிலிருந்து காக்கும் நோக்கோடு எடுக்கப் பெறும் நடவடிக்கைகளின் இடையேயான மிகவும் முக்கியமான பணி, நிலக்கரி மற்றும் கச்சாப் பொருட்கள் உற்பத்தியிலும் போக்குவரத்து சேவையிலும் பெரிய அளவில் உழைப்புச் சக்தியை ஈடுபடுத்துவதாகும். இப்போது போர்த் தளவாடங்கள் செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களை நாட்டின் பொருளாதாரப் புனரமைப்பிற்கு அத்தியாவசியமான பண்டங்களின் உற்பத்திக்குப் படிப்படியாக மாற்றுவதும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றே.

10. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ஒழுங்காகவும் திறமையாகவும் நிறைவேற்றுவது அரசிலுள்ள அனைத்து ஆட்சி அதிகாரமும் பாட்டாளிகள் மற்றும் அரைப் பாட்டாளிகளிடம் மாற்றி வழங்கப்பட்டால் மட்டுமே சாத்தியம்.

சொட்சியல்-டெமக்ராத், இதழ் 64,
1917 மே 25 (ஜூன் 7)

நூல் திரட்டு,
தொகுதி 32,
பக்கங்கள் 195-197

தொழிற்சாலைக் கமிட்டிகளின் முதலாவது பெத்ரோகிராத் மாநாட்டில் ஆற்றிய உரை[19]
1917 மே 31 (ஜூன் 13)

சுருக்கமான பத்திரிகை அறிக்கை

தோழர் அவீலவின் தீர்மானம் வர்க்க நிலை சம்பந்தமாக முழுமையான புறக்கணிப்பைக் காட்டுகிறது. குட்டி முதலாளித்துவக் கட்சிகளின் தீர்மானங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான எல்லாப் பிழைகளையும் மொத்தமாக ஒன்று திரட்டி ஒருமுனைப்படுத்துவது என்று இத்தீர்மானத்தில் ப.வி. அவீலவ் முடிவு செய்து விட்டார் என்று தெரிகிறது.

இப்போது எந்த ஒரு சோஷலிஸ்டாலும் மறுக்க முடியாத அடிக்கோளான, முதலாளித்துவத்தின் கொள்ளைக்காரப் பொருளாதாரம் ருஷ்ய நாட்டை முழுமையான பொருளாதார மற்றும் தொழில்துறை நாசத்துக்கு ஆட்படுத்தி விட்டது எனும் கூற்றுடன் அவீலவின் தீர்மானம் துவங்குகிறது. ஆனால் அதற்குப் பிறகு, ''அரசு அதிகாரிகள்'' பரந்த ஜன நாயக மக்கள் திரளினரின் ஒத்துழைப்போடு தொழில்துறை மீது கண்காணிப்பு செய்வது பற்றிய தெளிவற்ற சூத்திரம் ஒன்றைத் தொடர்ந்து முன்மொழிகிறது.

இக்காலத்தில் கண்காணிப்பு பற்றி ஒவ்வொருவரும் ஏராளமாகப் பேச முடியும். ''கண்காணிப்பு'' என்ற சொல்லைச் சொன்னாலே ''கொலை'' என்று கூக்குரலிடுபவர்கள் கூட இப்போது கண்காணிப்பு அவசியம் என்பதனை ஒத்துக் கொள்கின்றனர்.

''கண்காணிப்பு'' என்ற சொல்லைக் கருத்தியலாகப் பயன் படுத்துவதன் மூலமாகக் கண்காணிப்பு என்ற கருத்தினை ஒரு பயனுமற்றதாக ஆக்க அவர்கள் விழைகின்றனர்.

இப்போது ''சோஷலிஸ்டுகளும்'' சேர்ந்துள்ள கூட்டணி அரசாங்கம் இந்தக் கண்காணிப்பைச் செயலாக்க இதுவரை எதுவுமே செய்யவில்லை. ஆகவே, தொழிற்சாலைக் கமிட்டிகள், வெறும் காகிதத்தில் ஆன கண்காணிப்பை அன்றி உண்மையான தொழிலாளர்களது கண்காணிப்பினைக் கோருவது முற்றும் புரிந்து கொள்ளக் கூடியதே.

''கண்காணிப்பு'' என்ற கருத்தினைப் பற்றிப் பேசும் போதும், இந்தக் கண்காணிப்பானது எப்போது, யாரால் செயலாக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினை பற்றிப் பேசும் போதும், நவீனகால அரசின் வர்க்கத் தன்மையினைக் கணப்பொழுதுகூட மறந்து விடக் கூடாது. ஏனெனில் அது வர்க்க ஆட்சியின் ஓர் அமைப்பேயாகும். ''புரட்சிகர ஜனநாயகம்'' என்ற கருத்துருவுக்கும் இப்படிப்பட்டதொரு வர்க்க பகுத்தாய்வு பிரயோகிக்கப்பட்டாக வேண்டும். மற்றும் இந்தப் பகுத்தாய்வு சமூக சக்திகளது உண்மையான ஒப்புநிலைமையின் மீது சார்ந்து இருக்க வேண்டும்.

அவீலவின் தீர்மானம் சகலத்தையும் தந்து விடுவதாக வாக்குறுதி அளிப்பதோடு தொடங்குகிறது. ஆனால் செயல் முறையில் ஒவ்வொன்றையும் அப்படி அப்படியே விட்டுவிடும் பிரேரணையுடன் முடிவடைகிறது. தீர்மானம் முழுவதிலும் புரட்சிகரத் தன்மையின் சிறு தூசுகூடக் காணப்படவில்லை.

மற்றெல்லாக் காலங்களையும் விடப் புரட்சிகரக் காலங்களில் அரசின் உண்மையான சாரம் என்ன, அது யாருடைய நலனைப் பாதுகாக்கும், உழைப்பாளர் நலன்களை உண்மையில் சரிவரப் பாதுகாப்பதற்கு அது எவ்வாறு நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பவற்றைப் பற்றிப் பகுத்தாய்வது அவசியமாகிறது. அவீலவின் தீர்மானத்தில் இதுபற்றிப் பேசவே இல்லை.

இப்போது ''சோஷலிஸ்டுகளும்'' சேர்ந்துள்ள நமது புதிய கூட்டணி அரசாங்கம் மூன்று மாதங்களில் கண்காணிப்பினை ஏன் நிறைவேற்றவில்லை? மற்றும் இதற்கெல்லாவற்றுக்கும் மேலாக, தெற்கத்திய ருஷ்யாவின் நிலக்கரிச் சுரங்கங்களது சொந்தக்காரர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் அரசாங்கம் வெளிப்படையாக முதலாளிகளோடு ஏன் சேர்ந்து கொண்டு விட்டது?

தொழில்துறை மீது கண்காணிப்பினை உண்மையிலேயே நிறைவேற்றி முடிக்க, எல்லா முக்கியமான உறுப்புகளிலும் தொழிலாளர்கள் பெரும்பான்மை கொண்ட தொழிலாளர் கண்காணிப்பாக அது இருக்க வேண்டும். மற்றும், நிர்வாகமானது எல்லா அதிகார பூர்வ தொழிலாளர் அமைப்புகளுக்கும் தனது செயல்பாடுகள் பற்றி விளக்கம் தர வேண்டும்.

தோழர்களே, தொழிலாளிகளே, நீங்கள் வெறும் கற்பனையான கண்காணிப்பு அன்றி உண்மையான கண்காணிப்பை நிறைவேற்ற முனையுங்கள். இப்படிப்பட்ட கற்பனையான, வெறும் காகிதத்தில் மட்டுமே காணப்படும் கண்காணிப்பை நிலைநாட்டுவதற்கான எல்லாத் தீர்மானங்களையும் மிக்க உறுதியோடு நிராகரித்து விடுங்கள்.

பிராவ்தா, இதழ் 72,
1917 ஜூன் 16 (3)

நூல் திரட்டு,
தொகுதி 32,
பக்கங்கள் 239-240

பொருளாதாரச் சீர்குலைவும் அதை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டமும்

சீர்குலைவை எதிர்ப்பதற்கான பொருளாதார நடவடிக்கைகள் பற்றித் தொழிற்சாலைக் கமிட்டிகளது மாநாடு நிறைவேற்றிய தீர்மானத்தை இந்த இதழில் நாம் வெளியிடுகிறோம்.*

முதலாளித்துவ மற்றும் அற்பவாத-அதிகாரவர்க்கக் கண்காணிப்பு பற்றிப் பயன்படுத்தும் வெற்றுச் சொற்றொடர்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாக, முதலாளிகள் மற்றும் உற்பத்தியின் மீதான உண்மையான கண்காணிப்பு பற்றிய நிபந்தனைகளைச் சுட்டிக் காட்டுவதுதான் இத்தீர்மானத்தின் பிரதான கருத்தாகும். முதலாளிகளுக்கு மூன்று மடங்கு அல்லது பத்து மடங்கு கூட அதிக இலாபம் கிடைக்கச் செய்ய அரசாங்கம் எடுத்துள்ள முறையான நடவடிக்கைகளைக் ''கண்காணிப்பு'' என்று முதலாளி வர்க்கத்தினர் கூறும் போது அவர்கள் பொய்யே பேசுகிறார்கள். குட்டி முதலாளி வர்க்கத்தினர்களோ ஓரளவு பேதைமையாலும் ஓரளவுக்குப் பொருளாதார நலன்கள் காரணமாகவும், முதலாளிகளையும் முதலாளித்துவ அரசையும் நம்புகிறார்கள். மேலும் கண்காணிப்பிற்காக எனப்படும் மிகவும் அர்த்தமற்ற அதிகாரவர்க்கத் திட்டங்களினால் திருப்தியடைகிறார்கள். தொழிலாளர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது சர்வ முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றின் மீது தனிப்பட்ட அழுத்தம் தருகிறது.

---

* இந்த நூலில் 64—67 பக்கங்களைப் பார்க்கவும்.—ப-ர்.

அதாவது, என்ன செய்ய வேண்டும் என்பதன் மீது அழுத்தம் தருகிறது: 1) முதலாளித்துவ இலாபங்கள் உள்ளபடியே ''பேணிக்காக்கப்படுவதைத் தடுப்பதற்கும்'', 2) வாணிக ரகசியம் என்ற மூடுதிரையைக் கிழித்தெறிவதற்கும், 3) கண்காணிப்பு ஸ்தாபனங்களில் தொழிலாளர்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கச் செய்வதற்கும், 4) (கண்காணிப்பு மற்றும் நெறிப்படுத்தலின்) அமைப்பானது ''நாடு தழுவிய'' அமைப்பாகையால், முதலாளிகளால் அல்லாமல் தொழிலாளர் கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரது பிரதிநிதிகளது சோவியத்துகளால் அது நிர்வகிக்கப்படுவதை ஊர்ஜிதம் செய்வதற்கும் அழுத்தம் கொடுக்கிறது.

இது இல்லாமல் கண்காணிப்பு, ஒழுங்குமுறை என்ற பேச் செல்லாம் ஒன்று வெறும் பித்தலாட்டம் அல்லது மக்களை நேரடியாக மோசடி செய்வதும் கூடவாகும்.

இப்போது இந்த உண்மைக்கு எதிராகத்தான்—அரசியல் விழிப்புடைய சிந்திக்கும் திறன் படைத்த எந்தத் தொழிலா ளிக்கும் வெள்ளிடை மலையாகத் தெரியும் இந்த உண்மைக்கு எதிராகத்தான்—நமது குட்டி முதலாளித்துவத் தலைவர்கள், நரோத்னிக்குகளும் மென்ஷிவிக்குகளும் (இஸ்வேஸ்தியா,[20] ரபோச்சயா கசேத்தா[21]) போர் தொடுக்கின்றனர். துரதி ருஷ்டவசமாக நோவயா ஷீஸ்னில் எழுதுகிறவர்களும், நமக் கும் அவர்களுக்குமிடையில் திரும்பத் திரும்ப ஊசலாடியவர் களும், இப்போது அதே மட்டத்திற்குத் தாழ்ந்து விட்டனர்.

தோழர்கள் அவீலவும் பஸாரவும், குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட எளிதில் நம்பும் இயல்பு, சமரசம் மற்றும் அதி காரவர்க்க திட்டமிடுதல் என்ற உளைச் சேற்றில் ''இறங்கி விட்டதை'' மூடி மறைக்க மார்க்சிய வாதங்கள் போன்று தொனிக்கும் வாதங்களைக் கையாளுகிறார்கள். இந்த வாதங் களை நாம் இப்போது பார்க்கலாம்.

(மாநாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட) ஒழுங்கமைப்புக் குழுமத்தின் தீர்மானத்தை நாம் ஆதரிப்பதன் காரண மாக, பிராவ்தாவைச் சேர்ந்தவர்களாகிய நாம் மார்க்சியத் திலிருந்து சிண்டிக்கலிசத்திற்கு வழுவி விட்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறோம். தோழர்கள் அவீலவ், பஸாரவ் இவர் களே, அவமானம்! இப்படிப்பட்ட கவனமின்மை (அல்லது இப்படிப்பட்ட வித்தை) ரேச் மற்றும் யெதீன்ஸ்த்வோ[22]

ஆகியவற்றுக்கு மட்டுமே பொருந்தும்! இரயில்வேக்களை ரயில்வேத் தொழிலாளருக்கும், தோல் பதனிடும் ஆலைகளைத் தோல் பதனிடுபவர்களுக்கும் மாற்றி விடுவது என்பது போன்ற கேலிக்கூத்தான மாற்றம் எதையும் நாங்கள் கூற வில்லை. நாங்கள் குறிப்பிட்டுக் கூறுவதெல்லாம் தொழிலாளர் கண்காணிப்பு பற்றித்தான். இது உற்பத்தியையும் வினியோகத்தையும் பூரணமாகத் தொழிலாளர்கள் விதிமுறை செய்வது மூலம் வளர்ச்சி பெற வேண்டும். செய் முறைப் பண்டங்களுக்குத் தானியம் பரிவர்த்தனை செய்வது ''நாடு தழுவிய அமைப்பாக'' வளர்ச்சி பெற வேண்டும் (இதில் ''நகர்ப்புற மற்றும் நாட்டுப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் பரந்த அளவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்''). ''அரசு அதிகாரம் அனைத்தும் தொழிலாளர், படையாளர் மற்றும் விவசாயிகளது பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்றே நாங்கள் கூறுகிறோம்.

தீர்மானம் முழுவதையும் படிக்காதவர்கள் மட்டுமே அல்லது படிக்க முடியாதவர்கள் மட்டுமே, அதில் சிண்டிக் கலிசம் இருப்பதைத் தெளிந்த மனச்சாட்சியோடு காண முடியும்!

ஸ்துருவே மற்றும் எல்லா மிதவாத அதிகாரவர்க்கத் தினரும் மார்க்சியத்தைப் ''புரிந்துகொண்ட'' மாதிரி தாமும் புரிந்து கொண்ட பண்டிதர்கள் மட்டுமே ''அரசு முதலாளித் துவத்தைத் தள்ளிவிட்டுத் தாவிச் செல்வது கற்பனாவாதம்'' என்று வலியுறுத்தக் கூடும். இவர்கள் மட்டுமே, ''நமது நாட்டில் அரசாங்க-முதலாளித்துவத் தன்மை கொண்டதாக நமது விதிமுறை மாதிரி இருக்க வேண்டும்'' என்று வலி யுறுத்தக் கூடும்.

ருஷ்யாவில் உள்ள சர்க்கரை சிண்டிக்கேட்டை அல்லது அரசாங்க ரயில்வேக்களை அல்லது எண்ணெய் மன்னர்கள் இத்தியாதியின் அமைப்பை எடுத்துக் கொள்ளுங்கள். அது அரசு முதலாளித்துவமல்லாமல் வேறு என்ன? ஏற்கெனவே இருக்கும் ஒன்றை எப்படி ''தள்ளி விட்டு தாவிச் செல்ல'' முடியும்?

மார்க்சியத்தை ஒரு ''மரத்து போன முதலாளித்துவ'' போதனையாக மாற்றிக் கொண்டு விட்டவர்கள், வாழ்க்கை எதார்த்தம் முன்வைக்கும் தனிப்பட்ட பணிகளைத் தவிர்க்க

முயலுகிறார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டும். ருஷ்யாவில் இது நடைமுறையில் தொழில்துறையில் சிண்டிக்கேட்டுகளையும், நாட்டுப்புறத்தில் சிறு குடியானவர் பண்ணைகளையும் கொண்டதான ஓர் இணைவை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குறிப்பிட்ட பணிகளை ஒதுக்கிவிட்டு இவர்கள் ''நிரந்தரப் புரட்சி'' பற்றியும், சோஷலிசத்தைப் ''புகுத்துவது'' பற்றியும், இதர மடமைகள் பற்றியும் போலி அறிவுஜீவி இயல்பான மற்றும் எதார்த்தத்தில் அறவே அர்த்தமற்ற வாதங்களை முன்வைத்து இவற்றைத் தவிர்க்க முயலுகின்றனர்.

நாம் காரியத்திற்கு வருவோம்! நாம் நமது சாக்குபோக்குகளைக் குறைத்துக் கொண்டு எதார்த்த விவகாரங்களுக்கு நெருங்கி வருவோம்! இராணுவ சப்ளைகளின் மூலமாக ஏற்பட்ட கிட்டத்தட்ட 500 சதவிகிதம் அல்லது அதற்கு அதிகமான லாபங்களை எடுக்காமல் அப்படியே விட்டு வைப்பதா? அல்லது இல்லையா? வாணிக ரகசியம் என்பதனை அப்படியே விட்டு வைப்பதா? ஆம் அல்லது இல்லை? தொழிலாளர் கண்காணிப்பை அமுலாக்க இயலும்படி செய்ய வேண்டாமா? ஆம் அல்லது இல்லை?

இந்த எதார்த்தமான கேள்விகளுக்குத் தோழர்கள் அவீலவும் பஸாரவும் ஒரு பதிலும் கொடுப்பதில்லை. ''கிட்டத்தட்ட மார்க்சியம்'' போன்று தோற்றமளிக்கும் ''ஸ்துருவேயிச'' வாதங்களைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் முதலாளிகளின் உடந்தையாளர்களாகும் ஒரு மட்டத்திற்குத் தங்களை அறியாமலேயே இறங்கி விடுகிறார்கள். யுத்த காலத்தில் சப்ளைகள் செய்தோரால் பெறப்பட்ட இழிவான ஆதாயங்கள் பற்றியும், பொருளாதாரச் சீர்குலைவு பற்றியுமான மக்களது கேள்விகளுக்கு, சோஷலிசத்தின் ''கற்பனைத் தன்மை'' பற்றிய ''மேதைத்தனமான'' வாதங்களைக் கொண்டு பதில் தருவதை விட வேறு ஒன்றையும் முதலாளி வர்க்கம் அதிகமாக விரும்புவதில்லை.

இந்த வாதங்கள் அனைத்தும் மிகவும் கேலிக்கூத்தான அளவுக்கு முட்டாள்தனமானவை. ஏனெனில் சோஷலிசத்தைப் புறநிலைக் காரணங்களால் சாத்தியமற்றதாக ஆக்குவது சிறுவீதப் பொருளாதாரமே. இதைப் பறிமுதல் செய்யவோ அல்லது ஒழுங்குறுத்தவோ அல்லது கண்காணிப்புச் செய்யவோ கூட நாம் எவ்வழியிலும் உத்தேசிக்கவில்லை.

ஒரு முழுப் பொய்க்குப் பதில் சிலவற்றை மெய்யாக்க நாம் செய்யும் முயற்சி ''அரசாங்க ஒழுங்குறுத்தல்'' என்பது தான். மென்ஷிவிக்குகளும் நரோத்னிக்குகளும் மற்றும் எல்லா அதிகாரவர்க்கத்தினரும் (இவர்கள் தோழர்கள் அவீலவையும் பஸாரவையும் தங்களோடு இழுத்துக் கொண்டு விட்டனர்) இந்த விஷயத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டியே இதைப்பற்றிப் பேசுகின்றனர். முதலாளித்துவ இலாபங்களைப் பாதுகாக்கும் பொருட்டு திட்டங்களைத் தீட்டுகின்றனர். வாணிக இரகசியங்களைப் பாதுகாக்க வாய்கிழியப் பேசுகின்றனர். மதிப்புக்குரிய கிட்டத்தட்ட மார்க்சியவாதிகளே இதுவே எதார்த்த விஷயம், சோஷலிசத்தைப் ''புகுத்துவது'' அல்ல!

முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் மீது நடத்துவது கண்காணிப்பும் ஒழுங்குறுத்தலும் அல்ல ஆனல் அதற்கு நேர் எதிரானது. இதுதான் முக்கிய அம்சம். லுயீ பிளாங்கிற்குப் பொருத்தமான ''அரசின்'' பால் நம்பிக்கை கொள்வது அல்ல ஆனல் நாம் கோருவது பாட்டாளிகளாலும் அரைப் பாட்டாளிகளாலும் நடத்தப்பெறும் ஒரு அரசு. இவ்வாறு தான் பொருளாதாரச் சீர்குலைவை நாம் எதிர்த்துப் போராட முடியும். வேறு எந்த தீர்வும் வெறும் பித்தலாட்டமும் மோசடியுமே ஆகும்.

பிராவ்தா, இதழ் 73,
1917 ஜூன் 17 (4)

நூல் திரட்டு,
தொகுதி 32,
பக்கங்கள் 292-294

தங்களது லாபங்களை முதலாளிகள் எவ்வாறு மறைத்து விடுகின்றனர்

(கண்காணிப்பு பிரச்சினை பற்றி)

அவர்கள் கண்காணிப்பு பற்றி எவ்வளவு பேசுகின்றனர்! அதற்கு எவ்வளவு குறைவான பொருளிருக்கிறது. அவர்கள், பொதுவான சொற்றொடர்கள், படாடோபமான அலங்காரச் சொற்கள், மற்றும் என்றென்றும் திட்டங்களாகவே இருக்கும் கதிக்குள்ளான கம்பீரமான ''திட்டங்கள்'' ஆகியவை பற்றிப் பேசிப் பேசிப் பிரச்சினையை எப்படித் தட்டிக் கழிக்கிறார்கள்.

வாணிக மற்றும் வங்கி இரகசியம் ஒழிக்கப்பட்டாலொழிய மற்றும் வாணிக நிறுவனங்களின் பேரேடுகளைத் தொழிற் சங்கங்களின் ஆய்வுக்குரியனவாக மாற்றும் ஒரு சட்டம் உடனடியாக இயற்றப்பட்டாலொழிய கண்காணிப்பு பற்றிய எல்லாச் சொற்றொடர்கள், அதற்கான சகல திட்டங்கள், அவ்வளவும் வெறும் பொருளற்ற சொல்மயமாக இருக்கும் என்பதுதான் பிரச்சினை.

இதோ சிறியதொரு ஆனால் படிப்பினைக்குரிய எடுத்துக்காட்டு. வங்கி ஊழியராக இருக்கும் ஒரு தோழர் அதிகார பூர்வ அறிக்கைகளில் எவ்வாறு லாபங்கள் மறைக்கப் பட்டிருக்கின்றன என்பது பற்றி கீழ்வரும் தகவலை அனுப்பி இருக்கிறார்.

1917 மே மாதம் 7ஆம் தேதி வெஸ்டினிக் ஃபினான்சவ்[23] இதழ் 18ல் பெத்ரோகிராத் கடன் மற்றும் கழிவு வழங்கு வங்கி பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை வங்கியின் நிகர லாபத்தை 1,30,00,000 ரூபிள்கள் என்று கூறுகிறது (துல்லியமான தொகை 1,29,60,000 ஆகும். நாம் இந்தக் கட்டுரையில் பெருந் தொகைகளாகக்

கூறுவோம். சரியான தொகைகளை பக்கத்திலேயே அடைப்புக் குறிக்குள் தருவோம்).

இந்த அறிக்கையைக் கூர்ந்து பார்த்தால், விவரம் தெரிந்த ஒருவர் இது முழு லாபமும் அல்லவே அல்ல என்று உடனடியாகப் புரிந்து கொள்வார். மற்றும் லாபத்தின் கணிசமானதொரு பகுதி இதர இனங்களில் மிகவும் சாமர்த்தியமாக ஒளித்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம், ''வரி'' விதிக்க முடியாது. ''கட்டாயக் கடன்'' வசூலிக்க முடியாது. மேலும் பொதுவில் எந்தவொரு நிதி நடவடிக்கையும் இதை வெளிக்குக் கொண்டு வர முடியாது. வங்கி மற்றும் வாணிக இரகசியங்கள் முழுவதாக ஒழிக்கப்பட்டாலொழிய இது சாத்தியமாகாது. உதாரணமாக, ரிசர்வ் மூலதனமாக 55,00,000 ரூபிள் தொகை காட்டப்பட்டுள்ளது. இலாபங்களை மூடிமறைப்பதற்காக அவை அடிக்கடி ரிசர்வ்கள் அல்லது ரிசர்வ் மூலதனம் என்று பதிவு செய்யப்படுவதுண்டு. நான் ஒரு லட்சாதிபதியாக இருந்து, 1,70,00,000 ரூபிள்கள் இலாபம் சம்பாதித்து இருந்து அதில் 50,00,000 ரூபிள்களை ஒளித்து விட விரும்பினால் இந்த வித்தையைச் செய்ய 50,00,000 ரூபிள்களை ரிசர்வ் மூலதனம்'' என்று எழுதிவிடவேண்டியது மட்டுமே! இதன் மூலம் ''அரசாங்கக் கண்காணிப்பு'', ''இலாபங்கள் மீது அரசாங்க வரிவிதிப்பு'' இத்தியாதி பல்வேறு சட்டங்கள் அனைத்தையும் நான் தட்டிக்கழிக்கிறேன்.

மறுபடியும், இந்த அறிக்கை, 10,00,000 ரூபிள்களுக்கும் சிறிது குறைவான தொகையை (8,25,000) வட்டிகள் மற்றும் கமிஷன்கள் மூலம் சம்பாதித்ததாகக் காட்டுகிறது. வங்கி ஊழியர் எழுதுகிறார், ''வட்டிகள் மூலம் சம்பாதித்த பணம் லாபங்கள் என்ற தலைப்பின் கீழ் காட்டப் பெறுததால் வங்கியின் லாபங்கள் என்று பொதுவாகச் சொல்லப்படுபவை எவை?''

மேலும் முந்தைய ஆண்டுகளில் சம்பாதித்து மீந்த லாபங்கள் என்று பதியப்பட்ட 3,00,000 ரூபிள் தொகை மொத்த லாபங்களோடு கூட்டப் பெறவில்லை! இதையும் சேர்த்துப் பார்த்தால் இன்னும் சுத்தமாகப் பத்து லட்சம் ரூபிள் லாபம் மறைத்து வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. அதுபோன்றே, ''பங்குதாரர்களுக்கு வினியோகிக்கப்படாத லாபப் பகிர்வு

கள்'' என்ற 2,24,000 ரூபிள் தொகை மொத்த லாபங்களில் காணப்படவில்லை. லாபப் பகிர்வுகள் நிகர லாபங்களில் இருந்து கொடுக்கப்படுபவை என்பது எல்லோரும் அறிந்ததே.

அதற்கும் மேல், இந்த அறிக்கை 38,00,000 ரூபிள்களை ''முன்பக்கத் தொகை'' என்று காட்டுகிறது. ''வங்கி அலுவலில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளாத எவரும் இந்த 'முன்பக்கத் தொகை' என்ன என்பதை நிலைநாட்டுவது மிகவும் கடினமானது'' என்று அத்தோழர் எழுதுகிறார். ''ஒரு விஷயம் நிச்சயம். ஓர் அறிக்கையைத் தயார் செய்வதில், 'முன்பக்கத் தொகை' என்ற தலைப்பிற்குள் லாபத்தில் ஒரு பகுதியை மறைத்துக் காட்டிவிட்டு, அப்புறமாக 'அது எதற்குச் சொந்தமோ அதற்கு' இதை மாற்றி விட முடியும்.''

சுருக்கிக் கூறுவோம். 1,30,00,000 ரூபிள்கள் லாபம் என்று காட்டப்பட்டிருப்பது உண்மையில் 190 முதல் 240 லட்சம் அல்லது அடிப்படை மூலதனம் 300 லட்சத்தில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் லாபம் என்பது தெரிகிறது.

முதலாளிகளுக்கு அரசாங்கம் விடுக்கும் அச்சுறுத்தல்கள், தொழிலாளர்களுக்கு அரசாங்கம் தரும் வாக்குறுதிகள்; பெரிய முதலாளிகளின் லாபங்களில் 90 சதவிகிதம் அளவு எடுத்துக் கொள்ளப் போவதாகக் கொண்டுவரப்பட்டுள்ள அரசாங்க மசோதாக்கள், சட்டங்கள் ஆகியவை வாணிக மற்றும் வங்கி ரகசியம் இருக்கும் மட்டும் முற்ற முழுமையாயும் பயனற்றவை என்பது வெள்ளிடை மலை அல்லவா?

பிராவ்தா, இதழ் 94,
1917 ஜூலை 12 (ஜூன் 29)

நூல் திரட்டு,
தொகுதி 32,
பக்கங்கள் 393-394

நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி[24]

என்பதிலிருந்து

பஞ்சம் நெருங்குகிறது

தவிர்க்க முடியாத பெரும் விபத்து ருஷ்யாவை அச்சுறுத்து கிறது. இரயில்வேக்கள் நம்பமுடியாத அளவுக்கு ஒழுங்கு கெடுக்கப்பட்டுள்ளன, இந்த ஒழுங்கு கெடுத்தல் நீடிக்கிறது. இரயில்வே போக்குவரத்து ஸ்தம்பித்து விடும். ஆலைகளுக்கு மூலப்பொருள்கள் மற்றும் நிலக்கரி வழங்கல் நின்று போகும். தானிய வழங்கீடு நின்று போகும். முதலாளிகள் திட்ட மிட்டே இடைவிடாது உற்பத்தியைச் சீர்குலைக்கின்றனர் (சேதப்படுத்தி, நிறுத்தி, குலைத்து, தடைப்படுத்துகின்றனர்), ஈடிணையற்ற ஒரு விபத்து குடியரசை, ஜனநாயகத்தை, சோவியத்துகளை, பாட்டாளிகள் மற்றும் விவசாயிகள் அமைப்புக்களைப் பொதுப்பட வீழ்த்தி விடும் என்று நம்பு கின்றனர். இவ்வாறாக, மீண்டும் முடியாட்சி ஏற்பட்டு முத லாளிகள், நிலப்பிரபுக்களின் வரம்பற்ற அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்படும் என்று கருதுகின்றனர்.

மாபெரும் விபத்து மற்றும் பஞ்சத்தின் அபாயம் நெருங்கி வருகிறது. எல்லாச் செய்திப் பத்திரிகைகளும் இதைப் பற்றிப் பன்முறை எழுதியுள்ளன. கட்சிகளும், தொழிலாளர், படையாளிகள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளும் மிகப்பெரிய எண்ணிக்கையிலான தீர் மானங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்தத் தீர்மானங்கள் பெரும் விபத்து தவிர்க்க முடியாதது, அது மிகவும் நெருங்கி வந்துவிட்டது என்பதையும், அதை எதிர்த்துப் போராட மிகவும் தீவிரமான நடவடிக்கைகள் அவசியம் எனவும், நாசம் தடுக்கப்பட வேண்டுமானால் மக்களின் ''வீரஞ்

செறிந்த முயற்சிகள்'' அவசியம் என்பதையும் ஒப்புக் கொள்கின்றன.

எல்லோரும் இதைக் கூறுகிறார்கள். எல்லோரும் இதை ஒப்புக் கொள்கிறார்கள். எல்லோரும் இது இப்படித்தான் இருக்கும் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

எனினும் எதுவும் செய்யப்படவில்லை.

புரட்சியின் ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. விபத்து இன்னும் நெருங்கிவந்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரும் அளவை எட்டி விட்டது. நாட்டில் போதியளவு தானியமும் மூலப்பொருள்களும் இருக்கும் பொழுது உற்பத்தி பண்டங்களின் பற்றாக்குறை இருக்கிறது, உணவு மற்றும் உழைப்புப் பற்றாக்குறையால் நாடு அழிந்து வருகிறது. எனினும் இத்தகைய நாட்டில் இவ்வளவு நெருக்கடியான தருணத்தில் மிகப் பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டம்! புரட்சி நடந்து ஆறு மாதத்திற்குப் பிறகு (இதைச் சிலர் மாபெரும் புரட்சி என்று அழைக்கின்றனர், ஆனால் இது வரை இதை ஒரு பதனழிந்த புரட்சி என்று அழைப்பதே நியாயமாக இருக்கக்கூடும்), தம்மைத்தாமே பெருமையுடன் ''புரட்சிகர-ஜனநாயக அமைப்புகள்'' என்று அழைத்துக் கொள்ளும் ஏராளமான சங்கங்கள், உறுப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் இருக்கும் ஒரு ஜனநாயகக் குடியரசில், இந்த பெரும் விபத்தைத் தடுக்க, பஞ்சத்தைத் தடுக்க உள்ளபடியே முக்கியமான எதுவுமே அறவே செய்யப்படவில்லை என்றால் இதைவிட வேறு சிறந்த சான்று எதற்கு? நாம் மேலதிகமான வேகத்தில் நாசத்தை நெருங்கி வருகிறோம். போர்காத்திராது. அது தேசிய வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மேலதிகமான சீர்குலைவை ஏற்படுத்தி வருகிறது.

எனினும், இதில் சற்றே கவனமும் சிந்தனையும் செலுத்தினால் பெரும் விபத்தையும் பஞ்சத்தையும் எதிர்த்துப் போராட வழிகள் உள்ளன என்றும், இவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான முறைகள் முற்றிலும் தெளிவானவை, எளிதானவை, முற்றும் காரியசாத்தியமானவை மற்றும் மக்களின் சக்திகளுக்குக் கிட்டும் நிலையில் உள்ளவை என்றும், ஆனால், இந்த நடவடிக்கைகளின் நிறைவேற்றம் விரல் விட்டெண்ணத்தக்க நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் நம்பற்கரிய லாபங்களைப் பாதிக்கும் என்ற ஒரே காரணத்

தால், முற்று முழுமையாயும் அந்தக் காரணத்திலேயே இவை ஏற்கப்பட இல்லை என்றும் தெரிய வரும்.

ஒவ்வொரு தனி உரையும், எந்தப் போக்குடைய செய்திப் பத்திரிகையிலும் சரி வெளியாகும் ஒவ்வொரு தனிக் கட்டுரையும், எந்த ஒரு கூட்டம் அல்லது நிறுவனம் நிறைவேற்றும் ஒவ்வொரு தனித் தீர்மானமும் இந்தப் பெரும் விபத்தையும் பஞ்சத்தையும் எதிர்த்துப் போராடவும், தடுப்பதற்குமான முக்கியமான தலையாய நடவடிக்கையைத் தெளிவாயும் பகிரங்கமாயும் அங்கீகரிக்கின்றன என்று நிச்சயமாயும் துணிந்து கூறலாம். இந்த நடவடிக்கையாவது அரசு மூலமான கண்காணிப்பு, மேற்பார்வை, கணக்குப் பதிவு, ஒழுங்கியக்கம், பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தில் உழைப்புச் சக்திகளின் பங்கீடை சரிவரப் புகுத்துவது, மக்கள் சக்திகளைக் கவனமாகக் கையாளுதல், வீணாகும் முயற்சிகளை அகற்றுதல், முயற்சியில் சிக்கனம் என்பதாகும். பெரும் விபத்தையும் பஞ்சத்தையும் எதிர்த்துப் போராடுவதற்குக் கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் கணக்குப் பதிவு முதன்மையான தேவைகளாகும். இது மறுக்கமுடியாதது, சர்வப்பொதுவாக அங்கீகரிக்கப்படுவதுமாகும். ஆனால் நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் மேலாதிக்கத்தின் மீதும் அளப்பரிய, நம்பமுடியா தகாத்தனமான லாபங்களின் மீதும் தலையிடுவதாக இது ஆகுமோ என்ற அச்சத்தால், இது அறவே செய்யப்படுவதில்லை. இந்த லாபங்கள் உயர்ந்த விலைகளில் இருந்தும் போர்க் கண்ட்ராக்டுகளில் இருந்தும் பெறப்படுவதாகும் (இப்போது கிட்டத்தட்ட எல்லோரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ போருக்காக ''வேலை'' செய்துவருகிறார்கள்). இந்த லாபங்கள் பற்றி எல்லோரும் அறிவார்கள், எல்லோரும் பார்க்கிறார்கள், இதன் பேரால் எல்லோரும் ஏங்கிப் புலம்புகிறார்கள்.

அரசின் அத்தகைய கண்காணிப்பு கணக்குப் பதிவு மற்றும் மேற்பார்வை குறைந்தபட்சம் பயனுடையதாக இருப்பதற்குக்கூட அறவே எதுவும் செய்யப்படவில்லை....

கண்காணிப்பு நடவடிக்கைகள் எல்லோரும் அறிந்தவை, எளிதில் எடுக்கத்தக்கவை

கண்காணிப்பு முறைகளும் நடவடிக்கைகளும் மிகவும் சிக்கலும் இடர்ப்பாடும் கொண்டவை, முன்னால் செய்து பார்த்திராதவை, முன்பின் அறிந்திராதவை அல்லவா? என்று ஒருவர் கேட்கலாம். காடேட் கட்சி, வாணிக-தொழில் துறை, மென்ஷிவிக் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சிகள் ஆகியவற்றைச் சேர்ந்த அரசறிஞர்கள் ஆறு மாதங்களாக நெற்றிவியர்வை சிந்தப் பாடுபட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள், முறைகளை ஆராய்ந்து, பயின்று, கண்டறிந்த போதிலும், இன்னும் இந்தப் பிரச்சினை நம்பற்கரிய அளவுக்குக் கடினமானதாக இருக்கிறது, இதற்கு இன்றும் தீர்வு காணப்படவில்லை என்ற மெய்நடப்புக் காரணமாக அல்லவா இந்தத் தவக்கம் ஏற்பட்டுள்ளது?

துரதிருஷ்டவசமாக இந்த முறையில்தான் அவர்கள் காரியங்களை முன்வைக்க முயல்கிறார்கள். இதன் மூலம் அறியாத எழுத்தறிவில்லா தாழ்வுற்றுக் கிடக்கும் முஜிக்குகளையும், எல்லாவற்றையும் நம்பிக் கொண்டு காரியங்களை என்றுமே ஆராய்ந்து பார்க்காத சூதுவாதற்ற முத்தன்களையும் ஏமாற்றுகிறார்கள். எனினும், உண்மையில் ஜாராட்சியும் கூட, ''பழைய ஆட்சியும்'' கூட போர்-தொழிற்துறைக் கமிட்டிகளை நிறுவிய போது கண்காணிப்பை ஏற்படுத்தும் முதன்மையான நடவடிக்கையை, பிரதான முறையை, மற்றும் வழியை அறிந்திருந்தது. மக்களைத் தனித் தொழில், வேலையின் நோக்கம், உழைப்புத் துறை ஆகியவற்றுக்கு ஏற்ப ஒன்றிணைப்பதே இந்த வழி. ஆனால் ஜாராட்சி மக்கள் ஒன்றிணைவது கண்டு அஞ்சியது. எனவே இந்தப் பொதுவாக அறியப்பட்ட, மிகவும் எளிதான, முற்றும் நடைமுறை சாத்தியமான கண்காணிப்பு முறையை, மற்றும் வழியை வரையறைப்படுத்தவும் செயற்கையான முறையில் தடைப்படுத்தவும் தன்னால் இயன்றதனைத்தையும் செய்தது.

போரிடும் நாடுகள் அனைத்தும் போரின் கடுமையான சுமைகளால், இன்னல்களால் துயருற்றிருந்தன. ஏதேனும் ஓர் அளவுக்குப் பொருளாதாரக் குழப்பத்தாலும் பஞ்சத்தாலும் துயருற்றிருந்தன. எனவே அவை நீண்டகாலமாகவே

முழு வரிசையான பல கண்காணிப்பு நடவடிக்கைகளை வகுத்து நிர்ணயம் செய்து, பிரயோகித்து சோதனை நடத்தி வந்தன. மக்களை ஒன்றிணைப்பது, பல்வேறு வகைப்பட்ட ஒன்றியங்களை நிறுவுவது அல்லது ஊக்குவிப்பது ஆகியவை இந்த நடவடிக்கைகளில் கிட்டத்தட்ட நிலையாக அடங்கும். இந்த ஒன்றியங்களில் அரசுப் பிரதிநிதிகள் பங்கு கொள்வார்கள். இவை அரசின் மேற்பார்வையின் கீழ் இருக்கும். இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் யாவும் எல்லோருக்கும் தெரிந்ததே. இவற்றைப் பற்றிப் பலபடப் பேசப்பட்டுள்ளது, எழுதப்பட்டுள்ளது. கண்காணிப்பு சம்பந்தமாக முன்னேற்றமான, போரிடும் நாடுகள் நிறைவேற்றியுள்ள சட்டங்கள் ருஷ்யனில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன அல்லது ருஷ்யன் பத்திரிகைகளில் விவரமாக விளக்கப்பட்டுள்ளன.

நமது அரசு, கண்காணிப்பை காரியநோக்கிலும் மெய்யார்வமான வகையிலும் செயல்படுத்த உள்ளபடியே விரும்புமானால், அதன் நிறுவனங்கள் முதலாளிகளிடமுள்ள தமது அடிமைத்தனம் மூலம் தம்மைத் தாமே ''முழுமையான செயலின்மைக்குப்'' பழியாக்கிக்கொள்ளவில்லையானால், அரசு செய்ய வேண்டுவதெல்லாம், ஏற்கெனவே தெரிந்த சென்ற காலத்தில் பயன்படுத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் செழுமையான பண்டகசாலையில் இருந்து அவற்றைத் தாராளமாக எடுத்தாள்வது மட்டுமேயாகும். இதற்கான ஒரே முட்டுக்கட்டை—மக்களின் பார்வையில் இருந்து காடேட்டுகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளால் மறைத்து வைக்கப்பட்ட ஒரு முட்டுக்கட்டை—இக்கண்காணிப்பு முதலாளிகளின் நம்பற்கரிய லாபங்களை அம்பலப்படுத்தும், இந்த லாபங்களுக்கான அடிப்படையைத் தகர்த்துப் பயனற்றதாக்கிவிடும் என்பதே. அது முன்னும் இருந்தது, இன்னும் இருந்து வருகிறது.

இந்த ஆக முக்கியமான பிரச்சினையை மேலும் தெளிவாக விளக்குவதற்காக (ருஷ்யாவைப் போரிலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் காப்பாற்ற விரும்பும் எந்தவொரு மெய்யான புரட்சிகர அரசாங்கத்தினதும் வேலைத்திட்டத்திற்கு சாரத்தில் சமமான இப்பிரச்சினையானது) கண்காணிப்பின் இந்த முதன்மையான நடவடிக்கைகளை வரிசைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் பரிசீலிப்போம்.

புரட்சிகர-ஜனநாயக அரசாங்கம் என்ற அதன் பெயர் வெறும் வேடிக்கைப் பேச்சு என்பதாக இல்லாமல் இருக்குமானால், ஓர் அரசாங்கம் செய்ய வேண்டியது எல்லாம் இவையே என்பதை நாம் காணலாம். அது நிலவி வந்த முதல் வாரத்திலேயே கண்காணிப்புக்கான முதன்மையான நடவடிக்கைகளை ஏற்பதாக சாசனம் செய்திருக்க வேண்டும். கண்காணிப்பை மோசடி செய்து தட்டிக் கழிக்க முயலும் முதலாளிகளுக்குக் கறாரும் கடுமையுமான தண்டனை வழங்க வகை செய்திருக்க வேண்டும். முதலாளிகள் மீது மேற்பார்வை செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். முதலாளிகள் கண்காணிப்பு விதிகளை இம்மியும் பிழையாதபடி அனுசரிக்குமாறு பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்—இவ்வாறு ருஷ்யாவில் கண்காணிப்பு நீண்ட கால முன்பே கொண்டுவரப்பட்டிருக்கும்.

இந்த முதன்மையான நடவடிக்கைகள் பின்வருமாறு:

1) எல்லா வங்கிகளையும் தனி ஒரு வங்கியில் சேர்த்து இணைப்பது, அதன் செயல்பாடுகள் மீது அரசுக் கண்காணிப்பை நிறுவுவது, அல்லது வங்கிகளை தேசவுடைமையாக்குவது.

2) சிண்டிக்கேட்டுகளை அதாவது மிகப்பெரிய ஏகபோக மான முதலாளித்துவக் கூட்டு நிறுவனங்களை (சர்க்கரை, எண்ணெய், நிலக்கரி, இரும்பு உருக்கு மற்றும் இதர சிண்டிக் கேட்டுகளை) தேசவுடைமையாக்குதல்.

3) வாணிக ரகசியங்களை ஒழித்தல்.

4) தொழில் துறை அதிபர்கள், வாணிகர், பொதுவாகத் தொழில் துறை முதலாளிகளைக் கட்டாய சிண்டிக்கேட்டு மயமாக்கல் (கூட்டு நிறுவனங்களில் கட்டாயமாகச் சேர்த்து இணைத்தல்).

5) மக்களைக் கட்டாயமாக நுகர்வாளர் சங்கங்களில் ஒழுங்கமைத்தல் அல்லது அத்தகைய அமைப்புகளை ஊக்குவித்தல், அவற்றின் மீது கண்காணிப்புச் செலுத்தல்.

இந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் புரட்சிகர-ஜனநாயக வழியில் அமுல் செய்யப்பட்டால் இவற்றின் உட்பொருள் என்னவாக இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

வங்கிகள், நவீனப் பொருளாதார வாழ்வின் மையங்கள், மூதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முழுவதன் முதன்மையான கட்டுப்பாட்டு மையங்கள் என்பதை நாம் அறிவோம். எனவே, ''பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்கம் செய்வது'' பற்றிப் பேசிக் கொண்டே வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றிய பிரச்சினையைத் தட்டிக் கழிப்பது என்பது ஒன்று மிகவும் ஆழமான அறியாமையை வெளிப்படுத்துவதாகும் அல்லது இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டாம் என்று திட்டமிட்ட நோக்கத்துடன் அணிவளமிக்க சொற்களாலும் வீம்பான வாக்குறுதிகளாலும் ''சாமான்ய மக்களை'' ஏமாற்றுவதாகும்.

வங்கி நடவடிக்கைகளைக் கண்காணித்து ஒழுங்கியக்கம் செய்யாமல், தானியம் வழங்கலையோ அல்லது பொதுப்பட பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தையோ கண்காணித்து ஒழுங்கியக்கம் செய்வது அபத்தமாகும். இது, கோடிக்கணக்கான ரூபிள்கள் போவதைக் காணாது கண்களை மூடிக் கொண்டு ஒரு சில கோப்பெக்குகளை விடாது பற்றி நிற்க முயல்வதற்கு ஒப்பாகும். இந்த நாட்களில் வங்கிகள் வர்த்தகத்துடனும் (தானியம் மற்றும் எல்லாவற்றிலும்) தொழில்துறையுடனும் மிகவும் நெருக்கமாயும் உற்ற தொடர்புடனும் பந்தம் கொண்டுள்ளன. எனவே வங்கிகளின் மீது ''கைவைக்காமல்'' மதிப்புடைய எதையும், ''புரட்சிகர-ஜனநாயகத் தன்மை வாய்ந்த'' எதையும் வெற்றிகரமாக்க முடியாது.

ஒருவேளை வங்கிகள் மீது ''கைவைப்பது'' அரசுக்கு மிகவும் இடர்ப்பாடான, சிக்கலான நடவடிக்கையாக இருக்கலாம், அல்லவா? இந்த எண்ணம் கொண்டே அவர்கள் அற்பவாதிகளை வழக்கமாகப் பீதிப்படுத்த முயல்வார்கள். அவ்வாறு செய்வது தமக்குச் சாதகமாக இருப்பதால் முதலாளிகளும் அவர்களை ஆதரிப்போரும் இதைச் செய்ய முயல்கிறார்கள்.

எனினும் உண்மையில் வங்கிகளின் தேசவுடைமையாக்கம் மூலம் எந்த ஓர் ''உரிமையாளரும்'' ஓர் ஒற்றைக் கோப்

பெக்கைக் கூட இழக்கப் போவதில்லை. அது அறவே எந்த ஒரு நிர்வாக அல்லது கலாசார இடர்ப்பாட்டையும் தரப் போவதில்லை. அது சற்றும் பொருட்படுத்த வேண்டாத விரல் விட்டு எண்ணத்தக்க சிலரின் இழிந்த பேராசை காரணமாக மட்டுமே தாமதம் செய்யப்படுகிறது. வங்கிகளின் தேச வுடைமையாக்கம் அடிக்கடி தனியார் சொத்துப் பறிமுதல் செய்யப்படுவதோடு போட்டுக் குழப்பப்படுகிறது. இந்தப் பரவலான குழப்பத்துக்குக் குற்றப் பொறுப்பாளிகள் பொது மக்களை ஏமாற்றுவதில் ஆதாயம் பெறும் முதலாளித்துவப் பத்திரிகைகளே.

வங்கிகளில் ஒருமுகப்படுத்தப்பட்டுக் கையாளப்படும் மூலதனத்தின் உடைமை உரிமை பங்குகள், பத்திரங்கள், உண்டியல்கள், ரசீதுகள் எனப்படும் அச்சடித்து எழுதப் பெற்றதான சான்றுகள் மூலம் அறிவிக்கப்படுகின்றன. வங்கிகள் தேசவுடைமையாக்கப்படுவதால், அதாவது எல்லா வங்கிகளும் தனி ஓர் அரசு வங்கியில் சேர்த்து இணைக்கப்படுவதால் இந்தச் சான்றுகளில் ஒன்றுகூட செல்தகைமை இழக்காது, மாற்றப்பட மாட்டாது. சேமிப்புக் கணக்கில் 15 ரூபிள் வைத்திருந்தவர் எவரும் வங்கிகளின் தேசவுடைமையாக்கத்திற்குப் பிறகும் 15 ரூபிளின் உரிமையாளராய் இருப்பார். ஒன்றரைக் கோடி ரூபிள் வைத்திருந்தவர் வங்கிகளின் தேசவுடைமையாக்கத்திற்குப் பிறகு அந்த ஒன்றரைக் கோடி ரூபிளைப் பங்குகள், பத்திரங்கள், உண்டியல்கள், வாணிகச் சான்றுகள் போன்ற வடிவில் தொடர்ந்து வைத்திருப்பார்.

அப்படியானால் வங்கிகளின் தேசவுடைமையாக்கத்தின் உட்பொருள்தான் என்ன?

தனிப்பட்ட வங்கிகளின் மீதும் அவற்றின் நடவடிக்கைகள் மீதும் (வாணிக ரகசியங்கள் இத்தியாதி ஒழிக்கப்பட்டாலும் கூட) எந்த வகையான செயல்திட்பம் வாய்ந்த கண்காணிப்பும் சாத்தியமல்ல. காரணம் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிப்பது, போலியான நிறுவனங்களையும் துணை நிறுவனங்களையும் தோற்றுவிப்பது, போலியான நபர்களைப் பயன்படுத்துவது. இத்தியாதிகளிலான மிகவும் சிக்கலான, சுற்றி வளைத்த சூழ்ச்சிகரமான தந்திரங்களைப் பற்றி முற்றிலும் விவரமாகத் தெரிந்து கொள்வது சாத்தியமல்ல. உடைமை உரிமை சம்பந்தமாக எந்த மாற்றத்தையும் சுட்டாததும்,

எந்த ஓர் உரிமையாளரும் ஒரு கோப்பெக் கூட இழக்க வேண்டியிராததுமான முறையில் எல்லா வங்கிகளும் ஒரு வங்கியாகச் சேர்த்திணைக்கப்பட வேண்டும். இது, மேலே குறிப்பிடப்பட்ட இதர நடவடிக்கைகள் யாவும் நிறைவேற்றப்படும் பட்சத்தில், மெய்யான கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதை சாத்தியமாக்கும். வங்கிகளை தேசவுடைமையாக்கம் செய்வது மூலம் மட்டுமே அரசு கோடி கோடியான ரூபிள் எங்கே, எவ்வாறு, எங்கிருந்து, எப்போது பெருக்கெடுக்கிறது என்பதை அறியும் நிலையில் தன்னைத் தானே வைத்துக் கொள்ள முடியும். வங்கிகளின் மீது, முதலாளித்துவப் பணப் புரள்வின் மையத்தின் மீது, அதன் அச்சின் மீது, பிரதான பொறியமைவின் மீது கண்காணிப்பு கொண்டு வருவதன் மூலம் மட்டுமே, பொருளாதார வாழ்வு அனைத்தின் மீதும், முக்கியமான பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தின்மீதும் மெய்யான, சொல் அளவில் அல்லாத கண்காணிப்பை ஒழுங்கமைக்க முடியும். ''பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்கம் செய்வது'' என்பதை ஏற்படுத்த முடியும். இல்லையேல் இது சாமான்ய மக்களை ஏய்க்கும் ஓர் அமைச்சரவை பாணித் தொடராகவே தவிர்க்க முடியாதபடி நீடிக்கும் கதி ஏற்படும். வங்கி நடவடிக்கைகள், அவை தனி ஓர் அரசு வங்கியில் ஒருமுகப்படுத்தப்பட்டு அவற்றின் மீது கண்காணிப்பு நிலவுமானால், வேறு சில எளிதில் நடைமுறை சாத்தியமான முறைகள் ஏற்கப்படுமானால், வருமான வரியைத் திறம்பட வசூலிப்பதை ஒழுங்கமைப்பது சாத்தியமாகும். இவ்வாறு செய்வதால் சொத்து மற்றும் வருவாய்களை மறைத்து வைப்பதைத் தடுக்க முடியும். ஏனெனில் தற்போது வருமான வரி மிகப் பெருமளவுக்குப் பெயரளவிலேயே உள்ளது.

வங்கிகளின் தேசவுடைமையாக்கம் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டால் மட்டும் போதும், அதை இதன் டைரக்டர்களும் ஊழியர்களும் அமுல் நடத்தி விடுவார்கள். இதற்கு தனிப்பட்ட பொறியமைவோ அரசின் சார்பில் தனிப்பட்ட தயாரிப்பு முயற்சிகளோ தேவையில்லை. ஏனெனில் இதைத் தனி ஓர் ஆணை மூலம் ''ஒரே வீச்சில்'' செய்ய முடியும். உண்டியல்கள், பங்குகள், பத்திரங்களின் கட்டத்துக்கு அது வளர்ந்து விட்டதானால், முதலாளித்துவத்தினால் இது பொரு

ளாதார முறையில் சாத்தியமாக்கப் பெற்று விடும். தேவையாக இருப்பது எல்லாம் கணக்குப் பதிவு வேலையை ஒருங்கிணைத்தல்தானே. புரட்சிகர-ஜனநாயக அரசாங்கம் இதைப் பற்றி உடனடியாக முடிவு செய்யுமானுல், தந்தி அறிவிப்பு மூலமாக ஒவ்வொரு நகரிலும் நிர்வாகிகள் ஊழியர்கள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும், நாடு முழுவதும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் மாநாடுகள் நடத்தப்பட வேண்டும். எல்லா வங்கிகளேயும் உடனடியாக தனி ஓர் அரசு வங்கியில் சேர்த்து இணைப்பதற்காக இவை ஏற்பாடு செய்யப்படும். இதைச் செய்தால் இந்தச் சீர்திருத்தம் ஒரு சில வாரங்களில் அமுல்படுத்தப்பட்டுவிடும். நிர்வாகிகளும் உயர் வங்கி அதிகாரிகளும் இதை எதிர்ப்பார்கள் என்பது திண்ணம். அவர்கள் அரசை ஏமாற்ற முயல்வார்கள், காரியங்களைத் தவக்கம் செய்வார்கள். ஏனெனில் இது அமுலானுல் இந்த கனவான்கள் தமக்குக் கொழுத்த ஊதியம் தரும் பதவிகளை இழக்க நேரும், மிகவும் லாபகரமான மோசடி விவகாரங்களை நடத்தும் வாய்ப்பை இழக்க நேரும். இதுவே இந்த விவகாரத்தின் உயிர்மையமாகும். ஆனுல் வங்கிகளைச் சேர்த்திணைப்பதற்குக் கிஞ்சிற்றும் நிர்வாக இடர்ப்பாடுகள் கிடையா. அரசு அதிகாரம் சொல்லளவில் மட்டுமன்றி புரட்சிகரமானதாக இருக்குமானுல் (அதாவது அது மந்தத்தையும் மாமூல் நடைமுறையையும் அகற்றி எறிய அஞ்சாவிட்டால்), சொல்லளவில் மட்டுமன்றி செயலில் ஜனநாயகத் தன்மை கொண்டிருக்குமானுல் (அதாவது அது விரல் விட்டெண்ணத்தக்க சில செல்வர்களுக்காகவன்றி பெரும்பான்மை மக்களின் நலன்களுக்காகச் செயல்படுமானுல்), மிகச்சிறிய தவக்கத்திற்கோ அல்லது தஸ்தவேஜுகள் மற்றும் கணக்குகளை மறைத்துவைக்க முயன்றதற்காகவோ நிர்வாகிகள், போர்ட் உறுப்பினர் மற்றும் பெரிய பங்குதார்களுக்குத் தண்டனையாகச் சொத்துப் பறிமுதல், சிறைவாசம் ஆகியவற்றை ஆணையிட்டால் போதும். வங்கிகளின் தேசவுடைமையாக்கத்தைத் தடங்கலின்றியும் துரிதமாயும் அமுலாக்க முடியும். ஏழை ஊழியர்களைத் தனியாக ஒழுங்கமைத்து, செல்வந்தர் தரப்பில் இருந்து வரும் மோசடி மற்றும் தவக்கத்தைக் கண்டு வெளிப்படுத்தி விட்ட அவர்களுக்குப் பரிசுகள் வழங்கினுல் போதும்.

வங்கிகளை தேசவுடைமையாக்கம் செய்வதால் மக்கள் முழுமைக்கும் கிடைக்கும் அனுகூலங்கள்—தொழிலாளருக்கு என விசேஷமாக இல்லை (காரணம் தொழிலாளர்களுக்கு வங்கிகளுடன் அலுவல் எதுவும் இல்லை), ஆனால் பெருந்திரளான விவசாயிகளுக்கும் சிறிய தொழிலதிபர்களுக்கும் உண்டு—இவை மிகவும் பெருமளவிலானவை. உழைப்பில் செய்யப்படும் சேமிப்பு அமோகமாக இருக்கும். அரசு முந்திய வங்கி ஊழியர்கள் அனைவரையும் நீடித்து வேலையில் வைத்திருக்கும் உத்தேசம் கொண்டிருக்குமானால், வங்கிகளின் பயன்பாட்டைச் சர்வப்பொதுவாக்கும் திசையில் தேசவுடைமையாக்கம் ஒரு முக்கியமான நடவடிக்கையாகத் திகழும். அவற்றின் கிளைகளை அதிகரிக்கவும், அவற்றின் செயல்பாடுகளை எல்லோரும் எளிதில் பயன்படுத்தவும் இது துணை செய்யும். சிறு உடைமையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் சுலபமான நிபந்தனைகளின் பேரில் கடன்வசதிகள் எளிதில் கிடைப்பதற்கான வாய்ப்பு அளவிடற்கரிய முறையில் அதிகரிக்கும். அரசைப் பொறுத்தவரை, இது முதல் தடவையாக எல்லாப் பிரதானப் பண நடவடிக்கைகளையும் மறைக்காமல் முதலில் மதிப்பாய்வு செய்யும் நிலையில் இருக்கும். பிறகு அவற்றைக் கண்காணிப்பு செய்யும், பிறகு பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்கம் செய்யும், இறுதியாக முதலாளித்துவ கனவான்களுக்கு அவர்களது ''சேவைகளுக்கு'' என்று விண்முட்டும் உயர் ''கமிஷன்கள்'' செலுத்தாமல் மாபெரும் அரசுப் பணித்திட்டங்களுக்குக் கோடிக்கணக்கான பணம் பெற வகை செய்யும். எல்லா முதலாளிகளும், எல்லா முதலாளித்துவப் பேராசிரியர்களும், எல்லா முதலாளி வர்க்கத்தாரும், அவர்களுக்கு ஊழியம் புரியும் எல்லா பிளெஹானவ்களும் பத்ரேசவ்களும் வகையறாவும் வங்கிகளின் தேசவுடைமையாக்கத்தை முழு மூச்சுடன் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதற்கு இதுவே காரணம், இது மட்டுமே காரணம். நாட்டின் ''தற்காப்பு'' என்ற நோக்கு நிலையில் இருந்தும்கூட, அதாவது ராணுவ நோக்குநிலையில் இருந்தும் கூட இந்த முறை மிகவும் பிரம்மாண்டமான அனுகூலத்தை வழங்கும், நாட்டின் ''ராணுவ வலிமையை'' மிகப் பெருமளவுக்கு உயர்த்தும். இருந்தபோதிலும் இந்த மிகவும் எளிதான, மிகவும் அவசர அவசியமான நடவடிக்கையைத் தடுப்

பதற்கு அவர்கள் ஆயிரக்கணக்கான சாக்குப்போக்குகளைப் புனைந்து வருகிறார்கள்.

பின்வரும் ஆட்சேபம் எழுப்பப்படலாம்: வங்கிகளை தேசவுடைமையாக்கம் செய்வது குறித்துச் சிந்தித்தும் கூடப் பார்க்காமலே ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடு போன்ற அத்தகைய முன்னேற்றமான நாடுகள் ''பொருளாதார வாழ்வை'' மிக நேர்த்தியாக ''ஒழுங்கியக்கம்'' செய்கின்றனவே எப்படி?

இதற்குக் காரணம் இந்த இரண்டு அரசுகளும் முதலாளித்துவ அரசுகள் மட்டுமல்ல, ஏகாதிபத்திய அரசுகளும் ஆகும். இவற்றுள் ஒன்று முடியரசாக இருந்த போதிலும் மற்றது ஒரு குடியரசாகும் என்று நாம் பதிலளிக்கிறோம். அந்த வகையில், அவை பிற்போக்கு அதிகார வர்க்க முறைகளின் மூலம் அவற்றுக்குத் தேவைப்படும் சீர்திருத்தங்களை அமுல் செய்கின்றன. அப்படி இருக்க நாம் இங்கு புரட்சிகர-ஜனநாயக முறைகள் பற்றிப் பேசுகிறோம்.

இந்தச் ''சின்னஞ்சிறு வேறுபாடு'' பெரும்படியான முக்கியத்துவம் உடையதாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இதைப் பற்றிச் சிந்திப்பது ''வழக்கம் அல்ல.'' புரட்சிகர ஜனநாயகம் என்ற சொல் நம்மைப் பொறுத்தவரை-(விசேஷமாயும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் மென்ஷிவிக்குகள் மத்தியில்) கிட்டத்தட்ட ஒரு நீள் மரபு முறைமைத் தொடராகிவிட்டது. இது ''கடவுள் செயல்'' என்ற சொல்லைப் போன்றது. இது, கடவுளை நம்பும் அளவுக்கு அறியாதவர்களாக இல்லாத நபர்களாலும் பயன்படுத்தப்படுகிறது. அல்லது ''மதிப்புக்குரிய குடிமகன்'' என்ற சொல்லைப் போன்று இருக்கிறது. இச்சொல் சில சமயங்களில் தியென்[25] அல்லது யெதீன்ஸ்த்வோ செய்திப் பத்திரிகைகளில் பணிபுரிவோரை அழைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்தச் செய்திப் பத்திரிகைகள் முதலாளிகளால் நிறுவப்பட்டவை, முதலாளிகளால் முதலாளிகளின் நலன்களுக்காகப் பேணி நடத்தப்படுபவை. எனவே, இந்தச் செய்திப் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்யும் போலி சோஷலிஸ்டுகள் சம்பந்தமாக ''மதிப்புக்குரிய'' எதுவும் இல்லை.

''புரட்சிகர ஜனநாயகம்'' என்ற தொடரை ஒரு மாறுநிலை மாதிரியான சடங்கு சார்ந்த தொடராகவோ அல்லது

நீள் மரபு முறைமை அடைமொழியாகவோ நாம் பயன்படுத்தாமல், மாருக அதன் பொருள் மீது சிந்தனை செலுத்துவோமானுல், நாம் ஒரு ஜனநாயகவாதியாக இருப்பதன் அர்த்தம், மக்கள் பெரும்பான்மையினரின் நலன்களை எதார்த்தத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும், சிறுபான்மையின் நலன்களை அல்ல என்பதையும், ஒரு புரட்சியாளனுக இருப்பதன் அர்த்தம் தீங்குவிளைப்பனவும், காலாவதியாகிவிட்டதுமான சகலத்தையும் மிகவும் உறுதியுடன் தயவு தாட்சண்யமின்றி அழிப்பதே என்பதையும் நாம் காண்போம்.

''புரட்சிகர ஜனநாயகவாதிகள்'' என்ற பெயருக்கு அமெரிக்காவிலும் சரி, ஜெர்மனியிலும் சரி நமக்குத் தெரிந்த வரை அரசாங்கமோ அல்லது ஆளும் வர்க்கங்களோ உரிமை கொண்டாடுவதில்லை. ஆனுல் நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் உரிமை கொண்டாடுகிருர்கள் (அதை அவர்கள் இழி செயலுக்குப் பயன்படுத்துகிருர்கள்).

ஜெர்மனியில் தேசிய முக்கியத்துவம் உள்ள நான்கு மிகப்பெரிய தனியார் வங்கிகள் மட்டுமே இருக்கின்றன. அமெரிக்காவில் இரண்டு மட்டுமே இருக்கின்றன. அந்த வங்கிகளின் நிதிநிர்வாகச் சீமான்கள் தனிப்பட்ட முறையில், கள்ளத்தனமாக, ஒரு புரட்சிகர வழியில் அன்றி ஒரு பிற்போக்கான வழியில், ஒரு ஜனநாயக வழியில் அன்றி ஓர் அதிகாரவர்க்க வழியில் அரசாங்க அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து ஒன்றிணைவது அதிக எளிதானது, மேலும் வசதியானது, கூடுதல் லாபகரமானது (இதுவே அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் ஒருங்கே பொதுவிதியாக உள்ளது). வங்கி நடவடிக்கைகளின் ரகசியத்தைப் பேணிக்காக்கும் பொருட்டும் அரசிடமிருந்து ''மிகை லாபங்களாகக்'' கோடிக்கணக்கில் பணம் கறக்கவும், நிதி மோசடிகளைச் சாத்தியமாக்கவும் வேண்டி வங்கிகளின் தனியுடைமைத் தன்மையைப் பேணிவைத்திருக்க அவர்கள் முயல்கிருர்கள்.

தொழிலாளருக்கு (ஓரளவு விவசாயிகளுக்கும்) போர்க் காலத்திய கடுஞ்சிறை நிலைமைகளையும், வங்கி அதிபர்கள், முதலாளிகளுக்கு ஒரு சுவர்க்கத்தையும் படைத்துருவாக்கும் அத்தகைய வழியில் அமெரிக்காவும் ஜெர்மனியும் ''பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்குகின்றன.'' அவர்களது ஒழுங்

கியக்கம் தொழிலாளர்களைப் பட்டினியிலாழ்த்தும் அளவுக்கு கசக்கிப்பிழிய இடமளிக்கிறது. அதே போதில், முதலாளி களுக்கு (கள்ளத்தனமாக, பிற்போக்கு-அதிகாரவர்க்க பாணி யில்) போருக்கு முன் இருந்ததைவிட உயர்ந்த லாபங்களை உத்தரவாதம் செய்கிறது.

இத்தகைய வழிமுறை குடியரசுபாணி ஏகாதிபத்திய ருஷ் யாவிலும் முற்றிலும் சாத்தியம். இந்த வழிமுறையையே மில்யுக்கோவ்களும் ஷிங்கரியோவ்களும் மட்டுமன்றி திரே ஷென்கோ, நெக்ராசவ், பெர்ஞுத்ஸ்கி, புரோக்கப்போவிச் வகையருக்களுடன் கூட்டுச் சேர்ந்து கேரென்ஸ்கியும் பின் பற்றுகிறுர் என்பது கண்கூடு. வங்கிகளின் ''மீறவொண்ணுத் தன்மையை'', நம்பற்கரிய லாபக் கொள்ளை ஈட்டும் அவற் றின் புனிதமான உரிமையினை ஒரு பிற்போக்கு அதிகார வர்க்கப் பான்மையில் அவர்களும் கூட ஆதரிக்கிறுர்கள். எனவே நாம் உண்மையைக் கூறிவிடுவது நல்லது. அதாவது குடியரசு ருஷ்யாவில் அவர்கள் பொருளாதார வாழ்வை ஒரு பிற்போக்கு-அதிகாரவர்க்கப் பான்மையில் ஒழுங்கியக்கம் செய்ய விரும்புகிறுர்கள். ஆனுல் ''சோவியத்துகள்'' நிலவும் காரணத்தால் அவ்வாறு செய்வது கடினம் என்பதைப் ''பெரும்பாலும்'' காண்கிறுர்கள். இந்த சோவியத்துகளை முதலாம் கர்னீலவால் கலைக்க முடியவில்லை. இரண்டாம் கர்னீலவ் அவற்றைக் கலைக்க முயல்வார்.

இதுவே உண்மை. இந்த நேரடியான ஆனுல் கசப்பான உண்மை ''நமது'' ''மாபெரும்'' ''புரட்சிகர'' ஜனநாயகம் பற்றிய கவர்ச்சியான பொய்களை விட மக்களுக்கு அறி வொளியூட்ட அதிகப் பயனுடையதாகும்.

* * *

வங்கிகளின் தேசவுடைமையாக்கம் காப்பீடு துறையை ஏககாலத்தில் தேசவுடைமையாக்குவதற்குப் பெருமளவு உதவும். அதாவது எல்லா காப்பீடு நிறுவனங்களும் ஒரு நிறு வனமாகச் சேர்த்து இணைக்கப்படும், அவற்றின் நடவடிக்கை கள் மையப்படுத்தப்படும், அவற்றின் மீது அரசுக் கண் காணிப்பு அமுலாகும். ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசாங் கம் இதைச் செய்யுமாறு ஆணை பிறப்பித்து, டைரக்டர்களை

யும் பெரிய பங்குதாரர்களையும் இந்த இணைப்பைச் சிறிதள வும் தவக்கம் இன்றிச் செயல்படுத்துமாறு உத்தரவிட்டு, இதற்கு அவர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாயும் பொறுப் பாளிகள் என்று வலியுறுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில், இங்கும் கூட காப்பீடு நிறுவனங்களின் ஊழியர் களின் காங்கிரசுகள் இந்த இணைப்பை உடனடியாகவும் பெரு மளவிலான முயற்சி ஏதுமின்றியும் செய்து முடிக்க முடியும். காப்பீடு துறையில் முதலாளிகள் கோடிக்கணக்கான ரூபிள் முதலீடு செய்திருக்கிறார்கள். வேலை முழுவதும் ஊழியர் களால் செய்யப்படுகிறது. இந்தத் துறை இணைக்கப்படுவதால் காப்பீடு கட்டணம் குறையும், காப்பீடு செய்து கொண்ட வர்களுக்குப் பல உதவிகளும் வசதிகளும் கிடைக்கும். முயற்சிகளையோ நிதிகளையோ அதிகரிக்காமலே இந்த வசதி களின் எண்ணிக்கையை அதிகரிப்பது சாத்தியம். இந்தச் சீர்திருத்தத்தை ஆதாயம் தரும் பதவிகளை வகித்துவரும் மிகச் சிலரது செயலின்மை, மாறுத மாமூல் மற்றும் சுயநலம் தான் அறவே தவக்கப்படுத்தி வருகிறது, வேறு எதுவுமல்ல. இந்தச் சீர்திருத்தம், தேசிய உழைப்பைச் சிக்கனப்படுத்தி யும் பொருளாதார வாழ்வை சொல்லில் அன்றிச் செயலில் ஒழுங்கியக்கம் செய்வதற்கான பல உயர் முக்கியத்துவ முடைய வாய்ப்புக்களை உருவாக்கியும் நாட்டின் ''பாது காப்பு ஆற்றலை'' மேம்படுத்தும்.

சிண்டிக்கேட்டுகளின் தேசவுடைமையாக்கம்

பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளிலும் மிகவும் நெருக்கமான இடைத்தொடர்புகளையும் கூட்டுச் சார்பினை யும் உருவாக்கியதன் மூலம், முதலாளித்துவமானது முத லாளித்துவத்துக்கு முந்திய பழைய பொருளாதார அமைப்பு களில் இருந்து வேறுபடுகிறது. இது அவ்வாறு இல்லாவிட் டால், சோஷலிசத்தின் திசையிலான எவ்வித நடவடிக்கை களும் நிர்வாக முறையில் சாத்தியமல்ல என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். நவீன முதலாளித்துவத்தின் கீழ் வங்கி கள் பொருள் உற்பத்தி மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளின் கூட்டுச் சார்பினை இது உச்சபட்சத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. வங்கி

களும் தொழில்துறை மற்றும் வாணிகத்தின் அதிக முக்கிய மான கிளைகளும் பிரிக்கவொண்ணுத வகையில் கலந்து இணைந் துள்ளன. இதன் விளைவாக ஒருபுறத்தில் வாணிக மற்றும் தொழில்துறை சிண்டிக்கேட்டுகளின் (சர்க்கரை, நிலக்கரி, இரும்பு, எண்ணெய் முதலிய) அரசு ஏகபோகத்தை உரு வாக்காமல், அவற்றைத் தேசவுடைமையாக்காமல் வங்கி களை மாத்திரம் தேசவுடைமையாக்குவது சாத்தியமல்ல. மறுபுறத்தில் இது உறுதியாக நிறைவேற்றப்படுமாஞல், பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்கியக்கம் செய்வதற்கு வங்கிகளையும் சிண்டிக்கேட்டுகளையும் ஏககாலத்தில் தேச வுடைமையாக்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்.

சர்க்கரை சிண்டிக்கேட்டை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இது ஜாராட்சியின்கீழ் பிறந்தது. அந்த நேரத் தில் மிகவும் உயர்தரமான யந்திரவசதிகளைக் கொண்ட தான சுத்திகரிப்பு ஆலைகளின் மிகப் பெரிய முதலாளித்துவ இணை நிறுவனமாக வளர்ச்சியடைந்தது. இந்த இணை நிறு வனம் மிகவும் பிற்போக்குத் தன்மை வாய்ந்த அதிகாரவர்க்க உணர்வில் முற்றமுழுக்க ஊறிக்கிடந்தது. முதலாளிகளுக்குத் தகாத்தனமான உயர் லாபங்களைப் பெற்றுத்தந்தது. அதன் ஊழியர்களை எவ்வித உரிமைகளும் இல்லாத படுகேவலமாக மிதித்துத் துவைக்கப்பட்ட அடிமைகளின் நிலைக்குத் தாழ்த் தியது. அந்த நேரத்திலும் கூட அரசு, செல்வந்தர் சீமான் களின் நலன்களுக்காகவே, பொருள் உற்பத்தியைக் கண் காணித்தது, ஒழுங்கியக்கம் செய்தது.

பிற்போக்குத்தனமான அதிகார வர்க்க விதிமுறைகளைப் புரட்சிகரமான ஜனநாயக விதிமுறைகளாக மட்டுமே மாற்ற வேண்டும். நேரடியான ஆணைகள் மூலம் இதைச் செய்ய வேண்டும். ஊழியர்கள், இஞ்சினியர்கள், டைரக்டர்கள் மற்றும் பங்குதாரர்களின் ஒரு காங்கிரசைக் கூட்ட வகை செய்ய வேண்டும். ஒரே சீரான கணக்கு வைத்தலைப் புகுத்த வும், தொழிலாளர் சங்கங்களின் கண்காணிப்பை ஏற்படுத்த வும் வகை செய்ய வேண்டும். இங்கு செய்யப்பட வேண்டி யவை அனைத்தும் இவையே. இது மிகமிக எளிதான காரியம் எனினும் இது செய்யப்படவில்லை! ஒரு ஜனநாயகக் குடியர சின் கீழ், சர்க்கரைத் தொழிலின் ஒழுங்கியக்கம் உள்ளபடியே பிற்போக்கு-அதிகார வர்க்கப் போக்கில் நீடிக்கிறது. தேசிய

உழைப்பின் வீண் இழப்பு, மாறாத மாமூல், தேக்கம், பப்ரீன்ஸ்கிகளும் திரேஷென்கோக்களும் செல்வமுறல் யாவும் பழைய மாதிரியே நீடிக்கின்றன. அதிகார வர்க்கத்தினர் அன்றி ஜனநாயகவாதிகளும் ''சர்க்கரை கோமான்கள்'' அன்றி தொழிலாளர்களும் இதர ஊழியர்களும் சுயேச்சையான முன்முயற்சியைச் செயல்படுத்துமாறு அழைக்கப்பட வேண்டும். இதை மிகச் சில தினங்களில், தனி ஒரு வீச்சில் செய்ய முடியும், செய்ய வேண்டும். ஆனால் இதே சர்க்கரைக் கோமான்களுடன் ''கூட்டு நிறுவனத்திற்கான'' திட்டங்கள் மூலம் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் மக்கள் மனங்களைக் குழப்ப இடந்தரக் கூடாது. காரணம் செல்வந்தருடன் சேருவதைத் தொடர்ந்து பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்கம் செய்யும் விஷயத்தில் அறவே தவிர்க்கவொண்ணாத முறையில் அரசாங்கத்தின் ''முற்ற முழுதான செயலின்மை'' எழுகிறது. இது அதன் பின்விளைவுகளில் ஒன்றாகும்.*

எண்ணெய்த் தொழிலை எடுத்துக் கொள்வோம். முதலாளித்துவத்தின் முந்திய வளர்ச்சி மூலம் இது விரிவான அளவுக்கு ''சமூக உடைமையாக்கப்பட்டது''. ஒரு தேசிய அளவில் மெய்யாகவும், நிர்வாக வழியிலும், சமூக ரீதியாகவும் ஏற்கெனவே ஒழுங்கமைக்கப்பட்டதும் நூறு ஆயிரக்கணக்கான ஊழியர்கள் மற்றும் இஞ்சினியர்களால் ஏற்கெனவே நடத்தப்பட்டு வருவதுமான ஒரு ''தொழிலில்'' இருந்து நம்பற்கரிய லாபம் வாரித் திரட்டியும், சீட்டுக்கள் கத்தரித்தும் ஒரு ஜோடி எண்ணெய்க் கோமான்கள் லட்சம் கோடிக் கணக்கான ரூபிள்களை வசக்கிக் கையாளுகிறார்கள். புரட்சிகர-ஜனநாயக அரசு ஒரு கடுமையான நெருக்கடியால் அவதிப்படுகிறது. எது எப்படியாயினும் தேசிய உழைப்பைச் சிக்கனப்

---

* கேரென்ஸ்கி அரசாங்கம் ஒரு சர்க்கரை ஏகபோகத்தைக் கொண்டுவருகிறது என்று செய்திப் பத்திரிகைகளில் இருந்து நான் அறிந்த போது இந்த வரிகளை எழுதி விட்டேன். இது ஒரு பிற்போக்கு-அதிகாரவர்க்க முறையில் கொண்டு வரப்படுகிறது, தொழிலாளர், இதர ஊழியர்களின் காங்கிரசுகள் இல்லாமல், பகிரங்க விளம்பரம் எதுவும் இல்லாமல், முதலாளிகளைத் தடுத்து நிறுத்தாமல் கொண்டுவரப்படுகிறது என்பது கண்கூடு.

படுத்துவதும், எரிபொருள் உற்பத்தியை அதிகரிப்பதும் இன்றியமையாதவை. எனவே விசேஷமாயும் இந்த நிலையில் எண்ணெய்த் தொழிலின் தேசவுடைமையாக்கத்தை ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசு உடனடி செயல்படுத்த முடியும், அதற்கு அது அவசர அவசியமாகும். இந்த விஷயத்தில் அதிகார வர்க்க முறையிலான கண்காணிப்பு எதையும் சாதிக்க முடியாது, எதையும் மாற்ற முடியாது என்பது தெளிவு. காரணம் இந்த ''எண்ணெய் கோமான்கள்'' ஜாரின் அமைச்சர்களை எப்படி சமாளித்தார்களோ அதைப் போலவே எளிதாக திரேஷென்கோக்கள், கேரென்ஸ்கிகள், அவ்க்சேன்தியெவ்கள், ஸ்கோபெலெவ்களைச் சமாளிக்க முடியும். அவர்கள் தவக்கங்கள், தட்டிக் கழிப்புகள் மற்றும் வாக்குறுதிகள் மூலமும் முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு (இவை ''பொது ஜன அபிப்பிராயம்'' என்று அழைக்கப்படுகின்றன, கேரென்ஸ்கிகளும் அவ்க்சேன்தியெவ்களும் இவற்றை ''கவனத்தில் கொள்கிறார்கள்'') நேரடியாகவும் மறைமுகமாகவும் லஞ்சம் கொடுத்தும், அதிகாரிகளுக்கு (அப்படியே நீடித்திருக்கும் பழைய அரசு இயந்திரத்தில் பழைய பதவிகளிலேயே கேரென்ஸ்கிகளாலும் அவ்க்சேன்தியெவ்களாலும் விடப்பட்டுள்ளவர்களுக்கு) லஞ்சம் கொடுத்தும் இந்த எண்ணெய்க் கோமான்கள் சமாளித்து வந்திருக்கிறார்கள்.

மெய்ப்படியாக எதையேனும் செய்ய வேண்டுமானால், அதிகார வர்க்கத்தைக் கைவிட்டு ஜனநாயகத்தை ஏற்க வேண்டும். உண்மையிலேயே புரட்சிகரமான வழியில், எண்ணெய்க் கோமான்கள் மற்றும் பங்குதாரர்கள் மீது போர்ப் பிரகடனம் செய்யப்பட வேண்டும். எண்ணெய்த் தொழில் தேசவுடைமையாக்கத்தைத் தவக்கப்படுத்தியதற்காகவும் வருவாய்களையும் கணக்குகளையும் மறைத்து வைத்ததற்காகவும் உற்பத்தியைக் குலைத்ததற்காகவும் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்க மறுத்ததற்காகவும் அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படியும் அவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கும்படியும் ஆணை பிறப்பிக்க வேண்டும். தொழிலாளர் மற்ற இதர ஊழியர்களின் முன்முயற்சி பயன்படுத்தப்பட வேண்டும், அவர்களை உடனடியாக மாநாடுகளிலும் காங்கிரசுகளிலும் கூடிச் செயல்புரிய வரும்படி அழைக்க வேண்டும். அவர்கள் மொத்தத்தில் கண்

காணிப்பை நிறுவி, உற்பத்தியை அதிகரிப்பார்களானல் அவர்களுக்கு லாபங்களில் குறிப்பிட்ட விகிதம் ஒதுக்கப்பட வேண்டும். இந்தப் புரட்சிகர-ஜனநாயக நடவடிக்கைகள் உடனடியாகவும் காலந்தாழ்த்தாமலும் 1917 ஏப்ரலிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்குமானல், திரவ எரிபொருள் வளங்களில் உலகிலேயே ஆகச் செழுமை வாய்ந்த நாடுகளில் ஒன்ருன ருஷ்யா, நீர்வழிப் போக்குவரத்தைப் பயன்படுத்தி, இந்தக் கோடையில் மக்களுக்குத் தேவையான அளவு எரிபொருளை வழங்குவதற்குப் பெருமளவு செயலாற்றியிருக்க முடியும்.

முதலாளித்துவ அரசாங்கமோ, சோஷலிஸ்டு-புரட்சியாளர்-மென்ஷிவிக்-காடேட் கூட்டு அரசாங்கமோ எதுவுமே செய்யவில்லை. இரண்டும் சீர்திருத்தங்கள் விஷயத்தில் ஓர் அதிகார வர்க்க விளையாட்டு நடத்துவதோடு நின்றுவிட்டன. தனி ஒரு புரட்சிகர-ஜனநாயக நடவடிக்கையை எடுக்கக்கூட அவை துணியவில்லை. எல்லாமே—எண்ணெய்க் கோமான்கள், தேக்கம், சுரண்டலாளர்களுக்கு எதிரான தொழிலாளர், இதர ஊழியர்களின் வெறுப்பு, இவற்றின் விளைவாக வந்த குழப்பம், தேசிய உழைப்பின் வீணை இழப்பு—ஜாரின் கீழ் இருந்தபடி அப்படியே நீடித்தன. ''குடியரசு'' அலுவலகங்களில் உள்ளே வந்து கொண்டும் வெளியே போய் கொண்டும் இருந்த காகிதங்களின் கடிதப் பெயர்த் தலைப்புகள் மட்டுமே மாற்றப்பட்டிருந்தன!

நிலக்கரித் தொழிலை எடுத்துக் கொள்வோம். இது நிர்வாகரீதியிலும் கலாசாரபூர்வமாயும் தேசவுடைமையாக்கம் செய்யப் ''பக்குவ''மாக இருப்பதில் எவ்விதக் குறைவும் இல்லை. மக்களைக் கொள்ளையடிக்கும் நிலக்கரிக் கோமான்களால் இது மிகவும் வெட்கக்கேடான முறையில் நிர்வாகம் செய்யப்படுவது எந்தளவும் குறையவில்லை. தொழிலதிபர்கள் உற்பத்தியை நேரடியாகச் சீர்குலைத்து நேரடியாக சேதப்படுத்தி நிறுத்தம் செய்தது பற்றிய பல மிகவும் முனைப்பான மெய்நடப்புகள் நிகழ்ந்துள்ளன. மென்ஷிவிக்குகளின், அமைச்சரவை ஆதரிப்பு ஏடான ரபோச்சயா கஸேத்தாவும்கூட இந்த மெய்நடப்புக்களை ஒப்புக்கொண்டுள்ளது. மேலும் நாம் காண்பது என்ன? ''பாதி-பாதி என்ற அடிப்படையில்'' தொழிலாளர் மற்றும் நிலக்கரி சிண்டிக்கேட்டின்

கொள்ளையர்களை சம எண்ணிக்கையில் கொண்டதான பழைய பிற்போக்கு அதிகார வர்க்கக் கூட்டங்களைக் கூட்டியதல்லாமல் அறவே வேறு எதுவும் செய்யப்படவில்லை! புரட்சிகர-ஜனநாயக நடவடிக்கை ஒன்றுகூட எடுக்கப்படவில்லை, மெய்யான ஒரே கண்காணிப்பை நிலைநாட்ட ஒரு முயற்சியின் சாயல்கூட மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கண்காணிப்பு கீழிருந்து வருவது, ஊழியர் சங்கங்கள் வாயிலாக, தொழிலாளர் வாயிலாக ஏற்படுத்தப்படுவது, நாட்டை நாசப்படுத்தி உற்பத்தியை முழு நிறுத்தத்துக்குக் கொண்டுவரும் நிலக்கரித் தொழில் அதிபர்களை எதிர்த்து அடக்குமுறையைப் பயன்படுத்துவது மூலம் கொண்டுவரப்படுவது! காடேட்டுகளுடன் இல்லாவிடினும் வாணிக மற்றும் தொழில் துறை வட்டங்களுடனான ''கூட்டணியை'' நாம் ''அனைவரும்'' ஆதரிக்கும் பொழுது இதை எவ்வாறு செய்ய முடியும்? கூட்டணி என்றால், முதலாளிகள் கரங்களில் ஆட்சி அதிகாரத்தை விட்டுவிடுவது என்பதாகும்; அவர்களைத் தண்டிக்காமல் போக விடுவதும் விவகாரங்களில் குறுக்கிட்டுத் தடுக்க அவர்களை அனுமதிப்பதும் ஆகும்; எல்லாவற்றுக்கும் தொழிலாளர் மீது பழி சுமத்தவும், குழப்பத்தைத் தீவிரப்படுத்தி அதன் வழி ஒரு புதிய கர்னீலவ் கலகத்துக்கு வழி சமைக்கவும் அவர்களை அனுமதிப்பது ஆகும்.

வாணிக ரகசியங்களை ஒழித்தல்

வாணிக ரகசியங்கள் ஒழிக்கப்படாவிட்டால், ஒன்று, உற்பத்தி மற்றும் வினியோகம் மீதான கண்காணிப்பு வெற்று வாக்குறுதியாகவே இருக்கும் (இது சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளை ஏமாற்ற காடேட்டுகளுக்குத் தேவைப்பட்டது, தொழிலாளி வர்க்கங்களை ஏமாற்றுவதற்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளுக்குத் தேவைப்பட்டது) அல்லது, கண்காணிப்பைப் பிற்போக்கான அதிகார வர்க்க முறைகள் மற்றும் சாதனங்கள் மூலம் மட்டுமே செயல்படுத்த முடியும். தப்பெண்ணம் இல்லாத ஒவ்வொரு நபருக்கும் இது தெளிவாகத் தெரியும். பிராவ்தா வாணிக ரகசியங்களை ஒழிக்க வேண்டும் என்று பிடிவாதமாகக் கோரியது* (பெரும்பாலும் இந்தக் காரணத்திற்

---

* இந்த நூல், பக்கங்கள் 76-78ஐப் பார்க்கவும்.—ப-ர்.

காகவே மூலதனத்துக்குக் கீழ்ப்படிந்துள்ள கேரென்ஸ்கி அரசாங்கம் இதை நிறுத்தியது) என்றபோதிலும், நமது குடியரசு அரசாங்கமோ அல்லது "புரட்சிகர ஜனநாயகத்தின் அதிகாரம் பெற்ற அமைப்புகளோ" மெய்யான கண்காணிப்புக்கு உரிய இந்த முதல் நடவடிக்கை பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

எல்லாக் கண்காணிப்புக்குமான திறவுகோல் இதுவாகும். இங்குதான் மக்களைக் கொள்ளையடிக்கும், பொருளுற்பத்தியைக் குலைக்கும் மூலதனத்தின் உயிர்த்தலம் இருப்பதைக் காண்கிறோம் இதனால்தான், இதைப் பற்றி எதையும் செய்வதற்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகள் அவ்வாறு அஞ்சுகிறார்கள்.

ஒரு முதலாளித்துவப் பொருளாதாரத்தில் வாணிக ரகசியங்களை ஒழிப்பது என்பது பொதுவாக அறவே சாத்தியமற்றது. காரணம், உற்பத்தி சாதனங்களிலான தனியார் உடைமையும் மார்க்கெட் மீது தனிப்பட்ட நிறுவனங்கள் சார்ந்து நிற்பதும் திண்ணமாயும் வங்கி நடவடிக்கைகள் உட்பட்டதான வாணிகக் கணக்குகள், வாணிக நடவடிக்கைகளின் "புனிதத்தன்மையை" இன்றியமையாததாக்கி விடுகின்றன. இதுவே முதலாளிகளின் வழக்கமான வாதம். இதைச் சற்றும் சிந்தனை செய்யாமலே குட்டி முதலாளி வர்க்கத்தினர் திரும்பக் கூறுகின்றனர்.

இதை அல்லது இதைப் போன்ற வாதங்களை ஏதேனும் ஒரு வடிவில் மீண்டும் கூறும் நபர்கள், நவீனப் பொருளாதாரச் செயல்பாட்டின் இரு அடிப்படையான, மிகவும் முக்கியமான, பொதுவாகத் தெரிந்ததான மெய்நடப்புகளைக் காணாது கண்களை மூடிக்கொள்கிறார்கள். இதன் மூலம் தாமே ஏமாற்றப்பட இடமளிக்கிறார்கள், தாமே மக்களை ஏமாற்றுகிறார்கள். முதல் மெய்நடப்பு—பெருவீத முதலாளித்துவம், அதாவது வங்கிகள், சிண்டிக்கேட்டுகள், பெரிய ஆலைகள் ஆகியவற்றின் பொருளாதார அமைப்பின் தனி இயல்புகள் நிலவுவதாகும். இரண்டாவது மெய்நடப்பு—போர்.

நவீனப் பெருவீத முதலாளித்துவம்தான் எங்கும் ஏகபோக முதலாளித்துவம் ஆகிவருகிறது. அது வாணிக ரகசியங்களின் நியாயத்தன்மையின் ஒவ்வொரு சாயலையும் கவர்ந்து கொள்கிறது, அதை பாசாங்காக மாற்றிவிடுகிறது,

நிதி மோசடிகளையும் பெரிய முதலாளிகளின் நம்பமுடியாத உயர் லாபங்களையும் மூடி மறைப்பதற்கான ஒரு விசேஷக் கருவியாக மாற்றிவிடுகிறது. பெருவீத முதலாளித்துவப் பொருளாதாரமானது, அதன் மெய்யான தொழில்நுட்ப இயல்பிலேயே சமூகவுடைமையாக்கப்பட்ட பொருளாதாரமாகும். அதாவது இது லட்சக்கணக்கான மக்களுக்காகச் செயல்படுகிறது, தனது செயல்பாடுகளால் நேரடியாகவோ மறைமுகமாகவோ, நூறு ஆயிரம் லட்சம் குடும்பங்களை ஒன்றிணைக்கவும் செய்கிறது. இது சிறு கைவினைஞர் அல்லது நடுத்தர விவசாயியின் பொருளாதாரம் போன்றதல்ல. இவர்கள் வாணிகக் கணக்குப் புத்தகம் எதுவும் வைத்திருக்கவில்லை, எனவே வாணிக ரகசியங்கள் ஒழிக்கப்படுவதால் பாதிக்கப்பட மாட்டார்கள்!

பெருவீதத் தொழிலில் நடத்தப்பட்டு வரும் வேலை நடவடிக்கைகள் நூற்றுக்கணக்கிலோ அதற்கு அதிகமோ ஆன நபர்களுக்கு ஒரு விதம் தெரிந்திருக்கும். இங்கு வாணிக ரகசியங்களைப் பாதுகாக்கும் சட்டம் உற்பத்தி அல்லது பரிமாற்றத்தின் நலன்களுக்கு உதவுவதில்லை. ஆனால், வர்த்தகச் சூதாட்டம், மிகவும் கொச்சை வடிவிலான லாப நாட்டம் மற்றும் நேரடி மோசடியின் நலன்களுக்கே துணைசெய்கிறது இந்த மோசடி, கூட்டுப் பங்குக் கம்பெனிகள் விஷயத்தில் குறிப்பாயும் பரவலாக உள்ளது. இவை மக்களை ஏமாற்றுவதற்கு வேண்டித் தொகுக்கப்படும் அறிக்கைகள், இருப்பு நிலைக் குறிப்புகளால் மிகவும் சாமர்த்தியமாக மறைக்கப்படுகின்றன.

சிறுவீதப் பண்ட உற்பத்தியில் அதாவது சிறு விவசாயிகள், கைவினைஞர் மத்தியில் வாணிக ரகசியங்கள் தவிர்க்க இயலாதவை. அவர்களிடையே பொருள் உற்பத்தி சமூக உடைமையாக்கப்படவில்லை, மாறாகச் சிதறலாயும் இணைக்கப்படாததாயும் இருக்கிறது. அதே போதில் பெருவீத முதலாளித்துவ உற்பத்தியில் வாணிக ரகசியங்களைப் பாதுகாப்பது என்பது, மக்கள் முழுமையின் நலனுக்கு எதிராக உள்ளபடியே விரல் விட்டெண்ணத்தக்க மிகச் சிலரின் தனியுரிமைகளையும் லாபங்களையும் பாதுகாப்பதாகும். கூட்டுப் பங்கு கம்பெனிகளின் கணக்குகளை வெளியிடுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது என்ற அளவுக்கு இதைச் சட்டம் ஏற்கெனவே

...RA PUBLIC...

அங்கீகரித்துள்ளது. எல்லா முன்னேறிய நாடுகளிலும் ருஷ்யாவிலும் ஏற்கெனவே புகுத்தப்பட்டுள்ள இந்தக் கண்காணிப்பு பிற்போக்கான அதிகார வர்க்கக் கண்காணிப்பு ஆகும். இது மக்களின் கண்களைத் திறந்து விடவில்லை. கூட்டுப் பங்கு கம்பெனிகளின் செயல்பாடுகள் பற்றிய உண்மை முழுவதையும் எல்லோரும் அறிவதற்கு அனுமதிப்பதும் கிடையாது.

புரட்சிகர-ஜனநாயக வழியில் செயல்புரிய வேண்டுமானால் வாணிக ரகசியங்களை ஒழிக்கும் இன்னொரு சட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும். இந்தச் சட்டம் பெரிய தொழில் நிலையங்களும் செல்வந்தர்களும் சாத்தியமான அளவுக்கு முழுமையான கணக்குகளை வழங்கும்படி கட்டாயப் படுத்த வேண்டும். கணிசமான ஜனநாயக எண்ணிக்கை வலிமையுள்ள (1,000 அல்லது 10,000 வாக்காளர் என்று வைத்துக் கொள்வோம்) குடிமக்களின் ஒவ்வொரு குழுவுக்கும் எந்த ஒரு பெரிய நிறுவனத்தின் பதிவேடுகள் அனைத்தையும் பரிசீலனை செய்யும் உரிமை அளிக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கையை ஒரு நேரடி ஆணை மூலம் முழுமையாயும் எளிதாகவும் செய்து முடிக்கலாம். இது மட்டுமே அலுவலக ஊழியர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், அனைத்து அரசியல் கட்சிகள் மூலம் கண்காணிப்பில் மக்களின் முன் முயற்சிக்கு முழு வாய்ப்பினை அளிக்கும். இது மட்டுமே கண்காணிப்பை உறுதியானதாயும் ஜனநாயகத் தன்மையதாயும் ஆக்கும்.

இதோடு போரும் சேர்ந்தது. மிகப் பெரும்பாலான வாணிக, தொழில்துறை நிறுவனங்கள் இப்போது ''கட்டற்ற மார்க்கெட்டுக்காக'' வேலை செய்யவில்லை. மாறாக, அரசாங்கத்துக்காகவும் போருக்கும் வேலை செய்கின்றன. இதனால் தான் சோஷலிசத்தைக் கொண்டுவர முடியாது என்ற வாதத்துடன் எம்மை எதிர்க்கும் பேர்வழிகள் பொய்யர்கள், வெட்கங்கெட்ட பொய்யர்கள் என்று பிராவ்தாவில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். காரணம் சோஷலிசத்தை இப்போது, நேரடியாக ஒரே நாளில் கொண்டுவருவது என்பது அல்ல பிரச்சினை. மாறாக, அரசைக் கொள்ளையிடுவதை அம்பலப் படுத்துவதே பிரச்சினை.[26]

முதலாளித்துவப் ''போர்'' பொருளாதாரம் (அதாவது நேரடியாயும் மறைமுகமாயும் போர்க் கண்ட்ராக்டுகளுடன்

தொடர்பு உடைய பொருளாதாரம்) முறைமை செய்யப் பட்ட சட்டத்திற்கொத்ததான கொள்ளையடித்தலாகும். வாணிக ரகசியங்கள் ஒழிக்கப்படுவதை மென்ஷிவிக்குகளுட னும் சோஷலிஸ்டு-புரட்சியாளருடனும் சேர்ந்து எதிர்க்கும் காடேட் கனவான்கள் இந்தக் கொள்ளையடிப்புக்கு உதவியாளர் கள் உடந்தையாளர்கள் தவிர வேறெதுவும் அல்லர்.

இந்தப் போரினல் ருஷ்யாவுக்கு நாள் ஒன்றுக்கு ஐந்து கோடி ரூபிள் செலவாகிறது. இந்த ஐந்து கோடியும் பெரும்பாலும் ராணுவக் கண்ட்ராக்டர்களுக்கே போய்ச் சேருகிறது. இந்த ஐந்து கோடியில் தினசரி குறைந்தது ஐம்பது லட்சம், மற்றும் ஒரு வேளை ஒரு கோடி அல்லது அதற் கும் அதிகமான தொகை, முதலாளிகளின் மற்றும் அவர் களுடன் ஏதேனும் ஒரு வழியில் கூட்டுச் சேர்ந்து நிற்கும் அதிகாரிகளின் ''நேர்மையான வருவாயாக'' இடம் பெறு கிறது. போர்க் கண்ட்ராக்டு அலுவல்களுக்குப் பணம் கடன் கொடுக்கும் மிகப் பெரிய நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் நம்ப முடியாத அளவுக்கு லாபம் திரட்டுகின்றன. அரசைக் கொள்ளையடித்தே அவை இவ்வாறு செய்கின்றன. போரின் கொடுமைகள் நிலவும் ''சந்தர்ப்பத்தில்'', நூறு ஆயிரம் லட்சமாக மக்கள் மடிந்துவரும் ''சந்தர்ப்பத்தில்'' மக்களை இவ்வாறு மோசடி செய்வதையும் கொள்ளையடிப் பதையும் வேறு சொல்லைப் பிரயோகித்து வருணிக்க முடி யாது.

போர்க் கண்ட்ராக்டுகளில் திரட்டப்பட்ட இந்தத் தகாத்தனமான லாபங்கள் பற்றியும் வங்கிகள் ஒளித்து வைத் துள்ள ''உத்தரவாதக் கடிதங்கள்'' பற்றியும் வாழ்க்கை செலவு உயர்வால் யார் அனுகூலமடைகிருர்கள் என்பது பற்றியும் ''எல்லோரும்'' அறிவார்கள். ''சமுதாயம்'' இதை கண்டு பரிகாசம் செய்கிறது. ''பொல்லாங்கான'' மெய் நடப்புகள் குறித்துப் பொதுப்பட மௌனம் சாதிக்கும், ''சிக்கலான'' பிரச்சினைகளைத் தட்டிக்கழிக்கும் முதலாளித்துவ பத்திரிகைகளில்கூட இதைப் பற்றிப் பல துல்லியமான குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. எல்லோரும் இதைப் பற்றி அறிவார்கள். ஆயினும் எல்லோரும் மௌனமாக இருக் கிருர்கள், எல்லோரும் இதைச் சகித்துக் கொள்கிருர்கள். ''கண்காணிப்பு'' மற்றும் ''ஒழுங்கியக்கம்'' குறித்துச்

சொல்வன்மையுடன் பிதற்றும் அரசாங்கத்தை எல்லோரும் பொறுத்துக் கொள்கிறார்கள்!!

புரட்சிகர ஜனநாயகவாதிகள் உண்மையிலேயே புரட்சியாளர்களாயும் ஜனநாயகவாதிகளாயும் இருந்திருப்பார்கள் என்றால் அவர்கள் வாணிக ரகசியங்களை ஒழிக்கும் ஒரு சட்டத்தை உடனே நிறைவேற்றியிருப்பார்கள். கண்ட்ராக்டர்களையும் வர்த்தகர்களையும் பகிரங்கமாகக் கணக்குகளை வெளியிடும்படி கட்டாயப்படுத்தி இருப்பார்கள். அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் அவர்கள் தமது செயல் துறைகளைக் கைவிடுவதைத் தடை செய்திருப்பார்கள். விவரங்களை ஒளித்து வைத்தல், மக்களை ஏமாற்றுதல் ஆகியவற்றைப் புரியும் நபர்கள் மீது சொத்துக்களைப் பறிமுதல் செய்வது சுட்டுத் தள்ளுவது* போன்ற தண்டனை முறைகளைச் சுமத்துவார்கள். கீழ் மட்டத்தில் இருந்து சரிபார்த்தலையும் கண்காணிப்பையும் மக்கள் தாமேயும், தொழிலாளர் இதர ஊழியர் நுகர்வாளர் சங்கங்கள் மூலமாகவும் ஜனநாயக முறையில் நடத்துவதை ஒழுங்கமைப்பார்கள்.

நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும், பீதியுற்ற ஜனநாயகவாதிகள் என்று அழைக்கப்படுவதற்கு முற்றிலும் தகுதி பெற்றவர்கள் ஆவர். காரணம் இந்தப் பிரச்சினையில் அவர்கள் பீதியுற்ற அற்பவாதிகள் அனைவரும் கூறுவதைத் திருப்பிக் கூறுகிறார்கள். அதாவது, ''மிகவும் கடுமையான'' நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டால் முதலாளிகள் ''ஓடிவிடுவார்கள்'' என்பதும், ''நாம்'' முதலாளிகள் இல்லாமல் சமாளிக்க முடியாது என்பதும், நிச்சயமாயும் நம்மை ''ஆதரித்துவரும்'' பிரிட்டிஷ், பிரெஞ்சு கோடீசுவரர்கள் அவர்களைப் பொறுத்தவரைக் ''கடுப்படைவர்'' என்பதுமான இவையே அவர்கள் கூற்று.

---

* சுரண்டலை நிலைநாட்டும் நோக்கத்துடன் உழைக்கும் மக்கள் திரளுக்கு எதிராக மரணதண்டனை பிரயோகிக்கப் படும் போது மட்டுமே அதை எதிர்த்து வாதிடுவது சரியானது என்பதை போல்ஷிவிக் பத்திரிகைகளில் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.[27] எந்த ஒரு புரட்சிகர அரசாங்கமும் சுரண்டலாளர் (அதாவது நிலப்பிரபுக்கள், முதலாளிகள்) விஷயத்தில் மரணதண்டனையைப் பிரயோகிக்காமல் தவிர்ப்பது என்பது பெரும்பாலும் அரிதே.

வரலாறு அறிந்திராத எதையோ, முன்பு சோதனை செய்து பார்க்கப்படாத எதையோ, ''கற்பனையான'' எதையோ போல்ஷிவிக்குகள் முன்வைக்கிறார்களென்று கருதத் தோன்றலாம். ஆனால், உண்மையில் 125 ஆண்டுகளுக்கு முன்பே கூட, பிரான்சில், மெய்யாகவே ''புரட்சிகர ஜனநாயகவாதிகளாக'' இருந்த மக்கள், தாம் நடத்தும் போரின் நியாயம் மற்றும் தற்காப்புத் தன்மையை குறித்து உண்மையில் நம்பிக்கை கொண்டிருந்த மக்கள், உள்ளபடியே பொதுஜன ஆதரவு பெற்று இதை மனப்பூர்வமாக உணர்ந்திருந்தார்கள், செல்வந்தர் மீது புரட்சிகரக் கண்காணிப்பை நிலை நாட்ட முடிந்தது, உலகின் பாராட்டைப் பெறத்தக்கதான விளைவுகளை சாதனையாக்க முடிந்தது. அதன் பின் கடந்து சென்ற ஒன்றே கால் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி வங்கிகள், சிண்டிக்கேட்டுகள், ரயில்வேக்கள் இத்தியாதிகளை உருவாக்கும் விளைவை ஏற்படுத்தியது. இது சுரண்டலாளர், நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் மீது தொழிலாளரும் விவசாயிகளும் மெய்யான ஜனநாயகக் கண்காணிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பெருமளவுக்கு உதவியது, அவற்றை எளிதாக்கியது.

மெய்விவரப்படி பார்த்தால் கண்காணிப்பு பற்றிய முழுப் பிரச்சினையும் யார் யாரைக் கண்காணிக்கிறார்கள், அதாவது எந்த வர்க்கம் கண்காணிக்கிறது எந்த வர்க்கம் கண்காணிக்கப்படுத்தப்படுகிறது என்பதில் போய் முடியும். நமது நாட்டில், குடியரசு ருஷ்யாவில், புரட்சிகர ஜனநாயகம் என்று பாவனை செய்யும் ''அதிகாரபூர்வ அமைப்புகளின்'' உதவியுடன் நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமே இன்னும் கண்காணிப்பாளர்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள், இன்னும் கண்காணிப்பாளர்களாக இருக்கிறார்கள். மக்களிடையே சர்வப்பொதுவான கோபாவேசத்தை எழுப்பும் முதலாளித்துவக் கொள்ளையும், முதலாளிகளால் செயற்கையாக நிலை பெற வைக்கப்பட்டுள்ள பொருளாதாரக் குழப்பமுமே இதன் விளைவுகளாகும். பழமையுடன் முறித்துக் கொள்வதற்கு அஞ்சாமல், புதியதைத் துணிவுடன் நிர்மாணிப்பதற்கு அஞ்சாமல் தொழிலாளர், விவசாயிகள் மூலம் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் மீது கண்காணிப்பை ஏற்படுத்தும் திசையில் நாம் உறுதியாகவும் மாற்ற முடியாத வகையிலும் முன்

னேற வேண்டும். இதைத்தான் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் கொள்ளை நோயை விட மோசமாகக் கருதி அஞ்சுகிறார்கள்.

கட்டாய இணைப்பு

உதாரணமாக, தொழிலதிபர்களைக் கட்டாயமாக சிண்டிக்கேட்டுமயமாக்குவது, அதாவது, கட்டாயமாக இணைப்பது ஏற்கெனவே ஜெர்மனியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் புதுமை எதுவும் இல்லை. இங்கும்கூட சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளின் பிசகு காரணமாக குடியரசு ருஷ்யாவில் படுமோசமான தேக்கத்தைப் பார்க்கிறோம். காடேட்டுகள் அல்லது பூப்லிக்கவ்களுடனும் அல்லது திரேஷென்கோ, கேரென்ஸ்கியுடனும் நான்கிணை நாட்டிய மாடுவதன் மூலம், இந்த மதிக்க லாயக்கற்றதான கட்சிகள் ருஷ்யாவை ''உல்லாசமூட்டுகின்றன.''

கட்டாய சிண்டிக்கேட்டுமயமாக்கல் ஒரு புறம் முதலாளித்துவ வளர்ச்சியை அரசு துரிதப்படுத்தும் சாதனமாக ஒரு விதத்தில் அமைகிறது. இது எல்லா இடங்களிலும் வர்க்கப் போராட்டம் ஒழுங்கமைவதற்கும், சங்கங்களின் எண்ணிக்கை, வகை, முக்கியத்துவம் பெருகுவதற்கும் இட்டுச் செல்கிறது. மறு புறம் கட்டாய ''சங்கம் சேருதல்'' எந்த விதமான திறமான கண்காணிப்புக்கும் தேசிய உழைப்பின் சிக்கனம் அனைத்துக்கும் இன்றியமையாத முன்நிபந்தனையாகும்.

எடுத்துக் காட்டாக, ஜெர்மன் சட்டம் ஒரு குறிப்பிட்ட வட்டாரம் அல்லது நாடு முழுதும் உள்ள தோல் உற்பத்தியாளர்களை ஒரு சங்கம் அமைக்குமாறு கட்டுப்படுத்துகிறது. இதன் அவையில் கண்காணிப்பு நோக்கத்திற்காக அரசின் பிரதிநிதி ஒருவர் இருப்பார். இந்த வகையான சட்டம் நேரடியாக அதாவது அதுவாகவே எந்த வழியிலும் சொத்துரிமை உறவுகளைப் பாதிக்காது. எந்த உரிமையாளரிடமிருந்தும் ஒற்றைக் கோப்பெக்கைக்கூடக் கவர்ந்து கொள்ளாது. இந்தக் கண்காணிப்பு பிற்போக்கு-அதிகார வர்க்க அல்லது புரட்சிகர-ஜனநாயக வடிவில், திசையில் அல்லது உணர்வில்

அமுல் நடத்தப்படுமா இல்லையா என்பதை முன்கூட்டி நிர்ணயம் செய்யாது.

அத்தகைய சட்டங்கள் நமது நாட்டிலும் அரிய நேரத்தில் ஒரு வாரத்தைக்கூட வீணாக்காமல் உடனே நிறைவேற்றப்பட முடியும், நிறைவேற்றப்பட வேண்டும். இச்சட்டத்தை அமுல்நடத்துவதற்கான பிரத்தியேக வடிவங்கள், அவை எத்துணை வேகமாக அமுல் செய்யப்பட வேண்டும், அவற்றின் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்யும் முறைகள் ஆகியவை பற்றி நிர்ணயம் செய்வதை சமூக நிலைமைகள் தமக்கே விட்டுவிட வேண்டும். இந்த விஷயத்தில், இத்தகைய சட்டத்தை நிறைவேற்றுவதற்கு விசேஷப் பொறியமைவோ, விசேஷ விசாரணையோ, பூர்வாங்கத் தகவல் திரட்டுவதோ அரசுக்குத் தேவை இல்லை. முதலாளிகளின் ஒரு சில தனிப்பட்ட நலவுரிமைகளுடன் முறித்துக் கொள்வதற்கான உறுதிப்பாடு மட்டுமே இங்கு வேண்டுவது எல்லாம். இந்த முதலாளிகள் இத்தகைய தலையீட்டுக்கு ''பழக்கப்பட்டவர்கள் அல்ல.'' பழைய நிர்வாக முறைகளாலும் கண்காணிப்பு இன்மையாலும் உத்தரவாதம் செய்யப்படும் மிகை லாபங்களை இழப்பதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள்.

இத்தகைய சட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பொறியமைவெதுவும் ''புள்ளிவிவரங்கள்'' எதுவும் (விவசாயிகளின் புரட்சிகர முன்முயற்சிக்குப் பதில் இதை வைக்க செர்னேவ் விரும்பினர்) தேவை இல்லை. இதை அமுலாக்கம் செய்வது ஆலை முதலாளிகள் அல்லது தொழிலதிபர்கள் கடமை, கிடைக்கக் கூடிய பொதுஜன சக்திகளின் கடமை. இது கிடைக்கக் கூடிய பொதுஜன (அரசாங்கமல்லாத, அதிகார வர்க்கமல்லாத) சக்திகளின் கண்காணிப்பின் கீழ் அமுலாக்கம் செய்யப்பட வேண்டும். இந்தப் பொதுஜன சக்திகளில் ''கீழ் அடுக்குகள்'' எனப்படும் பகுதியினர் அதாவது ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட வர்க்கங்கள் நிச்சயமாயும் உட்படும். இந்த வர்க்கங்கள் வீரச் செயல்களுக்கான தமது ஆற்றலிலும் தன்னலத் தியாகத்திலும், தோழமை பூர்வமான ஒழுங்கு முறையிலும் சுரண்டலாளர்களைவிட மிகப் பெருமளவு மேலானவர்கள் என்பதை வரலாறு எப்போதும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

நம்மிடம் உள்ளபடியே ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசாங்கம் இருக்கிறது எனவும், அது இரண்டு தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலையில் அமர்த்திக் கொண்டிருப்பவர்களான உற்பத்தியின் எல்லாக் கிளைகளிலுமுள்ள ஆலை முதலாளிகள், தொழிலதிபர்களை உடனடியாக உயெஸ்து மற்றும் குபேர்னியா சங்கங்களில் இணைய வேண்டும் என்று முடிவுசெய்கிறது எனவும் வைத்துக் கொள்வோம். சட்டத்தைக் கறாராகக் கடைப்பிடிப்பதற்கான பொறுப்பு முதன்மையாகவும் ஆலை முதலாளிகள், டைரக்டர்கள், போர்ட் உறுப்பினர்கள் மற்றும் பெரிய பங்குதாரர்கள் மீதே சாட்டப்படும் (காரணம் அவர்களே நவீனத் தொழில் துறையின் உண்மைத் தலைவர்கள், இதன் மெய்யான எஜமானர்கள்). இந்தச் சட்டம் உடனே அமுல் செய்யப்படுவதற்கு அவர்கள் பாடுபடாவிட்டால் ராணுவ சேவையில் இருந்து துறந்தோடிப்போனவர்களாகக் கருதப்பட்டு அதற்குத் தக்கபடி தண்டிக்கப்படுவார்கள். தமது சொத்து முழுவதும் கொண்டு ஒருவர் எல்லோருக்கும், எல்லோரும் ஒருவருக்கும் என்று இசைவு காட்டிப் பரஸ்பரம் பொறுப்பேற்க வேண்டும். அடுத்தபடி பொறுப்பு அலுவலக ஊழியர் அனைவரையும் சாரும், அவர்களும் ஒரு சங்கம் நிறுவுவார்கள் மற்றும் எல்லாத் தொழிலாளர்களையும் அவர்களது தொழிற்சங்கங்களையும் சாரும். ''சங்கமயமாக்கலின்'' நோக்கம் ஆக முழுமையான, மிகவும் கறாரான, பெருமளவு விவரமான கணக்கு வைத்தலேயாகும். ஆனால் பிரதானமானது, மூலப்பொருள்கள் கொள்முதல், உற்பத்திப் பண்டங்களின் விற்பனை மற்றும் தேசிய நிதிகள் சக்திகளிலான சிக்கனம் இவை சம்பந்தமான நடவடிக்கைகளை இணைப்பதே. தனித்தனி நிறுவனங்கள் தனி ஒரு சிண்டிக்கேட்டாகச் சேர்த்து இணைக்கப்படும் போது அது மிகப்பெரும் அளவினை எட்ட முடியும். இதை நமக்குப் பொருளாதார விஞ்ஞானம் போதிக்கிறது, எல்லா சிண்டிக்கேட்டுகள், கார்ட்டல்கள், டிரஸ்டுகளின் உதாரணம் இதைப் புலப்படுத்துகிறது. இந்தச் சங்கமயமாக்கல் சொத்து உறவுகளை இம்மியளவும் மாற்றாது, எந்த உரிமையாளரும் ஒரு கோப்பெக்கூட இழக்கும்படி செய்யாது என்பதை மீண்டும் கூற வேண்டும். இந்த விவரம் மிகப்பலமாக வற்புறுத்தப்பட வேண்டும். காரணம், சிறிய மற்றும்

நடுத்தர உடைமையாளர்களைப் பொதுவாக சோஷலிஸ்டு களும் குறிப்பாக போல்ஷிவிக்குகளும் ''உடைமை நீக்கம்'' செய்ய விரும்புகிறார்கள் என்று அவர்களை முதலாளித்துவப் பத்திரிகைகள் இடையறாது ''அச்சுறுத்தி'' வருகின்றன. இது வேண்டுமென்றே பரப்பப்படும் பொய்க்கூற்று. ஒரு முழுமை யான சோஷலிஸ்டுப் புரட்சி ஏற்பட்டாலும் கூட சோஷ லிஸ்டுகள் சிறிய விவசாயியை உடைமை நீக்கம் செய்ய உத் தேசிக்க மாட்டார்கள், அவ்வாறு அவர்களால் செய்ய முடி யாது, அவர்கள் செய்யவும் மாட்டார்கள். இது வரையில் நாம் ஏற்கெனவே மேற்கு ஐரோப்பாவில் கொண்டுவரப் பட்டுவிட்ட, உடனடியான, அவசரமான நடவடிக்கைகள் பற்றி மட்டுமே கூறுகிறோம். முரண்பாடு இல்லாத ஒரு ஜன நாயக அமைப்பு, நெருங்கி வரும் தவிர்க்க முடியாத பெரும் விபத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இந்த முறைகளை நமது நாட்டில் உடனே கொண்டுவர வேண்டும்.

சிறிய, மிகச் சிறிய உடைமையாளர்களை சங்கங்களுக்குள் சேர்த்து இணைப்பதில், ஒருங்கே நிர்வாக மற்றும் கலாசாரத் துறைப்பட்ட கடுமையான இடர்ப்பாடுகளை எதிர்ப்பட வேண்டிவரும். இதற்குக் காரணம் அவர்களது தொழில் நிறு வனங்களின் மிகவும் சிறியதான அளவும் அவற்றின் தொழில் நுட்ப முதிர்ச்சி இன்மையும் உடைமையாளர்களின் படிப் பின்மை அல்லது போதியளவு கல்வி இன்மையும் ஆகும். ஆனால் குறிப்பாயும் அத்தகைய நிறுவனங்களுக்குச் சட்டத் தில் இருந்து விதிவிலக்கு அளிக்கலாம் (எமது உத்தேசமான உதாரணத்தில் மேலே சுட்டிக் காட்டியபடி), அவை காலங் கடந்து சேர்த்திணைவது ஒருபுறம் இருக்க அவை சேர்ந்து இணையாமல் இருப்பதால் பெரிய தடை எதுவும் ஏற்பட்டு விடாது. ஏனெனில் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தியில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான சிறிய நிறுவனங்கள் வகிக் கும் பங்கும், மொத்தத்தில் தேசியப் பொருளாதாரத்திற் குரிய அவற்றின் முக்கியத்துவமும் புறக்கணிக்கத்தக்கதே. மேலும் அவை பெரும்பாலும் பெரிய நிறுவனங்கள் மீது ஏதாவது ஒரு வழியில் சார்ந்திருப்பவை.

பெரிய நிறுவனங்கள் மட்டுமே நிர்ணயகரமான முக்கி யத்துவம் உடையவை. இங்கு ''சங்கமயமாக்குவதற்கான'' தொழில்நுட்ப, கலாசார சாதனங்களும் சக்திகளும் நிலவு

கின்றன. இங்கு இல்லாமலிருப்பது என்னவென்றால், சுரண்டலாளர் பால் தயவுதாட்சண்யமின்றிக் கடுமையுடன் நடந்து இந்த சக்திகளையும் சாதனங்களையும் இயங்க வைக்கும் ஒரு புரட்சிகரமான ஆட்சி அதிகாரத்தின் உறுதியான வைராக்கியமான முன்முயற்சியே.

தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆள்பலத்திலும், பொதுவாக அறிவுத்துறை நபர்கள் விஷயத்திலும் ஒரு நாடு தாழ்ந்த நிலையில் இருக்குமானால், கூடியவரை முன்பாக, கூடியவரை உறுதியாகக் கட்டாயமாகச் சேர்ந்திணைவதை ஆணையிடுவது அந்தளவு அவசரமானது. இந்த ஆணையைச் செயல்படுத்தும் போது மிகப் பெரிய, மிகமிகப் பெரிய நிறுவனங்களிலிருந்து தொடங்க வேண்டும். காரணம் இணைவு தான் அறிவுத்துறை நபர்களை சிக்கனப்படுத்தி அவர்களை முழுமையாகப் பயன்படுத்துவதையும், மேலும் சரியாகப் பங்கீடு செய்வதையும் சாத்தியமாக்கும். 1905க்குப் பிறகு, ஜார் அரசாங்கத்தின் கீழ், அந்த அரசாங்கம் எழுப்பிய ஆயிரக்கணக்கான தடைகளை எதிர்த்து, ஒதுக்கமான இடங்களிலுள்ள ருஷ்ய விவசாயிகளும்கூட எல்லா விதமான சங்கங்களையும் உருவாக்குவதில் மிகப் பெரிய முன்னேற்ற சாதனையைப் புரிய முடிந்ததென்றால் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறை, வணிகம் சேர்த்திணைக்கப்படுவதை சில மாதங்களில், ஏன் முன்பே கூட அமுலாக்க முடியும் என்பது தெளிவு. ஆனால் ''கீழ்மட்ட மக்கள்'', ஜனநாயகம், தொழிலாளர், இதர ஊழியர்களின் ஆதரவு, பங்குபற்றல், நலன் மற்றும் சாதகத்தைச் சார்ந்து நின்று, கண்காணிப்பை அமுல் நடத்துமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளும் ஓர் உண்மையான புரட்சிகர ஜனநாயக அரசாங்கம் இந்த நோக்கத்துடன் இணைவை கட்டாயப்படுத்தும் பட்சத்தில் இது நடைபெறும்.

நுகர்வு முறையை ஒழுங்கியக்கம் செய்தல்

போரானது எல்லாப் போரிடும் நாடுகளையும் பல நடுநிலைமை நாடுகளையும் நுகர்வு முறையை ஒழுங்கியக்கம் செய்வதில் இறங்குமாறு கட்டாயப்படுத்தியுள்ளது. ரொட்டிக் கார்டுகள் வழங்கப்பட்டு வழக்கத்தில் வந்துவிட்டன. இதனை

அடுத்து இதர ரேஷன் கார்டுகளும் தோன்றிவிட்டன. ருஷ்யா இதில் விதிவிலக்கல்ல, அதுவும் ரொட்டி கார்டுகள் வழங்கி யுள்ளது.

இதை ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டு நாம் பெரும் விபத்தை எதிர்த்துப் போராடுவதில் குறைந்தபட்ச சீர்திருத்தங்களோடு அடங்கிவிடும் பிற்போக்கு அதிகார வர்க்க முறைகளேயும், தமது பெயரை நியாயப்படுத்துவ தற்கு பழைய காலாவதியான அமைப்புடன் வன்மையாக முறித்துக் கொள்வதையும் சாத்தியமான அளவுக்கு மிகத் துரிதமான முன்னேற்றத்தை சாதனையாக்குவதையும் நேரடி நோக்கமாகக் கொண்ட புரட்சிகர-ஜனநாயக முறைகளேயும் பரஸ்பரம் மிகவும் எடுப்பாக ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

இந்த ரொட்டிக் கார்டு—தற்காலத்திய முதலாளித்துவ நாடுகளில் நுகர்வை ஒழுங்கியக்கம் செய்யும் தனிமாதிரி உதாரணம்—(உச்சபட்சம்) ஒரே ஒரு காரியத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அதை சாதனையாக்குகிறது, அதாவது கிடைக்கக் கூடிய தானியங்களை ஒவ்வொருவருக்கும் அவரது பங்கைத் தரும் வகையில் வினியோகம் செய்கிறது. நுகர்வுக்கான ஓர் அதிகபட்ச வரம்பு இன்னும் எல்லா உணவுப் பொருட்களுக்கும் நிலைநாட்டப்படவில்லை, ஆனல் பிரதானமான உணவுப் பண்டங்களுக்கு, ''எல்லோரும்'' பயன்படுத்தும் வகைகளுக்கு மட்டுமே நிலைநாட்டப்பட்டுள் ளது. இது அவ்வளவே. வேறு எதையும் செய்யும் உத்தேசம் இல்லை. கிடைக்கக்கூடிய தானியங்களின் சேமிப்பு அதிகார வர்க்க முறையில் கணக்கிடப்படுகிறது. பிறகு நபர் விகித அடிப்படையில் பங்கிடப்படுகிறது. ரேஷன் நிர்ணயிக்கப் பட்டு புகுத்தப்படுகிறது. இதோடு விவகாரம் முடிந்து விடு கிறது. ஆடம்பரப் பொருள்கள் பாதிக்கப்படுவதில்லை. காரணம் அவை ''எப்படியும்'' பற்றுக்குறையானவை, ''எப் படியும்'' அதிக விலை உள்ளவை, ''மக்களுக்கு'' எளிதில் கிட்டாதவை. எனவே, விதிவிலக்கின்றி எல்லா போரிடும் நாடுகளிலும் ஜெர்மனியிலும் கூட—அது நுகர்வை மிகவும் கவனத்தோடு, விதிகண்டிப்புடன், கறாராக ஒழுங்கியக்கம் செய்துள்ள முன்மாதிரியாக விளங்குகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது என்பது கண்கூடு—ஜெர்மனியிலும் கூட செல்வந்தர்கள் எல்லா ''ரேஷன்'' ஏற்பாட்டையும் ஓயாது

மீறி வருவதைக் காண்கிறோம். இதையும் ''எல்லோரும்'' அறிவார்கள், ''எல்லோரும்'' இதைப் பற்றி கேலியுடன் பேசுகிறார்கள். ஜெர்மன் சோஷலிஸ்டுப் பத்திரிகைகளில், சில சமயங்களில் முதலாளித்துவப் பத்திரிகைகளிலும் கூட, ஜெர்மன் தணிக்கை முறையின் மூர்க்கமான ராணுவக் கெடுபிடி இருந்த போதிலும், செல்வந்தர்களின் ''உணவுவகைப் பட்டியல்'' பற்றிய செய்திகளை அடிக்கடி பார்க்கிறோம். இவை, செல்வந்தர்கள் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட ஆரோக்கிய விடுதியில் இருந்து (ஏராளமாகப் பணம் வைத்திருப்போர் எல்லோரும் நோயுற்றிருப்பதாக இங்கு சென்று) வேண்டிய அளவுக்கு வெண் ரொட்டி பெறமுடிந்திருக்கிறது என்பதையும், செல்வந்தர்கள் எவ்வாறு, மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு மாறாகச் சிறந்ததும் அரியதுமான ஆடம்பரப் பொருட்களைப் பெறுகிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறுகின்றன.

ஒரு பிற்போக்கு முதலாளித்துவ அரசு, முதலாளித்துவத்தின் நெடுந்தூண்களை, கூலி அடிமை முறையை, செல்வந்தர்களின் பொருளாதார மேலாதிக்கத்தை அரித்தழிக்க அஞ்சுகிறது. தொழிலாளர் மற்றும் பொதுவாக உழைக்கும் மக்களின் முன்முயற்சியை ஊக்குவிக்க அது அஞ்சுகிறது. அவர்களை மேலும் கண்டிப்பான தோரணைக்குத் தூண்டிவிடவும் அது அஞ்சுகிறது. அத்தகைய அரசு ரொட்டிக் கார்டுகள் அளவில் முற்றிலும் திருப்தியடைந்துவிடும். அத்தகைய அரசு தான் மேற்கொள்ளும் நடவடிக்கை எதிலும் முதலாளித்துவத்தை வலுப்படுத்துவது, அது அரித்தழிக்கப்படுவதைத் தடுப்பது என்ற பிற்போக்கு நோக்கத்தை ஒரு கணமும் காணப்பெறாமல் இருக்காது. மேலும் பொதுவாகப் ''பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்கம் செய்வதிலும்'', குறிப்பாக நுகர்வை ஒழுங்கியக்கம் செய்வதிலும் அது மக்களுக்கு உணவளிக்க அறவே அவசியமான அத்தகைய நடவடிக்கைகளோடு நின்றுவிடும். செல்வந்தர் மீது கண்காணிப்பைச் செயல்படுத்துவது மூலமும், அதிக வசதியுடன் இருக்கும், சலுகைகள் பெற்று நன்கு உண்டு, சமாதான காலத்தில் அளவுக்குமேல் உண்டுவரும் நபர்கள் மீது போர்க்காலத்திய பளுவின் மேலதிகமான பகுதியைச் சுமத்துவது மூலமும்

நுகர்வை மெய்யாகவே ஒழுங்கியக்கம் செய்வதற்கான எதை யும் அது செய்ய விரும்பவில்லை.

போர் மக்களுக்கு எதிரே வைத்துள்ள பிரச்சினைக்கான பிற்போக்கு அதிகார வர்க்க முறையிலான தீர்வு ரொட்டிக் கார்டு அளவில் வரையறுக்கப்படுகிறது. மக்களுக்கு உயிர் வளிக்க அறவே அவசியமான ''பொதுவான'' உணவுப் பண் டங்களை சமமாகப் பங்கீடு செய்வதோடு இது அடங்கிவிடு கிறது. அதிகாரவர்க்கப் பிற்போக்கு நோக்கத்தை இது கிஞ் சிற்றும் கைவிடுவதில்லை. ஏழைகள், பாட்டாளிகள், மக்கள் திரளின் (''demos'') முன்முயற்சியை ஊக்குவிக்கக் கூடாது, செல்வந்தர் மீது அவர்கள் கண்காணிப்பைச் செயல்படுத்த அனுமதிக்கக் கூடாது; ஆடம்பரப் பொருட்கள் கொண்டு தம்மைத்தாமே ஈடு செய்து கொள்ளச் செல்வந்தருக்கு சாத்தியமான அளவு எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ் வளவு அதிக வகைதுறைகளை விட்டு வைக்க வேண்டும் என் பதே இதன் நோக்கம். ருஷ்யா ஒரு புறமிருக்க, மிகப் பெரு மளவிலான வகைதுறைகள் எல்லா நாடுகளிலும் ஜெர்மனி யிலும் கூட விட்டு வைக்கப்பட்டுள்ளன என்று நாம் மீண்டும் கூறுகிறோம். ''சாமான்ய மக்கள்'' பட்டினியால் வாடுகிறார் கள். அதே போதில் செல்வந்தர் ஆரோக்கிய விடுதிகளுக்குச் சென்று அதிகாரபூர்வமான அற்பமான ரேஷனைப் பிற இடங் களில் இருந்து பெறும் எல்லா வகையான ''கூடுதல்'' பண் டங்கள் மூலம் குறை நிரப்பிக்கொள்கிறார்கள், தம்மைக் கட்டுப்படுத்த அனுமதிப்பதில்லை.

சுதந்திரம், சமத்துவம் என்ற பேரில் ஜாராட்சிக்கு எதிராக இப்பொழுதுதான் ஒரு புரட்சியை நடத்தியுள்ள ருஷ்யா வில், அதன் மெய்யான அரசியல் நிறுவனங்களைப் பொருத்த வரை உடனே ஒரு ஜனநாயகக் குடியரசு ஆகிவிட்ட ருஷ்யா வில், செல்வந்தர் ''ரொட்டிக் கார்டுகளை'' எவ்வளவு எளி தான முறையில் ஏற்பாட்டை மீறிப் பெறுகிறார்கள் என்பதை எல்லோரும் காண்கிறார்கள். இதுதான் குறிப்பாயும் மக்கள் மனதில் பாய்கிறது, குறிப்பாயும் மக்களது அதிருப்தியை, எரிச்சலை, கோபத்தை, ஆத்திரத்தை எழுப்புகிறது. செல் வந்தர்கள் இதை மிகவும் எளிதில் செய்துவிடுகிறார்கள். குறிப்பாயும் ஒருவருக்கு ''செல்வாக்குபலம்'' இருக்குமானால் (செல்வந்தர்களுக்கு மட்டுமே இருக்கிறது)

''கடை முகப்பின் கீழேயே'' மிகவும் உயர்ந்த விலைக்கு எதையும் பெரிய அளவிலும் கூடப் பெற முடியும். மக்கள்தான் பட்டினியால் வாடுகிருர்கள். நுகர்வின் ஒழுங்கியக்கம் மிகவும் குறுகியதான, அதிகார வர்க்க பிற்போக்கு வரம்புக்குள் கட்டுண்டு கிடக்கிறது. இந்த ஒழுங்கியக்கத்தை மெய்யாகவே ஒரு புரட்சிகர-ஜனநாயக அடிப்படையில் வைக்க அரசாங்கத்துக்குக் கிஞ்சிற்றும் உத்தேசம் இல்லை, அவ்வாறு செய்வது பற்றி அது சிறிதும் அக்கறை கொள்ளவில்லை.

கியூ வரிசைகளால் ''எல்லோரும்'' அவதிப்படுகிருர்கள். ஆனல் செல்வந்தர்கள் தமது வேலைக்காரர்களைக் கியூ வரிசையில் நிற்பதற்கு அனுப்புகிருர்கள், இதற்காகத் தனி வேலைக்காரர்களைக்கூட அமர்த்துகிருர்கள்! இதுதான் ''ஜனநாயகம்''!

நாடு சொல்ல முடியாத இடுக்கண்களால் துயருறும் ஒரு சமயத்தில், ஒரு புரட்சிகர-ஜனநாயகக் கொள்கை என்பது நெருங்கிவரும் பெரும் விபத்தை எதிர்க்க ரொட்டிக் கார்டுகளுடன் நின்றுவிடுவதல்ல—மாருக, முதலில் மக்கள் அனைவரையும் நுகர்வாளர் சங்கங்களில் கட்டாயமாக ஒழுங்கமைக்கவேண்டும். இல்லையேல் நுகர்வுமீதான கண்காணிப்பை முழுமையாகச் செயல்படுத்த முடியாது. இரண்டாவதாக, செல்வந்தருக்குக் கட்டாய உழைப்புச் சேவையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், இந்த நுகர்வாளர் சங்கங்களுக்கு அவர்கள் ஊதியம் பெருமல் செயலாளர் துறையினது போன்ற பணிகளைப் புரியுமாறு செய்ய வேண்டும். மூன்ருவதாக, முற்ற முழுமையான நுகர்வுப் பண்டங்கள் அனைத்தையும் மக்களிடையே சமமாக வினியோகம் செய்ய வேண்டும், அதன் மூலம் போரின் சுமைகளை மெய்யாகவே சமமான முறையில் பகிர்ந்து கொள்ள முடியும். நாலாவதாக, செல்வந்தர்களின் நுகர்வு மீது மக்களிடையே உள்ள ஏழ்மை வர்க்கங்கள் கண்காணிப்பை அமுல் செய்யும் வழியில் கண்காணிப்பு ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

இந்தத் துறையில் மெய்யான ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். மக்களிடையே இல்லாக்குறையுடன் இருக்கும் வர்க்கங்கள் கண்காணிப்பைச் செயல்படுத்துவதில் மெய்யான புரட்சிகர உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வது, கிடைக்கக்கூடிய அறிவுஜீவி சக்திகளைச்

செயல்புரிய ஈடுபடுத்துவதற்கும், மக்கள் முழுமையின் மெய்யான புரட்சிகர ஆற்றல்களை வளர்ப்பதற்கும் மிகப் பெரிய தூண்டுதலாக இருக்கும். எனினும் இப்போது, குடியரசு பாணி மற்றும் புரட்சிகர-ஜனநாயக ருஷ்யாவின் அமைச்சர்கள், இதர எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் உள்ள தமது சக அமைச்சர்களைப் போலவே ''மக்களின் நன்மைக்காகப் பொதுவாகப் பாடுபடுவது'' பற்றியும், ''எல்லா முயற்சிகளும் எடுத்துவருவது'' பற்றியும் பகட்டாரவாரமான உரைகள் நிகழ்த்துகிறார்கள். ஆனால் இந்தப் பேச்சின் பாசாங்குத் தன்மையை மக்கள் கண்டும், உணர்ந்தும், அறிந்தும் வருகிறார்கள்.

இதன் விளைவாக எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. தடுக்க முடியாதபடி குழப்பம் பரவி வருகிறது. ஒரு பெரும் விபத்து நெருங்கி வருகிறது. ஏனெனில் நமது அரசாங்கம், கர்னீலவ், ஹிண்டன்பர்கின் பொதுவான ஏகாதிபத்திய முறையில் தொழிலாளர்களுக்குப் போர்க்கால கடுஞ்சிறை தண்டனையைப் புகுத்த முடியாது. புரட்சியின் மரபுகள், நினைவுகள், மீதமிச்சங்கள், வழக்கங்கள், நிறுவனங்கள் மக்கள் மத்தியில் மிகவும் உயிர்த்துடிப்புடன் இன்னும் நிலவுகின்றன. நமது அரசாங்கம் ஒரு புரட்சிகர-ஜனநாயகத் திசையில் மெய்யாகவே காரியகரமான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க விரும்பவில்லை. ஏனெனில் அது முதலாளி வர்க்கத்துடனான அதன் சார்பு நிலையாலும், முதலாளி வர்க்கத்தோடான அதன் ''கூட்டணி''யாலும், அவர்களது மெய்யான தனி உரிமைகள் மீது தலையிடுவதிலான அதன் அச்சத்தாலும் முழுநிறைவாக நச்சுப்படுத்தப்பட்டிருக்கிறது, முழுநிறைவாக சிக்குண்டு கிடக்கிறது.

ஜனநாயக அமைப்புகளின் வேலையை அரசாங்கம் சீர்குலைக்கிறது

பெரும் விபத்தையும் பஞ்சத்தையும் எதிர்த்துப் போரிடுவதற்கான பல்வேறு வழிகள் மற்றும் சாதனங்களை நாம் ஏற்கெனவே பரிசீலித்தோம். ஒரு புறம் ஜனநாயகவாதிகளுக்கும் மறுபுறம் அரசாங்கம் மற்றும் அதை ஆதரிக்கும் சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளின் கூட்டணிக்கும்

இடையிலான முரண்பாடுகள் சமரசப்படுத்த முடியாதவை யாக இருப்பதை எங்கும் கண்டோம். இந்த முரண்பாடுகள் எமது விளக்கத்தில் மாத்திரம் அன்றி, எதார்த்தத்திலும் நிலவுகின்றன. அவற்றின் சமரசப்படுத்தவியலாத தன்மையை மக்கள் முழுமையையும் பாதிப்புச் செய்யும் மோதல் கள் உள்ளபடியே எடுத்துக் காட்டுகின்றன. இதை நிரூபிப் பதற்குப் புரட்சியின் ஆறு மாத வரலாற்றின் மிகவும் தனி மாதிரி ''விளைவுகளை'', படிப்பினைகளை நாம் நினைவு கூர்ந் தால் மட்டுமே போதும்.

பல்ச்சீன்ஸ்கி ''ஆட்சி''யின் வரலாறு ஒரு படிப்பினை. பெஷெஹோனவ் ''ஆட்சி'' மற்றும் வீழ்ச்சி பற்றிய வரலாறு இன்னொரு படிப்பினை.

பெரும் விபத்தையும் பட்டினியையும் எதிர்த்துப் போரிட வென்று மேலே விவரிக்கப்பட்ட நடவடிக்கைகள் மக்களைச் ''சங்கங்களில் திரட்டுவதை'' (கட்டாயப்படுத்தும் அளவுக் கும் கூட) சர்வாம்ச ரீதியில் ஊக்குவிப்பதுடன் முடிந்து விடு கின்றன. இதில் முதன்மையாயும் ஜனநாயகவாதிகள் அதா வது மக்களில் பெரும்பான்மையோர், எல்லாவற்றுக்கும் மேலாக ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், தொழிலாளர், விவசாயி கள், விசேஷமாயும் ஏழை விவசாயிகள் சங்கங்களில் திரட் டப்பட வேண்டும். போரினால் விளைந்த ஈடிணையற்ற இடர்ப் பாடுகள், சுமைகள், கொடுமைகளைச் சமாளிக்கும் பொருட்டு மக்கள் தாமே தன்னியல்பாக இந்தப் பாதையைப் பின் பற்றத் தொடங்கினர்.

மக்கள் தம் விருப்பப்படியும் சுயேச்சையாகவும் ''சங் கத்தில் திரள்வதைத்'' தடுத்து இடையூறு செய்ய ஜாராட்சி அனைத்தையும் செய்தது. ஆனால் ஜாரிச முடியாட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு ஜனநாயக அமைப்புகள் தோன்றி ருஷ்யாவில் எங்கும் துரிதமாக வளரத் தொடங்கின. பெரும் விபத்தை எதிர்த்த போராட்டம், தன்னியல்பாக உதித் தெழுந்த ஜனநாயக அமைப்புகளால், எல்லா வகையான வழங்கு கமிட்டிகள், உணவுக் கமிட்டிகள், எரிபொருள் கவுன்சில்கள் ஆகியவற்றால் நடத்தப்படலாயிற்று.

நமது புரட்சியின் ஆறு மாத வரலாறு முழுதிலுமான குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், நாம் பரிசீலனை செய்யும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரை, தன்னைத்

தானே ஒரு குடியரசு பாணி, புரட்சிகர அரசாங்கம் என்று அழைத்துக் கொள்ளும் ஓர் அரசாங்கம், ''புரட்சிகர ஜன நாயகத்தின் அதிகாரபூர்வமான அமைப்புகளின்'' பேரில் மென்ஷிவிக்குகளாலும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் ஆதரிக்கப்பட்டுவரும் இந்த அரசாங்கம், இந்த ஜனநாயக அமைப்புகளை எதிர்த்துப் போராடி அவற்றைத் தோற்கடித்ததாகும்!!

இந்தப் போராட்டம் மூலம் பல்ச்சீன்ஸ்கிக்கு ருஷ்யா முழுவதிலும் மிகவும் பரவலான, மிகவும் வருந்தத்தக்க வசைப்பெயர் கிட்டியது. அவர் பகிரங்கமாக முன்வராமல் அரசாங்கத்தின் பின்னே நின்று செயல்பட்டார் (''மக்களுக்கு'' என்று விருப்பத்தோடு தெஸெரெத்தேலியை முன்னால் தள்ளிவிட்டு அதே பொழுதில் தாமே முக்கியமான எல்லா அலுவல்களையும் ஓசைப்படாமல் ஏற்பாடு செய்து கொள்ளும் காடேட்டுகள் பொதுவாகச் செயல்பட விரும்புவது இவ்வாறே). தன்னியல்பாக உருவாக்கப்பட்டதான ஜனநாயக ஸ்தாபனங்கள் மேற்கொண்ட காரியகரமான ஒவ்வொரு நடவடிக்கையையும் இடையூறு செய்து தடுத்தார் பல்ச்சீன்ஸ்கி. ஏனெனில் கீத் கீத்திச்சுகளின் மிகையான லாபங்களையும் தான்தோன்றித்தனத்தையும் ''ஊறுபடுத்தாமல்'', காரியகரமான எந்த நடவடிக்கையும் சாத்திய மல்ல. உண்மையில் பல்ச்சீன்ஸ்கி கீத் கீத்திச்சுகளின் விசுவாசமிக்க ஆதரிப்பாளரும் அடியாளும் ஆவார். பல்ச்சீன்ஸ்கி தன்னியல்பாக உருவாக்கப்பட்ட ஜனநாயக அமைப்புகளின் உத்தரவுகளை நேரடியாக ரத்துச் செய்யும் அளவுக்குச் சென்றார். இந்த விவரம் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது.

பல்ச்சீன்ஸ்கி பல மாதங்கள் ''ஆட்சி புரிந்தார்'', அப்போது தெஸெரெத்தேலி, ஸ்கோபெலெவ் மற்றும் செர்னோவ் ''அமைச்சர்களாக'' இருந்தார்கள். அவரது ''ஆட்சி'' யின் வரலாறு முழுதுமே அடிமுதல் முடிவரை ஒரு கோரமான இழிசெயலாக இருந்தது. முதலாளிகளைத் திருப்திப்படுத்தவும் அவர்களது கேவலமான பேராசையை நிறைவு செய்யவும் வேண்டி மக்களின் சித்தமும் ஜனநாயகவாதிகளின் முடிவுகளும் குலைக்கப்பட்டன. பல்ச்சீன்ஸ்கியின் ''வீரச் செயல்களில்'' மிகவும் அற்பமான ஒரு பகுதியே பத்திரிகை

களுக்குக் கிடைத்திருந்தது என்பது திண்ணம். பஞ்சத்தினை எதிர்த்த போராட்டத்தை அவர் எவ்வாறு தடை செய்தார் என்பது பற்றிய ஒரு முழுமையான விசாரணையைப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு மெய்யான ஜனநாயக அரசாங்கத்தால் மட்டுமே நடத்த முடியும். அது ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்று பல்ச்சீன்ஸ்கி மற்றும் அவரைப் போன்றவர்களின் எல்லாச் செயல்களையும் எதையும் மறைக்காமல் மக்களின் நியாயத் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கும் போதுதான் இதைச் செய்ய முடியும்.

பல்ச்சீன்ஸ்கி ஒரு விதிவிலக்கு, எப்படியும் அவர் விலக்கப் பட்டுவிட்டார் அல்லவா என்று ஒருவேளை வாதம் செய்யலாம்.... ஆனால் உண்மையில் பல்ச்சீன்ஸ்கி விதிவிலக்கு அல்ல, மாறாகப் பொதுவிதியாகும். அவரை விலக்கியதால் நிலைமை எவ்வகையிலும் மேம்படவில்லை. அவரது இடத்தில் வேறு பெயர்களையுடைய அதே விதமான பல்ச்சீன்ஸ்கிகள் அமர்த்தப்பட்டார்கள். முதலாளிகளின் ''செல்வாக்கு'' அனைத்தும் முதலாளிகளைத் திருப்திப்படுத்துவதற்காகப் பட்டினியை எதிர்த்து நடத்தும் போராட்டத்தைக் குலைக்கும் கொள்கை முழுதும் அலுங்காமல் அப்படியே நீடித்தன. காரணம் கேரென்ஸ்கி வகையறு, முதலாளிகளின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு திரை மட்டுமே.

இதற்கு மிகவும் எடுப்பான சான்று உணவுத் துறை அமைச்சர் பெஷெஹோனவின் ராஜினமாவாகும். பெஷெஹோனவ் மிகமிக மிதமான நரோத்னிக்கு. ஆனல் உணவு வழங்கீடைக் கொண்டு செலுத்துவதில் அவர் ஜனநாயக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டும் அவற்றின் ஆதரவைப் பெற்றும் நேர்மையாக வேலை செய்ய விரும்பினர். பெஷெஹோனவின் வேலை அனுபவம் மற்றும் அவரது ராஜினமா மிகவும் அக்கறைக்குரியவை. காரணம் இந்த மிகவும் மிதமான நரோத்னிக்கு, ''மக்கள்-சோஷலிஸ்டுக்'' கட்சியின் இந்த உறுப்பினர் முதலாளிகளுடன் எந்த ஒரு சமரசத்தையும் ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்தார். இருந்த போதிலும் அவர் ராஜினமாச் செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்! ஏனெனில், முதலாளிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் குலாக்குகளைத் திருப்திப்படுத்துவதற்காகக் கேரென்ஸ்கி அரசாங்கம் தானியத்தின் நிர்ணய விலையை உயர்த்தியது!

ஸ்வபோத்னயா ஷீஸ்ன்[28] செய்திப் பத்திரிகையின் செப்டம்பர் 2ந் தேதிய இதழ் 1ல் இந்த நடவடிக்கையையும் இதன் உட்பொருளையும் எம். ஸ்மித் பின்வருமாறு வருணிக்கிறார்:

''நிர்ணய விலைகளை உயர்த்துவதென்று அரசாங்கம் முடிவு செய்வதற்குச் சில நாட்கள் முன்னதாக, தேசிய உணவுக் கமிட்டியில் பின்வரும் காட்சி நடிக்கப்பட்டது: ஒரு வலது சாரியும், தனியார் வணிகத்தின் நலன்களை மிகப்பிடிவாதமாகத் தாங்கி ஆதரிப்பவரும், தானிய ஏகபோகத்தினையும், பொருளாதார விவகாரங்களில் அரசுத் தலையீட்டையும் தாட்சண்யமின்றி எதிர்ப்பவருமான ரலோவிச் தானியத்தின் நிர்ணய விலைகள் விரைவில் உயர்த்தப்படும் என்பதைத் தாம் புரிந்து கொண்டதாகச் சொகுசான புன்சிரிப்புடன் பகிரங்கமாக அறிவித்தார்.

''தொழிலாளர், படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்தின் ஓர் உறுப்பினர் இதற்குப் பதில் அளித்தார். இந்த விதமான ஒன்று இருப்பது பற்றித் தனக்கு எதுவுமே தெரியாதென்றார். ருஷ்யாவில் புரட்சி நீடிக்கும் வரையில் இத்தகைய செயல் நடக்க முடியாது என்றார். எப்படியும், அதிகாரபூர்வமான ஜனநாயக அமைப்புகளான பொருளாதாரக் கவுன்சில் மற்றும் தேசிய உணவுக் கமிட்டியை முதலில் கலந்தாலோசியாமல் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கையை எடுக்க முடியாது என்று சாற்றினார். இந்த அறிவிப்பை விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்தின் உறுப்பினர் ஆதரித்தார்.

''ஆனால் அந்தோ, இந்த எதிர்வாக்கிற்கு எதார்த்த நடப்பு ஒரு மிகவும் கடுமையான திருத்தத்தைக் கொண்டு வந்தது! செல்வந்த நபர்களின் பிரதிநிதியின் கூற்றே சரியானது என்றும் ஜனநாயகவாதிகளின் பிரதிநிதிகளின் கூற்று அல்ல என்பதும் நிதர்சனமாயிற்று. ஆனால் ஜனநாயகவாதிகளின் பிரதிநிதிகள் இத்தகைய தாக்குதலின் சாத்தியக்கூறையே ஆத்திரத்துடன் மறுத்த போதிலும் ஜனநாயக உரிமைகள் மீது தாக்குதல் தொடுக்கத் தயாரிப்புகள் நடந்து வருவது குறித்து அவருக்கு அருமையாகத் தகவல் தெரிந்திருந்தது.''

எனவே, தொழிலாளர் பிரதிநிதியும் விவசாயிகள் பிரதிநிதியும் ஒருங்கே மிகப் பெரும்பான்மையான மக்களின் சார்பில் தமது கருத்தைத் தெளிவாகக் கூறுகின்றனர். இருப்பினும் கேரென்ஸ்கி அரசாங்கம் இந்தக் கருத்துக்கு எதிராக, முதலாளிகளின் நலன்களுக்கு ஆதரவாகச் செயல்புரிகிறது!

முதலாளிகளின் பிரதிநிதியான ரலோவிச் ஜனநாயக வாதிகளின் பின்னுல் அருமையான தகவல்களைப் பெறமுடிந் தது என்பது வெளியாயிற்று. இதே போன்று முதலாளித் துவச் செய்திப் பத்திரிகைகளான ரேச் மற்றும் பிர்ஷோவ்கா[29] கெரென்ஸ்கி அரசாங்கத்தின் செயல்கள் பற்றியதான மிக வும் சிறந்த தகவலைப் பெற்றன என்பதை நாம் எப்போதும் கண்டுரைத்துள்ளோம், இப்போதும் கண்டுரைக்கிருேம்.

இந்த அருமையான தகவலை அவர்கள் வைத்திருப்பது எதைக் காட்டுகிறது? முதலாளிகள் வசம் அவர்களது சொந்த ''செயல்மார்க்கங்கள்'' உள்ளன என்பதையும், உண்மையில் அவர்கள் ஆட்சி அதிகாரத்தைத் தம் கரங்களில் வைத்திருக் கிருர்கள் என்பதையும் கண்கூடாகக் காட்டுகிறது. கேரென்ஸ்கி ஒரு பொம்மை; தமக்கு அவசியம் என்ற பொழுது அவர்கள் அதைப் பயன்படுத்துகிருர்கள். விரல் விட்டெண்ணத்தக்க ஒரு சில செல்வந்தர் லாபங்களுக்காக லட்சக் கணக்கான தொழிலாளர், விவசாயிகளின் நலன்கள் பலியிடப்பட்டதாகத் தெரிகிறது.

மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தக் கொடுமைக்கு நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் எவ்வாறு எதிர்ச்செயலாற்றுகின்றனர்? இதற்குப் பிறகு கேரென்ஸ்கிக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் உற்ற ஒரே இடம் சிறைச்சாலைதான் என்று கூறி அவர்கள் தொழி லாளருக்கும் விவசாயிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விட்டார் களா?

கடவுள் தடுப்பாராக! சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் தமது ''பொருளாதார இலாகா'' மூலம் நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட கண்டிப்பான தீர் மானத்தை ஏற்பதோடு அமைந்தனர்! கேரென்ஸ்கி அரசாங் கம் தானிய விலைகளை உயர்த்தியது ''ஒரு சீரழிவான நடவடிக்கை; இது உணவு வழங்கீடு மற்றும் நாட்டின் பொரு ளாதார வாழ்வு முழுதின் மீதும் ஒருங்கே கடும் தாக்கு தல் தொடுக்கிறது,'' இந்த சீரழிவான நடவடிக்கைகள் சட்டத்தை நேரடியாக ''மீறுவதன்'' மூலம் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் இத்தீர்மானத் தில் சாற்றுகிருர்கள்!

சமரசம், கேரென்ஸ்கியுடன் கூடிக்குலாவுதல், அவரைத்

''தப்பித்துகொள்ள விட'' விரும்புதல் ஆகியவை கொண்ட கொள்கையின் விளைவுகள் இத்தகையனவே!

அரசாங்கம் செல்வந்தர், நிலப்பிரபுக்கள், முதலாளி களின் நலன்களுக்காக சட்டத்தை மீறி ஒரு நடவடிக்கையை மேற்கொள்கிறது. இது கண்காணிப்பு, உணவு வழங்கீடு, மிகவும் தள்ளாடும் நிதிகளைத் திடப்படுத்தல் ஆகிய விவகாரம் முழுவதையும் சீரழிக்கிறது. இருப்பினும் சோஷலிஸ்டு-புரட்சியாளரும் மென்ஷிவிக்குகளும் வாணிக மற்றும் தொழில்துறை வட்டங்களுடன் இணக்கம் பற்றித் தொடர்ந்து பேசுகிறார்கள். திரேஷென்கோவுடன் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள், கேரென்ஸ்கி ''தப்பித்துக் கொள்ளும்படி'' விடுகிறார்கள். ஆட்சேபணைகளை தெரிவிக்கும் காகிதத் தீர்மானத்தோடு நின்றுவிடுகிறார்கள். இதை அரசாங்கம் மிகவும் அமைதியாகக் காகிதக் கட்டுகளில் கட்டி ஒதுக்கிவைக்கிறது!!

சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் மக்களுக்கும் புரட்சிக்கும் துரோகம் இழைத்துவிட்டார்கள் என்பதையும், போல்ஷிவிக்குகள், மக்கள் திரளுக்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளின் மக்கள் திரளுக்கும் கூட மெய்யான தலைவர்களாகி வருகிறார்கள் என்பதையும் பற்றிய மெய்விவரத்தை இது மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

ஏனெனில், போல்ஷிவிக் கட்சியின் தலைமையில் பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை வென்று பெறுவது மூலம் மட்டுமே கேரென்ஸ்கி வகையறாவின் அட்டூழியச் செயல்களுக்கு முடிவுகட்ட முடியும்; கேரென்ஸ்கியும் அவரது அரசாங்கமும் செயல் குலைவுசெய்துவரும் ஜனநாயக முறையிலான உணவு வினியோகம், வழங்கல், மற்ற இதர அமைப்புகளின் வேலை மீண்டும் நிலைநாட்டப்படும்.

போல்ஷிவிக்குகள் மக்கள் முழுமையின் நலன்களது பிரதிநிதிகளாகச் செயல்புரிந்து வருகிறார்கள். மேலே சுட்டப்பட்ட உதாரணத்தில் இதை மிகவும் தெளிவாகக் காணலாம். அந்த நலன்களாவன உணவு வினியோகத்தையும் வழங்கலையும் உத்தரவாதம் செய்வது, தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மிக அவசர அவசியமான தேவைகளை நிறைவு செய்வதும் ஆகும். சோஷலிஸ்டு-புரட்சியாளர்,

மென்ஷிவிக்குகளின் ஊசலாட்டமான, உறுதியற்ற, உண்மையிலேயே துரோககரமான கொள்கை இருந்த போதிலும் இவற்றைச் செயல்படுத்த வேண்டும். அவர்களது இந்தக் கொள்கை தானிய விலைகளை உயர்த்துவது போன்ற வெட்கங்கெட்ட செயலுக்கு நாட்டைக் கொண்டு வந்துவிட்டது!

நிதித்துறை வீழ்ச்சியும் அதை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளும்

தானியங்களின் நிர்ணய விலைகளை உயர்த்தும் பிரச்சினைக்கு இன்னொரு பக்கம் இருக்கிறது. இந்த விலை உயர்த்தல், காகிதப் பண வெளியிடலில் ஒரு புதிய தாறுமாறான அதிகரிப்பை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை, அதிகரித்த நிதித்துறை ஒழுங்குக் குலைவை, நிதித்துறை வீழ்ச்சி நெருங்கி வருவதை உள்ளடக்குகிறது. காகிதப் பண வெளியிடல் கட்டாயக் கடனின் ஆக மோசமான வடிவமாகும். இது பெரும்பாலும் தொழிலாளரின், மக்கள் திரளின் மிகவும் ஏழ்மைப்பட்ட பகுதிகளின் நிலைமையைப் பாதிக்கிறது. நிதித்துறைக் கோளாறு தோற்றுவிக்கும் பிரதானத் தீம்பு இதுவே. இதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

இந்த நடவடிக்கையைத்தான் சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளின் ஆதரவுடன் கேரென்ஸ்கி அரசாங்கம் கையாண்டு வருகிறது!

மூலதனத்தின் நலன்களுடன் புரட்சிகரமான முறையில் முறித்துக் கொள்வது, உண்மையான ஜனநாயகக் கண்காணிப்பை ஒழுங்கமைப்பது என்ற வழியில் அன்றி, நிதித்துறை ஒழுங்குக் குலைவையும் தவிர்க்க முடியாத நிதித்துறை வீழ்ச்சியையும் எதிர்த்துத் திறம்படப் போரிட வேறுவழி கிடையாது. இந்தக் கண்காணிப்பு முதலாளிகள் மீது "கீழ் மட்டத்தில்" இருந்து வரும் தொழிலாளர், ஏழை விவசாயிகள் செலுத்தும் கண்காணிப்பாகும். இந்த வழி குறித்து இந்த விளக்கத்தின் முந்திய பகுதி நெடுகிலும் குறிப்பிட்டிருக்கிறோம்.

பெருமளவிலான காகிதப் பணம் வெளியிடல் கொள்ளைலாபமடிப்பதை ஊக்குவிக்கும். முதலாளிகள் லட்சக் கணக்கான ரூபிள் சம்பாதிக்க வகை செய்யும். பொருள் உற்பத்தி

யின் மிக அவசியமான விஸ்தரிப்புக்கு மிகப்பெரும் இடர்ப்பாடுகளை விளைக்கும். காரணம் ஏற்கெனவே பொருட்கள், யந்திரங்களின் உயர்ந்த விலை மேலும் மிகப்பெரிய அளவுக்கு வியக்கத்தக்க விரைவில் அதிகரித்து வருகிறது. கொள்ளை லாபம் மூலம் செல்வந்தர் அடையும் செல்வம் ஒளித்து வைக்கப்படும் போது இதைப்பற்றி என்ன செய்ய முடியும்?

பெரிய, மிகப் பெரிய வருமானங்களுக்கு மிக உயர்ந்த வளர்வீத வருமான வரி முறையைப் புகுத்தலாம். இதர ஏகாதிபத்திய அரசாங்கங்களின் உதாரணத்தைப் பின்பற்றி நமது அரசாங்கமும் இந்த முறையினைப் புகுத்தியுள்ளது. ஆனால் இது பெருமளவுக்குக் கற்பனையே, அமுலாகாத சட்டமேயாகும். காரணம் முதலாவதாக, பணத்தின் மதிப்பு வேகவேகமாக விழுந்து வருகிறது. கொள்ளை லாபத்திலிருந்து எந்தளவுக்கு அதிகமான வருவாய்கள் பெறப்படுகின்றனவோ, எந்தளவுக்கு அதிக பாதுகாப்பாக வாணிக ரகசியங்கள் பேணிக்காக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு மேலதிகமாக இந்த வருவாய்கள் ஒளித்து வைக்கப்படுகின்றன.

இந்த வரியைக் கற்பனையாகவன்றி மெய்யாகவே வசூலிப்பதற்குப் பெயரளவில் அன்றி மெய்யான கண்காணிப்பு அவசியம். ஆனால் கண்காணிப்பு அதிகாரவர்க்கத் தன்மையதாக இருக்குமானால் முதலாளிகள் மீதான கண்காணிப்பு சாத்தியமல்ல. காரணம் அதிகாரவர்க்கம் தானே முதலாளி வர்க்கத்தோடு ஆயிரக்கணக்கான இழைகளால் கட்டுண்டு இணைத்துப் பின்னப்பட்டுக் கிடக்கிறது. இதனால்தான் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய அரசுகளில், முடியாட்சிகளும் சரி குடியரசுகளும் சரி, "கட்டாய உழைப்பு சேவையைப்" புகுத்துவது மூலம் மட்டுமே நிதித்துறை ஒழுங்கு பெறப்படுகிறது. இந்தக் கட்டாய உழைப்பு சேவை தொழிலாளர்களுக்குப் போர்க் காலக் கடுஞ்சிறை அல்லது போர்க் கால அடிமைத்தனத்தை உருவாக்குகிறது.

ஏகாதிபத்திய அரசுகளுக்குத் தெரிந்த ஒரே முறை பிற்போக்கு-அதிகாரவர்க்கக் கண்காணிப்புத்தான். இதில் பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஜனநாயகக் குடியரசுகளும் விலக்கல்ல. இது, போரின் சுமைகளைப் பாட்டாளிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மீது திணிக்கும் முறையாகும்.

முதலாளிகளுடன் சண்டை போடாது இருக்கும் பொருட்டு, அவர்களுடனை ''கூட்டணியை'' அழிக்காமல் இருக்கும் பொருட்டு அரசாங்கம் பிற்போக்கு-அதிகார வர்க்கக் கண்காணிப்பைப் புகுத்த நேருகிறது. இதுவே நமது அரசாங்கத்தின் கொள்கையில் காணப்படும் அடிப்படையான முரண்பாடு. அது இந்தக் கண்காணிப்பைப் ''புரட்சிகர-ஜனநாயகக்'' கண்காணிப்பு என்று அழைக்கிறது. ஒவ்வொரு படியிலும் அது மக்களை ஏமாற்றுகிறது. ஜாராட்சியை அண்மையில் வீழ்த்தியுள்ள மக்கள் திரளுக்கு எரிச்சலூட்டுகிறது, ஆத்திரமூட்டுகிறது.

எனினும், புரட்சிகர-ஜனநாயக முறைகளால் மட்டுமே, ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், தொழிலாளர், விவசாயிகள், மக்கள் திரளை சங்கங்களில் ஒழுங்கமைப்பதன் மூலம் மட்டுமே செல்வந்தர் மீது பயனுறுதியுள்ள கண்காணிப்பை நிலைநாட்டுவது சாத்தியம்; வருமானங்களை ஒளித்து வைப்பதை எதிர்த்து மிகவும் வெற்றிகரமான போராட்டம் நடத்துவது சாத்தியம்.

காகிதப் பணம் அளவுக்கு மிஞ்சி வெளியிடப்படுவதைத் தவிர்க்கும் சாதனம் என்ற முறையில் செக்குகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. ஏழைகளைப் பொருத்தவரை இந்த முறையில் எவ்வித முக்கியத்துவமும் இல்லை. காரணம் எப்படியும் அவர்கள் கிடைத்ததைச் செலவழித்து வாழ்கிறார்கள். ஒரு வாரத்தில் அவர்களது ''பொருளாதாரப் புழக்கத்தைப்'' பூர்த்தி செய்து, தாம் சம்பாதிக்க முடிந்த ஒரு சில செப்புக் காசுகளை முதலாளிகளிடம் திரும்பித் தருகின்றனர். செல்வந்தர்களைப் பொருத்தவரை செக்குகளைப் பயன்படுத்துவது பெரும் முக்கியத்துவம் உடையதாக இருக்கலாம். இது விசேஷமாயும் வங்கிகளின் தேசவுடைமையாக்கம், வாணிக ரகசியங்கள் ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளுடன் இணைக்கப்படுமானால் அரசு, முதலாளிகளின் வருவாய்களை மெய்யாகவே கண்காணிப்புச் செய்ய முடியும், மெய்யாகவே அவர்கள் மீது வரிகளை விதிக்க முடியும், நிதி அமைப்பை மெய்யாகவே ஜனநாயகப்படுத்த (அதே சமயம் ஒழுங்குபடுத்த) முடியும்.

முதலாளிகளின் தனியுரிமைகள் மீறப்படுமோ, அவர்களுடனை ''கூட்டணி'' அழிக்கப் பெறுமோ என்ற அச்சம்

இதைத் தடுத்து இடர் செய்கிறது. உண்மையிலேயே புரட்சிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படா விட்டால், கட்டாயப்படுத்தல் மிகவும் தீவிரமாகக் கையாளப்படா விட்டால் முதலாளிகள் எவ்விதக் கண்காணிப்புக்கும் அடங்க மாட்டார்கள், அவர்களது வரவு செலவு விவரங்களை வெளியிட மாட்டார்கள், அதைக் குறித்து ஜனநாயக அரசு "கணக்கு வைப்பதற்காகத்" தம்மிடமுள்ள காகிதப் பண இருப்புக்களை ஒப்படைக்க மாட்டார்கள்.

சங்கங்களில் ஒழுங்குதிரட்டப்பட்டுள்ள தொழிலாளரும் விவசாயிகளும் வங்கிகளை தேசவுடைமையாக்கம் செய்தும், எல்லாச் செல்வந்த நபர்களுக்கும் சட்டபூர்வம் கட்டாயமாக்கப்பட்டுள்ள செக்குகளைப் பயன்படுத்தியும், வாணிக ரகசியங்களை ஒழித்தும், வருவாயை ஒளித்து வைப்போருக்குச் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் தண்டனையை விதித்தும் இதுபோன்ற வழிகளில் மிகவும் சுலபமான முறையில் கண்காணிப்பைப் பயனுறுதியுடனும் சர்வப் பொதுவாயும் செய்ய முடியும். இந்தக் கண்காணிப்பு செல்வந்தர் மீது அமுல் செய்யப்படுவதாகும். இத்தகைய கண்காணிப்பு மூலம் யாரிடம் காகிதப் பணம் இருக்கிறதோ அவர்களிடம் இருந்து, யார் ஒளித்துவைத்திருக்கிறார்களோ அவர்களிடம் இருந்து இப்பணத்தை வெளியிடும் கஜானாவுக்குத் திரும்பக் கிடைக்கும்படி செய்ய முடியும்.

இதற்குப் புரட்சிகரப் பாட்டாளிகளால் தலைமை தாங்கப்படும் ஜனநாயகத்தின் ஒரு புரட்சிகர சர்வாதிகாரம் தேவை. அதாவது ஜனநாயகம் மெய்நடப்பில் புரட்சிகரமாவது இதற்குத் தேவை. இதுவே இந்த விவகாரத்தின் அறுதிக் கூறு. ஆனால் இது நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளுக்குப் பிடிக்கவில்லை. "புரட்சிகர ஜனநாயகத்தின்" கொடியை வீசிக் காட்டுவது மூலம் அவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். அதேபோதில் அவர்கள் முதலாளிகளின் பிற்போக்கு-அதிகாரவர்க்கக் கொள்கையினை உண்மையில் ஆதரிக்கிறார்கள். இந்த முதலாளிகளோ "après nous le déluge"— எமக்குப் பிறகு பிரளயம்!—என்ற விதியால் எப்போதும் வழிநடத்தப்படுகிறார்கள்.

முதலாளித்துவச் சொத்தின் "புனிதத்தன்மை" சம்பந்தமாக, நாம் எவ்வாறு முழுக்க முழுக்க ஜனநாயக விரோதப்

பழக்கங்களில், தப்பெண்ணங்களில் ஊறிக் கிடக்கிறோம் என்பதை நாம் வழக்கமாகக் கவனிப்பதுகூடக் கிடையாது. ஓர் இஞ்சினியரோ வங்கி அலுவலாளரோ ஒரு தொழிலாளியின் வருவாய் மற்றும் செலவு பற்றி, அவரது கூலி மற்றும் அவரது உழைப்பின் உற்பத்தித் திறன் குறித்த தகவலை வெளியிடுவார்களானால் இது முற்றிலும் நியாயமானது, நேர்மையானது என்பதாகக் கருதப்படுகிறது. தொழிலாளியின் ''தனிப்பட்ட வாழ்வில்'' தலையிடுவது என்பதாகவோ, இஞ்சினியர் தம் சார்பில் செய்யும் ''ஒற்றுவேலை அல்லது வேவுதிரட்டல்'' என்பதாகவோ இதை எவரும் காண நினைப்பதில்லை. ஒரு கூலித் தொழிலாளியின் உழைப்பையும் ஊதியத்தையும் முதலாளித்துவ சமூக அமைப்பு தனக்குக் கண்கூடாகத் தெரியும் தகவலாகவே கருதுகிறது. எந்த ஒரு முதலாளியும், எந்த நேரத்திலும் இதைக் கூர்ந்து பார்க்கவும், தொழிலாளியின் ''ஆடம்பர வாழ்வையும்'' அவரிடம் இருப்பதாகக் கருதும் ''சோம்பேறித்தனத்தையும்'' அம்பலப்படுத்தவும் உரிமையுள்ளவராவார்.

நல்லது, மறுபுறம் கண்காணிப்புச் செய்வதன் விஷயம் என்ன ஆவது? முதலாளிகளின் வருமானம் மற்றும் செலவை சரிபார்க்கவும், இது விஷயமாகத் தகவல் வெளியிடவும், வருவாய்கள் ஒளிக்கப்படுவதை எதிர்த்து அரசாங்கத்துக்கு உதவவும் வேண்டி ஒரு ஜனநாயக அரசு, ஊழியர்கள், குமாஸ்தாக்கள் மற்றும் வீட்டு வேலையாட்களின் சங்கங்களை அழைக்குமானால் என்ன ஆகும்?

''ஒற்றுவேலை'', ''வேவுதிரட்டலை'' எதிர்த்து முதலாளிகள் எவ்வளவு வெறித்தனமாக ஊளையிடுவார்கள்! ''எஜமானர்கள்'' வேலையாட்களைக் கண்காணிப்பு செய்யும்போது, முதலாளிகள் தொழிலாளர்களைக் கண்காணிப்பு செய்யும் போது இது இயல்பான காரியம் என்று கருதப்படுகிறது. உழைக்கும் மக்களின், சுரண்டப்படும் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை மீறவொண்ணாதது என்று கருதப்படவில்லை. முதலாளிகள் ஒவ்வொரு ''கூலி அடிமையையும்'' கணக்குக் கொடுக்கும்படி கோர உரிமையுண்டு, எந்த நேரமும் அவரது வருவாய் செலவுகளை வெளியிட முடியும். ஆனால் ஒடுக்கப்பட்டவர் ஒடுக்குபவரைக் கண்காணிப்பு செய்ய முயல்வாரானால், அவரது வருவாய் செலவுகளை வெளிப்படுத்துவா

ராஞல், போர்க் காலத்திலும் கூட அவர் ஆடம்பர வாழ்வு நடத்தியதை அம்பலப்படுத்துவாராஞல்—அந்த ஆடம்பர வாழ்வு போர்முனையில் படைகள் பட்டினியால் வாடி அழிவதற்கு நேரடிப் பொறுப்பாளியாக இருப்பினும்—ஓ! இல்லை! முதலாளிகள் ''ஒற்றுவேலையை'', ''வேவுதிரட்டலை'' நிச்சயம் அனுமதிக்க மாட்டார்கள்!

இவை யாவும் ஒரே விஷயத்தில் போய் முடிகின்றன: முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கம், உண்மையிலேயே புரட்சிகரமான உண்மையான ஜனநாயகத்துடன் இணைக்கப்படுத்த முடியாதது. சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கு நாம் அஞ்சுவோமாஞல் நாம் இருபதாம் நூற்ருண்டில் ஒரு முதலாளித்துவ நாட்டில் புரட்சிகர ஜனநாயகவாதிகளாக இருக்க முடியாது.

நாம் சோஷலிசத்தை நோக்கி முன்னேற அஞ்சுவோமாஞல் நாம் முன்செல்ல முடியுமா?

இது வரையில் கூறப்பட்டவைமீது, சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகளின் இன்றைய சந்தர்ப்பவாதக் கருத்துக்களில் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு வாசகர் தம் சார்பில் பின்வரும் ஆட்சேபத்தை எளிதில் எழுப்பலாம். இங்கு வருணிக்கப்பட்டுள்ள பெரும்பாலான நடவடிக்கைகள் ஏற்கெனவே செயல் முறையில் சோஷலிஸ்டு நடவடிக்கைகள் தான், ஜனநாயக நடவடிக்கைகள் அல்ல என்று அவர் கூறலாம்.

இந்த நடப்பு ஆட்சேபம் (ஏதாவது ஒரு வடிவில்) முதலாளித்துவ, சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகள் பத்திரிகைகளில் வழக்கமாக எழுப்பப்படும் ஒன்ருகும். இது பிற்பட்ட முதலாளித்துவத்தைப் பிற்போக்குத்தனமாகத் தாங்கி ஆதரிப்பதாகும். ஸ்துரூவே முறையிலான ஆடை அணிகள் வேடத்தில் தாங்கி ஆதரிப்பதாகும். நாம் சோஷலிசத்துக்கு இன்னும் பக்குவம் அடையவில்லை என்றும்; சோஷலிசத்தைப் ''புகுத்துவதற்கு'' மிகவும் முந்திக் கொண்டுவிட்டோம் என்றும், நமது புரட்சி ஒரு முதலாளித்துவப் புரட்சி எனவே நாம் முதலாளிகளின் குற்றேவலர்

களாக இருக்க வேண்டும் என்றும் கூறுவது போன்று இது காணப்படுகிறது (125 ஆண்டுகளுக்கு முன்னால் பிரான்சில் மாபெரும் முதலாளித்துவப் புரட்சியாளர்கள் எல்லா ஒடுக்கு முறையாளர்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகளை எதிர்த்தும் ஒரேமாதிரி பயங்கரத்தைச் செயல்படுத்தித் தமது புரட்சியை ஒரு மகத்தான புரட்சியாக்கினார்கள்!).

முதலாளி வர்க்கத்துக்குச் சேவை புரிய போலி-மார்க்சிய அடிவருடிகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை உடன் சேர்த்துக் கொண்டு இந்த வழியில் வாதம் செய்கிறார்கள். ஏகாதிபத்தியம் என்பது என்ன, முதலாளித்துவ ஏகபோகம் என்றால் என்ன, அரசு என்றால் என்ன, புரட்சிகர ஜனநாயகம் என்றால் என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை (அவர்களது கருத்தின் தத்துவார்த்த அடிப்படையைப் பரிசீலித்தால் இது தெரியவரும்). இதைப் புரிந்து கொள்ளும் எவரும் சோஷலிசத்தை நோக்கி அல்லாமல் வேறு திசையில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட முடியாது என்பதைக் கட்டாயம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

எல்லோரும் ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், ஏகாதிபத்தியம் கலப்பற்ற ஏகபோக முதலாளித்துவமேயாகும்.

ருஷ்யாவிலும் முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவம் ஆகிவிட்டது என்பதற்கு புரொதூகல், புரொத்மெட், சர்க்கரை சிண்டிக்கேட்டு ஆகியவற்றின் உதாரணங்களே போதிய அத்தாட்சி. ஏகபோக முதலாளித்துவம் எந்த வழியில் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்கிறது என்பதற்கு இந்த சர்க்கரை சிண்டிக்கேட்டே கண்கூடான படிப்பினையாகும்.

அரசு என்பது என்ன? அது ஆளும் வர்க்கத்தின் ஓர் அமைப்பு. உதாரணமாக, ஜெர்மனியில் ஜங்கர்கள் மற்றும் முதலாளிகளின் ஓர் அமைப்பு. எனவே ஜெர்மன் பிளெஹானவ்கள் (ஷெய்டெமன், லெஞ்ச் முதலியோர்) ''போர்க்கால சோஷலிசம்'' என்று அழைப்பது உண்மையில் போர்க்கால-அரசு ஏகபோக முதலாளித்துவமே அல்லது இதையே மேலும் எளிதாயும் தெளிவாயும் கூறினால், இது தொழிலாளர்களுக்குப் போர்க்காலக் கடுஞ்சிறை, முதலாளிகளின் லாபத்துக்குப் போர்க்காலப் பாதுகாப்பு.

இப்போது ஜங்கர்-முதலாளித்துவ அரசுக்குப் பதில், நிலப்பிரபுக்கள்-முதலாளிகள் அரசுக்குப் பதில் ஒரு புரட்சிகர ஜனநாயக அரசை மாற்றீடு செய்ய முயல்வோம். அந்த அரசு புரட்சிகரமான வழியில் எல்லாத் தனி உரிமைகளையும் ஒழிப்பதாயும், புரட்சிகரமான வழியில் பரிபூரணமான ஜனநாயகத்தைக் கொண்டுவர அஞ்சாததாகவும் இருக்க வேண்டும். மெய்யாகவே ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசு இருக்குமானால், அரசு-ஏகபோக முதலாளித்துவம்தான், சோஷலிசத்தின் திசையிலான ஒரு படியாக, ஒரு படிக்கும் மேற்பட்டதாக உறுதியாகவும் தவிர்க்க முடியாதபடியும் இருப்பதை உணர்த்தும்!

ஏனெனில் ஒரு மிகப்பெரிய முதலாளித்துவ நிறுவனம் ஏகபோகம் ஆகுமானால் அது தேசம் முழுவதற்கும் சேவை செய்யும் என்று பொருளாகும். அது அரசு ஏகபோகம் ஆகும் பட்சத்தில் அதன் பொருள் அரசு (ஒரு புரட்சிகர ஜனநாயகம் இருக்குமானால், மக்கள் திரளின், தொழிலாளர், விவசாயிகளின் ஆயுதமேந்திய அமைப்பு) அந்த நிறுவனம் முழுவதையும் நெறியாக்கம் செய்கிறது என்பதாகும். யாருடைய நலனுக்காக?

ஒன்று, நிலப்பிரபுக்கள், முதலாளிகள் நலனுக்காக; அப்படியானால் அது புரட்சிகர-ஜனநாயக அரசு அல்ல. மாறாக ஒரு பிற்போக்கு-அதிகாரவர்க்க அரசு, ஓர் ஏகாதிபத்தியக் குடியரசே ஆகும்.

அல்லது புரட்சிகர ஜனநாயகத்தின் நலனுக்கு; அப்படியானால் அது சோஷலிசத்தின் திசையிலான ஒரு படி ஆகும்.

ஏனெனில் அரசு-முதலாளித்துவ ஏகபோகத்திலிருந்து எடுக்கப்படும் அடுத்த முன்னேற்றப் படியே சோஷலிசம். அல்லது வேறு சொற்களில் கூறினால், மக்கள் முழுமையின் நலன்களுக்குச் சேவை புரியுமாறு செய்யப்பட்டதான அரசு-முதலாளித்துவ ஏகபோகமே சோஷலிசம், அந்த அளவுக்கு அது முதலாளித்துவ ஏகபோகமாக இல்லாதொழிகிறது.

இங்கு நடுப்பாதை என்பது இல்லை. வளர்ச்சிப் போக்கின் எதார்த்த நடைமுறை இவ்வாறு இருப்பதால், சோஷலிசத்தை நோக்கி முன்னேறாமல், ஏகபோகங்களில் (போர் இவற்றின் எண்ணிக்கை, பாத்திரம், முக்கியத்துவத்தைப் பதின்

மடங்காக்கிவிட்டது) இருந்து முன்னேறுவது சாத்தியமல்ல.

ஒன்று, நாம் உண்மையில் புரட்சிகர ஜனநாயகவாதிகளாக இருக்க வேண்டும்—அப்படியானால் சோஷலிசத்தின் திசையில் நடவடிக்கைகள் எடுக்க நாம் அஞ்சக் கூடாது.

அல்லது சோஷலிசத்தின் திசையில் நடவடிக்கைகள் எடுக்க அஞ்சுகிறோம், நமது புரட்சி ஒரு முதலாளித்துவப் புரட்சி, சோஷலிசத்தைக் "கொண்டுவர முடியாது" என்று வாதம் செய்து பிளெஹானவ், டான், செர்னோவின் வழியில் அவற்றைக் கண்டனம் செய்வோமானால், நாம் தவிர்க்க முடியாத வகையில் கேரென்ஸ்கி, மில்யுக்கோவ், கர்னீலவ் தரத்துக்குத் தாழ்ந்து விடுவோம். அதாவது நாம் பிற்போக்கு-அதிகாரவர்க்க முறையில் தொழிலாளர், விவசாயிகளின் "புரட்சிகர-ஜனநாயக" அபிலாஷைகளை ஒடுக்கியவர்கள் ஆவோம்.

நடுப்பாதை என்பது இல்லை.

இங்குதான் நமது புரட்சியின் அடிப்படையான முரண்பாடு காணக்கிடக்கிறது.

பொதுவாக வரலாற்றில், குறிப்பாயும் போர்க் காலத்தில் அசையாது ஒரே இடத்தில் நிற்பது என்பது சாத்தியமல்ல. நாம் ஒன்று முன்னேற வேண்டும் அல்லது பின்வாங்க வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் ருஷ்யா ஒரு புரட்சிகரமான வழியில் ஒரு குடியரசையும் ஜனநாயகத்தையும் வென்று பெற்றுள்ளது. அது சோஷலிசத்தை நோக்கி முன்னேறுதல் இன்றி, அதன் திசையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் முன்னேறிச் செல்வது சாத்தியமல்ல (இந்த நடவடிக்கைகள் தொழில்நுட்பம் மற்றும் கலாசாரத்தின் தரத்தினால் நெறிப்படுத்தப்படும், நிர்ணயம் செய்யப்படும். பெருவீத யந்திர உற்பத்தி விவசாயிகள் மட்டத்திலான சாகுபடியில் "கொண்டுவர" முடியாது, சர்க்கரைத் தொழிலில் அதை ஒழிக்கவும் முடியாது).

முன்னேறிச் செல்ல அஞ்சுவது என்றால் பின்வாங்குவது என்பதே பொருள். இதையே, கேரென்ஸ்கிகள், மில்யுக்கோவ்களும் பிளெஹானவ்களும் மகிழ, தெஸெரெத்தேலிகள், செர்னோவ்களின் முட்டாள்தனமான துணையுடன் உள்ளபடியே செய்துவருகிறார்கள்.

போர், ஏகபோக முதலாளித்துவத்தை அரசு-ஏகபோக

முதலாளித்துவமாக அசாதாரண வேகத்தில் மாற்றிவருகிறது. இதன் மூலம் மனிதகுலம் சோஷலிசத்தை நோக்கி அசாதாரணமாக முன்னேறச் செய்கிறது. இதுவே வரலாற்றின் இயக்கவியல்.

ஏகாதிபத்தியப் போர் சோஷலிசப் புரட்சியின் தறுவாய் ஆகும். இதற்குக் காரணம் போரின் பயங்கரம் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தோற்றுவிக்கும் என்பது மட்டுமல்ல—சோஷலிசத்திற்கான பொருளாதார நிலைமைகள் பக்குவப் பட்டிருந்தால் ஒழிய எந்தப் புரட்சியும் சோஷலிசத்தைக் கொண்டுவர முடியாது—ஆனல், அரசு-ஏகபோக முதலாளித் துவம் சோஷலிசத்திற்கான முழு பொருளாயதத் தயாரிப்பாகும், சோஷலிசத்தின் நுழைவாயிலாகும், வரலாற்று ஏணியில் ஒரு படியாகும். இந்தப் படிக்கும் சோஷலிசம் என்றழைக்கப்படும் படிக்கும் இடையே இடைப்பட்ட படிகள் எதுவும் கிடையாது.

* * *

நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் சோஷலிசம் என்ற பிரச்சினையை ஒரு வறட்டுச்சூத்திர வழியில், மனப்பாடமாகப் பயின்று ஆனல் மோசமாகப் புரிந்துகொள்ளப்பட்டதான ஒரு போதனையின் நோக்கு நிலையில் இருந்து அணுகுகிருர்கள். சோஷலிசத்தை ஏதோ ஒரு நெடுந்தொலைவிலான, தெரியாத மங்கலான எதிர்காலமாகச் சித்திரிக்கிருர்கள்.

ஆனல் சோஷலிசம் தற்காலத்திய முதலாளித்துவத்தின் எல்லா ஜன்னல்களிலிருந்தும் நம்மீது பார்வையை வீசுகிறது. இந்தத் தற்காலத்திய முதலாளித்துவத்தின் அடிப்படையில் ஒரு முன்னேற்றப் படியாக அமையும் எல்லா முக்கியமான நடவடிக்கைகளிலும் சோஷலிசம் நேரடியாக நடைமுறையில் உருவரை செய்யப்பட்டுள்ளது.

சர்வஜனக் கட்டாய உழைப்பு என்பது என்ன?

இது தற்காலத்திய ஏகபோக முதலாளித்துவத்தின் அடிப் படையில் ஒரு முன்னேற்றப் படி. இது, ஒரு பொதுவான திட்டத்திற்கு ஏற்ப பொருளாதார வாழ்வை ஒட்டுமொத்த மாக ஒழுங்கியக்கம் செய்யும் திசையிலான ஒரு படியாகும்.

தேசிய உழைப்பைச் சிக்கனப்படுத்தும் திசையிலான ஒரு படி. முதலாளித்துவம் இதை மடத்தனமாகச் சேதம் செய்வதைத் தடுக்கும் திசையிலான ஒரு படி.

ஜெர்மனியில் ஜங்கர் (நிலப்பிரபுக்)களும் முதலாளிகளும் சர்வஜன கட்டாய உழைப்பைப் புகுத்தி வருகிறார்கள். எனவே இது தொழிலாளர்களுக்குத் தவிர்க்க முடியாத வகையில் போர்க்காலக் கடுஞ்சிறையாகிறது.

ஆனால் ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசில் அதே ஏற்பாட்டை எடுத்துக் கொண்டு அதன் உட்பொருள் பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம். தொழிலாளர் படையாளிகள் விவசாயிகளின் சோவியத்துகளால் புகுத்தப்பட்டு, ஒழுங்கியக்கம் செய்யப்பட்டு, நெறியாண்மை செய்யப்படும் சர்வஜனக் கட்டாய உழைப்பு இன்னும் சோஷலிசம் ஆகிவிடவில்லை ஆனால் அது இனிமேலும் முதலாளித்துவமாக நீடிக்காது. அது சோஷலிசத்தின் திசையிலான ஒரு பிரம்மாண்டமான படி. பூரணமான ஜனநாயகம் கட்டிக் காக்கப்படுமானால் இந்தப் படியில் இருந்து இனிமேல் திரும்பவும் முதலாளித்துவத்துக்கான எந்த ஒரு பின்வாங்குதலும் இருக்காது. அதைச் செய்ய வேண்டும் என்றால் மக்கள் திரளுக்கு எதிராக ஈடிணையற்ற வன்முறை பிரயோகிக்கப்பட நேரும்.

பொருளாதாரக் குழப்பத்துக்கு எதிரான போராட்டமும் போரும்

நெருங்கி வரும் பெரும் விபத்தைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எண்ணிப்பார்க்கும் போது மிகவும் உயர் முக்கியத்துவம் உள்ள இன்னொரு பிரச்சினை முன்வருகிறது. அதுவே உள்நாட்டு மற்றும் அயல்துறைக் கொள்கைகளுக்கு இடையிலான தொடர்பாகும். வேறு சொற்களில் கூறினால், ஒரு நாடுபிடிக்கும் போரான ஓர் ஏகாதிபத்தியப் போருக்கும் ஒரு புரட்சிகரமான பாட்டாளி வர்க்கப் போருக்கும் இடையிலான, ஒரு கொலைகார-கொள்ளைக்காரப் போருக்கும் ஒரு நியாயமான ஜனநாயகப் போருக்கும் இடையிலான உறவு பற்றிய பிரச்சினையாகும்.

பெரும் விபத்தைத் தவிர்ப்பதற்கு என்று நாம் வருணித்துள்ள நடவடிக்கைகள் எல்லாம், நாம் ஏற்கெனவே கூறியுள்ளது போன்று, தற்காப்பு ஆற்றலைப் பெருமளவு மேம்

படுத்துகின்றன, வேறு சொற்களில் கூறினுல் நாட்டின்ராணுவ் வலிமையை மேம்படுத்துகின்றன. மறுபுறத்தில் இந்த நாடுபிடிக்கும் போரை ஒரு நியாயப் போர் ஆக மாற்ருமல், முதலாளிகளின் நலன்களுக்காக முதலாளிகள் நடத்தி வரும் போரை, அனைத்து உழைக்கும் மக்கள் சுரண்டப்படும் மக்களின் நலன்களுக்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்திவரும் போராக மாற்ருமல் இந்த நடவடிக்கைகளைச் செயலாக்க முடியாது.

மேலும், வங்கிகள், சிண்டிக்கேட்டுகளின் தேசவுடைமை யாக்கம், வாணிக ரகசியங்கள் ஒழிப்பு, முதலாளிகள் மீது தொழிலாளர்களின் கண்காணிப்பை நிலைநாட்டுதல் ஆகிய வற்ருேடு இணைக்கும் பட்சத்தில், தேசிய உழைப்பினைப் பெரும் அளவு சேமிப்பது, ஆற்றல், சாதனங்கள் விஷயத் தில் சிக்கனம் செய்வதற்கான சாத்தியக்கூறு ஆகியவற்றை இது உணர்த்தும். அதோடு, உழைக்கும் **மக்கள் திரளின்,** மக்கள் தொகை பெரும்பான்மையின் நிலைமைகளில் ஒரு மேம்பாட்டையும் குறிக்கும். தற்காலத்திய போரில் பொரு ளாதார அமைப்பு நிர்ணயகரமான முக்கியத்துவம் உடையது என்பதை எல்லோரும் அறிவர். ருஷ்யாவிடம் போதுமான அளவு தானியம், நிலக்கரி, எண்ணெய், இரும்பு ஆகியவை இருக்கின்றன. இந்த வகையில் நாம் போரிடும் ஐரோப்பிய நாடுகள் எதையும் விடச் சிறந்த நிலையில் இருக்கிருேம். மேலே சுட்டப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் பொருளா தாரக் குழப்பத்தை எதிர்த்து ஒரு போராட்டம் நடக்குமா ஞல், இந்தப் போராட்டத்தில் மக்களின் முன்முயற்சியைப் பயன்படுத்தியும், மக்களின் நிலைமைகளை மேம்படுத்தியும், வங்கிகள், சிண்டிக்கேட்டுகளைத் தேசவுடைமையாக்கம் செய்தும், ருஷ்யாவானது நாடு முழுவதையும் ஒப்பிட முடியாத அளவு உயர் மட்டத்திலான பொருளாதார அமைப்பாக உயர்த்துவதற்கு அதன் புரட்சியையும் அதன் ஜனநாயகத்தையும் பயன்படுத்த முடியும்.

முதலாளிகளுடனுன ''கூட்டணி'' எல்லாக் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் தடுத்து இடர் செய்கிறது, உற்பத் தியைச் சீர்குலைக்கிறது. இதற்குப் பதில் சோஷலிஸ்டு-புரட்சி யாளர்களும் மென்ஷிவிக்குகளும் ஏப்ரலிலேயே சோவியத்து களுக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்கி இருக்க வேண்

டும். அவர்கள் தமது முயற்சிகளை ''அமைச்சுப் பதவி தாவல்'' விளையாட்டில் திருப்பியிருக்கக் கூடாது. காடேட்டுகளுடன் அக்கம்பக்கமாக அமைச்சர், உதவி அமைச்சர், இதுபோன்ற பதவிகளை அதிகாரவர்க்க பாணியில் வகிப்பதற்குத் தம் முயற்சிகளைத் திருப்பியிருக்கக் கூடாது. மாறாக, முதலாளிகள் மீதான அவர்களது கண்காணிப்பு, முதலாளிகளை எதிர்த்த அவர்களது போர் ஆகியவை விஷயத்தில் தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் வழிகாட்டுவதில் தமது முயற்சிகளை ஈடுபடுத்தி இருக்கவேண்டும். அவ்வாறு செய்திருப்பின் ருஷ்யா பொருளாதார ரீதியில் முழுதும் மாற்றமடைந்த ஒரு நாடாக விளங்கும். நிலம் விவசாயிகளின் கரங்களில் இருக்கும், வங்கிகள் தேசவுடைமையாக்கப்பட்டிருக்கும். அதாவது, ருஷ்யாவானது, அந்த அளவுக்கு (இவை தற்காலத்திய வாழ்க்கையின் மிக முக்கியமான பொருளாதார அடிப்படைகள்) இதர முதலாளித்துவ நாடுகள் அனைத்தையும் விட மேநிலையில் இருக்கும்.

வங்கிகள் தேசவுடைமையாக்கம் செய்யப்பட்டுள்ள ஒரு நாட்டின் தற்காப்பு ஆற்றலும் ராணுவ வலிமையும், வங்கிகள் தனியார் கரங்களில் நீடிக்கும் ஒரு நாட்டினதை விட மேலானவை. நிலங்கள் விவசாயி கமிட்டிகளின் கரங்களில் உள்ள ஒரு விவசாயி நாட்டின் ராணுவ வலிமை, நிலப்பிரபுக்கள் கரங்களில் இருக்கும் ஒரு நாட்டினதை விட மேலானது.

1917 செப்டம்பர் 10—14(23—27)ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 34, பக்கங்கள் 155-57 மற்றும் 159-195

புரட்சியின் பணிகள்
என்பதிலிருந்து

பஞ்சம் மற்றும் பொருளாதார அழிவுக்கு எதிரான போராட்டம்

5. சோவியத் அரசாங்கம் உற்பத்தி மற்றும் வினியோகத்தின் மீது நாடு தழுவியதோர் அளவில் தொழிலாளரது கண்காணிப்பு முறையினை உடனடியாகப் புகுத்திட வேண்டும். மே மாதம் 6ந் தேதி முதல் பெற்றுள்ள அனுபவம், இப்படிப்பட்டதொரு கண்காணிப்பு இல்லாமல் சீர்திருத்தங்கள் பற்றிய வாக்குறுதிகள் அனைத்தும், அவைகளைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் பயனற்றவை என்று காட்டியுள்ளது. பஞ்சமும் அதைத் தொடர்ந்துவரும் முன் எப்போதும் கண்டிராத பெரும் விபத்தும் நாடு முழுமைக்கும் வாரத்துக்கு வாரம் மேலும் பெரியதொரு பயமுறுத்தலாக ஆகி வருகிறது.

வங்கிகளையும், இன்ஷியூரன்ஸ் தொழிலையும் உடனடியாக தேசவுடைமையாக்குவது அவசியமாகிறது. அத்தோடு மிக முக்கியத் தொழில் கிளைகளையும் (எண்ணெய், நிலக்கரி, உலோகத்துறை, சர்க்கரை முதலியன) தேசவுடைமையாக்கிட வேண்டும். அதே சமயத்தில் வியாபார ரகசியங்களை ஒழித்திட வேண்டும். எண்ணிக்கையில் மிகக் குறைவான சிறுபான்மை முதலாளிகள் மீது தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது கண்டிப்பான மேற்பார்வையினை நிறுவிட வேண்டும். இந்த முதலாளிகள் அரசாங்கக் கண்டிராக்டுகள் மூலமாகச் செல்வத்தில் கொழிக்கிறார்கள். கணக்குப் பொறுப்புகளைத் தட்டிக் கழித்து விடுகிறார்கள். தங்களது இலாபங்கள் மற்றும் சொத்துக்கள் மீதான நியாயமான வரிவிதிப்பினுள் அகப்படாமல் தப்பிவிடுகிறார்கள்.

நடுத்தர விவசாயிகள், கஸாக்குகள் அல்லது சிறு கைவினைஞர்களிடமிருந்து ஒரே ஒரு கோப்பெக்கைக்கூடப் பிடுங்கிடாத அத்தகைய நடவடிக்கைகள் பஞ்சத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. அவை முழுக்க முழுக்க நியாயமானவை. ஏனெனில் போரின் பாரங்களைச் சமமாக அவை பங்கீடு செய்கின்றன. முதலாளித்துவக் கொள்ளை தடுக்கப்பட்ட பிறகு மாத்திரமே, அத்தோடு அவர்கள் உற்பத்திக்கு வேண்டுமென்றே நாசவேலை செய்வதைத் தடுத்த பிறகு மாத்திரமே, உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும். சர்வஜனக் கட்டாய உழைப்புச் சேவையை கொண்டுவர முடியும். தொழிற்துறை பண்டங்களுக்கு மாற்றாகத் தானியத்தை முறையாக மாற்றுச் செய்வது சாத்தியமாகும். மற்றும் பணக்காரர்களால் இப்போது குவித்து வைக்கப்பட்டுள்ள கோடிக் கணக்கான ரூபிள் காகிதப் பணங்களைக் கஜானுவுக்குத் திரும்பக் கொண்டுவருவது சாத்தியமாகும்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இன்றி, நஷ்ட ஈடு ஏதுமின்றி பிரபுக்களின் நில உடைமைகளை ஒழித்திடுவது சாத்தியமற்றது. ஏனெனில் நிலப்பிரபுக்களின் உடைமைகளில் பெரும்பகுதி வங்கிகளுக்கு அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நிலப்பிரபுக்களது நலன்களும் முதலாளிகளது நலன்களும் பிரித்திட முடியாதபடி பிணைந்து இருக்கின்றன.

1917 செப்டெம்பர்
முதற்பகுதியில் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 34,
பக்கங்கள் 234-235

போல்ஷிவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?

என்ற கட்டுரையிலிருந்து

பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்நோக்கியுள்ள பிரதானமான கஷ்டம், மிகத் துல்லியமான, மிக நேர்மையான கணக்குப்பதிவையும் கண்காணிப்பையும் தேசம் முழுவதிலும் நிறுவுவதுதான், பொருள் உற்பத்தியிலும் விநியோகத்திலும் தொழிலாளர் கண்காணிப்பை நிறுவுவதுதான்.

''தொழிலாளர் கண்காணிப்பு'' என்ற கோஷத்தை முன்வைத்ததன் மூலம் நாம் சிண்டிக்கலிசத்தில் இறங்கிவிட்டோம் என்று நோவயா ஷீஸ்ன் எழுத்தாளர்கள் வாதாடிய போது, அது ''மார்க்சியத்தை'' ஆழ்ந்து பயின்று அறிந்து கொள்ளாமல், ஸ்துருவே முறையில், உருப்போட்டு அதாவது பள்ளி மாணவர்களின் அசட்டுத்தனமான முறையில் அதைச் செயல்படுத்துவதற்கு இந்த வாதம் ஓர் உதாரணமாக இருந்தது. சிண்டிக்கலிசம் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான சர்வாதிகாரத்தை மறுக்கிறது அல்லது பொதுவாக அரசியலதிகாரம் அனைத்தையும் அது செய்வது போல அதை முக்கியப்படுத்தாமல் பின்னணிக்குத் தள்ளிவைக்கிறது. ஆனால் நாமோ அதனை முதல் இடத்தில் வைக்கிறோம். நாமும் நோவயா ஷீஸ்ன்காரர்களைப் போலவே, தொழிலாளர் கண்காணிப்பு என்பதற்கு மாறாக, அரசாங்கக் கண்காணிப்பு என்று பேசுவோமானால், அது முதலாளித்துவ-சீர்திருத்த வாதச் சொற்றொடரே ஆகும். சாரத்தில், அது கலப்பற்ற காடேட்டுச் சூத்திரமேயாகும். ஏனென்றால், தொழிலாளர் ''அரசாங்கக்'' கண்காணிப்பில் பங்கு கொள்வதைக் காடேட்டுகள் ஆட்சேபிக்கவில்லை. இப்படிப் பங்கு கொள்ளச்

செய்வது தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு ஒரு சிறந்த மார்க்கத்தை முதலாளி வர்க்கத்துக்குக் கிடைக்கச் செய்கிறது என்பதும், குவஸ்தியோவ், நிக்கீத்தின், புரொக்கப்போவிச், தெஸெரெத்தேலி கும்பலையெல்லாம் அரசியல் ரீதியிலே லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கிவிடுவதற்கு அதுதான் அதிநுட்பமான வழி என்பதும் காடேட்-கர்னீலவ் குழுவினருக்கு மிக நன்ருகத் தெரியும்.

''தொழிலாளர் கண்காணிப்பு'' என்ற கோஷத்தை எப்போதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தோடு அருகே வைத்து, அதை எப்பொழுதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு நேர் அடுத்ததாக வைத்துப் பேசும் பொழுது, நாம் குறிப்பிடுவது எந்த வகை அரசாங்கம் என்பதைத் தெளிவுபடுத்தி விடுகிருேம். அரசாங்கம் என்பது வர்க்கத்தின் ஆதிக்கத்திற்குரிய கருவியாகும். எந்த வர்க்கத்தின்? முதலாளி வர்க்கத்தினது என்ருல், அது எந்த அரசாங்க முறையின் மூலம் ருஷ்யாவின் உழைப்பாளி மக்கள் அரை வருஷத்திற்கு மேலாகக் ''கர்னீலவ் தன்மைக்கும் கேரென்ஸ்கி தன்மைக்கும்'' ஆளாக்கப்பட்டு வருகின்ருர்களோ, அந்தக் காடேட்-கர்னீலவ்-''கேரென்ஸ்கி'' அரசாங்க முறையாகும். பாட்டாளி வர்க்கத்தினது என்ருல், பாட்டாளி வர்க்க அரசாங்கத்தைப் பற்றி, அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிப் பேசுகிருேமென்ருல், தொழிலாளர் கண்காணிப்பு என்பது, பொருள் உற்பத்தி, வினியோகத் துறைகளில் சர்வஜனத் தன்மையுடைய, எல்லாவற்றையும் தழுவிய, எங்கும் நிலைத்திருக்கிற, மிகத் துல்லியமான, மிக நேர்மையான கணக்குப்பதிவாய் ஆக முடியும்.

இதுவே பாட்டாளி வர்க்க, அதாவது சோஷலிசப் புரட்சியை எதிர்நோக்கியிருக்கும் பிரதானமான சங்கடம், பிரதானமான பணி. சோவியத்துகள் இன்றி, குறைந்த பட்சம் ருஷ்யாவில், இந்தப் பணியை நிறைவேற்றுவது அசாத்தியம். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வல்ல ஒழுங்கமைப்பு வேலையை சோவியத்துகள் பாட்டாளி வர்க்கத்துக்கு விளக்கிக் காட்டுகின்றன.

இது, அரசாங்கப் பொறியமைவு என்ற பிரச்சினையின் மற்ருேர் அம்சத்தின்முன் நம்மைக் கொண்டு வந்து நிறுத்துகிறது. பிரதானமாக ''அடக்குமுறைப்'' பொறியமைவாய்

இருப்பதுடன்—நிரந்தர இராணுவம், போலீஸ், அதிகார வர்க்கம் ஆகியவற்றோடு—தற்கால அரசிடம் கூடுதல் பொறியமைவும் இருந்து வருகிறது. வங்கிகளுடனும், சிண்டிக்கேட்டுகளுடனும் அதற்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு வகையில் கூறுவதானால், பிரம்மாண்டமான அளவில் கணக்குப் பதிவு மற்றும் பதிவீடு வேலையை அது செய்து வருகிறது. இந்தப் பொறியமைவைத் தகர்க்க வேண்டாம், தகர்க்கக் கூடாது. அதை முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து பிடுங்கிக் கொள்ள வேண்டும். முதலாளிகளையும், அவர்களின் செல்வாக்குகளையும் அதனிடமிருந்து கத்திரித்துவிட வேண்டும், வெட்டித்தள்ள வேண்டும், துண்டித்தெறிய வேண்டும். பாட்டாளி வர்க்க சோவியத்துகளுக்கு அதைக் கீழ்ப்படுத்தி வைக்க வேண்டும். அதனை முன்னிலும் விரிவானதாக, எல்லாவற்றையும் தழுவியதாக, நாடு முழுவதிலும் பரவியதாகச் செய்ய வேண்டும். பெருவீத முதலாளித்துவம் ஏற்கெனவே செய்து முடித்துள்ள சாதனைகளைப் பயன்படுத்திக் கொள்வதின் மூலம் இதை நிறைவேற்றுவது சாத்தியம் (பொதுவாகவே பாட்டாளி வர்க்கப் புரட்சி இச்சாதனைகளைப் பயன்படுத்திக் கொள்வதின் மூலமாகத்தான் தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்).

முதலாளித்துவம் கணக்குப் பதிவுக்காக வங்கிகள், சிண்டிக்கேட்டுகள், தபால் இலாகா, நுகர்வாளர் சங்கங்கள் அலுவலக ஊழியர்களின் சங்கங்கள் போன்ற பொறியமைவை உருவாக்கியுள்ளது. பெரிய வங்கிகள் இல்லாமல், சோஷலிசம் சாத்தியம் அல்ல.

சோஷலிசத்தைச் செயல்படுத்துவதற்கு நமக்குத் தேவையாயுள்ள "அரசாங்கப் பொறியமைவு" பெரிய வங்கிகளேயாகும். முதலாளித்துவ அமைப்பிடமிருந்து தயாராக வைக்கப்பட்டுள்ள நிலையில் நாம் அதனை எடுத்துக்கொள்கிறோம். இதில் நாம் செய்ய வேண்டிய கடமை எல்லாம், இச்சிறந்த பொறியமைவை முதலாளித்துவ ரீதியில் உருக்குலைத்து வந்த அம்சத்தை அதனிடமிருந்து வெட்டிவிட்டு, அதனை முன்னிலும் பெரிதாக, முன்னிலும் ஜனநாயகத் தன்மையுள்ளதாக, முன்னிலும் எல்லாவற்றையும் தழுவியதாக ஆக்குவதுதான். அளவு குணமாக உருமாறும். ஒவ்வொரு நாட்டுப்புற வட்டாரத்திலும் ஒவ்வொரு பாக்டரியிலும் கிளைகளை உடைய,

பெரிதிலும் ஆகப் பெரிதான ஒரே அரசாங்க வங்கியானது சோஷலிஸ்டு பொறியமைவின் பத்தில் ஒன்பது பங்கு ஆகிவிடும். இதுவே பொருள்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் பற்றிய நாடு தழுவிய கணக்கு முறையும்; நாடு தழுவிய கணக்குப்பதிவும் ஆகும். ஒரு வகையில் இதை சோஷலிஸ்டு சமூக அமைப்பின் எலும்புக்கூடு என்ற தன்மையில் இதனைக் குறிப்பிடலாம்.

இந்த ''அசாங்கப் பொறியமைவை'' (முதலாளித்துவ அமைப்பின்கீழ் முழுமையான அரசாங்கப் பொறியமைவாய் இல்லாத, ஆனால் நம்மிடம், சோஷலிசத்தின்கீழ், அவ்வாறான பொறியமைவாக ஆகப் போகிறதை) நாம் ஒரேயடியில், ஒரே அரசாணை மூலம் ''கைப்பற்றிக் கொள்ளவும்'', ''இயக்கிச் செல்லவும்'' முடியும். ஏனெனில் கணக்கு முறை, கண்காணிப்பு, பதிவீடு, கணக்குப் பரிசோதனை, கணக்கெடுத்தல் ஆகிய வேலைகளைச் சிப்பந்திகள்தான் செய்து வருகின்றனர்; அவர்களில் பெரும்பான்மையோர் பாட்டாளி அல்லது அரைப் பாட்டாளி நிலையில்தான் வாழ்கிறார்கள்.

பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் ஒரே அரசாணையால் இந்தச் சிப்பந்திகளை அரசாங்கச் சிப்பந்திகள் என்ற அந்தஸ்துக்கு மாற்ற முடியும், மாற்ற வேண்டும். முதலாளித்துவத்தின் காவல் நாய்களான பிரியாண்டும் மற்ற முதலாளித்துவ அமைச்சர்களும் வேலை நிறுத்தம் செய்யும் ரயில்வே ஊழியர்களை ஒரே அரசாணை மூலம் அரசாங்கச் சிப்பந்திகளாக மாற்றிவிடுவது போலத்தான் இதுவும். இவ்வகையான அரசாங்கச் சிப்பந்திகள் இன்னும் ஏராளமான பேர் நமக்குத் தேவை, ஏராளமான பேர் நமக்குக் கிடைக்கவும் முடியும். ஏனெனில் முதலாளித்துவம் கணக்குப்பதிவையும் கண்காணிப்பையும் எளிதாக்கி விட்டிருக்கிறது; அதை முன்னைவிட எளிதான கணக்கு முறையாகச் செய்துள்ளது. எழுதப்படிக்கத் தெரிந்த எவனும் அதைச் செய்ய முடியும்.

வங்கி, சிண்டிக்கேட்டு, வர்த்தகம் முதலானவற்றின் சாதாரண சிப்பந்திகள் அனைவரையும் ''அரசாங்கச் சிப்பந்திகளாக மாற்றுவது'' (முதலாளித்துவமும் நிதி முதலாளித்துவமும் நமக்காக இவ்விஷயத்தில் பூர்வாங்க வேலைகளைச் செய்து வைத்துள்ள காரணத்தால்) நடைமுறை நிர்வாக ரீதியில் சாத்தியம், அரசியல் ரீதியிலும் இது சாத்தியம்;

ஆனல் ஒரு நிபந்தனை: சோவியத்துகளின் மேற்பார்வையும் கண்காணிப்பும் இருந்து வரவேண்டும்.

மேலதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகச் சிலரேயாவர்; ஆனல் முதலாளிகளின் பக்கமே சாய்பவர்கள். ஆகவே முதலாளிகளைப் போலவே அவர்கள் மீது "கடுமையான" நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். முதலாளிகளைப் போலவே அவர்களும் எதிர்ப்புக் காட்டுவார்கள். அவர்களின் எதிர்ப்பை உடைத்தெறிய வேண்டும். அழியா வெகுளித்தனம் வாய்ந்த பெஷெஹோனவ் "அரசாங்கக் காரியங்களில் அனுபவமற்ற குழந்தை" போல் மழலை பேசி, "முதலாளிகளின் எதிர்ப்பு உடைத்தெறியப் பட்டு விட்டது" என்று 1917 ஜூன் மாதத்திலேயே கூறிய குழந்தைச் சொல், சிறுபிள்ளைத்தனமான வாய்வீச்சு, சிறுபிள்ளைத்தனமான வீருப்புப் பேச்சு, பாட்டாளி வர்க்கத்தால் நடைமுறை எதார்த்தமாகச் செய்து முடிக்கப்படும்.

இதை நாம் செய்ய முடியும்; காரணம்: மக்கள் தொகையில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்களின் எதிர்ப்பை, உண்மையில் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையுள்ளவர்களின் எதிர்ப்பை, முறித்தெறிய வேண்டிய காரியம் தான் அது. அவர்கள் ஒவ்வொருவர் மீதும் அலுவலகச் சிப்பந்திகளின் சங்கங்களும், தொழிற்சங்கங்களும், நுகர்வாளர் சங்கங்களும், சோவியத்துகளும் மிகக் கடுமையான மேற்பார்வையை ஏற்படுத்தும். அதன் பயனுக ஒவ்வொரு தீத்தீத்திச்சும் ஸெதானில் பிரெஞ்சுக்காரர்கள் சுற்றிவளைக்கப் பட்டதே[30] போல் சுற்றி வளைக்கப்பட்டிருப்பான். இந்த தீத்தீத்திச்சுகள் யாரென்று பெயர்வாரியாக நமக்குத் தெரியும்: டைரக்டர்கள், போர்டு மெம்பர்கள், பெரும் பங்குதாரர்கள் முதலியோர்களின் பட்டியல்களை எடுத்துக் பார்த்தால் போதுமானது. அவர்கள் ருஷ்யா முழுவதிலும் சில நூறு, அல்லது அதிகமாகப் போனல் சில ஆயிரம் பேர்கள்தான் இருக்கிறர்கள். அவர்கள் ஒவ்வொருவர் மீதும் பாட்டாளி வர்க்க அரசாங்கம், தனது சோவியத்துகள், அலுவலகச் சிப்பந்திகளின் சங்கங்கள் முதலியவைகள் அடங்கிய பொறியமைவைக் கொண்டு, பத்து அல்லது நூறு மேற்பார்வையாளர்களை நியமிக்க முடியும். ஆகவே "எதிர்ப்பை முறியடிப்பதற்குப்" பதிலாக, (முதலாளிகளின் மீது) தொழிலாளர்

கண்காணிப்பு மூலமாக் எவ்வித எதிர்ப்புமே சாத்தியமில்லாதபடி செய்துவிட முடியும்.

முதலாளிகளின் சொத்தைப் பறிமுதல் செய்வது கூட இவ்விஷயத்தில் "முக்கிய அம்சமாக" இருக்காது. "முக்கிய அம்சமாக" இருக்கப் போவது, முதலாளிகள், அவர்களுக்கு ஆதரவு தரக் கூடியவர்கள் ஆகியோர் மீது நாடு முழுதிலும் பரவிய, எல்லாவற்றையும் தழுவிய தொழிலாளர் கண்காணிப்புதான். பறிமுதல் செய்வதால் மட்டும் எல்லாம் முடிந்துவிடாது. அதில் ஒழுங்கமைப்பு அம்சம், முறையான வினியோகத்தைப் பற்றிய கணக்கு வைக்கிற அம்சம் எதுவுமில்லை. பறிமுதல் செய்வதற்குப் பதில் நியாயமான வரி விதிக்கலாம் (உதாரணமாக "ஷிங்கரியோவ் முறையில்" இருந்தாலும் போதும்). யாரும் சொத்துக் கணக்கைக் கொடுக்காமல் தப்பிக்கவோ, உண்மையை மறைக்கவோ, சட்டத்தை மீறவோ முற்றிலும் சாத்தியமாகாதபடி செய்ய வேண்டும். அவ்வாறு நடப்பது சாத்தியமாகாதபடி தடுப்பதற்குத் தொழிலாளி வர்க்க அரசாங்கத்தின் தொழிலாளர் கண்காணிப்பு ஒன்றினால் தான் முடியும்.

கட்டாய முறையில் சிண்டிக்கேட்டுமயமாக்கல், அதாவது அரசாங்கக் கண்காணிப்பின்கீழ் உள்ள சங்கங்களில் கட்டாயமாக ஒன்றுபடுத்தி விடுதல், இதற்கு முதலாளித்துவம் வழி செய்து வைத்திருக்கிறது; ஜெர்மனியில் ஜங்கர் அரசாங்கத்தால் இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது; ருஷ்யாவில் சோவியத்துகளால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால், இதை எளிதில் நிறைவேற்றி வைக்க முடியும். இதுவே நமக்கு "ஓர் அரசாங்கப் பொறியமைவை" அளிக்கும். அது சர்வவியாபகமானதாயும், மிக நவீனமானதாயும், அதிகார வர்க்கத் தன்மையற்றதாயும் இருக்கும்.*

* * *

---

* கட்டாய முறையில் சிண்டிக்கேட்டுமயமாக்கல் என்பதின் பொருளுக்கு மேலும் விளக்க விவரங்கள் வேண்டுவோர் நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி என்ற என் பிரசுரத்தைப் பார்க்க. (இதே நூல், பக்கங்கள் 79-133—ப-ர்.)

முதலாளி வர்க்கத்திற்கான வழக்குரைஞர் தரும் நான்காம் வாதம்: பாட்டாளி வர்க்கம் அரசாங்கப் பொறியமைவை ''இயக்க'' இயலாது என்பதாகும். முந்திய வாதத்தைக் காட்டிலும் இந்த வாதத்தில் புதிதாக எதுவுமில்லை. பழைய பொறியமைவை நாம் கைப்பற்றவோ அல்லது இயக்கவோ முடியாது என்பது மெய்யே. ஆனால் புதிய பொறியமைவான சோவியத்துகள் ''மக்களின் உண்மையான படைப்புத் திறனின் வலுமிக்க ஊக்கத்தினால்'' ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன. சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகளின் தலைவர்களுடைய ஆதிக்கத்தால் அப்பொறியமைவின் மீது பூட்டப்பட்டிருக்கும் விலங்குகளை உடைத்து அதை விடுவிக்க வேண்டியது மட்டுமே தேவை. இந்தப் பொறியமைவு ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. அது முழு வேகத்துடன் முன்னே செல்வதைத் தடங்கல் செய்து கொண்டிருக்கும் கோரமான குட்டிமுதலாளித்துவத் தடைகளை நீக்க வேண்டியதுதான் தேவை.

மேலே சொல்லப்பட்டுள்ளதுடன் சேர்த்து இரண்டு விஷயங்கள் இங்கே கவனிக்கப்பட வேண்டியது அவசியம்: முதலாவதாக, நம்மால் ஏற்படுத்தப்படாமல் ராணுவ ஏகாதிபத்திய கட்டத்தில் முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்டுள்ள புதிய கண்காணிப்புச் சாதனங்கள்; இரண்டாவதாக, பாட்டாளி வர்க்க வகைப்பட்ட அரசின் நிர்வாகத்தில் மேலும் ஜனநாயக முறையைப் புகுத்திவருவதன் முக்கியத்துவம்.

தானிய ஏகபோக உரிமையும், உணவுப் பங்கீட்டு முறையும் நம்மால் கொண்டுவரப்பட்டவையல்ல; போரில் ஈடுபட்டிருந்த முதலாளித்துவ அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டவை. முதலாளித்துவ வரம்புக்குள் அனைவருக்கும் கட்டாய உழைப்பு முறையையும் ஏற்கெனவே அது கொண்டு வந்துள்ளது—இது தொழிலாளர்களுக்குள்ள ராணுவ கடுங்காவல் சிறைவாசம் ஆகும். வரலாற்றைப் படைக்கும் அதன் எல்லா நடவடிக்கைகளிலும் போலவே இவ்விஷயத்திலும் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்திலிருந்தே தனது ஆயுதங்களை எடுத்துக் கொள்கிறது. அவ்வாயுதங்களைப் ''புதிதாய்ப் புனைய''வில்லை, ''சூன்யத்திலிருந்து பெற''வில்லை.

தானிய ஏகபோக உரிமை, உணவுப் பங்கீட்டு முறை, சர்வஜனக் கட்டாய உழைப்பு முறை ஆகியவை பாட்டாளி

வர்க்க அரசின் கையில், முழு அதிகாரம் பெற்ற சோவியத்துகளின் கையில், கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புச் செய்வதற்கும் மிக வன்மையுள்ள சாதனமாய் அமையும். முதலாளிகள் மீதும், பொதுவாகப் பணக்காரர்கள் மீதும் தொழிலாளிகளால் பிரயோகிக்கப்படும் போது, இதே சாதனம், முதலாளிகளின் எதிர்ப்பை ஒடுக்குவதற்காகவும் அவர்களைப் பாட்டாளி வர்க்க அரசுக்குப் பணியச் செய்வதற்காகவும் வரலாற்றில் முன் கண்டறியாத அரசாங்க பொறியமைவை "இயக்குவதற்குரிய" ஒரு சக்தியாக இருக்கும். கண்காணிப்பு செய்வதற்கும் உழைக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கும் அமைந்த இந்தச் சாதனம் பிரெஞ்சுக் கன்வென்ஷனின் சட்டங்களை விட, அதன் கில்லோடீன் என்ற தலைவெட்டும் தண்டனைக் கருவியைவிட, அதிக பலம் வாய்ந்ததாக இருக்கும். கில்லோடீன் பயங்கர முறையைக் கையாள மட்டுமே செய்தது, செயல்பூர்வமான எதிர்ப்பை முறித்தெறிய மட்டுமே செய்தது. நமக்கு இது போதாது.

நமக்கு இது போதாது. நாம் முதலாளிகள் மீது "பயங்கர முறையைக் கையாளுவது" மட்டும், அதாவது, பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் சர்வவல்லமையை அவர்கள் உணர்ந்து அதனைச் செயல் பூர்வமாய் எதிர்ப்பது என்ற எண்ணமனைத்தையும் விட்டொழிக்கும்படி செய்வது மட்டும் போதாது. அதோடு கூட, செயலற்ற எதிர்ப்பையும் நாம் உடைத்தெறிய வேண்டும். ஏனெனில் செயல்பூர்வமான எதிர்ப்பைவிட இது சந்தேகமின்றி அதிகம் அபாயமுள்ளது, கேடு செய்ய வல்லது. எல்லாவித எதிர்ப்பையும் உடைத்தெறிவது என்பது மட்டுமின்றி, புதிய அரசாங்க, நிறுவன வரம்புக்குள் முதலாளிகளை வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தவும் வேண்டும். முதலாளிகளை "நீக்கிவிட்டால்" மட்டும் போதாது: (விரும்பத்தகாத, திருத்த முடியாத "எதிர்ப்பாளர்கள்" நீக்கிய பிறகு) புதிய அரசாங்க சேவையில் நாம் அவர்களை அமர்த்த வேண்டும். முதலாளிகளுக்கும் முதலாளித்துவப் படிப்பாளர்கள், அலுவலகச் சிப்பந்திகள் ஆகியோரின் ஒரு குறிப்பிட்ட மேல்தரப் பகுதிக்கும் இது பொருந்தும்.

இதைச் செய்வதற்குரிய சாதனம் நம்மிடம் இருக்கிறது. போரில் ஈடுபட்டுள்ள முதலாளித்துவ அரசுதான் அதற்

கான சாதனத்தையும், ஆயுதத்தையும் நம் கையில் தந்துள்ளது. இச்சாதனம்தான் தானிய ஏகபோக உரிமையும், உணவுப் பங்கீட்டு முறையும், சர்வஜனக் கட்டாய உழைப்பு முறையும் ஆகும். ''வேலை செய்யாதவனுக்கு உணவில்லை'' என்ற அடிப்படையான, முதன்மையான, பிரதானமான விதியைத் தொழிலாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆட்சிக்கு வரும்போது அமுலாக்க முடியும், அமுலாக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு வேலைச் சீட்டு உள்ளது. தற்சமயம் இது சந்தேகமின்றி முதலாளித்துவக் கூலி அடிமை முறைக்குரிய அத்தாட்சிப் பத்திரமாகத்தான், உழைப்பாளி இன்னின்ன புல்லுருவிக்குச் சொந்தமானவன் என்று காட்டும் அத்தாட்சிப் பத்திரமாகத்தான் இருக்கிறது, எனினும் இந்தச் சீட்டு தொழிலாளியை இழிவுபடுத்துவதல்ல.

சோவியத்துகள், வேலைச் சீட்டுகளைப் பணக்காரர்களுக்கும், அதன் பின், படிப்படியாக மக்கள் தொகை முழுவதற்கும் வழங்கும் (ஒரு விவசாய நாட்டில் மிகப் பெரும்பாலான விவசாயிகளுக்கு வெகு காலம் வரைக்கும் வேலைச் சீட்டுகள் ஒருவேளை தேவையில்லாமலே இருக்கலாம்). இந்த வேலைச் சீட்டு ''மக்கள் மந்தையைக்'' குறிக்கும் ஒரு முத்திரைச் சீட்டாக, ''கடைநிலைப்'' பகுதியினரைக் காட்டும் ஒரு தஸ்தாவேஜாக, கூலியடிமை முறையின் அத்தாட்சிப் பத்திரமாக, இனிமேல் இருக்காது. புதிய சமூகத்தில் ''வேலைக்காரர்கள்'' என்று யாருமில்லை என்பதையும், மறு பக்கத்தில் வேலை செய்யாதவர்கள் என யாருமில்லை என்பதையும் காட்டுவதற்குரிய அத்தாட்சிச் சீட்டாக இருக்கும் இது.

பணக்காரர்கள், தங்கள் செயல் துறை எந்தச் சங்கத்தோடு அதிக நெருக்கமாகத் தொடர்புள்ளதோ, அந்தத் தொழிலாளர் அல்லது அலுவலகச் சிப்பந்திகள் சங்கத்திலிருந்து வேலைச் சீட்டு கட்டாயமாகப் பெற்றாக வேண்டும். அவர்கள் மனப்பூர்வமாகத் தங்கள் வேலையைச் செய்து வருகின்றனர் என்று வாராவாரம் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை அச்சங்கத்திடமிருந்து ஓர் அத்தாட்சிப் பத்திரம் பெற்றுவர வேண்டும். இந்த அத்தாட்சிப் பத்திரம் இல்லாவிட்டால் உணவுப் பங்கீட்டுச் சீட்டுகளோ, பொது

வாக உணவுப் பொருள்களோ பெற்றுக் கொள்ள முடியாது. வங்கிகள், தொழில் நிலையங்களின் கூட்டுகளுக்கான நல்ல நிறுவன அமைப்பாளர்கள் நமக்கு தேவை (இவ்விஷயத்தில் முதலாளிகளுக்கு அதிக அனுபவம் உண்டு, அனுபவம் வாய்ந் தவர்களை வைத்துக் கொண்டு வேலை செய்வது எளிது), எஞ் சினீயர்கள், விவசாய நிபுணர்கள், டெக்னீஷியன்கள், விஞ் ஞான முறையில் தனித்தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியோர், முன்னை விட மிகமிக அதிகமான அளவில் தேவை என்று பாட்டாளி வர்க்க அரசு கூறும். இத்தகைய எல்லா வேலைக் காரர்களுக்கும் நாம் அவரவர் திறமைகளுக்குத் தக்கவை யும், அவரவர்களுக்கு ஏற்கெனவே பழக்கமானவையுமான வேலை அளிப்போம். எல்லோருக்கும் சமமான சம்பளம் வழங் குவதை அமுலுக்குக் கொண்டுவருவது படிப்படியாகத்தான் சாத்தியமாகக் கூடும். இடைக்காலத்தில், இந்தத் தனித் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அதிகச் சம்பளம் தருவோம். ஆனால் அவர்களை எல்லா முனைகளிலும் தொழிலாளர் கண் காணிப்பின்கீழ் வைப்போம். ''வேலை செய்யாதவனுக்கு உண வில்லை'' என்ற விதியை விலக்கு எதுவுமின்றி முழுக்க முழுக்க அமுல் நடத்துவோம். நமது வேலையின் நிறுவன வடிவத்தைப் பற்றிக் கூறவேண்டுமானால், நாம் அதனைப் புதிதாகக் கண்டு பிடிக்கப் போவதில்லை; முதலாளித்துவத்தின் கீழ் தயாராக இருக்கும் நிறுவன வடிவத்தை—வங்கிகள், சிண்டிக்கேட்டு கள், சிறந்த பாக்டரிகள், சோதனை நிலையங்கள், விஞ்ஞான அக்காடமிகள் ஆகியவற்றை அப்படியே எடுத்துக் கொள் வோம். ஆம், முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் அனுபவம் அளிக்கும் மிகச் சிறந்த மாதிரிகளை மட்டும் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

முதலாளி வர்க்கம் முழுதும் மிகப் பிடிவாதமாக எதிர்ப் பைக் காட்டும்; ஆனால் மக்கள் எல்லோரும் சோவியத்து களில் நிறுவனரீதியில் ஒன்றுபடுவதால் இவ்வெதிர்ப்பு தகர்த் தெறியப்படும் என்று நாம் கூறுகையில், கொஞ்சங்கூடக் கற்பனை யுலகில் திரியாமல் மிக நிதானமான, காரிய ரீதியான மதிப்பீட்டின் அடிப்படையிலிருந்துதான் பேசுகிறோம். அசா தாரணமான பிடிவாதம் காட்டும், கட்டுக்கு இணங்கி வர மறுக்கும் முதலாளிகளை, அவர்களுடைய எல்லாச் சொத்தை யும் பறிமுதல் செய்து சிறையிலிடுவதன் மூலம் நிச்சய

மாகத் தண்டிக்கத்தான் வேண்டியிருக்கும். ஆனால் மறு பக்கத்தில், பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி, இன்றைய இஸ்வேஸ்தியாவில் நான் படித்தது போன்ற நிகழ்ச்சிகள் தொகை தொகையாய்ப் பெருக்கம் அடையும்படி செய்யும்.

''செப்டம்பர் 26ல், தொழிற்சாலைக் கமிட்டிகளின் மத்திய கவுன்சிலுக்கு இரண்டு இஞ்சினீயர்கள் வந்து, இஞ்சினீயர்களின் ஒரு குழு சோஷலிஸ்டு இஞ்சினீயர்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்கள். இக்காலம் உண்மையிலே சமூகப் புரட்சியின் ஆரம்ப காலம் என்று அச்சங்கம் கருதுவதால் தொழிலாளி மக்களுக்குச் சேவை செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது என்றும், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டுத் தொழிலாளர் நிறுவனங்களுடன் முழு இணக்கத்தோடு வேலை செய்ய விரும்புகிறது என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு தொழிற்சாலைக் கமிட்டிகளின் மத்திய கவுன்சிலைச் சேர்ந்த பிரதிநிதிகள் அளித்த பதிலில் தங்கள் நிறுவனத்துக்குள்ளேயே ஓர் இஞ்சினீயர் பிரிவை மகிழ்ச்சியோடு அமைப்பதாகவும், உற்பத்தியில் தொழிலாளர் கண்காணிப்பு செலுத்துவது சம்பந்தமான தொழிற்சாலைக் கமிட்டிகளின் முதல் மகாநாட்டின் அடிப்படைக் கோட்பாடுகளை அந்த இஞ்சினீயர் பகுதி தனது வேலைத்திட்டத்தில் உட்படுத்திக் கொள்ளும் என்றும் சொன்னார்கள். தொழிற்சாலைக் கமிட்டிகளின் மத்திய கவுன்சில் பிரதிநிதிகளும், சோஷலிஸ்டு இஞ்சினீயர்களின் முன்முயற்சிக் குழுவினரும் சேர்ந்த கூட்டம் ஒன்று அடுத்த சில நாட்களில் நடத்தப்படும் (இஸ்வேஸ்தியா, செப்டம்பர் 27, 1917).

1917 செப்டம்பர் இறுதி—
அக்டோபர் 1 (14)ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 34,
பக்கங்கள் 305-312

தொழிலாளர் கண்காணிப்பு பற்றிய நகல் ஒழுங்குமுறை விதிகள்[31]

1) (மொத்தமாய்) ஐந்து தொழிலாளிகள் அல்லது ஐந்து அலுவலக ஊழியர்களுக்குக் குறையாமல் வேலைக்கு அமர்த்தியுள்ள, அல்லது ஆண்டுக்கு 10,000 ரூபிள்களுக்குக் குறையாத பணப் புரள்வு உடையதான, எல்லாத் தொழிற்துறை, வாணிக, வங்கி, விவசாய மற்றும் இதர நிறுவனங்களில், உற்பத்தி, சரக்கு இருப்பு, எல்லா உற்பத்திப் பண்டங்களையும் மூலப் பொருட்களையும் கொள்முதல் செய்வது, விற்பனை செய்வது ஆகியவற்றின் மீது தொழிலாளர் கண்காணிப்பு கொண்டுவரப்படும்.

2) தொழிலாளர் கண்காணிப்பு ஒரு நிறுவனத்தின் எல்லாத் தொழிலாளர் மற்றும் அலுவலக ஊழியர்களால் செயல்படுத்தப்படும். அதை அனுமதிக்கும் அளவுக்கு நிறுவனம் சிறியதாக இருந்தால் நேரடியாக செயல்படுத்தப்படும். அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அமல் செய்யப்படும். இப்பிரதிநிதிகளைப் பொதுக் கூட்டங்களில் உடனடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இக்கூட்டத்தில் தேர்தல்கள் பற்றிய குறிப்பேடுகள் எடுக்கப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அரசாங்கத்துக்கும், தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்துகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

3) தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அனுமதி வழங்கப்பட்டால் அல்லாமல், அரசு முக்கியத்துவமுடைய ஒரு நிறுவனம் அல்

லது தொழில்துறை நிறுவனத்தின் வேலையை நிறுத்துவதோ (ஷரத்து 7ஐப் பார்க்க) அல்லது அதன் நடப்பில் ஏதேனும் மாறுதல்கள் செய்வதோ கறாராயும் தடை செய்யப்படும்.

4) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லா கணக்கு ஏடுகள் தஸ்தாவேஜுகளையும் பார்க்கவும், மூலப் பொருட்கள், கருவிகள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் எல்லா பண்டசாலைகள் சேமிப்புகளையும் எவ்வித விதிவிலக்குமின்றிச் சென்று பார்க்கவும் வாய்ப்புடையவர்களாவர்.

5) தொழிலாளர், அலுவலக ஊழியர் பிரதிநிதிகளின் முடிவுக்கு நிறுவன உடைமையாளர்கள் கட்டுப்பட வேண்டும். இம்முடிவுகளைத் தொழிற்சங்கங்கள் அவற்றின் காங்கிரசுகளினால் மட்டுமே நீக்கம் செய்ய முடியும்.

6) அரசு முக்கியத்துவம் உடைய எல்லா நிறுவனங்களிலும் எல்லா உடைமையாளர்களும், தொழிலாளர் கண்காணிப்பை அமல் செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர், அலுவலக ஊழியர் பிரதிநிதிகள் எல்லோரும் மிகவும் கறாரான ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணிக்காக்கவும், நிறுவன உடைமையைப் பாதுகாக்கவும் அரசுக்குப் பொறுப்பாளிகளாவர். கடமையில் கவனமின்மை, இருப்புகளை ஒளித்து வைத்தல், கணக்குகளை மறைத்தல் ஆகிய குற்றங்களைச் செய்யும் நபர்கள் தண்டிக்கப்படுவார்கள். அவர்களது சொத்து முழுதும் பறிமுதல் செய்யப்படும், ஐந்தாண்டுகள் வரை சிறைத்தண்டனை அளிக்கப்படும்.

7) அரசு முக்கியத்துவமுடைய நிறுவனங்கள் என்பதன் பொருள், நாட்டுத் தற்காப்புக்காக வேலை செய்யும் எல்லா நிறுவனங்கள் அல்லது மக்கள் திரளின் வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களை உற்பத்தி செய்வதுடன் தொடர்புடைய நிறுவனங்கள் என்பதாகும்.

8) தொழிலாளர் கண்காணிப்புப் பற்றி மேலும் விரிவான விதிகளைத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்துகளும் ஆலைக் கமிட்டிகள், அலுவலக ஊழியர் கமிட்டிகள் ஆகியவற்றின் மாநாடுகளும் (இக்கமிட்டிகளின் பிரதிநிதிகளின் பொதுக் கூட்டங்களில்) தயாரிக்கும்.

1917 அக்டோபர் 26 அல்லது 27ல்
(நவம்பர் 8 அல்லது 9) எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 30-31

தேச மக்களுக்கு

தோழர்களே—தொழிலாளர்களே, படைவீரர்களே, விவசாயிகளே, அனைத்து உழைப்பாளி மக்களே!

தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சி பெத்ரோகிராதில் இறுதியாக வெற்றி பெற்று விட்டது—கேரென்ஸ்கியால் ஏமாற்றப்பட்ட சிறு தொகையினரான கசாக்குகளில் கடைசியாய் எஞ்சியோரும் விரட்டப்பட்டு விட்டனர், அல்லது கைது செய்யப்பட்டு விட்டனர். மாஸ்கோவிலும் புரட்சி வெற்றி வாகை சூடி விட்டது. பெத்ரோகிராதிலிருந்து அனுப்பப்பட்ட துருப்பு ரயில்கள் சிலவும் வந்துசேரும் முன்பே மாஸ்கோவில் ராணுவ மாணவர்களும் கர்னீலவ் கும்பலைச் சேர்ந்த ஏனையோரும் சமாதானத்துக்குரிய நிபந்தனைகளையும் ராணுவ மாணவர்களை நிராயுதபாணிகளாக்குதலையும் இரட்சணியக் கமிட்டியைக்[32] கலைத்தலையும் ஏற்றுக்கையொப்பமிட்டுவிட்டனர்.

புதிய அரசாங்கத்துக்கும், அதன் சமாதான அரசாணைக்கும், நிலத்தை உடனடியாய் விவசாயிகளுக்கு மாற்றும் அரசாணைக்கும், போர்முனையிலுள்ள படையாட்களிலும் கிராமாந்திரங்களிலுள்ள விவசாயிகளிலும் மிகப் பெருவாரியானோரின் ஆதரவைத் தெரிவித்துப் போர்முனையிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் நாள்தோறும் மணிதோறும் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. பெரும்பான்மையான மக்கள் ஏற்கெனவே புரட்சியின் பக்கம் சேர்ந்து கொண்டுவிட்டதால் தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சியின் வெற்றி உறுதியாகி விட்டது.

நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் மற்றும் முதலாளிகளுடன் நெருக்கமான தொடர்புடைய அலுவலகச் சிப்பந்திகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் மேல் மட்டத்துக் கோஷ்டிகளும்—சுருங்கக் கூறின் செல்வந்தர்களும் அவர்களை ஆதரிப்போரும்—இந்தப் புதிய புரட்சியிடம் பகைமை காட்டுகின்றனர், இதன் வெற்றியை எதிர்க்கின்றனர், வங்கிகளை மூடப் போவதாய் அச்சுறுத்துகின்றனர், பல்வேறு அலுவலகங்களின் வேலைகளைச் சீர்குலைத்தும் பூரணமாய் நின்றுவிடச் செய்தும் வருகிறார்கள், பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் எல்லா வழிகளிலும் புரட்சிக்குத் தடை போட்டு வருகிறார்கள். இவையெல்லாம் முற்றிலும் புரிந்து கொள்ளக் கூடியவையே. இத்தகைய எதிர்ப்பு தவிர்க்க முடியாதபடி ஏற்படவே செய்யுமென்பது அரசியல் உணர்வுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் நன்கு அறிந்ததுதான். போல்ஷிவிக் கட்சிப் பத்திரிகைகள் யாவும் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் இது குறித்து எழுதி வந்திருக்கின்றன. உழைக்கும் வர்க்கங்கள் இந்த எதிர்ப்பைக் கண்டு கணப் பொழுதும் கலக்கமடையப் போவதில்லை. முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்களது அச்சுறுத்தல்களையும் வேலைநிறுத்தங்களையும் கண்டு எவ்விதத்திலும் அவை தயங்கப் போவதில்லை.

பெரும்பான்மையான மக்கள் நம் பக்கம் உள்ளனர். உலகெங்கும் உழைப்பாளரும் ஒடுக்கப்பட்டோருமான மக்களின் பெரும்பான்மையோர் நம் பக்கமே இருக்கிறார்கள். நமது இலட்சியம் நேர்மையானது. வெற்றி நமதே என்பது உறுதியாகிவிட்டது.

முதலாளிகள், மேல் மட்டத்து அதிகாரிகள் ஆகியோரது எதிர்ப்பு தகர்க்கப்பட்டுவிடும். வங்கிகளையும் சிண்டிக்கேட்டுகளையும் தேசவுடைமையாக்கும் விசேஷ அரசுச் சட்டத்தின் கீழ் வருவோரைத் தவிர்த்து எந்த ஒருவரும் தமது சொத்துக்களை இழக்க வேண்டியிராது. இந்த விசேஷச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. உழைப்பாளி மக்களில் எந்த ஒருவருக்கும் ஒரு கோப்பெக்குகூட நஷ்டம் ஏற்படாது, மாறாக அவருக்கு உதவி வழங்கப்படும். மிகவும் கண்டிப்பான கணக்கீட்டையும் கண்காணிப்பையும் அன்னியில், நிர்ணயமான வரிகளை முழு அளவில் வசூலிப்பதை அன்னியில், வேறு எந்தச் சட்ட நடவடிக்கையையும்

மேற்கொள்ளும் உத்தேசம் அரசாங்கத்திடம் இல்லை.

இந்த நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து மிகப் பெருவாரியான மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகளது இடைக்கால அரசாங்கத்தின் பின்னால் அணி திரண்டுள்ளனர்.

தோழர்களே, உழைப்பாளி மக்களே! இப்பொழுது நீங்களேதான் அரசின் ஆட்சிப் பீடத்தில் இருக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள். நீங்கள் தாமே ஒன்றுபட்டு அரசின் எல்லா விவகாரங்களையும் உங்களுடைய கைகளில் எடுத்துக் கொள்ளாவிடில் யாரும் உங்களுக்குத் துணைபுரியப் போவதில்லை. இப்பொழுது முதலாய் உங்களுடைய சோவியத்துகள்தான் அரசு அதிகார உறுப்புகள், முழு அதிகாரம் படைத்த சட்ட மன்றங்கள்.

உங்களுடைய சோவியத்துகளை மையமாய்க் கொண்டு ஒன்றுதிரளுங்கள். அவற்றைப் பலப்படுத்துங்கள். நேரில் நீங்களே பணியில் இறங்குங்கள்; அடியிலிருந்து தொடங்குங்கள். வேறு யாருக்காகவும் காத்திராதீர்கள். மிகக் கண்டிப்பான புரட்சிகரச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுங்கள். குடிகாரர்களும் குண்டர்களும் எதிர்ப்புரட்சி ராணுவ மாணவர்களும் கர்னீலவ் கும்பலைச் சேர்ந்தோரும் இன்னபிறரும் அராஜகத்தை உண்டாக்க மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளையும் ஈவிரக்கமின்றி நசுக்குங்கள்.

பொருளுற்பத்தி, பண்டக் கணக்கீடு இவற்றின் மீது மிகக் கண்டிப்பான கண்காணிப்பை நிறுவுங்கள். மக்களுடைய இலட்சியத்துக்குத் தீங்கிழைக்கத் துணிவோர் எல்லோரையும்—அவர்கள் இழைக்கும் தீங்கு உற்பத்தியைச் சீர்குலைப்பதாய் (சேதம் உண்டாக்குதல், தாமதப்படுத்தல், கவிழ்த்தல்) இருப்பினும் சரி, தானியத்தையும் பண்டங்களையும் கள்ளச் சேமிப்பு செய்வதாய், தானிய அனுப்பீடுகளுக்கு இடையூறு செய்வதாய், ரயில் போக்குவரத்தையும் தபால், தந்தி, தொலைபேசி வசதிகளையும் சீர்குலைப்பதாய் இருப்பினும் சரி, மாபெரும் சமாதான லட்சியத்துக்கோ நிலத்தை விவசாயிகளுக்கு மாற்றும் லட்சியத்துக்கோ உற்பத்தியின் மீதும் பண்ட வினியோகத்தின் மீதும் தொழிலாளர் கண்காணிப்பை உறுதி செய்யும் லட்சியத்துக்கோ எவ்வகையிலும் எதிராய்ச் செயல்படுவதாய் இருப்பினும் சரி, இவர்கள்

எல்லோரையும்—கைது செய்து புரட்சிகர நீதி மன்றங்கள் வசம் ஒப்படையுங்கள்.

தோழர்களே, தொழிலாளர்களே, படைவீரர்களே, விவசாயிகளே, அனைத்து உழைப்பாளி மக்களே! ஆட்சியதிகாரம் அனைத்தையும் உங்களுடைய சோவியத்துகளின் கைகளிலே எடுத்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் இருங்கள், உங்களுடைய நிலத்தையும் தானியத்தையும் ஆலைகளையும் இயந்திர சாதனங்களையும் பண்டங்களையும் போக்குவரத்து வசதிகளையும்—இப்பொழுது முதல் முற்றிலும் உங்களுடைய சொத்தாகிவிடும், பொதுச் சொத்தாகிவிடும் இவை யாவற்றையும்—கண்ணின் கருமணியென பாதுகாத்திடுங்கள். படிப்படியாய், விவசாயிகளில் பெரும்பான்மையோரது உடன்பாட்டுடனும் அங்கீகாரத்துடனும், அவர்களுடையதும் மற்றும் தொழிலாளர்களுடையதுமான நடைமுறை அனுபவத்துக்கு ஏற்ப நாம் உறுதியாகவும் பிறழாமலும் சோஷலிசத்தின் வெற்றியை நோக்கி முன்னேறிச் செல்வோம்—மிகுந்த நாகரிக வளர்ச்சியுடைய நாடுகளின் முன்னேறிய தொழிலாளர்கள் முத்தாய்ப்பு வைத்துப் பூர்த்தி செய்யப் போகும் இந்த வெற்றி எல்லா நாடுகளின் மக்களுக்கும் நிலையான சமாதானம் கிட்டச் செய்யும், எல்லாவித ஒடுக்குமுறையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் அவர்களை விடுவிக்கும்.

1917, நவம்பர் 5,
பெத்ரோகிராத்.

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் தலைவர்

வி. உலியானவ் (லெனின்)

பிராவ்தா, *இதழ் 4*
(மாலை இதழ்),
நவம்பர் 19 (6), 1917

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 65-67

வாடகைக்கு விடப்படும் குடியிருப்பு வீடுகளின் பறிமுதல் பற்றிய ஒரு சட்டத்திற்கான ஆய்வுரைகள்[33]

1) அனைத்து (நகர்ப்புற) நிலமும் நாட்டின் உடைமை யாக்கப்படும்.

2) முறையாக வாடகைக்கு விடப்படும் குடியிருப்பு வீடு கள் பறிமுதல் செய்யப்பட்டு, அவை நாட்டின் உடைமை யாகும்.

3) வாடகைக்கு விடப்படாத குடியிருப்பு வீடுகளின் சொந் தக்காரர்கள், அரசியல் நிர்ணய சபையின் முடிவு வரை, உடைமை உரிமைகளில் மாற்றம் ஏதும் இன்றி அவற்றின் சொந்தக்காரர்களாக நீடித்து இருப்பார்கள்.

4) பல மாத வாடகைப் பணம் (2 முதல் 3 மாதங்கள்) நஷ்ட ஈடாகத் தங்களது நிரூபணம் செய்யக்கூடிய பறிமுதல் செய்யப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு....*

5) வாடகை வசூலிப்பது (யார்?) சோவியத்துகளே (சோவியத்துகளின் நடப்புக் கணக்கில் இதைச் செலுத்த வேண்டும்).

6) கட்டிட நிர்மாண கமிஷன்கள் (தொழிற்சங்கங்கள் + கட்டிட நிர்மாண அலுவலகங்களின் கூட்டம்) வீடு நிர்வாகம் பற்றிய பொறுப்பினை எடுத்துக் கொள்ளும் (எரிபொருள் முதலியன).

7) வாடகை செலுத்துவது உடனடியாக அமலுக்கு வந் தாக வேண்டும்.

8) கட்டிட நிர்மாண மற்றும் நிர்வாகக் கமிஷன்கள் படிப்

---

* இந்த வாக்கியம் முடிவு பெறவில்லை.—ப-ர்.

படியாக அமலுக்கு வந்தாக வேண்டும்; தொழிற்சங்கங்கள் மற்றும் சோவியத்துகள் அவைகளை எப்போது நிறுவுகின்றனவோ அப்போது இவை அமலுக்கு வரலாம்.

9) வீடுகளைச் சூடுபடுத்துவது மற்றும் அவற்றின் வழக்கமான பராமரிப்பு ஆகியவை வீட்டுக் கமிட்டிகளது கடமையாகும்; இதர நிறுவனங்களது (தொழிற்சங்கங்கள், சோவியத்துகள், நகர கவுன்சிலின் எரிபொருள்துறை அலுவலகம் முதலியவற்றின்) கடமையுமாகும்.

1917 நவம்பர் 20 (டிசம்பர் 3)ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கம் 108

அ. க. ஷ்லியாப்னிக்கவ் மற்றும் ஃபெ. எ. திஸெர்ஷீன்ஸ்கிக்கு

தோழர் ஷ்லியாப்னிக்கவ் மற்றும் தோழர் திஸெர்ஷீன்ஸ்கி அவர்களே!

இக்கடிதம் கொண்டுவரும் தோழர் வரபியோவ், உரால் மலைப்பிரதேசத்திலிருந்து வரும் ஒரு பிரதிநிதி, இவரது உள்ளூர் அமைப்பிலிருந்து இவருக்கு நல்ல அத்தாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. உரால் பிரதேசத்தில் மிகவும் நெருக்கடியானதொரு சிக்கல் தோன்றியுள்ளது. இங்குள்ள (பெத்ரோகிராதிலுள்ள உரால் தொழிற்சாலைகளின் நிர்வாகஸ்தர்கள்) உடனடியாகக் கைது செய்யப்படவேண்டும். உரால் பிரதேசத்தில் நெருக்கடி நிலை உருவாக்கப்பட்டதற்காக இவர்களுக்கு எதிராக (புரட்சிகர) நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று அச்சுறுத்தப்பட வேண்டும். அதே சமயம் உராலில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இதற்கோர் நகல் அரசாணையைத் தயார் செய்திடுக.[34]

லெனின்

1917 நவம்பர் கடைசியில் (டிசம்பர் துவக்கத்தில்) எழுதப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 50, பக்கம் 16

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் தொழிலாளர் பிரிவின் கூட்டத்தில் பெத்ரோகிராத் தொழிலாளரின் பொருளாதார நிலை மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் குறித்து ஆற்றிய உரை

டிசம்பர் 4 (17) 1917

பத்திரிகைச் செய்தி

அக்டோபர் 25ந் தேதியப் புரட்சி பாட்டாளி வர்க்கத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த அரசியல் முதிர்ச்சியையும் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக உறுதியாக நிற்பதற்குரிய அதன் ஆற்றலையும் புலப்படுத்தி விட்டது. எனினும் சோஷலிசத்தின் முழுமையான வெற்றிக்கு பாட்டாளி வர்க்கம் திண்ணமாயும் ஆளும் வர்க்கமாக வேண்டும் என்ற உணர்வு நிரம்பியதான பிரம்மாண்டமான ஒழுங்கமைப்பு முயற்சி அவசியம்.

அரசு அமைப்பை சோஷலிஸ்டு வழிகளில் உருமாற்றுவதற்கான கடமைகள் பாட்டாளி வர்க்கத்தின் முன் உள்ளன. காரணம் ஒரு நடுப்பாதைக்கு ஆதரவாக வாதங்களை எடுத்துக் கூறுவது எவ்வளவு எளிதாக இருந்த போதிலும் அத்தகைய பாதை முக்கியமில்லாதது. நாட்டின் பொருளாதார நிலைமை எட்டிவிட்ட நிலையில் நடுப்பாதை எதற்கும் இடமே இல்லை. ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்த மகத்தான போராட்டத்தில் அரைகுறை நடவடிக்கைகளுக்கு இடமே இல்லை.

விவாதத்துக்குரிய பிரச்சினை—வெற்றியா தோல்வியா என்பதே.

தொழிலாளர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும், அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். இது தெளிவானது. காரணம் அவர்கள் இடைவழியான சமரச முடிவுகளை நிராகரித்தார்கள். புரட்சி எந்தளவு அதிக ஆழ்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவத்தை ஒரு சோஷலிஸ்டு

பொறியமைவு மூலம் மாற்றீடு செய்வதை வெற்றிகரமாக்க மேலும் அதிக அளவில் செயலூக்கமுள்ள ஊழியர்கள் தேவை. சீர்குலைவு எதுவும் இல்லாவிடினும் கூட குட்டிமுத லாளித்துவ சக்திகள் போதுமானவை அல்ல. இந்தப் பணி மக்கள் திரளை ஈடுபடுத்துவது மூலம் மட்டுமே, மக்கள் திர ளின் சுயேச்சையான செயல்பாடுகள் மூலம் மட்டுமே வெற்றி கரமாக நிறைவேற்றப்படும் ஒன்ருகும். எனவே பாட்டாளி வர்க்கம் தற்போதைக்குத் தனது நிலைமையை மேம்படுத்திக் கொள்வது பற்றி எண்ணக் கூடாது, மாருக ஆளும் வர்க்க மாக ஆவது குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டுப் புறத்துப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நலன்கள் குறித்து தெளிவாயும் உறுதியாயும் உணர்கிறது என்று எதிர் பார்க்க முடியாது. தொழிலாளி வர்க்கம் மட்டுமே அவ்வாறு உணர முடியும். மாபெரும் எதிர்கால வாய்ப்புகள் பற்றி உணரும் ஒவ்வொரு பாட்டாளியும் தன்னை ஒரு தலைவனுக உணர்ந்து மக்கள் திரளைத் தன்னுடன் கொண்டு செல்ல வேண்டும்.

உழைக்கும் எல்லோருக்கும் தலைவனுக இருக்கிறது என்ற பொருளில், பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கம் ஆக வேண் டும்; அது அரசியல் ரீதியில் ஆளும் வர்க்கம் ஆக வேண்டும்.

முதலாளி வர்க்கம் மட்டுமே அரசை நடத்த முடியும் என்ற தப்பெண்ணத்தை எதிர்த்துப் போராட வேண்டும். பாட்டாளி வர்க்கம் அரசின் நிர்வாகத்தைத் தானே எடுத்துக் கொள்ள வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் பணிகளைச் சிக்கலாக்குவதற்கு முதலாளிகள் தம்மால் இயன்ற சகலத்தையும் செய்து வரு கிருர்கள். பொருளாதாரத் துறையில் எல்லாத் தொழிலாளி வர்க்க நிறுவனங்களும்—தொழிற்சங்கங்கள், ஆலைக் கமிட்டி கள் மற்றும் பிற—ஒரு வைராக்கியமான போராட்டத்தை நடத்த வேண்டும். தொழிலாளி வர்க்கப் புரட்சியைத் தகர்க் கும் பொருட்டு முதலாளி வர்க்கம் எல்லாவற்றையும் பாழ் படுத்தி வருகிறது, எல்லாவற்றையும் நாசப்படுத்தி வரு கிறது. உற்பத்தியை ஒழுங்கமைக்கும் பணிகள் முற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மீது சுமந்தது. அரசு விவகாரங் களும், வங்கிகள் மற்றும் ஆலைகளை நிர்வாகம் செய்வதும் தொழிலாளர்களின் சக்திக்கு அப்பாற்பட்டவை என்ற தப்

பெண்ணத்தை என்றென்றைக்குமாக ஒழித்துக் கட்ட வேண்டும். பிரம்மாண்டமான அன்றாட ஒழுங்கமைப்பு வேலை மூலம் மட்டுமே இவை அனைத்துக்கும் தீர்வு காண முடியும்.

பண்டங்கள் பரிமாற்றத்தை ஒழுங்கமைப்பதும், முறையான கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் புகுத்துவதும் மிகவும் முக்கியமானவை. இவை தொழிலாளி வர்க்கத்தின் பணிகளாகும். இவற்றை வெற்றிகரமாகச் செய்வதற்குத் தேவையான ஞானத்தை ஆலை வாழ்க்கை தொழிலாளி வர்க்கத்துக்கு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு ஆலைக் கமிட்டியும் தனது சொந்த ஆலையின் விவகாரங்களில் மட்டும் அக்கறை செலுத்தினால் போதாது; அரசு முழுதிலுமான வாழ்க்கையை முறைப்படுத்த உதவும் ஸ்தாபன குழுவாகவும் விளங்க வேண்டும்.

தனியுடைமைச் சொத்துக்களை ஒழிப்பது பற்றி ஓர் அரசாணை பிறப்பிப்பது எளிது. ஆனால் இதைத் தொழிலாளர் மூலம் மட்டுமே அமுல்படுத்த வேண்டும், அமுல்படுத்த முடியும். தவறுகள் ஏற்படும்—இவை ஒரு புதிய வாழ்க்கைப் பாதையினைப் படைத்து வரும் ஒரு புதிய வர்க்கத்தின் தவறுகளாகவே இருக்கும்.

பொருளாதார வாழ்வை ஒழுங்கமைப்பதற்கு ஒரு உறுதியான திட்டம் இருக்கவில்லை, இருந்திருக்க முடியாது.

எவராலும் திட்டம் ஒன்றை வழங்கி இருக்க முடியாது. ஆனால் மக்கள் திரளால் அவர்களது அனுபவத்தின் மூலம் கீழ்மட்டத்திலிருந்து வழங்கி இருக்க முடியும். நெறிமுறைகள் நிச்சயமாயும் அளிக்கப்படும், செல்வழி சுட்டப்படும், ஆனால் மேல்மட்டத்தில் இருந்தும் கீழ்மட்டத்தில் இருந்தும் ஏககாலத்தில் தொடங்க வேண்டுவது அவசியம்.

சோவியத்துகள் ருஷ்யாவில் எல்லா உற்பத்தியையும் ஒழுங்கியக்கம் செய்யும் அமைப்புகள் ஆக வேண்டும். ஆனால் அவை துருப்புக்கள் இல்லாத ராணுவத் தலைமையகங்கள் ஆகிவிடாமல் இருக்க, கீழ்மட்டங்களில் வேலை செய்ய வேண்டுவது அவசியம்....*

---

* தெளிவில்லாத சில சொற்கள் நீக்கப்பட்டுள்ளன.—ப-ர்.

நாடு தழுவிய அளவில் கண்காணிப்பையும் உற்பத்தியையும் ஒழுங்கமைக்கத் தொழிலாளி வர்க்க மக்கள் திரள் ஆரம்பிக்க வேண்டும். தனிநபர்களின் அமைப்பு அல்ல மாறாக, எல்லா உழைக்கும் மக்களையும் கொண்ட அமைப்பு இவற்றியை உத்தரவாதம் செய்யும். நாம் அதைச் சாதித்தால், பொருளாதார வாழ்வை நாம் ஒழுங்குபடுத்தினால் எங்களை எதிர்த்து நிற்கும் சகலமும் தாமாகவே மறைந்து போகும்.

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 146-148

வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை[35]
1917 டிசம்பர் 14 (27)

குறிப்பேடுகள்

நாம் ஓர் அகாதமான பள்ளத்தை நோக்கி, நிச்சயமான நாசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று வலியுறுத்துவது மூலம் முன்னால் பேசியவர் நம்மை அச்சுறுத்த முயன்றார். ஆனால் இந்த அச்சுறுத்தலில் நமக்குப் புதியதாக எதுவும் இல்லை. இந்தப் பேச்சாளர்[36] சேர்ந்து நிற்கும் கோஷ்டியின் கருத்துக்களை வெளியிடும் செய்திப் பத்திரிகையான நோவயா ஷீஸ்ன் நமது புரட்சியானது குழப்பங்களையும் அராஜகமான கலவரங்களையும் தவிர வேறு எதையும் கொண்டு வராது என்று அக்டோபர் நாட்களுக்கு முன்பாகக் கூறியது. எனவே நாம் தவறான பாதையில் பயணம்செய்வது பற்றிய பேச்சு முதலாளித்துவ மனப்பாங்கின் ஒரு பிரதிபலிப்பேயாகும். அக்கறை இல்லாத நபர்களும் கூட ஒழித்தமைவு செய்ய இயலாது. (சர்வதேசியவாதிகள் மத்தியிலிருந்து குரல்: ''வாய்வீச்சு!'') இல்லை இது வாய்வீச்சு அல்ல. கோடரி பற்றி நீங்கள் இடையறாது பேசுவதுதான் வாய்வீச்சு.

அரசாணையில் முன்வைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மட்டுமே கண்காணிப்பை உத்தரவாதம் செய்வதற்கான உறுதியான வழி.

பொறியமைவின் கடுஞ்சிக்கல், அதன் எளிதில் நொறுங்கும் இயல்பு, பிரச்சினையின் சிக்கலான தன்மை பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்—இவை எல்லோரும் அறிந்த சர்வசாதாரண உண்மைகள். ஆனால் இந்த உண்மைகள் எல்லா சோஷலிஸ்டு நடவடிக்கைகள் மீதும் தடைபோடுவதற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுமானால், அந்தக் கொள்கையை மேற்கொள்

ளும் எவரும் ஒரு வாய்வீச்சு வீரரே, ஆபத்தான ஒரு வாய் வீச்சு வீரரே என்று நாம் கூறுகிறோம்.

சேமநிலவறைகளில் கணக்குப் பரிசோதனை தொடங்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால் அவற்றில் தஸ்தாவேஜுகளும் பத்திரங்களும் தவிர வேறு எதுவும் இல்லை என்று கற்றறிந்த நிபுணர்கள் எம்மிடம் சொல்கிறார்கள். அப்படியானால் மக்கள் பிரதிநிதிகள் அவற்றைச் சரிபார்ப்பதில் தவறு என்ன?

அவர்கள் சொல்வது உண்மையானால் நம்மை விமர்சனம் செய்யும் இதே கற்றறிந்த நிபுணர்கள் இதைப் பகிரங்கமாக ஏன் எடுத்துக் கூறுவதில்லை? கவுன்சில் முடிவுகள் செய்யும் போதெல்லாம் அவர்கள் ஒப்புக்கொள்வதாக, கோட்பாடு அளவில் மட்டுமே ஒப்புக் கொள்வதாகச் சாற்றுகிறார்கள். இதுவே முதலாளித்துவ அறிவு ஜீவிகளின் எல்லா சமரச வாதிகளின் பாதையாகும். அவர்கள் கோட்பாடு அளவிலான இடையறாத உடன்பாடு மற்றும் நடை முறையிலான வேறுபாடு மூலம் எல்லாவற்றையும் நாசப்படுத்துகிறார்கள்.

இவை எல்லாம் பற்றி உங்களுக்கு இவ்வளவு அதிகமாகத் தெரிந்திருந்து, அனுபவமும் ஏற்பட்டிருக்குமானால், எங்களுக்கு ஏன் உதவக் கூடாது? எமது இடர்ப்பாடான பணிகளில் உங்களிடமிருந்து நாச வேலை தவிர வேறு எதுவும் கிட்டாதது ஏன்?

நீங்கள் சரியான விஞ்ஞான பூர்வமான தத்துவத்தில் இருந்து இயங்கத் தொடங்குகிறீர்கள். ஆனால் எங்களுக்கோ தத்துவம் மேற்கொள்ள வேண்டிய செயல்களின் அடிப்படையாக இருக்கிறது, இந்தச் செயல்களில் எங்களுக்கு நம்பிக்கை தருகிறது, படுமோசமான பீதியை ஏற்படுத்துவதில்லை. ஒரு துவக்கத்தைச் செய்வது இடர்ப்பாடானது என்பது மெய்யே. மேலும் நாம் எளிதில் நொறுங்கும் பல சாதனங்களை எதிரிட நேர்கிறது. இருந்த போதிலும் நாம் அவற்றைச் சமாளித்துள்ளோம், அவற்றைச் சமாளித்து வருகிறோம், தொடர்ந்து அவற்றை சமாளிப்போம்.

ஒவ்வொரு புதிய முன்னேற்றப் படியையும் தடை செய்யவும், புதியவை குறித்த நிரந்தரமான அச்சத்தைப் புகட்டுவது தவிர வேறு எந்தக் காரியத்துக்கும் புத்தகப்படிப்பு உதவவில்லை என்றால் அது பயனற்றதாகும்.

எதிர்த்துப் போராடாமல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல், பழைய உலகினை இரும்புப் பிடியில் பற்றிப் பிடிக்காமல் வெற்றி சாத்தியம் என்று கற்பனுவாத சோஷலிஸ்டுகள் நீங்கலாக, வேறு யாரும், என்றும் துணிந்து உரைத்தது கிடையாது.

இந்த சர்வாதிகாரத்தைக் கோட்பாடு அளவில் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள், ஆனல் அந்தச் சொல் ருஷ்யனில் மொழிபெயர்க்கப்படும் போதும் ஓர் ''இரும்புப் பிடி'' என்று கூறி, நடைமுறையில் பிரயோகிக்கப்பட்ட போதும் நீங்கள் இந்த விவகாரத்தின் எளிதில் நொறுங்கும் இயல்பு மற்றும் சிக்கலான தன்மை குறித்து எம்மை எச்சரிக்கை செய்கிறீர்கள்.

அழிக்கும் இரும்புக் கரம் படைக்கவும் செய்கிறது என்பதைப் பிடிவாதமாகக் காண மறுக்கிறீர்கள். கோட்பாடுகளில் இருந்து செயல்களை நோக்கிச் செல்வது எமக்குச் சந்தேகமன்னியில் சாதகமானதாகும்.

கண்காணிப்பைச் செயல்படுத்துவதற்காக நாம் வங்கி அதிபர்களை அணுகினேம். கடன்கள் முழுமையான கண்காணிப்பின் கீழ் பெறப்பட்டுச் சரியானபடிக் கணக்கு வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அவர்களுடன் சேர்ந்து வகுத்து விட்டோம். அவர்கள் அவற்றை ஒப்புக் கொண்டார்கள். ஆனல் மக்களின் நலன்களை மனமாற ஆதரிக்கும் வங்கி ஊழியர்களில் சில நபர்கள் எம்மிடம் சொன்னர்கள்: ''அவர்கள் உங்களை ஏமாற்றுகிருர்கள். உங்களை நேரடியாகப் பாதிக்கும் அவர்களது குற்றகரமான செயலை உடனடி விரைவாகத் தடை செய்யுங்கள்'' என்று. நாங்கள் விரைந்து செயல்பட்டோம்.

இது ஒரு சிக்கலான நடவடிக்கை என்பதை நாம் உணர்கிறேம். நம்மில் எவரும், பயிற்சி பெற்ற பொருளியலாளர்களும் கூட இதை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொள்ள முடியாது. எமது கரங்களில் சாவிகள் கிடைத்த பிறகு மட்டுமே, இந்த வேலையில் ஈடுபட்டுள்ள நிபுணர்களை நாம் அழைப்போம். அப்புறம் முன்னுள் கோடீச்வரர்கள் இடையில் இருந்தும் கூட ஆலோசகர்களை நாம் பெற முடியும். ஒவ்வொரு புரட்சிகர முன்முயற்சியையும் கேவலம் சொல் அளவுக்குக் குறுக்க அவர் முயலாத வரையில் வேலை செய்ய விரும்பும்

எவரையும் நாம் அழைக்கிறோம். அவ்வாறு முயல்வதைத் நாம் சகிக்க மாட்டோம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற சொற்களை நாம் முழுமையான காரியப்பற்றுடன்தான் பயன்படுத்துகிறோம். அந்த சர்வாதிகாரத்தை நிச்சயம் செயல்படுத்துவோம்.

வங்கிகளுடன் நாம் உடன்பாட்டு வழிமுறைகளைக் கையாள விரும்பினோம். ஆலைகளுக்கு நிதி உதவுவதற்காகக் கடன்களை வங்கிகளுக்கு வழங்கினோம். ஆனால் அவைகள் முன் என்றும் கண்டிராத வகையில் சீர்குலைவு வேலை நடத்தின. நடைமுறை அனுபவம் வேறு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி எம்மை நிர்ப்பந்தித்தது.

இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களில்[37] ஒரு தோழர் வங்கிகளை உடனடியாகத் தேசவுடைமையாக்குவதற்குக் கோட்பாடு அளவில் அவர்கள் வோட்டளிப்பார்கள் எனவும், பிறகு சாத்தியமான அளவு ஆகக் குறைந்த காலத்துக்குள் நடைமுறை நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதில் அவர் பிழை புரிந்து விட்டார். ஏனெனில் நமது நகலில் கோட்பாடுகள் தவிர வேறு எதுவும் இல்லை. தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் இதை விவாதிக்கக் காத்திருக்கிறது. ஆனால் அரசாணை ஏற்கப்படாவிடில் வங்கிகள் உடனே பொருளாதாரத்தை மேலும் சீர்குலைப்பதற்கான சகலத்தையும் செய்யும்.

இந்த அரசாணையை அங்கீகரிப்பது அவசரமானது. இல்லையேல் எதிர்ப்பும் சீர்குலைவும் நம்மை அழித்து விடும். **(ஆரவாரமான கரவொலி.)**

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 171-173

வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை

நெருக்கடியான உணவு நிலைமையும், லாபக்கொள்ளையாலும் முதலாளிகள் மற்றும் அதிகாரிகளின் சீர்குலைவாலும் பொதுவான பொருளாதாரச் சீரழிவாலும் ஏற்பட்ட பஞ்சத்தின் அச்சுறுத்தலும், இந்தத் தீமையை எதிர்த்துப் போராட அசாதாரணமான புரட்சிகர நடவடிக்கைகள் எடுப்பதை அவசர அவசியமாக்கிவிட்டது.

நாட்டின் எல்லாக் குடிமக்களும் இதில் முதன்மையாக உழைக்கும் வர்க்கங்கள் அனைத்தும் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் தலைமையில் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள இயலுமாறு செய்யவும், நாட்டின் பொருளாதார வாழ்க்கையை உடனடியாகவும் சர்வாம்ச ரீதியிலும் சகஜப்படுத்தவும், இதற்காக எவ்விதத் தயக்கமும் இன்றி மிகவும் புரட்சிகரமான முறையில் செயல்படவும் பின்வரும் விதிகள் அரசாணையாகப் பிறப்பிக்கப்படுகின்றன:

வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை

1. எல்லா கூட்டுப் பங்கு நிறுவனங்களும் அரசின் சொத்து என்று பிரகடனம் செய்யப்படும்.

2. கூட்டுப்பங்கு நிறுவனங்களின் போர்ட் உறுப்பினர்

கள், டைரக்டர்கள் மற்றும் செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த எல்லாப் பங்குதாரர்களும் (அதாவது 5,000 ரூபிளுக்கு மேல் அதிகமான மதிப்புள்ள சொத்து வைத்திருப்பவர்கள் அல்லது மாதம் 500 ரூபிளுக்கு மேல் வருமானம் பெறுபவர் கள்) இந்த நிறுவனங்களின் அலுவல்களைச் சரியான முறையில் நடத்தவும், தொழிலாளர் கண்காணிப்புப் பற்றிய சட்டத் தைக் கடைப்பிடிக்கவும், எல்லாப் பங்குகளையும் அரசு வங்கி யிடம் வழங்கவும், தமது செயல்பாடுகள் குறித்து தொழி லாளர்கள், படையாளர்கள், விவசாயிகளின் உள்ளூர் சோவி யத்துகளுக்கு வாரந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்கவும் கடப் பாடுடையவர்களாவர்.

3. வெளிநாட்டு உள்நாட்டு அரசுக் கடன்கள் யாவும் தள்ளுபடி செய்யப்பட்டன (ரத்துச் செய்யப்பட்டன).

4. பத்திரங்கள் மற்றும் எல்லா வகையான பங்குகளும் வைத்திருக்கும் சிறு பங்குதாரர்கள், அதாவது, மக்களிடை யான உழைக்கும் வர்க்கங்களைச் சேர்ந்த சிறுபங்குதாரர் களின் நலன்களுக்கு முற்றுக உத்தரவாதம் அளிக்கப்படும்.

5. சர்வஜனக் கட்டாய உழைப்பு கொண்டுவரப்படு கிறது. பதினாறுக்கும் ஐம்பத்தைந்துக்கும் இடையிலான வயதில் உள்ள ஆண் பெண் இருபாலரும் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் உள்ளூர் சோவியத்துகள் அல்லது சோவியத் ஆட்சியின் இதர உறுப்பு கள் அவர்களுக்கு வகுத்தளிக்கும் வேலையைச் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

6. சர்வஜனக் கட்டாய உழைப்பைக் கொண்டுவருவதற் கான முதற்படி என்ற முறையில் செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள் (பாரா 2 பார்க்க) நுகர்வாளர்-தொழிலா ளர் ஏட்டுப்புத்தகங்கள் அல்லது வரவுசெலவு-தொழிலாளர் ஏட்டுப்புத்தகங்களை வைத்திருக்க வேண்டும், அவற்றில் பதிவுகள் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். இவை ஒவ் வொருவரும் மேற்கொண்ட வேலை நிறைவேற்றம் பற்றி வாரந்தோறும் பதிவு செய்வதற்காகப் பொருத்தமான தொழிலாளர் அமைப்புகளுக்கோ அல்லது உள்ளூர் சோவி யத்துகள் மற்றும் அவற்றின் உறுப்புகளுக்கோ சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

7. உணவு இதர அவசியப் பொருட்களின் சரியான

கணக்குப்பதிவு மற்றும் விநியோகம் ஆகிய காரியங்களுக்காக நாட்டில் உள்ள எல்லாக் குடி மக்களும் கட்டாயமாக ஒரு நுகர்வாளர் சங்கத்தில் சேர வேண்டும். உணவு போர்டுகள், வழங்கீடுக் கமிட்டிகள் மற்றும் இதேபோன்ற இதர அமைப்புகள், அவற்றுடன் கூட ரயில்வே மற்றும் போக்குவரத்து சங்கங்கள், தொழிலாளர்கள் படையாளர்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் நெறியாக்கத்தின் கீழ், இந்தச் சட்டம் கடைப்பிடிக்கப்படுவதை உத்தரவாதம் செய்யக் கண்காணிப்பை நிறுவ வேண்டும். குறிப்பாயும் செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள், நுகர்வாளர் சங்கங்களின் அலுவல்களை ஒழுங்கமைத்து நடத்தும் துறையில், சோவியத்துகள் அவர்களிடம் ஒப்படைத்த வேலையைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டவர்களாவர்.

8. இரயில்வேத் தொழிலாளர் மற்றும் ஊழியர் சங்கங்கள், குறிப்பாயும் உணவு எரிபொருள் இதர முக்கியத் தேவைகளை வழங்கும் விஷயத்தில் போக்குவரத்தை மேலும் நன்கு ஒழுங்கமைக்க அசாதாரணமான நடவடிக்கைகளை அவசரமாக உருவாக்கி உடனடியாக நிறைவேற்றி முடிக்கக் கடமைப்பட்டுள்ளன. இப்பணியில் அவை முதன்மையாகத் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள், பின்னல் அவற்றல் அதிகாரப் படுத்தப் பெற்ற அமைப்புகள் மற்றும் தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலின் நெறிமுறைகள் மற்றும் உத்தரவுகளால் வழி நடத்தப்படும்.

இதேபோன்று, உள்ளூர் சோவியத்துகளுடன் சேர்ந்து செயல்பட்டுவரும் ரயில்வே சங்கங்கள், உணவு விஷயத்தில் வர்த்தகச் சூதாட்டங்களை எதிர்த்து ஊக்கத்துடன் போராடவும், எல்லா வகையான கொள்ளை லாபம் அடிப்பதையும் இரக்கமின்றி ஒடுக்கவும், புரட்சிகர நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தயங்காமலும், செயல்பட வேண்டிய பொறுப்புடையனவாகும்.

9. தொழிலாளர் ஸ்தாபனங்களும் அலுவலக ஊழியர் சங்கங்களும் உள்ளூர் சோவியத்துகளும், மூடப்பட்டு வரும் அல்லது கலைக்கப்பட்டு வரும் நிறுவனங்களையும், வேலையற்ற தொழிலாளர்களையும், பயனுள்ள வேலைசெய்யவும் அவசியப் பொருட்களை உற்பத்தி செய்யவும் முடுக்கி இயக்குவிக்க

வேண்டும். அதோடு ஆர்டர்களைத் தேடிப் பெறவும் மூலப் பொருட்கள் மற்றும் எரிபொருளைத் தேடிப் பெறவும் வேண்டும். உயர் அமைப்புகளில் இருந்து விசேஷ நெறிமுறைகளைப் பெறுவதற்கு இடையில் இவ்வாறு செயல்பட வேண்டும். இந்த வேலையையோ அல்லது பண்ணை விளைபொருட்களுக்குத் தொழிற்துறைப் பண்டங்களைப் பரிமாற்றம் செய்யத் தொடங்குவதையோ ஒருபொழுதும் ஒத்திப்போடாது நடத்தும் அதே சமயத்தில், உள்ளூர் சங்கங்களும் சோவியத்துகளும் தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலின் ஆர்டர்கள் மற்றும் நெறிமுறைகளைக் கறாராக அனுசரித்துச் செயல்பட வேண்டும்.

10. செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள் தமது பண உடைமைகள் எல்லாவற்றையும் அரசு வங்கியில் மற்றும் அதன் கிளைகளில் அல்லது சேமிப்பு வங்கிகளில் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். ஒரு வாரத்துக்கு 100 முதல் 125 ரூபிளுக்கு உட்பட்ட தொகையையே இவர்கள் வாழ்க்கைச் செலவுக்காக (உள்ளூர் சோவியத்துகள் நிலைநாட்டியுள்ள பிரகாரம்) திருப்பி வாங்கும் உரிமையுள்ளவர்களாவர். பொருள் உற்பத்தி மற்றும் வியாபாரத்துக்குத் தேவைப்படும் தொகையைத் திருப்பி எடுக்கத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்புகளின் எழுத்து பூர்வமான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டம் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுவதை மேற்பார்வை செய்ய, நிலவில் உள்ள பணநோட்டுக்களைப் புதிய நோட்டுக்களுக்குப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கான விதிகள் கொண்டுவரப்படும். அரசையும் மக்களையும் ஏமாற்றிய குற்றவாளிகளான நபர்களின் சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்படும்.

11. இந்தச் சட்டத்துக்கு எதிராகத் தவறிழைத்தவர்களும் சீர்குலைவு வேலை செய்தவர்களும் வேலைநிறுத்தம் செய்யும் அரசாங்க அதிகாரிகளும் லாபக் கொள்ளை அடித்தவர்களும் இதே போன்ற தண்டனைக்கு உள்ளாவர், அதோடு சிறைவாசம், போர்முனைக்கு அனுப்பப்படல் அல்லது கடின ஊழியத் தண்டனைக்கும் உள்ளாவர். மக்களின் இந்த மெய்யான விரோதிகளை எதிர்த்துப் போராட உள்ளூர் சோவியத்துகளும் அவற்றின் அதிகார வட்டத்தில் உள்ள அமைப்பு

களும் மிகவும் புரட்சிகரமான நடவடிக்கைகளை அவசரமாக வகுத்தளிக்க வேண்டும்.

12. தொழிற்சங்கங்களும் உழைக்கும் மக்களின் இதர அமைப்புகளும் உள்ளூர் சோவியத்துகளுடன் சேர்ந்தும், கட்சி மற்றும் இதர ஸ்தாபனங்களால் சிபார்சு செய்யப்பட்ட மிகவும் நம்பகமான நபர்களுடன் இணைந்தும் இந்தச் சட்டத்தின் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்யக் கண்காணிப்பாளர்களின் நடமாடும் குழுக்களை உருவாக்கும், இக்குழுக்கள் செய்யப்பட்ட வேலையின் அளவையும் தரத்தையும் சரிபார்க்கும், சட்டத்தை மீறியவர்கள் அல்லது புறக்கணித்தவர்கள் என்ற முறையில் குற்றம் புரிந்த நபர்களைப் புரட்சிகர நீதிமன்றம் முன் விசாரணைக்குக் கொண்டுவரும்.

தேசவுடைமையாக்கம் செய்யப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் வேலையின் ஒழுங்கமைப்பை மேம்படுத்தவும், கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் சகல முயற்சிகளும் செய்தல் வேண்டும், அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழிலாளர் கண்காணிப்பு அமைப்புகள் தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலுக்கு இந்த வகையில் அடைந்துள்ள பலன்களைப் பற்றி வாராந்திர அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும். குறைபாடுகள் அல்லது அசட்டை செய்ததால் குற்றத்துக்காளானோர் புரட்சிகர நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும்.

இது எழுதப்பட்டது
1917 டிசம்பர் 14 (27)க்கு
முன்னல் அல்ல

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 174-177

நேசப்போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?[38]

முதலாளித்துவப் போட்டி, தனியார் முன்முயற்சி, முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அமைப்பு முறையின் இதர நேர்த்தியான நற்பண்புகளையும் வரப்பிரசாதங்களையும் பற்றிப் புகழ்ந்து முதலாளித்துவ நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த நற்பண்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள மறுப்பதாயும் ''மானுட இயல்பைப்'' புரிந்து கொள்வதில் அசட்டை செய்வதாயும் சோஷலிஸ்டுகள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் உண்மையில் முதலாளித்துவம் நீண்டகால முன்பே சிறுவீத சுயேச்சையான பண்ட உற்பத்தியைப் பெருவீத, மிகப்பெருவீத ஆலை உற்பத்தி, கூட்டுப்பங்கு நிறுவனங்கள், சிண்டிக்கேட்டுகள் மற்றும் இதர ஏகபோகங்களால் பதிலீடு செய்து விட்டது. சிறுவீதப் பண்ட உற்பத்தி முறையின் கீழ் முதலாளித்துவப் போட்டி மூலம் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவை கணிசமான அளவுக்கு வளர வாய்ப்பு இருந்தது. ஆனால் இத்தகைய பெருவீத முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவப் போட்டி என்பதன் பொருள் மக்கள் திரளின், அதன் மிகப் பெரும் பெரும்பான்மையின், நூறு உழைப்பாளிகளில் தொண்ணூற்றொன்பது பேரின் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை நம்பற்கரிய முறையில் கொடுமையாக ஒடுக்குவது என்பதாகும். மேலும் முதலாளித்துவப் போட்டியானது நிதி மோசடி, தனிச் சலுகை, சமுதாய ஏணியின் உயர்படியில் இருப்போரிடம் கொத்தடிமைத்தனம் ஆகியவற்றால் பதிலீடு செய்யப்பட்டுவிட்டது.

சோஷலிசம் போட்டியை அவித்து மறைத்து விடுவதில்லை. மாறாக அதை உண்மையிலேயே விரிவான அளவில் வெகுஜன அளவில் செயல்படுத்தவும், உழைக்கும் மக்களை அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் ஆயிரம் கோடி கணக்கில் முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நெரிக்கப்பட்டு விட்ட மக்களிடம் அமோகமாக இருந்த அந்தத் தனி ஆற்றல்களை வெளிக்ககாட்டவும் உரியதான செயல் துறையில் அவர்களை உள்ளபடியே ஈர்ப்பதற்குமான வாய்ப்பினை சோஷலிசம் முதல் தடவையாகப் படைத்துருவாக்குகிறது.

இப்போது ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் ஆட்சியில் இருப்பதால் நமது பணி நேசப்போட்டியை ஒழுங்கமைப்பதாகும்.

முதலாளித்துவ வர்க்கத்தினை அண்டிவாழ்வோரும் மற்றும் கெஞ்சிப் பிழைப்போரும் சோஷலிசத்தை ஓர் ஒரே மாதிரியான, பழகிப்படிந்துபோன, சலிப்பூட்டுகிற, கவர்ச்சியற்ற பாசறை அமைப்பு என்று வருணித்தார்கள். பண மூட்டைகளின் அடிவருடிகளும் சுரண்டலாளரிடம் இச்சகம் பேசுவோருமான முதலாளித்துவ அறிவுத்துறை கனவான்கள் சோஷலிசத்தை மக்களைக் ''கிலியூட்டுவதற்கான'' ஒரு பூச்சாண்டியாகப் பயன்படுத்தினார்கள். மக்களோ முதலாளித்துவத்தின் கீழ் கடுஞ்சிறை வாசம், பாசறைபாணிக் கட்டுப்பாடு, கடுமையான சலிப்புத்தரும் உழைப்பு, கொடிய வறுமையும் அரைப்பட்டினியுமான வாழ்க்கை என்ற கதிக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கடுஞ்சிறை வாசத்தில் இருந்து மக்களை விமோசனப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தல், தொழிலாளர் கண்காணிப்பைக் கொண்டுவருதல் மற்றும் வங்கிகளைத் தேசவுடைமையாக்குவதும் ஆகும். அடுத்த நடவடிக்கைகள் ஆலைகளை தேசவுடைமையாக்குதல், மக்கள் தொகை முழுவதையும் நுகர்வாளர் சங்கங்களில் கட்டாயமாக ஒழுங்கமைத்தல்—இந்தச் சங்கங்கள் அதே சமயம் விளைபொருட்களின் விற்பனைச் சங்கங்களாக இருக்கும்—தானியம் மற்றும் இதர அவசியப் பொருள் வர்த்தகத்தினை அரசு ஏகபோகமாக்குதல்.

ஊக்கம், நேசப்போட்டி, துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை உண்மையிலேயே பேரளவில் வெளிக்காட்டுவதற்

கான வாய்ப்பு இப்போதுதான் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாளியை வெளியேற்றியுள்ள அல்லது மெய்யான தொழிலாளர் கண்காணிப்பு மூலம் மட்டுப்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆலேயும், நிலவுடைமைச் சுரண்டலாளர் ஒழிக்கப்பட்டு அவரது நிலம் பறிமுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமமும் இப்போதுதான் உழைக்கும் மனிதன் தனது சிறப்பாற்றல்களை வெளிப்படுத்தவும், முதுகைச் சற்றே நிமிர்த்தவும், முழு ஆகிருதியுடன் எழுச்சியுற்று நிற்கவும், தான் ஒரு மானுடஜீவி என்று உணரவுமான ஒரு துறையாக விளங்குகிறது. நூற்றுண்டுகள் காலமாகப் பிறருக்குப் பாடுபட்டும், சுரண்டலாளருக்காகக் கட்டாய உழைப்பைச் செய்தும் வந்த பிறகு முதல் தடவையாகத் தனக்காகவே உழைப்பது என்பது சாத்தியமாகியுள்ளது. மேலும் ஒருவர் தனது வேலேயில் நவீனத் தொழில்நுட்பத்தின் மற்றும் கலாசாரத்தின் சகல சாதனைகளையும் ஈடுபடுத்துவதை சாத்தியமாக்குகிறது.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்னும் நிலேக்கு மனிதகுல வரலாற்றில் ஏற்பட்ட இந்த மகத்தான மாற்றம், பிணக்கு, இடர்ப்பாடுகள், மோதல்கள், வேரூன்றிவிட்ட புல்லுருவிகள் மற்றும் அவர்களே அண்டிப்பிழைப்போருக்கு எதிரான பலப்பிரயோகம் இன்றி நிகழ முடியாது. இந்த விஷயத்தில் எந்தத் தொழிலாளிக்கும் எவ்விதப் பிரமைகளும் கிடையாது. கொடிய வறுமையாலும், சுரண்டலாளர்களுக்குப் பல்லாண்டுகள் புரிந்த அடிமை உழைப்பு மூலமும், அவர்களிடமிருந்து பெற்ற எண்ணற்ற வசைகள் மற்றும் அவமானம் மூலமும் வயிரமடைந்த தொழிலாளர்களும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் அந்தச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதற்கு அதிகக் காலம் பிடிக்கும் என்பதை உணர்கிருர்கள். இந்தத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நோவயா ஷீஸ்ன் ஆதரவாளர்கள் அல்லது இதர சகதியைச் சேர்ந்த அறிவுத்துறை கனவான்களின் உணர்ச்சிப் பசப்புப் பிரமைகளால் கிஞ்சிற்றும் பீடிக்கப்படவில்லே. இந்தக் கனவான்கள் முதலாளிகளேக் "கண்டனம் செய்து" தொண்டை கம்மக் "கூக்குரலிட்டவர்கள்", அவர்களே எதிர்த்து "பாவலா காட்டியவர்கள்." ஆனுல் செயல்களுக்கு வரும் போது அச்சுறுத்தல்களேச் செயல்படுத்த வரும் போது, முதலாளிகளே அகற்றும் வேலேயை

நடைமுறையில் நிறைவேற்ற வரும் போது கண்ணீர் விட்டுக் கரைந்து அடிபட்ட நாய்க்குட்டிகளைப் போல நடந்து கொள்வார்கள்.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்ற நிலைக்கு, பிரம்மாண்டமான தேசிய (ஓரளவுக்கு சர்வதேசிய, உலக) வீதத்தில் உழைப்பைத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் நிலைக்கு ஏற்படும் மகத்தான மாற்றத்துக்கு—சுரண்டலாளர் எதிர்ப்பை ஒடுக்குவதற்கான "ராணுவ" நடவடிக்கைகளுடன்—பாட்டாளி வர்க்கமும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் எடுக்கும் மிகப் பெரிய ஒழுங்கமைப்பு, அமைப்பாளருக்குரிய முயற்சியும் தேவை. இந்த ஒழுங்கமைப்புப் பணி, நேற்றைய அடிமையுடைமையாளர்களையும் (முதலாளிகளையும்) முதலாளித்துவ அறிவுத்துறையைச் சேர்ந்த அவர்களது அடிவருடிக் கூட்டத்தையும் தாட்சண்யமின்றி ராணுவ முறைகளால் ஒடுக்கும் பணியுடன் பின்னிப் பிணைந்து ஓர் உருவமாகச் சமைந்துள்ளது. நேற்றைய அடிமையுடைமையாளர்களும் அவர்களது அறிவுத்துறைக் கையாட்களும் "நாங்கள் எப்போதும் அமைப்பாளர்களாயும் தலைவர்களாயும் இருந்தவர்கள். நாங்கள் நாட்டாண்மை செய்தவர்கள் தொடர்ந்து அவ்வாறே செய்ய விரும்புகிறோம். 'சாமான்ய மக்களுக்கு', தொழிலாளர் விவசாயிகளுக்கு நாங்கள் கீழ்ப்படிய மறுக்கிறோம். நாங்கள் அவர்களுக்கு அடிப்பட மாட்டோம். பண மூட்டைகளின் தனியுரிமைகளையும் மக்கள் மீதான மூலதனத்தின் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக அறிவை ஆயுதமாக மாற்றுவோம்" என்று கூறுகிறார்கள், நினைக்கிறார்கள்.

இவ்வாறுதான் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவுஜீவிகளும் கூறுகிறார்கள், நினைக்கிறார்கள், செய்கிறார்கள், சுயநலத்தின் கருத்து நிலையில் இருந்து பார்த்தால் அவர்களது நடத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதேயாகும். பிரபுத்துவ நிலவுடைமையாளர்களை அண்டிவாழ்பவர்களும் கெஞ்சிப் பிழைப்பவர்களும் பாதிரிகளும் எழுது கோலர்களும் கோகல் சித்திரித்த அதிகார வர்க்கத்தினரும், பெலீன்ஸ்கியைப் பகைத்த "அறிவுஜீவிகளும்" கூட பண்ணை அடிமை முறையில் இருந்து விட்டுப் பிரிவது "கடினம்" என்று கண்டனர். ஆனால் சுரண்டலாளர் மற்றும் அவர்களது அறிவுத்துறை

ஏவலாட்களின் லட்சியம் கவைக்குதவாதது. தொழிலாளரும் விவசாயிகளும், அன்னூர்களின் எதிர்ப்பைத் தகர்க்கத் தொடங்குகின்றனர். துரதிருஷ்டவசமாக இன்னும் போதியளவு உறுதியாகவும் வைராக்கியமாகவும் தாட்சண்யமின்றியும் செயல்படவில்லை. ஆனால் அதை அவர்கள் தகர்த்தெறிவது திண்ணம்.

உழைக்கும் மக்கள் மீது சோஷலிஸ்டுப் புரட்சியால் சுமத்தப்படும் ஒழுங்கமைப்புப் பணிகளை—உலக வரலாற்றுப் பொருளில் மகத்தான உண்மையிலேயே வீரம் செறிந்ததான பணிகளை—''சாமான்ய மக்களும்'' ''சாமான்ய'' தொழிலாளரும் ஏழ்மைமிக்க விவசாயிகளும் செய்து சமாளிக்கமுடியாது என்று ''அவர்கள்'' கருதுகிறார்கள். தமக்குத் தாமே தேறுதல் சொல்லிக் கொள்வதற்கு முதலாளிகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் வழக்கமாகச் சேவை புரியப் பழகிவிட்ட அறிவுஜீவிகள்: ''நாங்கள் இல்லாமல் உங்களால் முடியாது'' என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்களது திமிரான வன்கூற்று வீண் முயற்சியாகும். கல்வி கற்ற மனிதர்கள் மக்களின் பக்கம், உழைப்பாளி மக்களின் பக்கம் ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கிறார்கள். மூலதனத்தின் ஏவலாட்களது எதிர்ப்பைத் தகர்க்க உதவி புரிகிறார்கள். விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பல ஆற்றல் மிகுந்த ஒழுங்கமைப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் தம்மைத் தாமே உணர்ந்து கொள்ளவும், மாபெரும் ஜீவாதாரமான படைப்பாற்றல் பணியினை நோக்கி விழிப்புற்று முழு முயற்சி செய்யவும், தமது சொந்த சக்திகளைக் கொண்டு சோஷலிஸ்டு சமூக அமைப்பைக் கட்டும் பணியினை நிறைவேற்றவும், இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றுள்ள முக்கியமான கடமைகளில் ஒன்று, ஒருவேளை ஆக முக்கியமான கடமை தொழிலாளரின், பொதுவாக எல்லா உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் சுயேச்சையான முன் முயற்சியை வளர்ப்பது, படைப்பாற்றல் முறையிலான ஒழுங்கமைப்பு வேலையில் அதை சாத்தியமான அளவுக்கு விரிவாக வளர்ப்பது என்பதேயாகும். ''உயர்ந்த வர்க்கங்கள்'' என்று அழைக்கப்படுபவர்கள் மட்டுமே, செல்வந்தர்கள் மட்டுமே, செல்வந்தர் பள்ளிகளில் பயின்றவர்கள் மட்டுமே அரசை நிர்வாகம் செய்யவும் சோஷலிஸ்டு சமுதாயத்தின் ஒழுங்

க்மைப்பு வேலையை நெறியாக்கம் செய்யவும் வல்லவர்கள் என்றதான பழைய, அபத்தமான, காட்டுத்தனமான, வெறுக்கத்தக்க, அருவருப்பான தப்பெண்ணத்தை எதுவும் செய்து நாம் உடைத்தெறிதல் வேண்டும்.

இந்தத் தப்பெண்ணம் அழிகேடான மாமூல், மரத்துப் போன மனப்பாங்கு, அடிமைத்தனமான பழக்கங்கள் ஆகியவற்றுலும், இதற்கும் மேல் முதலாளிகளின் மோசமான சுய நலத்தாலும் வளர்க்கப்பட்டது. முதலாளிகளின் நலன், கொள்ளை செய்து ஆதிக்கம் செலுத்துவதும் ஆதிக்கம் செலுத்திக் கொள்ளை செய்வதும் ஆகும். இல்லை. தமக்கு அறிவின் சக்தி அவசியம் என்பதைத் தொழிலாளர்கள் ஒரு கணமும் மறக்க மாட்டார்கள். தொழிலாளர்கள் இப்போது குறிப்பாயும் அறிவைப் பெறுவதில் அசாதாரணமான ஆர்வம் காட்டி வருகிருர்கள். இதைப் பற்றி பாட்டாளிகளின் மத்தியில் தவருன கருத்துக்கள் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை இது புலப்படுத்துகிறது. படிக்கவும் எழுதவும் தெரிந்த, மக்களை எடைபோடத் தெரிந்த, நடைமுறை அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொரு சாமான்ய தொழிலாளியும் விவசாயியும் அமைப்பாளர் வேலையைச் செய்யும் திறனுடையவராவார். முதலாளித்துவ அறிவுஜீவிகள் யாரைப் பற்றி அத்தகைய ஆணவத்தோடும் வெறுப்போடும் பேசுகிருர்களோ அந்த ''சாமான்ய மக்கள்'' மத்தியில் இத்தகைய பல ஆடவரும் மகளிரும் உள்ளனர். தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் மத்தியில் நிலவும் இது போன்ற செழுமையான ஆற்றல், இது வரை பயன்படுத்தப்படாத ஆதார சக்தியாகும்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகள் இன்னும் ''பயந்தவர்களாக'' உள்ளனர். அவர்கள்தாமே இப்போது ஆளும் வர்க்கம் என்ற கருத்துக்கு இன்னும் பழக்கப்பட்டு விடவில்லை. அவர்கள் இன்னும் போதியளவு உறுதிப்பாடு அடையவில்லை. தமது வாழ்க்கை முழுவதும் அடிக்குப் பயந்து வேலை செய்தும் வறுமையாலும் பட்டினியாலும் கட்டாயப்படுத்தப்பட்டும் வந்த லட்சோப லட்சம் மக்கள் உள்ளங்களில் இந்தப் பண்புகளைப் புரட்சியால் ஒரே வீச்சில் புகுத்த முடியாது. ஆனல் 1917 அக்டோபர் புரட்சி வலுவானது, நிலைத்து நிற்கக் கூடியது, வெல்லற்கரியது. காரணம் அது இந்தப்

பண்புகளை எழுப்பியுள்ளது, பழைய தடைகளைத் தகர்க்கிறது, தேய்ந்து போன தளைகளை அகற்றுகிறது, உழைக்கும் மக்களைப் புது வாழ்வினை சுயேச்சையாகப் படைத்துருவாக்கும் பாதையில் தலைமை தாங்கி நடத்திச் செல்கிறது.

கணக்குப் பதிவு கண்காணிப்பு—இதுவே தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் ஒவ்வொரு சோவியத்தின், ஒவ்வொரு நுகர்வாளர் சங்கத்தின், ஒவ்வொரு வழங்கீடு ஒன்றியம் அல்லது கமிட்டியின், ஒவ்வொரு ஆலைக் கமிட்டியின் அல்லது பொதுவாகத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்பின் பிரதான பொருளாதாரப் பணியாகும்.

உழைப்பின் அளவையும் உற்பத்தி சாதனங்களையும் பழைய வழக்கப்படி ஓர் அடிமையின் நோக்கு நிலையில் இருந்து கருதிப் பார்ப்பதை எதிர்த்து நாம் போராட வேண்டும். அந்த அடிமையின் ஏகக் குறிக்கோள் உழைப்பின் கடுமையைச் சற்றே குறைப்பது அல்லது முதலாளி வர்க்கத்திடமிருந்து குறைந்தபட்சம் ஏதோ சில சிறு சலுகை பெறுவது என்பதாக இருந்தது. முன்னேறிய வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள். அவர்கள் புதிதாக வந்தவர்களுக்கு உறுதியான எதிர்ப்புக் காட்டி வருகின்றனர்கள். இந்தப் புதியவர்கள் ஆலை உலகத்தை நோக்கி போரின் போது பிரத்தியேகமாயும் பெருந் தொகையில் திரண்டு வந்தார்கள். அவர்கள் இப்போது மக்களது உடைமைக்குள் வந்துவிட்ட மக்கள் ஆலைகளைப் பழைய முறையிலேயே நடத்த விரும்புகிறார்கள். அவர்களது ஒரே நோக்கம் ''சாத்தியமான அளவு பெரிய லாபத்தைத் திரட்டிக் கொண்டு பிறகு வெளியேறுவது'' என்பதே. இந்தப் போராட்டத்தில் முன்னேறிய தொழிலாளர் பக்கம் ஆதரவாக வர்க்க உணர்வுள்ள, நேர்மையான, சிந்திக்கிற விவசாயிகளும் உழைக்கும் மக்களும் சேருவார்கள்.

உயர் அரசு அதிகாரம் என்ற முறையில் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளாலோ, அல்லது அந்த ஆட்சி அதிகாரத்தின் நெறி முறைகள் அல்லது ஆணையுரிமையின் பேரிலோ கணக்கு வைத்தலும் கண்காணித்தலும் நடத்தப்படும் பட்சத்தில்—இது

விரிந்து பரந்த பொதுவான சர்வப் பொது கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும், செய்யப்பட்ட உழைப்பு மற்றும் உற்பத்தியான பொருட்களின் வினியோகம் மீதான கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும்—இது பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டு உறுதிப்பட்ட பிற கான சோஷலிஸ்டு மாற்றத்தின் சாரமாகும்.

சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்வதற்கு இன்றி யமையாது தேவைப்படும் கணக்கு வைத்தலும் கண்காணிப்பும் மக்கள் திரளால் மட்டுமே செயல்படுத்த முடியும். தொழி லாளர் மற்றும் விவசாயிகளின் பெருந்திரள் செல்வந்தர், கயவாளிகள், சோம்பேறிகள் மற்றும் போக்கிரிகள் விஷயத்தில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பில் சுயவிருப்ப மான மனச்சான்று பூர்வமான ஒத்துழைப்பைத் தோற்று விக்க வேண்டும். இந்த ஒத்துழைப்பு புரட்சிகர ஊக்கம் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதனால் மட்டுமே, முத லாளித்துவத்திடமிருந்து சோஷலிசம் மரபாகப் பெற்றதான சாபக்கேடான முதலாளித்துவ சமூக அமைப்பின் மீதமிச்சங் களை, மனித குலத்தின் கசடுகளை, இந்தப் படுமோசமாக சிதிலப்பட்டுத் தேய்ந்து போன உறுப்புகளை, இந்தத் தொத்து நோயை, பிளேக் நோயை, சீழ்ப்புண்ணை வென்று ஒழிக்க முடியும்.

தொழிலாளர்களே விவசாயிகளே, உழைக்கும் சுரண்டப் படும் மக்களே! நிலம், வங்கிகள் மற்றும் ஆலைகள் இப்போது மக்கள் அனைவரின் சொத்துக்களாகிவிட்டன! நீங்கள் நீங்களே பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்துக் கணக்கு வைக்கவும், கண்காணிப்புச் செய்யவும் வேலை தொடங்கவேண்டும். இது மட்டுமே சோஷலிசத்தின் வெற்றிக் கான பாதை, அதன் வெற்றிக்கான ஒரே உத்தரவாதம்! எல்லாச் சுரண்டலையும் எல்லா வறுமையையும் எல்லா ஏழ் மையையும் எதிர்த்து வெல்வதற்கான ஒரே உத்தரவாதம்! எல்லோருடைய தேவைகளையும் திருப்தி செய்வதற்குப் போதுமான ரொட்டி, இரும்பு, வெட்டு மரம், கம்பளி, பருத்தி மற்றும் மென்சணல் ருஷ்யாவில் இருக்கிறது. ஆனால் இதற்கு உழைப்பும் அதன் விளைபொருட்களும் சரியானபடி வினியோகிக்கப்பட வேண்டும். இந்த வினியோகத்தின் மீது அனைத்து மக்களின் காரியகரமான நடைமுறை

கண்காணிப்பு நிலைநாட்டப்பட வேண்டும். மக்களின் விரோதிகளான செல்வந்தர், அவர்களை அண்டிவாழ்பவர்கள், கயவர், சோம்பேறிகள், போக்கிரிகளை அரசியலில் மட்டு மன்றி, அன்றாடப் பொருளாதார வாழ்விலும் தோற்கடிக்க வேண்டும்.

இந்த மக்களின் விரோதிகளுக்கு, சோஷலிசத்தின் விரோதிகளுக்கு, உழைக்கும் மக்களின் விரோதிகளுக்கு எவ்விதக் கருணையும் காட்டக் கூடாது. செல்வந்தர் மற்றும் அவர்களை அண்டிவாழ்வோர், முதலாளித்துவ அறிவுஜீவிகளை எதிர்த்து அழிக்கும்வரைப் போர், கயவர் சோம்பேறிகள் போக்கிரிகளை எதிர்த்துப் போர்! அவர்கள் அனைவரும் ஒரே இனம், முதலாளித்துவத்தின் கான்முளைகள், பிரபுக்குல மற்றும் முதலாளித்துவ சமூக அமைப்பின் ஈற்றுக்கள். இந்த சமூக அமைப்பில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள், அவமதிக்கிறார்கள். இந்த சமூக அமைப்பின் வறுமையும் இன்மையும் ஆயிரம் ஆயிரம் பேர்களைப் போக்கிரித்தனம், ஊழல் மற்றும் கயமைப் பாதையில் போகும்படி நிர்ப்பந்தித்து அவர்கள் தமது மானுடச்சாயல்கள் அனைத்தையும் இழக்கும்படிச் செய்கிறது. இந்த சமூக அமைப்பு, உழைக்கும் மனிதனிடம், ஏமாற்று மூலமாவது சுரண்டலில் இருந்து தப்பிக்கவும், அதிலிருந்து விடுபடவும், ஒரு கணமேனும் சரி விருப்பமற்ற உழைப்பில் இருந்து தப்பிக்கவும், சாத்தியமான எந்த வழியிலாவது, எதைச் செய்தும் குறைந்த பட்சம் ஒரு துண்டு ரொட்டியாவது பெற்று பட்டினி கிடக்காமல் தானும் தனது சுற்றமும் பசி வேதனையைச் சற்றே தணித்துக் கொள்ளவும் வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர்க்க முடியாத வகையில் வளர்க்கிறது.

செல்வந்தரும் கயவாளிகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே ஆவர். அவர்கள் முதலாளித்துவம் வளர்த்த புல்லுருவிகளின் இரண்டு பிரதான வகை இனங்களே. அவர்கள் சோஷலிசத்தின் பிரதான விரோதிகள். இந்த விரோதிகளை மக்கள் அனைவரின் விசேஷக் கவனக் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டும். சோஷலிஸ்டு சமூக அமைப்பின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைச் சிறிதளவு மீறினாலும் கூட அவர்கள் தாட்சண்யமின்றித் தண்டிக்கப்பட வேண்

டும். இந்த விஷயத்தில் பலவீனத்தின் வெளிப்பாடோ, தயக்கமோ, உணர்ச்சிப் பசப்போ எதுவும் சோஷலிசத்துக்கு எதிரான அளப்பரிய பாதகச் செயலாகும்.

இந்தப் புல்லுருவிகளை சோஷலிஸ்டு சமூக அமைப்புக்குத் தீங்கற்றவர்களாக மாற்ற வேண்டுமானால், அனைத்து மக்களும் லட்சோபலட்சம் தொழிலாளர்களும் விவசாயிகளும் சுய விருப்பத்தோடும், ஊக்கத்தோடும், புரட்சிகர உற்சாகத்தோடும் பங்கேற்கும் முறையில் செய்யப்பட்ட வேலை அளவு, பொருள் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்த கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் நாம் ஒழுங்கமைத்தல் வேண்டும். நேர்மையான, அறிவுடைய, திறமையுள்ள ஒவ்வொரு தொழிலாளி மற்றும் விவசாயியின் ஆற்றலுக்குள் முற்றும் அடங்கியதான கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் ஒழுங்கமைக்கும் பொருட்டு நாம் அவர்களது ஒழுங்கமைக்கும் தனி ஆற்றல்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும். இந்தத் தனி ஆற்றல் அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. அவர்கள் மத்தியில் ஸ்தாபனத்துறையிலான சாதனைகள் விஷயத்திலான நேசப்போட்டியை எழுச்சியுற வைத்து தேசிய அளவில் ஒழுங்கமைக்க வேண்டும். படித்த மனிதனின் அவசியமான அறிவுரைக்கும், ''படித்தவர்'' மத்தியில் மிகு வழக்கமாக நிலவும் மடிமை மீதான ''சாமான்ய'' தொழிலாளி மற்றும் விவசாயி மேற்கொள்ளும் அவசியமான கண்காணிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைத் தொழிலாளரும் விவசாயிகளும் தெளிவாகக் காணுமாறு செய்தல் வேண்டும்.

இந்த மடிமை, இந்தக் கவனம் இன்மை, துப்புரவு இன்மை, காலத்திட்பம் இன்மை, அமைதி இழந்த அவசரக் கோலம், செயலுக்குப் பதில் விவாதத்தையும் வேலைக்குப் பதில் பேச்சையும் மாற்றீடு செய்யும் விருப்பம், எதையும் முழுமையாகச் செய்து தீர்க்காமல் உலகிலுள்ள சகலத்தையும் எடுத்துச் செய்வதற்கான விருப்பம் ஆகியவை ''படித்தவர்களின்'' இனப் பண்புகளாகும். இதற்குக் காரணம் அவர்கள் இயல்பாகவே மோசமானவர்கள் என்பது அல்ல. அவர்களது தீய சித்தமும் அல்ல. இதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கையின் பழக்கங்கள், அவர்களது வேலை நிலைமைகள், சோர்வடைதல், மூளை உழைப்பை உடல் உழைப்பில்

இருந்து சகஜங்கெட்ட நிலையில் பிரிவினை செய்தல் ஆகிய இத்தியாதிகள் அனைத்துமாகும்.

நமது புரட்சியின் பிழைகள் குறைபாடுகள் மற்றும் தவறுகளின் இடையில், நமது மத்தியில் இருக்கும் அறிவுஜீவிகளின் —தற்போது தவிர்க்கவியலாத—இந்த வருந்தத்தகுந்த இனப்பண்புகளின் விளைவாக ஏற்பட்ட பிழைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அதோடு அறிவுஜீவிகளின் ஒழுங்கமைக்கும் வேலை மீது தொழிலாளர்களின் மேற்பார்வை போதியளவு இல்லாததும் இப்பிழைகளின் பாற்படும்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்னும் ''பயந்த நிலையில்'' இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயத்தை ஒழிக்க வேண்டும், அதை அவர்கள் நிச்சயமாயும் ஒழிப்பார்கள். படித்த நபர்கள், அறிவுஜீவிகள் மற்றும் நிபுணர்களின் அறிவுரைகள் நெறிமுறைகளை நாம் தவிர்க்க முடியாது. நல்லறிவுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் இதை முற்றிலும் நன்றாகப் புரிந்து கொள்கிறார். தொழிலாளர் விவசாயிகள் சார்பில் இருந்து போதிய கவனமோ தோழமை பூர்வமான மரியாதையோ குறைந்து விட்டதாக நமது மத்தியில் உள்ள அறிவுஜீவிகள் புகார் செய்ய முடியாது. ஆனால், அறிவுரைகள் நெறி முறைகள் என்பன ஒரு விஷயம், நடைமுறையில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு இன்னொரு விஷயம் ஆகும். மிகப் பெரும்பாலும் அறிவாளிகள் அருமையான அறிவுரைகளையும் நெறி முறைகளையும் தருகின்றனர். ஆனால் சொற்களைச் செயலாகப் பெயர்க்கும் காரியத்தில் நடைமுறைக் கண்காணிப்பைச் செயல்படுத்துவதில் இந்த அறிவுரைகள் மற்றும் நெறி முறைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் படுமோசமாக, அபத்தமான முறையில், வெட்கக்கேடான அளவில் ''வாய்ப்பு இழந்தவர்கள்'', ஆற்றல் அற்றவர்கள் என்பதை நிதர்சனப்படுத்தி விடுகிறார்கள்.

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ''மக்கள்'' மத்தியில் இருந்தும், ஆலைத் தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகள் இடையில் இருந்தும் வரும் நடைமுறை அமைப்பாளர்களின் உதவியும் தலைமைப் பாத்திரமும் வேண்டாம் என்று ஒழிப்பது அறவே சாத்தியமல்ல. ''பானைகள் செய்வது கடவுள்கள் அல்ல''—இந்த உண்மை

யைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது மனங்களில் நன்ருகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதைய முழு விவகாரமும் நடைமுறை வேலேயே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தத்துவம் நடைமுறையாக மாற்றப்படும், நடைமுறையால் உயிர் ஊட்டப்படும், நடைமுறையால் சரிபார்க்கப்படும், நடைமுறையால் சோதிக்கப் படும் அந்த வரலாற்றுத் தருணம் வந்து விட்டது. இப்பொழுது, ''மெய்யான இயக்கத்தின் ஒவ்வொரு படியும் ஒரு டஜன் வேலேத் திட்டங்களே விடவும் அதிக முக்கியமானது''[39] என்ற மார்க்சின் சொற்கள் குறிப்பாயும் மெய்மையாகின்றன. செல்வந்தர்களேயும் கயவாளிகளேயும் நடைமுறையில் மெய்யாகவே மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, முழுமையாக அகத்தே பதிவு செய்து, அவர்களேக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சோஷலிசம் பற்றிய அருமையான ஒரு டஜன் வாதங்களே விடவும் மதிப்புடையதாகும். ஏனெனில் ''தத்துவம், எனது நண்பரே, நரை கண்டது ஆனல் வாழ்க்கையின் கற்பகத்தரு பசுமையானது.''[40]

தொழிலாளர் விவசாயிகளிடையிலான நடைமுறை அமைப்பாளர்களிடை நேசப்போட்டி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அறிவாளிகள் மிகவும் விரும்பிச் செய்ய முனேயும் மாமூ நிலேப்படி உருவடிவங்களே நிலேநாட்டவும் மேலிருந்து ஒரே மாதிரித்தன்மையைத் திணிக்கவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளேயும் எதிர்த்துப் போரிட வேண்டும். மாமூ நிலேப்படி உருவடிவங்களுக்கும் மேலே இருந்து திணிக்கப் படும் ஒரே மாதிரித் தன்மைக்கும், ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு மத்தியத்துவத்துக்கும் இடையே பொதுவான அம்சம் எதுவுமே கிடையாது. விவரங்களில், பிரத்தியேக வட்டார இயல்புகளில், அணுகும் முறைகளில், கண்காணிப்பைச் செயல்படுத்தும் முறைகளில், புல்லுருவிகளே (செல்வந்தர், கயவர்கள், அக்கறையற்ற உணர்ச்சி வெறிபிடித்த அறிவாளிகள் இத்தியாதி) அழித்தொழித்து அவர்களேத் தீங்கற்றவர்கள் ஆக்குவதற்கான வழிகளில் பல்வகைத் தன்மை இருப்பதால் தலேயாய கூறுகளின், அடிப்படைகளின், சாரத்தின் ஒற்றுமை கலேக்கப்படவில்லே ஆனல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அடிமட்டத்தில் இருந்து வரும் முன்முயற்சி, சுயேச்சைப் போக்கு, செயல் சுதந்திரம் மற்றும் ஊக்கத்தை எவ்வாறு

மாறுநிலைப்படி உருக்களில் இருந்து விடுபட்ட சுயவிருப்ப மான மத்தியத்துவத்தோடு இணைப்பது என்பதற்கு பாரிஸ் கம்யூன் ஒரு மகத்தான உதாரணத்தினை வழங்கியது. நமது சோவியத்துகள் அதே பாதையைப் பின்பற்றுகின்றன. ஆனால் அவை இன்னும் ''பயந்தவையாக உள்ளன.'' அவை இன்னும் தமது தொடக்க நிலை கடந்து முன்னேறவில்லை. சோஷலிச அமைப்பைக் கட்டுவது என்ற தமது புதிய மகத்தான படைப் பாற்றல் பணியில் இன்னும் ''ஒரு பிடிப்புப் பெறவில்லை.'' சோவியத்துகள் மேலும் துணிவுடன் செயல்படத் தொடங்க வேண்டும், மேலும் அதிக முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டும். எல்லா ''கம்யூன்களும்''—ஆலைகள், கிராமங்கள், நுகர்வாளர் சங்கங்கள், வழங்கீடுக் கமிட்டிகள்—உழைப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களை வினியோகிப்பதைக் கணக்கு வைக்கும் கண்காணிக்கும் நடைமுறை அமைப் பாளர்களாக ஒன்றுக்கொன்று நேசப்போட்டியிட வேண்டும். இந்தக் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு வேலைத் திட்டம் எளிதானது, தெளிவானது, எல்லோருக்கும் புரியக் கூடியது. எல்லோருக்கும் ரொட்டி, எல்லோருக்கும் சீரான காலணி நல்ல உடை, எல்லோருக்கும் குளிருக்கு அடக்கமான இருப்பிடங்கள். எல்லோரும் மனச்சாட்சிப்படி வேலை செய்ய வேண்டும், (தமது வேலையைத் தட்டிக் கழிப்பவன் உட்பட) கயவாளி ஒருவன் கூட சுதந்திரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது, அவன் சிறையிலடைக்கப்பட வேண்டும் அல்லது மிகவும் கடுமையான வகைப்பட்ட கட்டாய உழைப்புத் தண்டனை அனுபவிக்க விட வேண்டும். சோஷலிசத்தின் சட்டங்கள் விதிமுறைகளை மீறும் எந்த ஒரு செல்வந்தனும் கயவாளி அடைந்த கதியில் இருந்து தப்பி விட அனுமதிக்கக் கூடாது, நீதிப்படிச் செல்வந்தனுக்கும் அதே கதிதான் ஏற் பட வேண்டும். ''வேலை செய்யாதவனுக்கு உணவில்லை.'' இதுவே சோஷலிசத்தின் நடைமுறைக் கட்டளையாகும். இவ் வாறுதான் காரியங்கள் நடைமுறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். நமது தொழிலாளர் விவசாயி அமைப்பாளர்கள் ''கம்யூன்கள்'' பெருமிதம் கொள்ள வேண்டிய நமது நடை முறை வெற்றிகள் இவையே. இது குறிப்பாயும் அறிவாளி களிடையிலான அமைப்பாளர்களுக்குப் பொருந்தியதாகும் (குறிப்பாயும், காரணம் அவர்கள் தமது பொதுவான கட்டளை

கள் மற்றும் தீர்மானங்கள் பற்றி மிகவும் அதிகமாக, அளவுக்கு மேல் மிகவும் அதிகமாகப் பெருமிதம் கொள்ளும் வழக்க முடையவர்கள்).

கணக்கு வைக்கவும் செல்வந்தர் கயவாளிகள் மற்றும் சோம்பேறிகளைக் கண்காணிக்கவும் ஆயிரக்கணக்கான நடைமுறை வடிவங்களும் முறைகளும் வகுக்கப்பட வேண்டும், கம்யூன்களாலேயே, நகரத்திலும் நாட்டுப் புறத்திலுமான சிறிய அலகுகள் மூலமே நடைமுறையில் சோதிக்கப்பட வேண்டும். பல்வகைத் தன்மை இங்கு பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதமாக, தனியொரு பொது நோக்கத்தைச் சாதனை யாக்குவதற்கான வெற்றிக்கு வாக்குறுதியாக, ருஷ்யா என்னும் நிலப்பரப்பில் கயவாளிகள், செல்வந்தராகிய மூட்டைப் பூச்சிகள் இத்தியாதி எல்லா கேடு சூழ் பூச்சி புழுக் களைஅகற்றிச் சுத்தப்படுத்தும் சாதனமாக விளங்குகிறது. ஓர் இடத்தில் பத்துச் செல்வந்தர்கள், ஒரு டஜன் கயவாளிகள், வேலைக்கு மட்டம் போடும் (போக்கிரிகளைப் போல பெத்ரோகிராதில் குறிப்பாகக் கட்சி அச்சகங்களில்[41] வேலைக்கு மட்டமடிக்கும் அச்சுக்கோப்போர் தோரணையில்) அரை டஜன் தொழிலாளர் சிறையில் தள்ளப்படுவர். இன்னொரு இடத்தில் அவர்கள் கக்கூசுகளைக் கழுவும்படி ஏவப்படுவர். மூன்றாவது இடத்தில் அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வந்த பின் ''மஞ்சள் சீட்டுகள்'' வழங்கப்பட்டு அவர்கள் திருந்தும் வரை தீங்கு விளைக்கும் நபர்கள் என்பதாக எல்லோரும் கண்காணிக்கும்படி வைக்கப்பட்டிருப்பர். நாலாவது இடத்தில் சோம்பேறிகளில் பத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே சுடப்படுவர். ஐந்தாவது இடத்தில் கலவையான முறைகள் கையாளப்படும். நன்னடத்தை விடுதலை மூலம் திருந்தக் கூடியவர்களான செல்வந்தர், முதலாளித்துவ அறிவு ஜீவிகள், கயவாளிகள், போக்கிரிகள் விரைவில் திருந்திக் கொள்வதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படுவர். எந்த அளவுக்கு அதிகமாகப் பல்வகைத் தன்மை இருக்குமோ அந்த அளவுக்கு நமது பொது அனுபவம் மேலும் சிறப்பாகவும் அதிகச் செழுமையாகவும் இருக்கும். சோஷலிசத்தின் வெற்றி மேலும் உறுதியானதாயும் அதிக துரிதமானதாயும் விளங்கும். நடைமுறையால்—நடைமுறையால் மட்டுமே வகுக்க

முடியும்—போராட்டத்துக்கான சிறந்த முறைகளையும் வழிகளையும் மேலும் எளிதாக வகுக்க முடியும்.

பட்டினியால் வாடும் மக்கள் இல்லாத, வேலையின்றித் திண்டாடுவோர் இல்லாத, சோம்பேறிச் செல்வந்தர் இல்லாத, அறிவுஜீவிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் வெறுக்கத்தக்க அடிவருடிகளும், நாச வேலை செய்வோரும் இல்லாத எந்தக் கம்யூன், எந்த பெரு நகர வட்டாரம், எந்த ஆலை அல்லது எந்தக் கிராமம் இருக்கிறது? தொழிலாளர் உற்பத்தித் திறனை உயர்த்தவும், ஏழைகளுக்கு நல்ல புதிய வீடுகள் கட்டித் தரவும், செல்வந்தர் வீடுகளில் ஏழைகளைக் குடி வைக்கவும், ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தின் ஒவ்வொரு குழந்தைக்கும் முறையாக ஒரு போத்தல் பால் வழங்கவும் எங்கே பெரும்பணி ஆற்றப்பட்டுள்ளது? இந்த அம்சங்களில்தான் கம்யூன்கள், குடிவாழ் கூட்டுக்கள், உற்பத்தியாளர்-நுகர்வாளர் சங்கங்கள், இணைப்புகள், தொழிலாளர்கள் படையாளர்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆகியவற்றுக்கிடையே நேசப்போட்டி வளர வேண்டும். இந்தப் பணியில் நடைமுறையில் தொண்டாற்றதனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் முன்வர வேண்டும், அரசு நிர்வாகத்தில் வேலை செய்ய அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் ஏராளமான தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேவலம் அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். தமது ஆற்றல்களைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களே அவர்கள் மட்டுமே மக்களின் ஆதரவுடன் ருஷ்யாவைப் பாதுகாக்க முடியும், சோஷலிச லட்சியத்தைப் பாதுகாக்க முடியும்.

1917 டிசம்பர் 24—27
(1918 ஜனவரி 6—9)ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 195-205

நுகர்வாளர் கம்யூன்கள் பற்றிய அரசாணையின் நகல்[42]

1

பூர்வாங்க ஆய்வுரைகள்

''வழங்கீடு சங்கங்கள்'' மற்றும் ''பிரதிநிதிக் கமிட்டிகள்'' முதலியன பற்றி உணவுக் கமிசாரகம் முன்மொழிந்த நகல் திட்டங்களும், தலைமைப் பொருளாதார கவுன்சிலின் ''வட்டாரப் பொருளாதார கவுன்சில்கள்''[43] பற்றிய நகல் திட்டங்களும் இப்படிப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைக்க வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

பூர்வாங்க ஆய்வுரைகள்:

(Etwa*):

*[வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிகள்?**]*

அடிப்படை அலகு நுகர்வாளர் மற்றும் உற்பத்தியாளர் (வாங்குவது, விற்பது முதலியனவற்றை விட சிறப்பானது) வோலஸ்த் சங்கங்கள், வழங்கீடு கமிட்டிகளாகவும் கொள்முதல் ஸ்தாபனங்களாகவும் விளங்கலாம். தேவைப்படுமானால் வோலஸ்த் எல்லைகள் மாறுதலுக்குட்பட்டது என்று கூறிவிடலாம்.

நகரங்களில் இந்த இடத்தை பிளாக் கமிட்டிகள் அல்லது பிளாக்குகளின் பகுதிகளுக்கான கமிட்டிகள் நிரப்பிடலாம்.

இப்படிப்பட்ட அடிப்படை அலகுகளான கமிட்டிகளை வட்டாரங்களில் நிறுவிட முடியுமானால், இந்தக் கமிட்டி

---

* தோராயமாக.—ப-ர்.

** —தொழிலாளர், படையாளர், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் கீழ் வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிகள்.—ப-ர்.

களின் ஒருங்கிணைப்பு ஒரு பின்னிப்பிணைந்த அமைப்பினைத் தந்திட முடியும். இதன் மூலம் மக்கள் அனைவருக்கும் எல்லா அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கிடும் ஓர் அமைப்பிற் குரியச் சரியான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அப்படியே தேசிய அளவில் உற்பத்தியை ஒழுங்கமைத்திடவும் முடியும்.

''சங்கங்களுக்குப்'' பதிலாக இவை ''தொழிலாளர், படையாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்து களாக'' இருந்துவிடலாம். வாணிக சிப்பந்திகள் இத்தியாதி இத்தியாதி ஆகியோரது பங்கேற்புடன் துவங்கலாம்.

இப்படிப்பட்ட ஒவ்வொரு சங்கம் அல்லது கமிட்டி அல்லது சோவியத்து (அல்லது வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டி) கொள்முதல் பண்டங்களுக்குத் தக்கதாகவும், வழங் கீடு பொருட்களின் வகைகளுக்குத் தக்கதாகவும் பிரிவுகளாக வும் அல்லது துறைகளாகவும் பிரிக்கப்படலாம். உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகியவற்றின் பொதுவான ஒழுங்குறுத்தலுக் காக இவ்வாறு செய்யப்படலாம் (பணம் கொடுப்பதற்காக ஓர் இலாக்கா, ரொக்கப் பணம் வரவு செலவு செய்வதற்காக ஓர் இலாக்கா, ஒவ்வொரு வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிலும் இணைக்கப்பட வேண்டும்). வருமான வரியினை வசூலித்தல், ஏழைகளுக்கு வட்டியில்லாமல் கடன் வழங்கு தல், பொதுவான கட்டாய உழைப்பு சேவையை அமல் நடத் திடும் உரிமையுடன் கூடிய இது சோஷலிச சமுதாயத்தின் அடிப்படை அலகாக விளங்கும். வோலஸ்த் வங்கிகள் அப் புறம் அரசாங்க சேமிப்பு வங்கிகளோடு இணைக்கப்பட வேண்டி இருக்கும். தேசம் முழுவதற்குமான கணக்குப் பதிவு இலாகாவாக இவை மாற்றப்படும். நாடு முழுவதன் ஒட்டு மொத்த வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அமைப்பாக விளங்கிடும்.

பண்டங்களின் போக்குவரத்து, அதேபோன்று அவைகள் வாங்கப்படுவதும் விற்கப்படுவதும், ஒரு வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டியிடமிருந்தே மற்றொரு வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிக்கு மட்டுமே அனுமதிக்கப் படும். தனிப்பட்ட கொள்முதல் அனுமதிக்கப்பட மாட்டாது. வோலஸ்த் (பொதுவாக ''அடிப்படையான'', கீழ்மட்டத் திலுள்ள) வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிகள் அளித் திடும் அத்தாட்சியின் பேரில் பண்டங்கள் தனி நபர்களுக்கும்

மத்திய ஸ்டோர்களிலிருந்து விற்கப்படலாம். இவை வோலஸ்த் முதலியன வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிகளின் (மிகச் சிறிய அலகுகளுக்குள் அல்லது மிகக் குறைந்த அளவுகள் நீங்கலாக) கணக்குப் புத்தகங்களில் எழுதப்படுவது அவசியம். வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிகளின் அத்தாட்சிகள் இன்றி பண்டங்களின் போக்குவரத்து அனுமதிக்கப்பட மாட்டாது.

நிலத்துறை, வாணிகம் மற்றும் தொழில்துறை, உழைப்பு, உணவு அமைச்சரகங்கள், மற்றும் தலைமைப் பொருளாதாரக் கவுன்சில், மற்றும் நிதி, போக்குவரத்து கமிசாரகங்கள் ஒருங்கிணைக்கப்படுவது இவ்வாறு இருக்கும்.

கவனிக்க:

''வழங்கீடு மற்றும் கொள்முதல் கமிட்டிகள்'': வோலஸ்த், உயெஸ்த், குபேர்னியா மற்றும் வட்டார (ΣΣ*=தலைமைப் பொருளாதாரக் கவுன்சில்)

அவற்றின் இலாக்காக்கள்: மத்திய ஜவுளி போர்டு, மத்திய சர்க்கரை போர்டு, மத்திய நிலக்கரி போர்டு இத்தியாதி (ΣΣ=தலைமைப் பொருளாதாரக் கவுன்சில்), மத்திய வங்கி இத்தியாதி.

கவனிக்க:

தொழிலாளர், படையாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் பிரதிநிதிகள், நகரங்களில் உள்ள செல்வர்கள் வசிக்கும் பகுதிகளை (அல்லது நாட்டுப்புறத்திலுள்ள செல்வர்களின் கோடை காலக் குடியிருப்புக்கள் இத்தியாதி), அதாவது தொழிலாளர் மற்றும் விவசாயிகளது எண்ணிக்கை 60 சதவிகிதத்திற்குக் குறைவாக இருக்கும் குடியிருப்புப் பகுதிகளை மேற்பார்வையிட வேண்டும்.

2

அரசாணையின் நகல்

கொள்ளைப் பொருளைப் பங்கிடுவதற்காக முதலாளிகளுக்கிடையே நேர்ந்துள்ள மோதலால் கொண்டுவரப்பட்ட

* —Summa summarum—ஒட்டுமொத்தமாக.—ப-ர்.

போர் சொல்ல முடியாத அழிவை விளைவித்து விட்டது. இது, குறிப்பாகச் செல்வர்கள் மத்தியில் நிகழ்கின்ற குற்றஞ்சார்ந்த கள்ளவியாபாரத்தினுலும் இலாபவேட்டையினுலும் இன்னும் ஆழப்படுத்தப்பட்டு விட்டது. இது பசிக்கொடுமையினையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களுக்குக் கொண்டு வந்துவிட்டது. பட்டினி கிடப்பவர்களுக்கு உதவிடுவதற்கு அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகிறது. அத்தோடு கள்ளவியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு எதிராக இரக்கமற்ற போர் தொடுத்தாக வேண்டும். இந்தத் தேவையே தொழிலாளர் மற்றும் விவசாயிகளது அரசாங்கம், கீழ்வரும் விதிமுறைகளை ருஷ்யக் குடியரசின் ஒரு சட்டமாக உருவாக்கும்படி தூண்டியுள்ளது:

நாட்டின் குடிமக்கள் எல்லோரும் உள்ளூர் நுகர்வாளர் சங்கத்தில் (கிராமம், வோலஸ்த், குடியிருப்பு, நகரத்தின் ஒரு பகுதி, ஒரு தெருவின் பிரிவு இத்தியாதி) சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு சங்கத்திலும் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு செல்வந்தர் அல்லாத வர்க்கங்களைச் சேர்ந்தவையாக இருத்தல் வேண்டும் (அதாவது, தொழிலாளர்கள், கூலி உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளாத விவசாயிகள் இத்தியாதி) என்ற விதி தவிர வேறு நிபந்தனை இன்றி குடும்பங்கள் சங்கங்களில் சேரலாம்.

பொருட்களை வாங்குவது மற்றும் வினியோகிப்பதுடன் கூட ஒவ்வொரு நுகர்வாளர் சங்கமும் உள்ளூர் பொருட்களை விற்பதில் ஈடுபட்டாக வேண்டும். நுகர்வாளர் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் **வழங்கீடு கமிட்டிகளை** நிறுவியாகவேண்டும். குறிப்பிட்ட வழங்கீடு கமிட்டியின் எழுத்து வடிவமான அங்கீகாரம் இல்லாமல் பொருட்களின் போக்குவரத்து அனுமதிக்கப்பட மாட்டாது.

இப்போதுள்ள நுகர்வாளர் சங்கங்கள் தேசவுடைமையாக்கப்படுகின்றன. அவை நிறுவப்பட்டுள்ள ஸ்தலங்களில் உள்ள மக்கள் தொகை முழுவதையும் எவ்வித விதிவிலக்குமின்றி அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டாக வேண்டும்.

தனிப்பட்ட நபர்கள் தாம் விரும்பினுல் பொருட்களை உள்ளூர் கடைகளில் வாங்காது மத்திய ஸ்டோர்களிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். ஆனுல் உள்ளூர் நுகர்வாளர் சங்கத்தில் சம்பந்தப்பட்ட கணக்கு வைக்கப்படும்.

வழங்கீடுக் கமிட்டிகளது அனுமதிச் சீட்டு இன்றி பொருட்களை அனுப்புவதோ அல்லது வாங்குவதோ அல்லது விற்பதோ போன்றகுற்றம் புரியும் நபர் தமது சொத்து அனைத்தையும் பறிமுதல் செய்யப்படும் தண்டனைக்குரியவர் ஆவர். அத்தோடு ஆறு மாத காலம் சிறைத் தண்டனைக்கும் மற்றும் கட்டாய உழைப்புத் தண்டனைக்கும் உரியவராவர்.

பொருட்களின் போக்குவரத்து அல்லது வாங்குவது மற்றும் விற்பது போன்றவற்றிற்கான அனுமதிச் சீட்டுகள் அசலும் நகலும் கொண்டதாக எழுதப்பட வேண்டும். இவற்றில் சம்பந்தப்பட்ட வழங்கீடு கமிட்டியின் நிர்வாக போர்டின் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாமல் கையெழுத்திட்டாக வேண்டும். ஒரு பிரதி நிர்வாகக் குழுவிடம் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு அனுமதிச் சீட்டும் எந்த நுகர்வாளர் சங்கத்திலிருந்து எந்த நுகர்வாளர் சங்கத்திற்குப் பண்டங்கள் அனுப்பப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

வழங்கீடு கமிட்டிகளின் தந்திகளுக்குத் தந்தி நிலையங்கள் முதலிடம் கொடுத்தாக வேண்டும்.

எல்லா வழங்கீடு கமிட்டிகளும் தொழிலாளர், படையாளர், விவசாயிகள் பிரதிநிதிகளது உள்ளூர் சோவியத்துகளின் நெறியாணைக்கிணங்கவும் கண்காணிப்பின் கீழும் செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு தனிநபரும் தனது நுகர்வாளர் சங்கத்தில் எந்தப் பொருளையும் வாங்கிக் கொள்ளும் உரிமையுடையவராவர். எவ்விதமான நிபந்தனையும் இதற்குக் கிடையாது. வெளி நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதை வரையறை செய்யும் விதிமுறைகள் இதற்கு விதிவிலக்கு.

விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உள்ளூர் வழங்கீடு கமிட்டியிடம் கட்டுப்படுத்தப்பெருத விலைகளில் அளிக்கப் பெற வேண்டும். சட்டத்தினுல் நிலைநாட்டப் பெற்ற நிலையான விலைகள் இருக்குமானுல் அவை இதிலிருந்து விதிவிலக்கு பெறும். விற்கப்பட்ட பொருட்களுக்காகக்

கொடுக்கப்பெறும் பணம் அவற்றின் சொந்தக்காரர்கள் கணக்கில், உள்ளூர் (கிராமம், வோலஸ்த், நகரம், தொழிற் சாலை அல்லது இதர) மக்கள் வங்கியின் கிளையில் பதிவு செய்யப்படும்.

ஒவ்வொரு தொழிலாளர், படையாளர், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்தும் மக்கள் நுகர்வாளர் சங்கங்கள் (வழங்கீடு கமிட்டிகள்) அமைத்திடவும் அவற்றின் கணக்கு கள் மற்றும் இதர அலுவல்களைச் சரிபார்த்திடவும் உதவும் பொருட்டு மேற்பார்வையாளர், தணிக்கையாளர் மற்றும் நெறிமுறையாளர்களை நியமித்திட வேண்டும்.

வழங்கீடு கமிட்டிகளுக்கான கணக்கு வைப்பது மற்றும் கடிதத் தொடர்பு பற்றி தனியாக உத்தரவுகள் வெளியிடப் பெறும்.

1917 டிசம்பர் 24—27
(1918 ஜனவரி 6—9)ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 206-210

உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்[44]

என்பதிலிருந்து

அரசியல் நிர்ணய சபை தீர்மானிப்பதாவது:

I. *1.* ருஷ்யா தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் ஒரு குடியரசு என்று இதனால் பிரகடனம் செய்யப்படுகிறது. மத்தியிலும் வட்டாரங்களிலும் எல்லா ஆட்சி அதிகாரங்களும் இந்த சோவியத்துகளுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது.

2. ருஷ்யாவின் சோவியத் குடியரசு, சுதந்திர தேசங்களின் சுதந்திர ஒன்றியம் என்ற கோட்பாட்டின் மீது சோவியத் தேசியக் குடியரசுகளின் ஒரு கூட்டாட்சியாக நிறுவப்பட்டுள்ளது.

II. இதன் அடிப்படை நோக்கம் மனிதனை மனிதன் சுரண்டுவது அனைத்தையும் ஒழித்தல், சமூகம் வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதை முழுமையாக அகற்றுதல், சுரண்டலாளர் எதிர்ப்பை இரக்கமின்றி நசுக்குதல், ஒரு சோஷலிஸ்டு சமூக அமைப்பை நிலைநாட்டுதல், எல்லா நாடுகளிலும் சோஷலிசத்தின் வெற்றியை சாதனையாக்கல் என்பதாக இருப்பதால், இந்த அரசியல் நிர்ணய சபை மேலும் தீர்மானிப்பதாவது:

1. நிலத்தில் தனியார் உடைமை உரிமை இதனால் ஒழிக்கப்படுகிறது. எல்லா நிலமும், எல்லாக் கட்டடங்கள், விவசாயக் கருவிகள் மற்றும் விவசாயப் பொருள் உற்பத்திக்கான இதர துணைப் பொருட்கள் சகிதம் உழைக்கும் மக்கள் அனைவரின் சொத்து என்று பிரகடனம் செய்யப்படுகிறது.

2. சுரண்டலாளர் மீது உழைக்கும் மக்களின் ஆட்சி அதிகாரத்தை உத்தரவாதம் செய்யும் நோக்கத்திற்காகவும், ஆலைகள் சுரங்கங்கள் ரயில்வேக்கள் மற்றும் இதர உற்பத்தி சாதனங்கள் போக்குவரத்து சாதனங்களைத் தொழிலாளர் விவசாயிகள் அரசின் சொத்தாக முழுமையாக மாற்றும் பொருட்டும் தொழிலாளர் கண்காணிப்பு மற்றும் தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் சம்பந்தமான சோவியத் சட்டங்கள் இதனால் ஊர்ஜிதம் செய்யப்படுகின்றன.

3. மூலதனத்தின் அடிமைத்தளையில் இருந்து உழைக்கும் மக்களை விமோசனப்படுத்துவதற்கான நிபந்தனைகளில் ஒன்று என்ற முறையில் எல்லா வங்கிகளையும் தொழிலாளர் விவசாயிகளின் அரசின் சொத்தாக மாற்றுவது இதனால் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது.

4. சமூகத்தின் புல்லுருவிப் பகுதிகளை ஒழிக்கும் நோக்கத்துடன் சர்வஜனக் கட்டாய உழைப்பு இதனால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

1918 ஜனவரி 3 (16)க்குப் பிற்படாத தேதியில் எழுதப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள் 221-222

அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் ரு.ச.ஜ.தொ.க. (போல்ஷிவிக்குகள்) பிரிவின் அறிக்கை 1918 ஜனவரி 5 (18)[45]

உழைக்கும் ருஷ்யாவின் மிகப் பரந்த பெரும்பான்மை—தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் படையாளர்கள்—மகத்தான அக்டோபர் புரட்சியின் சாதனைகள், நிலம், சமாதானம் மற்றும் தொழிலாளர் கண்காணிப்பு பற்றிய சோவியத் அரசாணைகள், எல்லாவற்றிற்கும் மேலாகத் தொழிலாளர், படையாளர் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் ஆட்சி அதிகாரம் ஆகியவற்றை அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோருகிறது. அகில ருஷ்யா மத்திய நிர்வாகக் கமிட்டி, ருஷ்யாவின் உழைக்கும் வர்க்கங்களின் மிகப் பெரும்பான்மையின் சித்தத்தை நிறைவேற்றும் வகையில், அரசியல் நிர்ணய சபை இந்தச் சித்தத்துக்குக் கட்டுப்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று முன்மொழிந்துள்ளது. எனினும் அரசியல் நிர்ணய சபையின் பெரும்பான்மை—முதலாளி வர்க்கத்தின் அபிலாஷைகளுக்கு இசைவாக—இந்தப் பிரேரணையை நிராகரித்து விட்டது. அதன் மூலம் உழைக்கும் ருஷ்யா முழுமைக்கும் சவால் விடுகிறது.

அரசியல் நிர்ணய சபையின் பெரும்பான்மை வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சிக்கு, கேரென்ஸ்கி, அவ்க்சேன்தியெவ் மற்றும் செர்னோவ் ஆகியோரது கட்சிக்கு ஆதரவாகச் சென்றது. இந்தக் கட்சி தன்னை சோஷலிஸ்டு மற்றும் புரட்சிக் கட்சி என்று அழைத்துக் கொள்கிறது. ஆனால் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது புரட்சிக்கு எதிரான முதலாளித்துவ சக்திகளின் போராட்டத்தைத் தலைமை

தாங்கி நடத்துகிறது. உண்மையில் அது ஒரு முதலாளித்துவ மற்றும் எதிர்ப்புரட்சிக் கட்சியாகும்.

இப்போது அமைந்துள்ள விதத்தில் நிலவும் அரசியல் நிர்ணய சபை மகத்தான அக்டோபர் புரட்சிக்கு முந்திய நாட்களில் நிலவிய சக்திகளின் ஒப்புநிலையின் விளைவே. இப் போதைய அரசியல் நிர்ணய சபையிலுள்ள எதிர்ப்புரட்சி பெரும்பான்மை, காலாவதியாகிப் போன கட்சிப் பட்டியல் களின் மீது தேர்ந்தெடுக்கப்பட்டது. இது புரட்சிக்கு முந்திய காலகட்டத்தின் ஒரு பிரதிபலிப்பு ஆகும். இது தொழிலாளர் மற்றும் விவசாயிகள் இயக்கத்திற்கு இடையூறாக ஒரு தடைக் கல்லைப் போட்டிட முயல்கிறது.

நாள் முழுவதும் நடைபெற்ற விவாதம் வலதுசாரி சோஷ லிஸ்டு-புரட்சியாளர் கட்சி, கேரென்ஸ்கியின் கீழ் அது செய் ததைப் போலவே, மக்களுக்கு எல்லாவிதமான வாக்குறுதி களையும் தாராளமாக அள்ளி வீசிடுவதையே புலப்படுத்தியது. உள்ளபடியே, தொழிலாளர், படையாளர் மற்றும் விவசாயி களது சோவியத்துகளின் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராகப் போராடுவது என்று அது முடிவு செய்துள்ளது. சோஷலிச நடவடிக்கைகளாகிய நிலம், பண்ணைக் கருவிகள் ஆகியவை நஷ்ட ஈடின்றி விவசாயிகளிடம் மாற்றி வழங்கப்படுதல், வங்கிகள் தேசவுடைமையாக்கப்படல் மற்றும் அரசாங்கக் கடன்களைத் தள்ளுபடி செய்தல் போன்றவற்றையும் எதிர்த்துப் போராடுவது என்று முடிவு செய்துள்ளது.

மக்களது விரோதிகளின் குற்றங்களை ஒரு நொடிப்பொழு தும் மூடி மறைத்திட மறுதலித்து நாம் அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளி நடப்புச் செய்வதை அறிவிக்கிறோம். அரசியல் நிர்ணய சபையின் எதிர்ப்புரட்சிப் பிரிவினரிடம் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைப் பற்றி இறுதி முடிவு எடுப்பதை சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு விட்டுவிடு கிறோம்.

பிராவ்தா, இதழ் 5 (மாலைப் பதிப்பு),
1918 ஜனவரி 19 (6)

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 227-28

தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் மூன்றுவது அகில ருஷ்ய காங்கிரஸ்[46]
1918 ஜனவரி 10—18 (23—31)

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நடவடிக்கைகள் பற்றிய உரை
ஜனவரி 11 (24)
என்பதிலிருந்து

இப்போது நான் ருஷ்யாவின் சோஷலிஸ்டு சோவியத் அரசாங்கம் நிறைவேற்றத் தொடங்கியுள்ள நடவடிக்கைகள் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன். ஏற்கப்பட்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்று வங்கிகளைத் தேசவுடைமை யாக்குவதாகும். இதன் குறிக்கோள் ருஷ்யாவின் மண்ணில் இருந்து நிலப்பிரபுக்களைத் துடைத்தொழிப்பது மட்டும் அல்ல, அதோடு முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிப்பதும் மூலதனம் லட்சோப லட்சம் கோடானு கோடி உழைப்பாளி மக்களை ஒடுக்கும் சாத்தியக் கூறை அடியோடு ஒழிப்பதும் ஆகும். வங்கிகள் நவீன முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முக்கியமான மையங்களாகும். அவை நம்பற்கரிய செல்வத்தைத் திரட்டி இந்தப் பரந்த நாடு முழுவதும் வினியோகம் செய்கின்றன. அவை முதலாளித்துவ வாழ்க்கையின் செயல் ஆற்றல் மையமாகும். அவை பல நூற்றுண்டு காலமாக வளர்ந்து வந்த நுண்ணயமான சிக்கலான நிறுவனங்களாகும். அவற்றை எதிர்த்தே சோவியத் ஆட்சியின் முதல் வீச்சடிகள் தொடுக்கப்பட்டன. சோவியத் ஆட்சி அரசு வங்கி விஷயத்தில் மூர்க்கமான எதிர்ப்பை முதலில் எதிரிட நேர்ந்தது. ஆனுல் இந்த எதிர்ப்பு சோவியத் ஆட்சியைத் தடைப்படுத்திவிடவில்லை. பிரதானமான காரியத்தில், அரசு வங்கியை நிறுவுவதில் நாம் வெற்றி பெற்றோம் இந்தப் பிரதானமான சாதனம் தொழிலாளர், விவசாயிகள் கரங்களில் இருக்கிறது. இந்த அடிப்படை நடவடிக்கைகளுக்குப் பிறகு—இவற்றின் விவரங்கள் இன்னும் வகுக்கப்

பட வேண்டும்—நாம் தனியார் வங்கிகள் மீது கைவைக்கத் தொடங்குவோம்.

சமரசவாதிகள் நம்மிடம் ஒருக்கால் எவ்வாறு பரிந்துரைத்திருப்பார்களோ அந்தவழியில் நாம் செயல்படவில்லை. அதாவது, முதலில் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது வரையில் காத்திருப்பது, பிறகு ஒருவேளை ஒரு மசோதாவை வரைந்து அரசியல் நிர்ணய சபையில் கொண்டுவருவது, அதன் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு நமது நோக்கங்களை அறிவிப்பது, அதன் மூலம் பிடிக்காத இந்த விவகாரத்தில் இருந்து தம்மைத் தாமே சிக்கறுத்துக் கொள்ள அவர்கள் ஓட்டைகளைக் கண்டுபிடிக்க உதவுவது; ஒருவேளை அவர்களையும் நமது கூட்டத்திற்குள் இழுத்து பிறகு அரசுச் சட்டங்களைச் செய்வது அது ''அரசுச் சட்டமாக'' இருக்கும் என்பதே அவர்கள் வழி.

அவ்வாறு செய்வது சோஷலிசத்தை நிராகரிப்பதாகும். நாம் முற்றும் எளிய முறையில் செயல்பட்டோம். ''படித்த'' ஆட்களின் அல்லது தமது அறிவின் மீதமிச்சங்களில் வாணிபம் நடத்தும் முதலாளி வர்க்கத்தினரை ஆதரிக்கும் படிக்காதவர்களின் கண்டனங்கள் எழுமே என்பது குறித்து அஞ்சாமல் நாம் செயல்பட்டோம். எம் செயலாட்சியில் ஆயுதமேந்திய தொழிலாளரும் விவசாயிகளும் இருக்கிறார்கள் என்று கூறினோம். இன்று காலை அவர்கள் எல்லாத் தனியார் வங்கிகளையும் கைப்பற்றி இருக்க வேண்டும். (கரவொலி.) அவர்கள் அதைச் செய்த பிறகு, ஆட்சி அதிகாரம் நமது கரங்களுக்கு வந்த பிற்பாடு, இதற்குப் பின்னால் மட்டுமே நாம் என்ன நடவடிக்கைகளைக் கைக் கொள்வது என்பது பற்றி விவாதிப்போம். காலையில் வங்கிகள் கைப்பற்றப் பட்டன. மாலையில் மத்திய நிர்வாகக் கமிட்டி ஓர் அரசாணை பிறப்பித்தது: ''வங்கிகள் தேசியச் சொத்து என்று சாற்றப் பட்டன''. அரசுக் கண்காணிப்பு, வங்கித் தொழில் சமூகமயமாக்கப்படுதல், அது சோவியத் ஆட்சியிடம் ஒப்படைக்கப்படுதல் நடைபெற்றது.

பல நூற்றாண்டுகள் இடையே முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறையில் இருந்து தோன்றி வளர்ந்த வங்கித் தொழில் போன்ற சிக்கலான நுண்ணயமான ஒரு பொறியமைவு சில நாட்களில் தகர்க்கப்பட்டு விடும் அல்லது

மாற்றப்பட்டு விடும் என்று எம் மத்தியில் எவருமே கற்பனை கூடச் செய்திருக்க முடியாது. அதை நாம் என்றுமே சொல்ல வில்லை. ஆனால் விஞ்ஞானிகளும் போலி விஞ்ஞானிகளும் தம் தலைகளை அசைத்து ஆரூடம் சொன்ன போது நாம் கூறினோம்: நீங்கள் எதை வேண்டுமாயினும் ஆரூடம் கூறலாம். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான ஒரே ஒரு வழியை மட்டுமே நாங்கள் அறிவோம், அது என்னவென்றால், விரோதியின் போர் தளத்தைப் பிடித்துக் கொள்வது—நமது தவறுகளில் இருந்து அனுபவத்தின் மூலம் ஆட்சி செய்யக் கற்றுக் கொள் வது என்பதே. நமது பாதையில் இருக்கும் இடர்ப்பாடுகளை நாம் கிஞ்சிற்றும் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் பிரதான காரியத்தை நாம் செய்து விட்டோம். முதலாளித்துவச் செல் வத்தின் மூலாதாரம் அதன் வினியோக இடத்தில் அரித் தழிக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு அரசுக் கடன்களை மறுத்துத் தள்ளுபடிச் செய்வதோ நிதி ஆதிக்கத் தளைகளை வீழ்த்துவதோ மிகவும் எளிதான செயலாகும். தொழிலாளர் கண்காணிப்பு புகுத்தப்பட்டதற்குப் பின்னால், தொழிற்சாலை களின் உடைமை பறிமுதலை நோக்கி மாறிச் செல்வதும் மிக எளிதே. தொழிலாளர் கண்காணிப்பினைப் புகுத்துவது மூலம் நாம் உற்பத்தியைத் தனித்தனித் துறைகளாகப் பிரித்து விட்டோம் என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்த முட்டாள் கதையை நாம் ஒதுக்கித் தள்ளினோம். தொழிலாளர் கண் காணிப்பைப் புகுத்துவது என்பது ருஷ்யா முழுவதிலும் பரவுவதற்கு மிகுந்த காலம் பிடிக்கும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். ஆனால் நாம் ஒரு பாதையை மட்டுமே அங்கீகரிக்கிறோம் என்பதைக் காட்ட விரும்பினோம். கீழ் மட் டத்தில் இருந்து மாறுதல்கள் என்பதே இந்தப் பாதை. தொழிலாளர்கள் தாமே கீழ் மட்டத்தில் இருந்து புதிய அடிப்படை பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். இதற்கு அதிக காலம் தேவை.

தொழிலாளர் கண்காணிப்பில் இருந்து தலைமைப் பொரு ளாதாரக் கவுன்சிலை உருவாக்குவதை நோக்கி நாம் கடந்து சென்றோம். வங்கிகளையும் ரயில்வேக்களையும் தேசவுடைமை யாக்குவதுடன் சேர்த்து—இது அடுத்த சில நாட்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்—இந்த நடவடிக்கை மட்டுமே

ஒரு புதிய சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தைக் கட்டுவதற்கான வேலையை நாம் துவங்குவதை சாத்தியமாக்கும். இந்த வேலையில் நம்மை எதிரிடும் இடர்ப்பாடுகள் குறித்து நாம் மிகவும் நன்றாக அறிவோம். ஆனால் யார் உழைப்பாளி மக்களின் அனுபவம் மற்றும் இயல்பூக்கத்தைச் சார்ந்து நின்று இந்தப் பணியினை நிறைவேற்றப் பாடுபடுகிறார்களோ அவர்கள் மட்டுமே செயலில் சோஷலிஸ்டுகள் என்று நாம் உறுதியாகக் கூறுகிறோம். மக்கள் பல தவறுகள் செய்வார்கள், ஆனால் பிரதான காரியம் செய்து முடிக்கப்பட்டு விட்டது. சோவியத் ஆட்சி அதிகாரத்திடம் வேண்டுகோள் விடுத்தால் சுரண்டலாளர்களை எதிர்த்து மனப் பூர்வமான ஆதரவு கிடைக்கும் என்பதை மக்கள் அறிவார்கள். அவர்களது வேலையை எளிதாக்கும் நோக்கமுள்ள எல்லா நடவடிக்கைகளுக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் முழுமையான ஆதரவு உண்டு. சோவியத் ஆட்சி அதிகாரத்தால் எல்லாவற்றையும் தெரிந்திருக்க முடியாது, எல்லாவற்றையும் காலாகாலத்தில் சமாளித்திருக்க முடியாது. மிக அடிக்கடி அது இடர்ப்பாடான பணிகளை எதிரிட நேர்கிறது. மிக அடிக்கடி தொழிலாளர், விவசாயிகள் தூதுக்குழுவினர் அரசாங்கத்திடம் வந்து உதாரணமாக இன்னின்ன துண்டு நிலங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்பது போன்ற கேள்விகளைக் கேட்கின்றனர். அவர்களிடம் திட்டவட்டமான கருத்துக்கள் எதுவும் இல்லை என்பதைக் கண்டு நானே பல தடவை சங்கடத்திற்கு உள்ளானேன். நீங்கள்தான் ஆட்சி அதிகாரம்; நீங்கள் செய்ய விரும்புவதை எல்லாம் செய்யுங்கள்; நீங்கள் விரும்பியதை எடுத்துக் கொள்ளுங்கள்; நாங்கள் உங்களைக் கட்டாயம் ஆதரிப்போம்; ஆனால் உற்பத்தியைக் கவனித்துக் கொள்ளுங்கள், உற்பத்தி பயன் உடையதாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன். பயனுள்ள வேலையை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தவறுகள் செய்வீர்கள், ஆனால் அனுபவத்தால் அறிந்து கொள்வீர்கள். தொழிலாளர்கள் ஏற்கெனவே அனுபவத்தால் அறிந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே சீர்குலைவு புரிவோரை எதிர்த்துப் போராடத் தொடங்கி விட்டார்கள். தொழிலாளி மக்களின் முன்னேற்றத்தைத் தடங்கல் செய்யும் தடை வேலியாக மாற்றப்பட்டு

விட்டது கல்வி போதனை. அது தகர்த்துத் தள்ளப்படும்.

போர், பின்னணியிலும் முனையிலும் இருப்பவர்களை ஒருங்கே ஊழல்படுத்தி வருகிறது என்பதில் சந்தேகமில்லை. போர் சப்ளைகள் துறையில் வேலை செய்வோருக்குச் சாமான்ய விகிதத்திற்கும் அதிகமான ஊதியம் தரப்படுகிறது. இது போரில் சேராமல் ஒளிந்து கொண்டிருக்கும் எல்லோரையும், கிடைத்ததைச் ''சுருட்டிக்'' கொண்டு வெளியேறும் ஒரே விருப்பத்தில் ஊறிக்கிடக்கும் தெருச்சுற்றிக் கயவாளிகளையும் அரைக் கயவாளிகளையும் கவர்வதாக உள்ளது. இந்தத் தெருச்சுற்றிக் கயவாளிகளும் அரைக் கயவாளிகளும் பழைய முதலாளித்துவ அமைப்பு முறையின் மீதமாக இருக்கும் படு மோசமான பகுதிகள், பழைய தீமைகள் அனைத்தின் கருவிகளாவர். இந்த நபர்களை நாம் உதைத்து விரட்ட வேண்டும், அகற்ற வேண்டும். தொழிற்சாலைகளில் மிகவும் சிறந்த எல்லாப் பாட்டாளி வர்க்கத்தினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும், அவர்களை எதிர்கால சோஷலிஸ்டு ருஷ்யாவின் கருவாக உருவாக்க வேண்டும். இது எளிதான பணி அல்ல, இது பல சச்சரவுகளுக்கு இடமளிக்கும், மிகவும் அதிகமான உராய்வுகளையும் மோதல்களையும் உண்டாக்கும். மக்கள் கமிசார்களின் கவுன்சிலைச் சேர்ந்த நாமும் சொந்த முறையில் நானும் அவர்களிடமிருந்து புகார்களையும் அச்சுறுத்தல்களையும் கேட்டிருக்கிறோம். ஆனால் நாம் மனுச் செய்து கொள்வதற்கான ஒரு நீதிபதி இருக்கிறார் என்பதை அறிந்து நாம் அமைதியாகவே இருக்கிறோம். அந்த நீதிபதி தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆகும். (கரவொலி.) இந்த நீதிபதியின் முடிவு மறுக்க வொண்ணாதது, நாம் அதை எப்போதும் சார்ந்து நிற்போம்.

முதலாளித்துவ வர்க்கத்தைச் சுற்றி தொழிலாளி வர்க்கத்தின் உயர் பிரிவைச் சேர்ந்த அற்பமான சிலரைத் திரட்டிக் கொள்ளும் பொருட்டு, முதலாளித்துவம் திட்டமிட்டே தொழிலாளர்களைப் பாகுபாடு செய்கிறது. இந்தப் பிரிவுடன் மோதல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. போராட்டம் இன்றி நாம் சோஷலிசத்தைச் சாதனையாக்க முடியாது. நாம் போராடத் தயாராக இருக்கிறோம், அதை நாம் துவங்கி விட்டோம், சோவியத்துகள் எனும் பொறியமைவின் துணையுடன் அதை நடத்தி முடிப்போம். தொழிலாளர்கள், படை-

யாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்தின் முன் நாம் கொண்டு வரும் எந்த ஒரு பிரச்சினைக்கும் எளிதில் தீர்வு காண முடியும். ஏனெனில் தனிச் சலுகை பெற்ற தொழிலாளர் குழு எவ்வளவு பலமானதாக இருந்த போதிலும், அனைத்துத் தொழிலாளரின் பிரதிநிதித்துவ அமைப்பின் முன் அவர்கள் கொண்டுவரப்படும் போது, இந்த நீதிமன்றத்துக்கு அவர்கள் எதிர்ப்புக் காட்ட முடியாது என்று மீண்டும் கூறுகிறேன். இந்த வகையான ஏற்பாடு இப்போதுதான் துவங்கியுள்ளது. தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் தமது சொந்த வலிமையில் இன்னும் போதுமான நம்பிக்கை ஏற்படவில்லை. காலகாலமாக இருந்த மரபு அவர்கள் மேலே இருந்து உத்தரவை நோக்கிக் காத்திருப்பதைப் பெருமளவு வழக்கமாக்கி விட்டது. பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாக இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் இன்னும் முழுமையாக உணர்ந்து மதிப்பிடவில்லை. அவர்கள் மத்தியில் பீதியுறும், மிதித்துத் துவைக்கப்பட்ட நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் வெறுக்கத்தக்க நடைமுறைப் பாணியினைக் கடந்து செல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள். முதலாளித்துவத் தப்பெண்ணங்களில் மிகவும் வெறுக்கத்தக்கதான இது மற்ற எல்லாவற்றை விடவும் நீண்ட காலம் வாழ்ந்து வந்துள்ளது. ஆனால் இது அழிந்து வருகிறது, முற்றாக அழிந்து போகும். சோவியத் ஆட்சி அதிகாரம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் கூடவே, சாமான்யத் தொழிலாளியும் விவசாயியும் அரசை நிர்வாகம் செய்ய முடியாது என்ற பழைய முதலாளித்துவத் தப்பெண்ணத்தை முழுமையாக உதறித்தள்ளும் மக்களின் எண்ணிக்கை இடையறாது அதிகரிக்கும் என்பதை நாங்கள் மெய்யாக உணர்கிறோம். அதைச் செய்ய சாமான்ய மக்கள் ஒருங்குவார்களானால் அவர்களால் செய்ய முடியும், அனுபவமும் பெற முடியும்! (கரவொலி.)

மக்கள் மத்தியில் இருந்து தலைவர்களையும் அமைப்பாளர்களையும் தேர்வு செய்வது எமது ஸ்தாபனம் சம்பந்தமான பணியாகும். இப்போது இந்தப் பேரளவான பிரம்மாண்டமான வேலை நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்று விட்டது. சோவியத் ஆட்சி அதிகாரம் இருந்திராவிடில் இதை நிறைவேற்றுவது குறித்து சிந்தனை கூடச் செய்திருக்க முடியாது.

சோவியத் ஆட்சி அதிகாரம் மக்களை உயர்த்தி மேம்படுத்தும் ஒரு வடிகட்டும் பொறியமைவு ஆகும்.

நம் வசம் கண்காணிப்பு சம்பந்தமான ஓர் அரசுச் சட்டம் இருக்கிறது. இது மட்டுமன்றி, இதை விட மதிப்புடைய வேறு சிலவும் உள்ளன. தொழில்களின் முழுக் கிளைகள் மீதும் தொழிலாளர் நிர்வாகத்தை உத்தரவாதம் செய்யும் பொருட்டு முதலாளிகளின் சங்கங்களுடன் பாட்டாளிகளின் சார்பில் உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளே இவை. அத்தகைய உடன்பாடு தோல் தொழிலாளர்களுக்கும் தோல் பண்ட முதலாளிகளின் அகில ருஷ்ய சங்கத்துக்கும் இடையே வரையப் பெற்றுக் கிட்டத்தட்டப் பூர்த்தியாகி விட்டது. இந்த உடன்பாடுகளுக்கு நான் தனி முக்கியத்துவம் அளிக்கிறேன்.[47] தொழிலாளர்கள் தமது வலிமையைப் பற்றி உணர்ந்து வருவதை அவை காட்டுகின்றன.

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 273-277

கடல் மற்றும் உள்நாட்டு வர்த்தகக் கப்பல் போக்குவரத்துத் துறையின் தேசவுடைமையாக்கம் பற்றிய அரசாணையின் நகல்[48]

1

அரசாணையின் நகல்

1. மக்கள் கமிசார்களின் கவுன்சில், மத்தியக் கமிட்டியும்[49] சென்த்ரொவோல்காவும் வியாபார நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் எல்லா கடல் வழி மற்றும் ஆற்று வழிக் கப்பல்களை உடனடியாகவும் நஷ்ட ஈடு இன்றியும் தேசவுடைமையாக்குவதன் அவசியம் குறித்துப் பூரணமாக உடன்படுகின்றன என்று கூறுகிறது.*

2. மக்கள் கமிசார்களது கவுன்சில், இப்படிப்பட்ட தேசவுடைமையாக்கல் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று தீர்மானிக்கிறது. தனிப்பட்டதொரு கமிஷன் ஒன்றினை அதற்கென நியமிக்கிறது. அக்கமிஷனில் கடல் போக்குவரத்துக் கமிசாரகத்தின் பிரதிநிதிகள், மத்தியக் கமிட்டியின் சார்பாக இரண்டு பிரதிநிதிகள், சென்த்ரொவோல்காவின் இரண்டு பிரதிநிதிகள், தலைமைப் பொருளாதார கவுன்சில் நியமிக்கும் ஒரு தலைவர் ஆகியோர் இருப்பர். இந்தக் கமிஷன் கீழ்வரும் தேசவுடைமையாக்கல் பற்றிய அரசாணையின் கோட்பாடுகளை வரைந்து, இரண்டு நாட்களுக்குள் மக்கள் கமிசார்களின் கவுன்சிலுக்கு அவற்றைச் சமர்ப்பிக்கும்.

3. கப்பல் போக்குவரத்துத் துறை முழுவதையும் தேசவுடைமையாக்கிட ஆணையிடப்படுகிறது.

4. தங்களது கப்பல்களில் ஒழுங்கைக் கடைப்பிடிப்பதும், அவற்றைப் பாதுகாப்பதும் ஒவ்வொரு நதிப் பிராந்தியம் அல்லது கடல் துறையிலுள்ள கப்பல் தொழிலாளர் அணி

---

* *வோல்கா நதி கப்பற் போக்குவரத்து கிளையின் மத்தியக் கமிட்டி.*—மொ-ர்.

யின், பின்னுல் கப்பல் தொழிலாளர் சங்கங்களின் அவசியக் கடமையாகும்.

5. மத்தியக் கமிட்டியும் சென்த்ரொவோல்காவும் தேசவுடைமையாக்கப்பட்ட கப்பல் போக்குவரத்துத் துறை முழுமையின் இடைக்கால மேலாண்மை மத்திய போர்டுகளாக காங்கிரஸ் கூட்டப்படும் வரையிலும், இவை இணைக்கப்படும் வரையிலும், செயல்படும்.

இணைப்பு சுயவிருப்பமாக சாதனையாகா விட்டால், சோவியத் ஆட்சி அதிகாரத்தால் இது கட்டாயமாகச் செய்து முடிக்கப்படும்.

6. சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஸ்தல மற்றும் மத்திய உறுப்புகளுக்கு முழுவதும் கீழ்ப்பட்டு மத்திய போர்டுகள் செயல்படும்.

2

நகலுக்குப் பின் இணைப்பு

உடனடியான தேசவுடைமையாக்கும் ஆணையுடன் சேர்க்கப்பட வேண்டுவதாவது:

(α) நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் (வீட்டிலேயே கைது செய்து இருத்தி வைக்கப்பட வேண்டும்),

(β) கப்பல்களுக்கு ஏற்பட்ட சேதம் இத்தியாதிக்கான விசேஷப் பொறுப்பு பற்றி.

1918 ஜனவரி 18 (31)ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 316-317

மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டத்தில் ஆற்றிய உரைகள்[50]
1918 மார்ச் 4
என்பதிலிருந்து

1

இங்கே நாம் கேள்விப்பட்ட போக்குகள் மற்றும் முயற்சிகள் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது அரசாங்கத்தின் நோக்கங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்றன என்பதில் நான் தோழர் துருத்தோவ்ஸ்கியுடன் முழுவதும் ஒத்துப் போகிறேன். மற்றும் இவற்றுக்கு சோஷலிசத்தோடு பொதுவான எதுவும் இல்லை.[51] சோஷலிசத்தின் நோக்கம் உற்பத்தி சாதனங்கள் அனைத்தையும் மக்களனைவரின் சொத்தாக மாற்றிடுவதாகும். இதன் அர்த்தம் கப்பல் தொழிலாளர்களுக்குக் கப்பல்களெல்லாம் சொந்தம் என்பதல்ல, அல்லது வங்கிகள் எல்லாம் வங்கி ஊழியர்களின் சொத்து என்பதல்ல. இப்படிப்பட்ட அற்ப விஷயங்களை மக்கள் முக்கியமானது என்று கருதிக் கொள்வார்களானால், நாம் தேசவுடைமையாக்குவதையே விட்டு விட வேண்டுவது தான். ஏனெனில் இந்த விஷயம் முழுவதும் அபத்தமானதாக இருக்கிறது. சோஷலிசத்தின் பணி, அதன் நோக்கம், நாம் அறிந்தமட்டில், நிலம் மற்றும் தொழில்துறை நிறுவனங்களை சோவியத் குடியரசின் சொத்தாக மாற்றுவது ஆகும். விவசாயி நிலத்தைப் பெறும்போது அதை நன்ருகப் பயன்படுத்துவார் என்ற நிபந்தனையின் பேரில் அதைப் பெறுகிருர். நதிப் போக்குவரத்துத் தொழிலாளர் கப்பல்களைப் பெறுவாராளுல், அது அவர்கள் அவற்றில் உடைமையுரிமை சார்ந்த அக்கறை காட்டுவார்கள் என்ற நிபந்தனையின் பேரில்தான். அவர்கள் உத்தேச மதிப்பீடுகளை சமர்ப்பிக்க வேண்டும். குறைந்தது வருவாய் மற்றும் செலவீடுகளை அங்கீகாரம் செய்வதற்காகவேனும் இதைச் செய்தாக

வேண்டும். அவர்கள் கப்பல்களை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும். இதை அவர்கள் செய்ய முடியாவிட்டால் நாம் அவர்களை நீக்கி விடுவோம். கடந்த மூன்று வாரங்களாக அவர்கள் விவாதித்துக் கொண்டு இருப்பதை நான் பார்க்கும் போது, நிர்வாகத்திலிருந்து அவர்கள் அனைவரையும் நீக்கிட வேண்டும் என்று நான் முன்மொழிவேன். ஏனெனில் அமைப்புப் பணிக்கு இவர்கள் அறவே திறமையற்றவர்கள் என்பதை இது காட்டுகிறது. சோவியத் குடியரசினை எதிர் நோக்கியுள்ள ஜீவாதாரமான பணிகளை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது ஒரே குழப்பம், சீர்குலைவு, இன்னும் மோசம்—அது நாசவேலையைப் போன்று இருக்கிறது. ஒருவகை ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்து, சங்கத்தில் வந்து புகார் செய்கிறவர்களாக இங்கு வந்துள்ளார்கள். இதற்கிடையில், வோல்காவிலுள்ள படகுகள் பழுது பார்க்கப்படாமல் நிற்கின்றன. இது என்ன? இது என்ன பைத்தியக்கார விடுதியா? இந்தக் குழப்பத்தில் நாம் இருந்து கொண்டே இருந்தால், இன்னும் அதிகப் பேராபத்துக்களை நம் தலைமீது வருவித்துக் கொள்வோம் என்பதை அவர்கள் உணர்கிறார்கள் என்று நான் நிச்சயமாக அறிவேன். நம்மிடம் கோரப்படும் பிரதான நிபந்தனை ஒழுங்குக் கட்டுப்பாடு மற்றும் சொத்துக்கள் அனைத்தையும் முறையான வழியில் மக்களுக்கும் செல்வாதாரங்களை எல்லாம் சோவியத் குடியரசுக்கும் மாற்றி வழங்குவது. மற்றும் அவற்றை ஒழுங்கான முறையிலும் கருராகவும் பயன்படுத்துவது என்பதாகும். எனவே நதிப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் தனியார் நிர்வாக உடைமை உரிமையாளர்களாக இருப்பார்கள் என்று சொல்வதை நாம் நிச்சயமாக ஒத்துக் கொள்ள முடியாது. சோவியத் ஆட்சி அதிகாரம்தான் நிர்வாகம் செய்யவேண்டும். ஆனல் நீங்கள் எல்லா அமைப்புகளிடையேயும் ஐக்கியம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் ஒரு வகையான விவாதத்திற்கு ஏற்பாடு செய்து இருக்கிறீர்கள்....* அவர்கள் திருப்தியுறுது இருந்தால் அவர்கள் இந்த உத்தரவை நீக்கும்படி கேட்டிருக்கலாம். ஆனல் இவர்கள் கப்பல் தொழிலாளர்

---

* சுருக்கெழுத்து குறிப்பேட்டில் ஒரு பகுதியை விளங்கிக் கொள்ள முடியவில்லை.—ப-ர்.

140 சதவிகித ஊதிய உயர்வு கோரிட முடியும் என்பதற்காக, கப்பல்கள் யாருக்குச் சொந்தம் என்று முதலில் முடிவு செய்திட வேண்டுமென்று மீண்டும் பிரேரேபிக்கிறார்கள்.

2

பல காரியங்களைக் குறித்து நான் முற்றிலும் ஒத்துப் போகிறேன். ஆனால் நதிப் போக்குவரத்துத் தோழர்கள் முன்மொழியும் போர்டு அமைவு பற்றிய பிரேரணை அறவே ஏற்கத்தக்கதல்ல. எல்லாவற்றிற்கும் முன்னால் நாம் விவாதிக்கும் விஷயமே அது அல்ல. பிரச்சினைக்குரிய விஷயம் தொழிலாளர்கள் ஊதியப் பணம் பெறவில்லை என்பது. அது மிகவும் அவக்கேடான காரியம் என்பது திண்ணம். நாம் எதற்காகப் பண ஒதுக்கீடு செய்கிறோம்? வெறும் காகித அளவில் நிற்கவா? பணம் அனுப்பப்படாவிட்டால் நமது போக்குவரத்து தகர்ந்து விழும் என்று நாம் ஓர் ஆயிரம் புகார்களைக் கேட்டுள்ளோம். பிப்ரவரி 21 தேதி பணம் ஒதுக்கப்பட்டு, 22ந் தேதி அது வந்து சேரவில்லையென்றால், அவர்கள் 23ந் தேதி புகாருடன் வந்திருக்க வேண்டும். நமக்குப் பண முடை ஏற்பட்டிருக்கிறது. காகித நோட்டுக்கள் தட்டுப்பாடு இருக்கிறது. நமக்குத் தேவையானவற்றையெல்லாம் நமது கஜானாவால் அச்சிட்டு விட முடியாது. நாங்கள் ஒதுக்கும் பணத்தை நீங்கள் ஒதுக்க மறுத்து விடுகிறீர்கள் என்றால் உள்ளபடியே ஒன்றும் அனுப்பப்படவில்லை என்பதாகும். நீங்கள் பிப்ரவரி 23ந் தேதியன்றே இங்கு வந்திருக்க வேண்டுமேயொழிய மார்ச் 3ந் தேதியல்ல. இந்தக் கோடிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரினோம். யார் மீது அதிகமாகக் குற்றப் பழி சாட்டப்பட வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை, பொருளாதாரக் கவுன்சிலின் பிரதிநிதிகளை நான் நம்புகிறேன். நாம் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்த முடியாது. நாம் பெத்ரோகிராதுக்கு நோட்டுக்களை அனுப்பி விடும் போது, மாஸ்கோ காகித நோட்டுப் பஞ்சத்தால் வாடுகிறது....* வெறும் ஒதுக்கீடுகளை மட்டும் எழுதிவிட்டு, அதை நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்காவிட்டால், மக்கள் இங்கு

* சுருக்கெழுத்து குறிப்பேட்டில் ஒரு பகுதியை விளங்கிக் கொள்ள முடியவில்லை.—ப-ர்.

வந்திருக்க வேண்டும். அல்லது என்னைத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசி இருக்க வேண்டும். அல்லது வேறு எவரோ டாவது பேசி இருக்க வேண்டும். இதைக் குறித்து புகார் செய்திருக்க வேண்டும். பணம் கொடுக்கப்படவில்லை என்று எனக்குப் புகார் வராத வாரம் மிகவும் அரிது. ஆனால் இங் களிடமிருந்து ஒரே ஒரு புகாரைக் கூட நான் பெறவில்லை. இதற்கு அவர்களைப் பதில் சொல்ல வைக்கவேண்டும். குறைந்த பட்சம் அவர்கள் கடிந்துரைக்கப்பட்டிருக்க வேண்டும். பிப்ரவரி 21ந் தேதியின் தீர்மானப்படி நதிப்போக்கு வரத்துத் தொழிலாளர் காங்கிரஸ் மதிப்பீடுகளை சமர்ப்பிக்க வேண்டும். நிர்வாக போர்டின் அமைவு பற்றி, தோழர் ஷ்லியாப்னிக்கவின் ஆலோசனையின்படி நமது ஆணையைத் திருத்தி இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். மூன்றும் பாரா ஏழு அங்கத்தினர்கள் கொண்டதொரு போர் டுக்கு வகை செய்கிறது. இது ஏன் புகுத்தப்படவில்லை என் பது விளங்காத புதிர். பற்பல தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கலாம். இந்தப் பணம் உடனடியாக இந்தப் பாதையில் செல்லும் சரக்கு ரயில் மூலம் அனுப்பப்பட உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப் பெற வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். அதற்கப் புறம் வழக்கம் போல அறிவிப்பினை அனுப்பிப் பணம் அனுப் பப்பட்டு விட்டது என்பதைத் தெரிவிக்கலாம். இரண்டா வது விஷயத்தைப் பொருத்தவரை இந்தச் சந்தர்ப்பத்தில் நம் எல்லோருக்கும் மிகவும் ஏற்புடைய சாத்தியமான ஒரே போர்டு—நமது மக்கள் கமிசார் கவுன்சிலுக்கும் ஏற்றதான போர்டு—மக்கள் கமிசார் கவுன்சிலால் நேற்று நியமிக்கப் பட்ட ஒன்றே என்று கருதுகிறேன். இதை மாற்றுவதற்கு யாதொரு காரணமும் இல்லை. நாம் இதை நிறைவேற்றியாக வேண்டும் என்று நினைக்கிறேன். போக்குவரத்து தேசவுடை மையாக்கப்பட்ட போது ஒரு நிபந்தனையாக, திட்டவட்ட மாக 200 ரூபிள் சம்பளம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது உண்மையானல், அது உண்மையானல், இதர அமைப்புக ளோடு சமனப்படுத்த வேண்டிக் கோரிக்கைகள் வைக்கப்படு மானல், தேசவுடைமையாக்கத்தை நீக்கிடும் பிரச்சினையை நான் நேராக முன்வைப்பேன். விரைவில் பணமே இல்லாத ஒரு காலம் வரலாம். நாம் ஒரே ஓர் உத்தரவாதத்தின் பேரில்

தேசவுடைமையாக்குதலை நிறைவேற்றிட விரும்பினோம். இப்போது அந்த ஒன்றும் நம்மிடமிருந்து பறித்துக் கொள்ளப்படுகிறது. அதுதான் நிலைமை என்றால், இந்த நடவடிக்கை தள்ளப்பட வேண்டும். இதைச் செய்யாது விட்டு விட்டால், நாம் வேறொரு பொறுப்பினை ஏற்று அதன் மூலம் ஏராளமான நஷ்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டி நேரிடும்.

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 411-413

"சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்" என்ற கட்டுரையின் தொடக்க வாசகத்திலிருந்து[52]

அத்தியாயம் 5

சோவியத் அரசாங்கத்தை இப்போது எதிர்நோக்கியுள்ள நாட்டை ஆட்சி புரியும் பணி, ஒரு விசேஷ அம்சம் பெற்றதாய் விளங்குகிறது. நாகரிகம் அடைந்த நாடுகளின் நவீன கால வரலாற்றில் முதன் முறையாக ஒருவேளை இது தோன்றியிருக்கலாம். இது அரசியலை விடவும், பொருளாதாரத்தைத் தனி முக்கியத்துவத்துடன் எடுத்துக் கவனிக்கிறது. பொதுவாக ''ஆட்சி நிர்வாகம்'' என்ற சொல் பிரதானமாக, ஒருவேளை முழுவதாகவும், அரசியல் நடவடிக்கையோடு சம்பந்தப்பட்டதாக இருக்கும். இருந்தபோதிலும், சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படையே, ஏன் சாரமே, அரசியல் பணிகள் பொருளாதாரப் பணிகளை விடக் கீழானதோர் இடத்தைப் பெறும் மெய்நடப்பில்தான் காணக்கிடக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து சோஷலிச சமுதாயத்திற்கு மாறிச் செல்லும் நிகழ்வு போல இதுவும் ஒன்று. மற்றும் இப்போது, முக்கியமாக சோவியத் அரசாங்கத்தின் நான்கு மாதத்திற்கு மேலான நடைமுறை அனுபவத்திற்குப் பிறகு, நாட்டை ஆட்சி புரியும் பணியாவது சிறப்பாக ஒரு பொருளாதாரப் பணிதான் என்பது நமக்குத் தெளிவாக விளங்கி இருக்க வேண்டும்—போர் நாட்டின் மீது உண்டாக்கிய காயங்களை ஆற்றுவது, அதன் உற்பத்தி சக்திகளை புனரமைப்பு செய்வது, உற்பத்தி மற்றும் வினியோகத்தில் கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் அமைத்திடுவது உழைப்பினது உற்பத்தித் திறனை உயர்த்திடுவது—சுருங்கச் சொன்னல் பொருளாதாரப் புனரமைப்புப் பணி—என்பதில் இது அடங்கும்.

இந்தப் பணியானது. இரண்டு பிரதான தலைப்புகளின் கீழ் வருவதாகக் கூற முடியும்: 1) உற்பத்தி மற்றும் வினியோகத்தில் கணக்கு வைத்தலும் கண்காணிப்பும்; இத்தகைய கணக்கு வைத்தலும் கண்காணிப்பும் ஆகவிரிவான மிகு பரவலான சர்வாம்சமான வடிவங்களில் இருத்தல் வேண்டும்; 2) உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துதல். இந்தப் பணிகள் எந்தவொரு வடிவிலான கூட்டு முயற்சியால் சமாளிக்கப்படலாம். அல்லது எந்த ஒரு வடிவத்திலுள்ள அரசும் சோஷலிசத்துக்குக் கடந்து செல்லும் போதும் இது சமாளிக்கப்படலாம். ஆனால், முதலாளித்துவமானது இதற்குத் தேவையான அடிப்படைப் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் முன்னிபந்தனைகளையெல்லாம் போதுமான அளவில் உருவாக்கி உள்ளது எனும் நிபந்தனை மீது மட்டுமே இது சாத்தியம். பெருவீத இயந்திர சாதன உற்பத்தி இல்லாமல், ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த ரயில்வே அமைப்பு இல்லாமல், தபால் மற்றும் தந்தி போக்குவரத்து சாதனங்கள் இல்லாமல், ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த பொதுக் கல்வி நிலையங்கள் பற்பல இல்லாமல் இந்த இரு பணிகளில் ஒன்றைக்கூட நாடு தழுவிய அளவில் முறையான வழியில் செய்திட முடியாது. இப்படிப்பட்டதொரு மாற்றத்திற்கு அவசியமான ஆரம்ப முன்னிபந்தனைகளில் மிகப் பல ருஷ்யாவில் உள்ளபடியே நிலவுகின்றன. மற்றொரு புறத்தில், இந்த முன்னிபந்தனைகளில் மிகப் பல நமது நாட்டில் இருக்கவில்லையென்றாலும், பெருமளவு முன்னேற்றமடைந்த பிற நாடுகளினுடைய அனுபவத்திலிருந்து மிகவும் சுலபமாகவும் எளிதாகவும் நாம் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். வரலாறும் சர்வதேச ஒட்டுறவுகளும் நீண்டகால முன்பே இந்த நாடுகளை ருஷ்யாவோடு நெருங்கிய தொடர்பு உடையனவாகச் செய்துள்ளன.

அத்தியாயம் 6

சோஷலிச அமைப்புக்கு மாறிடும் ஒவ்வொரு சமுதாயத்தின் அடிப்படை நோக்கம் ஆளும் வர்க்கமாகிய—அதாவது ஆளும் வர்க்கமாக வளர்ந்தேறி வரும் வர்க்கமாகிய—பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது மேலே

காட்டியுள்ள வழியில் வெற்றி பெறுவதாகும். மற்றும் இந்தப் பணியானது முற்றிலும் புதுமையானதோர் வழியில் நமக்கு முன்னுல் வைக்கப்பட்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் பல பத்தாண்டு கால, உலகம் தழுவிய, முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்ட அனுபவத்தில் காணப்பட்ட வழிக்கு இது முற்றிலும் வேறுபட்டதாகும். இப்போது, அக்டோபர் புரட்சியின் சாதனைகளுக்குப் பிறகு, உள்நாட்டுப் போரில் பெற்ற நமது வெற்றிகளுக்குப் பிறகு முதலாளித்துவ வர்க்கத்தின் மீது நாம் அடைந்துள்ள வெற்றி, மிகவும் பெரியதொன்றைக் குறிக்க வேண்டும். இருந்தாலும் இது வடிவத்தில் மிகவும் அமைதியான ஒன்ருய் இருத்தல் வேண்டும். அதாவது, முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான வெற்றி, இதை அரசியல் ரீதியாக ஏற்கெனவே அடைந்து விட்டதால், ராணுவ ரீதியாகவும் இது சாதனையாகி விட்டதால், இப்போது தேசியப் பொருளாதாரத்தை ஒழுங்கமைக்கும் துறையில் இது சாதனையாக வேண்டும். உற்பத்தித் துறையிலும், நாடு தழுவிய கணக்கு வைத்தலிலும் மற்றும் கண்காணிப்பிலும் இது சாதனையாக வேண்டும். உற்பத்தி மீது கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு பற்றிய பணியானது முதலாளித்துவ வர்க்கத்தால் உற்பத்தி எந்தளவுக்கு விரிவடைந்ததோ அந்தளவுக்கும், தேசிய பொருளாதார நிறுவனங்கள், பெரிய நவீன அரசினதன் லட்சம் மற்றும் கோடிக்கணக்கான மக்கள் தொகையினை உள்ளடக்கி நாடு முழுதும் கிளைத்துப் பரவிய அளவுக்கும் மேலும் திறம்பட எடுத்தாளப்பட்டன. இந்தப் பணியினை இப்போது புதியதோர் வழியில் சமாளித்திட வேண்டும். பாட்டாளி வர்க்கம் பேராதிக்கம் வகிக்கும் நிலையிலேயே இருப்பதன் பின்துணையுடன் இதை நிறைவேற்றிட வேண்டும். உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களின் பெரும்பான்மையால் ஆதரிக்கப்பட்டு, முன்பு கடந்து போன சமுதாயம் சேமித்து வைத்திருந்த அமைப்பாளருக்குரிய திறமைகளின் கூறுகளையும் தொழில்நுட்ப அறிவினையும் பயன்படுத்தி—இவற்றில் பத்தில் ஒன்பது பங்கு, நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பகைமையானதும் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு விரோதமானதுமான ஒரு வர்க்கத்திற்குச் சொந்தமானதாக இருப்பினும் கூட—இந்தப் பொறுப்பினை நாம் சமாளித்தாக வேண்டும்.

அத்தியாயம் 7

ஜெர்மானிய ஏகாதிபத்தியம் ராணுவ வலிமையிலும் ராணுவத் தொழில்நுட்பத்திலும் மட்டுமல்லாமல் முதலாளித்துவக் கட்டுக்கோப்பிற்குள்ளே பெருவீதத் தொழில் நிறுவனங்களிலும் பிரம்மாண்ட முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கட்டாய உழைப்பு சேவையைக் கொண்டுவந்த முதல் நாடு என்று முறையில் இது தனது பொருளாதார முன்னேற்றத் தன்மையை இதற்கிடையே நிரூபித்துக் காட்டியுள்ளது. இயற்கையாக, பொதுவாக முதலாளித்துவ சமுதாய நிலைமைகளில், குறிப்பாக முடியாட்சி நாடுகள் ஏகாதிபத்தியப் போரினை நடத்தி வரும் போதும், உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களை அடிமைப்படுத்தும் புதியதொரு வழிமுறையே கட்டாய உழைப்பு சேவை. தொழிலாளர்களுக்கு ராணுவக் கைதிச் சிறைக் கூடம் மட்டுமே இது. இந்த உழைக்கும் மக்களின் சார்பில் எழும் எல்லா வகையான எதிர்ப்புகளையும் அடக்குவதற்கு உரிய புதியதோர் அமைப்பே இது. இருந்த போதிலும், பெரும் முதலாளித்துவத்தினால் உருவாக்கப்பட்ட பொருளாதார முன்னிபந்தனைகளினால்தான் இப்படிப்பட்டதொரு சீர்திருத்தம் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப் பெறுகிறது என்பதில் ஐயப்பாடு ஏதுமில்லை. இப்போது நாமும், யுத்த பிற்காலப் பொருளாதாரச் சீர்குலைவு கொண்டுவந்துள்ள பயங்கர நிலைமைகளின் மத்தியில், இப்படிப்பட்டதொரு சீர்திருத்தத்தின் அவசர அவசியம் குறித்துக் கருதிடும் நிலையில் இருக்கிறோம். இயல்பாக, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச சமுதாய அமைப்பிற்கு மாற்றமுற்று வரும் சோவியத் ஆட்சியதிகாரம் இந்தக் கட்டாய உழைப்பினை, ஜெர்மானிய ஏகாதிபத்தியத்துக்கு நேர் எதிரிடையான மற்றொரு கோடியிலிருந்து தொடங்கிட வேண்டும். ஜெர்மானிய முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் கட்டாய உழைப்பு சேவை என்பது தொழிலாளர் அடிமைத்தனம் என்று பொருள்பட்டது. ருஷ்யாவில் உள்ள தொழிலாளர் மற்றும் ஏழை விவசாயிகளுக்குக் கட்டாய உழைப்பு சேவை என்பது முதன் முதலில் பணக்காரர் மற்றும் சொத்துப் படைத்தவர்கள் அவர்களது சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றிடுவதற்காகச் சேர்க்கப்படும்

திட்டம் என்று பொருள்பட வேண்டும். கட்டாய உழைப்பு சேவையைப் பணக்காரரிடம் முதலில் ஆரம்பிக்க வேண்டும்.

பொதுப்படையாகப் பேசுமிடத்து, இது சோவியத் குடியரசு ஒரு சோஷலிசக் குடியரசாக இருப்பதனால் மட்டும் அத்தியாவசியமாகி விடவில்லை. அதற்கு வேறொரு காரணமும் உண்டு. போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றிடுவதைத் தடை செய்தவர்கள் பணக்காரர்கள், சொத்துப் படைத்தவர்கள்தான். இவர்கள் தங்களது ராணுவ மற்றும் சாத்வீக (வேலையிலிருந்து நழுவுவது) எதிர்ப்பு மூலமாக இதைத் தடை செய்தார்கள். நாட்டின் பொருளாதார சீரமைப்பையும் முன்னேற்றத்தையும் இடையூறுக்குள்ளாக்கினார்கள். அதனால் தான் அரசாங்க ஆட்சித் துறை முழுவதிலும் முக்கியமான தோர் பணியாக நாம் கருத வேண்டுவது கணக்கு வைத்தலும் கண்காணிப்பும் ஆகும். ஆகவே முதலில் இவை பணக்கார மற்றும் சொத்துப் படைத்தவர்களிடம் பிரயோகிக்கப் பட வேண்டும். இந்த வர்க்கங்களின் உறுப்பினர்கள்தாம் உழைக்கும் மக்களிடம், அதுவும் சிறப்பாகப் போர்க் காலத்தில் இந்தக் கப்பத்தை வசூல் செய்து அனுபவித்தார்கள். இந்த கப்பத்தைப் பயன்படுத்திய இவர்கள்தான், ஒவ்வொரு குடிமகனின் கடமையாகிய நாட்டின் காயங்களை ஆற்றுவதிலும் நாடு தனது காலில் மீண்டும் நிற்கும்படி செய்வதிலும் ஒவ்வொருவரும் கை கொடுக்க வேண்டும் என்ற கடமையைச் செய்யாது தட்டிக்கழித்தார்கள். இவ்வாறு கொள்ளையடிக்கப் பட்ட கப்பத் தொகையுடன் ஓய்வு பெற்றுக் கொண்டு போனவர்கள் இவர்கள்தான். கைப்பற்ற முடியாத வலிமையுள்ள மதில்களின் பின்னே கோட்டை கட்டி வாழ்ந்தவர்கள் இவர்கள்தான். சமுதாயத்தை அமைப்பதிலான முதலாளித்துவக் கோட்பாட்டின் மீது சோஷலிசக் கோட்பாடு பெறும் வெற்றிக்கு எல்லா வகையான எதிர்ப்புகளையும் கொண்டு வந்தவர்கள் இவர்களே. சோவியத் ஆட்சிக்கு எதிராகவும் சோஷலிசத்துக்கு எதிராகவும் பணக்காரர்களும் சொத்துப் படைத்தவர்களும் பயன்படுத்திய ஆயுதங்களில் ஒன்று கணிசமான அளவில் இவர்கள் வசமிருந்த காகிதப் பணக் குவியல்களே. முதலாளித்துவ சமுதாயத்தின் சொத்துப் படைத்தவர்க்கங்கள் தங்களது செல்வத்தின் பெரும்பகுதியை, தங்களுக்குச் சொந்தமான நிலம் மற்றும் இதர உற்பத்தி

சாதனங்களாகிய தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்து அடைந்தார்கள். தொழிலாளர்கள், மிகப் பெரும்பான்மை விவசாயிகளின் ஆதரவுடன் சோவியத் ஆட்சிக்கு, நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் முதலாளித்துவ வர்க்கம் நாட்டின் அடிப்படைச் செல்வமாகிய இவற்றில் கொண்டிருந்த உரிமையை ஒழித்திடுவது கடினமாக இருக்கவில்லை. நிலத்தில் தனியார் உடைமையை ஒழித்துவிட ஆணை பிறப்பிப்பது கடினமாக இருக்கவில்லை. பெரும்பான்மையான தொழிற்சாலைகளை தேசவுடைமையாக்குவது சிரமமாக இருக்கவில்லை. இதர பெரிய தொழில் நிறுவனங்களையும் மற்றும் போக்குவரத்து சாதனங்களையும் தேசவுடைமையாக்கிடும் பணி வெகுவிரைவில் இலகுவாகத் தீர்க்கப்படும் என்பதில் ஐயப்பாடு ஏதுமில்லை.[53]

ஆனால் முதலாளித்துவ சமுதாயம் செல்வத்தில் வேறு ஒரு வகையினை உருவாக்கியுள்ளது. இதனுடன் செயல்புரிவது சோவியத் ஆட்சிக்கு அவ்வளவு இலகுவாயிராது. இது பண வடிவத்தில் உள்ள செல்வம். அல்லது காகிதப்பண வடிவிலுள்ள செல்வம். போரின் போது காகிதப் பணம் ஏராளமாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. போர் நடவடிக்கைகள் என்ற ஒரு சுவர், ருஷ்யாவைப் பல்வேறு நாடுகளுடன் நடத்தி வந்த வாணிகத்திடமிருந்து பிரித்து ஒதுக்கிவிட்டது. இவையெல்லாம் முன்பு மிகப் பெரிய இறக்குமதியாளர்களாகவும் ஏற்றுமதியாளர்களாகவும் இருந்தன. செல்வந்தர்கள் மற்றும் சொத்துப் படைத்த வர்க்கங்களிடம் ஏராளமான பணச் செலாவணி நோட்டுகள் குவிந்ததானது, கிட்டத்தட்ட இவர்கள் எல்லோரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இராணுவ கண்ட்ராக்டுகள் மற்றும் சப்ளைகளின் பேரில் உயர்ந்த தொகைகளை வைத்து வாணிபச் சூதாட்டம் நடத்தியவர்கள்—சொத்துப் படைத்தவர்கள் ஏராளமான செல்வத்தைக் குவிப்பதற்கும் உழைக்கும் மக்கள்மீது ஆதிக்க பலத்தைக் குவித்துக் கொள்ளவும் உரிய பிரதான வழிகளில் ஒன்றாகும். மூன்று ஆண்டுகள் போரில் ஈடுபட்ட மற்றெல்லா முதலாளித்துவ நாடுகளையும் போலவே, இன்று ருஷ்யாவின் பொருளாதார நிலைமை ஒரு சிலரின் கைகளில் ஏராளமான அளவுக் காகிதப் பணம் குவிந்துவிட்டது பதுக்கப்பட்டுள்ளது என்ற தன்மைக் குறிப்பைக்

கொண்டதாக விளங்குகிறது. ஒப்பிட்டுப் பார்க்குப் போது இவர்கள் மிகச் சிறிய சிறுபான்மையினராவர். இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தினரும் சொத்துப் படைத்த வர்க்கங்களைச் சேர்ந்தவர்களும் ஆவர். பெருமளவிலான வெளிப்புரள்வின் காரணமாக இந்தக் காகிதப் பணத்தின் மதிப்பு மிகவும் குறைந்துள்ளது. இருப்பினும் உழைக்கும் மக்கள் தொகையின் மீது கப்பம் வசூலிக்கும் ஓர் உரிமையினை இன்னும் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து சோஷலிச சமுதாயத்திற்கான மாறுதல் கட்டத்தில் இந்த நோட்டுப் பணம் இல்லாமல் சமாளிப்பது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்ருகும். அல்லது குறுகிய காலத்தில் புதிய நோட்டுகள் மூலம் அவற்றைப் பதிலீடு செய்வதும் முற்றிலும் சாத்தியமற்ற ஒன்ருகும். இப்போது சோவியத் ஆட்சியதிகாரமானது மிகச் சிரமமானதொரு பணியை எதிர்நோக்கியுள்ளது. இருந்தபோதிலும், எப்பாடுபட்டும் இதைச் சமாளித்தாக வேண்டும்—பணக்காரரது எதிர்ப்பை முறியடிப்பது என்பதே இந்தப் பணி. இந்த எதிர்ப்பு பணத்தை ஒளித்து வைக்கும் பதுக்கி வைக்கும் வடிவத்தை எடுத்துள்ளது. உழைக்கும் மக்களிடம் கப்பம் வசூலிக்கும் அவர்களது உரிமைக்கான அத்தாட்சிகளை அவர்கள் ஒளித்து வைத்துக் கொள்கின்றனர். இந்த சான்றுகள் பண நோட்டுக்களே. இயற்கையாக, இந்தப் பண நோட்டுக்கள் முன்பு எல்லாம், நிலம், ஆலைகள், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்திச் சாதனங்களை வாங்கிச் சொந்தப்படுத்திக் கொள்ள உரிமையளித்தன. இன்றைக்கு இவைகளின் முக்கியத்துவம் குறைந்து விட்டது, ஒன்றுமில்லாத அளவுக்குக் குறைந்து விட்டது. நிலத்தை சமூக மயம் ஆக்கும் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு[54] நிலம் வாங்குவது ருஷ்யாவில் சாத்தியமில்லாமல் போய்விட்டது. தொழிற்சாலைகள், ஆலைகள், இதுபோன்ற பெருவீத உற்பத்திச் சாதனங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் வாங்கிடுவது கிட்டத்தட்ட சாத்தியமில்லாமல் போய்விட்டது. இவ்வாருன பெரிய நிறுவனங்களின் தேசவுடைமையாக்கம் மற்றும் பறிமுதல் செய்தல் எனும் நிகழ்ச்சி வேகமாக நடைபெறுவதன் காரணமாக இவற்றை வாங்குவது நடைமுறையில் சாத்தியமில்லாமல் போய்விட்டது. எனவே, முதலாளித்துவ

வர்க்கத்தின் சொத்து உடைய வர்க்கங்களின் பிரதிநிதிகளுக்கு (விவசாயி முதலாளிகள் உட்பட) உற்பத்திச் சாதனங்களை வாங்கிடுவதற்குப் பணம் சேகரிப்பது மேலும் மேலும் சிரமமாகிறதோடு, சாத்தியமற்றதாகவும் ஆகிவிட்டது. ஆனால் தங்களது பழைய தனியுரிமைகளைப் பாதுகாப்பதிலும் மற்றும் நாட்டுக்கு உள்ளே தங்களால் இயன்ற அளவு சோஷலிச் சீர்திருத்தங்களுக்குத் தடையிட்டு முட்டுக்கட்டை போடவும் முயற்சி செய்யும் முறையில், முதலாளித்துவ வர்க்கத்தினர் சமூகச் செல்வத்தில் தங்களுடைய பங்கின் உரிமைக்கான அத்தாட்சிகளைப் பதுக்கியும் ஒளித்தும் வைத்துள்ளனர். உழைக்கும் மக்களிடம் கப்பம் கேட்டு வாங்குவதற்குரிய உரிமையைப் பதுக்கி ஒளித்து வைத்துள்ளனர்; சிரமங்கள் அல்லது நெருக்கடிகள், இராணுவ ரீதியிலோ அல்லது வியாபார ரீதியிலோ ஏற்பட்டு ருஷ்யாவை ஒருவேளை பாதித்திடுமானல், எவ்வளவுதான் குறைவான சாத்தியமுடையதென்றாலும், ஏதாவது ஒரு வழியில் தங்களது நிலையைக் கட்டிக் காத்துக் கொள்ளவும் தமது பழைய தனியுரிமைகளை மீட்டுக் கொள்ளவும் வேண்டி காகிதப் பணத்தைப் பதுக்கியும் ஒளித்தும் வைத்து உள்ளனர்.

நுகர்வுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில், போரின் போது வணிக சூதாட்டங்களின் மூலம் முதலாளித்துவ வர்க்கமும் சொத்துப்படைத்தவர்களும் குவித்து வைத்துள்ள காகிதப் பணம் கொண்டு இப்பண்டங்களை வாங்கிடும் சாத்தியக்கூறு இவர்களிடம் முழுமையாக உள்ளது. ஏனெனில் சிறு விவசாயிகள், சிறு கைவினைஞர்கள் அல்லது கைத்தொழில் புரிவோர் அடங்கிய மக்கள் தொகையைக் கொண்ட ருஷ்யா போன்றதொரு நாட்டில் இந்தப் பண்டங்களை சரிவரப் பங்கீடு செய்து வினியோகம் செய்திடும் பிரச்சினை பிரம்மாண்டமான சிரமங்களைத் தருகிறது. மற்றும் இப்போது போரின் காரணமாக மேலோங்கி நிற்கும் பொருளாதார குழப்ப நிலைமையில் இந்தப் பிரச்சினையானது இன்னும் உண்மையில் தீர்க்கப்படாது நீடிக்கிறது. ஆகவே ஏராளமான காகிதப் பணத்தைப் பதுக்கி வைத்து, அரசாங்கக் கண்காணிப்பைப் புறக்கணித்து வரும் செல்வந்த மற்றும் சொத்துப் படைத்த வர்க்கங்களுக்கு எதிராக சோவியத் அரசாங்கம் ஒரு முறையான போராட்டத்தின் வழியாக

உற்பத்தி மற்றும் விநியோகத்தின் மீது கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் புகுத்தும் அலுவலைத் துவக்கிடும் கடமை உடையதாக இருக்கிறது.

இந்த நாள் வரையில் ருஷ்யாவில் முவ்வாயிரம் கோடி ரூபிள் மதிப்புள்ள காகிதப் பணம் வெளியிடப்பட்டுள்ள தாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தில், கிட்டத் தட்ட இரண்டாயிரம் கோடிக்குக் குறையாமல் அல்லது அதைவிட கணிசமாயும் அதிகமான தொகை வாணிபப் புரள் வுக்குத் தேவையற்ற மிகையான பதுக்கல் ஆகும். இத்தொகை முதலாளித்துவ வர்க்கம் மற்றும் சொத்துப் படைத்த வர்க்கங்களைச் சேர்ந்தவர்களால் தன்னல நோக்கங்கள்—அல்லது வர்க்க நல நோக்கங்களுக்காக—ஒளித்து வைக்கப் பட்டுள்ளது.

சோவியத் அரசாங்கம் முதன்முதலில் கட்டாய உழைப்பு சேவையைப் புகுத்துவதோடு முதலாளித்துவ மற்றும் சொத் துடைமை வர்க்கங்களைச் சேர்ந்த பேர்களைப் பதிவு செய்வ தையும் இணைக்க வேண்டும். அவர்களிடம் இருக்கக் கூடிய தான காகிதப் பணத்தின் தொகை எவ்வளவு என்பது குறித்து மெய்யான வாக்கு மூலங்களை (உறுதி மொழிகளை) கோர வேண்டும். இந்த கோரிக்கை வெறும் காகித அளவில் நின்று விடாமல் இருப்பதை உத்தரவாதம் செய்ய பற்பல நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசாங்க வங்கி அல்லது அதன் கிளைகளில் அனைத்துக் காகிதப் பணத்தையும் குவியச் செய்யும் இடைமாற்ற நடவடிக்கைகளை அது கருதிப் பார்க்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டால் ஒழிய, உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற் றின் மீது கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் புகுத் தும் அலுவலைப் பயனுறுதியுடன் நிறைவேற்றிட முடியாது.

1918 மார்ச் 23—28க்கும் இடைப்பட்ட நாட்களில் எழுதுவதற் காகச் சொல்லப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 130-36

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்[55]

எனும் கட்டுரையிலிருந்து

முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய கட்டம்

நமது நாட்டில் முதலாளித்துவ வர்க்கம் வெற்றி கொள்ளப்பட்டிருக்கிறது, ஆனல் இன்னும் அது வேரறுக்கப்படவில்லை, இன்னும் அது அழிக்கப்படவில்லை, அறவே தகர்க்கப்படக்கூட இல்லை. எனவேதான் நாம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் மேலும் உயர்வான ஒரு புதிய வடிவத்தை எதிர்நோக்குகிறோம்; மேலும் தொடர்ந்து முதலாளிகளை உடைமை நீக்கம் செய்யும் மிக எளிய பணியிலிருந்து, முதலாளித்துவ வர்க்கம் நிலவுவதை அல்லது இது மீண்டும் உதித்தெழுவதைச் சாத்தியமற்றதாக்கிவிடும் நிலைமைகளைத் தோற்றுவிப்பதென்ற மிகப் பல மடங்கு அதிக சிக்கல் வாய்ந்த, கடினமான பணிக்கு மாறிச் செல்வதற்கான கட்டத்தை எதிர்நோக்குகிறோம். இந்தப் பணி முந்தியதைக் காட்டிலும் தெளிவாகவே அளவுகடந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; இந்தப் பணி நிறைவேற்றி முடிக்கப்படாதவரை சோஷலிசம் சாத்தியமன்று.

மேற்கு ஐரோப்பியப் புரட்சிகளின் அளவுகோலைக் கொண்டு நமது புரட்சியை அளவிடுவோமாயின், 1793லும் 1871லும் வந்தடையப் பெற்ற நிலையினைத் தற்போது நாம் ஏறத்தாழ வந்தடைந்திருப்பது தெரிய வரும். இந்த நிலைக்கு நாம் உயர்ந்துள்ளது குறித்தும், ஒரு விதத்தில் நிச்சயமாகவே இன்னும் கொஞ்சம் அதிகமாய் முன்னேறியிருப்பது குறித்தும்—அதாவது, மிக உயர்ந்த அரசு வகையான சோவியத் ஆட்சியதிகாரத்தை ருஷ்யாவெங்கும் சட்டப்படிப் பிறப்

பித்துப் புகுத்தியுள்ளோம் என்பது குறித்தும்—நியாய மாகவே நாம் பெருமை கொள்ளலாம். ஆயினும் இதுகாறும் சாதிக்கப் பெற்றுள்ளவை குறித்து எவ்விதத்திலும் நாம் மனநிறைவு கொண்டுவிட முடியாது, ஏனெனில் இப்போது தான் நாம் சோஷலிசத்துக்கு மாறிச் செல்ல முற்பட்டிருக் கிறோம், இந்தத் திசையில் தீர்மானகரமான காரியத்தை நாம் இன்னமும் செய்தாகவில்லை.

பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் நாடு தழுவிய அளவில் மிகவும் கண்டிப்பான கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதுதான் தீர்மானகரமான காரியமாகும். ஆயினும், முதலாளித்துவ வர்க்கத்தினரிட மிருந்து நாம் எடுத்துக் கொண்ட ஆலைகளிலும், பொருளா தாரக் கிளைகளிலும் துறைகளிலும் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நாம் இன்னமும் புகுத்தியாகவில்லை. இது செய்யப்படாத வரை, சோஷலிசத்தைப் புகுத்துவதற்குத் தேவையான இரண்டாவதும், முதலாவதைப் போல் அதே அளவுக்கு அவசியமானதுமாகிய பொருளாயத நிபந் தனையைச் சாதிப்பது குறித்து—அதாவது, உழைப்பின் உற்பத்தித் திறனை தேச அளவில் உயர்த்துவதென்ற நிபந் தனையைச் சாதிப்பது குறித்து—நினைப்பதற்கே வழியில்லை.

ஆதலால்தான், மூலதனத்தை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குதல் நடத்துவது என்னும் எளிய சூத்திரத்தைக் கொண்டு, தற்போது நம்முன்னுள்ள பணியினை வரையறுக்க இயலவில்லை. மூலதனம் இறுதி எய்தும்படி முறியடிக்கப்ப டாதது மெய்தான் என்ற போதிலும், உழைப்பாளி மக்களது இந்தப் பகைவனை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குவது நிச் சயம் அவசியமே என்ற போதிலும், இம்மாதிரியான ஒரு சூத்திரம் கூரானதல்ல, ஸ்தூலமானதல்ல; தற்போதைய சூழ்நிலையின் தனியியல்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வதாய் இல்லை—வருங்காலத்தில் தொடர்ந்து வெற்றிகரமாய் முன் னேறிச் செல்லும் பொருட்டு இப்போது நமது தாக்குதலைத் "தற்காலிகமாய் நிறுத்தி வைப்பது" அவசியமாய் இருக் கும் தற்போதைய நிலைமையின் தனியியல்பைக் கணக்கி லெடுத்துக் கொள்வதாய் இல்லை.

ஓர் ஒப்புமை மூலம் இதனை விளக்கலாம்: மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் நாம் வந்தடைந்திருக்கும் நிலை

யானது, வெற்றிகர சேனை ஒன்று பகைவனது பிரதேசத்தில், உதாரணமாக ஒரு பாதியையோ மூன்றில் இரு பகுதியையோ பிடித்துக் கொண்டபின், தனது படைகளை அணிதிரட்டுதல், ஆயுத தளவாட இருப்புகளை அதிகரித்துக் கொள்ளுதல், போக்குவரத்து வசதிகளைச் சரிசெய்து மேலும் உறுதியாக்கிக் கொள்ளுதல், புதிய கிடங்குகளை அமைத்தல், புதிய சேமப்படைகளைக் கொண்டு வருதல் முதலானவற்றைச் செய்து முடிக்கும் பொருட்டு மேலே முன்னேறிச் செல்வதைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டிவரும் நிலைக்கு ஒப்பானதாகும். வெற்றிகர சேனையானது மேற்கண்ட நிலைமைகளில் தனது தாக்குதலை நிறுத்தி வைப்பது அவசியமாவது எதன் பொருட்டெனில், பகைவனது பிரதேசத்தின் எஞ்சிய பகுதியையும் பிடிக்கும் பொருட்டுதான், அதாவது முழுநிறை வெற்றி பெறும் பொருட்டுதான். இத்தருணத்தில் எதார்த்த நிலவரங்கள், மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் இவ்விதம் ''தற்காலிகமாய் நிறுத்தப்படுவதை'' அவசியமாக்குகின்றன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகிறவர்கள், தற்போதுள்ள அரசியல் நிலைமை குறித்து ஒன்றையுமே புரிந்து கொள்ளத் தவறுகிறவர்களே ஆவர்.

மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் ''தாற்காலிகமாய் நிறுத்தப்பட'' வேண்டுமென்று மேற்கோள் குறிகளிட்டே, அதாவது உருவக முறையிலேயே, குறிப்பிட வேண்டும், இது கூறாமலே விளங்கும் ஒன்று. சாதாரண யுத்தத்தில், தாக்குதலை நிறுத்தும்படி பொதுவான உத்தரவு இடப்பட முடியும், முன்னேறுதல் மெய்யாகவே நிறுத்தப்பட முடியும். ஆனால் மூலதனத்துக்கு எதிரான யுத்தத்தில் முன்னேறுதல் நிறுத்தப்பட முடியாது, மூலதனம் தொடர்ந்து மேலும் உடைமை நீக்கம் செய்யப்படுதலை நாம் கைவிடுவது நினைக்கவே முடியாத காரியம். நமது பொருளாதார, அரசியல் வேலைகளின் ஈர்ப்பு மையம் இடம்பெயருதல் குறித்தே இங்கு நாம் விவாதிக்கிறோம். உடைமை பறிப்போர் நேரடியாகவே உடைமை நீக்கம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் இதுகாறும் முன்னணியில் இருந்தன. எந்தத் தொழில் நிலையங்களில் முதலாளிகள் ஏற்கெனவே உடைமை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்களோ அந்தத் தொழில் நிலையங்களிலும் மற்றும் ஏனைய எல்லாத் தொழில் நிலையங்களிலும் கணக்குப் பதிவுக்கும் கண்

காணிப்புக்கும் ஏற்பாடு செய்யும் பணி இப்போது முன்னணிக்கு வருகிறது.

இதுகாறும் நாம் செய்து வந்த அதே வேகத்தில் இனியும் தொடர்ந்து மூலதனத்தை உடைமை நீக்கம் செய்வ தெனத் தீர்மானித்தோமாயின், நிச்சயம் நாம் தோல்வியுறவே செய்வோம். ஏனெனில் பாட்டாளிவர்க்கக் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கான நமது வேலையானது, ''உடைமை பறிப்போர் உடைமை நீக்கம் செய்யப்படும்'' நேரடி வேலையிலிருந்து பின்தங்கிவிட்டது என்பது தெளிவாகவே தெரிகிறது—சிந்தனையுள்ள ஒவ்வொருவருக்கும் தெளிவாகவே தெரிகிறது. கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதில் இப்போது நாம் நமது முயற்சிகள் அனைத்தையும் ஒருசேர ஈடுபடுத்துவோமாயின், இந்தப் பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண முடியும், இழக்க நேர்ந்த நேரத்தை ஈடுசெய்து கொள்ள முடியும், மூலதனத்துக்கு எதிரான நமது ''போர் இயக்கத்தில்'' நாம் முழுநிறை வெற்றி பெறுவோம்.

ஆனால், இழக்க நேர்ந்த நேரத்தை ஈடுசெய்து கொண்டாக வேண்டுமென நாம் ஒத்துக் கொள்வோமாயின், ஏதோ பிழை புரியப்பட்டுவிட்டதாய் ஒத்துக் கொள்கிறோம் என்று அதற்கு அர்த்தம்? இல்லவே இல்லை. இன்னொரு இராணுவ உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். குதிரைப் படைகளைக் கொண்டே பகைவனைத் தோற்கடித்துப் பின்னால் தள்ள முடியுமாயின், இது செய்யப்படவே வேண்டும். ஆனால் குறிப்பிட்ட ஒரு வரம்பு வரையில்தான் இதனை வெற்றிகரமாகச் செய்ய முடியுமாயின், அப்போது அந்த வரம்பை வந்தடைந்ததும் கன பீரங்கிகளைக் கொண்டு வருவது அவசியமாகி விடலாம், இப்படி நேர்வது முற்றிலும் சாத்தியமே. கன பீரங்கிகளைக் கொண்டு வருவதில் இழக்க நேர்ந்த காலத்தை இப்போது சரிசெய்து கொண்டாக வேண்டுமென ஒத்துக் கொள்வதன் மூலம், வெற்றிகரமான குதிரைப் படைத் தாக்குதல் தவறுகுமென நாம் ஒத்துக் கொண்டுவிடவில்லை.

மூலதனத்தின் மீது ''செங்காவலர்'' தாக்குதல் தொடுத்ததற்காக, முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகள் அடிக்கடி நம்மைக் கண்டனம் செய்தனர். இந்தக் கண்டனம் அபத்தமானது, பணமூட்டைகளது அடிவருடிகளால் மட்டுமே

செய்யப்படத் தக்கது. ஏனெனில் மூலதனத்தின் மீது ''செங்காவலர்'' தாக்குதல் தொடுப்பது ஒரு காலத்தில் சூழ்நிலைமைகளின் காரணமாய் அத்தியாவசியமாய் இருந்தது. முதலாவதாக அந்தக் காலத்தில் மூலதனமானது ராணுவ எதிர்ப்பு காட்டி வந்தது—கேரென்ஸ்கி மூலமும், கிரஸ்னோவ், சாவின்கவ், கோட்ஸ் மூலமும் (கெகெச்கோரி இப்போதுங்கூட இம்மாதிரியான எதிர்ப்பு காட்டி வருகிறார்), தூத்தவ், பொகயேவ்ஸ்கி மூலமும் இந்த எதிர்ப்பு காட்டப்பட்டு வந்தது. ராணுவ எதிர்ப்பானது ராணுவ வழியிலே அல்லாமல் வேறு எவ்விதத்திலும் முறியடிக்கப்பட முடியாதது. உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களைச் சுரண்டலாளர்களது நுகத்தடியிலிருந்து விடுவிக்கும் புனிதமான, தலையாய வரலாற்று இலட்சியத்துக்காகச் செங்காவலர்கள் போராடினர்.

இரண்டாவதாக, அந்தக் காலத்தில் நம்மால் அடக்கி நசுக்கும் முறைகளுக்குப் பதிலாய் நிர்வாக முறைகளை முன்னணிக்குக் கொண்டு வர முடியவில்லை, ஏனெனில் நிர்வாகக் கலையானது அனுபவத்தின் வாயிலாகப் பெறப்படுவதே அன்றி பிறக்கும் போதே தானாகவே வந்துவிடுவதல்ல. அந்தக் காலத்தில் நாம் இந்த அனுபவம் இல்லாதோராய் இருந்தோம், இப்போது நாம் இதனை அடைந்திருக்கிறோம். மூன்றாவதாக, அறிவியலின், தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளிலுமான நிபுணர்கள் அந்தக் காலத்தில் நம் கைவசம் இருக்கவில்லை, ஏனெனில் அந்நிபுணர்கள் பொகயேவ்ஸ்கிகளது அணிகளில் சேர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள், அல்லது நாசவேலையின் மூலம் முறையாகவும் விடாப்பிடியாகவும் எதிர்ப்பு காட்ட முடியும்படியான நிலையில் இருந்தார்கள். இப்போது நாம் இந்த நாசவேலையைத் தகர்த்து விட்டோம். மூலதனத்தின்மீதான ''செங்காவலர்'' தாக்குதல் வெற்றி கண்டது, வாகை சூடியது; மூலதனத்தின் ராணுவ எதிர்ப்பையும், நாசவேலை மூலமான அதன் எதிர்ப்பையும் நாம் தகர்த்திட்டோம்.

அப்படியானால், மூலதனத்தின் மீதான ''செங்காவலர்'' தாக்குதல் எப்போதுமே, எல்லாச் சூழ்நிலைமைகளிலும் சரியானதுதான் என்று அர்த்தம்? மூலதனத்தை எதிர்த்துப் போராட வேறு வழி இல்லை என்று அர்த்தம்? இவ்வாறு

நினைப்பது சிறுபிள்ளைத்தனமாகும். குதிரைப் படையின் துணை கொண்டு நாம் வெற்றியடைந்தோம், ஆனால் நம்மிடம் கன பீரங்கிகளும் இருக்கின்றன. அடக்கி நசுக்கும் முறைகள் மூலம் நாம் வெற்றியடைந்தோம்; நிர்வாக முறைகள் மூலமும் நம்மால் வெற்றியடைய முடியும். பகைவனை எதிர்த்துப் போராடுவதற்கான நமது முறைகளைச் சூழ்நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப எப்படி மாற்றிக் கொள்வது என்று நாம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். சாவின்கவ்களையும் கெகெச்கோரிகளையும் ஏனைய எல்லா நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ எதிர்ப்புரட்சியாளர்களையும் ''செங்காவலர்'' முறையில் நசுக்கியடக்குவதைக் கணப்பொழுதுக்கும் நாம் கைவிட்டுவிடப் போவதில்லை. ஆனால் செங்காவலர் தாக்குதல்கள் தேவையாயிருந்த காலக் கூறு முடிவடைந்துவிட்ட (வெற்றிகர முடிவை அடைந்தவிட்ட) ஒரு நேரத்தில், எவ்வகையான முதலாளித்துவ வர்க்கமும் வளருவதைத் தடுக்கும் பொருட்டு நிலத்தைத் திரும்பவும் உழுவதற்காகப் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரமானது முதலாளித்துவ நிபுணர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய காலக் கூறு வந்து சேர்ந்திருக்கும் ஒரு நேரத்தில், ''செங்காவலர்'' முறைகளை முன்னணியில் வைக்கும் அளவுக்கு நாம் முட்டாள்தனமாய் இருக்கப் போவதில்லை.

இது ஒரு தனியியல்பு வாய்ந்த சகாப்தமாகும், அல்லது வளர்ச்சிக் கட்டமாகுமெனில் இன்னும் பொருத்தமாயிருக்கும். மூலதனத்தை அறவே தோற்கடிக்கும் பொருட்டு, நமது போராட்டத்தின் வடிவங்களை நாம் இந்தக் கட்டத்தின் தனியியல்பு வாய்ந்த நிலைமைகளுக்குத் தகவமைத்துக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும்.

அறிவியல், தொழில்நுட்பம், அனுபவம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த நிபுணர்களது வழிகாட்டலின்றி சோஷலிசத்துக்கு மாறிச் செல்லுதல் சாத்தியமன்று ஏனென்றால் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் (முதலாளித்துவத்தால் சாதிக்கப் பெற்றுள்ள அதன் அடிப்படையில்), முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் இன்னும் மேலான நிலைக்கு உணர்வுபூர்வமாய் வெகுஜன அளவில் முன்னேற்றம் வேண்டுமென சோஷலிசம் கோருகிறது. இந்த முன்னேற்றத்தைச் சோஷலிசமானது தனக்கே உரிய வழியில்,

தனக்கே உரிய முறைகளில்—அல்லது இதையே மேலும் ஸ்தூலமான வடிவில் சொல்வதெனில், சோவியத் முறை களில்—ஏற்படச் செய்தாக வேண்டும். நிபுணர்களாக இருப் போர், அவர்களை நிபுணர்களாகச் செய்த சமூகச் சுற்றுச் சார்பு அனைத்தின் காரணமாய், தவிர்க்கமுடியாதபடி பிர தானமாய் முதலாளித்துவத் தன்மை வாய்ந்தோராய் இருக் கின்றனர். நமது பாட்டாளி வர்க்கமானது ஆட்சியதிகாரத் தைக் கைப்பற்றிக் கொண்டதும் தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஒழுங்கமைப்புக்கும் ஏற்பாடு செய்யும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டிருந்தால் (யுத்தத்தின் காரணமாகவும் ருஷ்யாவின் பின்தங்கிய நிலையின் காரணமாகவும் இது சாத்தியமற்றதாகிவிட்டது), நாம் நாச வேலையைத் தகர்த்திட்டதைத் தொடர்ந்து இந்த முதலாளித் துவ நிபுணர்களைச் சர்வவியாபகமான கணக்குப் பதிவின் மூலமும் கண்காணிப்பின் மூலமும் அறவே நமக்குக் கீழ்ப் படியுமாறு செய்திருக்கலாம். பொதுவாகக் கணக்குப் பதி வையும் கண்காணிப்பையும் புகுத்துவதில் கணிசமான ''தாமதம்'' ஏற்பட்டுவிட்டதனால், நாசவேலையை நாம் வெற்றி கொண்டுங்கூட, இன்னும் நாம் முதலாளித்துவ நிபுணர்களை நமது செயலாட்சியின் கீழ் வரச் செய்வதற்கான நிலைமை களைத் தோற்றுவித்தாகவில்லை. நாசவேலையினரில் பெருந் திரளானோர் ''வேலைக்கு வருகிறார்கள்''; ஆனால் சிறந்த ஒழுங் கமைப்பாளர்களையும் தலைமையான நிபுணர்களையும் அர சானது, ஒன்று பழைய வழியில், முதலாளித்துவ வழியில் (அதாவது, உயர்ந்த சம்பளங்கள் கொடுத்து) உபயோகித்துக் கொள்ள முடியும், அல்லது புதிய வழியில், பாட்டாளி வர்க்க வழியில் (அதாவது, கீழிருந்து தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான நிலைமைகளைத் தோற்று வித்து, தவிர்க்க முடியாத வகையில், தானாகவே இவ்விதம் நிபுணர்களைக் கீழ்ப்படியச் செய்து நமது வேலைகளில் அவர் களை அமர்த்தி) உபயோகித்துக் கொள்ள முடியும்.

இப்போது நாம் பழைய, முதலாளித்துவ வழியை மேற் கொண்டு, தலைமையான முதலாளித்துவ நிபுணர்களது ''சேவைக்காக'' மிக உயர்ந்த விலை கொடுக்க உடன்பட் டாக வேண்டியிருக்கிறது. இந்த விவகாரம் குறித்து பரிச் சயமுள்ளவர்கள் எல்லாரும் இதனை அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் பாட்டாளி வர்க்க அரசால் இந்த நடவடிக்கை ஏற்கப்படுவதின் உட்பொருள் முக்கியத்துவம் குறித்து எல்லாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தெளிவாகவே இந்த நடவடிக்கை ஒரு சமரசமே ஆகும்; எல்லாச் சம்பளங்களும் சராசரித் தொழிலாளிச் சம்பளங்களுக்குச் சரிமட்டமாகக் குறைக்கப்பட வேண்டுமெனக் கோரி, தன்னல நாட்டத்தைச் சொல்லளவில் அல்ல, செயலில் எதிர்த்துப் போராட வேண்டுமென வற்புறுத்தும் பாரிஸ் கம்யூன் கோட்பாடுகளிலிருந்தும் பாட்டாளி வர்க்க அரசு ஒவ்வொன்றின் கோட்பாடுகளிலிருந்தும் விலகிச் செல்லுதலே ஆகும்.

தவிரவும் இந்த நடவடிக்கை மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் ஒரு குறிப்பிட்ட துறையில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிறுத்தி வைக்கப்படுவதைக் குறிக்கிறது (ஏனெனில் மூலதானமானது குறிப்பிட்ட சமூக உறவாகுமே அன்றி ஒரு பணத் தொகை அல்ல) என்பதுடன், உயர்ந்த சம்பளங்களைச் சராசரித் தொழிலாளிச் சம்பளங்களுக்குச் சரிமட்டமாகக் குறைத்திடும் கொள்கையைப்[56] பிரகடனம் செய்தும் பின் பற்றியும் வந்துள்ள நமது சோஷலிச சோவியத் அரசாட்சி ஓரடி பின்னோக்கி எடுத்து வைப்பதையும் குறிக்கிறது என்பது தெளிவு.

முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகள், முக்கியமாய் மென்ஷிவிக்குகளையும் நோவயா ஷிஸ்ன் ஆட்களையும் வலது சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் போன்ற சில்லரைப் பேர்வழிகள், ஓரடி பின்னோக்கி எடுத்து வைக்கிறோம் என்ற நமது ஒப்புதல் வாக்கு மூலம் குறித்துக் கொக்கரித்துக் கொள்வார்கள் என்பது மெய்தான். ஆனால் இவர்களது கொக்கரிப்பு குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. நமது தவறுகளையும் பலவீனங்களையும் மூடிமறைக்காமல் நாம் சோஷலிசத்தை அடைவதற்கான மிகமிகக் கடினமான புதிய பாதையின் பிரத்தியேக இயல்புகளை ஆராய்ந்தாக வேண்டும், செய்யாமல் விட்டு வைக்கப்பட்டவற்றைத் தாமத மின்றி செய்து முடிக்க முயல வேண்டும். மிதமிஞ்சி உயர்ந்த சம்பளங்கள் மூலம் முதலாளித்துவ நிபுணர்களை நமது பணிக்குத் திரட்டிக் கொள்வது பாரிஸ் கம்யூனின் கோட்பாடுகளிலிருந்து பின்வாங்கிச் செல்லுதலாகும் என்பதை மக்களிட மிருந்து மூடிமறைப்பது, முதலாளித்துவ அரசியலாளர்களது

இழிநிலைக்குச் சரிந்துவிடுவதும் மக்களை ஏமாற்றுவதுமே ஆகும். எதற்காக, ஏன் நாம் ஓரடி பின்னோக்கி எடுத்து வைக்கிறோம் என்பதை ஒளிவுமறைவின்றி விளக்கிச் சொல்லி, இழந்த நேரத்தைச் சரிசெய்வதற்கு இருக்கக் கூடிய வழிமுறைகள் என்னவென்று இதன் பிறகு பகிரங்கமாய் விவாதிப்போமாயின், மக்களுக்குப் போதமளிக்கிறோம், அனுபவத்திலிருந்து கற்றறிந்து கொள்கிறோம், சோஷலிசத்தை எப்படிக் கட்டியமைப்பதென்று மக்களுடன் சேர்ந்து கற்றறிந்து கொள்கிறோம் என்று அதற்கு அர்த்தம். வெற்றியாளர் சிற்சில தவறுகளைப் புரிந்திராத, பகுதியளவிலான பின்னடைவுகளுக்கு உட்படாத, தற்காலிகமாக எதையேனும் விட்டுக் கொடுக்கவும் சில இடங்களில் பின்வாங்கவும் நேர்ந்திராத வெற்றிகர ராணுவப் படையியக்கம் எதையும் வரலாற்றில் காண்பது அரிது. முதலாளித்துவத்தை எதிர்த்து நாம் நடத்தி வரும் ''படையியக்கம்'' மிகமிகக் கடினமான ராணுவப் படையியக்கத்தையும்விட பத்து லட்சம் மடங்கு அதிகக் கடினமானது. பகுதியளவிலான குறிப்பிட்ட ஒரு பின்வாங்குதலுக்காக மனச் சோர்வுக்கு இடந்தருவது மடமையாகும், வெட்கக்கேடே ஆகும்.

இப்போது நாம் நடைமுறைக் கண்ணோட்டத்திலிருந்து இந்தப் பிரச்சினையை விவாதிக்கலாம். கூடுமான அளவு முழுவேகத்தில் பொருளாதாரத்தைப் புத்துயிர் பெற்றெழச் செய்யும் திசையிலே மக்களது உழைப்பை நெறியாண்மை புரியும் பொருட்டு ருஷ்யாவின் சோவியத் குடியரசுக்கு அறிவியல், தொழில்நுட்பம், நடைமுறை அனுபவம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளிலும் முதல் தரமான விஞ்ஞானிகளிலும் நிபுணர்களிலும் ஆயிரம் பேர் தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம். இந்த ''முதல்தரத் தாரகைகளுக்கு'' ஆண்டுக்கு ஒருவருக்கு 25,000 ரூபிள் வீதம் தர வேண்டியிருப்பதாகக் கொள்வோம்—தொழிலாளர்களிடம் ஊழல் மலிந்துவிட்டதாய் யாவரிலும் பலமாகக் கூச்சலிடுவோரில் பெரும்பாலானோர் முதலாளித்துவ நெறிமுறைகளால் சீரழிக்கப்பட்டு ஊழலில் மூழ்கியவர்களே ஆவர். இந்த மொத்தத் தொகை (2,50,00,000 ரூபிள்) இரட்டிப்பாக்கப்பட வேண்டுமென வைத்துக் கொள்வோம் (மிகவும் முக்கியமான ஒழுங்கமைப்புப் பணிகளும் தொழில்நுட்பப் பணிகளும்

குறிப்பிடத்தக்க வெற்றியோடும் வேகத்தோடும் நிறை வேற்றப்படுகையில் போனசுகள் அளிக்க வேண்டியிருப்ப தாகக் கொண்டால்); அல்லது நான்கு மடங்காகவுங்கூட அதி கமாக்கப்பட வேண்டுமென வைத்துக் கொள்வோம் (மேலும் அதிகமாக அவசியப்படும் அயல்நாட்டு நிபுணர்கள் சில நூறு பேரை நாம் தருவித்துக் கொள்ள வேண்டியிருப்பதாகக் கொண்டால்). மக்களது உழைப்பை நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப வழிகளில் திருத்தியமைத்து ஒழுங்கு செய்வ தற்காக சோவியத் குடியரசு ஐந்து அல்லது பத்து கோடி ரூபிள் வருடாந்தரச் செலவை ஏற்க நேர்வது அளவு மீறிய தாகவோ, மட்டுமீறிய சுமையாகவோ இருக்குமா என்பதே கேள்வி. நிச்சயமாய் அப்படி ஒன்றும் இருக்காது. வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களிலும் விவசாயிகளிலும் மிகப் பெருவாரியானேர் இந்தச் செலவை ஆமோதிக்கவே செய்வார்கள். ஏனெனில் நமது பின்தங்கிய நிலை காரண மாய் நாம் பல நூறு கோடிக் கணக்கில் இழக்கிறோம் என்ப தும், முதலாளித்துவ அறிவுத்துறைத் ''தாரகைகள்'' எல் லாரையும் நமது வேலைகளில் மனமுவந்து பங்கு கொள்ளு மாறு தூண்டும்படி, அந்த அளவு ஒழுங்கமைப்பையும் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நாம் இன்னமும் வந்தடையவில்லை என்பதும் நடைமுறை அனுபவத்தின் வாயி லாய் அவர்களுக்குத் தெரியும்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றொரு பக்கம் உண்டென்பது கூறுமலே விளங்கும். உயர்ந்த சம்பளங்கள் சீரழிவை உண் டாக்குகிறவை என்பது மறுக்க முடியாதது. இந்தச் சீரழி வுக்கு இலக்காவோர் சோவியத் அதிகாரிகள் மட்டுமல்ல (முக்கியமாய், புரட்சியானது அதிவேகமாய் நடந்தேறிய தால் சிற்சில சாகசக்காரர்களும் கயவர்களும் அதிகாரப் பதவிகளில் அமர்வதைத் தடுக்க முடியவில்லை, இவர்களும் மற்றும் தகாத அல்லது நேர்மையற்ற கமிசார்கள் பலரும் அரசு நிதிகளை மோசடி செய்வதில் ''கீர்த்தி மிக்கோராய்'' விளங்கத் தயங்க மாட்டார்கள்), தொழிலாளர் பெருந்திரளின ரும் இதற்கு இலக்காகிவிடுவர். ஆனால் முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ள இந்தக் கேட்டிலிருந்து உடனடி யாக நாம் விடுபட்டு வெளிவந்து விட முடியாது; நம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதன் மூலம்தான், நமது அணிகளில்

கட்டுப்பாட்டைக் கடுமையாக்கிக் கொள்வதன் மூலம்தான், ''முதலாளித்துவம் விட்டுச் சென்றுள்ள ஆஸ்தியைப் பாது காத்து வருவோரும்'', ''முதலாளித்துவ மரபுகளைப் பின் பற்றி வருவோருமான'' எல்லோரையும், அதாவது சோம் பேறிகளையும் புல்லுருவிகளையும் அரசு நிதிகளை (இப்போது எல்லா நிலங்களும் எல்லா ஆலைகளும் எல்லா ரயில்பாதை களும் சோவியத் குடியரசின் ''அரசு நிதிகள்'' ஆகும்) கையாடுவோரையும் நமது அணிகளிலிருந்து களைவதன் மூல மும்தான் சோவியத் குடியரசை ஐந்து கோடி அல்லது பத்து கோடி ரூபிள் வருடாந்தரக் ''கப்பம்'' (நாடு தழுவிய கணக்குப் பதிவு மற்றும் கண்காணிப்பைக் கீழ் மட்டத்தில் இருந்து ஒழுங்கமைப்பதிலான நமது பின்தங்கிய நிலைமைக்குச் செலுத் தும் கப்பம்) செலுத்தும் கடப்பாட்டிலிருந்து நாம் விடுவிக்க முடியும்—சிந்தனையுள்ள நேர்மையான ஒவ்வொரு தொழி லாளியும் ஏழை விவசாயியும் இதில் நம்முடன் உடன்படுவார், இதனை ஒத்துக் கொள்வார். வர்க்க உணர்வு படைத்த, முன்னேறிய தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் சோவியத் நிறுவனங்களின் துணை கொண்டு கட்டுப்பாடு மிக்க வர்களாகி, தம்மை ஒருங்கிணைத்துக் கொண்டு, ஓராண்டில் சக்தி வாய்ந்த உழைப்புக் கட்டுப்பாட்டினைத் தோற்றுவிப் பார்களாயின், ஓராண்டில் நாம் இந்தக் ''கப்பத்தை'' உதறி யெறிந்து விடலாம். இதற்கும் முன்பேகூட நாம் இதனைக் குறைத்துக் கொள்ள முடியும்.... நமது தொழிலாளர்கள், விவசாயிகளது உழைப்புக் கட்டுப்பாட்டிலும் ஒழுங்கமைப்பி லும் நாம் சாதிக்கும் வெற்றிகளுக்கு நேர் விகிதத்தில் இதனைக் குறைத்துக் கொள்ள முடியும். தொழிலாளர்களும் விவசாயிகளுமான நாம் முதலாளித்துவ நிபுணர்களை நமக்குக் கற்றுத் தரும்படி வைத்து சிறந்த உழைப்புக் கட்டுப்பாட்டை யும் மிக நவீன உழைப்பு நுட்பத்தையும் எவ்வளவு சீக்கிர மாகக் கற்றறிந்து கொள்கிறோமோ, அவ்வளவு சீக்கிரமாய் நம்மை இந்த நிபுணர்களுக்குச் செலுத்த வேண்டிய ''கப்பத் திலிருந்து'' விடுவித்துக் கொள்வோம்.

பாட்டாளி வர்க்கத்தின் மேற்பார்வையில் பொருளுற் பத்திக்கும் வினியோகத்துக்கும் நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வ தற்கான நமது வேலை, உடைமை பறிப்போரை நேரடியாக

உடைமை நீக்கம் செய்வதற்கான நமது வேலையிலிருந்து வெகுவாகப் பின்தங்கிவிட்டது. தற்போதைய நிலைமையின் பிரத்தியேக இயல்புகளையும் இவற்றிலிருந்து பெறப்படும் சோவியத் அரசாங்கப் பணிகளையும் புரிந்து கொள்வதற்கு இந்த வரையறுப்பு அடிப்படையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான நமது போராட்டத்தின் ஈர்ப்பு மையம் இத்தகைய கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதை நோக்கி இடம் பெயர்ந்து வருகிறது. இதனைத் துவக்க நிலையாகக் கொண்டால்தான், வங்கிகளை நாட்டுடைமை ஆக்குவதும், அயல் நாட்டு வாணிபத்தை ஏகபோகமாக்குவதும், பணப் புழக்கத்தை அரசின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவதும், பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் திருப்திகரமாய் இருக்கக் கூடிய சொத்து, வருமான வரியை அமுலுக்குக் கொண்டுவருவதும், கட்டாய உழைப்பு சேவையைப் புகுத்துவதுமாகிய துறைகளில் பொருளாதார, நிதிக் கொள்கையின் உடனடிப் பணிகளைச் சரிவர நிர்ணயிக்க முடியும்.

இந்தத் துறைகளில் (மிகமிக முக்கிய துறைகள் இவை) சோஷலிசச் சீர்திருத்தங்களைப் புகுத்துவதில் நாம் வெகுவாகப் பின்தங்கியிருக்கிறோம். கணக்குப் பதிவும் கண்காணிப்பும் பொதுவாகப் போதுமான அளவுக்கு ஏற்பாடு செய்யப்படாதததுதான் இதற்குரிய காரணமாகும். இது மிகக் கடினமான பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கூறத் தேவையில்லை. யுத்தத்தால் உண்டான அழிவின் காரணமாய், நீண்ட காலப் போக்கிலேதான் இந்தப் பணியைச் செய்து முடிக்க முடியும். இங்கேதான் முதலாளித்துவ வர்க்கத்தினர்—குறிப்பாய் எண்ணிலடங்காததாய் இருக்கும் குட்டிமுதலாளித்துவ, விவசாய முதலாளித்துவ பகுதியினர்—ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டு வரும் கண்காணிப்பைச் சீர்குலைத்தும், உதாரணமாகத் தானிய ஏகபோகத்தைச் சீர்குலைத்தும், இலாபக் கொள்ளைக்கும் ஊகவாணிபத்துக்குமான வசதி நிலைகளைக் கைப்பற்றியும் மிகக் கடுமையாய்ப் போராடுகின்றனர். என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் பிறப்பித்துள்ள அரசாணைகளின்படி செய்யப்பட வேண்டிய காரியங்களைப் போதிய அளவில் செய்யாமல் பின்தங்கியிருக்கிறோம். ஏற்கெனவே சட்டமாகியுள்ள (ஆனால் இன்னும் எதார்த்த

உண்மையாகாமல் இருந்து வரும்) சீர்திருத்தங்களின் அடிப் படைகளைக் காரியக் கண்ணோட்டத்துடன் நடைமுறையில் சித்தி பெறச் செய்வதில் எல்லா முயற்சிகளையும் ஒருசேர ஈடு படுத்துவதுதான் தற்போதைய தலைமையான பணியாகும்.

வங்கிகளை நாட்டுடைமையாக்குதலைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் பொருட்டும், சோஷலிசத்தில் பொதுக் கணக்குப் பதிவின் கணு மையங்களாக வங்கிகளை மாற்று வதை நோக்கி உறுதியாக முன்செல்லும் பொருட்டும், மக்கள் வங்கியின் கிளைகளது எண்ணிக்கையை அதிகமாக்குவதிலும், வைப்புத் தொகைகளைக் கவர்ந்து இழுப்பதிலும், பொது மக்கள் வைப்புத் தொகைகள் செலுத்துவதையும் திருப்பி யெடுப்பதையும் சுலபமாக்குவதிலும், நீள்வரிசைகளில் காத் திருக்க நேர்வதை ஒழித்திடுவதிலும், இலஞ்சம் வாங்கு வோரையும் மோசடிக்காரர்களையும் பிடிப்பதிலும் சுடுவதி லும், இன்ன பிறவற்றிலும் முதலாவதாகவும் முக்கியமாக வும் நாம் மெய்யான வெற்றி பெற்ருக வேண்டும். முதலில் ஆக எளியவற்றை மெய்யாகவே செய்து முடித்தாக வேண் டும், கிடைக்கக் கூடியவற்றைச் சரிவர ஒழுங்கு செய்தாக வேண்டும், பிறகு அதிக சிக்கலான காரியங்களைச் செய் வதற்குத் தயாரித்தாக வேண்டும்.

ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் (தானியத்திலும் தோலிலும் பிறவற்றிலும்) அரசு ஏகபோகங்களை உறுதியாக நிலைபெறச் செய்தும் இவற்றை மேம்படுத்தியும் செல்ல வேண்டும், இந்த வழியில் அயல்நாட்டு வாணிபத்தை அரசு ஏகபோகமாக்குவதற்குத் தயார் செய்தாக வேண்டும். இந்த ஏகபோகம் இல்லையேல், ''கப்பம்'' செலுத்துவதன் மூலம் அன்னிய மூலதனத்திடமிருந்து ''நம்மை விடுவித்துக் கொள்ள'' முடியாது.[57] சோஷலிசத்தைக் கட்டியமைப்ப தற்கான சாத்தியப்பாடு, குறிப்பிட்ட ஓர் இடைக்காலத் துக்கு அன்னிய மூலதனத்துக்கு குறிப்பிட்ட அளவிலான ''கப்பம்'' செலுத்துவதன் மூலம் நமது உள்நாட்டுப் பொரு ளாதாரச் சுயேச்சை நிலையைப் பாதுகாத்துக் கொள்கிரேமா என்பதையே முற்றிலும் பொறுத்திருக்கிறது.

பொதுவாக வரிகளையும், குறிப்பாகச் சொத்து, வருமான வரியையும் வசூலிப்பதிலும் நாம் வெகுவாகப் பின்தங்கி வருகிரேம். முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு இழப்பீட்டுத்

தொகைகள் விதிப்பதானது—கோட்பாட்டு அளவில் இது முற்றிலும் அனுமதிக்கக் கூடியதும் பாட்டாளி வர்க்கத்தால் ஆமோதிக்கப்படத்தக்கதுமான நடவடிக்கையே—இத்துறையில் இன்னமும் நாம் நிர்வாக முறைகளைக் காட்டிலும் அதிகமாய் யுத்த முறைகளுக்குத்தான் (ருஷ்யாவைச் செல்வந்தர்களிடமிருந்து ஏழையெளியோருக்கு வென்று கொள்வதற்கானவை) அருகாமையில் இருக்கிறோம் என்பதையே காட்டுகிறது. ஆனால் மேலும் வலிமை வாய்ந்தோராகும் பொருட்டும், மேலும் உறுதியாகக் காலூன்றி நிற்கும் பொருட்டும் பின்கூறிய முறைகளையே நாம் கடைப்பிடிக்க வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு விதிக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகளுக்குப் பதிலாய் நாம் தொடர்ச்சியாகவும் முறையாகவும் சொத்து, வருமான வரி வசூலிப்பைக் கைக்கொள்ள வேண்டும். இந்த வரி வசூலிப்பு பாட்டாளி வர்க்க அரசுக்கு மேலும் கூடுதலான வரவு கிடைக்கச் செய்யும்; நம் தரப்பில் மேலும் சிறப்பான ஒழுங்கமைப்பினையும், மேலும் சிறப்பான கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் இது கோருகின்றது.[58]

கட்டாய உழைப்பு சேவையைப் புகுத்துவதிலும் நாம் கால தாமதம் செய்திருப்பதானது, தற்போது முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பணி தயாரிப்பு ஒழுங்கமைப்பு வேலையேதான் என்பதைக் காட்டுகிறது. இந்த வேலை ஒரு புறத்தில் நமது ஆதாயங்களை முடிவாக உறுதி பெறச் செய்யும்; மறுபுறத்தில் மூலதனத்தைச் ''சூழ்ந்து கொள்வதற்கும்'', அதைச் ''சரணடையும்படிப்'' பலவந்தம் செய்வதற்குமான பணித்திட்டத்துக்குத் தயார் செய்யும் பொருட்டு இது அவசியமாகும். உடனடியாக நாம் கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்த முற்பட்டாக வேண்டும்: ஆனால் அடிக்கொரு தரம் நடைமுறை அனுபவத்தைக் கொண்டு சோதித்துப் பார்த்தும், செல்வந்தர்களுக்குக் கட்டாய உழைப்பு சேவையை முதற்கண் புகுத்தியும்தான், படிப்படியாகவும் சுற்றிலும் கவனித்து எச்சரிக்கையோடும் இதனைச் செய்ய வேண்டும். கிராமாந்தர முதலாளித்துவ வர்க்கத்தாரும் உட்பட முதலாளித்துவ வர்க்கத்தார் ஒவ்வொருவருக்கும் வேலைப் பதிவு, நுகர்வாளர் வரவு செலவுப் பதிவுக் கையேட்டுப் புத்தகங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதானது, பகைவனை

முழு அளவுக்குச் ''சூழ்ந்து கொள்வதை'' நோக்கியும், பண்டங்களின் உற்பத்தியிலும் வினியோகத்திலும் மெய்யாகவே மக்கள் சார்ந்த கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நிறுவுவதை நோக்கியும் எடுக்கப்படும் ஒரு முக்கிய நடவடிக்கையாக இருக்கும்.

நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான போராட்டத்தின் முக்கியத்துவம்

மக்களை ஒடுக்குவதற்கும் சூறையாடுவதற்குமான உறுப்பாகப் பல நூறு ஆண்டுகளாய் இருந்து வந்திருக்கும் அரசானது, அதனுடன் சம்பந்தப்பட்டவை யாவற்றின் மீதும் மக்களுக்குள்ள கட்டுக்கடங்காத வெறுப்பையும் சந்தேகத்தையும் நமக்கு மரபாக விட்டுச் சென்றிருக்கிறது. இவற்றை எதிர்த்து நின்று சமாளிப்பது மிகவும் கடினமாகும், சோவியத் அரசாட்சி ஒன்றுல் மட்டுமே இதனைச் செய்ய முடியும். இதனுலுங்கூட இதனைச் செய்து முடிக்க மிகுந்த காலமும் ஓயாத அரு முயற்சியும் தேவையாய் இருக்கும். கணக்குப் பதிவு, கண்காணிப்புப் பிரச்சினையில், முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்டதும் மறு தினமே சோஷலிசப் புரட்சியை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாகிய இதில், மேற்கூறிய ''மரபு'' மிகவும் குறிப்பான அளவுக்குக் கடுமையாக இருந்து வருவது புலப்படுகிறது. நிலப்பிரபுக்களும் முதலாளித்துவ வர்க்கத்தினரும் கவிழ்க்கப்பட்டிருப்பதால் மக்கள் முதன் முதலாய் இப்போது தாம் சுதந்திரமடைந்திருப்பதை உணருகிருர்கள். பண்டங்களின் உற்பத்தியிலும் வினியோகத்திலும் விரிவான அரசுக் கணக்குப் பதிவும் கண்காணிப்பும் இல்லையேல் உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரத்தையும் உழைப்பாளி மக்களது சுதந்திரத்தையும் நிலைபெறச் செய்ய முடியாது, தவிர்க்கவொண்ணுதபடி திரும்பவும் முதலாளித்துவ நுகத்தடிக்குக் கீழ்ப்பட்டாக வேண்டும் என்பதை இம்மக்கள் புரிந்து கொள்வதற்கும்—புத்தகங்களிலிருந்தல்ல, தமது சொந்த, சோவியத் அனுபவத்திலிருந்து புரிந்து கொள்வதற்கும்—உணர்வதற்கும் தவிர்க்க முடியாதபடி சிறிதளவு காலம் ஆகத்தான் செய்யும்.

முதலாளித்துவ வர்க்கத்தின், குறிப்பாகக் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரின் பழக்கவழக்கங்கள், மரபுகள் எல்லாம் அரசுக் கண்காணிப்பை எதிர்ப்பனவாகவும், ''புனிதமான தனியார் சொத்தும்'' ''புனிதமான'' தனியார் தொழில் முயற்சியும் கேடின்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறவையாகவும் இருக்கின்றன. அராஜகவாதமும் அராஜக-சிண்டிக்கலிசமும் முதலாளித்துவப் போக்குகளாகுமென்ற மார்க்சிய முடிவுரை எவ்வளவு சரியானது என்பதும், சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கும் கம்யூனிசத்துக்கும் எப்படி இவை சிறிதும் ஒவ்வாதவாறு நேர்முரணானவை என்பதும் என்றையும் விட இப்போது நமக்குத் தெளிவாக விளங்குகின்றன. சோவியத் அரசுக் கண்காணிப்பு, கணக்குப் பதிவு என்னும் கருத்தினை மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்காகவும் இந்தக் கருத்தினை நடைமுறைச் செயலாக்குவதற்காகவும் போராடுவது, உணவையும் உடைகளையும் கொள்முதல் செய்தல் ''தனியாரது'' விவகாரமாகுமென்றும் வாங்குதலும் விற்றலும் ''என்னை மட்டுமே பொறுத்த நடவடிக்கையாகுமென்றும்'' கருதுமாறு மக்களுக்குக் கற்று தந்த கேடுகெட்ட அந்தப் பழங்காலத்திலிருந்து துண்டித்துக் கொள்வதற்காகப் போராடுவது உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரும் போராட்டமாகும்; சோஷலிச உணர்வுக்கும் முதலாளித்துவ-அராஜகவாதத் தன்னியல்புக்கும் இடையிலான போராட்டமாகும்.

தொழிலாளர்கள் மூலமான கண்காணிப்பை நாம் சட்டமாக இயற்றியுள்ளோம், ஆனால் இந்தச் சட்டம் இப்போதுதான் செயல்பட ஆரம்பித்திருக்கிறது, பாட்டாளி வர்க்கத்தின் விரிவான பகுதியோரின் மனத்துள் இப்போதுதான் ஊடுருவத் தலைப்பட்டிருக்கிறது. பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் கணக்குப் பதிவும் கண்காணிப்பும் இல்லையேல், அது சோஷலிசத்தின் மூலக் குருத்துகள் மடிந்தொழிவதைக் குறிப்பதாகும் என்பதை, அரசு நிதிகள் களவாடப்படுதலைக் குறிப்பதாகும் என்பதை (ஏனெனில் எல்லாச் சொத்துகளும் அரசுக்கு உரியவை, இந்த அரசானது உழைப்பாளி மக்களில் பெருவாரியானோருக்கு ஆட்சியதிகாரம் உரியதாயுள்ள சோவியத் அரசாகும்) போதிய அளவுக்கு நமது பிர

சாரக் கிளர்ச்சியில் நாம் விளக்கிக் கூறுவதில்லை. கணக்குப் பதிவிலும் கண்காணிப்பிலும் கருத்தின்றி இருப்பது ஜெர் மானிய, ருஷ்யக் கர்னீலவ்களுக்கு நேரடியாக உதவுவதும் உடந்தையாய் இருப்பதுமே ஆகுமென்பதையும், கணக்குப் பதிவு, கண்காணிப்புப் பணியைச் சமாளிக்க நாம் தவறும் போது மட்டுமேதான் இந்தக் கர்னீலவ்களால் உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரத்தைக் கவிழ்க்க முடியுமென்பதை யும், இவர்கள் கிராமாந்தர முதலாளித்துவ வர்க்கத்தார் அனைவரின் உதவியோடும் காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆகியோரது உதவி யோடும் ''பதுங்கிக் காத்திருக்கிறார்கள்'', நம்மைத் தாக்கு வதற்கு எப்போது தக்க தருணம் வருமெனக் காத்துக் கொண்டிருக்கிறார்களென்பதையும் போதிய அளவுக்கு நாம் விளக்கிக் கூறுவதில்லை. முன்னேறிய தொழிலாளர்களும் விவ சாயிகளும் இதைப் பற்றி போதிய அளவுக்குச் சிந்திக்காம லும் பேசாமலும் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் மூல மான கண்காணிப்பு நடைமுறை உண்மையாகும் வரை, முன் னேறிய தொழிலாளர்கள் இந்தக் கண்காணிப்பை மீறுவோ ருக்கும் கண்காணிப்பு விவகாரங்களில் கருத்தில்லாதோருக் கும் எதிராய் வெற்றிகரமான, ஈவிரக்கமில்லாத போராட் டத்துக்கு ஏற்பாடு செய்து இதனை நடத்தி முடிக்கும் வரை, சோஷலிசத்தை நோக்கி முதலாவது படியிலிருந்து (தொழி லாளர்கள் மூலமான கண்காணிப்பிலிருந்து) இரண்டாவது படிக்குச் செல்வது, அதாவது உற்பத்தியைத் தொழிலாளர் கள் ஒழுங்கமைத்திடுவதற்குச் செல்வது முடியாத காரியம்.

வலைப்பின்னல் போல் அமைந்த உற்பத்தியாளர்கள், நுகர்வாளர்கள் கம்யூன்களாகவே சோஷலிச அரசு எழ முடி யும். இந்தக் கம்யூன்கள் தமது உற்பத்தியையும் நுகர்வை யும் நேர்மையுடன் கணக்குப் பதிவு செய்யும், உழைப்புச் செலவைச் சிக்கனம் செய்யும், உழைப்பின் உற்பத்தித் திறனை இடையறாது உயர்த்தும்; இவ்விதம் இவை வேலை நேரத்தை ஏழு மணியாகவும் ஆறு மணியாகவும் இன்னுங்கூட குறை வாகவும் குறைத்துச் செல்வதற்கு வகை செய்யும். தானியத் தின், தானிய உற்பத்தியின் (பிற்பாடு ஏனைய எல்லா அவசியப் பண்டங்களினதும்) மிகக் கண்டிப்பான, நாடு தழுவிய அளவிலான, விரிவான கணக்குப் பதிவும் கண்காணிப்பும்

நடந்தேறினாலன்றி எதையும் சாதித்து விட முடியாது. பண்டங்களது வினியோகத்தின் வெகுஜன அளவிலான கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் நாம் மாறிச்செல்வதற்கு உதவி புரியக் கூடிய வெகுஜன நிறுவனங்களை, அதாவது நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களை முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ளது. முன்னேறிய நாடுகளில் இருப்பது போல் ருஷ்யாவில் இந்தச் சங்கங்கள் அவ்வளவு நன்றாய் வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்றாலுங்கூட, இவை ஒரு கோடிக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவை. சில நாட்களுக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய அரசாணை[59] மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும், தற்போதைய தருணத்தில் சோவியத் சோஷலிசக் குடியரசின் விசேஷ நிலையையும் பிரத்தியேகப் பணிகளையும் பளிச்செனத் தெரியும்படி படம் பிடித்துக் காட்டுவதாகும்.

இந்த அரசாணை முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களோடும் இன்னமும் முதலாளித்துவக் கண்ணோட்டத்தையே அனுசரித்து வரும் தொழிலாளர்களது கூட்டுறவுச் சங்கங்களோடும் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடாகும். இது ஓர் உடன்பாடு அல்லது சமரசமே ஆகும்; ஏனெனில் முதலாவதாக, மேற்கூறிய நிலையங்களின் பிரதிநிதிகள் இந்த அரசாணையை விவாதிப்பதில் பங்கு கொண்டதோடன்றி, உண்மை நடப்பில் இந்த விவகாரத்தில் முடிவை நிர்ணயிப்பதில் தீர்மானகரமான பாத்திரமும் பெற்றனர்—அரசாணையில் இந்நிலையங்களால் கடுமையாக எதிர்க்கப்பட்ட பகுதிகள் கைவிடப்பட்டன. இரண்டாவதாக, சமரசத்தின் சாரம் என்னவெனில், நுழைவுக் கட்டணம் இல்லாமலே கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்ற கோட்பாட்டினை (இது ஒன்றே முரணற்ற பாட்டாளி வர்க்கக் கோட்பாடு) சோவியத் அரசாங்கம் கைவிட்டுள்ளது; குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்கள் அனைவரையும் ஒரேயொரு கூட்டுறவுச் சங்கத்தில் ஒன்றுபடச் செய்வதென்ற கருத்தினையும் சோவியத் அரசாங்கம் கைவிட்டுள்ளது. இது தான் சோஷலிசக் கோட்பாடு, வர்க்கங்களை ஒழித்திடும் பணிக்கு உகந்த கோட்பாடு—இந்தக் கோட்பாட்டுக்கு முரணாய், ''தொழிலாளி வர்க்கக் கூட்டுறவுச் சங்கங்கள்'' (இங்கே இவை ''வர்க்கச்'' சங்கங்களாகத் தம்மைக் கூறிக்

கொள்கின்றன என்ருல், முதலாளிகளது வர்க்க நலன்களுக்கு இவை தம்மைக் கீழ்ப்படுத்திக் கொள்வதுதான் அதற்குரிய காரணம்) தொடர்ந்து நிலவுவதற்கு அவற்றுக்கு உரிமை அளிக்கப்பட்டது. முடிவில், முதலாளித்துவ வர்க்கத்தினரைக் கூட்டுறவுச் சங்கங்களது நிர்வாகக் குழுக்களிலிருந்து அறவே வெளியேற்றிவிட வேண்டுமென்ற சோவியத் அரசாங்க யோசனையும் வெகுவாய் மாற்றப்பட்டது; தனியார் முதலாளித்துவ வாணிப, தொழில் நிலையங்களது உடைமையாளர்கள் மட்டும்தான் நிர்வாகக் குழுக்களில் இடம் பெறலாகாதெனத் தடை விதிக்கப்பட்டனர்.

பாட்டாளி வர்க்கமானது சோவியத் அரசாங்கத்தின் மூலம் செயல்பட்டு, தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தால், அல்லது இத்தகைய கண்காணிப்புக்குரிய அடிப்படையையேனும் அமைத்திருந்தால், இம்மாதிரியான சமரசங்களைச் செய்வது அவசியமாய் இருந்திருக்காது. சோவியத்துகளது உணவு இலாக்காக்களின் மூலம், சோவியத்துக்குக் கீழ்ப்பட்ட வழங்கீட்டு நிறுவனங்களின் மூலம் பாட்டாளி வர்க்க நிர்வாகத்தில் அமைந்த ஒரே கூட்டுறவுச் சங்கத்தில் தேச மக்களை நாம் ஒழுங்கமைத்திருப்போம். முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியில்லாமலே நாம் இதைச் செய்திருப்போம்; தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களை முழு அளவில் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு, இரண்டையும் ஒன்ருக இணைத்து, நிர்வாகம் அனைத்தையும் செல்வந்தர்களது நுகர்வினை மேற்பார்வையிடுதலையும் தமது சொந்தக் கரங்களில் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, முதலாளித்துவச் சங்கங்களுடன் கூட அவற்றின் பக்கத்தில் நிலவும் தொழிலாளர் சங்கங்களால் இருந்துவரும்படி ஏவிவிடும் முழுக்க முழுக்க முதலாளித்துவத் தன்மையதான கோட்பாட்டுக்கு எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்காமலே இதைச் செய்திருப்போம்.

முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இம்மாதிரி உடன்பாடு செய்து கொள்கையில் சோவியத் அரசாங்கம் தற்போதைய வளர்ச்சிக் கட்டத்தில் தனது போர்த்தந்திரக் குறிக்கோள்களையும் தனக்குரிய விசேஷச் செயல்முறைகளையும் பின்வருமாறு ஸ்தூல முறையில் வரையறுத்துக் கூறியது:

முதலாளித்துவக் கூறுகளை நெறியாண்மை செய்தும், அவற்றைப் பயன்படுத்தியும், சிற்சில வழிகளில் பகுதியளவில் அவற்றுக்கு விட்டுக் கொடுத்தும் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்போம்—இந்த முன்னேற்றம் முதலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மெதுவானதாய் இருப்பினும், மேலும் திடமானதாய், அடிப்படையும் போக்குவரத்து வழிகளும் மேலும் உறுதி வாய்ந்தனவாய், வென்று கொள்ளப்பட்டுள்ள நிலைகள் மேலும் நல்லபடி வலுவூட்டப் பெற்றனவாய் இருக்கும். சோஷலிசக் கட்டுமானத் துறையில் சோவியத்துகள் தமது வெற்றிகளை ஏனைய பலவற்றுக்கும் இடையில் இப்போது தெளிவான, எளிய, நடைமுறைத் தரங்களைக் கொண்டு—அதாவது, எத்தனைக் குடிவாழ்க் கூட்டுகளில் (கம்யூன்கள் அல்லது கிராமங்கள், வீட்டுத் தொகுதிகள் முதலானவை) கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன, எந்த அளவுக்கு அவற்றின் வளர்ச்சி அனைத்து மக்களையும் தழுவும் நிலையை வந்தடைந்திருக்கிறது என்பவற்றைக் கொண்டு—அளவிட முடியும் (அளவிடவும் வேண்டும்).

1918 ஏப்ரல் 13க்கும் 26க்கும் இடையே எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 175-187

பொருளாதாரக் கொள்கை மற்றும் சிறப்பாக வங்கிக் கொள்கை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்[60]

I. தொழில்துறை மற்றும் பரிமாற்றம் ஆகியவை தேச வுடைமையாதலை நிறைவாக்குதல்.

II. வங்கிகளை தேசவுடைமையாக்குதல், சோஷலிசத் திற்குப் படிப்படியாக மாற்றுதல்.

III. நாட்டு மக்களை நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங் களில் கட்டாயமாக ஒழுங்குதிரட்டல்.
{+பண்டங்கள் பரிமாற்று}

IV. பண்டங்களது உற்பத்தி மற்றும் வினியோகத்தின் மீது கணக்குப் பதிவு மற்றும் கண்காணிப்பு.

V. உழைப்புக் கட்டுப்பாடு.
{+வரிக் கொள்கை}

கட்டாய உழைப்பு சேவை மேலிருந்து துவக்கப்படுதல்.

குழப்பம், சீர்குலைவு மற்றும் சோம்பல் ஆகியவற்றை எதிர்த்துப் போராட ஈவு இரக்கமற்ற நடவடிக்கைகளை எடுப் பதும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது கட்டுப்பாடு மற்றும் சுயக் கட்டுப்பாடு ஆகியவற்றை உயர்த்திடுவதற்கு மிகவும் தீவிரமானதும் கடுமையானதுமான நடவடிக்கைகள் எடுப்பதும் பரம அவசியமானதாகவும் அவசரமானதாகவும் கருதப்படல் வேண்டும்.

பொருளாதார வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் கண் காணிப்பாளர்களது எளிதில் இயங்கக் கூடிய குழுக்கள் அமைக்கப்படுவதற்காக அரசாங்கக் கண்காணிப்பினை நடை முறைக் கண்காணிப்பாக மாற்றுதல்.

சோவியத் அரசாங்கத்துடன் சேர்ந்து உழைக்க விருப்பம் தெரிவிக்கும் முதலாளித்துவ அறிவாளிகள் மற்றும் நாச வேலைக்காரர்களை வேலையில் அமர்த்துவது பற்றிய நடைமுறை நிபந்தனைகள்.

உற்பத்தி, பண்டங்களின் இருப்பு மற்றும் உழைப்பின் உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் கவனித்துக் கணிக்கத் தொழில் நீதிமன்றங்கள்.

மையமாக்குதல்.

(உடனடியானது, முடிவானது.)

1. தொழில்துறை தேசவுடைமையாக்கப்படுதலை நிறைவு செய்தல்.
2. நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களில் எல்லோரையும் படிப்படியாகச் சேர்த்திணைத்தல் மற்றும் பண்ட மாற்றம்.
3. வங்கிக் கொள்கை.
4. உழைப்புக் கட்டுப்பாடு இத்தியாதி.
5. வரிக் கொள்கை (நிதி).

1. அனைத்துத் தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், உற்பத்தி மற்றும் பரிமாற்றச் சாதனங்கள் ஆகியவற்றின் தேசவுடைமையாக்கத்தை நிறைவு செய்தல். தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள் பால் தோற்றுவிக்கும் சிண்டிக்கல்வாத மற்றும் குழப்பமான தோரணையை எதிர்த்து உறுதியான ஈவிரக்கமற்ற போராட்டம்.[61] நாடு தழுவியதோர் அளவில் பொருளாதார வாழ்க்கையினை மையமாக்குதலை விடாப்பிடியாக நிறைவேற்றிடுதல். பூர்வாங்கத் திட்டங்கள், மதிப்பீடுகள், வாராந்தர அறிக்கைகள், உள்ளபடியே உழைப்பு உற்பத்தித் திறனை உயர்த்திடுவது ஆகியவற்றை இடைவிடாமல் கோருவது, தேசவுடைமையாக்கப்பட்ட தொழில்களைகளை நிர்வாகம் செய்வதற்கான பொறியமைவை நிறுவுவதும் மற்றும் நடைமுறைச் சோதனையும்.

கட்டாயமான வங்கி கணக்குகள் அல்லது கட்டாயமாகப் பணத்தை வங்கிகளில் வைத்திருக்கச் செய்தல் ஆகியவற்றிற்கான நடவடிக்கைகள்.

நாட்டு மக்களை கட்டாயமாக நுகர்வாளர் சங்கங்களில் திரட்டுதல், இந்த மாற்றத்திற்கான நடவடிக்கைகள்.

கூட்டுறவாளர் பொறியமைவு எல்லா மக்களையும் நுகர் வாளர் கூட்டுறவுச் சங்கங்களில் திரட்டும் பாதையில் படிப் படியாக மாறிச் செல்வதற்காகக் கூட்டுறவாளர்களுடன் செய்துகொள்ளப்படும் உடன்பாட்டின் நிபந்தனைகள்.

1918 ஏப்ரல் 8க்கு முன்பாக இன்றி பின்னர் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *36*,
பக்கங்கள் *217-18*

வங்கிக் கொள்கையின் மீதான ஆய்வுரைகள்[62]

1. தனியார் வங்கிகளில் என்ன பெறப்பட்டது என்பது பற்றி ஓர் அறிக்கை தயாரித்திடல் வேண்டும். ஒவ்வொரு தனியார் வங்கியின் அனைத்து அலுவல்களையும் முடித்து அதைக் கலைத்துவிடுவது பற்றிய விவரமும் இந்த அறிக்கையில் அடங்கும்.

(ஏகமனதாக.)

இந்த அறிக்கையை எவ்வாறு எழுதுவது என்ற பிரச்சினை பற்றிக் கீழ்வரும் அபிப்பிராயங்கள் கூறப்பட்டன:

(அ) ஒவ்வொரு தனியார் வங்கியின் முன்னாள் ஊழியர்களுக்கும் (அரசு வங்கியின் கமிசாரகத்துக்குச் சில ஊழியர்களை விலக்கும் உரிமை இருப்பதால்) கடைசி எச்சரிக்கை ஒன்று கொடுத்து, மிகக் குறுகியதோர் காலக் கெடுவில் வங்கியின் எல்லா விவகாரங்களையும் ஒழுங்குபடுத்தி வைக்கவும் இறுதி வடிவில் இருப்பு நிலைக் குறிப்பைத் தயார் செய்திடவும் கோருதல். முதலில் 1917 டிசம்பர் 14 வரைக்கும்,[63] இரண்டாவதாக, வங்கி நடவடிக்கைகளின் கடைசி நாளுக்கும் ஆக இந்த இருப்பு நிலைக் குறிப்பு செய்யப்பட வேண்டும்.

(ஆ) தனியார் வங்கிகள் இந்த அறிக்கைகளைத் தயார் செய்யும் பணியினை நிறைவேற்றுவதிலும், வங்கியின் எல்லா அலுவல்களையும் முடித்து அவற்றைக் கலைத்துவிடுவதிலும் ருஷ்யக் குடியரசின் மக்கள் வங்கியின் கிளைகளாக மட்டுமே இயங்கி வர வேண்டும். கலைத்துவிடும் ஒரே நோக்கிற்காகவும் வேறெந்த புதிய நடவடிக்கைகளையும் எடுக்க முற்படாமலும் அவை இயங்க வேண்டும்.

(ஹனேத்ஸ்கி மற்றும் குக்கோவ்ஸ்கி மற்றும் லெனின்·)

ஸ்புண்டேயின் தனிப்பட்ட கருத்து:

14:12:1917க்கான இருப்பு நிலைக் குறிப்பு நம்மால் நியமிக்கப்பட்டதொரு தனிக் கமிஷனால் வரையப்பட வேண்டும்.

வேறொரு இருப்பு நிலைக் குறிப்பு வரையப்பட வேண்டிய அவசியம் இல்லை.

14:12:1917க்குப் பிறகு உள்ள நடவடிக்கைகள் மக்கள் வங்கியின் பெயரால் நடத்தப் பெற வேண்டும்.

எல்லாத் தனியார் வங்கிகளும், அரசு வங்கியையும் போல், ருஷ்யக் குடியரசின் மக்கள் ஐக்கிய வங்கி என்று அறிவித்திடல் வேண்டும்.

2. அறிக்கைகள் தயாரிக்கும் வேலை அனைத்தும் அரசு வங்கியின் கமிசாரகத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும்.

அரசு வங்கி மற்றும் தனியார் வங்கிகளது முன்னாள் பணியாளர்கள் உள்ளிட்ட அனுபவப்பட்ட நபர்கள் சாத்தியமான அளவில் அதிகமாக வேலையில் சேருமாறு அழைக்கப்பட வேண்டும்.

(ஏகமனதாக.)

3. வங்கிக் கொள்கையானது, வங்கிகள் தேசவுடைமையாக்கப்படுதல் என்பதோடு நின்று விடாமல், நாட்டில் சோஷலிச ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பொருளாதார வாழ்க்கை முழுவதையும் கணக்கு வைக்கவும் ஒழுங்குறுத்தவும் வேண்டி வங்கிகளைத் தனி ஓர் உறுப்பமைவாக மாற்றிடுவதற்குப் படிப்படியாகவும் உறுதியாகவும் நெறியாக்கம் செய்யப்பட வேண்டும்.

ஸ்புண்டேயும் லெனினும் ஆதரவாக, குக்கோவ்ஸ்கி எதிராக.
ஹனேத்ஸ்கி வாக்களிக்கவில்லை, இதை நிறைவேற்றுவது சாத்தியமில்லை எனக் கருதுகிறார்.

4. நாடெங்கிலும் மக்கள் வங்கியின் கிளைகளை சாத்தியமான அளவு அதிகபட்ச எண்ணிக்கையில் திறந்திட உடனடி நடவடிக்கைகள்.

இந்தக் கிளைகள் நகரங்களிலும் கிராமங்களிலும் மிக தகுந்த முறையில் நிறுவப்பட்டு பொது மக்களுக்கு ஆகக் பெருமளவிலான வசதியினைக் கொடுக்கும்படி செய்தல்.

தற்போது நிலவும் முன்னாள் தனியார் வங்கிகளின் கிளைகள் மக்கள் வங்கியின் கிளைகளாகப் பயன்படுத்தப் பெறுதல்.

(ஏகமனதாக.)

5. சேமிப்பு வைப்புகள் முழுநிறை பாதுகாப்புடையவை என்று பிரகடனம் செய்தல் (ஆனால் வரிவிதிக்கும் அரசின் உரிமையை இது குறைத்திடாது என்பது திண்ணம்.)

6. உண்டியல் பரிமாற்றம் கட்டுப்பாடின்றி புழங்கிடுதல்.

7. வங்கிகளில் இருந்து பணத்தைப் பெறுவது பற்றி தொழிலாளர் கண்காணிப்பினைப் பூரணமாக நீடித்து வைத்துக் கொள்ளுதல்.

8. நுகர்வு நோக்கங்களுக்காகப் பணம் எடுப்பதன் மீதுள்ள வரம்புகளை நீடித்து வைத்துக் கொள்ளுதல்.

பணத்தை வங்கிகளில் போடும், வங்கிகளில் இருந்து பணம் எடுக்கும் வேகத்தை முடுக்கும் நோக்கங்களுக்காகப் பொது மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட பல வசதிகளை அளித்தல். சில சம்பிரதாய நடைமுறைகளைத் தளர்த்தி எளிமைப் படுதல்.

9. நுகர்வு நோக்கங்களுக்குக் கண்டிப்பாக அவசியப் படாத எல்லாப் பணத்தையும் மக்கள் வங்கிகளில் போட்டு வைப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்தல். இந்தக் கோட்பாட்டைக் கட்டாயமாக அமுல் நடத்த ஒரு சட்டத்தையும் மற்றும் நடைமுறை ஏற்பாடுகளையும் தயார் செய்தல்.

(வெளியிடக் கூடாது.)

10. தங்களது செயல்பாட்டில் ருஷ்யாவின் சோவியத் கூட்டாட்சிக் குடியரசின் எல்லைகளுக்குள்ள மக்கள் வங்கியின் அனைத்துக் கிளைகளும் மத்திய நிர்வாக போர்டின் ஆணைகள் மற்றும் நெறியாக்கங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு செயல்பட வேண்டும். உள்ளூர் விதிகள் அல்லது கட்டுப்பாடுகள் எதையும் அமைத்திடும் உரிமை கிடையாது. மத்திய நிர்வாக போர்டின் ஒப்புதலோடு மட்டுமே விதிவிலக்குகள் அனுமதிக்கப்படும்.

1918 ஏப்ரல் 8க்கு முன்பாக இன்றி பின்னர் எழுதப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 36, பக்கங்கள் 219-221

அகில ருஷ்யத் தொழிற்சங்கங்களின் மத்திய க்வுன்சில், உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் தலைமைப் பொருளாதார கவுன்சிலின் பிரதிநிதிகளது கூட்டு அமர்வில் ஆற்றிய சொற்பொழிவு[64]
1918 ஏப்ரல் 11

செய்தித்தாள் அறிக்கையிலிருந்து

டிரஸ்டுகளாக மாற்றப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் முழுமையாகத் தேசவுடைமையாக்க வேண்டும் என்று தோழர் லெனின் வலியுறுத்தினர். இந்தத் திட்டத்தை முன்மொழிந்த முதலாளிகள் பிரிவினரை அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திஞர்.

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கம் 222

தேசவுடைமையாக்கப்படப் போகும் நிறுவனங்களது பிரதிநிதிகளின் மாநாட்டிற்கு எழுதப்பட்ட கடிதம்[65]

பெரிய உலோக ஆலைகளது பிரதிநிதிகளின் மாநாட்டில் தொழிலாளர் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களின் அறிக்கையைக் கேள்வியுற்றும் மற்றும் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்தை மனத்தில் கொண்டு பார்க்கும் போது எனது கருத்துப்படி மக்கள் கமிசார்களின் கவுன்சில் நிச்சயமாயும் ஏகமனதாக உடனடியான தேசவுடைமையாக்கத்தை ஆதரிக்கும் என்று நான் கூற முடியும். வேலையைத் திட்டப்படியும் சரியான முறையிலும் ஒழுங்கமைப்பதற்கும் இதன் உற்பத்தித் திறனை உயர்த்திடுவதற்கும் உதவி புரிய இந்த மாநாடு தீவிரமான முயற்சி செய்யுமானால் இது சாத்தியமாகும்.

எனவே மாநாடு கீழ்வருவனவற்றைச் செய்திடுவது விரும்பத்தக்கது:

1) தொழிற்சாலைகளை இணைப்பதற்கான தயாரிப்புகள் செய்ய இடைக்காலக் கவுன்சில் ஒன்றை உடனடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்;

2) அனைத்து தேசவுடைமையாக்கப்பட்ட தொழிற்சாலைகளின் தனி சங்கத்தின் (அல்லது இணைப்பின்) நிர்வாக போர்டாக இந்த இடைக்காலக் கவுன்சிலை மாற்றிடும் பொருட்டு, தலைமைப் பொருளாதார கவுன்சிலின் ஒப்புதலோடு உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டிக்கு, இதன் வடிவத்தை மாற்றிடவும் மற்றும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளவும் உரிய அதிகாரம் வழங்கிட வேண்டும்;

3) கண்டிப்பான உழைப்பின் ஒழுங்குக் கட்டுப்பாட்டை

உருவாக்கிடும் நோக்கத்திற்காக பிரியான்ஸ்க் ஒழுங்கு முறை விதிகளின்[66] மாதிரியில் தொழிற்சாலை ஒழுங்கு விதிகளை அங்கீகரிக்க வேண்டும் அல்லது ஒரு தீர்மானத்தின் மூலம் சட்டமாக்க வேண்டும்;

4) நிர்வாக போர்டில் பங்கு கொள்வதற்காகப் பெருவீத உற்பத்தியின் தனித்தேர்ச்சியாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அமைப்பாளர்கள் ஆகியோர் மத்தியிலிருந்து வேட்பாளர்களை நியமனம் செய்ய வேண்டும், அல்லது அத்தகையோரைத் தேடிப்பிடித்து நியமிக்கும்படி தலைமை பொருளாதாரக் கவுன்சிலுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்;

5) மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து வரும் தொழிலாளர்களை அல்லது பெருவீத உற்பத்தியினை நிர்வாகம் செய்வதில் அதிக அனுபவம் பெற்றுள்ள தொழிலாளர்களை, குறைந்தளவு வெற்றியாக்கமுள்ள தொழிற்சாலைகளில் உள்ள விவகாரங்களை சரிவர ஒழுங்கமைத்திட உதவும் பொருட்டு (இடைக்கால கவுன்சில் அல்லது உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டி) அனுப்பிவைக்க வேண்டும்;

6) அனைத்து பொருள்கள் மற்றும் உழைப்பின் உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் கண்டிப்பாகக் கணக்குப் பதிவு மற்றும் கண்காணிப்பில் வைப்பது மூலம் கச்சாப் பொருட்களிலும் உழைப்பிலும் ஏராளமான சிக்கனத்தை நாம் அடைய வேண்டும் அடைய முடியும்.

மாநாடும், அது நிறுவிடும் செயலுறுப்புக்களும் விறுவிறுப்பாகப் பணியாற்றினால் மக்கள் கமிசார்களின் கவுன்சில் அடுத்த சில நாட்களுக்குள் தேசவுடைமையாக்கம் பற்றிய அரசாணையை நிறைவேற்றுவது சாத்தியமாகும் என்று நான் கருதுகிறேன்.

1918 மே 17

வி. உலியானவ் (லெனின்)
மக்கள் கமிசார்கள்
கவுன்சிலின் தலைவர்

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 348-349

"தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பற்றிய விதிகளின்" நகல் மீதான கருத்துரை[67]

நாடு முழுவதிலும் பெருவீதப் பொருள் உற்பத்தி ஆகப் பெருமளவுக்கு சாத்தியமானவரை மையப்படுத்தப்படுவதை கம்யூனிசம் அவசியப்படுத்துகிறது, முன்னனுமானிக்கிறது. எனவே அகில ருஷ்ய மையம், சம்பந்தப்பட்ட ஒரு தொழில் பிரிவில் இருக்கும் எல்லா நிறுவனங்கள் மீதும் நேரடிக் கண்காணிப்பு மேற்கொள்ளும் உரிமையை நிச்சயமாயும் பெற்றிருக்க வேண்டும். பிராந்திய மையங்கள் வட்டார வாழ்க்கை நிலைமைகள் இத்தியாதிகளைச் சார்ந்தும், மையத்தின் பொதுவான உற்பத்தி நெறியாக்கங்கள் மற்றும் முடிவுகளுக்கு ஏற்பவும், தமது பணிகளை வரையறுத்துக் கொள்ளும்.

கமிஷனது நகலில் இருந்து காணப்படுவது போன்று நாடு முழுவதிலுமுள்ள சம்பந்தப்பட்ட தொழிலின் எல்லா நிறுவனங்கள் மீதும் நேரடியான கண்காணிப்பு உரிமையை அகில ருஷ்ய மையத்துக்குத் தர மறுப்பது பிராந்திய அராஜக-சிண்டிக்கலிசமாகும், கம்யூனிசம் அல்ல.

1918 ஜூன் 2ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கம் 392

மாஸ்கோ தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகளின் நான்காவது மாநாடு[68]

1918 ஜூன் 27—ஜூலை 2

நடப்பு நிலைமை அறிக்கை பற்றி நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதில்

ஜூன் 28

என்பதிலிருந்து

என்னைக் கேட்கிறார்கள்: ''தானியத்தைப் போன்றே அத்தியாவசியமான தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் மீது ஏன் ஏகபோகம் புகுத்தப்படவில்லை?'' இதற்கு என்னுடைய பதில்: ''சோவியத் அரசாங்கமானது இந்த நோக்கத்துடன் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுவருகிறது.'' நெசவாலைகளை, அதாவது நெசவுத் தொழிலை ஒழுங்கமைத்து இணைப்பதற்கான போக்கு இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அமைப்பின் பெரும்பாலான தலைமை உறுப்புகளில் உள்ளவர்கள் தொழிலாளர்கள் என்று நீங்கள் அறிவீர்கள். தொழில் துறையின் எல்லாக் கிளைகளையும் தேசவுடைமையாக்கிட சோவியத் அரசாங்கம் தயார் செய்து தொடங்கி வருகிறது என்று நீங்கள் அறிவீர்கள். இந்த விஷயத்தில் நம்மை எதிர்ப்படப் போகிற சிரமங்கள் பேரளவானவை என்று நீங்கள் அறிவீர்கள். இவை அனைத்தையும் ஓர் ஒழுங்கமைந்த வழிமுறையில் செய்திட மிகுந்த முயற்சி தேவைப்படும். அதிகார வர்க்கத்தினர் மீது சார்ந்து நிற்கும் அரசாங்கங்கள் இதைச் செய்கிற வழியில் நாம் இந்தப் பணியினைச் செய்ய முற்படவில்லை. அந்த வழியில் விவகாரங்களைச் சமாளிப்பது மிகவும் இலகுவானது. ஒரு நபர் 400 ரூபிள்கள் பெற்றுக் கொள்ளட்டும்; மற்றொருவர் இதைவிட அதிகமாக, ஆயிரம் ரூபிள்கள் பெறட்டும்—நம்முடைய வேலை ஆணையிடுவது, மற்றவர்கள் அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். இப்படித்தான் எல்லா முதலாளித்துவ நாடுகளும் ஆட்சி புரியப்படுகின்றன. அவை மிக உயர்ந்த சம்பளங்களில் அதி

காரிகளை நியமிக்கின்றன, முதலாளித்துவ வர்க்கத்தினர் புதல்வர்களைத்தான் நியமிக்கின்றன, இவர்களிடத்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கின்றன. சோவியத் குடியரசு இந்த முறையில் ஆட்சி செய்யப்படக் கூடாது. நெசவாலைகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பணியை நிர்வகிக்கவும் வழி நடத்தவும் கணக்கு வைக்கும் பணியைச் செய்திடவும், ஆதார அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தின் மீதும் ஏக போகத்தைப் புகுத்திடவும் அவற்றை முறையாக வினி யோகம் செய்திடவும் நம்மிடம் அதிகாரிகள் இல்லை. இந்தப் பணியைச் செய்திட நமது தொழிலாளர்களை அழைக்கிறோம். நெசவுத் தொழிலாளர் தொழிற் சங்கப் பிரதிநிதிகளை நாம் அழைத்து, ''மத்திய நெசவுத் தொழில் போர்டின் கூட்டு சபையில் நீங்கள் பெரும்பான்மையைப் பெற்றிட வேண்டும். உயர் பொருளாதார கவுன்சிலின் கூட்டுச் சபைகளில் நீங்கள் பெரும்பான்மையாக இருப்பது போல இதிலும் நீங்கள் தான் பெரும்பான்மை. தோழர்களே, தொழிலாளர்களே, இந்த மிக முக்கியமான அரசுப் பணியை நீங்களே நிறை வேற்றுங்கள். திறமையான அதிகாரிகளை நியமிப்பதைவிட இது அதிகக் கடினமானது என்று நாங்கள் அறிவோம். ஆனால் இதைச் செய்வதற்கு வேறு வழி எதுவுமில்லை என்பதையும் நாம் அறிவாம்''. தொழிலாளி வர்க்கத்தின் கரங்களில் ஆட்சி அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். எவ்விதச் சிரமங்கள் இருந்த போதிலும், முன்னணித் தொழிலாளர்கள் தங்களது சொந்த கசப்பான அனு பவத்தின் மூலம், தங்களது சொந்த முயற்சிகளால், தங்களது சொந்தக் கரங்களின் உழைப்பினால், எல்லாப் பொருட்களும் அனைத்து நெசவுச் சரக்குகளும் உழைப்பவர்களது நலன் களுக்காக எவ்வாறு வினியோகிக்கப்பட வேண்டும் என் பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். (கை யொ லி.)

எனவே, இன்றைய சந்தர்ப்பத்தில் சோவியத் அரசாங் கம் ஓர் அரசாங்க ஏகபோகத்தைக் கொண்டு வந்திடவும், விலைகளை நிர்ணயம் செய்திடவும் தன்னால் இயன்ற அளவு முயன்று வருகிறது, தொழிலாளர்கள் மூலமாக இதைச் செய்து வருகிறது, தொழிலாளர்களோடு சேர்ந்து இதைச் செய்து வருகிறது. ஒவ்வொரு நிர்வாக போர்டிலும் அவர் களுக்கு அது பெரும்பான்மையைத் தருகிறது. ஒவ்வொரு

தலைமை மையத்திலும், அது உயர் பொருளாதாரக் கவுன்சிலாகட்டும், அல்லது உலோகத் தொழிலாளர் ஒன்றிணைப்பு ஆகட்டும், அல்லது சில வாரங்களுக்குள் தேசியமயமாக்கப்பட்ட சர்க்கரை சுத்திகரிப்பு ஆலைகளின் ஒன்றிணைப்பு ஆகட்டும், இவை அனைத்திலும் தொழிலாளருக்குப் பெரும்பான்மை கொடுக்கப்படுகிறது. இது கடினமானதொரு பாதை. நான் மீண்டும் சொல்வேன், புதியதொரு நிலையினைத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் நாம் சிரமங்களைத் தவிர்க்கமுடியாது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தினால் பயிற்சி அளிக்கப்பட்டு, அதனால் அளிக்கப்படும் ஆணைகளை அடிமைத்தனமாக நிறைவேற்றவும், கைதிகளைப் போல உழைத்திடவும் பழக்கப்பட்டுப் போன தொழிலாளர்களை, நாம் தான் அரசாங்கம் என்பதை உணரச் செய்வது கடினமே. தொழில் துறையின் சொந்தக்காரர்கள் நாம் தான். தானியத்தின் உடைமையாளர்கள் நாம் தான். நாட்டின் செல்வமனைத்திற்கும் உடைமையாளர்கள் நாமே. இந்த எண்ணம் தொழிலாளி வர்க்கத்தின் உள்ளத்தில் ஆழமாக உட்புகுந்த பின்னரே, தங்களது சொந்த அனுபவத்தையும் சொந்த முயற்சியையும் கொண்டு தங்களது சக்திகளை பத்து மடங்காக உயர்த்திடும் போதே சோஷலிசப் புரட்சியின் இடர்ப்பாடுகள் அனைத்தையும் வென்று அகற்ற முடியும்.

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 465-466

சோவியத் அரசின் ஜனநாயகத் தன்மையும் சோஷலிசப் பண்பும் குறித்து

சோவியத் அரசின் ஜனநாயகத் தன்மையும் அதன் சோஷலிசப் பண்பும் கீழ்வரும் உண்மையில் காணக் கிடைக்கிறது.

மிக்குயர் அரசாங்க அதிகாரமானது சோவியத்துக்களுக்கு கொடுக்கப் பெற்றுள்ளது. சோவியத்துக்கள் உழைக்கும் மக்களின் (தொழிலாளர்கள், படையாளிகள் மற்றும் விவசாயிகளின்) பிரதிநிதிகளால் ஆனது. இதுகாறும் மூலதனத்தால் ஒடுக்கப்பட்டு வந்த மக்கள் திரளினரால் இப்பிரதிநிதிகள் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம், எந்த ஒரு நேரத்திலும் நீக்கம் செய்யப்படலாம்.

வட்டார சோவியத்துக்கள் சுயேச்சையாக ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் ஒரே கூட்டு ஒன்றியமாக ஒருங்கிணைத்துக் கொள்கின்றன. ருஷ்ய சோவியத் குடியரசு இந்த சோவியத் அரசு அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

சோவியத்துக்கள் தங்கள் கைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தையும், சட்டங்கள் அமலாக்கத்தின் மீது மேற்பார்வை அதிகாரத்தையும் மட்டுமல்லாமல், சோவியத்துக்களது எல்லா உறுப்பினர்கள் மூலமாகச் சட்டங்களை நேரடியாக அமல் நடத்தும் அதிகாரத்தையும் ஒருமுனைப்படுத்தியுள்ளன. உழைக்கும் மக்கள் தொகை அனைத்திடமும் சட்டமியற்றும் பணிகளையும் அரசு நிர்வாகத்தையும் புரிவதற்கான பொறுப்பைப் படிப்படியாக மாற்றி வழங்கும் நோக்கமுடன் இது செய்யப்படுகிறது.

மேலும் கீழ் வருவனவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்வோம்.

ஏதாவதொரு குறிப்பிட்ட தொழிற்சாலை அல்லது தொழிலில் அவற்றின் குறிப்பிட்ட உற்பத்தி மீதான தொழிலாளரின் உடைமை உரிமைகள் சம்பந்தமாகவோ, அல்லது அரசு அதிகார பீடத்தின் உத்தரவுகளைப் பலவீனப்படுத்தவோ அல்லது தடங்கல் செய்யவோவான உரிமைகள் சம்பந்தமாகவோ நேரடியாக அல்லது மறைமுகமாக சட்டம் இயற்றுவது சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அப்பட்டமாக திரித்துப் புரட்டுவதாகும், சோஷலிசத்தை முழுக்க நிராகரிப்பதும் ஆகும்....*

1918 முதற் பாதியில்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கம் 481

---

* இங்கு கையெழுத்துப் பிரதியின் வாசகம் நின்றுவிட்டது.—ப-ர்.

தொழிலாளர், விவசாயிகள், படையாளிகள் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளது சோவியத்துகளின் 5வது அகில ருஷ்யக் காங்கிரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கை குறித்த விவாதத்துக்குப் பதில்[69]

ஜூலை 5, 1918

என்பதிலிருந்து

போல்ஷிவிக்குகள் விட்டுக் கொடுக்கிறார்கள் என்பதாகவும், அவர்களது அறிக்கைகளில் நடைமுறை மதிப்புடையது ஒன்றும் இல்லையென்றும் இங்கே சொல்லப்பட்ட போது, இங்கே ஒரு சோஷலிஸ்டு-புரட்சியாளர் ஒருவர் கூறிய சொற்களை நான் நினைவுபடுத்திக் கொண்டேன். அவர் ஒரு மேக்ஸிமலிஸ்ட் என்று நினைக்கிறேன். தலைமைப் பொருளாதார கவுன்சில் உற்பத்தியின் மீது கண்காணிப்பு செய்வதிலிருந்து அதன் நிர்வாகப் பொறுப்பிற்கு மாறுவதாக அவர் கூறினார். அந்தக் கூற்று, நடைமுறை மதிப்புடையதில்லையா? தங்களது சொந்த முயற்சிகளாலும், தங்களது தொழிற்சங்கங்கள் மூலமாகவும் எஜமானர்களிடமிருந்து நிறுவனங்களை நிர்வாகிக்கும் விவகாரத்தைக் கற்றுக் கொள்ளத் துவங்கியுள்ள தொழிலாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? நிர்வாகம் நடத்தப் பயில்வது இலகுவானது என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலில் இருக்கும் நாங்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான தகராறுகளையும் நிகழ்ச்சிகளையும் அறுதி செய்ய வேண்டியிருக்கிறது. அவை, தொழிலாளி ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொண்டு விட்டார் என்பதைக் காட்டுகின்றன. மேலும் தொழிலாளி படித்துத் தெரிந்து கொள்ளத் துவங்கியுள்ளார் என்றும் நாம் முடிவு செய்ய வேண்டும். உள்ளபடியே மெள்ள மெள்ளப் படிக்கத் துவங்கியுள்ளார்கள். அதுவும் பிழைகளுடன் கூடியதாக இருக்கிறது. ஆனால் அழகிய சொற்றொடர்களைச் சொல்வது ஒரு விஷயம். கடந்து செல்லும்

ஒவ்வொரு மாதத்திலும் தொழிலாளர் புதிய நிலையைச் சமாளிக்கும் ஆற்றல் பெறத் தலைப்பட்டு விட்டார் என்பதையும், தன்னுடைய பயங்கொள்ளித் தன்மையை எவ்வாறு அவர் உதறி விடுகிறார் என்பதையும், தாம் ஓர் ஆட்சியாளராவதை உணருகிறார் என்பதையும் காணுவது வேறு விஷயம். ஒரு விவசாய கம்யூனில் உழவர் ஒருவர் நடந்து கொள்வதைப் போலவே சரியாகவோ பிழையாகவோ இவரும் நடந்து கொள்கிறார். தொழிலாளர் தொழில் துறையை நடத்திடப் பயிற்சி பெற வேண்டியிருந்தது என்பதனைக் காலம் காட்டிவிட்டது. மற்றவை அனைத்தும் வெறும் பேச்சு. அதற்கு ஒரு செப்புக் காசும் மதிப்பில்லை. சோவியத் ஆட்சி ஏற்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு கண்காணிப்பு என்பது காலங்கடந்து விட்ட ஒன்று என்று நாம் கண்டுபிடித்தோம் என்றால் அது மிகப் பெரிய முன்னேற்றமான படியாகும்.

நாம் வெறுமனே காலத்தை ஓட்டுகிறோம் மற்றும் பின் வாங்குகிறோம் என்பதாக இங்கே கூக்குரலிடுகிறார்கள். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. குலாக்குகளை வேண்டுமானால் நீங்கள் இதைச் சொல்லி நம்ப வைக்கலாம். ஆனால் சாதாரணத் தொழிலாளியை நம்ப வைக்க முடியாது. நீங்கள் அனுப்பியவர்களை விட நல்லவர்களை நாம் வைத்துக் கொள்வோம், நீங்கள் படித்துத் தெரிந்து கொள்வதை விட அவர்கள் இன்னும் சிறப்பாகப் படித்துத் தெரிந்து கொள்ளச் செய்யுங்கள் என்று நாம் சொல்வதின் பொருள் என்ன என்று அவர் அறிவார். எனவே சலுகை முறையைப் பற்றிக் கூக்குரல் இங்கே எழும்பும்போது, ஏதாவது ஒரு தொழிலாளியை அல்லது விவசாயியை, நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என்று கேட்டோம்: ஜெர்மானியர் நம்மீது சுமத்திய கடன்களைச் சலுகை முறையில் செலுத்துவோமா அல்லது போரிடுவோமா? பிரேஸ்த் உடன்படிக்கையை[70] நாம் கையெழுத்திட்ட போது, ஏகாதிபத்தியவாதிகளைப் பற்றி நாம் சொன்னோம். இவர்கள் சர்வதேச சோஷலிசப் புரட்சியினால் தோற்கடிக்கப்பட்டாலொழிய, நாம் பின்வாங்குவதைத் தவிர வேறெந்த வழியிலும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்று கூறினோம். அது விரசமானது ஆனால் மெய்நடப்பாக நிலவுவது, அதை அப்படியே மக்களிடம் கூறிடுவது நல்லது—இன்று வரை நாம் ஒரு சேனையைத் திரட்டிவிட

வில்லை, இதற்கு ஒரு சில ஆண்டுகள் மட்டுமே நமக்கு வேண்டும். பல பத்தாண்டுகள் இதற்குத் தேவைப்படாது. ஒரே ஒரு நிபந்தனை. ரொட்டி விநியோகத்திற்கு முறையான அமைப்பு ஒன்றினை நாம் புகுத்திட வேண்டும். அப்படியானால்தான் சேனைக்கு வேண்டிய தானிய கையிருப்புக் கிடைக்கும். இவைகளைச் சேகரித்து பத்திரப்படுத்த வேண்டும். எந்த ஓர் உயெஸ்தில் அல்லது குபேர்னியாவில் இடது சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் இதைச் சாதித்துள்ளார்கள்? இது மாதிரி அவர்கள் எதையும் செய்யவில்லை. நாம் சொல்கிறோம்: இதைச் செய்து முடிக்கும் வரையில் உங்களது கூக்குரல் எல்லாம் வெறும் வெற்றுப் பேச்சு என்று! தொழிலாளர் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் ஒரு படியை நாம் எடுக்கும்போது நாம் ஒரு படி முன்னேறிச் செல்லுகிறோம். இங்கே என்னுடைய சொற்களைத் தவறாக மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். நான் என்ன சொன்னேன் என்றால், ஒரு கட்சியின் நேர்மையான உறுப்பினர்கள் இவ்வளவு கீழ் இறங்கிப் பேசும்படியாகுமானால் அது ஒரு மோசமான கட்சி என்பதாகக் கூறினேன்.

நம்முடைய உணவு கமிசாரகத்துக்கு நூறு கோடி நாம் ஒதுக்கீடு செய்துள்ளோம்—அது ஒரு முன்னேற்றப் படி இல்லையா? இன்னும் பலவற்றை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது. அதைச் செய்து முடித்துவிட உங்களுக்கு விருப்பம் இருந்தால் மட்டுமே அது முடியும். ஆனால் யார் மூலமாக என்பது எனக்குத் தெரியாது. பழைய அதிகாரிகள் மூலமாக, அல்லவே? சோவியத்துக்களில் உள்ள நமது தொழிலாளர்களும் விவசாயிகளும் இதைச் செய்திடப் பழகிக் கொண்டிருக்கிறார்கள் (கையொலி) ஜவுளிச் சரக்குகளது கொள்முதல்களும், அதற்கென்ற ஒதுக்கீடுகளும் தங்களது செயல் விளைவினைக் காட்டுகின்றன. ஜவுளிச் சரக்குகளை யார் மூலம் வாங்கிடுவது, அதன் மீது எவ்வாறு கண்காணிப்புச் செய்வது, சாத்தியமான அளவு விரைவாக அவைகளை விநியோகித்திடுவது எவ்வாறு என்று மக்கள் கமிசாரவையில் நாங்கள் நூற்றுக்கணக்கான தடவைகள் விவாதித்தோம். நமக்குத் தெரிந்தவரையில், வாரங்கள் கடந்து செல்லச்செல்ல, இலாப வேட்டையை எதிர்த்திடவும், கொள்ளை இலாபக்காரர்களைப் பிடித்திடவும் நடவடிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாதம் கடக்கும் போதும் தொழிலாளர்கள் இந்தப் பணியை மிக நன்கு கற்று தேர்ச்சி பெற்று வருகிறார்கள்—நமது இந்த வெற்றியை எவரும் இல்லையென்று மறுக்க முடியாது. நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம், அசைவற்று இருக்கவில்லை. ஜூன் 28ந் தேதி அன்று நாம் தேசவுடைமையாக்குதலை[71] நிறைவேற்றினோம். அது ஒருக்கால் பல கோடி பெறுமானமுள்ளது. இருப்பினும் நீங்கள் எதிர்த்துக் கொண்டே இருக்கிறீர்கள், முதலாளித்துவ அறிவாளிகளது பேச்சைத் திருப்பிச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். ஒரு சில மாதங்களில் செய்து முடித்து விடக் கூடியதோர் வேலையல்ல சோஷலிசம். நாம் அசைவற்று இருக்கவில்லை. நாம் சோஷலிசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம். பிரேஸ்த் உடன்படிக்கைக்குப் பிறகு நாம் அதை நெருங்கி வந்து விட்டோம்.

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 515-517

குபேர்னிய சோவியத்துகளின் தலைவர்களின் காங்கிரசில் உரை
ஜூலை 30, 1918
என்பதிலிருந்து

செய்தித்தாள் அறிக்கை

தோழர்களே, உங்கள் வேலை நிர்வாக சம்பந்தமான ஒன்று, அது மக்கள் கமிசாரவையின் விவகாரங்களில் முதன்மையான பங்கு வகிப்பது. இயற்கையாகவே அனேக இடர்ப்பாடுகள் உங்களை முன்னோக்கியுள்ளன. கடைசியாக மக்கள் தாங்களே நிர்வாக வேலைகளைச் சமாளிக்கத் தலைப்படுகின்றனர் என்பது பெரும்பான்மையான குபேர்னிய நிர்வாகக் கமிட்டிகளில் தெளிவாகிறது. நிச்சயமாக அங்கே கஷ்டங்களுக்கு ஆட்பட வேண்டியிருக்கிறது. நமது அலுவலர் தேவைக்காக நாம் தொழிலாளர்களை மிகக் குறைவாக எடுப்பதே நமது மிகப் பெருங் குறைபாடுகளில் ஒன்றாகும். ஆனால் புதிய நிர்வாக அமைப்பிற்குள் பழைய பொறியமைவைத் தகவமைக்கும் எண்ணம் நமக்கு என்றுமே இல்லை. பொறியமைவை ஒழிப்பதன் மூலம் மிகுந்த சிரமத்துடன் எல்லாமே புதிதாகப் படைக்க வேண்டியுள்ளது என்பதற்காக நாம் வருத்தப்படவில்லை. தொழிலாளர்களும் விவசாயிகளும் எதிர்பார்த்த அளவுக்கு மேல் அதிக ஆக்கச் சார்பான திறமைகளைப் பெற்றிருக்கின்றனர். பழைய நிர்வாகப் பொறியமைவை அறவே துடைத்தழித்துவிட்டதுதான் புரட்சிக்குப் பெருமை தருகிறது. ஆனால் அதே நேரத்தில் மக்களது தலையாய குறைபாடு காரியங்களைத் தம் கரங்களில் எடுத்துக் கொள்வதில் அவர்களுக்குள்ள கோழைத்தனமும் விருப்பமின்மையும் தான் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

நமது குபேர்னிய சோவியத்துக்களில் சில திறமை குறைந்தவையாக இருந்தன, ஆனால் தற்போது வேலையானது உறுதியாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. வேலையானது எவ்வித தப்பபிப்ராயங்களும் முரண்பாடுகளுமின்றி முன்னேற்றமடைந்து வருவதாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. எட்டு மாதங்களே கழிந்த போதிலும் தனது கைகளில் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டுள்ள புதிய வர்க்கம் தனது பணியைத் தாக்குப் பிடிக்கும் ஆற்றல் உடையது என்பதனை ருஷ்யப் புரட்சியானது நிரூபித்திருக்கிறது. அது குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டிருந்த போதிலும் நிர்வாக பொறியமைவு ஒவ்வொரு நாளும் மிகச் சீராகச் செயல்பட்டு வருகிறது. நமது பொறியமைவு இன்னும் திட்டவட்டமான பலன்களைப் புலப்படுத்தாத ஒரு நிலையிலேயே உள்ளது; இது எதிரிகளால் அடிக்கடி பேசப்பட்டு வரும் மெய்நடப்பாகும். இருப்பினும், முன்னமேயே பெருமளவு வேலை செய்யப்பட்டு விட்டது. நிலங்களையும் தொழிற்சாலைகளையும் உழைக்கும் மக்களுக்கு மாற்றி வழங்குவதும், பொருள்கள் பரிமாற்றமும் உணவு வழங்கீடு அமைப்பும் நம்ப முடியாத இடர்களுக்கு மத்தியில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன. சோஷலிச அரசைக் கட்டியமைக்கவும், நிர்வாகம் செய்யவுமான சுதந்திரமான வேலைக்கு உழைக்கும் மக்களை ஊக்குவிக்க வேண்டும். பழைய சுரண்டும் வர்க்கம் முடித்து ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை நடைமுறைதான் அவர்கட்குக் கற்பிக்கும்.

நமது தலையாய, மிக அவசரமான கடமை நிர்வாகம், ஸ்தாபனம், கண்காணிப்பு ஆகியவைதான். இது ஒரு நன்றி கருதாத, எளிதில் காணமுடியாத வேலை தான்; ஆனால் இந்த வேலையைச் செய்யும் போதுதான் தொழிலாளர்கள் மற்றும் உழவர்களது செயலாட்சி, நிர்வாகத் திறமைகள் மிக மிகப்பயனுள்ளதாக மேலும் மேலும் வளர்ச்சியடையும்.

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 20-2

அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம்[72]

என்பதிலிருந்து

ஊழல்பிடித்த முதலாளித்துவப் பத்திரிகைகள் எமது புரட்சி செய்கிற ஒவ்வொரு தவறையும் பற்றி உலக முழுதிற்கும் ஓலமிடட்டும். எமது தவறுகளைக் கண்டு நாங்கள் அஞ்சவில்லை. புரட்சி தொடங்கி விட்டது என்பதால் மக்கள் முனிவர்களாகி விடவில்லை. பல நூற்றுண்டுகளாக ஒடுக்கப்பட்டு, மிதித்துத் துவைக்கப்பட்டு, வறுமை, கொடுமை, அறியாமையினுல் பலவந்தமாகப் பீடிக்கப்பட்டிருந்த உழைப்பாளி வர்க்கங்கள் ஒரு புரட்சியை நடத்தும் போது தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. மேலும் நான் முன்பே ஒரு முறை சுட்டிக்காட்டியிருந்தது போன்று முதலாளித்துவ சமுதாயம் என்ற பிணத்தை ஒரு சவப்பெட்டியில் ஆணியறைந்து புதைத்துவிட முடியாது.[73] முதலாளித்துவப் பிணம் அழுகிப் போய் நம்மிடையே சிதைவுற்று, காற்றைத் தூய்மை கெடுத்தும், எமது வாழ்க்கையில் நச்சூட்டியும் வருகிறது; பழமையானதும் அழிந்து வருவதும் அழுகிப் போனதுமான ஆயிரக் கணக்கான இழைகள் மற்றும் தளைகளில் புதியதும் பசுமையானதும் இளமையானதும் வீரியம் மிக்கதும் ஆனவற்றைச் சிக்குறச் செய்கிறது.

எதைப் பற்றி முதலாளி வர்க்கமும் அதன் அடிவருடிகளும் (எமது சொந்த வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகள் உட்பட) உலகம் முழுதுக்கும் கூக்குரலிடுகிருர்களோ, நாங்கள் புரியும் ஒவ்வொரு நூறு தவறுகளுக்கும் 10,000 மாபெரும் வீரஞ்செறிந்த செயல்கள் புரியப்படுகின்றன. அவை மேலும் மகத்தானவை மேலும் வீரஞ்செறிந்தவை காரணம் அவை ஒரு தொழில்

வட்டாரம் அல்லது தொலைவிலுள்ள கிராமத்தில் அன்றுட வாழ்க்கையினிடையே எளிமையாயும் ஒதுக்கமாயும் நடைபெறுபவை. தமது வெற்றிகளைப் பற்றி உலக முழுதிற்கும் கூக்குரலிட்டுக் கூறும் வழக்கமில்லாத (அதற்கான வாய்ப்பில்லாத) மக்களால் புரியப்பட்டவை.

இதற்கு நேர்மாருன நிலைமை உண்மையில் ஏற்படினும் சரி—அவ்வாறு கருதுவது தவறு என்பதை நான் அறிவேன்—நாங்கள் புரிந்த 100 சரியான செயல்களுக்கு 10,000 தவறுகளைச் செய்தாலுங்கூட, அப்படியிருந்தாலுங்கூட எமது புரட்சி மகத்தானதாயும் வெல்லற்கரியதாகவும் இருக்க வேண்டும், உலக வரலாற்றின் பார்வையிலும் அவ்வாறே நிச்சயமாக இருக்கும்; காரணம் முதல் தடவையாகச் சிறுபான்மையோரல்ல, செல்வந்தர் மட்டுமல்ல, கல்வி கற்றவர்கள் மட்டுமல்ல, ஆனல் உண்மையான மக்கள் திரளினர், விரிவான பெரும்பான்மையான உழைப்பாளி மக்கள் தாமே புதிய வாழ்க்கையைக் கட்டி வருகின்றனர், தமது சொந்த அனுபவம் மூலம் சோஷலிசக் கட்டுமானத்தின் மிகவும் கடினமான பிரச்சினைகளைத் தீர்த்து வருகிருர்கள்.

இத்தகைய பணியின் போக்கில் இழைக்கப்படும் ஒவ்வொரு தவறும் தமது முழு வாழ்வையும் மறு அமைப்புச் செய்து கொள்வதிலான பல லட்சக் கணக்கான சாமான்யத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் இந்த மிகவும் கடமையுணர்வும் முனைப்பார்வமும் கொண்டதான பணியின் போக்கில் இத்தகைய ஒவ்வொரு தவறும் சுரண்டும் சிறுபான்மையினர் அடையும் ''குறையில்லாத'' ஆயிரம் லட்சம் வெற்றிகளைக் காட்டிலும்—அவர்கள் உழைக்கும் மக்களை மோசடி செய்து ஏமாற்றுவதில் அடையும் வெற்றிகளை விடவும்—சால மதிப்புடையதாகும். ஏனெனில் இத்தகைய தவறுகள் மூலமே தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒரு புது வாழ்வை நிர்மாணிக்கக் கற்றுக் கொள்வார்கள்; முதலாளிகள் இல்லாமல் வாழக் கற்றுக் கொள்வார்கள்; இந்த வழியில் மட்டுமே அவர்கள்—ஆயிரக் கணக்கான தடைகளின் ஊடே—வெற்றிகரமான சோஷலிசத்தை நோக்கித் தமக்கென ஒரு பாதையை வகுத்துக் கொள்வார்கள்.

அவர்களது புரட்சிகரப் பணிகளின் போக்கில் எமது விவசாயிகளால் தவறுகள் செய்யப்படுகின்றன, ஆனல் இவர்கள்

ஒரே அடியாக 1917 அக்டோபர் 25-26 (பழைய பாணி) ஒரே இரவில் நிலத்தில் தனியுடைமையை முற்றாக ஒழித்துவிட்டார்கள், இப்போது மாதத்திற்கு மாதம் மிகப் பெரிய இடர்ப்பாடுகளை வென்று சமாளித்து, தமது தவறுகளைத் தாமே திருத்திக் கொண்டு, பொருளாதார வாழ்வில் புதிய நிலைமைகளை அமைத்தல், குலாக்குகளை எதிர்த்துப் போராடுதல், உழைக்கும் மக்களுக்கு (செல்வந்தருக்கு அல்ல) நிலம் வழங்குதல், கம்யூனிஸ்டு பெருவீத விவசாயத்திற்கு மாறிச் செல்லுதல் போன்ற மிகவும் கடினமான கடமைகளுக்குப் பயன் தரும் வழியில் தீர்வு காண்கிறார்கள்.

அவர்களது புரட்சிகரப் பணிகளின் போக்கில் எமது தொழிலாளர்களால் தவறுகள் செய்யப்படுகின்றன, ஆனால் அவர்கள் ஏற்கெனவே சில மாதங்களுக்குப் பிறகு ஏறத்தாழ எல்லா ஆகப்பெரிய ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் தேசவுடைமையாக்கிவிட்டார்கள், கடினமான அன்றாட வேலை மூலம் தொழில் துறையின் முழுக் கிளைகளையும் நிர்வாகம் செய்யும் புதிய கடமையைக் கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்; தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களைச் செயல்பட வைத்திருக்கிறார்கள்; சோம்பல், குட்டி முதலாளித்துவ மனப்பாங்கு, தன்னலம் ஆகியவற்றின் வலிமை மிக்க எதிர்ப்பை வென்று அகற்றி, புதிய சமூக உறவுகள், புதிய உழைப்புக் கட்டுப்பாடு, உறுப்பினர்கள் மீது தொழிலாளர் தொழிற்சங்கங்களின் புதிய செல்வாக்கு ஆகியவற்றுக்கான அடித்தளத்தைச் செங்கலுக்கு மேல் செங்கலாகக் கட்டி வருகிறார்கள்.

1905ஆம் ஆண்டிலேயே மக்களின் வலிமை மிகுந்த எழுச்சியால் படைக்கப்பெற்ற எமது சோவியத்துகள் அவற்றின் புரட்சிகரப் பணிகளின் போக்கில் தவறுகள் செய்கின்றன. தொழிலாளர் விவசாயிகளின் சோவியத்துகள் ஒரு புது மாதிரி அரசாகும், ஒரு புதிய உயர் மாதிரி ஜனநாயகம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம், முதலாளி வர்க்கம் இல்லாமலும் முதலாளி வர்க்கத்திற்கு எதிராகவும் அரசை நிர்வாகம் செய்யும் ஒரு சாதனம். முதல் தடவையாக இங்கு ஜனநாயகம் மக்கட்திரளுக்கு, உழைக்கும் மக்களுக்குச் சேவை செய்கிறது. இன்னும் ஆக ஜனநாயகமானது என்று கருதப்படும் எல்லா முதலாளித்துவக் குடியரசுகளிலும் கூட இருப்

பது போன்று செல்வந்தருக்கான ஜனநாயகம் என்ற நிலை இங்கு போய்விட்டது. முதல் தடவையாக பத்துக் கோடிப் பேர் ஈடுபடுத்தப்படும் அளவிற்குப் பாட்டாளி வர்க்க மற்றும் அரைப்பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செயலாக்கும் பிரச்சினையை மக்கள் எடுத்துச் சமாளிக்க முயல்கிறார்கள்—இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணு விட்டால் சோஷலிசம் குறித்துப் பேசவே முடியாது.

புலமைப் பகட்டர்களும் அல்லது முதலாளித்துவ-ஜனநாயகம் அல்லது நாடாளுமன்றத் தப்பெண்ணங்கள் திருத்த முடியாத அளவுக்குத் திணிக்கப்பட்ட மனங்களைக் கொண்ட நபர்களும் எமது சோவியத்துகளைப் பற்றியும், உதாரணமாக நேரடித் தேர்தல் இல்லாதது பற்றியும் குழம்பிப் போய் தலையசைத்து மறுப்பைத் தெரிவிக்கட்டும். இந்தப் பேர்வழிகள் 1914—1918ஆம் ஆண்டுகளின் மாபெரும் எழுச்சிகளின் காலகட்டத்திலிருந்து எதையும் மறக்கவில்லை, எதையும் கற்றுக்கொள்ளவில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உழைக்கும் மக்களுக்கான புதிய ஜனநாயகத்துடன் இணைப்பது—உள்நாட்டுப் போரை அரசியலில் மக்கள் ஆகவிரிவான முறையில் பங்குபற்றுவதோடு இணைப்பது—இத்தகைய இணைப்பை ஒரேயடியாகக் கொண்டுவர முடியாது; மேலும் இது நைந்துபோன மாமூல் நாடாளுமன்ற ஜனநாயகத்தோடு பொருந்துவதும் அல்ல. ஒரு புதிய உலகத்தின், சோஷலிச உலகத்தின் பொதுத் தோற்றம் சோவியத் குடியரசின் உருவில் எம்முன் எழுந்து வருகிறது. இந்த உலகம் தயார் நிலையில் இருந்து உருவான ஒன்றல்ல, ஜூபிடரின் தலையிலிருந்து உதித்தெழுந்த மினர்வா போல எழுவதல்ல என்பதில் வியப்புக்கு இடமில்லை.

பழைய முதலாளித்துவ-ஜனநாயக அரசியல் அமைப்புச் சட்டங்கள் சம்பிரதாயமான சமத்துவம், கூட்டம் கூடும் உரிமை பற்றிச் சொல்வன்மையுடன் அளந்தன; ஆனால் எமது பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டம் சம்பிரதாய சமத்துவம் என்ற போலித்தனத்தை அகற்றி எறிந்துவிட்டது. முதலாளித்துவக் குடியரசுவாதிகள் அரசு பீடங்களைக் கவிழ்த்த பொழுது அவர்கள் முடியரசுவாதிகளுக்கும் குடியரசுவாதிகளுக்கும் இடையிலான சம்பிரதாய சமத்துவம் பற்றிக் கவலைப்படவில்லை,

முதலாளித்துவ வர்க்கத்தை ஒழித்துக் கட்டும் விஷயத்தில் துரோகிகள் அல்லது முட்டாள்கள் மட்டுமே முதலாளி வர்க்கத்திற்கு சம்பிரதாய சமத்துவம் வேண்டும் என்று கோர முடியும். சிறந்த கட்டடங்கள் எல்லாம் முதலாளித்துவ வர்க்கத்திற்குச் சொந்தமாக இருக்கும் பொழுது தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்குக் ''கூட்டம் கூடும் சுதந்திரம்'' என்பது ஒரு காசின் மதிப்புக் கூடப் பெறுது. எமது சோவியத்துகள் செல்வந்தர்களிடமிருந்து நகரத்திலும் கிராமத்திலும் இருந்த சிறந்த கட்டடங்கள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவை அனைத்தையும் தொழிலாளர், விவசாயிகளுக்கு அவர்களது சங்கங்களுக்கும் கூட்டங்களுக்குமாக உடைமை மாற்றியளித்துள்ளன. இது உழைக்கும் மக்களுக்கான எமது கூட்டம் கூடும் சுதந்திரமாகும்! இதுவே எமது சோவியத், எமது சோஷலிச அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொருளும் உள்ளடக்கமுமாகும்!

இதனுல்தான் நாங்கள் அனைவரும் இன்னும் என்ன இன்னல்கள் எதிர்காலத்தில் உற்றபோதிலும் எமது சோவியத் குடியரசு வெல்லற்கரியது என்பதில் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறேம்.

அது வெல்லற்கரியது, காரணம் வெறிபிடித்த ஏகாதிபத்தியவாதிகளின் ஒவ்வொரு தாக்குதலும், சர்வதேச முதலாளி வர்க்கம் எம்மீது சுமத்தும் ஒவ்வொரு தோல்வியும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேலும் மேலும் அதிகமான பகுதிகளைப் போராட்டத்தில் எழுச்சியுறும்படி செய்கின்றன, அளப்பரிய தியாகம் செய்து அவர்கள் படிப்பினை பெற உதவுகின்றன, அவர்களை உருக்குப் போல உறுதிப்படுத்தி மிகவும் பரந்த அளவில் புதிய செயல்வீரத்தைத் தோற்றுவிக்கின்றன.

அமெரிக்கத் தொழிலாளர் தோழர்களே, உங்களிடமிருந்து உதவி விரைவில் வராது இருக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம், ஏனெனில் புரட்சி, வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு வேகத்தில் (வேறு வகையில் இருக்க முடியாது) வளர்ச்சியடைந்து வருகிறது. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அண்மைக் காலத்தில் மிகவும் விரைவாக முதிர்ச்சியடைந்து வந்த பொழுதிலும், அது அடுத்த சில வாரங்களுக்குள் வெடிக்

காமற் போகலாம். நாங்கள் உலகப் புரட்சியின் தவிர்க்க வொண்ணுத் தன்மையில் நம்பிக்கை வைத்திருக்கிறேம், ஆனால் இந்தப் புரட்சி தவிர்க்கவொண்ணுத வகையில் ஒரு நிர்ணயமான குறுகிய கால அளவில் வரும் என்று நம்பும் அளவுக்கு நாங்கள் அத்தகைய முட்டாள்கள் என்று இதனுல அர்த்தமல்ல. எமது நாட்டில் 1905 மற்றும் 1917ஆம் ஆண்டு களில் இரண்டு மாபெரும் புரட்சிகளை நாங்கள் கண்டிருக் கிறேம், புரட்சிகள் உத்தரவு போடப்பட்டோ உடன்படிக்கை மூலமோ நடப்பனவல்ல என்பதை நாங்கள் அறிவோம். சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் எமது ருஷ்யப் படைப் பிரிவை முன்னணிக்குக் கொண்டு வந்தது சூழ்நிலையேயாகும், அதற்குக் காரணம் ருஷ்யாவின் விதிவிலக்கான பின்தங்கிய தன்மை என்பதையும், எமது திறன்கள் காரணமல்ல என்ப தையும், உலகப் புரட்சி வெடிப்பதற்கு முன்னுல் பல தனிப் புரட்சிகள் தோற்கடிக்கப்படலாம் என்பதையும் நாங்கள் அறிவோம்.

இருப்பினும் நாங்கள் வெல்லற்கரியவர்கள் என்பதை உறுதியாக நம்புகிறேம், காரணம் மனித குலத்தின் மன வெழுச்சியை ஏகாதிபத்தியப் படுகொலையால் தகர்க்க முடி யாது. மனித குலம் அதை முறியடிக்கும். ஏகாதிபத்திய யுத்தத்தின் துன்பத் தளைகளைத் தகர்த்த முதல் நாடு எமது நாடாகும். இந்தத் தளைகளை உடைப்பதற்கான போராட் டத்தில் நாங்கள் மிகப் பெரும் துயரார்ந்த உயிர்ச்சேதங்களை அடைய நேர்ந்தது. எனினும் அவற்றை நாங்கள் உடைத்தோம். ஏகாதிபத்திய சார்புத்தன்மையிலிருந்து நாங்கள் சுதந்திர மாகியுள்ளோம், நாங்கள் உலகம் முழுவதும் காணும்படி ஏகாதிபத்தியத்தைப் பூரணமாக அழித்தொழிக்கும் போராட் டத்தின் பதாகையினை உயர்த்தியுள்ளோம்.

நாங்கள் முற்றுகையிடப்பட்ட கோட்டையினுள் இருப் பதுபோலத் தற்போது உள்ளோம், உலக சோஷலிசப் புரட்சி யின் இதர படைப்பிரிவுகள் எமக்கு உதவிக்கு வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறேம். இந்தப் படைப்பிரிவுகள் இருக் கின்றன, அவை எம்முடையவற்றைக் காட்டிலும் எண்ணிக்கை யில் அதிகமானவை, ஏகாதிபத்தியத்தின் அட்டூழியங்கள் எந்தளவு நீடித்துத் தொடர்கின்றனவோ, அந்தளவுக்கு அப் படைப்பிரிவுகள் முதிர்ச்சியுற்று, வளர்ந்து மேலும் அதிக

வலுவடைந்து வருகின்றன. தொழிலாளர்கள் தமது சமூகத்-துரோகிகளான கோம்பர்ஸ்கள், ஹெண்டர்சன்கள், ரெனொடேல்கள், ஷெய்டெமன்கள் மற்றும் ரென்னர்களிடமிருந்து விலகிக் கொண்டு வருகிறார்கள். தொழிலாளர்கள் மெதுவாக ஆனால் உறுதியாக கம்யூனிஸ்டு, போல்ஷிவிக் போர்த்தந்திரங்களைப் பொருத்தமாகத் தழுவிப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கி அணிவகுத்து முன்செல்கிறார்கள்; அது மட்டுமே அழிந்து வரும் கலாசாரத்தை, அழிந்து வரும் மனித குலத்தைக் காப்பாற்றும் ஆற்றலுடையதாகும்.

சுருங்கக் கூறின் நாங்கள் வெல்லற்கரியவர்கள், காரணம் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெல்லற்கரியது.

1918 ஆகஸ்ட் 20

நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 60-64

தொழிலாளர்கள், விவசாயிகள், கஸாக்குகள் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் ஆறுவது சிறப்பு அகில ருஷ்யக் காங்கிரசில் புரட்சியின் ஆண்டு விழாவைப் பற்றி நிகழ்த்திய உரை[74]

நவம்பர் 6, 1918

என்பதிலிருந்து

எனவே, தோழர்களே, கடந்த ஓராண்டில் என்ன பெரிய மாற்றங்களை நாம் செய்துள்ளோம் என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டால், கீழ்வருமாறு நாம் சொல்லிக் கொள்ள லாம்: தொழிலாளி வர்க்கத்தின் முதல் நடவடிக்கையாகிய தொழிலாளர்களது கண்காணிப்பிலிருந்து, நாட்டின் ஆதார வளங்கள் அனைத்தையும் செயலாட்சி செய்யும் நிலையிலிருந்து இப்போது நாம் தொழில்துறையில் தொழிலாளர் நிர்வாகப் பொறுப்பினை உருவாக்கும் தலைவாயிலில் இருக்கிறோம்; நில உடைமையாளர்களுக்கு எதிரான விவசாயிகளின் போராட்டமான, ஒரு தேசிய முதலாளித்துவ-ஜனநாயகத் தன்மையுள்ள போராட்டமான, நிலத்திற்கான விவசாயி களின் பொதுவான போராட்டத்திலிருந்து நாட்டுப்புறத்தில் உள்ள பாட்டாளி வர்க்க மற்றும் அரைப் பாட்டாளி வர்க்க சக்திகள் தனியாகப் பிரிந்து நிற்கும் ஒரு கட்டத்தை எய்தி யுள்ளோம்; உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்கள் மற்றோரிடம் இருந்து தனியாகப் பிரிந்து நின்று புதியதோர் வாழ்க்கையினைக் கட்டிடத் துவங்கியுள்ளார்கள்; மிகவும் ஒடுக்கப்பட்ட நாட்டுப்புற மக்கள் தமது சொந்த கிராமப் புற குலாக்கு முதலாளித்துவ வர்க்கமும் உள்ளிட்ட முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துக் கடுமையாக இறுதி வரைப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு மேலும், சோவியத் அமைப்பின் முதல் படிகளி லிருந்து இப்போது நாம் ஒரு கட்டத்தை எய்தியுள்ளோம். இந்தக் காங்கிரசைத் திறந்து வைத்த தோழர் ஸ்வெர்த்

லோவ் நியாயமாகவே குறிப்பிட்ட மாதிரி இன்று ருஷ்யாவில் எவ்வளவோ தொலைவில் இருக்கும் பகுதிகள் உட்பட சோவியத் அதிகாரப் பலம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளாத ஓரிடம் கூடக் கிடையாது, சோவியத் அரசியல் சட்டத்தின் ஒருங்கிணைந்ததோர் பகுதி ஆகாத இடம் ஏதுமில்லை. இந்த அரசியல் சட்டம் உழைக்கும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தில் பெற்ற நீண்ட அனுபவத்தினை அடிப்படையாக்கி உருவானதாகும்.

கடந்த நான்கு ஆண்டுக்கால போரின் போது முழுவதும் பாதுகாப்பற்றவர்களாக இருந்ததற்குப் பதில் இப்போது நம்மிடம் ஒரு வலிமை மிக்க செஞ்சேனை இருக்கிறது. இந்த நாலாண்டுப் போர் ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினர் மத்தியில் வெறுப்பை மட்டுமல்ல,பகைமையையும் கொண்டுவந்தது, அவர்களை மிகவும் பலவீனப்படுத்தி சோர்ந்து ஒடுங்க வைத்து விட்டது, ஜெர்மானிய மற்றும் ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களுக்கு எதிராக நாம் பாதுகாப்பற்றவர்களாக இருந்த மிகவும் இடர்ப்பாடான கடுமை வாய்ந்த கட்டத்திற்குள் புரட்சியைத் தள்ளிவிட்டது. இறுதியாக, மற்றும் எல்லாவற்றிலும் வைத்து முக்கியமாக, சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையிலிருந்து நாம் மீண்டிருக்கிறோம். அக்டோபரிலும் இந்த ஆண்டுத் துவக்கத்திலும் நாம் இதனால் துன்புற்றோம். இப்போது ஒரு நல்ல கட்டத்தை எய்தியுள்ளோம். நமது ஒரே ஆனால் உறுதியான நேச சக்திகளான உலகின் உழைக்கும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் கடைசியாகக் கிளர்ந்தெழுந்து விட்டனர். லீப்க்னெஹ்ட், ஆட்லெர் போன்ற மேற்கு ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்கள் ஏகாதிபத்தியப் போருக்கு எதிர்ப்பை உருவாக்க துணிவான, வீரம் செறிந்த முயற்சிகள் புரிந்ததற்காக பல மாதங்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இப்போது வியன்னாவிலும், பெர்லினிலும் விரைவாக வளர்ச்சி அடைந்து வரும் தொழிலாளர் புரட்சிகளது நிர்ப்பந்தம் காரணமாக இவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர். தனிமைப்படுத்தப்பட்ட நிலை கடந்து இப்போது நாம் நமது சர்வதேச நேச சக்திகளோடு தோளோடு தோள் சேர்ந்து அக்கம் பக்கமாக நடைபோட்டு வரும் நிலையில் உள்ளோம். கடந்த ஆண்டின் முக்கியமான சாதனைகள் இவையே. நாம் கடந்து

வந்துள்ள பாதையைப் பற்றி, இந்த இடைமாற்ற கட்டம் பற்றிச் சில வார்த்தைகள் கூற நான் விரும்புகிறேன்.

முதன் முதலில் நமது கோஷம் தொழிலாளர்களது கண் காணிப்பு என்பதாகும். கேரென்ஸ்கி அரசாங்கத்தின் எல்லா வாக்குறுதிகளும் இருந்த போதிலும், முதலாளிகள் நாட்டின் உற்பத்தியை நாசப்படுத்துவதையும், சீர்குலைவை அதிகப் படுத்துவதையும் தொடர்ந்து செய்து வந்தனர் என்று நாம் கூறினோம். இது முழுமையான தகர்வில் முடிந்திருக்கலாம் என்று இப்போது நாம் பார்க்க முடிகிறது. எனவே, ஒவ் வொரு சோஷலிஸ்டு, தொழிலாளர் அரசாங்கமும் எடுக்க வேண்டிய முதல் அடிப்படை நடவடிக்கை தொழிலாளர் கண் காணிப்பு ஆகும். நமது தொழில்துறை முழுவதிலும் சோஷ லிசத்தை உடனடியாக நாம் ஆணையிட்டு விடவில்லை. ஏனெ னில் தொழிலாளி வர்க்கம் பொருளாதாரத்தை எப்படி நிர் வகிப்பது என்பதைக் கற்றறிந்து கொண்டு விட்ட பிறகு தான், உழைக்கும் மக்களது செல்வாக்கு உறுதியாக நிலை நாட்டப்பட்ட பிறகு மட்டுமே சோஷலிசத்தை உருவாக்க முடியும், கெட்டிப்படுத்த முடியும். இதில்லாவிடில் சோஷலிசம் வெறும் விருப்பக் கற்பனையாகி விடும். அதனால்தான் நாம் தொழிலாளர்களது கண்காணிப்பைப் புகுத்தினோம். இது ஒரு முரணான மற்றும் முழுமையற்ற ஆனால் அத்தியாவசிய மான நடவடிக்கையென்று நாம் சரியாக மதிப்பிட்டிருந் தோம். ஆனால் பரந்ததோர் நாட்டில் சுரண்டலாளர் இல் லாமலும், அவர்களை எதிர்த்துக் கொண்டும் தொழில்துறை யைக் கட்டிடும் முக்கியமான பணிகளைத் தொழிலாளர்கள் தாமாகவே சமாளித்திட வேண்டும். மேலும், தோழர்களே, இந்தப் பணியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கெடுத்தவர்கள், பழைய முதலாளித்துவ ஆட்சியின் ஒடுக்கு முறையையும், கொடுஞ்செயல்களையும் நேரில் அனுப வித்தவர்கள் அனைவரும் பெருமளவு கற்றுத் தெரிந்து கொண் டார்கள். பெருமளவும் சாதிக்கப்படவில்லை என்று நாம் அறி வோம். தொழிலாளர்களது செல்தடத்தில் எண்ணற்ற இடை யூறுகளையும், தடைகளையும் போட்டுள்ள மிகவும் பின்தங் கிய வறுமைப்பட்ட இந்த நாட்டில் தொழில்துறையை நிர் வகிக்கக் கற்றறிவதற்கு அவர்களுக்கு நீண்டகாலம் பிடிக்கும்

என்பதை நாம் அறிவோம். ஆனால் தொழிலாளர்கள் தாங்களே இந்தப் பணியைச் சமாளித்திருப்பதையும் தொழிலாளர்களது கண்காணிப்பிலிருந்து தேசிய அளவில் தொழிலாளர்களின் தொழில்துறை நிர்வாகத்துக்குக் கடந்து வந்துள்ளோம் என்பதையும் நாம் மிகவும் முக்கியமானதாகவும் மதிப்புடையதாகவும் கருதுகிறோம். தொழிலாளர்களது கண்காணிப்பு தொழில்துறையின் எல்லாப் பிரதானக் கிளைகளிலும் குழப்பமானதாகவும், கட்டுக் குலைந்தும், ஆதிப் பாணியிலும் மற்றும் அரைகுறையானதாகவும் மட்டுமே இருந்திருக்க முடியும்.

தொழிற் சங்கங்களின் நிலைவரம் மாறிவிட்டது. இப்போது அவற்றின் பிரதான பணி தங்களது பிரதிநிதிகளை எல்லா நிர்வாக போர்டுகளுக்கும் மைய உறுப்புகளுக்கும், எல்லாப் புதிய அமைப்புகளுக்கும் அனுப்பி வைப்பதுதான். இந்தப் புதிய அமைப்புகள் முதலாளித்துவத்திடமிருந்து பாழ்படுத்தப்பட்ட மற்றும் வேண்டுமென்றே நாசப்படுத்தப் பட்ட தொழில்துறையை மேற்கொண்டுள்ளன, அறிவாளிகளின் உதவி இல்லாமலே தொழில்துறையை தாக்குப்பிடித்து வந்துள்ளன. இந்த அறிவாளிகள் துவக்கமுதலே தங்களது அறிவையும், கல்வியையும்—மனித இனத்தின் அறிவுக் களஞ்சியத்தின் விளைவை—சோஷலிசத்தின் லட்சியத்தைக் குறுக்கிட்டுக் குலைக்கப் பயன்படுத்தினர். சுரண்டுவோர் இல்லாமல் சமுதாயத்துக்குச் சொந்தமானதொரு பொருளாதாரத்தைக் கட்டுவதில் மக்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக அதை எதிர்த்தனர். இந்த நபர்கள் தங்களது அறிவைப் பயன்படுத்தித் தலையிட்டுக் கெடுக்கவும் ஆட்சிப் பொறுப்பு வேலைகளில் பயிற்சி சிறிதும் இல்லாத தொழிலாளர்களின் வேலையை இடைஞ்சல் படுத்தவும் விழைந்தனர். பிரதான இடையூறு இப்போது நீக்கப்பட்டு விட்டது என்று நாம் சொல்லக்கூடும். அது மிகவும் கடினமாக இருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தின்பால் ஈர்க்கப்பட்டோர் அனைவரின் நாசவேலைகளும் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டன. இந்த அடிப்படையான நடவடிக்கையை மேற்கொள்வதில், சோஷலிசத்திற்கான அடித்தளங்களை நிறுவுவதில், இதற்கு பிரம்மாண்டமான தடைகள் இருந்த போதிலும் தொழிலாளர்கள் வெற்றி அடைந்துள்ளனர். நாம் ஒன்றும் மிகையாகச்

சொல்லவில்லை, உண்மையைச் சொல்ல அஞ்சிடவும் இல்லை. நம்முடைய அறுதி நோக்கத்தை வைத்துப் பார்த்தால் நாம் பெருமளவும் சாதித்திடவில்லை என்பது மெய்யே. ஆனால் அடித்தளங்களை உறுதிப்படுத்துவதில் ஏராளமாக, மிகவும் ஏராளமாக பணியாற்றப்பட்டுள்ளது. சோஷலிசத்தைப் பற்றி நாம் பேசும்போது, தொழிலாளர்களின் பெரும் பிரிவுகள், புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களைப் படிக்கத் துவங்கியுள்ளனர் என்ற அர்த்தத்தில், அரசியல் விழிப்புணர்வுடன் இந்த அடித்தளங்களை நிறுவியுள்ளனர் என்று சொல்ல முடியாது. அரசியல் உணர்வு என்பதன் மூலம் நாம் கருதுவது என்னவென்றால் அவர்கள் இந்த மிகவும் கடினமான பணியினை தங்கள் சொந்தக் கரங்களால், தங்களது சொந்த முயற்சிகளால் துவங்கி விட்டார்கள் என்பதாகும். அவர்கள் ஆயிரக்கணக்கான பிசகுகளைச் செய்து இருக்கிறார்கள், இவை ஒவ்வொன்றின் விளைவாகவும் அவர்கள்தான் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் ஒவ்வொரு பிசகும் அவர்களைத் தொழில்துறை நிர்வாகத்தை ஒழுங்கமைக்கும் வேலையில் பயிற்றுவித்து எஃகென உறுதிப்படுத்தவும் செய்தது. இது இப்போது நிலைநாட்டப்பட்டு உறுதியான அடித்தளத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது வேலையை விடாது முடித்தார்கள். இப்போது முதல் அந்தப் பணி வேறு விதமாக இருக்கும். ஏனெனில் தலைவர்களும், முன்னேற்றமடைந்த தொழிலாளர்களும் மட்டுமின்றி அனைத்து தொழிலாளர்களும், அதாவது மிகப்பெரும் தொழிலாளர் பிரிவினர் தாமே தங்கள் சொந்தக் கைகளினாலேயே சோஷலிசத்தைக் கட்டி வருகிறார்கள், ஏற்கெனவே அதன் அடித்தளங்களை நிறுவி விட்டார்கள் என்பதை அறிவார்கள். இந்தப் பணியை நிறைவேற்றாமல் அவர்களை நாட்டில் உள்ள எந்த ஒரு சக்தியினாலும் தடுக்க முடியாது.

தொழில்துறையில் மகத்தான சிரமங்கள் நமக்கு இருந்திருக்கலாம். இங்கே நாம் பலருக்கு நெடிதென்று தோன்றிய ஒரு பாதையைக் கடக்க வேண்டியிருந்தது. ஆனால் உள்ளபடியே அது குறுகியது, தொழிலாளர்களது கண்காணிப்பிலிருந்து தொழிலாளர்களது நிர்வாகத்துக்கு இட்டுச் சென்றது. இருப்பினும் மிகவும் பின்தங்கிய நாட்டுப்புறத்தில் இன்னும் அதிகமான ஆரம்ப வேலைகள் செய்யப்பட வேண்டி

இருந்தன. கிராமப்புற வாழ்க்கையை நுணுகி ஆராயும் எவரும், விவசாயிகளோடு தொடர்பு கொண்டவர் எவரும் 1918ஆம் ஆண்டு கோடை காலம் மற்றும் இலையுதிர் காலத்தில் மட்டுமே நகர்ப்புற அக்டோபர் புரட்சி மெய்யான கிராமப்புற அக்டோபர் புரட்சியாக மாறியது என்று கூறுவார். பெத்ரோகிராத் தொழிலாளர்களும், பெத்ரோகிராத் கோட்டையின் வீரர்களும் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்ட போது, கிராமப்புற அமைப்புத்துறைப் பணியில் மாபெரும் இடர்ப்பாடுகள் தோன்றும் என்பதை முற்றாக அறிந்து இருந்தார்கள். மேலும் அங்கு நமது முன்னேற்றம் பெரிதும் படிப்படியாகவே நிகழ வேண்டும் என்றும், சமூகமயமாக்கப்பட்ட சாகுபடி முறையை அரசாணையின் மூலம் புகுத்த முயல்வது மிகப் பெரிய மடமையாக இருக்கும் என்றும் அறிந்து இருந்தனர். ஏனெனில் மிகக் குறைந்த எண்ணிக்கையான அறிவொளி பெற்ற விவசாயிகளே இவ்விஷயத்தில் நம்மை ஆதரிக்கக் கூடும். அதே சமயத்தில் மிகப் பெரும்பான்மையோருக்கு அவ்வித நோக்கம் எதுவும் கிடையாது. ஆகவே புரட்சியை முன்னேற்றுவதற்கு பரம அத்தியாவசியமானது எதுவோ அதை மட்டும் செய்து நிறுத்திக் கொண்டோம். மக்களது வளர்ச்சி மட்டத்தை விட அதிகமாகக் கடந்து செல்ல எங்கும் முயன்றிடவில்லை. ஆனால், அவர்களது சொந்த அனுபவம், அவர்களது சொந்தப் போராட்டத்தின் விளைவாக ஒரு முன்னேற்ற இயக்கம் நிகழும் வரை காத்து இருந்தோம்.

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 138-141

மாஸ்கோ மத்திய தொழிலாளர்கள் கூட்டுறவின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் ஆற்றிய உரை[75]
நவம்பர் 26, 1918
என்பதிலிருந்து

தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும் சோஷலிசத்தின் குறிக்கோள்களை மெய்யாகவே மேம்படுத்திட தங்களால் இயன்றதையெல்லாம் செய்வார்கள் என்று நாம் நேர்மையாகவே கூறி விட வேண்டும். மேலும் இந்தக் குறிக்கோள்களுக்கு ஒத்துவராத பேர்கள் இருப்பார்களானால் நாம் தனியாக இதைச் செய்வோம். இருந்த போதிலும், மிகவும் கடினமான இந்தப் போராட்டத்தில் நமக்கு உண்மையிலேயே உதவி செய்யக்கூடிய ஒவ்வொருவரையும் நாம் பயன்படுத்திட வேண்டும்.

கடந்த ஏப்ரலிலே இந்தப் பிரச்சினைகள் பற்றி விவாதித்த போது மக்கள் கமிசாரவை கூட்டுறவாளர்களோடு ஓர் உடன்பாட்டுக்கு வந்தது.[76] இந்தக் கூட்டம் ஒன்றுக்குத்தான் அரசாங்க சார்பற்ற கூட்டுறவு இயக்க உறுப்பினர்களும், கம்யூனிஸ்டு மக்கள் கமிசார்களும் வந்து இருந்தார்கள்.

அவர்களோடு நாம் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருந்தோம். இந்த கூட்டம் ஒன்றில்தான் சிறுபான்மையான கூட்டுறவாளர்களால் ஒரு முடிவு எடுக்கப்பட்டது, பெரும்பான்மை கம்யூனிஸ்டுகளால் அல்ல.

மக்கள் கமிசாரவை இதைச் செய்ததற்குக் காரணம், கூட்டுறவாளர்களது அனுபவத்தையும் அறிவையும் அவர்களது பொறியமைவையும் பயன்படுத்துவது அவசியம் என்று அது கருதியதேயாகும்.

சில நாட்களுக்கு முன்பு வழங்குதுறை அமைப்புப் பற்றிய ஓர் அரசாணை[77] ஏற்கப்பட்டதை நீங்களும் அறிவீர்கள்.

இது ஞாயிற்றுக்கிழமை இஸ்வேஸ்தியாவில் வெளியிடப்பட்டது. இது கணிசமானதொரு பாத்திரத்தை கூட்டுறவு இயக்கத்துக்கும் கூட்டுறவுகளுக்கும் ஒதுக்குகிறது. சோஷலிசப் பொருளாதார ஒழுங்கமைப்பு, கூட்டுறவு நிறுவனங்களின் பின்னல் அமைப்பு இல்லாமல் சாத்தியமல்ல என்பதாலும் மேலும் இதுகாறும் இத்துறையில் ஏராளமான பிழைபாடுகள் இருந்து வந்துள்ளன என்பதாலும் இவ்வாறு செய்யப்பட்டது. சோவியத்துக்கள் சோவியத் கடைகளை நிறுவுவது மற்றும் பகிர்ந்தளிப்பதைச் சமாளிக்க முடியவில்லை என்ற போதிலும் கூட சில கூட்டுறவுகள் மூடப்பட்டு விட்டன அல்லது தேசவுடைமையாக்கப்பட்டு விட்டன.

இந்த அரசாணையின்படி கூட்டுறவுகளிலிருந்து எடுக்கப் பெற்றவைகள் எல்லாம் அவற்றிடம் திருப்பிக் கொடுக்கப் பட வேண்டும்.

கூட்டுறவுகள் மீதான தேசவுடைமை நீக்கப் பெற வேண்டும், அவை மறுபடியும் நிலைநாட்டப் பெற வேண்டும்.

எதிர்ப்புரட்சியாளர்கள் சில கூட்டுறவுகளுக்குள் திருட்டுத்தனமாக நுழைந்திருந்தார்கள் என்பதால் மூடப்பட்ட இவற்றின் விஷயத்தில் இந்த அரசாணை உண்மையில் மிக எச்சரிக்கையோடிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட மட்டில், இந்தக் கூட்டுறவுகளது பணி கண்காணிப்பின் கீழ் வைக்கப் பட்டு இருக்க வேண்டும் என்று நாம் ஆணித்தரமாகக் கூறினோம். இருப்பினும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

பாட்டாளி வர்க்கத்தின் பிரதான பணிகளில் ஒன்று, உடனடியாகவும் சரியாகவும் உணவு சப்ளையையும், வினியோகத்தையும் ஒழுங்கமைப்பது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு கணித்து ஏற்றுக் கொள்வீர்கள்.

தேவைப்படும் அனுபவத்தோடு கூடியதொரு பொறியமைவு நம்மிடம் இருக்கிறது, இது எல்லாவற்றிலும் முக்கியமாக பொது மக்கள் முன்முயற்சியை அடிப்படையாக்கியது என்பதால் இதைக் கொண்டே இந்தப் பணிகளை நிறைவேற்றும்படி செய்ய வேண்டும். இந்த அமைப்புகளை உருவாக்கிய மக்களது முன்முயற்சியைப் பயன்படுத்துவது மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் பணியில் சாதாரண மக்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். கூட்டுறவு

களுக்கு, சிறப்பாகத் தொழிலாளர் கூட்டுறவுகளுக்கு இந்தப் பணியைத்தான் பிரதானமாயும் வகுத்து முன்வைக்க வேண்டும்.

உணவு சப்ளை மற்றும் வினியோகம் என்பதை ஒவ்வொரு வரும் புரிந்து கொள்கிறார்கள். புத்தகப் படிப்பு இல்லாத ஒருவர்கூட இதைப் புரிந்து கொள்கிறார். மேலும் ருஷ்யா வில் பெரும்பான்மையான மக்கள் இன்னும் எழுத்தறி யாத நிலையிலும் அறியாமையிலும் இருக்கிறார்கள். ஏனெனில் உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்கள் கல்வியறிவு பெற்றிடுவதைத் தடுக்க எல்லாம் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும் மக்கள் மத்தியில் துடிப்பான ஆட்கள் அநேகர் இன்னும் இருக்கிறார்கள். இவர்கள் இன்னும் கற் பனை செய்யக்கூட முடியாத அளவுக்குப் பிரம்மாண்டமான திறமையை வெளிப்படுத்திட முடியும். எனவே, தொழி லாளர்கள் கூட்டுறவின் பணி, இந்த மக்களை ஈடுபடுத்துவதும் அவர்களைத் தேடிக் கண்டு பிடித்து உணவு சப்ளை மற்றும் வினியோகம் செய்யும் நேரடிப் பணியினை இவர்களிடம் ஒப்படைப்பதும் ஆகும். சோஷலிச சமுதாயம் என்பது தனி ஒரு கூட்டுறவுதான்.

தொழிலாளர் கூட்டுறவுகளிலான பொது மக்களது முன் முயற்சி உண்மையில் தொழிலாளர் கூட்டுறவுகளை தனி ஒரு மாஸ்கோ நகர நுகர்வாளர் கம்யூனாக மாற்றிட இட்டுச்செல் லும் என்பதில் எனக்கு ஐயப்பாடு ஏதும் இல்லை.

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 204-206

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்[78]

''பொருளாதாரப் பகுத்தாய்வு'' எனும் வேடத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அடிமைப்படல் என்பதிலிருந்து

காவுத்ஸ்கி தொழிற்துறை பற்றிய தமது ''பொருளாதாரப் பகுத்தாய்வை'' பின்வரும் அற்புதமான வாதத்தோடு தொடங்குகிறார்:

ருஷ்யாவில் பெருவீத முதலாளித்துவ தொழிற்துறை இருக்கிறது. இந்த அடித்தளத்தின் மீது ஒரு சோஷலிஸ்டு உற்பத்தி அமைப்பினைக் கட்ட முடியாதா? ''சோஷலிசம் என்றால் தனிப்பட்ட ஆலைகள் மற்றும் சுரங்கங்களின் தொழிலாளர்கள் இவற்றைத் தமது உடைமையாக்கி'' (உண்மையில்: தமக்கே என இவற்றைப் பறித்துக் கொண்டு) ''ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தனியாக உற்பத்தியை நடத்த முற்படின் இவ்வாறு ஒருவர் சிந்திக்க முடியும்'' (பக்கம் 52).[79] அவர் மேலும் கூறினார்: ''இந்த வார்த்தைகளை நான் எழுதிக் கொண்டிருக்கும் ஆகஸ்டு 5ஆம் நாளில், ஆகஸ்டு 2ந் தேதி லெனின் ஆற்றிய ஒரு உரையின் செய்தி விவரம் மாஸ்கோவில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது: 'தொழிலாளர்கள் ஆலைகளை உறுதியாகத் தமது கரங்களில் அடக்கி வைத்திருக்கிறார்கள், விவசாயிகள் நிலங்களை நிலப்பிரபுக்களுக்குத் திருப்பித் தரமாட்டார்கள்.'[80] இதுவரையில் ஆலைகள் தொழிலாளர்களுக்கே, நிலம் விவசாயிகளுக்கே எனும் கோஷம் ஒரு அராஜக சிண்டிகல்வாதியின் கோஷமே தவிர ஒரு சமூக-ஜனநாயகவாதியின் கோஷமல்ல'' (பக்கங்கள் 52, 53).

நான் இந்த வாசகத்தை முழுமையாக மேற்கோள் காட்டியிருப்பதற்குக் காரணம், ருஷ்யத் தொழிலாளர்கள் முன்பு முற்றும் சரியாகவே மரியாதை கொடுத்துவந்த காவுத்ஸ்கி இப்போது முதலாளித்துவ முகாமுக்குத் துறந்தோடியபின்

கையாளும் முறைகளை அவர்கள் தாமே பார்க்கட்டும் என்பதேயாகும்.

சற்றே எண்ணிப்பாருங்கள்: ஆகஸ்டு 5ந் தேதி ருஷ்யாவில் ஆலைகள் தேசவுடைமையாக்கம் பற்றிய அரசாணைகள் பல பிறப்பிக்கப்பட்டபோது, அதோடு தனி ஒரு ஆலை கூடத் தொழிலாளர்களால் பறித்துக்கொள்ளப்படவில்லை மாருக யாவும் குடியரசின் உடைமையாக மாற்றப்பட்டது—அந்த ஆகஸ்டு 5ந் தேதி எனது உரையின் ஒரு வாக்கியத்தை அப்பட்டமாயும் கபடத்தனமாக அர்த்தப்படுத்துவது மூலம் காவுத்ஸ்கி, ருஷ்யாவில் ஆலைகள் தனிப்பட்ட தொழிலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஜெர்மன் வாசகர்கள் நம்பும்படி செய்ய முயல்கிருர்! அதற்குப் பிறகு காவுத்ஸ்கி, ஆலைகளைத் தனிப்பட்ட தொழிலாளர்களிடம் ஒப்படைப்பது தவறு என்று நீண்டநேரம், சொன்னதையே சொல்லி அசை போடுகிருர்!

இது விமர்சனம் அல்ல, இது முதலாளித்துவ அடிவருடியின், தொழிலாளர் புரட்சியை அவதூறு செய்வதற்காக முதலாளிகள் கூலிக்கு அமர்த்தியுள்ள பேர்வழியின் குறும்புச் சேட்டையே ஆகும்.

ஆலைகள் அரசுக்கோ அல்லது சமுதாயத்துக்கோ அல்லது நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கோ மாற்றி வழங்கப்பட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கூறும் காவுத்ஸ்கி இறுதியாகச் சொல்வதாவது:

''இதைத்தான் இப்போது அவர்கள் ருஷ்யாவில் செய்ய முயல்கிருர்கள்...'' இப்போது! இதன் அர்த்தம் என்ன? ஆகஸ்டிலா? ஆலைகள் குறித்த அரசாணைகளில் குறைந்தபட்சம் ஒன்றையாவது காவுத்ஸ்கி தமது நண்பர்கள் ஷ்டைன், அக்செல்ரோத் அல்லது ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தின் இதர நண்பர்களில் எவரையாவது பொறுப்பாக அமர்த்தி மொழிபெயர்த்துக் கொண்டிருக்கக் கூடாதா?

''இந்தத் திசையில் அவர்கள் எவ்வளவு தூரம் போயிருக்கிருர்கள் என்பதை நம்மால் இன்னும் சொல்ல முடியாது. எப்படியும், சோவியத் குடியரசின் செயல்பாட்டின் இந்த அம்சம் நமக்கு ஆகப்பெரிய முக்கியத்துவம் உள்ளது ஆனல், இன்னும் முற்ருக இருளில் மூழ்கிக் கிடக்கிறது. அரசாணைகளுக்குக் குறைவே இல்லை....'' (இதனுல் தான் காவுத்ஸ்கி

அவற்றின் உள்ளடக்கத்தை புறக்கணிக்கிறார், அல்லது அதை வாசகர்களிடமிருந்து மறைக்கிறார்!) ''ஆனால் இந்த அரசாணைகளின் விளைபயன் குறித்து நம்பகமான தகவல் போதாது. சர்வாம்சமான, விரிவான, நம்பகமான மற்றும் துரிதமான தகவல்தரும் புள்ளி விவரங்கள் இன்றி சோஷலிஸ்டு உற்பத்தி சாத்தியமல்ல. சோவியத் குடியரசு இதற்குள் இத்தகைய புள்ளி விவரங்களை உருவாக்குவது சாத்தியமல்ல. அதன் பொருளாதாரச் செயல்பாடுகள் பற்றி நாம் தெரிந்து கொண்டிருப்பதெல்லாம் மிகவும் முரண்பாடானது, எவ்வழியிலும் சரிபார்க்கப்பட்டதல்ல. இதுவும் சர்வாதிகாரத்தின் மற்றும் ஜனநாயகத்தை அடக்குவதன் விளைவே ஆகும். பத்திரிகை சுதந்திரமோ பேச்சுச் சுதந்திரமோ அங்கு இல்லை...'' (பக்கம் 53).

இப்படித்தான் வரலாறு எழுதப்படுகிறது! ஆலைகள் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுவது பற்றிய தகவலைக் காவுத்ஸ்கி முதலாளிகளின், தூத்தவ் ஆட்களின் ''சுதந்திர'' பத்திரிகைகளில் இருந்து பெற்றிருப்பார்.... வர்க்கங்களுக்கு அப்பால் நிற்கும் இந்த ''காரியக்கார அறிஞர்'' அற்புதமான பேர்வழிதான் உண்மை! ஆலைகள் குடியரசிடம் மட்டுமே ஒப்படைக்கப்படுகின்றன எனவும் அவை சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஒரு உறுப்பமைப்பான தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலால் நிர்வகிக்கப்படுகின்றன எனவும் இது தொழிற்சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையே பிரதானமாகக் கொண்டு அமைந்தது எனவும் சுட்டும் எண்ணற்ற மெய்விவரங்கள் குறித்து காவுத்ஸ்கி ஒரு வார்த்தை கூடச் சொல்ல மறுக்கிறார். ''கூட்டில் அடைந்த மனிதரின்'' பிடிவாதத்துடன் அவர் ஒரு விஷயத்தையே விடாப்பிடியாகத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்: உள்நாட்டுப் போர் இல்லாத, சர்வாதிகாரம் இல்லாத, நல்ல புள்ளிவிவரங்களுடனான அமைதியான ஜனநாயகத்தை எனக்குத் தருவீர் (சோவியத் குடியரசு ஒரு புள்ளிவிவர சேவையை நிறுவியுள்ளது, இதில் ருஷ்யாவில் இருக்கும் சிறந்த புள்ளிவிவர நிபுணர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர், ஆனால் இலட்சியப் புள்ளிவிவரங்கள் விரைவில் பெறுவது இயலாது). ஒரே சொல்லில் கூறினால் காவுத்ஸ்கி கோருவது புரட்சி இல்லாத, மூர்க்கமான போராட்டம் இல்லாத, வன்முறை இல்லாத ஒரு புரட்சி ஆகும். இது தொழிலாளர்களும்

முதலாளிகளும் ஆர்வமில்லாத வேலைநிறுத்தங்களைக் கோரு வதற்குச் சமமாகும். இந்த வகையான ''சோஷலிஸ்டு''க்கும் சாமானிய மிதவாத அதிகாரவர்க்கப் பேர்வழிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முயலுங்கள், பார்ப்போம்!

1918, அக்டோபர்—நவம்பர் 10க்கு முன்பாக எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 328-330

வட பிராந்திய கம்யூன்களின் சோவியத்துக்கு தந்திச் செய்தி

ஸினோவியெவ், ஸ்மோல்னி, பெத்ரோகிராத்

வட பிராந்திய உணவுக் கமிட்டி, பொருளாதார கவுன்சில், பெத்ரோகிராத் உணவுக் கமிட்டி

குபேர்னிய உணவுக் கமிட்டி, மொத்த வியாபாரச் சங்கம்

நகல்கள்: உழைப்புச் சங்கம், குபேர்னிய உணவுக் கமிட்டிகள், ஒலொநேத்ஸ், ச்செரெப்பொவேட்ஸ், நோவ்கரத், பிஸ்கோவ் பொருளாதாரக் கவுன்சில்கள்

நவம்பர் 21ஆந் தேதி அரசாணை இருந்த போதிலும், உள்ளூர் கூட்டுறவுகள் தேசவுடைமையாக்கப்படுகின்றன, மூடப்படுகின்றன, அவற்றின் பண்டங்கள் கட்டாயமாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன, அவற்றின் சட்டபூர்வ நடவடிக்கைகளை மீட்டமைக்க உதவி எதுவும் தரப்படவில்லை என்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.[81] இவை யாவும் சப்ளையில் சீர்குலைவு உண்டாக்கும், சோவியத் குடியரசின் பின்னணியின் ஸ்தாபனம் நிலை குலையச் செய்யும். இப்போது அனுப்பப்படும் இந்த தந்திச் செய்தியின்படி, நவம்பர் 21ஆந் தேதியின் ஆணையை மீறவோ, புறக்கணிக்கவோ செய்யப்படும் முயற்சிகளை உடனே நிறுத்த வேண்டும். மூடப்பட்டுள்ள மற்றும் தேசவுடைமையாக்கப்பட்ட கூட்டுறவுகளை மீட்டு நிறுவ வேண்டும், அவற்றின் பண்டங்களைத் திரும்பக் கொடுத்திட வேண்டும், வினியோக அமைப்பில் அரசாங்கக் கடைகளுக்கு சமமாகக் கூட்டுறவுகளையும் தவறாமல்

சேர்த்துக் கொள்ள வேண்டும். சப்ளைகளைக் கொள்முதல் செய்தல் மற்றும் வினியோக அலுவலில் சாத்தியமான எல்லா வழிகளிலும் கூட்டுறவு பொறியமைவு பயன்படுத்தப் பெற வேண்டும். கூட்டுறவு இயக்கப் பிரதிநிதிகள் உணவு சப்ளை அமைப்புகளின் கூட்டுறவு கமிஷன்களுக்குள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த அரசாணையை மீறுவோர் அல்லது புறக்கணிப்போர் தண்டனைக்குள்ளாவார்கள். வட பிராந்தியத்து எல்லா நிர்வாக குழுக்களுக்கும் உணவு சப்ளை அமைப்புகளுக்கும் இந்தத் தந்திச் செய்தி தகவல் தருவதற்கும் செயல்படக் கோரும் வகையிலும் அனுப்பப்பெற வேண்டும். உள்ளூர் செய்தித்தாள்களில் இது வெளியிடப்பட வேண்டும்.

உலியானவ் (லெனின்)
தலைவர், பாதுகாப்புக் கவுன்சில்

1918 டிசம்பர் 25ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 50,
பக்கங்கள் 225-226

ரு. க. க. (போ.)இன் நகல் வேலைத்திட்டம்[82]

என்பதிலிருந்து

வேலைத்திட்டத்தின் பொருளாதாரப் பிரிவிலிருந்து சில அம்சங்கள்

சோவியத் அரசாங்கத்தின் பொதுவான பணிகளை இன்னும் விரிவாக விளக்கிடும் வகையில் ருஷ்ய கம்யூனிஸ்டு கட்சி இப்போது அவைகளைக் கீழ்வருமாறு முறைப்படுத்தி முன்வைக்கிறது:

பொருளாதாரத் துறையில்

சோவியத் அரசாங்கத்தின் இன்றைய பணிகளாவன:

(1) முதலாளித்துவ வர்க்கத்தை உடைமை நீக்கம் செய்வதை உறுதியாகத் தொடர்ந்து நடத்தி முடிவுக்குக் கொண்டு வருவது, இது பிரதானமாக முடிந்து விட்டதொரு பணியாகும்; உற்பத்தி மற்றும் வினியோக சாதனங்களை சோவியத் குடியரசின் சொத்தாக, அதாவது உழைக்கும் மக்கள் அனைவரின் பொதுச் சொத்தாக மாற்றிடுவது.

(2) உழைக்கும் மக்களின் மத்தியில் தோழமை பூர்வமான ஒழுங்குக் கட்டுப்பாட்டை வளர்த்திடவும் வலுவூட்டவும், ஒவ்வொரு துறையிலுமான அவர்களது முன்முயற்சியையும் பொறுப்புணர்ச்சியையும் தூண்டி விடவும் சிறப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். இது மிகவும் அவசியம். முதலாளித்துவத்தையும், உற்பத்தி சாதனங்களில் தனியார் உடைமை ஆட்சி செய்ததால் உருவான பழக்கங்களையும் வென்று அகற்றுவதற்கான மிகவும் முக்கியமான, இல்லையேல் ஒரே ஒரு மார்க்கம் இதுவே. இந்த நோக்கம் மக்கள் திரளினருக்கு மறுபயிற்சி கொடுப்பதற்கான மெதுவான வேலை மூலம் மட்டுமே அடைய முடியும்; நிலச் சொந்தக்காரர், முதலாளி மற்றும் வியாபாரி ஆகியோர் உண்மையிலேயே நீக்கப்பட்டு

விட்டதை மக்கள் திரளினர் பார்த்து விட்டார்கள் என்ற அளவுக்கு இந்த மறுபயிற்சி இப்போது சாத்தியமாகி இருப்பது மட்டுமின்றி தொழிலாளர் மற்றும் விவசாயிகளது சொந்த அனுபவத்தின் வாயிலாக ஆயிரக்கணக்கான வழிகளில் இது உள்ளபடியே நடந்தேறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் உழைக்கும் மக்களைத் தொழிற் சங்கங்களில் மேலும் ஸ்தாபனரீதியாகத் திரட்ட முயற்சி செய்வது மிக முக்கியமானதாகும். சோவியத் ஆட்சி அதிகாரத்தின் கீழ் வளர்ச்சியடைந்ததைப் போல இவ்வளவு துரிதமாகத் தொழிற் சங்கங்கள் உலகில் வேறெங்கும் இதற்கு முன்பு எப்போதுமே வளர்ச்சியடையவில்லை. முறையாக அமைக்கப்பட்ட, மத்தியப்படுத்தப்பட்ட ஒழுங்குக் கட்டுப்பாடுள்ள தொழிற் சங்கங்களில் அறவே எல்லாத் தொழிலாளர்களையும் ஸ்தாபனரீதியாகத் திரட்டும் வரைக்கும் அது வளர்க்கப்பட வேண்டும்.

8. உற்பத்தி சக்திகளை வளர்த்திடும் அதே பணிக்கு உடனடியாகவும், விரிவாகவும், எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும், முதலாளித்துவம் நமக்கு வார்சாக விட்டுச் சென்றுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறை நிபுணர்களை—பொதுவாக இவர்கள் முதலாளித்துவ உலகக் கண்ணோட்டம் மற்றும் பழக்கங்களில் ஊறிக்கிடக்கிறார்கள் என்ற போதிலும்—வேலைகளில் அமர்த்திட வேண்டும். தொழிற் சங்க அமைப்புகளோடு நெருங்கிய உறவு பூண்டு கட்சியானது தனது முந்தைய கொள்கை நெறியைத் தொடர்ந்து பின்பற்றிட வேண்டும்—ஒரு புறத்தில், குறிப்பிட்ட முதலாளித்துவப் பிரிவுக்கு எள்ளளவும் அரசியல் சலுகை காட்டக் கூடாது. மேலும் அதன் பங்கில் செய்யப்படும் எதிர்ப்புரட்சி முயற்சிகள் எதுவும் ஈவு இரக்கமின்றி அடக்கப்பட வேண்டும். மறு புறத்தில், ஒரு போலித் தீவிரவாத, உண்மையில் அறிவற்றதான இறுமாப்பான கருத்தினை எதிர்த்து இரக்கமற்ற போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியாக வேண்டும். உழைக்கும் மக்கள், முதலாளித்துவ தனித்துறை நிபுணர்களிடமிருந்து படித்தறிந்து கொள்ளாமலும், அவர்களது சேவையைப் பயன்படுத்திடாமலும். அவர்களோடு அக்கம் பக்கமாக நீண்ட காலத்திற்கு பயிற்சி பெற்றிடாமலும் முதலாளித்துவத்தையும், முதலாளித்துவ சமூக அமைப்பையும் வென்று அகற்றிவிட முடியும் என்பதே இந்தக் கருத்து.

சோவியத் அரசாங்கத்தின் அறுதி நோக்கம் பூரணமாக கம்யூனிசத்தையும், எல்லா வகையான பணிகளுக்கும் சமமான ஊதிய அளிப்பையும் சாதித்திடுவதுதான் என்றாலும், இந்த சமத்துவத்தை உடனடியாக இன்றைய நாளில் புகுத்திட முடியாது. இப்போது முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கான மாற்றத்தின் முதல் நடவடிக்கைகள்தான் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் தனித்துறை நிபுணர்களுக்கு இப்போது தரப்படும் உயர் ஊதியம் நீடிக்கப்பட வேண்டும். அவர்களை ஊக்குவிக்கவும், முன்பு வேலை செய்ததைவிட மோசமாக அல்லாமல் மேலும் சிறப்பாகப் பணி ஆற்றிடச் செய்யவும் இந்த உயர் ஊதியம் தேவைப்படுகிறது. இதே குறிக்கோளை மனத்தில் கொண்டு மிக வெற்றிகரமாக செய்யப்பட்ட பணிகளுக்கு, குறிப்பாக அமைப்புத் துறைப் பணிகளுக்குப் போனஸ்களை வழங்கிடும் முறையை நாம் நிராகரித்து விடக்கூடாது.

முதலாளித்துவ தனித்துறை நிபுணரை ஒரு தோழமை கொண்ட சூழலில் வைத்துக்கொள்வதும்அதேஅளவுக்கு அவசியமாகும். அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட கம்யூனிஸ்டுகளால் வழி நடத்தப்படும் சாமான்யத் தொழிலாளர் திரளுடன் கரம் கோர்த்து வேலை செய்வது மூலம் உருவாக்கப்படுகிறது இந்தத் தோழமைச் சூழல். முதலாளித்துவத்தால் பிரித்து வைக்கப்பட்டிருந்த கையாலும் கருத்தாலும் பாடுபடும் தொழிலாளர்களின் இடையே பரஸ்பர இணக்கத்தையும் நட்புறவையும் வளர்க்கும் பொருட்டு இந்தத் தோழமைச் சூழல் உருவாக்கப்படுகிறது.

உழைக்கும் சக்தியுள்ள மக்கள் தொகை அனைத்தையும் தொழிற்சங்கங்களது பங்கேற்புடன் குறிப்பிட்டதொரு பொதுப் பணிக்கு சோவியத் அரசாங்கம் ஒன்றுதிரட்டுவதை முன்பு இருந்ததை விட மிகவும் அதிகளவு பரவலாயும் முறையாகவும் செயல்படுத்த வேண்டும்.

வினியோகத் துறையில் சோவியத் அரசாங்கத்தின் இன்றைய பணி, திட்டமிடப்பட்ட, அமைப்புத் திரட்சியுள்ள நாடு தழுவிய பண்ட வினியோக முறையால் இப்போதுள்ள வியாபாரத்தைப் பதிலீடுசெய்வதை தொடர்ந்து உறுதியாகச் செயல்படுத்துவதே ஆகும். முழு மக்கள் தொகையையும்

நுகர்வாளர் கம்யூன்களின் தனி ஓர் அமைப்பாக மாற்றுவது தான் இதன் குறிக்கோள். வினியோக இயந்திரம் முழுவதை யும் கட்டு திட்டமாக மத்தியப்படுத்துவதன் மூலம் இந்த அமைப்பு எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் மிக விரை வாகவும், முறையாகவும், சிக்கனமாகவும், ஆகக் குறைந்த உழைப்புச் செலவுடனும் வினியோகிக்க முடியும்.

இந்த நோக்கத்தை நிறைவு செய்திட, இன்றைய கட்டத் தில் பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இடை மாற்றுவடிவங்கள் இருக்கும் போது, சோவியத் உணவு வழங்கீடு அமைப்புகள் கூட்டுறவு சங்கங்களைப் பயன்படுத்த வேண்டுவது பிரத்தியேகமாயும் முக்கியமானதாகும். இவை முதலாளித்துவத்திடமிருந்து வாரிசாகப் பெற்ற முறையான விநியோகத்திற்கான ஒரே பொதுஜன பொறியமைவாகும்.

கொள்கையளவில் சரியான ஒரே வழி இந்தப் பொறி யமைவை மேலும் கம்யூனிச முறையில் வளர்ச்சி அடையச் செய்வதுதானே ஒழிய அதை நிராகரிப்பது அல்ல என்பது அதன் கருத்தாகையால் ரு.க.க.யானது அதன் கொள்கை யைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் கூட்டுறவில் பணியாற்றுவதைக் கட்டாயக் கடமையாக்கிட வேண்டும், தொழிற்சங்கங்களது துணையுடன் கம்யூனிஸ்டு உணர்வில் அவர்களை நெறியாக்கம் செய்ய வேண்டும், இவற்றைச் சேர்ந்த உழைக்கும் மக்களுடைய முன்முயற்சி மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டை வளர்த்திட வேண்டும், மக்கள் அனைவரையும் இவற்றில் சேரும்படி செய்ய முயலல் வேண்டும், மேலும் கூட்டுறவுகளை தனி ஒரு கூட்டுற வாக இணையும்படி செய்ய வேண்டும், இது சோவியத் குடி யரசு முழுவதையும் தழுவியதாக இருத்தல் வேண்டும்; கடைசியாயும், மிக முக்கியமாயும், உழைக்கும் மக்களில் ஏனையோர் மீது பாட்டாளி வர்க்கத்தின் மேலோங்கிய செல் வாக்கு இடையறாது நிலைநிறுத்தப்பட வேண்டும். பழைய முதலாளித்துவ வகையினதான குட்டி முதலாளித்துவ கூட் டுறவுகளில் இருந்து பாட்டாளிகளும், அரைப் பாட்டாளி களும் வழி நடத்திடும் நுகர்வாளர் கம்யூன்களாக மாற்றப் படுவதை எளிதாக்கும் நோக்குடன் மிகப் பல்வகைப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க முயல வேண்டும்.

(6) முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாற்ற

முறும் முதல் கால கட்டத்தில் பணத்தை ஒரே அடியில் ஒழித்திடுவது சாத்தியமானதல்ல. இதன் பின்விளைவாக, மக்கள் தொகையின் முதலாளித்துவ நபர்கள் தனிப்பட சொந்தமாக வைத்துள்ள காகிதப் பணங்களைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றனர்—பொதுச் செல்வத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை சுரண்டலாளர்கள் இந்த அடையாளப் பணத்தைக் கொண்டுதான் பெறுகிறார்கள், வாணிப சூதாட்டத்திற்காகவும் இலாப வேட்டைக்காகவும் உழைக்கும் மக்களைக் கொள்ளையடிப்பதற்காகவும் இது பயன்படுத்தப் பெறுகிறது. இந்த முதலாளித்துவக் கொள்ளையின் மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட வங்கிகள் தேசவுடைமையாக்கப் பட்டது மட்டுமே போதுமானதொரு நடவடிக்கையாகாது. பணத்தை ஒழித்திடுவதற்கு வழி வகைகளை உருவாக்க ரு. க. க. சாத்தியமான அளவு விரைவாக மிகத் தீவிரமான நடவடிக்கைகளைப் புகுத்திட வேண்டும். முதலாவதாயும் முக்கியமானதாயும் பணத்திற்கு பதிலாக சேமிப்புக் கணக்குப் புத்தகங்களையும், காசோலைகளையும், குறுகிய காலத்திற்கான நோட்டுகளையும் இத்தியாதி புகுத்திட வேண்டும். இவற்றை வைத்திருப்பவர்கள் பொது ஸ்டோர்களிலிருந்து பண்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் பணத்தை வங்கியில் வைப்பு வைத்திட வேண்டும் என்றும் கட்டாயப் படுத்திட வேண்டும். இந்த மற்றும் இது போன்ற நடவடிக்கைகளுக்காக வழி செய்திடும் போது கிட்டும் நடைமுறை அனுபவம், வழி இவற்றில் எவை மிகவும் காலத்துக் கேற்றவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

(7) நிதித்துறையில் ரு. க. க. படிப்படியாக அதிகரிக்கும் வருமான வரி மற்றும் சொத்து வரியினை காரிய சாத்தியமுள்ள எங்கும் பொதுவாகக் கொண்டுவர வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட விஷயங்கள் நிறைய இருக்க முடியாது. ஏனெனில் நிலம், பெரும்பான்மையான தொழிற்சாலைகள், இதர நிறுவனங்கள் ஆகியவற்றின் தனியாருடைமை ஒழிக்கப்பட்டு விட்டது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்திலும், பிரதான உற்பத்தி சாதனங்கள் அரசாங்க உடைமையாக இருக்கிற காலத்திலும் பல்வேறு அரசாங்க ஏகபோகங்களில் இருந்து வருவாயின் ஒரு பகுதியை அரசாங்கத்தின் தேவைகளை நிறைவு செய்ய நேரடியாக ஒதுக்கீடு செய்து

கொள்ள வேண்டும். பண்டங்களது பரிமாற்றம் சரியாக நிறுவப்பட்டால் மட்டுமே வரவினமும் செலவினமும் சமநிலை அடையும். நுகர்வாளர் கம்யூன்கள் அமைப்பது மூலமும் சோவியத் அரசாங்கத்தின் பிரதான உடனடி நோக்கங்களில் ஒன்றான போக்குவரத்துத்துறை மீட்டமைப்பு மூலமும் இது சாதனையாகும்.

பிராவ்தா, இதழ் 45ல்
1919 பிப்ரவரி 27ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கங்கள் 119-122

ரு. க. க். (போ.)இன் எட்டாவது காங்கிரஸ்[83]
1919 மார்ச் 18—23

2

மத்தியக் கமிட்டியின் அறிக்கை மார்ச் 18 என்பதிலிருந்து

எல்லாவற்றிற்கும் மேலாக நமது கவனத்தை ஈர்த்த பிரச்சினையை, அதாவது தொழில்துறையில் தொழிலாளர்களது கண்காணிப்பில் இருந்து தொழிலாளர்களது நிர்வாகம் என்ற பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். மக்கள் கமிசாரவை, ஸ்தல சோவியத் அதிகார உறுப்புகள் இயற்றிய அரசாணைகள் மற்றும் முடிவுகளைத் தொடர்ந்து—இவை அனைத்தும் இத்துறையில் நமது அரசியல் அனுபவத்திற்குப் பங்களிப்பை வழங்கின—மத்திய கமிட்டிக்கு உள்ளபடியே விடப்பட்டு இருந்த ஒரே காரியம் அதைத் தொகுத்து அளிப்பதுதான். இப்படிப்பட்டதொரு காரியத்தில், இந்தச் சொல்லின் உண்மையான பொருளில் அதனுல் தலைமை தாங்கச் சிறிதும் முடியவில்லை. தொழில் துறையில் தொழிலாளர் கண்காணிப்பு என்ற விஷயம் பற்றிய நமது முதல் அரசாணைகளும் முடிவுகளும் எவ்வளவு விகாரமாயும், முதிர்ச்சியற்றதாகவும், திட்டமின்றியும் இருந்தன என்பதை நாம் நினைவு கூர்ந்து பார்த்தால் போதும். அது இலகுவான காரியம் என்று நாம் நினைத்தோம். அதைக் கட்ட வேண்டுவது அவசியம் என்று நடைமுறை அனுபவம் நமக்குக் காட்டியது. ஆனுல் **எப்படிக்** கட்டுவது என்ற வினுவிற்கு நாம் எவ்வித விடையும் பகரவில்லை. தேசவுடைமையாக்கப்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையும், தேசவுடைமையாக்கப்பட்ட ஒவ்வொரு தொழில்துறையும், போக்குவரத்தும், குறிப்பாக ரயில்வே போக்குவரத்தும்—இது முதலாளித்துவ இயந்திரத்தின் மிக எடுப்பான உதாரணம், பெருவீத பொறி இயலின் அடிப்

படையில் மிகவும் மத்தியப்படுத்தப்பட்ட முறையில் கட்டப்பட்டது, அரசுக்கு உயிர்நாடி போன்றது—இவை அனைத்தும் முதலாளித்துவத்தின் ஒருமுனைப்படுத்தப்பட்ட அனுபவத்தை உருக் கொண்டிருந்தன, நமக்கு அளப்பரிய இடர்ப்பாடுகளை உருவாக்கின.

இன்றும் இந்த இடர்ப்பாடுகளை நாம் வென்று அகற்றியபாடில்லை. வேலையை எப்படித் தொடங்குவது என்று அறவே எவ்விதக் கருத்தும் இல்லாத புரட்சிப் பிரசாரகரைப் போல முதலில் இவைகளை முற்றும் கருத்தியலான வழியில் எண்ணிப் பார்த்தோம். ஏராளமான பேர் நம்மைக் குறை சொன்னார்கள் என்பது உண்மையே—எல்லா சோஷலிஸ்டுகளும், சமூக-ஜனநாயகவாதிகளும் இன்றைக்கு நம்மை குற்றம் சொல்கிறார்கள். எப்படி முடிப்பது என்று தெரியாமல் இந்தப் பணியைத் தொடங்கி விட்டதாகக் குறை சொல்கிறார்கள். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் கேலிக்கிடமானவை, வாழ்க்கைத் துடிப்பு இல்லாத பேர்களால் இது சொல்லப்படுகிறது. மகத்தானதொரு புரட்சியை செய்திட முற்படுவோர் முன்கூட்டியே அது எப்படிப் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை அறிந்திருக்க முடிய வேண்டும் என்று கேட்பது போல இருக்கிறது! இப்படிப்பட்ட அறிவை புத்தகங்களில் இருந்து பெற முடியாது, நமது முடிவு மக்கள் திரளினரின் அனுபவத்திலிருந்து மட்டுமே பிறந்திட முடியும். நம்பற்கரிய சிரமங்களின் மத்தியில் நாம் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டோம். அந்த நேரம் வரை அந்தப் பிரச்சினை நமக்கு அரைகுறையாகத்தான் பரிச்சயமாகி இருந்தது. நாம் பாட்டாளி மக்கள் திரளினரை அவர்களது சொந்த முன்முயற்சிகளை வெளிப்படுத்திடும்படி உத்வேகம் அளித்தோம். தொழில் துறை நிறுவனங்களை நாம் தேசவுடைமையாக்கினோம். இவற்றைச் சாதித்தது நமக்குப் பெருமை தருகிறது என்று நான் சொல்வேன். ஸ்மோல்னியில் ஒரே அமர்வில் பத்து அல்லது பன்னிரண்டு அரசாணைகளைப் பிறப்பித்தோம் என்று எனக்கு நினைவு. நமது உறுதிக்கும், பாட்டாளி மக்கள் திரளினரிடையே சோதனை உணர்வையும் முன்முயற்சியையும் தூண்டிவிட வேண்டும் என்ற நமது விருப்பத்திற்கும் அது ஒரு எடுத்துக்காட்டு. இப்போது நமக்கு அனுபவம் இருக்கிறது. இப்போது தொழில் துறையில் தொழிலாளர்

களது கண்காணிப்பில் இருந்து தொழிலாளர் நிர்வாகத்தை நோக்கி நாம் கடந்து சென்றுள்ளோம், அல்லது கடந்து செல்ல இருக்கிறோம். நாம் முன்னர் இருந்ததுபோல அறவே ஏலாதோராய் இருந்திடாமல், இப்போது நாம் அனுபவம் எனும் ஆயுதம் தரித்தவர்களாக இருக்கிறோம், எவ்வளவு சாத்தியமோ அவ்வளவுக்கு அதை நமது வேலைத்திட்டத்தில் தொகுத்துத் தந்துள்ளோம். ஸ்தாபனம் பற்றிய பிரச்சினையை நாம் எடுத்துக் கவனிக்கும் போது இதை இன்னும் விரிவாக விவாதித்திட வேண்டும். தொழிற்சங்கங்களில் இருக்கும் தோழர்களது உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்காமல் போயிருந்தால் இந்தப் பணியை நம்மால் செய்திருக்க முடியாது.

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கங்கள் 140-141

5

வேலைத்திட்டத்தின் பொதுவான அரசியல் பிரிவினது மூன்றாவது ஷரத்தின் நகல்[84]

(எட்டாவது கட்சிக் காங்கிரசின் வேலைத்திட்டக் கமிஷனுக்காக)

முதலாளித்துவ ஜனநாயகமானது, எல்லா குடிமக்களுக்கும் சமநிலையில் பயன்படத்தக்க சம்பிரதாயமான உரிமைகளை, உதாரணமாக, கூட்டம் கூடும் உரிமை, சங்கம் சேரும் உரிமை, பத்திரிகை சுதந்திரம் இத்தியாதிகளை பிரகடனப் படுத்துவதோடு நின்று கொண்டது. உயர்ந்த பட்சம் இந்த அம்சங்கள் மீதான சட்டம் சார்ந்த தடைவரம்புகள் எல்லாம் மிகுந்த ஜனநாயக முதலாளித்துவக் குடியரசுகளில் ஒழிக்கப் பட்டன. ஆனால் உண்மையில் ஆட்சி நிர்வாகச் செயல் முறைகளும் முக்கியமாக உழைக்கும் மக்களின் பொருளாதார அடிமைத்தனமும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் அவர்கள் இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் பரந்த அளவில் பயன்படுத்துவதை எப்போதும் சாத்தியமற்றதாக்கின.

இதற்கு மாறாக, பாட்டாளி வர்க்க அல்லது சோவியத் ஜனநாயகம் உரிமைகளையும், சுதந்திரங்களையும் சம்பிரதாயமாகப் பிரகடனம் செய்வதற்குப் பதிலாக, முதலாவதாயும் முக்கியமாயும் முதலாளித்துவத்தால் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கு, அதாவது பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயி மக்களுக்கு அவற்றை நடைமுறையில் உத்தரவாதம் செய்கிறது. இந்த நோக்கத்துடன் சோவியத் ஆட்சி அதிகாரம் முதலாளிகளின் கட்டடங்கள், அச்சு இயந்திரங்கள், காகித இருப்புக்களைப் பறிமுதல் செய்து அவற்றை உழைக்கும் மக்களும் அவர்களது அமைப்புகளும் முற்றாகப் பயன் படுத்தும்படி முன்வைக்கிறது.

ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் பணி, மேலும் மேலும் விரிவான அளவில் உழைக்கும் மக்கள் திரளினரை அவர்களது ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை செயலாட்சி செய்யுமாறு ஈர்ப்பதாகும், இதற்கான பொருளாயத சாத்தியக்கூறுகளை விஸ்தரிப்பதும் ஆகும்.

1919 மார்ச் 20க்கு முன்பாக எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கம் 185

கிராமபோன் தட்டுக்களில் பதியப்பெற்ற பேச்சுக்கள்[85]

என்பதிலிருந்து

பேலா குன்ருேடு கம்பியில்லாத் தொலைபேசி மூலம் நடத்திய பேச்சுக்கள் பற்றிய அறிவிப்பு

ருஷ்யாவில் அவர் இன்னும் போர்க் கைதியாக இருந்த போதே பேலா குன்னை எனக்கு மிக நன்ருகத் தெரியும். கம்யூனிசம் மற்றும் கம்யூனிசப் புரட்சி பற்றி விவாதிப்பதற்காக என்னைப் பல தடவைகள் அவர் சந்தித்து இருக்கிருர். எனவே, ஹங்கேரிய கம்யூனிசப் புரட்சி[86] பற்றிய செய்தி கிட்டியபோது, அதுவும் தோழர் பேலா குன்னின் கையெழுத்திட்ட அறிவிப்பில் இத்தகவல் கிட்டியபோது நாங்கள் அவரோடு பேசவும் புரட்சி துல்லியமாயும் எந்த நிலையில் உள்ளது என்பதை அவர்மூலமே கேட்டுத் தெரிந்துகொள்ளவும் விரும்பினேம். இதைக் குறித்து எங்களுக்குக் கிடைத்த முதல் அறிவிப்பு, ஒருவேளை சோஷலிஸ்டுகள் எனப்படுவோர் அல்லது துரோகி-சோஷலிஸ்டுகள் ஏதோ ஒரு சூதில் இறங்கி விட்டார்கள், கம்யூனிஸ்டுகளை ஏமாற்றிவிட்டார்கள், அதுவும் கம்யூனிஸ்டுகள் சிறையில் இருப்பதால் அப்படிச் செய்துவிட்டார்கள் என்று அஞ்சுவதற்கு முகாந்திரமாக இருந்தது. எனவே ஹங்கேரியப் புரட்சி பற்றிய முதல் அறிவிப்பு கிடைத்த மறுநாள் நான் புடாபெஸ்டுக்கு ஒரு கம்பியில்லாத் தொலைபேசி மூலம் செய்தி ஒன்றை அனுப்பினேன். பேலா குன்னைத் தொலைபேசிக்கு வருமாறு கேட்டுக்கொண்டேன். உண்மையில் அவர்தான் பேசுகிருர் என்று உறுதி செய்து கொள்ள இயலும் வகையில் அவரிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டேன். அரசாங்கத்தின் தன்மை மற்றும் அதன் மெய்யான கொள்கைக்கு உண்மையிலேயே

என்ன உத்தரவாதங்கள் இருக்கின்றன என்று அவரைக் கேட்டேன்.[87] தோழர் பேலா குன்னின் பதில் முற்றும் திருப்திகரமாக இருந்தது, எங்கள் ஐயப்பாடுகளையெல்லாம் நீக்கியது. அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி அவரோடு ஆலோசனை செய்ய, இடதுசாரி சோஷலிஸ்டுகள் பேலா குன்னைச் சிறைச்சாலையில் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது. அதுவும் கம்யூனிஸ்டுகளுடன் அனுதாபமாக இருந்த இந்த இடதுசாரி சோஷலிஸ்டுகளும் மற்றும் மத்தியில் இருந்தவர்களும் மட்டுமே இந்தப் புதிய அரசாங்கத்தை அமைத்தார்கள். அதே போதில் வலதுசாரி சோஷலிஸ்டுகள், துரோகி-சோஷலிஸ்டுகள், சமரசத்திற்கு வர முடியாதவர்கள், திருத்தவே முடியாதவர்கள், கட்சியை விட்டு வெளியேறினார்கள். தனி ஒரு தொழிலாளி கூட அவர்களைப் பின்பற்றிடவில்லை. பிந்தைய அறிவிப்புக்கள் ஹங்கேரிய அரசாங்கம் மிகவும் உறுதியாகவும், போக்கில் கம்யூனிஸ்ட்டாகவும் இருப்பதைக் காட்டியது. அதே போதில் நாங்கள் தொழில் துறை மீதான தொழிலாளர்கள் கண்காணிப்போடு ஆரம்பித்தோம், படிப்படியாக மட்டுமே தொழில் துறையைச் சமூகமயமாக்கினோம். தனது செல்வாக்கையும், மிகப் பெரிய மக்கள் திரளினர் தனக்குப் பின் நிற்கிறார்கள் என்ற திடநம்பிக்கையையும் துணையாகக் கொண்ட பேலா குன் உடனடியாக ஒரு சட்டம் இயற்றி, அதன்படி ஹங்கேரியில் உள்ள முதலாளித்துவ முறையில் நடத்தப்பட்டு வந்த எல்லாத் தொழில் நிறுவனங்களையும் பொதுச் சொத்தாக மாற்ற முடிந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஹங்கேரியப் புரட்சி உடனடியாக அசாதாரண விரைவோடு கம்யூனிசப் பாதையை மேற்கொண்டு விட்டது என்று நாங்கள் முற்றும் உறுதிப்பாடாக அறிந்து கொண்டோம். முதலாளித்துவ வர்க்கம் தானாகவே ஹங்கேரியக் கம்யூனிஸ்டுகளிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தது. ஆபத்தான ஒரு நெருக்கடி இடைப்படும்போது, நாட்டுக்கு அபாயம் ஏற்படும்போது முதலாளித்துவ வர்க்கத்தால் ஆட்சி புரிய முடியாது என்பதை அது முழு உலகிற்கும் நிதர்சனப்படுத்திக் காட்டியது. உண்மையிலேயே மக்கள் ஆதரவு பெற்ற அரசாங்கம், மக்களால் உண்மையிலேயே நேசிக்கப்படும் அரசாங்கம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது—அது தொழிலாளர்கள், படையாளி

கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் அரசாங்கம் ஆகும்.

ஹங்கேரியில் சோவியத் ஆட்சி அதிகாரம் நீடூழி வாழ்க!

1919 மார்ச் கடைசியில்
நிகழ்த்தப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கங்கள் 232-233

பவேரிய சோவியத் குடியரசிற்கு வாழ்த்துச் செய்தி[88]

உங்களது வாழ்த்துச் செய்திக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். எங்கள் சார்பில் பவேரிய சோவியத் குடியரசுக்கு மனப் பூர்வமான வாழ்த்துக் கூறுகிறோம். கீழ்வரும் காரியங்கள் பற்றி மேலும் அடிக்கடியும், திட்டவட்டமாகவும் தகவல் தரும்படி வற்புறுத்திக் கேட்கிறோம்: முதலாளித்துவக் கொலைகாரர்களாகிய ஷெய்டெமன்கள் வகையறுவை எதிர்த்துப் போரிட நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளீர்கள்? நகரத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களது சோவியத்துகள் அமைத்து விட்டீர்களா? தொழிலாளர்கள் ஆயுதபாணியாக்கப்பட்டு விட்டார்களா? முதலாளித்துவ வர்க்கத்தினரின் ஆயுதங்கள் பறித்துவிடப்பட்டதா? இருக்கின்ற துணி இருப்புக்களும் இதர பொருட்களும் தொழிலாளர்களுக்கும், குறிப்பாக பண்ணைத் தொழிலாளர்களுக்கும், சிறுதர விவசாயிகளுக்கும் உடனடியாகவும் பரவலாயும் உதவிடப் பயன்படுத்தப் பட்டு விட்டனவா? மூனிக்கிலுள்ள முதலாளித்துவ தொழிற்சாலைகளும் செல்வமும் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள முதலாளித்துவ பண்ணைகளும் பறிமுதல் செய்யப்பட்டு விட்டனவா? சிறுதர விவசாயிகளின் அடமானம் மற்றும் குத்தகை செலுத்தல்களும் ஒழிக்கப்பட்டு விட்டனவா? பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர்களது ஊதியங்கள் இரண்டு அல்லது மூன்று மடங்காக உயர்த்தப்பட்டு விட்டனவா? எல்லாக் காகித இருப்புகளும், அனைத்து அச்சு இயந்திரங்களும் பொது மக்களுக்குத் தேவையான ஜனரஞ்சகமான பிரசுரங்கள் மற்றும் செய்திப்

பத்திரிகைகளை அச்சடிப்பதற்கென பறிமுதல் செய்யப் பட்டனவா? இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு அரசு நிர்வாக இயலில் பயிற்சியளிப்பதுடன் கூடிய ஆறு மணி நேர வேலைநாள் கொண்டு வரப்பட்டு விட்டதா? மூனிக்கிலுள்ள முதலாளித்துவ வர்க்கம் தம்மிடம் உபரியாக இருக்கும் வீடு களைக் கொடுத்து விடும்படி செய்து, அதன் வழி தொழிலாளர் கள் வசதியான குடியிருப்புகளில் உடனே குடியேறும்படி செய்தாகி விட்டதா? வங்கிகளையெல்லாம் நீங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்களா? முதலாளித்துவ வர்க்க அணிகளி லிருந்து பிணையாட்களைப் பிடித்து இருக்கிறீர்களா? முத லாளித்துவ வர்க்கத்தாருக்கு கொடுப்பதை விட அதிகப் படி யான ரேஷன்களை தொழிலாளர்களுக்கு கொடுக்கும் முறை புகுத்தப்பட்டிருக்கிறதா? பாதுகாப்பிற்காகவும் அண்டையி லுள்ள கிராமங்களில் சித்தாந்த பிரச்சாரம் செய்யவும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரட்டப்பட்டு விட்டார் களா? இவையும் இவை போன்ற நடவடிக்கைகளையும் மிகுந்த அவசரமாகவும், பரந்த அளவிலும் அமல் நடத்துவது— தொழிலாளர், பண்ணைத் தொழிலாளர் பிரிவுகள் மற்றும் அவற்றிடமிருந்து பிரிந்து செயல்படும் சிறுதர விவசாயிகள் சோவியத்துகளின் முன்முயற்சியோடு இணைந்தும்—உங்களது நிலைவரத்தை வலுப்படுத்த வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தின் மீது அவசரகால வரி ஒன்று விதிக்கப்பட வேண்டும், தொழிலாளர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் சிறுதர விவசாயிகள் ஆகியோரது நிலைமையில் உட னடியாகவும் எப்பாடுபட்டும் உண்மையான முன்னேற்றம் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

உளம் நிறை வாழ்த்துக்களும், வெற்றிக்கான நல் வாழ்த் துக்களும்.

லெனின்

1919 ஏப்ரல் 27ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கங்கள் 321-322

முதியோர் கல்வி பற்றிய முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய, சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிய கோஷங்களைக் கொண்டு மக்கள் ஏமாற்றப்படுதல் என்ற உரை[89]

மே 19, 1919

என்பதிலிருந்து

உலக மூலதனத்திற்கு எதிராக நாம் போராட வேண்டும் என்பதை முற்றிலும் நன்றாக அறிவோம்; ஒரு காலத்தில் உலக மூலதனத்தின் பணி சுதந்திரத்தை உருவாக்குவதாக இருந்தது என்பதையும், அது நிலப்பிரபுத்துவ அடிமைத் தனத்தைத் தூக்கி எறிந்தது என்பதையும், முதலாளித்துவ வகை சுதந்திரத்தை உருவாக்கியது என்பதையும் முற்றிலும் நன்றாக அறிவோம். இது உலக வரலாறு படைத்திடும் முன்னேற்றம் என்பதை நாம் முற்றிலும் நன்றாக அறிவோம். இருந்தபோதிலும், நாம் பொதுவாக முதலாளித்துவத்தை, குடியரசு முதலாளித்துவம், ஜனநாயக முதலாளித்துவம், சுதந்திர முதலாளித்துவம் ஆகியவற்றை எதிர்ப்பதாகக் கூறுகிறோம். எமக்கு எதிராக அது சுதந்திரக் கொடியை உயர்த்தும் என்பதை நாங்கள் திண்ணமாக அறிவோம். ஆனால் அதற்கு நாங்கள் பதில் வைத்திருக்கிறோம். நமது வேலைத் திட்டத்தில் இதற்குரிய இந்தப் பதிலைக் கொடுப்பது அவசியம் என்று நாங்கள் கருதினோம். மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து தொழிலாளர்கள் மீட்சி அடைவதற்கு எதிராக இருக்குமானால், சுதந்திரம் என்பது வெறும் ஏமாற்றாக இருக்கும்.

ஆனால் ஒருவேளை இது இப்படியில்லையோ? ஒருவேளை சுதந்திரத்துக்கும் தொழிலாளர் மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து மீட்சி பெறுவதற்கும் இடையே முரண்பாடு ஏதும் இல்லையோ? நீங்கள் போயிருக்கிற அல்லது அவைகளைப் பற்றிப் படித்துப் பார்த்திருக்கிற மேற்கு ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு

புத்தகமும் அவர்களது அமைப்பை உச்சமான சுதந்திர அமைப்பாக வருணிக்கின்றது. மேற்கு ஐரோப்பாவின் இந்த நாகரிகம் பெற்ற நாடுகள்—பிரான்சும் பிரிட்டனும் அமெரிக்காவும்—இந்தப் பதாகையை உயர்த்திப்பிடித்து ''சுதந்திரத்தின் பெயரால்'' போல்ஷிவிக்குகளுக்கு எதிராக நடைபோடுகின்றன. முன் ஒரு நாள்—இப்போது பிரெஞ்சு செய்தித்தாள்களை நாம் பெறுவது அரிதாக இருக்கிறது, ஏனெனில் நாம் முழுவதுமாக சுற்றி வளைக்கப்பட்டு இருக்கிறோம். இருப்பினும் ரேடியோச் செய்திகளைப் பெறுகிறோம், அவர்கள் காற்றைத் தடை செய்து விடமுடியாது அல்லவா! நாம் வெளி நாட்டு செய்திகள் ரேடியோ மூலம் அனுப்பப்படுவதை இடைமறித்துக் கேட்டுக் கொள்கிறோம்—அன்றைக்கு ஒரு நாள் பிரான்சின் கொள்ளைக்கார அரசாங்கம் அனுப்பிய செய்தி ஒன்றை நான் வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அதில், போல்ஷிவிக்குகளோடு போராடிக் கொண்டும், அவர்களது எதிரிகளை ஆதரித்தும் வருவதால் பிரான்ஸ் நாடு தனது ''உயரிய சுதந்திர இலட்சியங்களுக்கு'' உண்மையாய் நடந்து கொள்வதாகக் கூறப்பட்டது. ஒவ்வொரு படியிலும் இம்மாதிரியான செய்திகளைக் கேள்வியுறுகிறோம். இது நமக்கு எதிரான அவர்களது விவாதக் கட்டுரைகளின் பொதுவான தொனியாகும்.

அவர்கள் சுதந்திரம் என்று கூறுவதன் பொருள் யாது? இந்த நாகரிகம் படைத்த பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், அமெரிக்கர் உதாரணமாக கூட்டம் கூடும் சுதந்திரம் என்பதை சுதந்திரமாகக் கருதுகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் ''அனைத்துக் குடிமக்களுக்கும் கூட்டம் கூடும் உரிமையுண்டு'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் சொல்லுகிறார்கள்: ''இதுதான் சாரம். இதுதான் சுதந்திரத்தின் பிரதான வெளிப்பாடு. போல்ஷிவிக்குகளாகிய நீங்கள் கூட்டம் சேரும் சுதந்திரத்தை உடைத்து விட்டீர்கள்.''

இதற்கு நாம் கூறும் பதில்: பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்கர்களாகிய நீங்கள் சுதந்திரம் பற்றிப் பிரசங்கிப்பது உண்மையில் வெறும் ஏமாற்று. ஏனெனில் அது, மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து தொழிலாளர்கள் விடுதலை பெறுவதற்கு எதிராக இருக்கிறது. நாகரிகம் படைத்த கனவான்

களே, நீங்கள் ஒரு சிறு விஷயத்தை மறந்து விட்டீர்கள். தனியார் சொத்துரிமையை அனுமதித்திடும் ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உங்களது சுதந்திரம் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள். இது தான் முழு விஷயம்.

உங்களது அரசியல் அமைப்புச் சட்டத்தில் சுதந்திரத்தை தனியார் சொத்துரிமைக்கு அக்கம் பக்கமாக வைத்து இருக்கிறீர்கள். கூட்டம் கூடும் சுதந்திரத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் எனும் மெய்நடப்பு உள்ளபடியே நிலப்பிரபுத்துவ முறையோடும், மத்தியகாலப் போக்கோடும், அடிமையுடைமை முறையோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் விரிவான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் இந்தச் சுதந்திரத்தைச் சாதகமாகப் பற்றிக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்திற்கு முதலாளித்துவ ஆதிக்கத்தைத் தூக்கி எறிவது எப்படி என்று போதித்த போது எல்லா சோஷலிஸ்டுகளும் இதை ஒத்துக் கொண்டார்கள்.

ஆனால் உங்களது சுதந்திரம் வெறும் காகித சுதந்திரமே, உண்மையானது அல்ல. பெரிய நகரங்களில் காணப்படும் பெரிய மண்டபங்கள் எல்லாம்—இந்த மண்டபத்தை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்—முதலாளிகளுக்கும், நிலச்சொந்தக்காரர்களுக்கும் உரிமையானவை. சில சமயங்களில் அவை ''கனவான்களுக்கான கூட்ட மண்டபங்கள்'' என்று அழைக்கப் பெறுவதுண்டு. ருஷ்ய ஜனநாயகக் குடியரசின் குடிமக்களே, இந்த மண்டபங்களில் நீங்கள் சுதந்திரமாகக் கூடலாம். ஆனால் இவையெல்லாம் தனியார் உடைமை என்பதை நினைவில் கொள்ளுங்கள். இவ்வாறு சொல்வதற்கு என்னை மன்னியுங்கள், நீங்கள் தனியார் உடைமைக்கு மரியாதை செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் நீங்கள் போல்ஷிவிக்குகளாக, குற்றவாளிகளாக, கொலைகாரர்களாக, கொள்ளைக்காரர்களாக, விஷமிகளாகக் கருதப்படுவீர்கள். ஆனால் நாங்கள் சொல்கிறோம்: ''இவையெல்லாவற்றையும் நாங்கள் மாற்றுவோம். இந்த கூட்ட மண்டபத்தைத் தொழிலாளர் அமைப்புகளுக்குரிய இடமாக முதலில் உருமாற்றுவோம், அதற்கப்புறம் கூட்டம் சேரும் சுதந்திரம் பற்றிப் பேசிடுவோம்.'' சுதந்திரத்தை பறித்து விட்டோம் என்பதாக

எங்களைக் குறை சொல்கிறீர்கள். ஆனால் நாங்கள், அனைத்து சுதந்திரமும், மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து தொழிலாளரை விடுவித்தல் எனும் பணிக்குக் கீழ்ப்பட்டு இராவிட்டால் அது வெறும் ஏமாற்று என்கிறோம். எல்லா முதலாளித்துவக் குடியரசுகளின் அரசியல் அமைப்புச்சட்டங்களிலும் பொறிக்கப்பட்டுள்ள கூட்டம் சேரும் சுதந்திரம் ஓர் ஏமாற்று. ஏனெனில் ஒரு நாகரிகம் படைத்த நாட்டில் கூட்டம் ஒன்றைக் கூட்டிட, அதற்கு ஓர் இடம் தேவை, அது மாரிக் காலத்தை இன்னும் ஒழித்து விடவில்லை, தட்ப வெப்ப நிலையை மாற்றி விடவில்லை; அதோடு இந்த மண்டபங்களில் சிறந்தன எல்லாம் தனியார் உடைமையாக இருக்கின்றன. முதலில் இந்த சிறந்த மண்டபங்களைப் பறிமுதல் செய்வோம், அப்புறம் சுதந்திரம் பற்றிப் பேசுவோம்.

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கங்கள் 347-349

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவரது வினாக்களுக்கு விடைகள்[90]

என்பதிலிருந்து

5. எல்லாவற்றிற்கும் மேலாக, கீழ்வருவனவற்றை அமெரிக்கப் பொதுமக்களுக்குக் கூறிட விரும்புகிறேன்.

நிலப்பிரபுத்துவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் முதலாளித்துவம், ''சுதந்திரம்'', ''சமத்துவம்'',''ஜனநாயகம்'' மற்றும் ''நாகரிகம்'' எனும் பாதையில் ஒரு வரலாற்றுச் சிறப்புடைய முன்னேற்றமாகும். இருந்தபோதிலும், முதலாளித்துவம் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களான தொழிலாளர் மற்றும் விவசாயிகள் அற்பமான சிறுபான்மையிலுள்ள நவீன ('moderne') அடிமை உடைமையாளர்களான நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் முதலாளிகளால் அடிமைப் படுத்தப்படும் கூலி அடிமை அமைப்பு முறையாக இருந்தது, இன்றும் இருக்கிறது. நிலப்பிரபுத்துவத்தோடு ஒப்பிடும் போது முதலாளித்துவ ஜனநாயகம் இந்தப் பொருளாதார அடிமைத்தனத்தின் வடிவத்தை மாற்றியுள்ளது, இதற்குப் பளபளப்பான திரை ஒன்றை உருவாக்கி விட்டது, ஆனல் அதன் சாரத்தை மாற்றவில்லை, மாற்றவும் முடியாது. முதலாளித்துவம் மற்றும் முதலாளித்துவ ஜனநாயகம் என்பவையெல்லாம் கூலி அடிமைத்தனமே.

பொதுவாக தொழில் நுட்பத்திலும், குறிப்பாக போக்குவரத்து சாதனங்களிலும் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய முன்னேற்றமும், மூலதனம் மற்றும் வங்கிகளது பிரம்மாண்ட வளர்ச்சியும், முதலாளித்துவம் முதிர்ச்சியும் மிகைமுதிர்ச்சியும் அடைவதில் சென்று முடிந்துள்ளன. அது தனது கால அளவைக் கடந்து விட்டது. மனித இன முன்னேற்றத்திற்கு

மிகவும் பிற்போக்கான இடையூருக அது ஆகிவிட்டது. விரல் விட்டு எண்ணக்கூடிய லட்சாதிபதிகள் மற்றும் கோடீச்வரர்கள் ஆகியோரின் பரம அதிகாரமாகக் குறுக்கப்பட்டுவிட்டது. ஏகாதிபத்தியத்தின் கொள்ளைப் பொருட்களையும், காலனிகள் மீதுள்ள அதிகாரத்தையும், நிதி "செல்வாக்கு மண்டலங்களையும்" அல்லது "ஆட்சி புரிவதற்கான உரிமைக் கட்டளைகளையும்" பெற வேண்டியவர்கள் கொள்ளைக்காரர்களின் ஜெர்மானியப் பிரிவினரா அல்லது ஆங்கில-பிரெஞ்சு பிரிவினரா என்பதை முடிவு செய்வதற்கு முழு தேசங்களையும் இரத்தக் களரியில் தள்ளுகிருர்கள் இவர்கள்.

இதே காரணத்திற்காக, இந்தக் காரணத்திற்காக மட்டுமே 1914-18ஆம் ஆண்டுப் போரின் போது பல கோடி மக்கள் கொல்லப்பட்டனர் அல்லது முடமாக்கப்பட்டனர். இந்த மெய்நடப்பு பற்றிய அறிவு வெல்லற்கரிய வலுவுடனும் விரைவுடனும் அனைத்து நாடுகளின் உழைக்கும் மக்கள் மத்தியில் பரவி வருகிறது. இந்தப் போர் எல்லா இடங்களிலும் இணையற்ற அழிவை ஏற்படுத்திவிட்டதாலும், போர்க் கடன்கள் மீதான வட்டி எல்லா இடங்களிலும் "வெற்றி பெற்ற" நாடுகளாலும் கூடச் செலுத்த வேண்டி இருப்பதாலும் இது மேலும் பரவி வருகிறது. இந்த வட்டி என்ருல் என்ன? இலட்சோப லட்சக் கணக்கான மக்கள் இந்தக் கோடீச்வரக் கனவான்களுக்குச் செலுத்தும் கப்பம் ஆகும். காரணம், முதலாளிகள் இலாபங்களை எவ்வாறு பங்கிட்டுக் கொள்வது என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தக் கனவான்கள் பல இலட்சம் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒருவரையொருவர் கொன்று கொள்ளவும், முடமாக்கிக் கொள்ளவும் அன்புடன் அனுமதித்தார்கள்.

முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது. மக்கள் திரளினரின் புரட்சிகர உணர்வு எங்கணும் வளர்ந்தோங்கிவருகிறது. இதற்கான ஆயிரக்கணக்கான அடையாளங்கள் உள்ளன. ஒரு சிறிய அடையாளம், முக்கியமல்லாதது தான் என்ருலும் அற்பவாதியின் உணர்ச்சியைத் தூண்டக் கூடியது: அன்ரீ பர்பியூஸ் என்பவர் எழுதியுள்ள நவீனங்கள் (*Le feu*, *Clarté*). இவர் போருக்குச் சென்றபோது அமைதியான, அடக்கமான, சட்டத்திற்குக் கீழ்ப்படியும் ஒரு குட்டி

முதலாளித்துவ நபராக, ஓர் அற்பவாதியாக, சாமான்ய மனிதராகவே காட்சியளித்தார்.

முதலாளிகள், முதலாளித்துவ வர்க்கத்தினர் ஒரு நாட்டில் அல்லது இன்னொரு தனி நாட்டில், இன்னும் இலட்சோப லட்சக்கணக்கான தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கொன்று குவித்திடும் ஒரு பிரதிகூல வழியில் "ஆக முடிந்தால்" சோஷலிசத்தின் வெற்றியை தள்ளிப் போட முடியும். ஆனால் அவர்கள் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற முடியாது. முதலாளித்துவத்தின் இடத்தை சோவியத் குடியரசு பிடித்துக் கொண்டு விட்டது. உழைக்கும் மக்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு மட்டுமே இது ஆட்சி அதிகாரத்தை வழங்குகிறது. பாட்டாளி வர்க்கத்தினரிடம் அவர்களது விடுதலைக்கான தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கிறது. நிலம், தொழிற்சாலைகள், இன்னும் இதர உற்பத்தி சாதனங்கள் ஆகியவற்றில் தனியார் சொத்துடைமையை ஒழித்து விடுகிறது. ஏனெனில் இந்தத் தனியார் சொத்துடைமைதான் பலரை ஒரு சிலர் சுரண்டுவதற்கு ஆதாரமாக இருக்கிறது, இதுதான் மக்கள் திரளினரின் வறுமைக்குத் தலையூற்று, நாடுகளுக்கிடையேயான கொள்ளைக்காரப் போர்களுக்கு, முதலாளிகளை மட்டும் செல்வந்தர்களாக்கும் போர்களுக்கு மூலகாரணமாக இருக்கிறது.

உலக சோவியத் குடியரசின் வெற்றி நிச்சயம்.

முடிவாக ஒரு சிறிய எடுத்துக்காட்டு: அமெரிக்க முதலாளித்துவ வர்க்கத்தினர் தங்களது நாட்டின் சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் பற்றி ஜம்பமடித்து மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் இந்த முதலாளித்துவ வர்க்கத்தினரோ அல்லது வேறெந்த முதலாளித்துவ வர்க்கத்தினரோ, அல்லது உலகில் உள்ள எந்த ஓர் அரசாங்கமோ உண்மையான சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகத்தின் அடிப்படையில் எங்களது அரசாங்கத்தோடு ஒரு போட்டியை ஏற்றுக் கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்ள அஞ்சுகிறார்கள். துண்டுப்பிரசுரங்களை அரசாங்கத்தின் பெயரால் எந்த மொழியிலாகிலும் வெளியிடப் பெற்றவைகளை, அந்த நாட்டின் சட்டங்கள் பற்றிய வாசகம், அதன் அரசியல் அமைப்புச் சட்டம் பற்றிய வாசகம், ஏனையோர்கள் மீதான அதன் மேம்பாடு பற்றிய ஒரு விளக்கம் முதலியன அடங்கிய பிரசுரங்களைப் பரிமாறிக்

கொள்ளுவதற்குரிய சுதந்திரத்தை எங்களது அரசாங்கத்திற்கோ, இன்னொரு அரசாங்கத்திற்கோ உத்தரவாதமளிக்கும் ஒரு ஒப்பந்தம் இருப்பதாக வைத்துக் கொள்வோம்.

இப்படிப்பட்டதொரு சமாதானமான, நாகரிகம் மிக்க, சுதந்திரமான, சமத்துவமான, ஜனநாயக ஒப்பந்தத்தை எங்களோடு உலகில் உள்ள எந்த ஒரு முதலாளித்துவ அரசாங்கமும் செய்துகொள்ளத் துணியாது.

ஏன்? ஏனென்றால் சோவியத் அரசாங்கங்கள் நீங்கலாக, மற்றெல்லா அரசாங்கங்களும் மக்கள் திரளினரை ஒடுக்கியும், ஏமாற்றியும் அதிகாரத்தில் இருக்கின்றன. ஆனால் 1914-18 மாபெரும் போர் இந்த மாபெரும் ஏமாற்றத்தை அம்பலப்படுத்தியது.

1919 ஜூலை 20

லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 115-117

கட்சி சார்பற்ற உழைக்கும் பெண்களின் நான்காவது மாஸ்கோ நகர மாநாட்டில் ஆற்றிய உரை செப்டம்பர் 23, 1919

என்பதிலிருந்து

சோவியத் குடியரசில் பெண்களின் தொழிலாளி இயக்கத்தின் கடமைகள் குறித்து

லட்சக் கணக்கான பேர்களை ஈடுபடுத்தும் அமைப்புத் துறைப் பணிகள் மாத்திரமல்ல நமக்குத் தேவை; மிகச்சிறிய அளவிலான அமைப்புத்துறைப் பணியும் நமக்கு வேண்டும், இது பெண்கள் பணி புரிவதை சாத்தியமாக்குகிறது. இராணுவத்திற்கு உதவிடும் பிரச்சினையாயினும் சரி, அல்லது இராணுவத்திற்குள் கிளர்ச்சிப் பிரசாரம் நடத்தும் பணியாயினும் சரி, பெண்கள் போர்ச் சூழல்களின் கீழ் பணி புரிந்திட முடியும். இவையெல்லாவற்றிலும் பெண்கள் செயலூக்கமான பங்கெடுக்க வேண்டும். அப்படியானால்தான் செஞ்சேனை தன் மீது கவனம் செலுத்தப்படுகிறது, ஆர்வ அக்கறை காட்டப்படுகிறது என்று காண முடியும். உணவு வினியோகத் துறையிலும் பெண்கள் பணிபுரியலாம். பொது உணவு விடுதிகளில் உள்ள சேவையை மேம்படுத்தலாம். பெத்ரோகிராதில் பெருவாரியாக உள்ளது போல எங்கும் உணவுச் சாலைகளை அவர்கள் திறக்கலாம்.

இத்துறைகளில்தான் உழைக்கும் பெண்களின் செயல்பாடுகள் மிகுந்த அமைப்புத் துறை முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றன. பெரிய சோதனைப் பண்ணைகள் அமைப்பதிலும் அவைகளை நடத்துவதிலும் உழைக்கும் பெண்களது பங்கேற்பு மிகவும் அவசியமானது. இது தனிப்பட்ட பண்ணைகள் விஷயத்தில் மட்டும் நடைபெறக்கூடாது. ஏராளமான உழைக்கும் பெண்கள் பங்கேற்காமல் இதை நிறைவேற்றிட முடியாது. உணவு வினியோகத்தை மேற்பார்வையிடும் துறையில் உழைக்கும் பெண்கள் மிகவும் உதவியாக

இருப்பார்கள். உணவுப் பண்டங்கள் இலகுவாக கிடைக்கும் படி செய்வதிலும் உதவியாக இருப்பார்கள். இந்தப் பணி யானது கட்சி சார்பற்ற உழைக்கும் பெண்களால் சிறப்புறச் செய்ய முடியும். இதற்கிடையில் இந்தப் பணியின் நிறை வேற்றம் சோஷலிச சமுதாயத்தை வலுவூட்ட வேறு எதை யும் விட அதிகமாக உதவும்.

நிலத்தில் தனியார் உடைமையை நாம் ஒழித்து விட் டோம். தொழிற்சாலைகள் தனியார் உடைமையாக இருப்ப தையும் கிட்டத்தட்ட முழுமையாக ஒழித்து விட்டோம். இப்போது சோவியத் அரசாங்கம், அனைத்து உழைக்கும் மக்கள், கட்சியினரும் கட்சியில் இல்லாதவர்களும், பெண் களும் ஆண்களும் இந்தப் பொருளாதார வளர்ச்சியில் பங் கேற்பதை உறுதிப்படுத்த முயல்கிறது. சோவியத் ஆட்சி அதிகாரம் இவ்வாறு துவங்கியுள்ள இந்தப் பணி, வெறும் நூற்றுக் கணக்கானோர் பணி புரிவதற்குப் பதிலாக, ருஷ்யா முழுவதிலுமுள்ள லட்சக் கணக்கான பெண்மணிகள் இதில் பங்கேற்றால் மட்டுமே முன்னேற்றமடைய முடியும். அப்படி யானால் சோஷலிச வளர்ச்சி என்ற நோக்கம் மிகவும் சிறப் பானதாக அமையும் என்பது திண்ணம். அப்படியானால் உழைக்கும் மக்கள், நிலச் சொந்தக்காரர்கள், முதலாளி களின் உதவியின்றி தங்கள் நாட்டில் தாங்கள் வாழவும் அதை நிர்வாகம் புரியவும் முடியும் என்பதை நிச்சயம் காட்டிட முடியும். அப்போது சோஷலிசக் கட்டுமானம் ருஷ்யாவில் சிறந்த அடிப்படையில் அமைந்திடும், வேறு நாடுகளில் உள்ள வெளி விரோதிகளோ ருஷ்யாவிற்குள் இருக்கும் விரோதிகளோ எவரும், சோவியத் குடியரசிற்கு எவ்வித அபாயத்தையும் விளைவிக்க முடியாது போகும்.

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 204-205

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளாதாரமும் அரசியலும்

எனும் கட்டுரையிலிருந்து

2

நமது நாட்டின் மிகப் பெரிய பின்தங்கிய நிலைமை மற்றும் குட்டிமுதலாளித்துவத் தன்மை காரணமாக ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து சில தனிப்பட்ட இயல்புகளில் நிச்சயமாயும் தவிர்க்க முடியாத வகையில் வேறுபடும். ஆனால் அடிப்படையான சக்திகளும் சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை வடிவங்களும் வேறு எந்த ஒரு முதலாளித்துவ நாட்டிலும் இருப்பது போலவே ருஷ்யாவிலும் இருக்கும், எனவே தனிப்பட்ட இயல்புகள் குறைந்த முக்கியத்துவமுடையவற்றுக்கு மட்டுமே பொருந்தும்.

சமூகப் பொருளாதாரத்தின் இந்த அடிப்படை வடிவங்கள்: முதலாளித்துவம், சிறு பண்ட உற்பத்தி, கம்யூனிசம். இந்த அடிப்படை சக்திகள்: முதலாளித்துவ வர்க்கம், குட்டி முதலாளித்துவ வர்க்கம் (குறிப்பாக விவசாயிகள்), பாட்டாளி வர்க்கம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் ருஷ்யாவின் பொருளாதார அமைப்பு கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளின் மீது ஒரு பரந்த அரசின் அளவுக்கு ஒன்றிணைந்துள்ள, தனது முதல் படிகளை மேற்கொண்டுள்ள உழைப்பின் போராட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது—இது சிறு பண்ட உற்பத்தியை எதிர்த்தும், தொடர்ந்து நிலவும் முதலாளித்துவத்தை எதிர்த்தும், சிறுபண்ட உற்பத்தியை அடிப்படையாக்கிய முதலாளித்துவத்தை எதிர்த்தும் நடைபெறும் போராட்டமாகும்.

ருஷ்யாவில் முதலாவதாக, உற்பத்தி சாதனங்களின் தனியார் உடைமை ஒழிக்கப்பட்டு விட்டது, இரண்டாவதாக, பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரம் தேசிய அளவில் அரசுக்கு உடைமையான நிலத்திலும் அரசுக்கு உடைமையான நிறுவனங்களிலும் பெருவீத உற்பத்தியை ஒழுங்கமைத்து வருகிறது, பல்வேறு தொழில் துறைகளுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் உழைப்புச் சக்தியை வினியோகம் செய்கிறது, உழைக்கும் மக்களிடையில் அரசுக்குச் சொந்தமான நுகர்வுப் பொருள்களைப் பெரிய அளவில் வினியோகித்து வருகிறது. இவற்றை எல்லாம் பொறுத்த வரை ருஷ்யாவில் உழைப்பானது கம்யூனிஸ்டு முறையில் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

நாம் ருஷ்யாவில் கம்யூனிசத்தின் ''முதல் படிகள்'' பற்றிப் பேசுகிறோம் (1919 மார்ச் மாதத்தில் ஏற்கப்பட்ட எமது கட்சியின் வேலைத்திட்டத்திலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது), காரணம் இந்த நிபந்தனைகள் யாவும் எமது நாட்டில் ஒரு பகுதியளவிலேயே செயல்படுத்தப்பட்டுள்ளன, அல்லது வேறுவிதமாகக் கூறினால் அவற்றின் சாதனைகள் அவற்றின் ஆரம்ப கட்டங்களில் மட்டுமே உள்ளன. நாம் ஒரே ஒரு புரட்சிகரத் தாக்குதலில் பொதுவாக மிக அவசரமாக வெற்றி சாதனையாக்கக் கூடிய அனைத்தையும் அவசரமாக வெற்றி சாதனையாக்கினோம்; உதாரணமாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் நாள் 1917 அக்டோபர் 26ல் (நவம்பர் 8) நிலத்திலிருந்த தனியுடைமை ஒழிக்கப்பட்டது—பெரிய நிலவுடைமையாளர்களுக்கு எவ்வித நஷ்டஈடும் அளிக்காமல் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒரு சில மாத அளவுக்குள் கிட்டத்தட்ட எல்லாப் பெரிய முதலாளிகளின் உடைமைகள்—ஆலை, கூட்டுப் பங்கு நிறுவனங்கள், வங்கிகள், ரயில்வே ஆகியவையும் — நஷ்டஈடின்றிப் பறிமுதல் செய்யப்பட்டன. தொழில் துறையில் பெருவீத உற்பத்திக்கான அரசாங்க அமைப்பும், ஆலைகள், ரயில்வேக்கள் சம்பந்தமாகத் ''தொழிலாளர் கண்காணிப்பிலிருந்து'' ''தொழிலாளர் நிர்வாகத்திற்கான'' மாற்றமும்— இது பெரும்பாலும் ஏற்கெனவே சாதனையாகிவிட்டது. ஆனால் விவசாயம் சம்பந்தப்பட்ட வரை இது இப்போது தான் துவங்கியது (''அரசாங்கப் பண்ணைகள்'', அதாவது

அரசுக்குச் சொந்தமான நிலத்தில் தொழிலாளர் அரசாங்கம் நிறுவிய பெரிய பண்ணைகள்). இதேபோல சிறு பண்டவிவசாயத்திலிருந்து கம்யூனிஸ்டு விவசாயத்திற்கான மாறுதல் கட்டம் என்ற முறையில் சிறிய விவசாயிகளின் பல்வேறு வடிவிலான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதும் இப்போது தான் தொடங்கியது.* தனியார் வர்த்தகம் அகற்றப்பட்டு அதனிடத்தில் அரசு நிர்வாகத்திலான பண்டங்கள் வினியோகம் நடத்தப்படுவது, அதாவது நகரங்களுக்குத் தானியங்களையும் கிராமப்புறங்களுக்குத் தொழிற்துறைப் பண்டங்களையும் அரசு கொள்முதல் செய்து வழங்குவது குறித்தும் இதையே கூற வேண்டும்.

1919, அக்டோபர் 30

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 272-274

---

* சோவியத் ருஷ்யாவிலுள்ள ''அரசாங்கப் பண்ணைகள்'' மற்றும் ''விவசாயக் கம்யூன்கள்'' எண்ணிக்கை நமக்குத் தெரிந்த வரை முறையே 3536 மற்றும் 1961ம் ஆகும். விவசாயக் கழகங்கள் எண்ணிக்கை 3696. எல்லா அரசாங்கப் பண்ணைகள் மற்றும் கம்யூன்கள் பற்றிய சரியான கணக்குகளை நமது மத்தியப் புள்ளிவிவர வாரியம் தற்போது எடுத்து வருகிறது. இதன் முடிவுகள் 1919 நவம்பரில் வெளிவரத் தொடங்கும்.

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளது மாஸ்கோ சோவியத்து, தொழிற்சங்கங்களின் அகில ருஷ்ய மத்திய கவுன்சில், தொழிற்சாலைக் கமிட்டிகள் ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் அக்டோபர் புரட்சியின் இரண்டாம் ஆண்டு விழாவையொட்டி ஆற்றிய உரை நவம்பர் 7, 1919

என்பதிலிருந்து

இந்தக் காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் புரிந்து கொள்வது நமக்குக் குறிப்பாக முக்கியமானதாகும். ஏனெனில் உலகமெங்கணும் இதே வழியில் வளர்ச்சி நடைபெற்றுள்ளது. தொழிற்சாலைத் தொழிலாளர்களும், இதர உழைக்கும் மக்களும் தங்கள் முதற்படிகளைத் தங்களது உண்மையான தலைவர்களோடு கூடச் சேர்ந்து எடுப்பதில்லை. பாட்டாளி வர்க்கம் தானே அரசாங்க ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டு வருகிறது, அரசியல் அதிகாரத்தை எடுத்துக் கொண்டுள்ளது. அவர்களது தலைமையில் குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்தின் பழைய தப்பெண்ணங்களை உடைத்திடும் தலைவர்களை எங்கும் பார்க்கிறோம். இந்தப் பழைய தப்பெண்ணங்களின் கருவிகளாக எமது நாட்டில் இருப்பவர்கள் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், ஐரோப்பா முழுமையிலும் முதலாளித்துவ அரசாங்கங்களது பிரதிநிதிகள் ஆவர். முன்பெல்லாம் இது விதிவிலக்காக இருந்தது, இப்போது பொது விதியாகிவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அக்டோபரில் ருஷ்யாவில் இருந்த முதலாளித்துவ அரசாங்கம்—மென்ஷிவிக்குகளோடும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களோடும் அது கொண்டிருந்த உறவு அல்லது கூட்டணி—தகர்க்கப்பட்டது. ஆனால் நமது வேலையை நிறைவேற்றும்போது, உண்மையான பிரதிநிதிகள், பாட்டாளி வர்க்க முன்னணி புரட்சிகரத் தொழிலாளர்கள், அரசதிகாரத்தை அமைக்க உள்ளபடியே பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு நிர்வாகத் துறையையும் பின்னர் புனரமைப்பு செய்ய வேண்டியிருந்தது என்பதை நாம்

அறிவோம். அது இரண்டாண்டுகளுக்கு முன்பு அக்டோபரில் நடைபெற்றது. அப்போது வேலையானது பயங்கர நெருக்குதலின் கீழ் நடந்தேறியது. இருந்தபோதிலும் இந்த வேலையானது இன்னும் முடிவு பெறவில்லை என்று நாம் அறிவோம், அதைச் சொல்லவும் வேண்டும். முன்பு அரசினை நடத்தியவர்கள் நம்மை எவ்வாறு எதிர்த்தார்கள் என்று நாம் அறிவோம். எவ்வாறு அதிகாரிகள் முதலில் நிர்வாகம் நடத்த மறுத்தார்கள் என்று நாம் அறிவோம். பாட்டாளி அரசாங்கம் இந்தப் படுமோசமான நாசவேலையைச் சில வாரங்களுக்குள்ளாக தடுத்துவிட்டது. இப்படிப்பட்ட மறுப்புகளால் எவ்வித செல்வாக்கையும் பெற முடியாதென்பதைக் காட்டியது. இந்தப் படுமோசமான நாசவேலையைத் தடுத்து நிறுத்திய பிறகு அதே விரோதிகள் வேறு வழி முறைகளைக் கையாண்டனர்.

முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்கள் தொழிலாளர் அமைப்புகளின் தலைமையில் கூட இருப்பது அடிக்கடி நிகழ்ந்தது. தொழிலாளர் வலிமையை முழுவதாகப் பயன்படுத்தும் வகையில் நமது காரியங்களைச் செய்யத் துவங்கிட வேண்டியிருந்தது. உதாரணத்திற்கு எடுத்துப் பாருங்கள். இரயில்வே நிர்வாகத்தின், ரயில்வே பாட்டாளி வர்க்கத்தின் தலைமை, அவர்களைப் பாட்டாளி வர்க்கப் பாதையில்அல்லாமல் முதலாளித்துவப் பாதையில் இட்டுச்சென்றபோது நாம் அனுபவித்தது என்ன என்பதைப் பாருங்கள். எந்தத் துறையில் எல்லாம் முதலாளித்துவ வர்க்கத்தினரை ஒழித்துக் கட்ட முடியுமோ அங்கெல்லாம் அவ்வாறு செய்தோம் என்று நாம் அறிவோம். ஆனால் அதற்கு என்ன பாடு! ஒவ்வொரு துறையிலும் அங்குலம் அங்குலமாக நாம் முன்னேறினோம். நம்முடைய தொழிலாளர்களில் மிகச் சிறந்தவர்களைப் பதவிகளில் உயர்த்தினோம். ஆட்சி நிர்வாகத்தை அமைத்திடும் கடும் பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இவர்கள். வெளியில் நின்றுகொண்டு இதைப் பார்த்தால் ஒருவேளை இதில் ஏதும் கஷ்டம் இருப்பதாகத் தெரியாது. ஆனால் உள்ளபடியே இந்த விவகாரத்திற்குள் நுழைந்து பார்த்தால், போராட்டத்தின் எல்லாக் கட்டங்களையும் தாண்டிச் சென்றவர்களாகிய தொழிலாளர்கள் எவ்வாறு தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள எவ்வளவு சிரமப்

பட வேண்டியிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அவர்கள் எவ்வாறு தொழிலாளர்களது கண்காணிப்பிலிருந்து தொழிலாளர் நிர்வாகத்துக்கு மாற்றிக் கொண்டார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். அல்லது ரயில்வேக்களில் மிகவும் இகழார்ந்த விக்ஷெல்*லில் துவங்கி எவ்வாறு அவர்கள் திறமையானதொரு அமைப்பினை உருவாக்கினார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள் மெள்ள மெள்ள நமது அனைத்து அமைப்புகளிலும் நுழைந்து வருகிறார்கள் என்பதைக் காணலாம். இந்த அமைப்புகளைத் தங்களது செயலினால் வலுவூட்டி வருகிறார்கள் என்பதும் தெரியவரும். உதாரணமாக, கூட்டுறவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஏராளமான தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்டதாக இவை இருக்கின்றன. முன்பெல்லாம் இவைகளில் கிட்டத்தட்ட உழைக்கும் மக்கள் அல்லாதவர்கள்தான் பங்கெடுத்தனர் என்பதை நாம் அறிவோம். மேலும், பழைய கூட்டுறவுகளில் பழைய முதலாளித்துவ சமுதாயத்தின் அக்கறைகள் மற்றும் கண்ணோட்டங்களில் ஊறிப்போயிருந்தவர்கள்தான் இருந்தார்கள். இந்த விஷயத்தில், தங்களது கைகளில் அதிகாரத்தை எடுத்துக்கொள்வதற்குமுன்பு, தங்களது நலன்களுக்கு உகந்ததாகக் கூட்டுறவுகளைக் கீழ்ப்படுத்துவதற்கும், அவைகள் மேலும் பயனுள்ள பணியினை நிறைவேற்றிடவும் செய்வதற்கு முன்பு தொழிலாளர்கள் நீண்டதொரு போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது.

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 294-296

---

* விக்ஷெல்—ரயில்வே தொழிலாளர்களின் தொழிற் சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் குழு.

ரு.க.க.(போ.)இன் ஒன்பதாவது காங்கிரசில் ஆற்றிய, கூட்டுறவுகள் பற்றிய உரை[91]
ஏப்ரல் 3, 1920
என்பதிலிருந்து

தோழர் குச்சின் உடனடியான தேசவுடைமையாக்கத்தை ஆதரித்து வாதிடும்போது தவறு செய்கிறார். அது மிகவும் நல்லது, ஆனால் சாத்தியமற்றது. ஏனெனில் நமது செல்வாக்குக்கு சற்றேனும் மசிந்துவராத ஒரு வகையைப் பற்றி நாம் எடுத்துக் கவனிக்கிறோம். அதை நிச்சயமாயும் தேசவுடைமையாக்க முடியாது. எல்லாத் தொழில்துறை நிறுவனங்களையும்கூட நாம் இன்னும் தேசவுடைமையாக்கி விடவில்லை. பிரதான ஆட்சி நிர்வாக அமைப்புகளிலிருந்தும் மத்திய போர்டுகளிலிருந்தும் பிறப்பிக்கப்படும் ஆணைகள் உள்ளூர்களைப் போய்ச் சேரும் போது அவை அறவே பயனற்றவையாகப் போய் விடுகின்றன. கடல் போன்ற ஆவணங்களுக்குள் அல்லது சாலைகள், தொலைபேசிகள் முதலியனவற்றின் குறைவுகளுக்குள் அவை முற்றாக மூழ்கிப் போகின்றன. எனவே கூட்டுறவுகளை தேசவுடைமையாக்க வேண்டும் என்று பேசுவது இன்னும் சாத்தியமில்லை. தோழர் மில்யூத்தின் கோட்பாட்டிலும் தவறு செய்கிறார். அவர் தமது நிலைமை பலவீனமாக இருப்பதாக உணர்கிறார், இந்த விஷயத்தை அப்படியே விலக்கிக் கொண்டு விடலாம் என்று நினைக்கிறார். அப்படியானால், தோழர் மில்யூத்தின் அவர்களே, நீங்கள் உங்களது சொந்தத் தீர்மானத்தையே பலவீனமாக்கி விடுகிறீர்கள். சிறுபான்மையின் தீர்மானம்தான் சரியானது என்று நீங்கள் இதன் மூலம் அத்தாட்சி வழங்குகிறீர்கள். ஏனெனில் உங்களது தீர்மானத்தின் உணர்வு—இவைகளை வோலஸ்து நிர்வாகக் கமிட்டிகளுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பது. (அது தான் முதலாவது ஷரத்தில் சொல்லப்பட்

டுள்ளது—"நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.") இது ச்செக்கா உணர்வு. இது பொருளாதாரப் பிரச்சினை யொன்றில் தவறுகப் புகுத்தப்படுகிறது. மற்ற தீர்மானம், நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் கம்யூனிஸ்டுகளது எண்ணிக்கையை அதிகரித்திட வேண்டும், கம்யூனிஸ்டுப பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சியை முனைப்பாக்க வேண்டும், ஓர் அடிப்படை உருவாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இதில் சொற்பகட்டான ஏதுமில்லை, பாலும் தேனும் ஓடு கிற நாடு பற்றிய உடனடி வாக்குறுதி ஏதும் இல்லை. உள்ளூர் களில் கம்யூனிஸ்டுகள் இருப்பார்களானுல் என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் அறிவார்கள். தோழர் சூச்சின் எதிர்ப்புரட்சியாளர்களை எங்கு இட்டுச் செல்ல வேண்டும் என்று விளக்கவே தேவையில்லை. இரண்டாவதாக, ஒரு செய லுறுப்பு உருவாக்கப்பட வேண்டும். "ஒரு செயலுறுப்பினை உருவாக்கி அதைச் செயலில் பரிசோதித்துப் பாருங்கள். உற்பத்தி அதிகரிக்கிறதா என்று சோதியுங்கள்"—அதைத் தான் சிறுபான்மையின் தீர்மானம் கூறுகிறது! முதலாவதாக, அடிப்படை ஒன்றினை உருவாக்குங்கள். அப்புறம்—அப்புறம் நாம் பார்த்துக் கொள்வோம். என்ன செய்திட வேண்டும் என்பது இதிலிருந்து தாஞகவே தொடரும். எதிர்ப்புரட்சி யாளர்களை ச்செக்காவிடம், ச்செக்கா இல்லையென்ருல் புரட்சிக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லும் அரசாணைகள் நம்மிடம் ஏராளமாக உண்டு. இந்த வல்லான் தன்மை அவ்வளவு தேவையில்லை. சிறுபான்மையின் தீர் மானத்தை நாம் ஏற்க வேண்டும், அது கொள்கையின் அடிப் படை வழியை உருவாக்குகிறது.

நூல் திரட்டு,
தொகுதி 40,
பக்கங்கள் 279-280

சர்வதேச உழைக்கும் பெண்கள் தினம்

போல்ஷிவிசத்தின் சாரமும், ருஷ்யாவின் அக்டோபர் புரட்சியின் சாரமும் என்னவென்றால் முதலாளித்துவத்தின் கீழ் மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த அதே மக்களை அரசியலுக்குள் இழுத்து விடுவதேதான். முதலாளிகளால் அவர்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர், ஏமாற்றப்பட்டனர், கொள்ளையடிக்கப்பட்டனர். இது மன்னராட்சியின் கீழும், முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசுகளின் கீழும் நடைபெற்றது. நிலமும், தொழிற்சாலைகளும் தனியார் உடைமையாக இருந்த காலம் வரை இந்த ஒடுக்குமுறையும் ஏமாற்றலும் முதலாளிகளால் மக்களது உழைப்பு சூறையாடப்படுவதும் தவிர்க்க முடியாதவை.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் பித்தலாட்டத்தையும் மாய்மாலத்தையும் அம்பலமாக்குவதும் நிலத்திலும், தொழிற்சாலையிலுமுள்ள தனியார் உடைமையை ஒழிப்பதும், உழைக்கும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் கைகளில் அரசதிகாரம் அனைத்தையும் குவித்திடுவதும் போல்ஷிவிசத்தின் மற்றும் சோவியத் ஆட்சியதிகாரத்தின் சாரமாகும். இவர்கள், இந்த மக்கள் திரளினர் அரசியலை, அதாவது சமுதாயத்தைக் கட்டிடும் காரியத்தைத் தங்கள் சொந்த கைகளில் எடுத்துக் கொள்கிறார்கள். இது ஒன்றும் இலகுவானதொரு வேலையல்ல. வெகுஜனங்கள் முதலாளித்துவத்தால் மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் உள்ளார்கள். ஆனால் கூலி அடிமைத்தனத்தினின்றும், முதலாளித்துவத் தளையினின்றும் மீளும் வழி வேறு ஏதுமில்லை, வேறு வழி ஏதும் இருக்க முடியாது.

பெண்களையும் அரசியலில் சேர்த்துக் கொள்ளாமல் நீங்கள் மக்கள் திரளினரை அரசியலுக்குள் ஈர்க்க முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தின் கீழ் மனித இனத்தில் பாதியான பெண்குலம் இரட்டை ஒடுக்கு முறைக்குள்ளானதாகும். தொழிலாளிப் பெண்ணும், விவசாயிப் பெண்ணும் மூலதனத்தினால் ஒடுக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அதற்கும் மேலாக, மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளில் கூட இவர்கள் முதலாவதாய், பல உரிமைகளை இழந்து நிற்கிறார்கள், ஏனென்றால் சட்டம் இவர்களுக்கு ஆண்களுடன் சமமையான உரிமை வழங்குவதில்லை. இரண்டாவதாக,—இதுதான் பிரதான விஷயம்—இவர்கள் ''குடும்பத் தளையில்'' வாழ்கின்றனர், ''குடும்ப அடிமைகளாக'' வாழ்கின்றனர். மிகவும் இழிவான, முதுகை ஒடிக்கக் கூடிய, தாழ்வுறுத்தும் சமையற்கட்டு வேலை மற்றும் பொதுவாகத் தனியார் குடும்ப வேலையினாலும் இவர்கள் அழுத்தப்பட்டுள்ளார்கள்.

போல்ஷிவிக், சோவியத் புரட்சி செய்துவருவது போல உலகில் வேறெந்தப் புரட்சியோ அல்லது கட்சியோ, பெண்கள் ஒடுக்கப்படுதலையும் சமத்துவமில்லாதிருத்தலையும் அடிவேரிலேயே எதிர்த்து அவ்வளவு ஆழமாக தாக்குதல் தொடுக்க என்றுமே கனவுகூடக் கண்டதில்லை. இங்கே, சோவியத் ருஷ்யாவில் சட்டத்தின் கீழ் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே எவ்வித சமத்துவமின்மையின் சுவடும்கூட விட்டு வைக்கப்படவில்லை. திருமணச் சட்டங்கள் மற்றும் குடும்பம் பற்றிய சட்டங்களில் இருந்த வெறுக்கத்தக்க கேவலமான, போலியான சமத்துவமின்மை அம்சங்களையும் குழந்தைகள் பற்றிய சமத்துவமின்மையையும் சோவியத் அரசாங்கம் மிச்ச மீதமில்லாமல் ஒழித்து விட்டது.

பெண் விடுதலையில் இதுதான் முதற்படியாக இருக்க முடியும். ஆனால் முதலாளித்துவக் குடியரசுகளில் ஒன்று கூட, மிகவும் ஜனநாயகமயமானது உள்பட, இந்த முதற்படியைக் கூட எடுக்கத் துணியவில்லை.''புனிதமான தனியார் சொத்து'' பற்றிய அச்சமே இதற்குக் காரணம்.

இரண்டாவதும், மிக முக்கியமானதுமான நடவடிக்கை நிலத்திலும், தொழிற்சாலைகளிலும் தனியார் உடைமையை ஒழிப்பதாகும். இதுவே, இது மாத்திரமே பெண்களது பூரண

மான, உண்மையான விடுதலைக்கு வழி வகுத்துத் தருகிறது, ''குடும்பத் தளை''யிலிருந்து அவளுக்கு விடுதலை தேடித் தரு கிறது. சிறு தனியார் குடும்ப நிர்வாகத்திலிருந்து பெருமளவு சமூகமயமாக்கப்பட்ட வீட்டுச் சேவைகளுக்கு அவர்கள் மாறிச் செல்வது மூலம் இது நிகழ்கிறது.

இந்த மாற்றம் மிகவும் கடினமானது. ஏனென்றால், மிகவும் ஆழ வேரூன்றிய, மாற்ற முடியாத, பிடிவாதமான, விறைப்பான ''முறையை'' (கண்ணியமின்மை மற்றும் காட்டுமிராண்டித்தனம் என்பது உண்மையில் இதற்கு நெருக்கமாக இருக்கும்) என்பதை மறுவார்ப்புச் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இந்த மாற்றம் துவங்கி விட்டது. விஷயம் இயக்கி விடப்பட்டு விட்டது. புதிய பாதையை நாங்கள் மேற்கொண்டு விட்டோம்.

எனவே இந்த சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத் தன்று சோவியத் ருஷ்யாவிற்கு உலகின் எல்லா நாடுகளிலு மிருந்து உழைக்கும் பெண்களின் எண்ணற்ற கூட்டங்கள் சார்பாக வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்படும். சோவியத் நாடு ஒன்றுதான் இந்த இணையில்லாத நம்பற்கரிய கடின மான ஆனால் மகத்தான பணியைச் செய்யத் தொடங்கியது. இந்தப் பணி சர்வப்பொதுவாயும் மகத்தானது, உள்ள படியே விடுதலைப் பண்புடையது. கொடூரமான மற்றும் பெரும்பாலும் காட்டுமிராண்டித் தனமான முதலாளித்துவப் பிற்போக்கினை எதிரிடும் போது உறுதியிழக்கக் கூடாது என்ற வலிமையூட்டும் அறைகூவல்கள் இருக்கும். ஒரு முத லாளித்துவ நாடு எவ்வளவுக்கு ''சுதந்திரமாகவும்'' அல்லது ''அதிக ஜனநாயகமாகவும்'' இருக்கிறதோ அவ்வளவுக்கு தொழிலாளர் புரட்சிக்கு எதிரான அதன் முதலாளித்துவ கும்பலின் மூர்க்கத்தாக்குதல் மேலும் கடுமையாக இருக்கும். இதற்கு ஓர் உதாரணம் வட அமெரிக்காவின் ஐக்கிய நாடு கள் ஜனநாயக குடியரசு ஆகும். ஆனால் தொழிலாளர் மக்கள் திரளினர் ஏற்கெனவே விழிப்படைந்துவிட்டனர். அமெரிக்கா, ஐரோப்பா, பின்தங்கிய ஆசியாவிலுங்கூட தூங்கிக் கொண்டிருந்த, சோர்வுற்றுக் கிடந்த, செயலற்று இருந்த மக்கள் திரளினர் ஏகாதிபத்தியப் போரினால் இறுதி யாக எழுச்சி பெற்று விட்டனர்.

உலகின் ஒவ்வொரு மூலையிலும் இது துவங்கிவிட்டது.

ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து மக்கள் விடுதலை இயக்க அலைவீச்சை எந்த சக்தியும் தடுத்திட முடியாது. மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து உழைக்கும் ஆண்கள், பெண்களை விடுதலை செய்திடுவதை தடுக்க முடியாது. இந்த உயரிய இலட்சியம் நகர் மற்றும் நாட்டுப்புறத்தில் உள்ள நூற்றுக் கணக்கான பெண்களாலும், ஆண்களாலும் முன்கொண்டு செல்லப்படுகிறது. மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து தொழிலாளர் விடுதலை பெறும் இந்த இலட்சியம் அதனுல்தான் உலக மெங்கணும் வெற்றிவாகை சூடுவது திண்ணம்.

மார்ச் 4, 1921

நூல் திரட்டு,
தொகுதி 42,
பக்கங்கள் 368-370

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலப் பிரச்சினை பற்றிய ஆய்வுரைகள் குறித்து

எனும் கட்டுரையிலிருந்து

4. விவசாயப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டுவதன் அவசியம் பற்றியும், நவீன இயந்திரங்களின் (des machines modernes) முக்கியத்துவம் பற்றியும், குறிப்பாக சூட்டடிக்கும் இயந்திரங்கள் (les batteuses), டிராக்டர்கள் (les charrues à tracteur) இத்தியாதி பற்றியும் குறிப்பிடும் ஆய்வுரைகளின் அம்சங்கள் சம்பந்தமானவையே எனது கடைசி அவதானிப்பு.

இந்த ஆய்வுரைகளில் உள்ள இந்தக் கூற்றுக்கள் எல்லாம் ஐயத்திற்கிடமின்றி சரியானவை, நடைமுறை நோக்கில் அவசியமானவை. இருந்தபோதிலும், சாதாரண முதலாளித்துவ தொழில் நுணுக்கத்தோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ளக் கூடாது, ஆனால் அதற்கு மேலும் ஓர் அடி எடுத்து வைக்க வேண்டும். பிரான்சு முழுமையையும் திட்டமிடப்பட்டதொரு வழியில் மின்சாரமயமாக்குவதன் தேவை பற்றி ஒரு சில வார்த்தைகளாவது சொல்லி இருக்க வேண்டும். முதலாளித்துவ ஆட்சி வீழ்த்தப்படாமல், பாட்டாளி வர்க்கத்தால் ஆட்சியானது கைப்பற்றப்படாமல் தொழிலாளர் மற்றும் உழவர்களது நலனுக்காக இவற்றைச் செய்வது முற்றிலும் சாத்தியமில்லை என்பதையும் காட்டியிருக்க வேண்டும். பிரான்சு நாடு மின்சாரமயம் ஆவதன் முக்கியத்துவம் பற்றி பிரெஞ்சு இலக்கியத்தில் ஏராளமான விவரங்கள் கிடைக்கின்றன. இதில் ஒரு சிறு பகுதி எங்களது அரசாங்க ஆணையினால் வரையப்பட்ட ருஷ்ய மின்சாரத் திட்டத்தில் மேற்கோள் காட்டப் பெற்றுள்ளது என்றும் போர் முடிந்ததிலிருந்து மின்சாரமயமாக்கும் பிரச்சினைக்குரிய தொழில்

நுட்பத் தீர்வு நோக்கி பிரான்சு கணிசமாக முன்னேறி யுள்ளது என்றும் நான் அறிவேன்.

நவீன கால மேம்பாடுற்ற தொழில் நுட்பம் முழு நாட்டையும் அண்மையிலுள்ள பல நாடுகளையும் ஒரே திட்டத்தின் கீழ் மின்சார மயமாக்குவதை அவசியமாக்குகிறது என்ற கருத்தினை இந்த ஆய்வுரைகளில் (கம்யூனிச இலக்கியத்தி லும் இதை விரிவாக எழுத வேண்டும்) எடுத்துக் கூறு வது தத்துவார்த்தப் பார்வையிலும், நடைமுறைப் பிரச் சாரக் கண்ணோட்டத்திலும் மிக முக்கியமானது என்பது என் அபிப்பிராயம். இந்த சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட வேலை சாத்தியமான ஒன்று. இதிலிருந்து விவசாயமும், சிறப்பாயும் விவசாயிகளும் அதிக நன்மை பெறக்கூடும். முதலாளித்து வம், உற்பத்தி சாதனங்களில் தனியார் உடைமை இருக்கும் வரை ஒரு நாடு முழுமையையும் மற்றும் பற்பல நாடுகளை யும் மின்சாரமயமாக்குவது முதலாவதாக, திட்டத்திற்கு ஏற்பவும் விரைவாகவும் நிறைவேற்றிட முடியாது, இரண் டாவதாக, தொழிலாளர் மற்றும் உழவர்களது நலனுக்காக செயல்பட முடியாது. முதலாளித்துவத்தின் கீழ், மின்சார மயமாதல் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் பெரிய வங்கிகளின் அதிகரித்த ஒடுக்கு முறைக்குத் தவிர்க்க இய லாதபடி இட்டுச் செல்லும். போருக்கு முன்பு கூட, ''மிக வும் குறுகிய நோக்கம் கொண்ட மார்க்சியவாதி'' அல்லாத லிசிஸ் என்பவர்—இப்போது இவர் மிகுந்த நாட்டுப் பற்றுடன் முதலாளிகளது காலணிகளை நக்கிக் கொண்டிருக் கிறார்—பிரான்ஸ் நாடானது நிதி ஆதிக்கக் கும்பலால் உள்ள படியே ஆட்சி செய்யப்படுகிறது என்று நிரூபித்திருந்தார்.

பிரான்ஸ் நாட்டில் மின்சாரமயமாவதற்குச் சிறப்பான வாய்ப்புகள் இருக்கின்றன. பிரான்சில் பாட்டாளி வர்க்க வெற்றிக்குப் பிறகு திட்டமிட்ட வகையில் நிறைவேற்றப் படும் மின்சாரமயமாதலில்—பெரிய நிலச்சொந்தக்காரர் கள் மற்றும் முதலாளிகளின் தனியார் உடைமையினால் இது தடை செய்யப்படாமல் நிறைவேற்றப்பட்டால்—சிறு விவ சாயிகள் குறிப்பாக அதிக நன்மை பெறுவார்கள். முதலாளி கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பார்களானால், மின் சாரமயப்படுத்துவது திட்டமிடப்பட முடியாது, விரைவாகவும் இருக்க முடியாது. அப்படியே நிறைவேற்றப்பட்டாலும்

அது விவசாயிகள் மீது புதிய தளைகளை விதிப்பதாகவே அமையும், கொள்ளையடிக்கும் ''நிதி ஆதிக்க கும்பலுக்கு'' விவசாயிகளை அடிமைப்படுத்தும் புதிய சாதனமாகவே அமையும்.

நிலம் பற்றிய பிரெஞ்சு ஆய்வுரைகள் மீது நான் செய்யும் அவதானிப்புகளில் சில இவை, மொத்தத்தில் பார்க்கப் போனால் அவை முற்றிலும் சரியாக உள்ளன என்பதே எனது அபிப்பிராயம்.

1921, டிசம்பர் 11 நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 280-281

குறிப்புகள்

1 சமூக-ஜனநாயகக் கட்சி வேலைத்திட்டத்தின் நகலும் விளக்கவுரையும், *1895-96ல் லெனின் பீட்டர்ஸ்பர்க் சிறையிலிருந்த போது அவரால் எழுதப்பட்டது. ஒரு நூலில் பாலினுல் வரி பிளந்தெழுதப்பட்டது என்று நதேஷ்தா குருப்ஸ்கயாவும், அன்னு உலியானவா-யெலிசாரவாவும் நினைவு கூறுகிறுர்கள்.*

இந்த நூலில் ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் சாரத்தை லெனின் மிகவும் ஆழ்ந்து ஆய்வு செய்கிறுர். மற்றும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அடிப்படைப் பணிகளை முன்வைக்கிறுர்.—11.

2 *1902ல் ருஷ்யாவில் ஏற்பட்ட விவசாயி எழுச்சிகள், லெனினை விவசாயிகளுக்கென்று பிரசுரம் ஒன்று எழுத வேண்டும் என்ற முடிவுக்கு வரச் செய்தன. இந்தப் பிரசுரத்தில் அவர் எளிமையான மொழியில் எழுதினுர். தொழிலாளர் கட்சியின் நோக்கங்களை விவசாயிகளுக்கு விளக்குவதற்காக எழுதினுர். மற்றும் ஏழை விவசாயிகள் ஏன் தொழிலாளர்களோடு கூட்டுச் சேர வேண்டும் என்றும் விளக்கினுர்.*

1903 மே மாதத்தில் ஜெனீவாவில் இது வெளியிடப்பட்டது. இந்தப் பிரசுரத்தின் அனுபந்தமாக, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்ட நகலும் வெளியிடப்பட்டது. இந்தப் பிரசுரம் ருஷ்யாவிற்குள் இரகசியமாகக் கொண்டுவரப்பட்டு, பரந்த அளவில் வினியோகிக்கப்பட்டது. சமூக-ஜனநாயக மற்றும் தொழிலாளர் தலைமறைவு பயிற்சி வட்டங்களில் இது படிக்கப்பட்டது. நாட்டுப்புறத்திலும் ராணுவம் மற்றும் கப்பற்படைக்குள்ளும் இது ஊடுருவிப் பரவியது.—15.

3 *மூன்று ஆண்டு விழாக்களை அனுஷ்டித்த ஒரு சர்வதேசக் கூட்டம்—மார்க்ஸ் மறைவின் 25வது ஆண்டு தினம், பாரிஸ் கம்யூன் நாள் மற்றும் 1848 புரட்சியின் 60வது*

ஆண்டு விழா—ஜெனீவாவில் 1908 மார்ச் 5 (18)ல் நடந்தது. 2,000 பேர் இதில் கலந்து கொண்டனர். ரு.ச.ஜ.தொ. கட்சியின் சார்பாகப் பேசிய லெனின் பாரிஸ் கம்யூனுடைய முக்கியத்துவம் குறித்துப் பேசினார். இந்தப் பேச்சின் உண்மையான வாசகப் பதிவே **கம்யூன் தரும் படிப்பினைகள்** என்ற இக்கட்டுரை, 1908 மார்ச் 23ல் **சக்ரனீச்னயா கசேத்தா**, இதழ் 2ல் அச்சிடப்பட்டது—ஜெனீவாவில் ருஷ்யக் குடியேற்றக்காரர்களது குழுவின் ஏடு இது (1908 மார்ச்—ஏப்ரலில் வெளியிடப்பட்டது).—20.

4 **புருதோனியம்**—பிரெஞ்சு அராஜகவாதி பியேர் ஜோசேப் புருதோன் அவரது பெயரால் எழுந்த குட்டிமுதலாளித்துவ சோஷலிசத்தின் ஒரு வகை இது. 1860ஆம் ஆண்டுகளில் இது பிரான்சிலும் வேறு சில நாடுகளிலும் பரவியது. புருதோன் குட்டிமுதலாளித்துவ நிலையில் இருந்து பெரிய முதலாளித்துவ உடைமை முறையைக் கண்டனம் செய்தார். சிறு தர தனியார் உடைமையை நிரந்தரமாக்கிட முடியும் என்று கனவு கண்டார். அவர் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தினை எதிர்த்தார். வேலை நிறுத்தங்கள் மற்றும் தொழிற் சங்கங்களைக் கூட இவர் குறை கூறினார். பின்பு அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டவர்களால் புருதோனியத் தத்துவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன, மற்றும் வலது சாரி சோஷலிஸ்டுகளாலும் பயன்படுத்தப்பட்டன.—20.

5 K. Marx, *Second Address of the General Council of the International Working Men's Association on the Franco-Prussian War* [கார்ல் மார்க்ஸ், ''பிரான்ஸ்-பிரஷ்யப் போர் பற்றி சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது குழுவின் இரண்டாவது வேண்டுகோள்''](Marx and Engels, *Selected Works*, in three volumes, Vol. 2, Moscow, 1973, 195-201).—*21*.

6 அ. ஷிமிட் 1916 நவம்பர் 30 அன்று சுவிஸ் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் கூட்டத்தில் ஆற்றிய உரை இங்கு குறிப்பிடப்படுகிறது. இந்தக் கூட்டம் நடைபெறவிருக்கும் சுவிஸ் சமூக-ஜனநாயகக் கட்சியின் சிறப்புக் காங்கிரசுக்கான நகல் தீர்மானத்தை வரைவது பற்றிய பிரச்சினையைப் பரிசீலனை செய்தது. இத்தீர்மானம் ராணுவவெறி மற்றும் போர் பற்றிய சோஷலிஸ்டுகளின் தோரணை பற்றியதாகும்.—34.

7 **அராவு தீர்மானம்**—சுவிஸ் சமூக-ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் 1915 நவம்பர் 20—21ல் அராவில் கூடிப்

போரை எதிர்த்து பொதுவான புரட்சிப் போராட்டத்தை நடத்தக் கோரி எடுக்கப்பட்ட தீர்மானம்.—36.

8 லெனின் நாடு கடத்தப்பட்டு சுவிட்ஸர்லாந்தில் வாழ்ந்த போது ருஷ்யாவின் பிப்ரவரிப் புரட்சி பற்றியும், முதலாளித்துவ இடைக்கால அரசாங்கம் மற்றும் பெத்ரோகிராத் தொழிலாளர் படையாளர் பிரதிநிதிகள் சோவியத்தின் நிர்வாகக் குழுவின் அமைவு பற்றியும் அறிந்த போது தம்முடைய தொலேவில் இருந்து எழுதிய கடிதங்களைத் துவக்கினர். இக்கடிதங்களில் ருஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியைப் பற்றி ஆய்ந்து போல்ஷிவிக் போர்த்தந்திரத்திற்கு ஆதாரங்கள் கூறி எழுதினர். அவர் 1917 மார்ச் 7 முதல் 12 (20 முதல் 25) வரை நான்கு கடிதங்களை எழுதியிருந்தார். பெருமளவு சுருக்கப்பட்டும் ஒரு சில மாற்றங்களுடனும் அவருடைய முதற்கடிதமான ''முதல் புரட்சியின் முதற்கட்டம்'' பெத்ரோகிராதில் போல்ஷிவிக் பத்திரிகையான பிராவ்தாவில் மார்ச் 21—22 (ஏப்ரல் 3—4)ல் வெளியிடப்பட்டது. மற்ற கடிதங்கள் 1917ல் வெளியிடப்படவில்லை. லெனின், சுவிட்சர்லாந்தை விட்டு ருஷ்யாவிற்குப் புறப்பட்ட வேளையில் எழுதத் துவங்கிய ஐந்தாவது கடிதம் முற்றுப் பெறவில்லை. பின்னர் அக்கடிதத்தில் அடங்கிய கருத்துக்கள், போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள், மற்றும் நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் போன்ற நூல்களில் அவரால் விரிவுபடுத்தப்பட்டது.—38.

9 104 வரின் நிலத்துறை வேலைத்திட்டம் என்பது 1906 மே 23 (ஜூன் 5)ல் துருதொவிக்குகள் என்று அழைக்கப்பட்ட விவசாயப் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்டு, முதலாவது டூமாவைச் சார்ந்த 104 உறுப்பினர்களின் கையெழுத்தைப் பெற்ற நிலச் சீர்திருத்த நகல் சட்டம். இந்த நகல் சட்டத்தின் மூலம் துருதொவிக்குகள் ''தேசிய நிலச் சேமிப்பினை'' ஏற்படுத்தும்படி வலியுறுத்தினர். இதில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள், அரச குடும்பத்தைச் சார்ந்த நிலங்கள், கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் நிலங்கள், இதரப் பெரிய நிலவுடைமையாளர்களின் நிலங்கள் அடங்கும். இவ்வாறு உடைமை மாற்றம் செய்யப்பட்ட தனியார் நிலங்களுக்கு நஷ்ட ஈடு எதிர்பார்க்கப்பட்டது (''உழைப்புத் தரத்திற்கு'' மேல் அதிகமான உபரி நிலங்கள் உடைமை மாற்றத்திற்கு இலக்காகும்). ஒதுக்கப்பட்ட நிலங்களும் சிறிய தனியார் நிலங்களும் தாற்காலிகமாக அவ்வுரிமையாளர்களின் உடைமையாக இருக்கும். பின்னல் இந்நிலங்கள் தேசிய நில சேமிப்புக்குப் படிப்படியாக மாற்றப்படுவதை இச்சட்டத்தின் நகல் எதிர்நோக்கியது.—39.

10 **சுவிட்சர்லாந்து தொழிலாளருக்கு கடிதம் விடை பெறுதல்** *லெனினால் 1917ம் ஆண்டு மார்ச் மாத மத்தியில் எழுதப்பட்டது. ருஷ்யாவிற்குப் புறப்பட்ட போல்ஷி விக்குகளின் கூட்டத்தில், மார்ச் 26 (ஏப்ரல் 8)ல் இக் கடிதம் விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.*

லெனின் நாடுகடத்தப்பட்டவராக சுவிட்சர்லாந்தில் வாழ்ந்த போது அரசியல் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். முதலில் பெர்ன் பின்னர் ஜூரிச் சமூக-ஜன நாயக அமைப்புகள் வலதுசாரிப் பிரிவை எதிர்த்து போரா டுவதில் ஈடுபட்டார். கட்சியின் இடதுசாரிகள் தமது கட்சி யில் நிலவிய சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து வெளியிட்ட பல தஸ்தாவேஜுகள் லெனினுடைய நெருக்கமான ஒத் துழைப்புடன் வரையப்பட்டனவாகும்.—41.

11 *1906 நவம்பர் 9 (22)ல் ஜாரிஸ்டு அரசாங்கம், கிராமப் புறங்களில் குலாக்குகளின் உருவில் நம்பகமான மூலா தாரம் நிறுவும் நோக்கமுடன், விவசாயிகள் குடிவாழ் கூட்டுக்களிலிருந்து விலகுவதற்கு மற்றும் ஒதுக்கப்பட்ட நிலங்களின் மீது தமது உடைமை உரிமையை உறுதிப்படுத் துவதற்கான விதிமுறை செய்யும் ஓர் அரசாணையைப் பிறப் பித்தது. இவ்வரசாணை நிறைவேற்றப்பட்டபின் இதற்கு 1910 ஜூன் 14ம் சட்டம் என்ற பெயர் ஏற்பட்டது. அமைச்சரவையின் அப்போதைய தலைவரான பி.அ. ஸ்த லீப்பின் பெயரால் அழைக்கப்பட்ட அச்சட்டத்தின் கீழ் விவசாயிக்கு குடிவாழ் கூட்டினை விட்டு தடையின்றி விலகி ஒதுக்கப்பட்ட நிலத்தை உபயோகிக்கவோ அல்லது விற்கவோ உரிமையுண்டு. அவ்வாறு விலகிச் செல்லும் விவ சாயிகளுக்கு ஓரிடத்தில் நிலம் அனைத்தையும் வழங்குவது கிராமக் குடிவாழ் கூட்டுக்களின் கடமையாகும். ஸ்தலீப் பின் நிலச் சீர்திருத்தம் கிராமப் புறங்களில் முதலாளித் துவ வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது, விவசாயிகள் அடுக்கு களாகப் பிரிவதை வேகப்படுத்தியது, கிராமப்புறங்களில் வர்க்கப் போராட்டத்தை முனைப்பாக்கியது.—42.*

12 **நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்** *(பாட்டாளி வர்க்கக் கட்சிக்கான நகல் கொள்கை விளக்கம்) என்ற கட்டுரை லெனினால் 1917 ஏப்ரல் 10 (23)ல், ஏழாவது அகில ருஷ்ய போல்ஷிவிக் மாநாட்டிற்குத் தயாரிப்புகள் செய்யப்பட்ட போது எழுதப்பட்டது (பின்வரும் குறிப்பைக் கவனிக்க). இக்கட்டுரை டைப் செய்யப்பட்டு கட்சி உறுப்பினர்களிடையே மாநாட்டிற்கு முன்பும் மாநாட்டின் போதும் சுற்றறிக்கை செய்யப்பட் டது.—44.*

13 ரு. ச. ஜ. தொ. க. (போ.)இன் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மாநாடு, பெத்ரோகிராதில் 1917 ஏப்ரல் 24—29 (மே 7—12)ல் நடைபெற்றது. இம்மாநாட்டில் 78 கட்சி அமைப்புகளைச் சார்ந்த, முடிவெடுக்கத்தக்க வாக்குரிமை கொண்ட 131 பிரதிநிதிகளும் விவாதிக்கும் உரிமை பெற்றோரான 18 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இது தான் முதன் முதல் சட்டபூர்வமாக நடந்த கட்சி மாநாடு.

இம்மாநாட்டின் முக்கியத்துவம் என்னவென்றால் அது முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை சோஷலிஸ்டு புரட்சியாக மாற்றுவதற்கான வழிவகைகளை வகுத்ததும் மற்றும் ஆட்சியதிகாரம் முழுவதையும் சோவியத்துகளின் கரங்களில் ஒப்படைப்பதற்கான ஒரு திட்டத்தை முன் வைத்ததும் ஆகும். சாரமாயும் இம்மாநாடு கட்சி காங்கிரசின் பாத்திரத்தை வகித்தது.—*46*.

14 அச்சுறுத்தும் **படுநாசம்** என்ற லெனினது கட்டுரையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டுரை 1917 மே 14 (27)ல் **பிராவ்தா**, இதழ் 57ல் வெளியிடப்பட்டது (*Collected Works*, Vol. 24, pp. 395-97).—*53*.

15 ரேச் (பேச்சு)—மிதவாத-முடியாட்சி சார்புள்ள முதலாளித்துவக் கட்சியான காடேட்டுகளின் மத்திய நாளேடு. இதன் வெளியீடு 1906ம் ஆண்டு தொடங்கியது. 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)ல் பெத்ரோகிராத் சோவியத்தின் கீழ் இயங்கும் ராணுவ-புரட்சிக் கமிட்டியினால் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் (1918 ஆகஸ்டு வரை) பின் வரும் பெயர்களில் வெளியிடப்பட்டது—**நாஷா ரேச், ஸ்வபோத்னயா ரேச், வெக், நோவயா ரேச், நாஷ் வெக்.**—*53*.

16 இங்கே லெனின் ரு.ச.ஜ.தொ.க.(போ)இன் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மாநாட்டின் போது அங்கீகரிக்கப் பட்ட ''நடப்பு நிலை மீதான தீர்மானம்'' என்பதில் இருந்து மேற்கோள் பயன்படுத்துகிறார். இத்தீர்மானம் லெனினால் எழுதப்பட்டது (இப்புத்தகத்தின் 50—52ம் பக்கங்கள் பார்க்க).—*55*.

17 சுரங்கங்கள் மற்றும் உலோகத் தொழிற்சாலைகளின் முதலாளிகளின் நாசவேலை மற்றும் புரட்சிகரத் தொழிலாளர்களைப் பசியினால் வாட்டி பணியவைக்க அவர்கள் நடத்திய முயற்சிகளையும் சுரங்கத் தொழிலாளர் மற்றும் உலோகத் தொழிலாளர்களின் தாங்க முடியாத நிலையினையும் பற்றி தொழிலாளர், படையாளர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் பொருளாதார இலாகாவிற்கு தொனேத்ஸ் பிரதேசத் தூதுக்குழு அளித்த மகஜர் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

நோவயா ஷீஸ்ன் *(புதிய வாழ்க்கை)*—*மென்ஷிவிக் நாளிதழ். இவ்விதழ் 1917 ஏப்ரல் 18 (மே 1) தொடங்கி 1918 ஜூலை வரை வெளியிடப்பட்டது.—59.*

18 *நடக்கவிருந்த* பெத்ரோகிராத் *தொழிற்சாலைக் கமிட்டிகளின் மாநாட்டிற்காகப்* பொருளாதாரச் சீர்குலைவினை சமாளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மீதான தீர்மானத்தை *லெனின் எழுதினர் (பின்வரும் குறிப்பைக் கவனிக்க). இது 1917 மே 25 (ஜூன் 7)ல் மாஸ்கோ போல்ஷிவிக் பத்திரிகையான* சொத்சியல்-டெமக்ராட்டில் *கட்சியின் மத்தியக் கமிட்டியின் சார்பில் வெளியிடப்பட்டது. மற்றும் ஜூன் 2 (15) அன்று* பிராவ்தாவில் *மாநாட்டைக் கூட்டுவதற்கான ஒழுங்கமைப்பு கமிட்டியின் நகல் தீர்மானமாக வெளியிடப்பட்டது. இது மாநாட்டில் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.—64.*

19 தொழிற்சாலைக் கமிட்டிகள் *1917 பிப்ரவரி புரட்சி வெற்றி பெற்ற உடனே மார்ச் மாதத்தில் தோன்றிய பாட்டாளி வர்க்க அமைப்புகள். இவை பொருளாதாரக் கோரிக்கைகளை வரைந்து தொழிலதிபர்களிடம் சமர்ப்பித்தன. அதிகார பூர்வ அனுமதிக்குக் காத்திராமல் எட்டு மணி நேர வேலை நாளை ஏற்படுத்தின. தொழிலாளர்களை அமர்த்துவதையும் வேலை நீக்கம் செய்வதையும் கண்காணித்தன. தொழிலாளர் காவல் படையாகிய மிலீஷியா பிரிவுகளை ஏற்படுத்தின. தொழிலதிபர்களின் நாசவேலைகளை எதிர்த்தன. தடங்கல் இன்றி தமது தொழிற்சாலைகள் வேலை செய்ய இயலும் பொருட்டு அவை மூலப்பொருட்களையும் எரிபொருட்களையும் பெற ஏற்பாடு செய்தன. இக்கமிட்டிகள் அக்டோபர் புரட்சியில் மிகவும் முனைப்பாகச் செயல்பட்டன. 1918ம் ஆண்டு தொழிற் சங்கங்களோடு இணைக்கப் பெற்று அவற்றின் கீழ்மட்ட உறுப்புக்களாகச் செயல்பட்டன.*

பெத்ரோகிராத் தொழிற்சாலைக் கமிட்டிகளின் முதலாவது மாநாடு 1917 மே 30 முதல் ஜூன் 3 (ஜூன் 12 முதல் 16) வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் பெத்ரோகிராதில் தொழில் துறையின் நிலை, உற்பத்தியை ஒழுங்கமைப்பது மற்றும் அதன் மீதான கண்காணிப்பு, தொழிற்சாலை கமிட்டிகளின் கடமைகள், தொழிற்சங்க இயக்கத்தில் அவற்றின் பங்கு என்பவை விவாதிக்கப்பட்டன.—68.

20 தொழிலாளர், படையாளர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் இஸ்வேஸ்தியா—*நாள் ஏடு. இதன் வெளியீடு 1917 பிப்ரவரி 28 (மார்ச் 13) அன்று தொடங்கப் பெற்றது. ஆகஸ்டு 1 (14) முதல் மத்திய நிர்வாகக்*

கமிட்டியின் ஏடாக மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் தொழிலாளர், படையாளர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் இஸ்வேஸ்தியா என்றும் செப்டம்பர் 29 (அக்டோபர் 12) தொழிலாளர், படையாளர் பிரதிநிதிகள் சோவியத்துகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ் தியா என்றும் வெளியிடப்பட்டது. இக்காலம் முழுவதும் இது மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கைகளில் இருந்தது, போல்ஷிவிக் கட்சியை எதிர்த்துத் தீவிரமாகப் போராடியது.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் இஸ்வேஸ் தியாவின் ஆசிரியர் குழு மாற்றியமைக்கப்பட்டு இச் செய்தித்தாள் சோவியத் அரசின் அதிகாரப் பூர்வமான நாளிதழாயிற்று.—72.

21 ரபோச்சயா கசேத்தா (தொழிலாளர் பத்திரிகை)—1917 மார்ச் 7 (20)ல் இருந்து நவம்பர் 30 (டிசம்பர் 13) வரை பெத்ரோகிராதில் வெளியிடப்பட்ட மென்ஷிவிக்குகளின் நாளிதழ்.—72.

22 யெதீன்ஸ்த்வோ (ஒற்றுமை)—பெத்ரோகிராதில் வெளி வந்த மென்ஷிவிக்குகளின் செய்தித்தாள். 1914 மே—ஜூன் மாதங்களில் நான்கு இதழ்கள் வெளியிடப்பட்டன. 1917ம் ஆண்டு மார்ச் முதல் நவம்பர் வரை நாளிதழாக வெளியிடப்பட்டது. 1917 டிசம்பர் முதல் 1918 ஜனவரி வரை நாஷே யெதீன்ஸ்த்வோ (நமது ஒற்றுமை) என்ற பெயரில் அச்சடிக்கப்பட்டது.—72.

23 வெஸ்டினிக் ஃபினான்சவ், புரோமிஷ்லெனஸ்தி இ தர்கோவ்லி (நிதி, தொழிற்துறை மற்றும் வணிகத்துறையின் தூதன்)—நிதி அமைச்சகத்தின் வார வெளியீடு. செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1883 முதல் 1917 வரை வெளியிடப் பட்டு வந்தது.—76.

24 நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி என்ற நூல் லெனினால் 1917 செப்டம்பர் மத்தியில், அவர் ஹெல்சிங்ஃபோர்சில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கையில் எழுதப்பட்டது.

இந்நூலில் லெனின் வேலைத்திட்ட முக்கியத்துவமுடைய கோட்பாடுகளை முன்வைத்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் தறுவாயில் லெனினால் வகுத்தளிக்கப் பட்டதும் புதிய சோஷலிஸ்டு வாழ்க்கைமுறையைக் கட்டுவது குறித்ததுமான பாட்டாளி வர்க்க அரசின் நடவடிக்கைகள் சோவியத் ஒன்றியத்திலும் இதர சோஷலிஸ்டு நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.—79.

25 தியென் (நாள்)—செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1912ம்

ஆண்டு தொடங்கப் பெற்ற மிதவாத-முதலாளித்துவ நாளிதழ். *1917* பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் இது மென்ஷிவிக்குகளின் கைக்கு மாறியது. *1917* அக்டோபர் *26* (நவம்பர் *8*) அன்று பெத்ரோகிராத் சோவியத்தின் ராணுவ-புரட்சிக் கமிட்டியினுல் மூடப்பட்டது.—*90.*

26 *1917* ஜூன் *9* (*22*) அன்று **பிராவ்தா** இதழ் *77*ல் வெளியான ''சோஷலிசத்தைப் புகுத்துதல் அல்லது அரசைக் கொள்ளையிடுவதை அம்பலப்படுத்தல்' எனும் தமது கட்டுரையை லெனின் இங்கே குறிப்பிடுகிருர் (*Collected Works*, Vol. 25, pp. 68-69).—*101.*

27 போல்ஷிவிக் பத்திரிகையான **ரபோச்சி** என்பதில் *1917* ஆகஸ்டு *26* (செப்டம்பர் *8*) அன்று இரண்டாவது இதழில் வெளியான ''காகிதத் தீர்மானங்கள்'' என்ற லெனினது கட்டுரை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது (*Collected Works*, Vol. 25, pp. 261-64).—*103.*

28 **ஸ்வபோத்னயா ஷீஸ்ன்** (சுதந்திர வாழ்க்கை)—பெத்ரோகிராதிலிருந்து *1917* செப்டம்பர் *2* (*15*) முதல் *8* (*21*) வரை, **நோவயா ஷீஸ்னிற்குப்** பதிலாக வெளியிடப்பட்ட மென்ஷிவிக் நாளிதழ். பின் குறிப்பிட்ட நாளிதழ் இடைக் கால அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருந்தது.—*118.*

29 **பிர்ழோவ்கா—பிர்ழெவியே வேதமஸ்தி** (பங்கு மார்க்கெட் ஆவணம்)—*1880*ல் தோற்றுவிக்கப்பட்ட முதலாளித்துவ ஏடு. இது செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் இருந்து வெளிவந்தது. *1917* அக்டோபர் கடைசியில் பெத்ரோகிராத் சோவியத்தின் ராணுவ-புரட்சிக் கமிட்டியினுல் மூடப்பட்டது.—*119.*

30 *1870-71*ம் ஆண்டிய பிரெஞ்சு-பிரஷ்யப் போரில் ஜெர்மனியர்கள் பிரெஞ்சு ராணுவத்தை செதானில் வளைத்துக் கொண்டனர். அங்கே பேரரசர் மூன்ரும் நெப்போலியன் சரணடைவதற்குக் கையெழுத்திட்டார்.—*140.*

31 லெனினது **தொழிலாளர் கண்காணிப்பு பற்றிய நகல் ஒழுங்குமுறை விதிகள்** பின்னுல் வரையப்பட்ட தொழிலாளர்கள் கண்காணிப்பின் நகல் சட்டத்தின் அடித்தளமாக இருந்தது. *1917* நவம்பர் *14* (*27*) அன்று அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி இச்சட்ட நகலை விவாதித்து ''தொழிலாளர்கள் கண்காணிப்பு பற்றிய விதிமுறைகள்'' எனும் அரசாணையாகப் பிறப்பித்தது. இவ்வரசாணை பொருள் உற்பத்தி மற்றும் வினியோகத்தின் மீது தொழிலாளர்களின் கண்காணிப்பு முறையை நிலை நாட்டுவதில் அவர்களது முன்முயற்சியை விரிவாக வளர்க்க

உதவியது. தொழிலாளர் கண்காணிப்பு, முதலாளிகளின் கொள்ளையில் இருந்து தொழில் நிறுவனங்களைப் பாதுகாப்பதிலும் தொழில் துறை தேசவுடைமையாக்கப்பட்ட பிறகு உற்பத்தி நிர்வாகத்தில் தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பதிலும் முக்கிய பங்கு வகித்தது.—147.

32 இரட்சணியக் கமிட்டி (மக்கள் பாதுகாப்புக் கமிட்டி)—மாஸ்கோ நகர் மன்றத்திஞல் 1917 அக்டோபர் 25 (நவம்பர் 7) அன்று சோவியத் அரசாட்சியை எதிர்த்து ஆயுதப் போர் நடத்த ஏற்படுத்தப்பட்டது. இக்கமிட்டி ராணுவ மாணவர்களின் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை ஏற்றது. அக்டோபர் 28 (நவம்பர் 10)ல் தொடங்கப்பட்ட அந்த எதிர்ப்புரட்சி நவம்பர் 2 (15) அன்று நசுக்கப்பட்டு மக்கள் பாதுகாப்புக் கமிட்டி மாஸ்கோவின் ராணுவ-புரட்சிக் கமிட்டியிடம் சரணடைந்தது.—149.

33 இந்த ஆய்வுரைகள் லெனிஞல், மக்கள் கமிசார்கள் கவுன்சிலிஞல் பிறப்பிக்கப்பட்ட நகர்ப்புற வீட்டு மனைகளை தேசவுடைமையாக்கும் ஆணையின் நகல் தொடர்பாக எழுதப்பட்டவையாகும். இந்த நகல் மக்கள் கமிசார்கள் கவுன்சில் கூட்டத்தில் 1917 நவம்பர் 23 (டிசம்பர் 6) அன்று அங்கீகரிக்கப்பட்டு, 1918 ஆகஸ்டு 20ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் ஆமோதிக்கப்பட்டது.—153.

34 அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் உரால் சுரங்கக் கம்பெனிகளின் நிர்வாகக் குழு தொழிற்சாலைகளுக்குப் பண உதவி அனுப்புவதை நிறுத்தியதால் அவை கடும் இடர்ப்பாடுகளை எதிரிட நேர்ந்தது. தொழிலாளர்கள் பல மாதங்கள் ஊதியம் பெருமல் பசியிஞல் வாடினர். இதஞல் உரால் பிராந்திய தொழிலாளர்கள், விவசாயிகள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத் தனது உறுப்பினரான வி. வரபியோவைப் பெத்ரோகிராதுக்கு அனுப்பி அங்கு மக்கள் கமிசார்கள் கவுன்சிலிடம் உராலில் உள்ள நிலைமை பற்றித் தெரிவிக்கவும் கூலிபற்றி ஒரு முடிவுக்கு வரவும் பணித்தது. வரபியோவ், ஸ்வெர்த்லோவை சந்தித்து உராலில் உள்ள நிலைமை பற்றி எடுத்துரைத்தார். ஸ்வெர்த்லோவ், வரபியோவ் தம்மோடு லெனினிடம் சென்று அவரிடம் உரால் தொழிற்சாலைகளின் நிலைமையையும் தொழிலாளர்களின் எண்ணங்களையும் தெரியப்படுத்த வேண்டும் எனக் கூறிஞர். அவர்களது உரையாடல்களுக்குப் பின் லெனின் வரபியோவிடம் இப்புத்தகத்தில் தாம் வெளியிட்டுள்ள இந்தக் குறிப்பை அளித்தார்.

1917 டிசம்பர் 23 (1918 ஜனவரி 5) அன்று மக்கள்

கமிசார்கள் கவுன்சில், அவசரமாக 5 கோடி ரூபிள்களை அரசு வங்கியின் உரால் கிளைக்கு அனுப்பிவைப்பது பற்றி ஒரு முடிவை எடுத்தது.

1917 டிசம்பரில் உரால் பிராந்திய நிர்வாகக் கமிட்டி எக்கத்தெரின்பர்க் (இப்பொழுது ஸ்வெர்திலோவ்ஸ்க்) நகரில் இருந்த உரால் சுரங்கத் தொழிலதிபர்களின் கவுன்சிலை மூடிவிட்டது. பின் 1917 டிசம்பர் கடைசியிலும் 1918ன் ஆரம்பத்திலும் உராலில் மிகப் பெரும் தொழில் நிறுவனங்கள் தேசவுடைமையாக்கப்பட்டன.—155.

வங்கிகள் தேசவுடைமையாக்கப்படுவதன் மீதான அரசாணை பற்றிய விவாதத்தின் தொடர்பாக 1917 டிசம்பர் 14 (27)ல் நடைபெற்ற அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் லெனின் இந்த உரையினை ஆற்றினார்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து வங்கிகளைத் தேசவுடைமையாக்க நடைமுறை நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. அதன் திசையில் முதல் படியாக மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் உத்தரவுப்படி பணம் தர மறுத்த அரசு வங்கி எடுத்துக் கொள்ளப்பட்டது.

மக்கள் கமிசார்கள் கவுன்சில் உத்தரவின் பேரில் பல நிதி அமைச்சக அலுவலர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். முதலில் அரசு வங்கியின் தலைமை நிர்வாகி வெளியேற்றப்பட்டு அவ்விடத்தில் அரசு வங்கியின் தலைமை கமிசார் நியமிக்கப்பட்டார். உயர் வங்கி அதிகாரிகள் வேலை நிறுத்தத்தின் மூலம் எதிர்ச் செயலாற்றினர். இது நிகழ்ந்த போதிலும் இளநிலை அலுவலர்களின் உதவியோடு வங்கி திறக்கப்பட்டு வேலை துவங்கியது. வங்கிகளின் தேசவுடைமையாக்கத்திற்கு முந்திய இடைப்பட்ட நடவடிக்கை என்ற முறையில் சோவியத் ஆட்சி அதிகாரம் தனியார் வங்கிகளின் எல்லா கொடுப்பல்கள் மீதும் 1917 டிசம்பர் மத்தியில் கண்காணிப்பை நிலைநாட்டியது. டிசம்பர் 14 (27) அதிகாலையில் அரசாங்கம் பெத்ரோகிராதில் உள்ள தொழிலாளர் மற்றும் செங்காவலர் படைப்பிரிவுகளுக்கு வங்கிகளையும் கடன் வழங்கு ஸ்தாபனங்களையும் கைப்பற்றும்படி உத்தரவு பிறப்பித்தது. அதே நாளில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் ''வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி'' மற்றும் ''வங்கிப் பாதுகாப்புப் பெட்டகங்கள் சோதனையிடப்படுதல் பற்றி'' அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. இரு ஆணைகளும் **இஸ்வேஸ்தியா,** இதழ் 252ல் டிசம்பர் 15 (28)ல் வெளியிடப்பட்டன.—160.

36 பி. வி. அவீலவின் பின்வரும் கூற்றை இங்கே லெனின் குறிப்பிடுகிறுர்: ''காரியங்களை இப்படிப்பட்ட புராதன முறையில் அணுகுவதும் எல்லாவற்றையும் ஒரே கோடரி வெட்டில் தீர்த்து விடும் விருப்பமும் காட்டுவது மூலம் நீங்கள் மென்மையான கடன் வழங்கு உறுப்புருவைக் குலைத்து விடுவீர்கள்''.—160.

37 1917 நவம்பரில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டது. அது வரை அவர்கள், குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கட்சியில் ஒரு இடதுசாரிப் பிரிவாக இருந்தார்கள். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பின் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் விவசாயிகள் மத்தியில் தங்கள் செல்வாக்கை நீடித்து வைத்திருக்க முயன்றதோடு சிலவேளை போல்ஷிவிக்குகளுடன் கூட்டு சேர்ந்து மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் அங்கம் வகித்தனர். இருந்தபோதிலும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சோஷலிஸ்டு நிர்மாணம் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளில் போல்ஷிவிக்குகளுடன் வேறுபட்டனர். பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை எதிர்த்தனர். பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை (குறிப்பு 70ஐ நோக்கவும்) எதிர்த்து மக்கள் கமிசார்கள் கவுன்சிலிலிருந்து 1918 மார்ச்சில் விலகிக் கொண்டனர். ஆனால் கமிசார கூட்டமைப்புகளிலும் வட்டார ஆட்சி அதிகார அமைப்புகளிலும் அங்கம் வகித்துவந்தனர். 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் மத்தியக் கமிட்டி பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையைக் குலைத்து ருஷ்யாவை ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய வைக்கும் நோக்கோடு ஜெர்மானிய தூதுவர் மிர்பாஹைக் கொலை செய்து சோவியத் அரசாட்சிக்கு எதிராக ஆயுதந்தாங்கிய கலகத்தை துவக்கியது. இக்கலகம் ஒடுக்கப்பட்டவுடன் சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்ய காங்கிரஸ் (குறிப்பு 69ஐப் பார்க்கவும்), தமது தலைமையின் மூடத்துணிச்சல் கருத்துக்களை ஆதரிக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை சோவியத்துகளினின்று நீக்க முடிவு செய்தது. மக்கள் மத்தியில் ஆதரவை இழந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை சோவியத் அரசாட்சிக்கு எதிராகத் துவங்கினர். சிலசோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் போல்ஷிவிக்குகளுடன் இணைந்து செயல்பட விரும்பினர். இவர்கள் பின்னல் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.—163.

38 நேசப் போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? என்ற

கட்டுரையும் நுகர்வாளர் கம்யூன்கள் பற்றிய அரசாணையின் நகல் இரண்டும் பின்லாந்தில் 1917 டிசம்பர் 24 முதல் 27 (1918 ஜனவரி 6 முதல் 9) வரை நான்கு நாட்கள் லெனின் ஓய்வில் இருந்த போது எழுதப்பட்டவை. இக் கட்டுரைகளில் வகுத்தளித்துள்ள கருத்துக்கள் லெனினுல் பின்னர் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் என்ற நூலில் விரிவுபடுத்தப்பட்டன (அதன் ஒரு பகுதி இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளது—பக்கங்கள் 216-36ஐப் பார்க்கவும்).—169.

39 வில்ஹெல்ம் பிராக்கிற்கு மார்க்ஸ் 1875 மே 5 அன்று எழுதிய கடிதம் (Marx and Engels, *Selected Correspondence*, Moscow, 1965, pp. 296-97).—*180*.

40 கெதேயின் ஃபாவுஸ்ட், பாகம் 1, காட்சி 4 என்பதிலிருந்து மேற்கோள்.—*180*.

41 அச்சுத் துறைத் தொழிலாளர்களின் சங்கம் என்ற மஞ்சள் அமைப்பிற்குத் தலைமை தாங்கிய மென்ஷிவிக்குகள் மற்றும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் செல்வாக்கின் கீழ் நெடுங்காலம் இருந்த அச்சுத் தொழிலாளரின் குழுவினர்களை லெனின் மனதில் கொண்டுள்ளார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் இச்சங்கம் மாஸ்கோ, பெத்ரோகிராத் மற்றும் இதர நகரங்களில் சோவியத் அரசாட்சியை எதிர்க்கும் வேலைநிறுத்தங்களைத் தூண்டிப் போராடியது. போல்ஷிவிக்குகள் பெரிய அச்சுக் கூடங்கள் அனைத்திலும் ஆதரவாளர்களைக் கொண்டிருந்தனர், அச்சுத் தொழிலாளரின் சிவப்பு சங்கத்தைத் தொடங்கினர். இதற்குப் பின் மஞ்சள் சங்கத்தின் செல்வாக்கு குறையலாயிற்று.—*182*.

42 லெனினது நுகர்வாளர் கம்யூன்கள் பற்றிய அரசாணையின் நகல் உணவுத்துறை மக்கள் கமிசாரகத்தால் விவரமாக விளக்கப்பட்டு இஸ்வேஸ்தியாவில் 1918 ஜனவரி 19 (பிப்ரவரி 1) அன்று வெளியிடப்பட்டது. இந்நகல் முதலாளித்துவக் கூட்டுறவாளர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. அவர்கள் கூட்டுறவுத் துறை சோவியத் அரசாட்சி அமைப்பிற்கு சார்பின்றி இருக்க வேண்டுமென விரும்பினர். கூட்டுறவு அமைப்பினைப் பயன்படுத்துவது வியாபாரத்தையும் வினியோகத்தையும் சகஜமாக்குவதற்கு அவசியம் என்று கருதிய மக்கள் கமிசார்கள் கவுன்சில், கூட்டுறவாளர்களுக்குச் சில சலுகைகள் வழங்க வேண்டியிருந்தது. தலைமைப் பொருளாதாரக் கவுன்சில், கூட்டுறவுச் சங்கம் மற்றும் உணவு இலாக்காக்களின் பிரதிநிதிகளுக்கிடையே 1918 மார்ச் கடைசியிலும் ஏப்ரல் முதல்

வாரத்திலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக ஒரு அரசாணை நகல் வரையப்பெற்று ஏப்ரல் 9—10ம் தேதிகளில் மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் விவாதிக்கப்பட்டது. இந்த நகல் லெனினின் பின்சேர்ப்புகளுடனும் திருத்தங்களுடனும் மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் ஏற்கப்பட்டு ஏப்ரல் 11ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஆமோதிக்கப்பட்டது. போல்ஷிவிக்குகளால் பிரேரேபிக்கப்பட்டு மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம், ''நுகர்வாளர் கூட்டுறவு அரசாணை கணிசமான குறைபாடுகள் கொண்ட சமரச முயற்சி, அதை மத்திய நிர்வாகக் கமிட்டி இடைமாற்ற நடவடிக்கையாக ஏற்றுக் கொள்கிறது'' என வர்ணிக்கப்பட்டது. (இஸ்வேஸ்தியா, இதழ் 72, 1918 ஏப்ரல் 12.) ஏப்ரல் 13 அன்று பிராவ்தா, இதழ் 71ல் வெளியானது.

லெனின் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் என்ற நூலில் இச்சட்டம் குறித்த தம் மதிப்பீடை வெளியிட்டார் (இந்நூல், பக்கங்கள் 217-36ஐப் பார்க்கவும்).184

43 உணவுத்துறை மக்கள் கமிசாரகம் வட்டார சோவியத்துகள் தமது சொந்த உணவு வழங்கீடு அமைப்புகளை உருவாக்குவது பற்றிய நெறியாண்மை, ஒரு வழங்கீடு கமிசாரகத்திற்கான உணவுத் துறைக் கமிசாரகத்தின் அரசாணை நகல் வட்டாரப் பொருளாதாரக் கவுன்சில்களுக்கான தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலின் விதிமுறைகள் ஆகியவற்றை லெனின் மனதில் கொண்டிருந்தார்.

பழைய உணவு வழங்கீடு அமைப்புகள் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அரசாணைகளை நாசப்படுத்தி வந்ததால் 1917 டிசம்பர் 22 (1918 ஜனவரி 4)ல் உணவுத்துறை மக்கள் கமிசாரகம், உணவுத் துறை அமைப்புகளில் உருவாக்கப்பட்ட நுகர்வு செய்யும் குபேர்னியாக்கள் மற்றும் சேனைகளின் (பிரதிநிதிகள் குழுக்களது) ஆதரவுடன், உள்ளூர் சோவியத்துகள் உணவு வழங்குதலைத் தாமே மேற்கொள்ளும்படியும், தமது சொந்த உணவு வழங்கீடு அமைப்புகளை நிறுவிக் கொள்ள வேண்டும் எனவும் நெறியாண்மை செய்தது. அதே சமயம் உணவுத் துறை மக்கள் கமிசாரகம் அதை வழங்கீடு கமிசாரகமாக மாற்றுவதற்கான ஒரு நகல் அரசாணையை வகுத்தது. இந்தக் கமிசாரகம் உணவுப் பொருள் மட்டுமன்றி எல்லாப் பொருள்களையும் மக்களுக்கு வழங்கும் பொறுப்பை ஏற்கும். தனியார் வர்த்தகம் பெருமளவு குறைக்கப்படும். இந்த நகலின்படி வழங்கீடு கமிசாரகத்தின் ஸ்தல அமைப்புகள் சோவியத்துகளின் கீழ் வழங்கீடு பிரிவுகளாக (வினியோக அலுவலகங்கள்) மாற்றமடையும்.—184.

44 உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம் என்பதன் நகல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் முன் 1918 ஜனவரி 3 (16) அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இது ஓர் அடிப்படையாக ஏற்கப்பட்டு ஒருங்கிணைப்புக் கமிஷனின் இறுதி சீரமைவுக்கு அனுப்பப்பட்டது. இப்பிரகடனம் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியினுல் அங்கீகரிக்கப்பட்டது. ஜனவரி 4 (17)ல் இஸ்வேஸ்தியாவில் வெளியிடப்பட்டது. ஜனவரி 5 (18) அன்று யா. மி. ஸ்வெர்த்லோவினுல் அகில ருஷ்ய ம.நி.க.யின் சார்பில் வாசிக்கப்பட்டு அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டத்தில் அதன் அனுமதிக்கென சமர்ப்பிக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையில் இருந்த எதிர்ப்புரட்சியாளர்களின் பகுதி அதன் மீதான விவாதத்தை எதிர்த்து ஓட்டளித்தது. ஜனவரி 12 (25) அன்று சோவியத்துகளின் மூன்முவது அகில ருஷ்ய காங்கிரஸ் இந்தப் பிரகடனத்தை ஆமோதித்தது.—190.

45 ''உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' விவாதிக்க அரசியல் நிர்ணய சபையின் எதிர்ப்புரட்சிப் பெரும்பான்மை மறுத்த பிறகு, போல்ஷிவிக்குகள், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பிரிவுகள் தமது குழுக்களில் விவாதம் செய்வதற்காக அமர்வை ஒத்திப்போடக் கேட்டுக் கொண்டனர். லெனின் போல்ஷிவிக் பிரிவின் கூட்டத்தில் உரையாற்றினுர். அவர் எழுதிய போல்ஷிவிக் பிரிவின் இப்பிரகடனத்தை அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் வாசிக்க வேண்டும் என்றும் பின்னர் போல்ஷிவிக்குகள் கூட்டத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் யோசனை கூறினுர். அவரது யோசனை இந்தப் பிரிவினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

போல்ஷிவிக்குகள் வெளியேறிய பின்னர் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், சோவியத் அதிகாரம் பின்பற்றிவரும் சமாதானக் கொள்கையின் பாலான தோரணை குறித்த பிரச்சினை மீது ஓட்டெடுக்கும்படி பிரேரேபித்தனர். அரசியல் நிர்ணய சபையின் வலதுசாரிகள் இதை ஏற்க மறுத்த போது இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

போல்ஷிவிக்குகள் மற்றும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து கப்பற்படைத் துறை மக்கள் கமிசாரும் தவ்ரீதா அரண்மனையின் பாதுகாப்புப் பொறுப்பில் இருந்தவரும் ஆன பி. யெ. திபேன்கோ அரசியல் நிர்ணய சபை கூட்டத்தை நிறுத்தும்படி தமது காவலர்களுக்குக் கட்டளையிட்டார். இதைக் கேள்விப்பட்ட லெனின் பின்வருமாறு நெறிமுறை

செய்தார்: ''தவ்ரீதா அரண்மனையின் அகத்தே காவற் பொறுப்பில் இருக்கும் படையாளர் மற்றும் கடற்படையாளர் தோழர்கள், அரசியல் நிர்ணய சபையின் எதிர்ப் புரட்சியாளர்களின் பகுதியிடம் வன்முறை எதையும் அனுமதியாது, தவ்ரீதா அரண்மனையிலிருந்து சுதந்திரமாக எல்லோரும் வெளியேற அனுமதிக்கும் அதே போதில் ஒருவரும் விசேஷ உத்தரவின்றி உள்ளே வர அனுமதிக்கக் கூடாது என்று கட்டளையிடப்படுகின்றனர். மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் தலைவர் வி. உலியானவ் (லெனின்)'' (நூல் திரட்டு, ஐந்தாவது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 50, பக்கம் 26).

அரசியல் நிர்ணய சபை தனது அமர்வை 1918 ஜனவரி 5 (18)ந் தேதி இரவு முடித்துக் கொண்டது.

ஜனவரி 6 (19)ந் தேதி இரவு அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி அரசியல் நிர்ணய சபையின் கலைப்பு குறித்த தீர்மானத்தை நிறைவேற்றியது. பிராவ்தாவிலும் இஸ்வேஸ்தியாவிலும் 1918 ஜனவரி 7 (20)ல் இத்தீர்மானம் வெளியிடப்பட்டது.—192.

46 தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் மூன்ருவது அகில ருஷ்ய காங்கிரஸ் பெத்ரோகிராதில் 1918 ஜனவரி 10—18 (23—31)இல் நடைபெற்றது.

லெனின் மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் செயல்களை குறித்த அறிக்கையை வெளியிட்டார். காங்கிரஸ் லெனினின் ''உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' ஏற்றுக் கொண்டது. இது பின்னர் சோவியத் அரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையாக அமைந்தது. காங்கிரஸ் மேலும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் கொள்கை வழிகளை ஆமோதிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இவற்றின் மீதுள்ள முழு நம்பிக்கையை வெளியிட்டது. காங்கிரஸ் மேலும் நிலத்தின் சமூகவுடைமையாக்கம் குறித்த சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டது (குறிப்பு 54ஐப் பார்க்கவும்).—194.

47 லெனின் அகில ருஷ்ய தோல் தொழிலாளர் சங்கத்துக்கும் தோல் தொழிலதிபர்களுக்கும் இடையே, மத்திய தோல் கமிட்டியில் தொழிலாளர்களுக்கு மேலும் அதிக பிரதிநிதித்துவம் அளிக்கவும் அதற்கு ஜனநாயக ரீதியில் மறு உருக்கொடுக்கவும் எழுந்த விவாதத்தை இங்கே குறிப்பிடுகிருர். இதன் பயனுக 1918 துவக்கத்தில் மத்தியக் கமிட்டியும் வட்டாரக் கமிட்டிகளும் மறு சீர

மைக்கப்பட்டன; தொழிலாளர்கள் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்றனர். 1918 ஏப்ரல் 6ல் லெனினுல் கையெழுத்திடப்பட்ட தந்திச் செய்தி ஒன்று எல்லா சோவியத்துகளுக்கும் அனுப்பப்பட்டது. தோல் தொழில் துறையின் உள்ளூர் அமைப்புகளை ஜனநாயகப்படுத்த வேண்டுவதன் அவசியம் மற்றும் தோல் தொழில் சம்பந்தமாக மத்திய மற்றும் வட்டார கமிட்டிகள் பிறப்பிக்கும் நெறி முறைகளைத் துல்லியமாய் நிறைவேற்ற வேண்டுவதன் அவசியம் பற்றி அதில் வலியுறுத்தப்பட்டது.—200.

48 மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் 1918 ஜனவரி 18 (31)ல் வியாபாரக் கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்தின் தேசவுடைமையாக்கம் குறித்து விவாதிக்கப்பட்டது. இது குறித்து மூன்று அறிக்கைகள் விவாதிக்கப்பட்டன. முதலாவது சென்த்ரொவோல்கா சார்பில், இரண்டாவது அகில ருஷ்ய கடற்பணியாளர் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துப் பணியாளர் சங்கம் சார்பில், மூன்ருவது தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் பிரதிநிதியிடம் இருந்தது. ''கடற்பணியாளர் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துப் பணியாளர் குறித்து'' என்ற லெனினது நகல் மக்கள் கமிசார்கள் கவுன்சிலினுல் ஒரு முடிவாக ஏற்கப்பட்டது.

நகல் அரசாணையின் எழுத்துப் பிரதியில் லெனின் குறிப்பு 4ற்குப் பின்: ''ஒபலேன்ஸ்கியின் §3 ஐச் சேர்த்துக் கொள்ளவும்'' என்றும், குறிப்பு 5ற்குப் பின்: ''++ தோழர் ஒபலேன்ஸ்கியின் தீர்மானத்தின் §1 ஐச் சேர்த்துக் கொள்ளவும்'' என்றும் குறித்திருந்தார்.

நி. ஒசீன்ஸ்கி (வி. வி. ஒபலேன்ஸ்கி) பிரேரேபித்த மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் நகல் தீர்மானத்தின் மூன்ரும் பாரா கூறியதாவது: ''வியாபாரக் கப்பல்கள் எல்லா கடல் மற்றும் நதி ஓடும் சரக்கு மற்றும் பயணிக் கப்பல்கள் இவற்றின் தேசவுடைமையாக்கம் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னதாக அவை தற்காலிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டு கப்பல் உரிமையாளர்களின் செலவிலேயே கட்டாயமாகப் பழுது பார்க்கப்பட வேண்டும்.''

முதலாவது பாரா கூறியதாவது: ''கடற்பணியாளர் மற்றும் நதிப் போக்குவரத்துப் பணியாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டிக்கும் சென்த்ரொவோல்காவுக்கும் நடைபெறவிருக்கும் கடற்பணியாளர் மற்றும் நதிப் போக்குவரத்துப் பணியாளர் காங்கிரசில் அவை இணைய வேண்டும் எனவும் உடனடியாக அலுவல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் யோசனை கூறப்பட வேண்டும்.—201.

49 அகில ருஷ்ய கடற்பணியாளர் மற்றும் நதிப் போக்குவரத்துப் பணியாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியை இங்கு லெனின் குறிப்பிடுகிறார்.—201.

50 1918 மார்ச் 4ல் மக்கள் கமிசார்கள் கவுன்சில், கப்பல் மற்றும் நதிப் போக்குவரத்தின் நிர்வாகத்துக்கான ஒரு கூட்டுச் செயற் குழுவை நிறுவுவது குறித்த பிரச்சினையை, 1918 பிப்ரவரி 27ல் ''கடல் மற்றும் நதியோடும் வாணிகக் கப்பல் தொகுதி மற்றும் நீர்வழிப் போக்குவரத்து நிர்வாகம் பற்றி'' மக்கள் கமிசார்கள் கவுன்சிலினால் ஏற்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்பான முறையில் விவாதித்தது. அதோடு, வோல்கா மற்றும் மரியீன்ஸ்கயா காயல்களில் வேலை செய்யும் தொழிலாளர் சம்பள அளிப்பு பற்றியும் விவாதித்தது. மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் தீர்மானப் படி நீர்வழிப் போக்குவரத்தின் நிர்வாகம் தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலின் அதிகார வரம்புக்கு மாற்றப் பட்டது, அதன் கீழ் நீர்வழி போக்குவரத்து இலாகா நிறுவப்படும். இந்த இலாகாவின் கூட்டுச் செயற்குழுவில் தலைமைப் பொருளாதாரக் கவுன்சில், மக்கள் கமிசார்கள் கவுன்சில் மற்றும் நீர் போக்குவரத்துப் பணியாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்கள்.—203.

51 அகில ருஷ்ய கடல் பணியாளர் மற்றும் நதிப் போக்குவரத்துப் பணியாளர் சங்கத்தின் மத்திய நிர்வாகக் குழுவால், அந்தப் போக்குவரத்துத் துறையின் நிர்வாகம் இச் சங்கத்தின் கைகளில் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும் என்னும் யோசனை இங்கு குறிப்பிடப்படுகிறது. மக்கள் கமிசார்கள் கவுன்சில் இத்தகைய அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டு கோரிக்கைகளை நிராகரித்தது. லெனினது யோசனைப்படி மக்கள் கமிசார்கள் கவுன்சில் தன் பிப்ரவரி 27 தீர்மானத்தின் பாரா 3ன் அடிப்படையில் ஒரு கூட்டுச் செயற்குழு ஒன்றை ஏற்படுத்தி, தாற்காலிகமாக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை அதில் அதிகரித்து, வோல்கா மற்றும் மரியீன்ஸ்கயா காயல் துறைத் தொழிலாளர்களின் கூலிகளை கொடுக்கும்படி வங்கி நோட்டுகளை உடனடி அனுப்பி வைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி ஆணையிட்டது. மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் லெனினால் எழுதப்பட்டவை.—203.

52 ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்'' என்ற கட்டுரையின் தொடக்க வாசகம் 1918 மார்ச் 23—28ல் ஒரு சுருக்கெழுத்தருக்கு லெனினால் படித்துச் சொல்லப் பட்டது. அவருடைய இந்தக் கட்டுரை ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகள்)இன் மத்திய கமிட்டியில் விவாதத்திற்குத் தயாரிக்கப்பட்ட தகவல்களுடன்

வெளிப்படையான தொடர்புள்ளது. இத்தகவல்கள் சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் வளர்ச்சிக்கான திட்டம் பற்றியதாகும். மார்ச் 31ம் தேதியே, கட்சி மத்தியக் கமிட்டியின் கூட்டத்தில் லெனின் கலந்து கொண்டார். ''அரசாட்சியை வென்றடையும் காலம் முடிவடைந்து விட்டது, முக்கியமான நிர்மாணப் பணி தொடங்கிவிட்டது'' ஆகவே ''திறமை மற்றும் அனுபவம் உள்ள ஊழியர்களை இப்பணியில் ஈர்க்க வேண்டும்'' என்று இக்கூட்டத்தில் கூறப்பட்டது. அக்கூட்டத்தில் வேறுபட்ட பல கருத்துக்கள் வெளிப்பட்டதால் ஒரு பொதுவான கருத்தை எட்டுவதற்காக மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டத்தைக் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது. 1918 ஏப்ரல் 4ல் மத்திய கமிட்டியின் தலைமை உறுப்பினர்களும் ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளும்'' கலந்து கொண்ட கூட்டத்தில், ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'' முன்வைத்த ''நடப்பு நிலைமை மீதான ஆய்வுரைகளுக்கு'' எதிர்ச்செயல் என்னும் முறையில் லெனின் புதிய நிர்மாணிப்புக்கான தமது வேலைத் திட்டத்தையும் கோஷங்களையும் முன்வைத்தார். இவை ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளால்'' பத்திரிகைகளில் மூர்க்கமாகத் தாக்கப்பட்டன. ஏப்ரல் 7ல் நடைபெற்ற மத்திய கமிட்டியின் பிளீனம் கூட்டத்தில் தமது துவக்க உரையில் லெனின் புரட்சியானது ''புதிய கால கட்டத்தின்'' ஊடே செல்கிறது என மீண்டும் வலியுறுத்தினார். மத்திய கமிட்டி லெனினிடம் ''நடப்பு நிலைமை மீதான ஆய்வுரைகளை'' உருவாக்கி அதற்குச் சமர்ப்பிக்கும் பொறுப்பை அளித்தது. இந்த முடிவின் தொடர்பாகவே, லெனின் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகளை சமர்ப்பித்தார்.

கட்டுரையின் தொடக்க வாசகத்தின் பெரும்பாலான அத்தியாயங்கள் (லெனின், மஞ்சரி 5, 6 மற்றும் 7இல் வெளியிடப்பட்டவை உட்பட), 1962ல் லெனின், முழு நூல் திரட்டு தயாரிக்கப்பட்ட பொழுது கண்டுபிடிக்கப்பட்டன.—208.

53 பெரும் தொழில் நிறுவனங்களை தேசவுடைமையாக்கும் அரசாணை மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அங்கீகாரத்தை 1918 ஜூன் 28ல் பெற்றது. அது ஜூன் 30 அன்று அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியாவில் இதழ் 134ல் வெளியானது. இந்த அரசாணையின் கீழ் எல்லா பெரும் தொழில் நிறுவனங்களையும் தேசவுடைமையாக்கி அடிப்படை உற்பத்தி சாதனங்கள் சமூகவுடைமையாக்கப்படுவதை முழுமையாக்கியது. இதற்கு முன்பு வங்கிகள், மிகப்பெரும் உலோகத் தொழில் நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள், நிலக்கரி மற்றும் எண்ணைத் தொழிற்துறைகள், நீர்வழிப் போக்குவரத்து

முதலியவற்றைத் தேசவுடைமையாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெருவீதத் தொழில் துறையினை அரசுக்கு உடைமையாக்கும் மாறுதலை அறிவித்த பின் மக்கள் கமிசார்கள் கவுன்சில் தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களை, அவை சோவியத் பொருளாதார அமைப்புகளிடம் மாற்றப்படுவதற்கு முன்பாக தாற்காலிகமாக, ''பழைய உரிமையாளர்களிடம்'' இலவசமாகப் பயன்படுத்த விட்டு வைத்தது. நிறுவனத்தின் தினசரி அலுவலுக்கும் பாதுகாப்பிற்கும் அப்பழைய உரிமையாளர்களையே பொறுப்பாக்கினர். எல்லாத் தொழிலாளர்களும் தொழில் நுட்ப ஊழியர்களும் சோவியத் ஆட்சியின் சேவையில் இருப்பதாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. தலைமைப் பொருளாதாரக் கவுன்சில், தேசவுடைமையாக்கப்பட்ட எல்லா நிறுவனங்களுக்கும் அவற்றின் நிர்வாக ஏற்பாடு குறித்த விவரமான நெறியுரைகளை அவசரமாக விரிவிளக்கம் செய்து அனுப்பிவைக்கப் பொறுப்பேற்றது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் அமைப்புத்துறைப் பணிகளாலும், உழைக்கும் மக்கள் திரளினரின் செயல்களாலும் ஏராளமான இடர்ப்பாடுகள் இருப்பினும் தேசவுடைமையாக்கும் பணி உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டது. 1918 ஆகஸ்டு 31க்குள் 3,000க்கும் மேற்பட்ட தேசவுடைமையாக்கப்பெற்ற நிறுவனங்கள் ஏற்கெனவே நிலவின.

இதே அரசாணை தனியார் ரயில்வேக்களையும் பொது சேவா நிறுவனங்களையும் (நீர் வழங்கு துறை, எரிவாயு நிலையங்கள், பொதுப் போக்குவரத்து இத்தியாதி) தேசவுடைமையாக்கப்பட்டதை அறிவித்தது, இவையாவும் ஸ்தல சோவியத்துகளிடம் ஒப்படைக்கப்பட்டன.—213.

54 நிலங்களை சமூகவுடைமையாக்கும் அடிப்படைச் சட்டம் 1918 ஜனவரி 18 (31)ல் சோவியத்துக்களின் மூன்றுவது அகில ருஷ்ய காங்கிரஸில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1918 ஜனவரி 27 (பிப்ரவரி 9)ல், அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அங்கீகாரம் பெற்றது இங்கே குறிப்பிடப்படுகிறது. இச்சட்டம் நிலச்சொத்துரிமை ஒழிப்பை ஊர்ஜிதம் செய்து நிலத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பை சோவியத் ஆட்சிக்கு மாற்றி அளித்தது.—214.

55 லெனினின் **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** என்ற கட்டுரை எழுத்துப் பிரதியில் **இன்றைய தருணத்தில் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் பற்றிய ஆய்வுரைகள்** என்றழைக்கப்பட்டது. லெனினது ஆய்வுரைகள் 1918 ஏப்ரல் 26ல் கட்சியின் மத்தியக் கமிட்டியினல் விவாதம் செய்யப்பட்டன. மத்தியக் கமிட்டி அவற்றை

ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அவற்றை பிராவ்தாவிலும், இஸ்வேஸ்தியாவிலும் வெளியிட வேண்டும் என்றும் தனித் துண்டுப் பிரசுரங்களாக வெளியிட வேண்டும் என்றும் நெறியாண்மை செய்தது.

மத்தியக் கமிட்டி, லெனினிடம் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் குறித்து அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க அதிகாரம் அளித்ததோடு, இந்த ''ஆய்வுரைகளின்'' பொழிப்பை ஒரு தீர்மான வடிவில் எழுதிக் கொடுக்கும் படியும் கேட்டுக் கொண்டது.

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் எனும் வெளியீடில் லெனின் சோஷலிஸ்டு நிர்மாணத்திற்கான ஒரு திட்டத்தை உருவரை செய்தார், முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்வது குறித்த முக்கியப் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தினார், சோவியத் அரசின் பொருளாதாரக் கொள்கையின் கோட்பாடுகளை விரிவிளக்கம் செய்தார். இந்த வெளியீடில் அடங்கியுள்ள பல முக்கியமான கருத்துக்கள் சோஷலிஸ்டு சமுதாய அமைப்பின் நிலைமைகளுக்கு முற்றிலும் பொருத்தமானவை.—217.

56 1917 நவம்பர் 18 (டிசம்பர் 1)ல் லெனினது அபிப்பிராயப்படி மக்கள் கமிசார்கள் கவுன்சில் ''மக்கள் கமிசார்களின் மற்றும் மூத்த அரசாங்க அலுவலர்களின் ஊதியம் பற்றிய'' தீர்மானம் ஒன்றை ஏற்றுக் கொண்டது. லெனினால் உருவரை செய்யப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு ஏற்ப ஒரு மக்கள் கமிசாரின் அதிகப்பட்ச மாதச் சம்பளம் 500 ரூபிள்களும், மேற்கொண்டு அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஏலாத உறுப்பினர் ஒவ்வொருக்கும் 100 ரூபிள்கள் வீதமும் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வூதியம் ஏறக்குறைய ஒரு தொழிலாளியின் சராசரி மாத வருமானத்திற்கு இணையாக இருந்தது. இக்கவுன்சில் மீண்டும் 1918 ஜனவரி 2(15)ல் தொழிலாளர் நல அமைச்சர் அ.க. ஷ்லியாப்னிக்கவின் கேள்விக்குப் பின் முன்போலவே லெனினால் உருவரை செய்யப்பட்ட இன்னொரு முடிவை ஏற்றது. இந்த முடிவு 1917 நவம்பர் 18ன் முடிவு நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புக்கு மேல் தனித்தேர்ச்சியாளர்களுக்கும் ஊதியம் அளிக்கப்படுவதைத் தடை செய்யாது என்று விளக்கம் தந்தது. இதனால் மக்கள் கமிசார்கள் கவுன்சில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தனித்தேர்ச்சியாளர்களுக்கு உயர் ஊதியம் அளிக்க அனுமதித்தது.—224.

57 சோவியத் அரசாங்கம் அதன் ஆரம்ப நாட்களில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது கண்காணிப்பை நிலைநாட்டியது.

துவக்கத்தில் இந்தக் கண்காணிப்பை பெத்ரோகிராத் ராணுவ-புரட்சிக் கமிட்டி அமுல் நடத்தியது, பொருள்களின் ஏற்றுமதி, இறக்குமதி இவற்றுக்கான மனுக்களை கவனித்தது, சுங்க நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தது. 1917 டிசம்பர் 29 (1918 ஜனவரி 11)ல் அங்கீகாரம் பெற்ற மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அரசாணையின் கீழ் வெளிநாட்டு வர்த்தகத்தைக் கண்காணிக்கும் அதிகாரங்கள் வர்த்தகம் மற்றும் தொழில்துறை மக்கள் கமிசாரகத்திடம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கண்காணிப்பும் சுங்க மேற்பார்வையும் வெளிநாட்டு மூலதனத்திற்கு எதிராகத் தேசியப் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்குப் போதுமானவையல்ல. வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசு ஏகபோகத்தை லெனின் 1917 டிசம்பரிலேயே முன்னுரைத்தார். இதற்குப் பொருத்தமான அரசாணை 1918 ஏப்ரல் 22ல் மக்கள் கமிசார்கள் கவுன்சிலால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.—229.

58 சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஆரம்ப நாட்களில் சுமத்தீடுகளும் சிறப்பு வரிகளுமே பட்ஜெட் வருவாயின் மூலாதாரமாக, குறிப்பாயும் உள்ளூர்களில், இருந்தன. சோவியத் ஆட்சி அதிகாரத்தின் நிலை கெட்டிப்பட்டதோடு ஒழுங்கான வரிவிதிப்புக்கு மாறிச்செல்வது சாத்தியமாயிற்று. வளர் வீதத்திலான ஒரு வருமான வரி மற்றும் சொத்து வரியுமே வரிச்சுமையை பணம் படைத்த சமூகப் பிரிவினர் மீது மாற்ற ஏதுவான கருவியாக அமைந்தது. சோவியத்துக்களின் நிதித்துறை பிரதிநிதிகளின் முதல் அகில ருஷ்ய காங்கிரஸ் மாஸ்கோவில் 1918 மே 17-21ல் கூடி, லெனினது யோசனையை ஏற்று, வருமானம் மற்றும் சொத்தின் மீது வரியைப் புகுத்துவது என்றும் அதற்கான சட்டங்களை லெனினின் ஆய்வுரையின் அடிப்படையில் வரைய ஒரு தனிக் கமிஷனை அமைப்பது என்றும் தீர்மானித்தது.—230.

59 42வது குறிப்பைப் பார்க்க.—234.

60 பின்வரும் ஆவணம் நிதித்துறை மக்கள் கமிசாரகத்தால் உருவரை செய்யப்பட்ட ''வங்கிக் கொள்கையின் மீதான ஆய்வுரைகளின்'' வாசகத்தின் கீழே லெனினால் எழுதப்பட்டது: ''1. வங்கி அமைப்பில் ஏகபோகம் கூடாது, ஆனால் அது தேசவுடைமையாக்கப்பட வேண்டும். தொழில்துறை மற்றும் பரிவர்த்தனையை மேலும் அதிகத் தீவிரமாகத் தேசவுடைமையாக்க வேண்டும். ஆனால் இந்த நோக்கத்திற்காக அடிநிலை ஊழியர்கள் ஒழுங்கு திரட்டப்பட வேண்டும். 2. நுகர்விற்கான அனுப்புதல்களைத் தொடர்ச்சியாக விதிமுறை செய்தல். 3. சுயேச்சையான காசோலையின்

புழக்கமும், தனியார் நிறுவனங்களின் காசோலைகளின் புழக்கத்தைக் கண்காணிக்கும் உரிமை புகுத்தப்படுதலும் (''புகுத்தப்படுதல்'' என்பதை லெனின் ''நீடித்து வைக்கப்படுதல்'' என்று மாற்றினார்—ப-ர்.) 4. கட்டாய நடப்புக்கணக்கு, செய்முறை அமைப்பு அதற்காக உடனடியாக தயாரிக்கப்பட வேண்டும் என்பது ஒரே நிபந்தனை. 5. வெளிநாட்டு வர்த்தகம் தேசவுடைமையாக்கப்படுதலும், காப்பு நடவடிக்கைகளும்.''

லெனின் தம் ஆய்வுரைகளின் வாசகத்தின் மீது ''பொருளாதாரக் கொள்கை மற்றும் குறிப்பாக வங்கிக் கொள்கை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்'' எனும் தலைப்பை எழுதினார்.—237.

61 சில நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும், சில தொழிற்சங்கங்களும் தேசவுடைமையாக்கப்பட்ட தமது நிறுவனங்களைத் தமது சொந்தச் சொத்தாக எண்ண நேரிட்டதால் இந்த தேசவுடைமையாக்க நிகழ்முறை சிக்கலடைந்த காரணத்தால் இக்கோரிக்கை மிகவும் முக்கியமானதாக இருந்தது. லெனின் இந்த அராஜக-சிண்டிக்கலிஸ்டு போக்குகளை இடித்துரைத்தார். மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் 1918 மார்ச் 4ல் வோல்கா நதிப் போக்குவரத்து குறித்த விவாதத்தில் லெனின் பேசியவற்றைக் கவனிக்க (இந்த நூலில் பக்கங்கள் 203-07).—238.

62 வங்கிக் கொள்கையின் மீதான ஆய்வுரைகள் லெனினால் நிதித்துறையின் மற்றும் அரசு வங்கிகளின் மக்கள் கமிசாரக அதிகாரிகள் கூட்டத்தில் வரையப்பெற்றது (1918 மார்ச்—ஏப்ரல்).—240.

63 ''வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி'' மற்றும் ''வங்கிப் பாதுகாப்புப் பெட்டகங்கள் சோதனையிடப்படுதல் பற்றி'' இவ்வரசாணைகள் 1917 டிசம்பர் 14 (27)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டன. (குறிப்பு 35ஐப் பார்க்க).—240.

64 அகில ருஷ்யத் தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்சில், உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் தலைமைப் பொருளாதார கவுன்சிலின் பிரதிநிதிகளது கூட்டு அமர்வு, முதலாளிகளின் பிரிவு ஒரு டிரஸ்டை (''தேசியக் கம்பெனி'') நிறுவக் கோரி முன்வைத்த யோசனை குறித்து விவாதித்தது. இந்த டிரஸ்டில் நீராவி எஞ்சின்கள், ரயில் பெட்டிகள், கப்பல்கள், தண்டவாளங்கள், கனரக இயந்திரங்கள் ஆகியவையும் தொன்யாஸ் சுரங்கங்கள் மற்றும் உராலிலும் தென்பகுதியிலுமான இரும்பு எஃகு தொழிற்சாலைகளில் கணிசமானவையும்

உட்படும். அது தனது சொந்த விவசாயப்பொருள் உற்பத்தியை ஒழுங்கமைத்துக்கொள்வதற்காக இந்த டிரஸ்டுக்குப் பெரும் பரப்புடைய சாகுபடி நிலங்கள் மாற்றி வழங்கப்படுவதை இத்திட்டம் எதிர்நோக்கியது. இந்த டிரஸ்டு 150 கோடி ரூபிள் அடிப்படை மூலதனத்தைக் கொண்டிருக்கவும் 3 லட்சம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளவும் உத்தேசித்திருந்தது. இத்திட்டம், தொழிற்துறையில் ஜீவாதாரமான கிளைகள் தேசவுடைமையாக்கப்படுவதைத் தடுக்க முதலாளித்துவ அதிபர்கள் செய்த முயற்சியாகும். சோவியத் அரசுக்கு இதில் இரண்டாந்தர இடமே ஒதுக்கப்பட்டது. அடிப்படை மூலதனத்தில் 33 சதவிகிதத்தை மட்டுமே அரசு கொண்டிருக்கும், பெரும்பகுதி தனியார் முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கும். மேலும் அரசு தன்னுடைய பங்கை பணமாகச் செலுத்த வேண்டும், இதன் பொருள் டிரஸ்டு முழுமைக்கும் அரசு பண உதவி செய்யும் என்பதே.

பேச்சுவார்த்தைகள் 1917 நவம்பர் முதல் 1918 ஏப்ரல் வரை தொடர்ந்து நடைபெற்றன. சோவியத் அரசாங்கம், முதலாளித்துவச் சொத்தைப் பேணிக்காக்க ஏகபோகவாதிகள் செய்த முயற்சிகளை நிராகரித்தது. ஆனால் முதலாளித்துவ நிபுணர்களை சோவியத் பொருளாதாரத்தில் வேலைக்கமர்த்தத் தயாராக இருப்பதாகக் கூறியது. ஏப்ரல் 18 அன்று மக்கள் கமிசார்கள் கவுன்சில் இத்திட்டத்தை ஏற்க மறுத்து தொழிற்சாலைகளைத் தேசவுடைமையாக்க முடிவு செய்தது. இந்த முடிவை 1918 மே 12 முதல் 18 வரை நடந்த இஞ்சினியரிங் தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள் மாநாடு ஆதரித்தது (இதே நூல், பக்கங்கள் 245-46).—244.

65 **தேசவுடைமையாக்கப்படப் போகும் நிறுவனங்களது பிரதிநிதிகளின் மாநாடு** மாஸ்கோவில் 1918 மே 12 முதல் 18 வரை நடைபெற்றது. ஒவ்வொரு நிறுவனத்தினின்றும் 6 பிரதிநிதிகள் கொண்ட குழு கலந்து கொண்டது: மூன்று தொழிலாளர்கள், இரண்டு பொறியாளர்கள், ஓர் அலுவலக சிப்பந்தி.

மாநாடு தொடங்கு முன் நாட்டின் ஆகப்பெரிய தொழிற்சாலைகளைத் தேசவுடைமையாக்குவது பற்றிய பிரச்சினைகள் பொருளாதார இலாகா மற்றும் தொழிற்சங்க மட்டங்களிலும் மக்கள் கமிசார்கள் கவுன்சிலாலும் விவாதிக்கப்பட்டது. முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ நிபுணர்கள் முன்வைத்த ஆலோசனைக்கிணங்க ஆகப்பெரிய இஞ்சினியரிங் நிறுவனங்கள் அரசு முதலாளித்துவக் கூட்டு நிறுவனங்களாக இணைக்கப்பட வேண்டும் என்ற திட்

டத்தை, விவாதத்தில் பங்கு கொண்டோர் ஏற்க மறுத்து, அவை தேசவுடைமையாக்கப்படுவதை ஆதரித்துப் பேசினார்கள் (இதற்கு முந்தைய குறிப்பைப் பார்க்க). மாநாடு பெரும்பான்மையான வாக்குகளால் தேசவுடைமையாக்கக் கொள்கையை மே 17 அன்று ஏற்றுக்கொண்டது.

மே 18ந் தேதி காலையில் லெனினது கடிதம் வாசிக்கப்பட்ட போது கூட்டத்தினர் ஆரவாரம் செய்து வரவேற்றனர். லெனின் கொண்டு வந்த தீர்மானத்தின்படி மாநாடு தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலின் கீழ் அரசு உலோகத் தொழில் நிறுவனங்கள் இணைக்கப்படுவதை மேற்பார்வையிட ஓர் இடைக்காலக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்து அதைப் பற்றிய விதிமுறைகளையும் மற்றும் தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களை நிர்வாகம் செய்வதற்குரிய கமிட்டியின் விதிகளையும் அங்கீகரித்தது.—245.

6 பிரியான்ஸ்க் ஒழுங்கு முறை விதிகள்—தேசவுடைமையாக்கப்பட்ட பிரியான்ஸ்க் ரயில் தண்டவாள, பெழித்சா எனும் இடத்தில் இருக்கும் இரும்பு மற்றும் யந்திரத் தொழிற்சாலைகள் (இப்போது கிராஸ்னி பிரோஃபின்தெர்ன் [சிவப்பு தொழிற்சங்க அகிலம்] தொழிற்சாலை) தொழிலாளர் நிர்வாகமும் ஆலைத் தொழிற்சங்கக் கமிட்டியும் உருவரை செய்த உள் நிர்வாகம் குறித்த இடைக்கால ஒழுங்கு விதிகள். 1918ஆம் ஆண்டு மே 9ந் தேதி ஆலைக் கமிட்டி உறுப்பினர்களாலும் தொழிற்சாலை இயக்குனராலும் கையெழுத்திடப்பட்டு ஓர் உத்தரவாக வெளியிடப்பட்டது. இந்த ஒழுங்கு விதிகள், தொழிற்சங்கங்களின் அகில ருஷ்ய மத்தியக் கவுன்சிலால் ஏற்கப்பட்ட "தொழிலாளர் ஒழுங்குக் கட்டுப்பாடு குறித்த விதிமுறைகளின்" அடிப்படையில் வரையப்பட்டன. இந்த ஒழுங்கு விதிகள் உற்பத்தியில் ஒருமனித நிர்வாகக் கோட்பாட்டை உறுதிப்படுத்தவும் ஒழுங்கு கட்டுப்பாட்டை மேம்படுத்தவும் உதவின. இவை தொழிலாளர் உற்பத்தி ஆற்றல் மீது கறாரான கண்காணிப்புக்கு வகை செய்து விரயங்கள் விஷயத்தில் தொழிலாளர்களைப் பொறுப்பாளிகளாக்கின.—246.

தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பற்றிய விதிகள் என்பதன் நகல் தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலால் தயாரிக்கப்பட்டது, 1918 மே 28முதல் 30 வரை முதல் அகில ருஷ்ய பொருளாதாரக் கவுன்சில்களின் மாநாட்டின் (மாஸ்கோவில் மே 26 முதல் ஜூன் 4, 1918 வரை இது நடைபெற்றது) உற்பத்தி ஒழுங்கமைப்புப் பிரிவின் அமர்வில் விவாதிக்கப்பட்டது. பிரதான அறிக்கையாளர் இந்த நகலை ஆக்கியோரும் தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் தலைமைக் குழு உறுப்பினருமான

கி. தி. வெயின்பர்க் ஆவார். கூட்டு அறிக்கையாளர்கள், ‘‘இடதுசாரி கம்யூனிஸ்டு’’ வி. எம். ஸ்மிர்னேவும், உராலேச் சார்ந்த தொழில்துறையின் பிரதிநிதி வி. என். அந்திரோனிக்கவும் ஆவார். நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் இப்பிரிவு, ‘‘இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளால்’’ நிர்ப்பந்திக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை ஏற்றுக்கொண்டது. இது கட்சி மற்றும் அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரானதாகும்.

‘‘இடதுசாரி கம்யூனிஸ்டுகளின்’’ செயல் குறித்து லெனினிடம் தெரிவிக்கப்பட்ட போது, ஒழுங்கமைப்புப் பிரிவினுல் முன்வைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை அவர் வாசித்தறிந்த போது, (மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் இருந்து) லெனினும் (தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலில் இருந்து) ரீக்கவ் மற்றும் வெயின்பர்கும் அடங்கிய ஜூன் 2ந் தேதியன்று விசேஷமாக அமைக்கப்பட்ட சமரச போர்டால் இவை பரிசீலிக்கப்பட வேண்டும் என்று யோசனை கூறினுர். அச்சமரச போர்டு ஒழுங்கு விதிகளை இங்கே பிரசுரமாகியிருக்கும் லெனினது குறிப்புகளுக்கிணங்க திருத்தி அமைத்தது. ‘‘இடதுசாரி கம்யூனிஸ்ட்டுகளின்’’ எதிர்ப்பைப் பொருட்படுத்தாது காங்கிரஸ் சமரசபோர்டின் நகல் ஒழுங்கு விதிகளைப் பெரும்பான்மை வோட்டு மூலம் ஏற்றுக்கொண்டது.

இந்த ஒழுங்கு விதிகளின் கீழ், தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள் தொழிற்சாலே நிர்வாகத்தால் மேலாண்மை செய்யப்படவும், அதன் மூன்றின் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் பிராந்திய பொருளாதாரக் கவுன்சில் அல்லது தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலால் (மத்திய போர்டுக்கு நேரடியாக இந்த நிறுவனம் கீழ்ப்படுத்தப்பட்டிருந்தால்) நியமிக்கப்படவும் வேண்டும். பொருளாதாரக் கவுன்சிலுக்கு, பிராந்திய (அல்லது அகில ருஷ்ய) தொழிற்சங்க அமைப்பு பாதியளவு உறுப்பினர்களை நியமிக்குமாறு அனுமதிக்க உரிமை உண்டு. மூன்றில் ஒரு பங்கு நிர்வாக அங்கத்தினர்களை நிறுவனங்களின் சங்கம் மூலம் திரண்ட தொழிலாளர் தேர்ந்தெடுப்பர். பொறியியல் மற்றும் வர்த்தக ஊழியர்கள் மூன்றில் ஒரு பங்கு நிர்வாக அங்கத்தினர்களாக அமைவர்.—247.

68 **மாஸ்கோ தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சாலேக் கமிட்டிகளின் நான்காவது மாநாடு** 1918, ஜூன் 27 முதல் ஜூலே 2 வரை நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிரச்சினைகள்: அக்கால நிலைமையினுலே உக்கிரப்படுத்தப்பட்ட உணவு வழங்கீடு; பொது ராணுவப் பயிற்சி மற்றும் படைதிரட்டுதல்; தொழி

லாளர் கட்டுப்பாடு; தொழில் வாய்ப்பு நிலைய நடவடிக்கைகள்; தொழிற்சாலைக் கமிட்டிகளின் விதிகள் இத்தியாதி. லெனின் ஜீவாதாரப் பிரச்சினையான உணவு வழங்கீடு பற்றி அறிக்கை செய்தார். லெனினது அறிக்கை மீது இந்த மாநாடு நிறைவேற்றிய தீர்மானத்தையும் லெனினே உருவரை செய்தார்.—248.

தொழிலாளிகள், விவசாயிகள், படையாளிகள் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் மாஸ்கோவில் *1918* ஜூலை 4ல் தொடங்கியது. ஓட்டுரிமையுடன் கூடிய 1,164 வாக்காளர் பிரதிநிதிகளில் 773 போல்ஷிவிக்குகள் இருந்தனர்.

யா. மி. ஸ்வெர்த்லோவ் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் வேலைகள் பற்றியும் வி. இ. லெனின் மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் பணிகள் குறித்தும் அறிக்கைகள் சமர்ப்பித்தனர். இவ்வறிக்கைகள் பற்றிச் சூடான விவாதம் நடந்தது. பின்னர், கம்யூனிஸ்டுப் பிரிவால் பிரேரேபிக்கப்பட்டு ''சோவியத் அரசாங்கத்தின் உள்துறை மற்றும் அயல்துறைக் கொள்கைகளை முழுமையாக அங்கீகரிப்பதாக'' பிரகடனம் செய்யும் ஒரு தீர்மானம் காங்கிரசில் பெரும்பான்மை ஓட்டுகளால் நிறைவேற்றப்பட்டது. இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சியாளர்களால் உருவரை செய்யப்பட்டு, சோவியத் அரசாங்கம் மீது நம்பிக்கையில்லை என்று வாக்களிக்கவும் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை ரத்துச் செய்யவும் உள்துறை, அயல்துறைக் கொள்கைகளை மாற்றும்படி கோரியும் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை காங்கிரஸ் நிராகரித்தது.

காங்கிரசில் ஏற்பட்ட தோல்வி இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சியாளர்களை பகிரங்க நடவடிக்கைகளுக்குத் தூண்டி விட்டது. அவர்கள் மாஸ்கோவில் ஜூலை 6ந் தேதி ஓர் எதிர்ப்புரட்சிக் கலகத்தை ஏற்பாடு செய்தனர். இதனால் காங்கிரசின் முறையான வேலைகளில் இடை முறிவு ஏற்பட்டது, இப்பணி ஜூலை 9ல் மீண்டும் தொடங்கியது. ஜூலை 6—7 நிகழ்ச்சிகள் குறித்து காங்கிரசில் கலந்து கொண்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் கலகத்தை அடக்க அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

உணவுத்துறை மக்கள் கமிசாரான அ. தி. திசியுருப்பா அறிக்கையைத் தொடர்ந்து உணவு பிரச்சினையின் மீதான தீர்மானத்தில் இந்தக் காங்கிரஸ் அரசின் தானியத்துறையில் அரசு ஏகபோகம் ஸ்திரமடைந்து வருவதை மீண்டும் உறுதிப்படுத்தியது; குலாக்குகளின் எதிர்ப்பை ஒடுக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக் காட்டியது; மேலும்

ஏழ்மை மிக்க விவசாயிகள் கமிட்டிகள் அமைப்பதை அங்கீகரித்தது. அதன் கடைசி அமர்வு நடந்த ஜூலை 10ந் தேதி காங்கிரஸ் செஞ்சேனை அமைப்புக் குறித்த ஓர் அறிக்கையைக் கேட்டு, கம்யூனிஸ்டுப் பிரிவினர் கொண்டு வந்த தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. இத்தீர்மானம், செஞ்சேனையை ராணுவத்திற்குக் கட்டாயமாக ஆள்திரட்டும் அப்படையில் அமைப்பதும் மற்றும் வலுப்படுத்துவதற்குமான முந்துரிமை நடவடிக்கைகள் பற்றியதாகும்.

இக்காங்கிரஸ் ருஷ்யக் கூட்டாட்சியின் முதல் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. இது சோவியத் மக்களின் சாதனைகளுக்குச் சட்டத்தின் வடிவை அளித்தது. —253.

70 இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது சோவியத் ருஷ்யாவிற்கும் நால்வர் கூட்டணிக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி) இடையே ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையாகும். இது 1918 மார்ச் 3ல் பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க்கில் கையெழுத்திடப்பட்டு சோவியத்துகளின் நான்காவது அகில ருஷ்ய சிறப்புக் காங்கிரசால் மார்ச் 15ம் தேதி ஊர்ஜிதம் செய்யப் பெற்றது. இதன் நிபந்தனைகள் சோவியத் ருஷ்யாவிற்கு மிகவும் கடுமையாக இருந்தன. இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஜெர்மனி மற்றும் ஆஸ்திரிய-ஹங்கேரி, போலந்தின் மீதும், ஏறக்குறைய பால்டிக் பிராந்தியம் முழுவதும், பெலோருஷ்யாவின் ஒரு பகுதியும் ஆகிய இவற்றின் மீதும் ஆட்சி செய்யும் உரிமை பெற்றன. உக்ரேன் சோவியத் ருஷ்யாவிடம் இருந்து பறிக்கப்பட்டு ஜெர்மனியை சார்ந்திருக்கும் துணைக்கோள் அரசாக மாற்றப்பட்டது. துருக்கி, கார்ஸ், பத்தூம் (இப்போது பத்தூமி) மற்றும் அர்தஹன் இவற்றைப் பெற்றது.

இருந்த போதிலும், பிரேஸ்த் உடன்படிக்கை ஓரளவுக்கு மூச்சுவிட அவகாசம் அளித்தது. சோவியத் அரசாங்கம் பழைய உரங்குலைந்த சேனையைக் கலைத்து விடவும், புதிய செஞ்சேனையை உருவாக்கவும், சோஷலிஸ்டு நிர்மாணப் பணியில் இறங்கவும், மற்றும் உள்நாட்டு எதிர்ப்புரட்சியாளர்களையும், அன்னியத் தலையீட்டாளர்களையும் எதிர்த்து வரவிருக்கும் போராட்டத்திற்கு வேண்டிய சக்திகளைத் திரட்டுவதற்கும் இதைப் பயன்படுத்தியது. இந்த உடன்படிக்கை சமாதானத்திற்கான பிரச்சாரத்தை மேம்படுத்தியது. போரில் ஈடுபட்டுள்ள நாடுகளது சேனைகள் மற்றும் சாமான்ய மக்கள் மத்தியிலும் புரட்சிகர உணர்வுகள் பெருகுவதை ஊக்குவித்தது.

இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதை திரோத்ஸ்கியும் ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளது'' கட்சி விரோதப் பிரிவினரும் கடுமையாக எதிர்த்தனர். லெனினுடைய மாபெரும் முயற்சியினால் மட்டுமே இந்த உடன்படிக்கை கையெழுத்தாகியது. 1918ல் நடைபெற்ற ஜெர்மனியின் நவம்பர் புரட்சிக்குப் பிறகு இப்புரட்சி மன்னராட்சியை ஒழித்துக் கட்டிய போது நவம்பர் 13ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் இந்த உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது.—254.

71 53ஆம் குறிப்பினைப் பார்க்கவும்—256.

72 **அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம்** எனும் லெனினது பிரசுரத்தை அமெரிக்காவுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது மிகவும் கடினமானதொரு காரியமாக இருந்தது. ஏனெனில் அப்போது சோவியத் ருஷ்யா முதலாளித்துவ நாடுகளின் இராணுவத் தலையீடு மற்றும் முற்றுகைக்கு இலக்காகி இருந்தது. சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து சோவியத் யூனியனுக்குத் திரும்பிய போல்ஷிவிக்காகிய மி.மி. பரதீன் என்பவரால் இது முற்றிலும் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கடிதமானது பி.ஐ. திராவின் (ஸ்லேத்தவ்) என்பவரால் நேர்முகமாகக் கொடுக்கப்பட்டது. ருஷ்யக் கூட்டாட்சியின் அரசியல் அமைப்புச் சட்டத்தையும், ஜனாதிபதி வில்சனுக்கு தலையீட்டை நிறுத்துமாறு கோரி அனுப்பப்பட்ட சோவியத் குறிப்பினையும் இவர் எடுத்துச் சென்றார். பிரபல அமெரிக்க சோஷலிஸ்டும், பத்திரிகையாளருமாகிய ஜான் ரீடு என்பவரின் உதவியால் இவையெல்லாம் அமெரிக்கப் பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டன.

டிசம்பர் 1918ல் இக்கடிதம் ஆங்கிலத்தில் (சுருக்கப்பட்டு) *Class Struggle* (வர்க்கப் போராட்டம்), நியூயார்க் என்ற பத்திரிகையிலும் வாரப்பத்திரிகையாகிய *The Revolutionary Age* (புரட்சி யுகம்), பாஸ்டன் என்பதிலும் வெளியிடப்பட்டது. இவை இரண்டும் அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சியின் இடதுசாரியின் பத்திரிகைகள். லெனினது இக்கடிதம் பெருமளவு பொதுமக்கள் அக்கறையைத் தூண்டியதால் *Class Struggle*லிருந்து இது மிகப் பல பிரதிகளில் மறுபதிப்புச் செய்து வெளியிடப்பட்டது. பின்னர் இக்கடிதம் சோஷலிஸ்ட் மற்றும் முதலாளித்துவப் பத்திரிகைகளில் அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் மீண்டும் மீண்டும் வெளியிடப்பட்டது. 1934ல் அது ஒரு சிறு பிரசுரமாக நியூயார்க்கில் வெளியிடப்பட்டது.

அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம் அமெரிக்க இடதுசாரி சோஷலிஸ்டுகளுக்குப் பயன்பட்டது. இது அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்திற்கும், அமெரிக்காவின் மற்றும் ஐரோப்பாவின் கம்யூனிச இயக்கத்திற்கும் பெரும் உதவியாக இருந்தது. அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட தொழிலாளர்களுக்கு இது ஏகாதிபத்தியத்தின் தன்மை பற்றி அறிந்து கொள்ளத் துணை புரிந்தது. மற்றும் சோவியத் ருஷ்யாவில் ஏற்பட்டு வரும் மகத்தான புரட்சிகர மாற்றங்களை அறிந்துணர்ந்து கொள்ளவும் உதவி செய்தது. அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு லெனின் விடுத்த வேண்டுகோள் சோவியத் ருஷ்யாவிற்கு எதிரான ஆயுதமேந்திய தலையீட்டைக் கண்டித்து நடந்த அவர்களது எதிர்ப்பு இயக்கத்திற்குப் புதிய உத்வேகம் அளிப்பதாக அமைந்தது.—259.

73 அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர்கள், விவசாயிகள், செஞ்சேனைப் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் 1918 ஜூன் 4ல் நடந்த கூட்டுக் கூட்டத்தில் சமர்ப்பித்த தான பஞ்சத்திற்கு எதிரான போராட்டம் பற்றிய தமது அறிக்கையை இங்கே லெனின் குறிப்பிடுகிறார். (நூல் திரட்டு, ருஷ்யன் பதிப்பு, தொகுதி 36, பக்கம் 409.)—259.

74 தொழிலாளர்கள், விவசாயிகள், கஸாக்குகள் மற்றும் செஞ்சேனைப் பிரதிநிதிகளது சோவியத்துகளின் ஆறுவது அகில ருஷ்ய சிறப்புக் காங்கிரஸ் மாஸ்கோவில் 1918ஆம் ஆண்டு நவம்பர் 6 முதல் 9 வரை நடைபெற்றது. இதில் 1296 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்களில் 1260 பேர் கம்யூனிஸ்டுகள்.

இந்தக் காங்கிரசின் கௌரவத் தலைவராக லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் முதலாம் அமர்வு நவம்பர் 6ஆம் நாள் நடைபெற்றது. அதில் அக்டோபர் புரட்சியின் முதலாம் ஆண்டு நிறைவு பற்றிய அறிக்கையை லெனின் சமர்ப்பித்தார். அதன் பிறகு, சமாதானத்திற்காகவும், சோஷலிசத்திற்காகவும் போராடி வரும் அனைத்து நாடுகளது தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் படையாளிகளுக்கும் அவர்களது தலைவர்களுக்கும் செஞ்சேனைக்கும் காங்கிரஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டது. ஸ்வெர்த்லோவின் தீர்மானத்தின்படி சோவியத் ருஷ்யாவுக்கு எதிராகப் போர் புரியும் அரசாங்கங்களை சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் துவங்குமாறு காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்தது.

நவம்பர் 8ஆம் நாளன்று கூடிய அதன் இரண்டாம் அமர்வில், லெனின் சர்வதேச நிலைமை பற்றி சமர்ப்பித்த

அறிக்கையினை காங்கிரஸ் கேட்டது. இவ்வறிக்கையின்மீது லெனின் உருவரை செய்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. நீதித்துறை மக்கள் கமிசார் டி. இ. குர்ஸ்கியின் அறிக்கையைத் தொடர்ந்து புரட்சிகர சட்டம் பற்றிய அரசாணையைக் காங்கிரஸ் நிறைவேற்றியது. நவம்பர் 9 ஆம் நாளன்று கூடிய அதன் கடைசி அமர்வில் காங்கிரஸ் ராணுவ நிலைமை மற்றும் சோவியத் நிர்மாணப் பிரச்சினைகள் பற்றி விவாதித்தது. இதற்குள்ளாகத் தமது செயற்பணிகளை நிறைவு செய்து விட்ட ஏழ்மை மிக்க விவசாயிகள் கமிட்டிகளை வோலஸ்த் மற்றும் கிராம சோவியத்துக்களோடு இணைத்திடுவது என முடிவு செய்யப்பட்டது.

காங்கிரஸ் புதிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்தது. இதில் 207 உறுப்பினர்களும் 39 மாற்று உறுப்பினர்களும் இருந்தனர். சோவியத் அரசாங்கத்தின் முதலாம் ஆண்டுப் பணியை இம்மாநாடு தொகுத்தாராய்வு செய்தது. மற்றும் உடனடியான எதிர்காலத்திற்கான செயல் திட்டத்தையும் உருவரை செய்தது.—266.

75 மாஸ்கோ மத்திய தொழிலாளர்களது கூட்டுறவின் பிரதிநிதிகளது கூட்டம், 1918ஆம் ஆண்டு நவம்பர் 26—27 தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டம் போர்டு மற்றும் தணிக்கைக் கமிட்டியின் அறிக்கைகளை கேட்டு விவாதித்தது. மற்றும் மாஸ்கோவில் உணவு வினியோகம் பற்றிய அறிக்கையையும் விவாதித்தது. புதிய போர்டு தேர்ந்தெடுக்கப்பட்டது.—272.

76 42ஆவது குறிப்பைப் பார்க்கவும்.

77 வழங்கீட்டை ஒழுங்கமைப்பது பற்றிய அரசாணையின் நகல் 1918 நவம்பர் 12ஆம் நாளில் கூடிய மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் விவாதிக்கப்பட்டது. நவம்பர் 21ஆம் தேதியன்று இறுதியாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு அது இஸ்வேஸ்தியாவில் வெளியிடப்பட்டது, இந்த அரசாணையை வரைவதில் லெனின் செயலூக்கமான பங்கேற்ருர்.—272.

78 பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும் எனும் பிரசுரத்தை 1918ஆம் ஆண்டு அக்டோபர் ஆரம்பத்திலேயே லெனின் எழுதத் துவங்கினுர். காவுத்ஸ்கியின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் சிறு பிரசுரத்தை வாசித்த உடனே லெனின் இதை எழுதத் துவங்கினுர். காவுத்ஸ்கி தமது சிற்றேட்டில் மார்க்சியத்தை திரித்துப் புரட்டி இருந்தார், மற்றும் சோஷலிசப் புரட்சியின்,

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை மறுதலித்தார். தமது நூலை எழுதிக் கொண்டு இருக்கும் போதே லெனின் ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்'' என்ற ஒரு கட்டுரையை எழுதினர். (இது பிராவ்தாவில் 1919 அக்டோபர் 11ல் வெளியிடப்பட்டது.) காவுத்ஸ்கி எழுப்பியிருந்த பிரச்சினைகளின் மீது தமது நிலையைத் தெளிவாக்கும் பொருட்டு இதனை வெளிநாடுகளில் வெளியிட வேண்டுமெனக் கருத்துரைத்தார். ஜெர்மன் மொழியில் 1918ஆம் ஆண்டு பெர்னிலும், 1919ல் வியன்னுவிலும் இக்கட்டுரை வெளியிடப்பட்டது. இத்தாலிய மொழியில் 1919ல் மிலானில் வெளியிடப்பட்டது.

''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்'' எனும் லெனினது பிரசுரம் 1919ல் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் வெளியிடப்பட்டது.—275.

79 இங்கேயும், இதற்குக் கீழேயும் லெனின் காவுத்ஸ்கியின் சிறு நூலாகிய *Die Diktatur des Proletariats*, வியன்னு, 1918, என்பதிலிருந்து மேற்கோள் காட்டுகிருர்.—275.

80 1918 ஆகஸ்ட் 2ஆம் நாளன்று மாஸ்கோவின் புத்தீர்ஸ்கி வட்டாரத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் லெனின் ஆற்றிய உரை இங்கு குறிப்பிடப்படுகிறது. (நூல் திரட்டு, ருஷ்யன் பதிப்பு, தொகுதி 37, பக்கம் 29.)—275.

81 நவம்பர் 21, 1918ல் மக்கள் கமிசார்கள் கவுன்சில் நிறைவேற்றிய வழங்கீடை ஒழுங்கமைப்பது பற்றிய அரசாணை (குறிப்பு 77ஐப் பார்க்கவும்) கூட்டுறவுகளின் நடவடிக்கைகளது விஸ்தரிப்பு, கூட்டுறவுக் கடைகள், பண்டகசாலைகளின் தேசவுடைமையாக்கம் மற்றும் ஊராட்சியுடைமையாக்கம் ஆகியவற்றை ரத்துச்செய்தல் இவற்றை எதிர்நோக்கியது. கூட்டுறவுகளின் நடவடிக்கைகள் மீது முறையான கண்காணிப்பை நிலைநாட்டுவதை உள்ளூர் சோவியத்துகளின், ஏழ்மை மிக்க விவசாயிகள் கமிட்டிகளின் கடமையாக்கியது. இதன் மூலம் குலாக்குகள் மற்றும் எதிர்ப்புரட்சியாளர்கள் இவற்றை எடுத்துக் கொண்டு விடாமல் தவிர்த்திடத் திட்டமிடப்பட்டது.—279.

82 1917ஆம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சி முடிந்த உடனேயே லெனின் கட்சி வேலைத்திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற பிரச்சினையை எழுப்பினர். (இந்த வேலைத் திட்டமானது 1903ல் ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசினுல் அங்கீகரிக்கப்பட்டதாகும்.) இந்தப் பிரச்சினையானது மறுபடியும் ஏழாவது (ஏப்ரல்) ரு.ச.ஜ.தொ. கட்சி (போல்ஷிவிக்)யின் அகில ருஷ்ய மாநாட்டி

லும் 1917 ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 3 (ஆகஸ்ட் 8—16) வரை நடைபெற்ற ஆருவது கட்சிக் காங்கிரசிலும் எழுப்பப்பட்டது.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, முதலாவது கட்சி வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்ட பிறகு, ஒரு மறுபரிசீலனை அவசர அவசியமாகியது. மார்ச் 1919ல் லெனின் தலைமையிலான ஒரு கமிஷன் அறுதியான திட்ட நகலை வரைவதற்காக ஏழாவது கட்சிக் காங்கிரசால் நிறுவப்பட்டது.

1919 பிப்ரவரியில் இந்தக் குழு ரு.க.க.(போ.)யின் நகல் வேலைத்திட்டம் மீதான பணியைப் பூர்த்தி செய்தது. இதன் பிரதானக் கோட்பாடுகள் லெனினுல் முறைப்படுத்தி முன்வைக்கப்பட்டன. அது பிராவ்தாவில் பிப்ரவரி 25—27ல் வெளியிடப்பட்டது. இந்த நகலுக்கான அதன் முன்னுரையில் இந்த வேலைத்திட்டம் பழைய திட்டத்திலிருந்து பெருமளவு வேறுபடுகிறது எனவும், இது ''முதலாளித்துவத்தின் ஆகப்பிந்திய ஏகாதிபத்திய கட்டத்தின் மார்க்சிய ஆய்வின் விளைவுகளை மட்டுமல்லாமல், உலகப்போரின் படிப்பினைகளையும் அத்துடன் அரசதிகாரத்தை வென்றடைந்துள்ள பாட்டாளி வர்க்கத்தின் ஓராண்டு அனுபவத்தையும்'' பிரதிபலிக்கிறது எனவும் இக்கமிஷன் குறிப்பிட்டது. இந்த நகல் வெளியிடப்பட்டு வட்டாரக் கட்சி அமைப்புகளால் பரந்த அளவில் விவாதிக்கப்பட்டது. பெரும்பான்மையான அமைப்புகள் இதை ஏற்றுக் கொண்டு சில திருத்தங்கள் மற்றும் சேர்ப்புக்களுடன் ஆமோதிப்புக்குப் பரிந்துரை செய்தன.—281.

83 **ரு.க.க.(போ.)யின் எட்டாவது காங்கிரஸ்** 1919 மார்ச் 18 முதல் 23 வரையில் மாஸ்கோவில் நடைபெற்றது. இதில் முடிவெடுக்கும் ஓட்டுரிமையுடன் 301 பிரதிநிதிகளும், விவாதிக்கும் உரிமையுடன் 102 பேரும் கலந்து கொண்டனர். இவர்கள் 3,13,766 கட்சி அங்கத்தினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினுர்கள்.

மத்தியக் கமிட்டியின் பணி பற்றி லெனின் அறிக்கை சமர்ப்பித்தார். நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரதான பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகளாவன: கட்சி வேலைத்திட்டம், நாட்டுப்புறத்தில் கட்சியின் பணி மற்றும் ராணுவ விவகாரங்கள்.

கட்சியின் புதிய வேலைத்திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. இதன் பிரதான கோட்பாடுகள் லெனினுல் முறைப்படுத்தி முன்வைக்கப்பட்டன. புதிய வேலைத்திட்டம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் காலகட்டம் முழுமைக்கும் உரிய கம்யூனிஸ்டுக்

கட்சியின் பணிகளை வகுத்தது. ஒரு சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதற்காகக் கட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் உரிய சித்தாந்த ஆயுதங்களை வழங்கியது.

சாமான்யப் பண்ட உற்பத்தி மற்றும் ஏகபோக கட்டத்துக்கு முந்திய முதலாளித்துவம் குறித்த விளக்கத்தைப் புதிய வேலைத்திட்டத்தில் சேர்க்காமல் விட்டுவிட வேண்டுமென்ற புஹாரினது யோசனையைக் காங்கிரஸ் நிராகரித்தது. இந்த விளக்கம் உழைக்கும் விவசாயிகள் மற்றும் முதலாளித்துவ நபர்கள் சம்பந்தமாகக் கட்சியின் கொள்கை வழியைச் சரியாக நிர்ணயித்திட அவசியமாக இருந்தது. புஹாரின் மற்றும் பியத்தக்கோவின் போல்ஷிவிக் விரோத கொள்கைகளையும் காங்கிரஸ் நிராகரித்தது. இவர்கள் தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய வேலைத்திட்ட ஷரத்தை நீக்கிவிட வேண்டும் என்று கோரினார்கள்.

ருஷ்யாவில் சோஷலிச நிர்மாணத்திற்கு மிக முக்கியமானதாக இருந்த அம்சம், நடுத்தர விவசாயிகளை நடுநிலைப் படுத்துவது பற்றிய கட்சிக் கொள்கையை அவர்களோடு உறுதியான கூட்டணி நிறுவிக் கொள்ள வேண்டும் என்பதாக மாறுதல் செய்து காங்கிரஸ் எடுத்த முடிவாகும்.

ராணுவப் பிரச்சினைகளுக்குக் கணிசமான கவனம் தரப்பட்டது. ''ராணுவ எதிர்க்கட்சி'' என்று அழைக்கப்பட்ட பிரிவின் உறுப்பினர்களது நிலையை பெரும்பான்மையான பிரதிநிதிகள் கண்டனம் செய்தார்கள். இவர்கள் ஜாராட்சி ராணுவ நிபுணர்களின் சேவைகளை நிராகரித்தனர். மற்றும் சேனை மத்தியத்துவப்படுத்தப்படுவதையும் அதற்குள் கண்டிப்பான ஒழுங்குக் கட்டுப்பாடு புகுத்தப்படுவதையும் எதிர்த்து வாதாடினர். குடியரசின் புரட்சிகர ராணுவ கவுன்சிலின் பணியில் உள்ள சில பிழைகளையும் குறைபாடுகளையும் காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. உதாரணமாக, பு.ரா.க. தலைவர் திரோத்ஸ்கி படைக்கு ஆட்களைத் திரட்டும் போது வர்க்கக் கோட்பாட்டைப் பின்பற்ற வேண்டும் என்ற கட்சியின் கொள்கையினை மீறியதற்காகவும் ராணுவத்தில் கட்சித் தலைமையின் பங்கினை சிறுமைப்படுத்தியதற்காகவும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டார்.

1919 மார்ச் ஆரம்பத்தில் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் நிறுவப்பட்டதைக் காங்கிரஸ் பாராட்டி வரவேற்றது, மற்றும் அதன் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தது.—*287.*

84 **வேலைத்திட்டத்தின் பொதுவான அரசியல் பிரிவின் மூன்றாவது ஷரத்தின் நகல்** எட்டாவது கட்சிக் காங்கிரசின் வேலைத்திட்டக் கமிஷனின் ஆலோசனையின் பேரில் லெனி

ஞல் எழுதப்பட்டதாகும். இந்த நகல் கமிஷனுல் அங்கீகரிக்கப்பட்டது. வேலைத் திட்டத்தின் இறுதி நகலில் சிறு சிறு மாறுதல்கள் மட்டுமே செய்யப்பட்டுச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. (சோ.யூ.க.க. அதன் காங்கிரசுகள், மாநாடுகள் மற்றும் மத்தியக் கமிட்டி பிளீனம் கூட்டங்கள் ஆகியவற்றின் தீர்மானங்கள், பாகம் I, மாஸ்கோ, 1954, ருஷ்யப் பதிப்பு, பக்கம் 414.)—290.

85 லெனினுடைய பேச்சுக்களை இசைத் தட்டுக்களில் பதிப்பது 'செந்த்ரோபிச்சாத்' (சஞ்சிகைகளின் சப்ளை மற்றும் வினியோகத்திற்கான அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் மத்தியப் பணிப் பிரிவு)தினுல் மேற்கொள்ளப்பட்டது. 1919க்கும் 1921க்கும் இடைப்பட்ட காலத்தில் லெனினுடைய பதினுறு சொற்பொழிவுகள் இவ்வாறு தட்டுகளில் பதிவு செய்யப்பட்டன.—292.

86 ஹங்கேரிய சோவியத் குடியரசு 1919 மார்ச் 21ல் நிறுவப்பெற்றது. இந்த அரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் இருந்தனர். இவர்கள் தங்களது கட்சிகளை ஹங்கேரிய சோஷலிஸ்டு கட்சியாக இணைக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர். இருந்தபோதிலும் இந்த ஒருங்கிணைப்பு சீர்திருத்தவாதிகளுடன் முறித்துக்கொள்ளாமல் யாந்திரிக முறையில் செய்யப்பட்டது. இது பின்னுட்களில் கட்சியின் அரசியல் கொள்கை வழியைப் பெரிதும் பாதித்தது.

ஹங்கேரிய சோவியத் அரசாங்கம் மார்ச் 26ல் தொழில்துறை நிறுவனங்கள், போக்குவரத்து மற்றும் வங்கிகளை தேசவுடைமையாக்கிடும் அரசாணைகளைப் பிறப்பித்தது. ஏப்ரல் 2ல் வெளிநாட்டு வாணிப ஏகபோகம் பற்றிய அரசாணையை ஏற்றது. மற்றும் ஏப்ரல் 3ஆம் தேதியன்று நிலச் சீர்திருத்தம் மீதான சட்டத்தை ஏற்றுக் கொண்டது. இந்தச் சட்டத்தின் கீழ், 17 ஹெக்டேர்களுக்கு அதிகமுள்ள பண்ணைகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டு, அவை பெரிய அரசாங்கப் பண்ணைகளாக மாற்றப்பட்டு, நடப்பில் முன்னர் அவைகளை நடத்தி வந்த மேலாளர் மூலமே நிர்வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. சோவியத் அரசாங்கத்திடமிருந்து நிலம் பெற முடியும் என்று ஏழை உழவர்கள் நம்பினுர்கள். ஆனுல் அவர்களது நம்பிக்கைகள் பொய்த்துப் போயின. இது பாட்டாளி வர்க்கத்துக்கும் உழவர்களுக்குமிடையே நெருங்கியதோர் நேசஅணி நிலைநாட்டப்படுவதைத் தடுத்தது. மற்றும் ஹங்கேரிய சோவியத் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தியது.

ஹங்கேரியில் பாட்டாளி சர்வாதிகாரத்தின் வெற்றி ஏகாதிபத்திய ஆண்டான்டுக்குப் பிடித்தமில்லாத ஒன்ருக

23*

இருந்தது. அது ஹங்கேரிக்குள் ராணுவ தலையீட்டை ஏற்பாடு செய்தது. இந்தத் தாக்குதல் உள்நாட்டுக்குள் எதிர்ப் புரட்சியாளர்களைப் புதிய நடவடிக்கைகளுக்குத் தூண்டிவிட்டது. வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் துரோகம் செய்து சர்வதேச ஏகாதிபத்தியத்துடன் பேரம் பேசி உடன்பாட்டுக்கு வந்தது ஹங்கேரிய சோவியத் குடியரசின் வீழ்ச்சிக்குத் துணை புரிந்து உதவியது. ஹங்கேரியக் குடியரசிற்கு சோவியத் ருஷ்யா எவ்வித ஆதரவும் அளிக்க இயலவில்லை. ஏனெனில் 1919 கோடை காலத்தில் சோவியத் நாடு ஆன்டான்டின் துருப்புகளால் சூழப்பட்டிருந்தது. 1919 ஆகஸ்ட் 1ல் ஹங்கேரிய சோவியத் அரசாங்கம் உள்நாட்டு எதிர்ப்புரட்சி மற்றும் வெளிநாட்டு ஏகாதிபத்திய தலையீட்டாளர்களின் படைகள் சேர்ந்து தாக்கியதால் வீழ்ச்சியடைந்தது.—292.

87 1919 மார்ச் 23ல் அனுப்பப்பட்ட ரேடியோச் செய்தியொன்றில் பேலா குன்னிடம் லெனின் கேட்டார்: ''புதிய ஹங்கேரிய அரசாங்கம் உள்ளபடியே கம்யூனிஸ்ட் அரசாங்கமாகவும் வெறும் சோஷலிச அரசாங்கமாக அதாவது சமூக துரோகிகள் கொண்ட ஓர் அரசாங்கமாக இராது என்பதற்கு என்ன உண்மையான உத்தரவாதங்கள் உள்ளன என்று தயவுசெய்து எங்களுக்கு அறிவியுங்கள்... அப்படியானால் தங்கள் மூலமே இதற்குரிய விடை எனக்கு கிடைத்தது என்று உறுதியாக நான் தெரிந்து கொள்வேன். நீங்கள் கடைசியாக என்னைக் கிரெம்ளினில் சந்தித்த போது தேசிய சட்ட மன்றம் பற்றி எந்த ஒரு பொருளில் நான் பேசினேன் என்பதைச் சுட்டிக்காட்டும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.'' (நூல் திரட்டு, ருஷ்யன் பதிப்பு, தொகுதி 38, பக்கம் 217).—293.

88 பவேரிய எதிர்ப்புரட்சியாளர்கள் 1919 ஏப்ரல் 13ல் மியூனிக்கில் அதிகாரத்தைக் கைப்பற்றிட எடுத்த முயற்சியொன்று தொழிலாளர்கள் பங்கில் மூர்க்கமான எதிர்ப்பைக் கொண்டு வந்தது. மற்றும் அவர்களது வெற்றியில் அது முடிவடைந்தது. ஏப்ரல் 13ந் தேதி இரவு புரட்சிகர தொழிற்சாலை கமிட்டிகள் மற்றும் படையாளிகள் சோவியத்துக்களின் கூட்டம் ஒன்றில் செயல் கவுன்சில் ஒன்றை அமைத்தது, அது புதிய சோவியத் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தது, நிர்வாகக் கமிட்டி பவேரியக் கம்யூனிஸ்டுகள் தலைவர் யூஜின் லெவைன்னைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது. புதிய அரசாங்கம் முதலாளித்துவ வர்க்கத்தை நிராயுதர்களாக்கவும் செஞ்சேனையைக் கட்டவும் வங்கிகளை தேசவுடைமையாக்கவும் துவங்கியது. தொழில் நிறுவனங்கள் மீது கண்காணிப்பை

அமுல் செய்தது, மற்றும் உணவு நிலைமையை சகஜமாக்கியது. பவேரியக் குடியரசின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலைமை மிகவும் இடரார்ந்ததாக இருந்தது. சோவியத் குடியரசில் எழுந்த முதற் சிரமங்கள் அரசாங்கத்தில் சேர்ந்திருந்த ''சுயேச்சை'' என்று அழைக்கப்பட்ட ''சமூக-ஜனநாயகவாதிகள்'' தங்களது முகமூடிகளை வீசி எறியும்படி செய்தது. ஏப்ரல் கடைசியில் முக்கியமான அரசாங்கப் பதவிகளில் இருந்து கம்யூனிஸ்டுகளை அவர்கள் நீக்கி விட்டனர். இது எதிர்ப்புரட்சிக்கு ஊக்கம் ஊட்டக்கூடியதாக இருந்தது. மே 1ந் தேதி எதிர்ப்புரட்சிப் படைகள் மியூனிக்கிற்குள் நுழைந்தன. மூன்று நாளைய கடும்போருக்குப் பின் நகரத்தைக் கைப்பற்றின.—295.

முதலாவது அகில ருஷ்ய முதியோர் கல்விக் காங்கிரஸ் மாஸ்கோவில் 1919 மே 6லிருந்து 19 வரை நடைபெற்றது. இதற்கு சற்றேறக்குறைய 800 பிரதிநிதிகள் வந்திருந்தனர். முதல் நாள் கூட்டத்தில் லெனின் வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார். ''சுதந்திரம் மற்றும் சமத்துவ கோஷங்களைக் கொண்டு மக்களை ஏமாற்றுதல்'' என்ற அவரது உரை மே 19ந் தேதி நடந்த கடைசிக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்டது.—297.

United Press (ஒன்றிணைந்த் பத்திரிகைகள்) ஏஜன்சியினால் லெனினிடம் கேட்ட வினாக்களுக்கு இந்தக் கட்டுரை பதில் தருகிறது. கடைசியாக, அதாவது ஐந்தாவதாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு விடை இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டது: ''வேறு எதை அமெரிக்கப் பொதுஜன அபிப்பிராயத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறீர்கள்?'' அக்டோபர் 1919ல் இடதுசாரி சோஷலிசப் பத்திரிகையாகிய *The Liberator* (விடுவிப்பாளர்) *A Statement and a Challenge* (ஓர் அறிவிப்பும் ஒரு சவாலும்) எனும் கட்டுரையொன்றை வெளியிட்டது. இந்தக் கட்டுரைக்குரிய குறிப்பொன்றில் லெனினுடைய பதில்களை யுனைடெட் பிரஸ் செய்தி ஸ்தாபனம் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தது. ஆனால் ஐந்தாவது வினாவிற்கு அளித்த பதிலை, ''முற்றிலும் போல்ஷிவிக் பிரச்சாரம்'' என்று சொல்லி அதை மட்டும் நிறுத்தி விட்டது என்று ஆசிரியர்கள் எழுதினார்கள்.—301.

ரு.க.க.(போ.)யின் ஒன்பதாவது காங்கிரஸ் மாஸ்கோவில் 1920 மார்ச் 29 முதல் ஏப்ரல் 5 வரை நடைபெற்றது. 6,11,978 கட்சி உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இதில் 715 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காங்கிரசில் பொருளாதாரக் கட்டுமானப் பிரச்சினை

கள் முக்கியமாக விவாதிக்கப்பட்டன. இத்துறையிலான கட்சியின் பணிகள் பற்றி மத்தியக் கமிட்டியின் சார்பில் தாம் சமர்ப்பித்த அறிக்கையில் லெனின் உருவரை செய்தார். அது தவிர பொருளாதாரக் கட்டுக்கோப்பு பற்றிய தமது அறிக்கையிலும், கூட்டுறவுகள் பற்றிய தமது அறிக்கையிலும் எடுத்துரைத்தார். மின்சாரமய மாக்குவதை முதுகெலும்பாகக் கொண்டு ஒரே பொருளாதாரத் திட்டம் ஒன்றினை வகுப்பதன் அவசியம் பற்றிக் காங்கிரசின் தனிப்பட்ட கவனம் ஈர்க்கப்பட்டது. கட்சி அங்கத்தினர்கள் தேசியப் பொருளாதாரத்தைச் சீரமைத்திட சகல முயற்சியும் மேற்கொண்டிடவேண்டும் என்பதாக காங்கிரஸ் அறைகூவல் விடுத்தது. அச்சமயத்தில் தேசப்பொருளாதாரமானது படுமோசமாகச் சீர்குலைந்து இருந்தது. பொது மக்கள் முன்முயற்சி மற்றும் ஆக்கபூர்வ ஊக்கமுயற்சி ஆகியவற்றைத் தூண்டிவிடப் பல்வேறு நடவடிக்கைகளைக் காங்கிரஸ் வெளியிட்டது.

சோவியத் அரசமைப்பில் தொழிற்சங்கங்கள் வகிக்கும் இடம் மற்றும் பங்கு பற்றி காங்கிரஸ் வரையறை செய்தது. அராஜக-சிண்டிகல்வாத நபர்களுக்கு உறுதியான மறுதலிப்பை அளித்தது. இவர்கள் தொழிற்சங்கங்களுக்கு ''சுதந்திரம்'' வேண்டுமென்று கோரினார்கள். அவற்றைக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோவியத் அரசாங்கத்திற்கும் எதிர்ப்பாக நிறுத்தினார்கள். தொழில் துறை நிர்வாகம் பற்றிய பிரச்சினையை காங்கிரஸ் விளக்கியது. ''ஜனநாயக மத்தியத்துவ'' பிரிவினரின் கட்சிவிரோத தீர்மானங்களைக் கண்டனம் செய்தது. பொருளாதாரத்தை மத்தியத்துவப்படுத்தப்பட்ட அரசாங்கக் கண்காணிப்புக்குள் கொண்டு வருவதை எதிர்ப்பவர்கள் அனைவரையும் தொழில் துறையில் ஒரு மனித நிர்வாகம் என்ற கோட்பாட்டை நிராகரிப்பவர்களையும் அது கண்டனம் செய்தது.—313.

பெயர்க் குறிப்பகராதி

அக்செல்ரோத், பாவெல் பரீசவிச் *(1850-1928)—ஒரு மென்ஷிவிக் தலைவர்.—276.*

அவீலவ், பி. வி. *(1874-1938)—ஒரு சமூக-ஜனநாயகவாதி, ஒரு பத்திரிகையாளர் மற்றும் புள்ளிவிவர நிபுணர். 1917ல் இவர் அரைவாசி மென்ஷிவிக் பத்திரிகையான* நோவயா ஷீஸ்ன் *என்ற பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதி வந்தார்.—68, 69, 72, 74.*

அவ்க்சேன்தியெவ், நிக்கலாய் திமீத்ரியெவிச் *(1878-1943)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். அதன் மத்திய கமிட்டியின் உறுப்பினர். 1917ல் கேரென்ஸ்கியின் இரண்டாவது கூட்டு அரசாங்கத்தில் உள்துறை அமைச்சராக இருந்தார். பின்னர் எதிர்ப்புரட்சிகரமான ருஷ்யக் குடியரசின் இடைக்கால கவுன்சிலின் (பூர்வாங்க நாடாளுமன்றம்) தலைவராக இருந்தார்.—96, 192.*

ஆட்லெர் [Adler], ஃபிரீட்ரிஹ் *(1879-1960)—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரிப் பிரிவின் தலைவர். ஆஸ்திரியாவில் நடைபெற்ற 1918ம் ஆண்டுப் புரட்சியை ஒட்டி, இவர் எதிர்ப்புரட்சியாளர் முகாமில் சேர்ந்தார். அச்சமயத்தில் இவரை சோஷலிசத்திற்கு மிகவும் அவகேடான ஒரு துரோகி என்று லெனின் அழைத்தார். மையவாத இரண்டரையாவது அகிலத்தின் (1921-23) ஸ்தாபகர்களில் ஆட்லெரும் ஒருவர். சோஷலிசத் தொழிலாளர் அகிலம் என்று அழைக்கப்பட்ட அமைப்பின் தலைவராகவும் பின்னர் இருந்தார்.—267.*

கர்னீலவ், லாவ்ர் கியோர்கியெவிச் *(1870-1918)—ஜார் ஆட்சி கால ஜெனரல். 1917 ஜூலையில் முதலாளித்துவ*

இடைக்கால அரசாங்கத்தினால் ருஷ்ய சேனையின் உயர் தளபதியாக நியமிக்கப்பட்டார். 1917 ஆகஸ்டில் எதிர்ப் புரட்சி எழுச்சியைத் தலைமை தாங்கி நடத்தினார். வெண் காவலர் ''சுயசேவா சேனையின்'' அமைப்பாளர்களில் ஒரு வராகவும் அதன் தலைவராகவும் இருந்தார்.—92, 98, 114, 129, 137, 149, 151, 233.

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854-1938)*—ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். மார்க்சியத்தைக் கைவிட்டவர். மையவாத (காவுத்ஸ்கியிசம்) சித்தாந்தியானார். தீமை விளைவிக்கக் கூடியதும், ஆபத்தை உண்டாக்கக் கூடியது மான சந்தர்ப்பவாதத்தின் ஒருவகை இது.—275, 276, 277.

கிரஸ்னேவ், பியோத்தர் நிக்கலாயெவிச் *(1869-1947)*—ஜார் ஆட்சி கால ஜெனரல், 1917 அக்டோபர் இறுதியில், சோவியத் விரோதக் கலகத்தின் போது பெத்ரோகிரா துக்கு எதிராக கேரென்ஸ்கியால் அனுப்பப்பட்ட கஸாக்கு களின் படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கியவர். 1918—1919ல் தோன் நதி பிரதேசத்தில் வெள்ளை கஸாக்கு சேனையின் தலைவர்.—221.

கியெவ்ஸ்கி, யூ.—பியத்தக்கோவ், கி.லி. பார்க்கவும்.

குக்கோவ்ஸ்கி, இசிதோர் எமனுயீலவிச் *(1871-1921)*—ஒரு போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு ரு.சோ.கூ.சோ.கு.இன் (ருஷ்யாவின் சோவியத் கூட் டாட்சி சோஷலிசக் குடியரசு) நிதித்துறை மக்கள் கமிசார். அதன் பிறகு எஸ்தோனியாவில் ரு.சோ.கூ.சோ.கு.இன் தூதுவர்.—241.

குச்கோவ், அலெக்சாந்தர் இவானவிச் *(1862-1936)*—பெரிய முத லாளி, அக்டோபரிஸ்டுக் கட்சியின் அமைப்பாளர் மற்றும் தலைவர். இது பெரிய முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக் களது நலனை ஆதரித்தது. 1917 பிப்ரவரி புரட்சியைத் தொடர்ந்து, முதலாவது முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் ராணுவம் மற்றும் கடற்படை அமைச் சராக இருந்தவர்.—38.

குவஸ்தியோவ், குஸ்மா அன்தோனவிச் *(பிறப்பு: 1883)*—ஒரு மென்ஷிவிக். 1917ல் பெத்ரோகிராத் சோவியத் தின் நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர். பின்னர் முத லாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உழைப்புத் துறைத் துணை அமைச்சராகவும் 1917 செப்டம்பரிலிருந்து அமைச்சராகவும் இருந்தார்.—137.

குன் [Kun], பேலா *(1886-1939)*—*ஹங்கேரிய மற்றும் சர்வ தேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர். ஹங்கேரிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். முதலாம் உலக ஏகாதிபத்தியப் போரின் போது ருஷ்யாவில் போர்க்கைதி. போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். 1918 இலையுதிர் காலத்தில் ஹங்கேரிக்குத் திரும்பினார். 1919 மார்ச்சில் நிறுவப்பட்ட ஹங்கேரிய சோவியத் குடியரசில், குன் நடைமுறையில் அரசாங்கத் தலைவராக இருந்தார். அதிகார பூர்வமாக வெளிநாட்டுத் துறை மக்கள் கமிசாராகவும் ராணுவ கமிசாரக இலாக்காத் தலைவராகவும் இருந்தார்.—292, 293.*

கெகெச்கோரி, யெவ்கேனி பெத்ரோவிச் *(பிறப்பு: 1879)—ஒரு மென்ஷிவிக்; 1917 நவம்பரிலிருந்து காக்கசஸ் மலைத் தொடருக்கு அப்பாலுள்ள பிராந்திய எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் (டிரான்ஸ் காக்கேசியன் கமிசாரவை) தலைவர். ஜியார்ஜிய மென்ஷிவிக் அரசாங்கத்தின் வெளிநாட்டுத் துறை அமைச்சர், துணைப் பிரதமர்.—222, 226.*

கேரென்ஸ்கி, அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881-1970)—சோஷலிஸ்டு-புரட்சியாளர். 1917 பிப்ரவரிப் புரட்சியை அடுத்து முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நீதித்துறை அமைச்சர், ராணுவ மற்றும் கடற்படை அமைச்சர், பின்னர் அரசாங்கத் தலைவர், உயர் தளபதி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்னர் சோவியத் விரோத வேலைகளில் ஈடுபட்டார். 1918லிருந்து நாட்டைவிட்டு வெளியேறினார்.—38, 92, 96, 99, 105, 117, 118, 119, 120, 121, 129, 137, 149, 192, 221, 268.*

கோகல், நிக்கலாய் வசீலியெவிச் *(1809-52)—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—172.*

கோட்ஸ், அப்ராம் ரஃபயீலவிச் *(1882-1940)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917ல் தொழிலாளர், படையாளர் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.—221.*

கோம்பர்ஸ் [Gompers], சாமுயேல் *(1850-1924)—அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தின் பிரமுகர். அமெரிக்கத் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். 1895 முதல் அதன் நிரந்தரத் தலைவர். முதலாளிகளுடன் கூட்டு சேரும் கொள்கையைப் பின்பற்றினார்.—265.*

சாவின்கவ், பரீஸ் விக்தரவிச் *(1879-1925)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் பிரமுகர், அதன் போரிடும்*

அமைப்பு ஒன்றின் தலைவர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு பற்பல எதிர்ப்புரட்சிக் கலகங்களை உருவாக்கியவர்.—221, 222.

சூச்சின், எஃப். கி. (1883—1942)—1904ல் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். 1917ல் தோம்ஸ்க் நகரில் படையாளர் பிரதிநிதிகளின் சோவியத்தின் உறுப்பினர், ரு.ச.ஜ.தொ.க.(போ.)இன் சைபீரிய பிராந்திய தலைமைக் குழுவின் உறுப்பினரானார். வெள்ளை எதிர்ப்புரட்சியாளர் துருப்புகள் கைப்பற்றியிருந்த பிரதேசத்தில் இவர் தலைமறைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.—313

செர்னேவ், விக்தர் மிஹாய்லவிச் (1876-1925)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917 மே—ஆகஸ்டில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் விவசாய அமைச்சர். பெரும் பண்ணைகளைக் கைப்பற்றிக் கொண்ட விவசாயிகள் மீது தீவிர அடக்குமுறையை ஏவியவர்.—106, 116, 129, 192.

டான் (கூர்விச்),* ஃபியோதர் இலியிச் (1871-1947)—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917ல் பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழுவின் உறுப்பினர் (முதலாவது அமர்வு); முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆதரித்தார்.—129.

டெய்லர் [Taylir], ஃபிரெடெரிக் வின்ஸ்லோ (1856-1915)—அமெரிக்கப் பொறியாளர்; வேலைநாள் முழுவதையும் உச்ச பட்ச அளவு பயன்படுத்தும் உழைப்பு முறையை நிறுவியவர். உற்பத்தி சாதனங்களையும் உழைப்புக் கருவிகளையும் சீரான முறையில் பயன்படுத்திடும் முறையை உருவாக்கியவர். முதலாளித்துவத்தின் கீழ் அவரது முறை உழைக்கும் மக்கள் சுரண்டப் படுவதை இன்னும் முனைப்பாக்குவதற்காகப் பயன்படுத்தப் பெறுகிறது—22, 25.

தல்ஸ்தோய், லேவ் நிக்கலாயெவிச் (1828-1910)—மகத்தான ருஷ்ய எழுத்தாளர்.—30.

திரேஷென்கோ, மிஹயீல் இவானவிச் (பிறப்பு: 1888)—பெரிய சர்க்கரை ஆலைகளை ருஷ்யாவில் வைத்திருந்தவர், கோடீஸ்வரர். 1917ல் முதலாளித்துவ இடைக்கால அர

---

* உண்மையான பெயர்கள் அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.—ப-ர்.

சாங்கத்தில் நிதி அமைச்சர் மற்றும் அயல்துறை அமைச்சராக இருந்தார்.—92, 96, 105, 120.

திஸெர்ஷின்ஸ்கி, ஃபெலிக்ஸ் எத்முந்தவிச் (1877-1926)—தலைசிறந்த கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் அரசின் தலைவர். போலந்திலும் லித்துவேனியாவிலும் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிறுவர்களில் ஒருவர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, எதிர்ப்புரட்சி, நாசவேலை மற்றும் கள்ளவியாபாரம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்திற்கான அகில ருஷ்ய சிறப்புக் கமிஷனின் (செக்கா) தலைவர்.—155.

துருத்தோவ்ஸ்கி, வி. யெ. (1889-1937)—இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். அதன் மத்திய கமிட்டி உறுப்பினர். 1917 டிசம்பரில் நகர மற்றும் ஸ்தல சுயாட்சி விவகார மக்கள் கமிசார். 1918 மார்ச்சில் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதை ஒட்டி மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் இருந்து விலகிக் கொண்டார்.—203.

தூத்தவ், அலெக்சாந்தர் இலியிச் (1864-1921)—ஜார் காலத்திய கர்னல், ஓரன்பர்க் கஸாக்கு சேனையின் தளபதி. 1917-19ல் கஸாக்குகளின் எதிர்ப்புரட்சியின் தலைவர்களில் ஒருவர்.—221, 277.

தெஸெரெத்தேலி, இராக்லி இயோர்கியெவிச் (1882-1959)—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரிப் புரட்சிக்குப் பிறகு, பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி மற்றும் மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் (முதல் அமர்வு). 1917 மேயில் தபால், தந்தித் துறை அமைச்சராக முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் இருந்தார். பின்னர் உள்துறை அமைச்சர் ஆனார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ஜியார்ஜிய எதிர்ப் புரட்சி மென்ஷிவிக் அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—116, 117, 129, 137.

நிக்கீத்தின், அ. எம். (பிறப்பு: 1876)—மென்ஷிவிக், 1917 ஜூலையிலிருந்து தபால் தந்தித் துறை அமைச்சர். கடைசி முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர்.—137.

நெக்ராசவ், நிக்கலாய் விசரியோனவிச் (பிறப்பு: 1879)—தோம்ஸ்க் குபேர்னியாவிலிருந்து மூன்றும் நான்காம் அரசாங்க டூமாவுக்குப் பிரதிநிதி, காடேட். 1917ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்.—92.

பத்ரேசவ், அலெக்சாந்தர் நிக்கலாயெவிச் *(1869-1934)*—*ஒரு மென்ஷிவிக் தலைவர். 1917ல் செய்தித்தாளாகிய* தியென் *(நாள்) என்பதன் ஆசிரியர்; இது போல்ஷிவிக்குகளுக்கு எதிராக வெறித்தனமான தாக்குதலைக் கிளப்பியது.—89.*

பப்ரீன்ஸ்கிகள், அல். அ., அன். அ., வி. அ.— *ருஷ்ய உயர் குலத்தோர், நிலப்பிரபுக்கள், சர்க்கரை சுத்திகரிப்பு ஆலைகளது உரிமையாளர்கள், பிற்போக்கு அரசியல்வாதிகள்.—95.*

பர்பியூஸ் [Barbusse], அன்ரீ *(1873-1935)—பிரபல பிரெஞ்சு எழுத்தாளர், பொது வாழ்வுப் பிரமுகர். 1923ல் இருந்து பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்.—392.*

பல்ச்சின்ஸ்கி, பியோத்தர் இயொாவக்கிமவிச் *(இறப்பு: 1930)—முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் வாணிபம் மற்றும் தொழில் துறை துணை அமைச்சர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சோவியத் தொழில் துறையில் நாச வேலை செய்யத் தூண்டியவர்களில் ஒருவர்.—115, 116, 117.*

பஸாரவ், வி. (ருத்னெவ், விளதீமிர் அலெக்சாந்தரவிச்) *(1874-1939)—1896லிருந்து சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கேற்றவர். 1905—1907ல் அவர் பல்வேறு போல்ஷிவிக் வெளியீடுகளுக்கு எழுதி வந்தார். 1917ல் இவர்* நோவயா ஷீஸ்ன் *என்ற அரைவாசி மென்ஷிவிக் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்தார்.—72, 74.*

பியத்தக்கோவ், கியோர்கி லியனீதவிச் *(1890-1937)—1910லிருந்து போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு பொறுப்பான பல பதவிகள் வகித்தார். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார். அதற்காக அவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டார்.—28, 30.*

பிரியாண்டு [Briand], அரிஸ்தீத் *(1862-1932)—பிரெஞ்சு அரசியல்வாதி, அரசுறவாளர். 1913லும் 1915-17லும் 1921-22லும் பிரதம மந்திரி. 1924ல் சர்வதேச சங்கத்திற்கு இவர் பிரான்சின் பிரதிநிதி. 1926—1931ல் பிரெஞ்சு வெளிநாட்டுத் துறை அமைச்சர்.—139.*

பிளாங் [Blanc], லுயீ *(1811-1882)—ஒரு பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்ட். முதலாளித்துவத்தின் கீழ் வர்க்க முரண்பாடுகள் இணைக்கப்படுத்த இயலாதவை என்று கூறிஇவர் முதலாளித்துவ வர்க்கத்தோடு உடன்*

படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்று வாதிட்டார். 1848ம் ஆண்டுப் புரட்சியின் போது இவர் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினராக இருந்தார். தொழிலாளர் பிரச்சினை பற்றிய ஆய்வுக்காக நியமிக்கப்பட்ட கமிஷனின் தலைவராக இருந்தார். இவரது சமரசப் போக்கு காரண மாக முதலாளித்துவ வர்க்கத்தினர் புரட்சிப் போராட் டத்திலிருந்து தொழிலாளர்களது கவனத்தை வேறு பக் கம் திருப்ப உதவினர். 1871 பிப்ரவரியில் இவர் தேசிய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார், பாரிஸ் கம்யூன் எதிர்ப்பாளர்களோடு பிளாங் சேர்ந்து கொண் டார்.—75.

பிளெஹானவ், கியோர்கி வலென்தீனவிச் *(1856-1918)*—ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர். ருஷ்யாவில் மார்க்சியத்தின் முதல் பிரச்சாரகர். 1883ல் ஜினீவாவில் முதல் ருஷ்ய மார்க்சிய அமைப்பான உழைப்பு விடுதலைக் குழுவை நிறுவினர். 1883 முதல் 1903 வரை பற்பல நூல்கள் எழுதினர். இவை பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திற்கு ஆதர வாகவும் அதைப் பரப்புவதாயும் இருந்தன. ரு.ச.ஜ.தொ. க.இன் இரண்டாவது காங்கிரசிற்குப் பின்னர் சந்தர்ப்ப வாதத்திற்கு இணக்கமான கொள்கையைப் பின்பற்றினர். அதன் பின்னர் மென்ஷிவிக்குகளோடு சேர்ந்தார். 1917 பிப்ரவரிப் புரட்சியைத் தொடர்ந்து இவர் ருஷ்யா விற்குத் திரும்பினர். பாதுகாப்புவாத மென்ஷிவிக்குகளின் **யெதீன்ஸ்த்வோ** எனும் கடைக்கோடி வலதுசாரி குழு வின் தலைவரானர்.

பிளெஹானவின் தத்துவார்த்த நூல்களையும், ருஷ்யா வில் மார்க்சியத்தைப் பரப்புவதில் இவரது பங்குப் பணி யினையும் லெனின் வெகுவாக மதித்தார். அதே சமயத்தில் பிளெஹானவ் மார்க்சியத்தில் புரிந்த திரிபுகளை அவர் கடுமையாக விமரிசித்தார். மற்றும் அவரது தீவிர அர சியல் பிழைகளைக் கண்டித்தார்.—89, 127, 129.

புரோக்கப்போவிச், செர்கேய் நிக்கலாயெவிச் *(1871-1955)*—முதலாளித்துவப் பொருளாதார அறிஞர், பொதுவிவ கார எழுத்தாளர். 1917ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உணவுத் துறை அமைச்சர்.—92, 137.

பூப்லிக்கவ், அலெக்சாந்தர் அலெக்சாந்தரவிச் *(பிறப்பு: 1875)*—ஒரு பொறியாளர்; பெரிய வியாபாரிகள் மற்றும் தொழிலதிபர்களுடன் சேர்ந்து கொண்டார். நான்காவது அரசாங்க டூமாவின் உறுப்பினர். 1917 ஆகஸ்டில்

மாஸ்கோவில் நடைபெற்ற அரசாங்க மாநாட்டில் இவர் மென்ஷிவிக்குகளும் முதலாளிகளும் கூட்டுச் சேர வேண்டும் என்பதை ஆதரித்துப் பேசினார்.—*105*.

பெர்னுத்ஸ்கி, மிஹயீல் விளதீமிரவிச் *(பிறப்பு: 1876)—1917* செப்டம்பரிலிருந்து முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் நிதி அமைச்சர்.—*92*.

பெலீன்ஸ்கி, விசரியான் கிரிகோரியெவிச் *(1811-1848)*—ஒரு ருஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், பொதுவிவகார எழுத்தாளர், பொருள்முதல்வாதத் தத்துவஞானி. ருஷ்ய சமூக மற்றும் கலாரசனை வளர்ச்சியின்மீது பெலீன்ஸ்கி சிறந்த செல்வாக்குடையவராக இருந்தார்.—*172*.

பெஷெஹோனவ், அலெக்சேய் வசீலியெவிச் *(1867-1933)*—*1906*லிருந்து ''மக்கள் சோஷலிஸ்டுகள்'' எனும் குட்டி முதலாளித்துவக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். *1917*ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உணவுத் துறை அமைச்சர்.—*115, 117, 140*.

பொகயேவ்ஸ்கி, மித்ரஃபான் பெத்ரோவிச் *(1881-1918)*—எதிர்ப்புரட்சிக்காரர்களான தோன் நதி பிரதேச கஸாக்குகளின் தலைவர்களில் ஒருவர். *1917* ஜூன் *18*லிருந்து *1918* ஜனவரி *29* வரை ஜெனரல் கலேதின் தலைமை தாங்கிய தோன் ராணுவத்தின் துணைத்தளபதியாக இருந்தார். இவர் தோன் அரசாங்கம் என அழைக்கப்பட்ட எதிர்ப்புரட்சி அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டார்.—*221, 222*.

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818-1883)—21, 26, 180*.

மில்யுக்கோவ், பாவெல் நிக்கலாயெவிச் *(1859-1943)*—காடேட்டுக் கட்சியின் தலைவர். *1917*ல் முதலாவது முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் வெளி நாட்டுத் துறை அமைச்சர்; ''வெற்றி வரை போர்'' என்ற கொள்கையைப் பின்பற்றினார்.—*38, 92, 129*.

மில்யூத்தின், விளதீமிர் பாவ்லவிச் *(1884-1938)*—அக்டோபர் புரட்சிக்குப் பிறகு விவசாயத் துறை மக்கள் கமிசாரானார். *1918-21*ல் தலைமைப் பொருளாதார கவுன்சிலின் துணைத் தலைவர்.—*313*.

ரலோவிச் (ரஹோவிச், கி. யா.)—*1917*ல் மத்திய அரசாங்க உணவுக் குழுவின் உறுப்பினர்.—*118, 119*.

ரெனொடேல் [Renaudel], பியேர் *(1871-1935)*—பிரெஞ்சு சோஷலிசக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில்

ஒருவர். 1914 முதல் 1919 வரையிலும் 1924லும் பிரெஞ்சு சட்டமன்ற உறுப்பினர்.—265.

ரென்னர் [Renner], கார்ல் *(1870-1950)*—ஆஸ்திரிய அரசியல் வாதி, ஆஸ்திரிய வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவரும் தத்துவவாளருமாவார். முதலாம் உலகப் போரின் போது சமூக-வெறியாளர்; 1919-20ல் ஆஸ்திரிய நாட்டுப் பிரதமர். 1945 முதல் 1950 வரை ஆஸ்திரிய நாட்டு ஜனதிபதி.—265.

லிசிஸ் [Lysis] (லெத்தாயர் [Letailleur]), யூஜன்—பிரெஞ்சு முதலாளித்துவப் பொருளாதார அறிஞர். நீதி மற்றும் அரசியல் விஷயங்களைப் பற்றிய பல நூல்கள் எழுதி யுள்ளார்.—320.

லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல் *(1871-1919)*—ஜெர் மானிய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் வர்க்க இயக் கத்தின் பிரபலத் தலைவர். ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1918 நவம்பர் புரட்சியின் போது ரோஸா லுக்சம்பர் குடன் சேர்ந்து இவர் ஜெர்மானியத் தொழிலாளர்களது புரட்சிகர முன்னணிக்குத் தலைமை தாங்கினர். ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபகர்களில் ஒருவர். 1919 ஜன வரியில் பெர்லின் தொழிலாளர் எழுச்சியின் தலைவராக இருந்தார். இந்த எழுச்சி அடக்கப்பட்ட பிறகு இவர் மிருகத்தனமாக எதிர்ப்புரட்சியாளர்களால் கொல்லப்பட் டார்.—267.

லுவோவ், கியோர்கி யெவ்கேனியெவிச் *(1861—1925)*— ருஷ்ய இளவரசர். பெரிய நிலப்பிரபு. காடேட்டு கட்சி யின் உறுப்பினர். 1917 மார்ச்சிலிருந்து ஜூலை வரை, முத லாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் தலைவர் மற்றும் உள்நாட்டுத் துறை அமைச்சர்.—38.

லெனின் (உலியானவ்), விளதீமிர் இலியிச் *(1870-1924)*— 241, 242.

லென்ச் [Lensch], பாவுல் *(1873-1926)*—ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதி. முதலாம் உலகப் போர் தொடங்கிய போது சமூக-தேசியவெறியினராக இருந்தார். போருக்குப் பின்னர் *Deutsche Allgemeine Zeitung* (பொதுவான ஜெர்மானியப் பத்திரிகை) என்ற ரூர் தொழிலதிபர்களது நாளேட்டின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினர்.—127.

வரபியோவ், வி. அ. (*பிறப்பு: 1896*)—போல்ஷிவிக் உரால்ஸ்கி ரபோச்சி (*உரால் தொழிலாளி*) *என்ற செய்தி ஏட்டின் ஆசிரியர். கட்சியின் உரால் பிராந்திய கமிட்டி மற்றும் யூரல்ஸ் பிராந்திய சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி ஆகியவற்றின் உறுப்பினர்.—155.*

ஷிங்கரியோவ், அந்திரேய் இவானவிச் (*1869-1918*)—*காடேட்டு கட்சி உறுப்பினர். 1917ல் முதலாம் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நிலத் துறை அமைச்சர், இரண்டாம் அரசாங்கத்தில் நிதி அமைச்சர்.—92, 141.*

ஷிமிட் [Schmid], அர்தூர் (*பிறப்பு: 1889*)—*சுவிஸ் நாட்டு முதலாளித்துவப் பொருளாதார அறிஞர், சுவிஸ் சோஷலிசக் கட்சி உறுப்பினர்.—34.*

ஷுல்கின், வசிலி வித்தாலியெவிச் (*1878-1976*)—*நிலப்பிரபு, அரசாங்க டூமாவின் உறுப்பினர். 1917ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு வெள்ளை ''சுயசேவா சேனையினை'' ஒழுங்கமைத்தவர்களில் ஒருவர்.—61.*

ஷெய்டெமன் [Scheidemann], ஃபிலிப் (*1865-1939*)—*ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் தீவிர வலதுசாரி, சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். ஜெர்மனியில் 1918 புரட்சியின் போது மக்கள் பிரதிநிதிகள் கவுன்சில் என்று அழைக்கப்பட்ட சபையின் உறுப்பினர். இது எதிர்ப் புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தினர் நலன்களுக்கு வகை செய்தது. 1919 பிப்ரவரி-ஜூன் மாதங்களில் வெய்மார் குடியரசின் கூட்டணி அரசாங்கத் தலைவராக இருந்தார். 1918 முதல் 1921 வரை ஜெர்மானியத் தொழிலாளர் இயக்கத்தை மிருகத்தனமாக அடக்குவதற்கு ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—127, 265, 295.*

ஷ்டைன் (ருபின்ஷ்டெயின்), அ. (*1881-1948*)—*மென்ஷிவிக். 1906ல் ருஷ்யாவிலிருந்து ஜெர்மனிக்குக் குடியேறினர். முதல் உலகப் போர் துவங்கியவுடன் காவுத்ஸ்கி மற்றும் பெர்ன்ஷ்டெயின் ஆகியோருடன் சேர்ந்து Sozialistische Auslandspolitik (சோஷலிச அயல்துறைக் கொள்கை) என்ற வாரப் பத்திரிகையை வெளியிடத் தொடங்கினர்.—276.*

ஷ்லியாப்னிக்கவ், அலெக்சாந்தர் கவ்ரீலவிச் (*1885-1937*)—*ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதி. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு உழைப்புத் துறை மக்கள் கமிசார். பின்னர் ராணுவ, தொழிற்சங்க மற்றும் பொருளாதார வேலை*

களில் கலந்து கொண்டார். *1920-22ல் கட்சி விரோதத் தொழிலாளர் எதிர்த்தரப்பு எனும் குழுவின் அமைப்பாள ரும் தலைவருமாக இருந்தார்.—155, 206.*

ஸ்கோபெலவ், மத்வேய் இவானவிச் *(1885-1939)—மென் ஷிவிக். 1917ல் பெத்ரோகிராத் சோவியத்தின் உதவித் தலைவர்; மத்திய நிர்வாகக் கமிட்டியின் உதவித் தலைவர் (முதல் அமர்வு); 1917 மே முதல் ஆகஸ்ட் வரை, முத லாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தொழிலாளர் நல அமைச்சர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு மென்ஷி விக்குகளை விட்டு விலகினார்.—53, 55, 58, 96, 116.*

ஸ்துரூவே, பியோத்தர் பெர்ங்கார்தவிச் *(1870-1944)—முதலாளித்துவப் பொருளாதார அறிஞர், பொதுவிவகார எழுத்தாளர், காடேட்டுக் கட்சித் தலைவர்களில் ஒருவர். 1890களில் "சட்டபூர்வ மார்க்சியம்" என்பதன் முக்கிய விளக்கவுரையாளர். மார்க்சின் பொருளாதார மற்றும் தத்துவ போதனைக்கு விமரிசன மாற்றங்கள் கொண்டு வந்தவர். முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்கு ஏற்ப மார்க்சியத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் அமைத் திட முயன்றவர். ருஷ்ய ஏகாதிபத்தியத்தின் சித்தாந்தி.—73, 126.*

ஸ்புண்டே, அ. பி. *(1892-1962)—1917ல் ரு.ச.ஜ.தொ.க. (போ.)இன் பெர்ம் நகர மற்றும் உரால் பிராந்தியத் தலைமை குழுக்களின் உறுப்பினர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராதில் அரசாங்க வங்கியின் துணைத் தலைமை கமிசார். பிறகு பல்வேறு நகரங்களில் கட்சி மற் றும் அரசாங்கப் பொறுப்புகளை வகித்தார்.—241, 242.*

ஸ்மித்-பால்க்னெர், மரீயா நத்தானவ்னு (ஸ்மித், எம்.)*(1878-1968)—பொருளாதார அறிஞர், புள்ளி விவர அறிஞர்; சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையின் இணை உறுப்பினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவப் புரட் சிக்குப் பிறகு அரைவாசி மென்ஷிவிக்* **நோவயா ஷிஸ்ன்** *என்ற பத்திரிகைக்கு சில காலம் கட்டுரைகள் எழுதினார். 1918 ஜூலையில் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார்.—118.*

ஸ்வெர்த்லோவ், யாக்கவ் மிஹாய்லவிச் *(1885-1919)—கம் யூனிஸ்டுக் கட்சி சோவியத் அரசு ஆகியவற்றின் தலை சிறந்த பிரமுகர். 1917 நவம்பர் 8 (21)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.—266.*

ஹனேத்ஸ்கி [Hanecki] **(ஃபுர்ஸ்தென்பெர்க்), யாக்கவ் ஸ்தனிஸ்லாவவிச்** *(1879-1937)*—போலந்து மற்றும் ருஷ்ய புரட்சிகர இயக்கத்தில் பிரமுகர். 1917ல் ரு.ச.ஜ.தொ.க.(போ.)இன் மத்திய கமிட்டியின் வெளிநாட்டிலுள்ள தலைமைக் குழுவின் உறுப்பினர்.—241, 242.

ஹிண்டன்பர்க் [Hindenburg], **பாவுல்** *(1877-1934)*—ஜெர்மானிய ராணுவ, அரசுறவுத்துறைப் பிரமுகர். முதலாம் உலகப் போரின் போது கிழக்கத்திய போர் முனையில் ஜெர்மானியப் படையின் தளபதி. இராணுவத் தலைமை அலுவலகத்தின் தலைவர். 1925 முதல் 1934 வரை வெய்மார் குடியரசின் ஜனாதிபதி. 1933ல் ஹிட்லரை அரசாங்கம் அமைக்கும்படி அதிகாரம் வழங்கியவர். இதன் மூலம் நாஜிகளிடம் அதிகார பூர்வமாக ஆட்சி ஒப்படைக்கப் பட்டது.—114.

ஹெண்டர்சன் [Henderson], **ஆர்தர்** *(1863-1935)*—இங்கிலாந்தில் தொழிற் கட்சி மற்றும் தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர். 1919ல் பெர்ன் (இரண்டாம்) அகிலத்தின் அமைப்பாளர்களில் ஒருவர். 1923லிருந்து சோஷலிசத் தொழிலாளர் அகிலம் என்று அழைக்கப்படும் அமைப்பின் நிர்வாகக் கமிட்டித் தலைவர். ஆங்கிலேய முதலாளித்துவ அரசாங்கங்கள் பலவற்றிலும் அமைச்சராக இருந்தவர்.—265.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து ''Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR'' என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை.
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

В. И. Ленин

О РАБОЧЕМ КОНТРОЛЕ
И НАЦИОНАЛИЗАЦИИ ПРОМЫШЛЕННОСТИ

на тамильском языке

V. I. Lenin

ON WORKER'S CONTROL
AND THE NATIONALISATION OF INDUSTRY

in Tamil